www.tnschoolbooks.in

தமிழ்நாடு அரசு



மேல்நிலை முதலாம் ஆண்டு

அரசியல் அறிவியல்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 1 06/12/2022 14:47:53

www.tnschoolbooks.in

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - *2018*

திருத்திய பதிப்பு - *2019, 2020, 2022, 2023*

மறுபதிப்பு - *2021, 2024*

(புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

அரசியல் அறிவியலில் வேலை வாய்ப்புகள்

அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இவ்வாய்ப்புகளை உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பு என என்று இரண்டு வகைகளாக நாம் காணலாம்.

A. அரசியல் அறிவியல் பாடத்தில் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள்

பன்னிரெண்டாம் வகுப்பு முடிந்தவுடன் கீழ்கண்ட படிப்புகளை மாணவர்கள் படிக்கலாம்.

- இளங்கலை (B.A)
- முதுகலை (M.A)
- இளமுனைவர்(M.Phil)
- முனைவர் (Ph.D)

நமது மாநிலத்தில் பல்வேறு அரசு கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் அரசியல் அறிவியல் பாடம் கற்பிக்கப்படுகிறது.

A. 1) அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள்

1. மாநில கல்லூரி, சென்னை
2. அரசு கலை கல்லூரி, கோயம்புத்தூர்
3. திருவள்ளுவர் அரசு கலை கல்லூரி, இராசிபுரம்,
4. லோகநாத நாராயணசாமி அரசு கலை கல்லூரி, பொன்னேரி, திருவள்ளுவர் மாவட்டம்.
5. அரசு கலை கல்லூரி, திருவெறும்பூர், திருச்சி
6. அரசு கலை கல்லூரி, சேலம்–07
7. இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலை கல்லூரி, செங்கல்பட்டு
8. சென்னை கிறிஸ்துவ கல்லூரி, தாம்பரம், சென்னை.
9. பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரி, உசிலம்பட்டி, மதுரை
10. பெரியார் அரசு கலை கல்லூரி, கடலூர்–1
11. பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவு கல்லூரி, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்.
12. SIET மகளிர் கல்லூரி, தேனாம்பேட்டை, சென்னை.
13. அண்ணா ஆதர்ஸ் மகளிர் கல்லூரி, சென்னை.

A. 2) மாநில பல்கலைக் கழகங்கள்

நமது மாநிலத்தில் பல்வேறு பல்கலைக் கழகங்களில் அரசியல் அறிவியல் பாடம் கற்பிக்கப்படுகிறது அவையாவன:

1. சென்னை பல்கலைக் கழகம், சென்னை
2. அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம்
3. மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், மதுரை
4. பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் (அஞ்சல் வழி கல்வி மட்டும்)
5. அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி (அஞ்சல் வழி கல்வி மட்டும்)
6. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகம், சென்னை
7. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி (அஞ்சல் வழி கல்வி மட்டும்)

A. 3) மத்திய பல்கலைக் கழகங்கள்

அரசியல் அறிவியல் பாடம் பல மத்திய பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டு.

1. டெல்லி பல்கலைக் கழகம்
2. பாண்டிச்சேரி பல்கலைக் கழகம்
3. ஹைதராபாத் பல்கலைக் கழகம்
4. இந்திரா காந்தி திறந்தநிலை பல்கலைக் கழகம், புதுடெல்லி
5. காந்தி கிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக் கழகம், திண்டுக்கல்
6. ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், புதுடெல்லி

www.tnschoolbooks.in
11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 3
06/12/2022 14:47:53

www.tnschoolbooks.in

A. 4) ஒருங்கிணைந்த பட்ட படிப்புகள்

இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை (IIT) ஐந்து வருட ஒருங்கிணைந்த முதுகலை பட்ட வகுப்புகளை மேம்பாட்டுப் படிப்புகள் மற்றும் ஆங்கில படிப்புகள் ஆகிய பாடங்களில் நடத்துகின்றது.

A. 5) ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், புதுடெல்லி

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவன தரவரிசையில் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் இப்பல்கலைக் கழகம் உள்ளது.
- இப்பல்கலைக்கழகத்தின் முதுநிலை, இளமுனைவர் பட்டப்படிப்புகள் அரசியல் அறிவியல் பாடத்திலும் பன்னாட்டு அரசியல் பாடத்திலும் வழங்கப்படுகின்றன.
- தேசிய அளவிலான நுழைவுத்தேர்வில் வெற்றிபெற்றால் மட்டுமே இப்பல்கலைக் கழகத்தில் சேர முடியும். முதுகலைப் படிப்பிற்கு கல்வி உதவித் தொகையை இப்பல்கலைக் கழகம் வழங்குகிறது. பல்கலைக் கழக மானியக்குழுவினால் நடத்தப்படும் தேசிய தகுதித் தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ஆய்வுப்படிப்பில் ஈடுபடும்போது கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

  இது ஒரு உறைவிடப் பல்கலைக் கழகமாகும். விருப்பப்படும் மாணவருக்கு விடுதி வசதி உள்ளது. மத்திய அரசாங்கம் அதிக நிதி வழங்குவதால் உலகத்தரமான கல்வி கிடைக்கப்பெறுகிறது.

  இப்பல்கலைக் கழகத்தில் அருமையான ஒன்பது மாடி நூலகம் உள்ளது.

  இது ஒரு மத்தியப் பல்கலை கழகம் மட்டுமல்ல, உண்மையிலேயே தேசிய பல்கலைக் கழகமாகும். எல்லா மாநிலங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து இங்கு படிக்கின்றனர்.

A. 6) சென்னை மேம்பாட்டுப் படிப்புகளுக்கான நிறுவனம். (MADRAS INSTITUTE OF DEVELOPMENT STUDIES).

புகழ்பெற்ற பொருளாதார வல்லுனரான முனைவர். மால்கம் எஸ்.ஆதிசேசய்யா இக்கல்வி நிறுவனத்தை சென்னை அடையாறில் தொடங்கினார்.
இங்கு சமூக அறிவியல் பாடங்களில் ஆய்வு படிப்புகளை மாணவர்கள் மேற்கொள்ளலாம். அரசியல் அறிவியல் பாடத்தில் அரசியல் அமைப்புகள், ஆட்சி மற்றும் அதிகார பகிர்வு, வறுமை, பாகுபாடு, சமத்துவமின்மை,பாலினம்,சாதி மற்றும் பாரபட்ச முறைகளைப் பற்றிய படிப்புகள் போன்றவற்றில் மாணவர்கள் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

A. 7) டாடா சமூக அறிவியல் கல்வி நிறுவனம் (TISS)

- இக்கல்வி நிறுவனம் மும்பை. ஹைதராபாத், கவுகாத்தி, துர்காபூர் ஆகிய இடங்களில் வளாகங்களை கொண்டுள்ளது.
- சமூக மற்றும் மனிதசேவையில் திறமைசாலிகளை உருவாக்குவது இக்கல்வி நிறுவனத்தின் நோக்கமாகும்.
- அரசியல் அறிவியல் மாணவர்கள் இக்கல்வி கூடத்தில் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுப்படிப்பை மேற்கொள்ளலாம். மேம்பாட்டு படிப்புகள் சட்டம், உரிமைகள் மற்றும் அரசமைப்பிலான ஆளுகை, சமூகப்பணி, பொதுக் கொள்கை மற்றும் ஆளுகை மனிதவள மேம்பாடு, பாலின படிப்புகள் போன்றவைகளில் ஆய்வுப்படிப்புகளை மாணவர்கள் மேற்கொள்ளலாம்.

B. வேலை வாய்ப்புகள்.

அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் உள்ளன. அவர்கள் கீழ்கண்ட துறைகளில் சாதிக்கலாம்.

- நிர்வாகம்
- அரசியல்
- ஊடகத்துறை
- கல்வித்துறை (பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களில் கற்பித்தல் பணி)
- சமூகப்பணி
- காவல் நிர்வாகம்
- நீதித்துறை
- மற்ற போட்டி தேர்வுகள்
- அரசு சாரா நிறுவன மேலாண்மை.

B. 1) மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC)

- மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம் (Union Public Service Commission) மத்திய அரசு பணிகளுக்காக பல்வேறு தேர்வுகளை நடத்துகின்றது. இவைகளில் குடிமைப் பணி தேர்வு என்பது மிக முக்கியமான தேர்வாகும். ஏறக்குறைய 24 வகையான மத்திய அரசு பணிகளுக்காக குடிமைப் பணி தேர்வு நடத்தப்படுகின்றது. இந்திய ஆட்சி பணி (IAS), இந்திய காவல் பணி (IPS), இந்திய வெளியுறவு பணி(I FS) போன்ற உயரிய பணிகளுக்கு இத்தேர்வு நடத்தப்படுகின்றது.
- இந்திய ஆட்சி பணி (IAS) அதிகாரிகள் உதவி ஆட்சியர், ஆட்சியர், இணைச் செயலர், துறைச் செயலர், முதன்மைச் செயலர் தலைமைச் செயலர் போன்ற பதவிகளில் பணி செய்வார்கள்.
- இந்திய காவல் பணி (IPS) அதிகாரிகள் காவல் உதவி கண்காணிப்பாளார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், காவல் மண்டல தலைவர், காவல்துறை தலைமை.

11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 4 06/12/2022 14:47:53

- இயக்குநர் போன்ற பதவிகளில் பணி செய்வார்கள்.
- இந்திய வெளியுறவு பணி (IFS) அதிகாரிகள் மூன்றாம் செயலர், இரண்டாம் செயலர், முதன்மை செயலர், வெளியுறவு செயலர் போன்ற பதவிகளில் பணி செய்வார்கள்.
- குடிமை பணி தேர்வு மூன்று கட்டங்களில் நடத்தப்படுகிறது. அவை முதல் நிலை தேர்வு, முதன்மை தேர்வு மற்றும் நேர்காணல் ஆகியவையாகும்.இம்மூன்று நிலைகளிலும் அரசியல் அறிவியல் பாடம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

முதல் நிலை தேர்வு (Preliminary Test)

இது தகுதி காண் தேர்வாகும். இதில் இரண்டு தாள்கள் உள்ளன. அவை பொது அறிவு மற்றும் திறனறிவு தாள்கள் ஆகும். ஒவ்வொரு கேள்விக்கும் நான்கு பதில்கள் இருக்கும் சரியான பதிலை மாணவர்கள் தேர்ந்தெடுத்து OMR விடைத்தாளில் நிரப்பவேண்டும். ஏறக்குறைய இருபது சதவீத கேள்விகள் அரசியல் அறிவியல் பாடத்தில் இருந்து கேட்கப்படுகின்றன.

முதன்மை தேர்வு(Main Exam)

- இந்நிலையில் ஏழு தாள்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். மதிப்பெண்கள் பொதுஅறிவுத்தாள் 250 மதிப்பெண்ணை பெற்றிருக்கிறது. இது முற்றிலும் இந்திய அரசியல், சர்வதேச உறவுகள் சம்மந்தப்பட்ட தாளாகும். மேலும், கட்டுரைத்தாளுக்கு 250 மதிப்பெண்கள் உள்ளன. பெரும்பாலும் அரசியல் அறிவியல் பாடங்களில் இருந்தே கேள்விகள் உள்ளன. மேலும் அரசியல் அறிவியலை விருப்பப்பாடமாக எடுத்தால் இரண்டு விருப்பப்பாட தாள்களுக்கு மொத்தமாக 500 மதிப்பெணகள் உள்ளன. முதன்மைத் தேர்வுக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் 1750 மதிப்பெண்களில் குறைந்தது 500 மதிப்பெண்கள் (இரண்டாவது பொது அறிவுத்தாள் மற்றும் கட்டுரைத்தாள்) அரசியல் அறிவியல் பாடத்தில் இருந்து வருகின்றன. அரசியல் அறிவியலை விருப்பப்பாடமாக எடுத்தால் 1000 மதிப்பெண்களுக்கான வினாக்களுக்கு விடையளிப்பது எளிது.

நேர்காணல் (Personal Interview)

குடிமைப்பணித் தேர்வில் கடைசிநிலை நேர்காணலாகும். இதற்கு 275 மதிப்பெண்கள் உள்ளன. அரசியல் அறிவியல் பாடத்திலிருந்து அதிக அளவில் கேள்விகள் கேட்கப்படுகின்றன.

B. 2) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (TNPSC)

நமது மாநில அரசுக்கு பணியாளார்களை தேர்வு செய்வதற்காக TNPSC எழுபது வகையான தேர்வுகளை நடத்துகிறது. குரூப் 1, குரூப் 2, குரூப் 4, கிராம நிர்வாக அலுவலர் போன்ற பதவிகள் இவற்றில் முக்கியமானவை ஆகும். இத்தேர்வுகளில் பொது அறிவு அதிக முக்கியத்துவம் பெறுகிறது. ஏறக்குறைய 20 சதவீத கேள்விகள்இந்திய அரசியல் மற்றும் சர்வதேச உறவுகளில் இருந்து கேட்கப்பெறுகின்றன.

- TNPSC நடத்தும் தேர்வுகளில் மிகமிக முக்கியமானது குரூப் 1 தேர்வு ஆகும். உதவி ஆட்சியர், மாவட்ட கண்காணிப்பாளர், உதவி காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி, மாவட்ட தீயணைப்பு அதிகாரி, வணிகவரி உதவி ஆணையர் போன்ற பணிகளுக்காக இத்தேர்வு நடத்தப்படுகிறது. இத்தேர்வு மூன்று நிலைகளில் நடத்தப்படுகிறது. அவை முதல் நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் நேர்காணல் ஆகியவையாகும். இந்திய அரசமைப்பு, தமிழக அரசியல், சர்வதேச உறவுகள் ஆகியவற்றிலிருந்து பெரும்பாலும் கேள்விகள் அதிக அளவில் கேட்கப்பெறுகின்றன. இக்கேள்விகளை அரசியல் அறிவியல் மாணவர்கள் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளலாம். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணையத்தின் பிற பணி ஆட்சேர்ப்பு தேர்வுகளிலும் குறிப்பிட்ட சதவீதத்திலான அரசியல் அறிவியல் கேள்விகள் கேட்பது உறுதியாகும்.

B. 3) கல்லூரி மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர் பணி

தமிழக கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் மற்றும் இணைப் பேராசியர் என்று இரண்டு வகை ஆசிரியர் பதவி நிலைகள் உள்ளன. பல்கலைக்கழகங்களில் உதவிப் பேராசிரியர், இணைப் பேராசிரியர் மற்றும் பேராசிரியர் ஆகிய மூன்று பதவி நிலைகள் உள்ளன. கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராக பணியாற்ற வேண்டுமென்றால் தமிழ்நாடு அரசின் மாநிலத் தகுதி தேர்வையோ அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவின் தேசிய தகுதித் தேர்வையோ எழுத வேண்டும். அரசியல் அறிவியல் பாடத்தில் முதுகலை முடித்தவர்கள் இத்தேர்வுகளை எழுதலாம்.

B. 4) பள்ளி கல்வி பணி

- தமிழகப் பள்ளிகளில் ஆசிரியராகப் பணிபுரிவதற்கு ஆசிரியர் தேர்வுவாரியம் (Teachers Recruitment Board) நடத்தும் தேர்வுகளில் வெற்றி பெறவேண்டும்.

B. 5) ஊடகங்களில் வாய்ப்புகள்

- அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு ஊடகத்துறையில் வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. அச்சு ஊடகம், செய்தி, தொலைக்காட்சி ஊடகங்கள், வலைதள ஊடகங்கள் என்று பல்வேறு தளங்களில் வாய்ப்புகள் உள்ளன.
- பொதுவாக ஊடகங்கள் அரசியல், சமூகம், சுற்றுச்சூழல், பண்பாடு, சர்வதேச நிகழ்வுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன. அரசியல் அறிவியல் பயின்றவர்கள் பெரும்பாலும் இத்தளங்களில்தான் பயணிக்கின்றனர்.
- ஊடகத்துறையில் சிறப்புறுவதற்கு அரசியல் அறிவியல் பாடம் உறுதுணையாக நிற்கும். அரசியல் அறிவியலில் இளங்கலை முடித்தபின் ஊடகவியலை மாணவர்கள் பயிலலாம்.

www.tnschoolbooks.in
11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 5 06/12/2022 14:47:54

www.tnschoolbooks.in

1. இந்திய பொதுத்தகவல் தொடர்பு நிறுவனம், புதுதில்லி (Indian Institute of Mass Communication)
2. ஆசிய இதழியல் கல்லூரி, சென்னை (Asian College of Journalism)

B. 6) காவல் சேவைப் பணி

- அரசியல் அறிவியல் மாணவர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்குழுமம் நடத்தும் தேர்வுகளை எழுதி சார்பு ஆய்வாளர், இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்போர் போன்ற பணிகளில் சேரலாம்.

B. 7) சட்டத்துறையில் வாய்ப்புகள்

- அரசியல் அறிவியலும், சட்டமும் மிகவும் நெருங்கிய பாடங்களாகும். பன்னிரெண்டாம் வகுப்பில் அரசியல் அறிவியல் படிக்கும் மாணவர்கள் சட்டக் கல்லூரிகளில் ஐந்து வருட ஒருங்கிணைந்த சட்டப்படிப்பில் (Bachelor of Arts & Bachelor of Law (B.A. B.L) படிக்கலாம் அல்லது கல்லூரி படிப்பை முடித்த பிறகு மூன்று வருட (Bachelor of Law (B.L) சட்டப்படிப்பில் சேரலாம்.
- சட்டப்படிப்பை படிக்கும் மாணவர்கள் Common Law Admission Test (CLAT) மற்றும் All India Law Entrance Test (AILET) எழுத வேண்டும்.
- தமிழகத்தில் அரசு சட்டக் கல்லூரிகள் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, செங்கல்பட்டு, திருநெல்வேலி, சென்னை ஆகிய ஊர்களில் உள்ளன. இக்கல்லூரிகள் டாக்டர். அம்பேத்கார் சட்டப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
- தேசிய அளவில் முக்கிய சட்டக் கல்லூரிகள் பல உள்ளன.
  1. இந்திய சட்ட பல்கலைக்கழகத்தின் தேசிய சட்ட பள்ளி, பெங்களூர்
  2. தேசிய சட்டப்பள்ளி, ஜோத்பூர்.
  3. தேசிய சட்டப்பல்கலைக்கழகம், போபால்.
  4. தேசிய சட்டக்கல்லூரி, மும்பை.
  5. தில்லி பல்கலைக்கழகத்தின் சட்டப்புலம்.
  6. NALSAR சட்டப் பல்கலைக்கழகம், ஹைதராபாத்.
  7. தேசிய சட்டப்பள்ளி, திருச்சிராப்பள்ளி
- சட்டக் கல்வி முடித்தபிறகு மாணவர்கள் வழக்குரைஞராக பணியாற்றலாம். உயாநீதி மன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகளாகவும் பணியாற்றலாம்.

D. 9) பன்னாட்டு அளவிலான கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள்

- உலக அளவில் புகழ்மிக்க பல்கலைக் கழகங்களில் அரசியல் அறிவியல் மற்றும் பன்னாட்டு உறவுகள் பற்றிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன..
  1. ஹார்வர்டு பல்கலைக் கழகம், அமெரிக்கா
  2. பிரின்ஸ்டன் பல்கலைக் கழகம், அமெரிக்கா
  3. கலிபோர்னியா பல்கலைக் கழகம், அமெரிக்கா
  4. பெர்க்லே பல்கலைக் கழகம், அமெரிக்கா
  5. யேல் பல்கலைக் கழகம், அமெரிக்கா
  6. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், இங்கிலாந்து
  7. ஆஸ்திரேலியா தேசிய பல்கலைக் கழகம், ஆஸ்திரேலியா
- அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு சர்வதேச வேலைவாய்ப்புகள் பெருமளவில் உள்ளன. ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம், சர்வதேச நீதி மன்றம் போன்றவற்றில மாணவர்கள் பணியாற்றலாம்.
- அரசியல் அறிவியல் பாடம் என்பது ஒரு நீச்சல் வீரனின் திறமை போன்றது. நீச்சல் அடிக்கும் திறன் இருந்தால் ஆற்றிலும் நீந்தலாம், கடலிலும் நீந்தலாம். அரசியல் அறிவியல் மாணவர்கள் அறிவு, எண்ண ஓட்டம் மற்றும் திறமைகளிலிருந்தால் நமது மாநிலத்திலும், நாட்டிலும், உலகத்திலும் என எங்கும் சாதிக்கலாம்.

அரசியல் அறிவியல் நிறுவனங்களின் இணையதளங்கள்:

தேசிய அளவில்	சர்வதேச அளவில்
1. http://www.jnu.ac.in	1. http://www.columbia.edu
2. http://www.mids.ac.in	2. http://www.yale.edu
3. http://www.tiss.edu	3. http://anu.edu.au
4. http://www.unom.ac.in	4. http://www.cam.ac.uk

11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 6 06/12/2022 14:47:54

www.tnschoolbooks.in

பொருளடக்கம்

அலகு	தலைப்பு	பக்கம்	மாதம்
1	அரசியல் அறிவியலின் அறிமுகம்	1	ஜூன்
2	அரசு	20	
3	அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் – பகுதி I	33	
4	அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் – பகுதி II	52	ஜூலை
5	மக்களாட்சி	72	
6	அரசாங்கத்தின் வகைப்பாடுகள்	93	
7	அரசியல் சிந்தனை	115	ஆகஸ்ட்
8	அரசியல் கொள்கைகள் – பகுதி I	148	
9	அரசியல் கொள்கைகள் – பகுதி II	177	
10	பொதுக்கருத்து மற்றும் கட்சி முறை	196	அக்டோபர்
11	தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம்	211	
12	உள்ளாட்சி அரசாங்கங்கள்	233	
13	சமூக நீதி	255	நவம்பர்
14	தமிழகத்தில் அரசியல் வளர்ச்சி	277	
15	தமிழக அரசியல் சிந்தனைகள்	292	டிசம்பர்

Z8CNF

மின்னூல்

5WSR9

மதிப்பீடு

11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 7 06/12/2022 14:47:54

www.tnschoolbooks.in

இந்திய அரசமைப்பு

இந்திய மக்களாகிய நாம் உறுதியான ஒருமனதானத் தீர்மானத்துடன் இந்தியாவை இறையாண்மை மிக்க, மக்களாட்சி, சமதர்ம, மதச்சார்பற்ற குடியரசாக உருவாக்குகிறோம். மேலும் இந்தியாவின் அனைத்து குடிமக்களுக்குமான வகையில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதியையும், சுதந்திரமான முறையில், வெளிப்பாடு, நம்பிக்கை, விசுவாசம் மற்றும் வழிபாடு, ஆகியவற்றுடன் தகுதி மற்றும் வாய்ப்புகளில் அனைவருக்கும் சமத்துவம், மக்களிடையே சகோதரத்துவம் மற்றும் தனிமனித மாண்பையும் வளர்ப்பதுடன் நாட்டின் ஒற்றுமையை ஓங்கச் செய்வதற்கு அரசமைப்பு நிர்ணயச் சபையில் 1949, நவம்பர் 26-ம் நாளில் ஏற்றுக்கொண்டு இயற்றி இந்த அரசமைப்பினை எங்களுக்காக நாங்களே அளிக்கின்றோம்.

11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 8 06/12/2022 14:47:55

அலகு
1

அரசியல் அறிவியலின் அறிமுகம்



1.1 அரசியல் அறிவியலின் பொருள், வரையறை மற்றும் தோற்றம்

அரசியல்

அரசியல் என்றால் என்ன? எனது சிறு வயது முதலே தேநீர் கடைகள், உணவகங்கள், பேருந்துகள், இப்படி எங்கே போனாலும் இந்த வார்த்தையை அடிக்கடி கேட்கிறேனே!... இதனைப்பற்றி பேசும்போதெல்லாம் பலரும் மிகவும் தீவிரமாக மாறிவிடுகிறார்களே!... அதனாலேயே நானும் இந்த அரசியல் என்றால் என்ன என்பதை தெரிந்து கொண்டே ஆக வேண்டும்!!

UEJ6Z

கற்றலின் நோக்கங்கள்

- இந்த அறிமுக அத்தியாயம் அரசியல் என்பதன் பொருள் மற்றும் மக்களின் வாழ்வில் அது எந்த விதமான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்ற நுண்ணறிவைத் தருவதாகும்.
- அரசியல் அறிவியலின் வரையறைகளையும் மற்றும் அதன் மாறிவரும் தன்மையினையும் ஆராய்தல்.
- அரசியல் அறிவியலின் பரப்பெல்லையை விளக்குதல்
- அரசியல் அறிவியலைப் படிப்பதில் உள்ள பல்வேறு அணுகுமுறைகளை வெளிக்கொணர்தல்
- அரசியல் அறிவியலுக்கும் பிற சமூக அறிவியல் பாடங்களுக்கும் உள்ள உறவினை விவாதித்தல்

அரசியல் என்ற சொல் கிரேக்க மொழியில் நகர அரசு என்ற பொருள்படும் "பொலிஸ்" (*Polis*) என்ற சொல்லோடு நெருங்கிய தொடர்புடையதாகும். அரசியலைக் கற்பது என்பதை பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் வாழ்ந்த பிளாட்டோ (*Plato*) (*428 BCE – 347 BCE*) மற்றும் அரிஸ்டாட்டில் (*Aristotle*) (*384 BCE – 322 BCE*) ஆகிய அரசியல் தத்துவஞானிகளின் அளப்பரிய பங்களிப்பினால் தொடங்கப் பட்டதாகும். இருபதாம் நூற்றாண்டிற்கு முன்பு வரையிலும் அரசியலைக் கற்றறிவது என்பது வரலாறு மற்றும் தத்துவம் போன்ற பிற துறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது எனலாம்.

அரசியல் என்பது அடிப்படையில் நன்னெறியைப் பற்றிய கல்வியாகும். அரசியல் பாடத்தின் பார்வை அரசு பற்றிய கருத்தாக்கங்கள், அரசியல் நிறுவனங்கள், அவற்றின் செயல்பாடுகள் போன்றவற்றோடு, அரசுகளுக்கிடையேயான உறவுமுறைகள் பற்றியதாகவும் மட்டுமே இருந்தது. 19-ஆம் மற்றும் 20-ஆம் நூற்றாண்டுகளில் அரசியல் பாடத்தின் பார்வையானது சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகிய இரண்டிற்கும் இடையேயான பிரச்சனைகளைச் சுற்றியே இருந்து வந்தது. 21-ஆம் நூற்றாண்டில் அரசியல் பாடத்தின் மையக்கரு சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய இரண்டிற்கும் இடையேயான மோதல்கள் பற்றியதாகவே இருந்து வருகிறது. இது தவிர மேம்பாடு, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, பாலின சமத்துவம், பன்னாட்டு அமைதி மற்றும் ஒத்துழைப்பு போன்றவை அரசியலின் முக்கியமாகக் கருதப்படாத பிற மையக் கருக்களாக இருந்தன.

அரசியல் என்பது அனைவருக்கும் இன்றியமையாததாகும்

வரலாற்றுக்காலம் முதலே அரசியலின் மையக்கருத்து பற்றி அரசியல் தத்துவஞானிகளுக்கு இடையே மாறுபட்ட கருத்துக்களே நிலவி வந்தது. அரசியல்

11th Std Political Science Tamil_Unit-1.indd 1 06/12/2022 10:26:05

அறிவியலின் தந்தை அரிஸ்டாட்டில் அரசியல் பற்றிய உண்மைகள் மற்றும் அரசுக்கும் மக்களுக்கும் உள்ள உறவு முறைகளையும் முறைப்படி படித்து அறிந்துகொள்வதே அரசியல் பாடத்தின் முக்கிமான பணி என்கிறார். அவர் மேலும் பல்வேறு அரசியல் முறைமைகளைப் பற்றி வகைப்படுத்தி விளக்குகிறார். அரசியல் பாடத்தின் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டுக்கு பிளாட்டோவும், அரிஸ்டாட்டிலும் பெரும் பங்களிப்பாற்றியுள்ளனர். அரிஸ்டாட்டில் தனது குருவான பிளாட்டோவின் அரசியல் வகைப்பாட்டினை மேலும் வரலாற்று ரீதியாக பகுப்பாய்வு செய்து விளக்கியுள்ளார். இவர்கள் இருவரும் பல்வேறு வகையான அரசாங்கங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதனை புரிந்து கொள்ள முயற்சி செய்தனர்.

இடைக்காலத்தில் புனித ரோமானிய பேரரசின் காலத்தில் அரசியல் அதிகாரம் முழுவதும் பேராலயங்களின் கட்டுப்பாட்டில் இருந்ததால் அரசியல் பற்றி பேசும் இடமாக பேராலயம் இருந்தது. **புனிதஅகஸ்டினின்** நூலான 'கடவுளின் நகரம்' (The City of God) எனும் படைப்பில், அரசியல் தத்துவம் என்பது மதத்தின் ஒரு அங்கமாகவே வலியுறுத்தப்பட்டுள்ளது. இடைக்கால ஐரோப்பிய தத்துவஞானிகள் மற்றும் கிரேக்க சிந்தனையாளர்கள் அனைவருமே அரசியல் என்பதனை அரசின் ஒரு அங்கமாகக் கருதாமல் மதம் மற்றும் பக்தி சார்ந்ததாகவும், சமூகம் சார்ந்ததாகவும் மட்டுமே பார்த்து வந்தனர் என்பது இங்கே குறிப்பிடத்தகுந்ததாகும்.

இத்தாலிய மறுமலர்ச்சிக் காலத்தின் போது நிக்காலோ **மாக்கியவல்லி,** (Niccolo Machiavelli) செயலறிவிலான கூர்நோக்குதல் மற்றும் பட்டறிவின் (empiricism) அடிப்படையில் அரசியல் அமைப்புகள் மற்றும் அரசியல் நடத்தைகள் பற்றிய தனது மதச்சார்பற்ற அணுகுமுறையின் மூலம் நவீன அரசியல் அறிவியல் பாடத்திற்கு அடிகோலினார் என்று கூறலாம். அமெரிக்க அரசியல் அறிவியல் அறிஞர் **ஹெரால்ட் லாஸ்வெல்** (Harold Lasswell) என்பாரின் கூற்றுப்படி அரசியல் அறிவியல் என்பது "யார், எப்போது, எதனை, எப்படி அடைகிறார்கள்?" என்பது பற்றியதாகும். "எல்லா சமூகங்களும் வேறுபட்ட தங்களின் விருப்பங்களையும், தேடல்களையும் அடைவதற்கு முயற்சிப்பதும், இந்த வேறுபட்ட தேடல்களின் விளைவாக எழும் மோதல்களை ஒழுங்குபடுத்த உருவானதே அரசியல்" என்றும் கூறுகிறார். மேலும், தற்கால சமூகங்களில் காணப்படும் பற்றாக்குறை மூலவளங்களை அதிகமான தேவைகளுக்கு முறையாக மற்றும் திறமையாக பகிர்ந்து அளிப்பதே அரசியல் எந்திரம் என்பதும் உணரப்பட வேண்டிய செய்தியாகும். **காரல்மார்க்சின்**(KarlMarx) கூற்றுப்படி "அரசியல் என்பது அரசியல் அதிகாரம் மற்றும் வகுப்பு மோதல்கள்" பற்றியதாகும். இதனையே **டேவிட் ஈஸ்டன்** (David Easton) "விழுமியங்களை அதிகாரப் பூர்வமாக ஒதுக்கீடு செய்தல்" (Authoritative Allocation of Values) என்று கூறுகிறார்.

அரசியல் அறிஞர்கள் பலரும் அரசியல் என்பதனை அதிகாரம், முறையான ஒழுங்கமைவு, மற்றும் நீதி ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே விவரித்துள்ளனர். விதிமுறைகளை உருவாக்கி, நடைமுறைப்படுத்தவும் அதன் மூலம் மனிதர்களின் செயல்பாடுகளை/நடத்தையை

உங்களுக்குத் தெரியுமா?

மகிழ்ச்சி பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்து

மகிழ்ச்சி என்பது வாழ்க்கையின் ஒரு முக்கியமான அம்சம் என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். ஒரு மனிதன் தற்காலிக இன்பத்தை தேடுவதில் நேரத்தை செலவிடுவதைக் காட்டிலும், நிரந்தரமான மகிழ்ச்சியை தேடுவதே சிறந்தது என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். ஒருவனின் மகிழ்ச்சி என்பது பொருள் அடிப்படையிலானவற்றில் இல்லை என்பதும் அவனுடைய முழுமையான திறமை மற்றும் உண்மையான தன்மையை அறிந்துகொள்வதில்தான் இருக்கிறது என்பதும் அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். சுருங்கக் கூறின் மகிழ்ச்சி என்பது ஒருவனின் உள்ளேயே இருக்கிறதே தவிர வெளியில் இல்லை என்பது அவரின் கருத்து. அரிஸ்டாட்டிலின் புகழ்பெற்ற கருத்தாக்கம் ஒன்று பின்வருமாறு "மனிதனின் உயிர்வாழ்தலின் நோக்கம் மற்றும் பொருளே மகிழ்ச்சியை தேடுவதேயாகும்"

www.tnschoolbooks.in

ஆட்கொள்ள வல்ல ஆற்றல் எதுவோ அதுவே அதிகாரம் எனப்படும். அதிகாரம் சட்டப்படியோ அல்லது சட்டப்படி இல்லாமலோ கூட இருக்கலாம். இங்கே அதிகாரம் மற்றும் அதிகாரத்துவம் என்ற இரண்டு கருத்தாக்கங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டினை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். சட்ட அங்கீகாரம் இல்லாமல் வெறும் ஒப்புதலை மட்டுமே பெற்றதனை **"அதிகாரம்"** (Power) என்றும், சட்ட அங்கீகாரம் பெற்ற செயல்பாட்டினை **"அதிகாரத்துவம்"**(Authority) எனலாம். அதிகாரம் என்பது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலம் செயல்படுத்தப்படும்போது மக்கள் அதனை ஏற்றுக்கொள்கின்றனர்.

அரசியல் என்பது அரசியல் அமைப்பை உருவாக்கும் கட்டமைப்பு, விதிமுறைகள், வழிமுறைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் பற்றியதாகும். பெரும்பான்மையான மக்கள் ஒரு சிலரால் ஆளப்படும்போது அத்தகைய அரசு இயந்திரம் நியாயமானதாக அமைந்திருக்கவேண்டியது அவசியமானதாகும். எனவே அதிகாரத்தினை செயல்படுத்தும்போது அது நீதியின் மீது

மாணவர்: அய்யா! நமது கலந்துரையாடலில் அரசியலைப்பற்றி குறிப்பிடும்போதெல்லாம் கிரேக்க சிந்தனையாளர்களான பிளாட்டோ மற்றும் அரிஸ்டாட்டிலைப் பற்றி குறிப்பிடுகிறீர்களே! இந்திய அளவில் முதல் அரசியல் சிந்தனையாளர் என யாரைக் குறிப்பிடலாம் அய்யா!



ஆசிரியர்: இந்திய அளவில் திருக்குறளை எழுதிய திருவள்ளுவரை நாம் முதல் அரசியல் சிந்தனையாளர்களில் ஒருவர் எனக் கருத முடியும்

மாணவர்: அய்யா! பழந்தமிழ் இலக்கியம் ஒன்று இந்தியாவின் முதல் அரசியல் நூலாக கருதப்படுவதனைக் கேட்க மிகவும் ஆர்வமாக இருக்கிறது.

ஆசிரியர்: பொ.ஆ.மு. 300-இல் கௌடில்யரால் எழுதப்பட்ட அர்த்தசாஸ்திரம் என்ற நூல் மிகவும் பழமையான நூலாக இருந்தாலும் அது 'அரசியல் பொருளாதாரம்' என்பதில் அதிகம் கவனம் செலுத்துகிறது. ஆனால் திருவள்ளுவரின் திருக்குறள் அதிகமாக அரசியல் ஆளுகையைப் பற்றி பேசுகிறது.

மாணவர்: ஓ! அப்படிங்களா அய்யா! கௌடில்யரைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள் அய்யா!

ஆசிரியர்: மகிழ்ச்சி! பொ.ஆ.மு.300-இல் வட இந்தியாவை ஆண்ட சந்திர குப்த மௌரியர் என்பவரின் முதலமைச்சராக இருந்தவர்தான் கௌடில்யர். அவர் எழுதிய நூலின் பெயர்தான் அர்த்தசாஸ்திரம். சமஸ்கிருதத்தில் அர்த்தம் என்றால் 'பொருள்' சாஸ்திரம் என்றால் 'அறிவு' சுருக்கமாக கூறினால் அர்த்தசாஸ்திரம் என்பது ஒரு அரசியல் பொருளாதார நூல் ஆகும்.

மாணவர்: அய்யா! அப்படியெனில் அரசியல் அறிவியலுக்கு திருவள்ளுவரின் பங்களிப்பு என்னவென்று கூறுங்கள்!

ஆசிரியர்: திருக்குறளில் இருந்து நாம், அரசின் கூறுகள், இலட்சிய அரசின் தன்மைகள், நல்ல அரசரின் குணக்கூறுகள், அமைச்சர்களுக்கான தகுதிகள், அரசு அலுவலர்களை தேர்ந்தெடுக்கத் தேவையான தகுதிகள், அதிகார ஒப்படைப்பு போன்ற பலவற்றினை அறிய முடிகிறது. திருக்குறளில் அரசு, மற்றும் அரசன் ஆகியோரின் தன்மைகள் மற்றும் பண்பு நலன்கள் பற்றி இறைமாட்சி என்ற ஓர் அதிகாரம் முழுவதும் எழுதப்பட்டுள்ளது.

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள் –381)

என்று கூறுகிறார். அதாவது ஒரு அரசன் சிறந்து விளங்குவதற்கு ஆறு அடிப்படைக் கூறுகள் அமைந்திருக்க வேண்டுமென திருவள்ளுவர் கூறுகிறார்.

(1) சிறந்த படை
(2) நல்ல குடிமக்கள்
(3) நல்ல மூலவளங்கள்
(4) அறிவார்ந்த அமைச்சர்கள்
(5) சிறந்த பாதுகாப்பு மிக்க அரண்கள்
(6) நட்பு நாடுகளின் ஆதரவு ஆகிய ஆறும் சிறந்த அரசனுக்கு வேண்டுமெனக் கூறுகிறார்.

11th Std Political Science Tamil_Unit-1.indd 3 06/12/2022 10:26:06

www.tnschoolbooks.in

அதே போல அரசராக இருக்க வேண்டுபவர் என்னென்ன குணநலன்களைப் பெற்றிருக்க வேண்டுமென திருவள்ளுவர் கூறுகிறாறெனில்,

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கியல்பு". (குறள் –382)

ஓர் அரசன் என்பவன்,

(1) துணிவு (2) ஈகைக்குணம் (3) பொது அறிவு
(4) செயலூக்கம், அவசியம் என்று கூறுகிறார்

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு" (குறள் –383)

நிலத்தை ஆளும் அரசனுக்கு

(1) காலம் தாழ்த்தாத தன்மை
(2) கல்வியுடைமை
(3) நல்ல காரியங்களை செய்வதற்கான துணிவுடமை ஆகிய மூன்றும் அவசியமான குணம் என்கிறார் திருவள்ளுவர்.

இதுபோலவே ஒரு நாடு சிறந்த நாடாக விளங்குவதற்கு என்னென்ன தன்மைகள் அமைந்திருக்க வேண்டுமென்பதனை,

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேராதியல்வது நாடு" (குறள் –734)

என்ற குறளில் உண்ண உணவில்லாத பஞ்சநிலை, தீராத பல நோய்கள், எப்போதும் தாக்குவதற்கு தயாராக இருக்கும் பகைநாடுகள் ஆகிய மூன்றும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (குறள் –385)

என்ற குறளில் வருவாயை அடையாளம் காணுதலும், அதனை திறமையாக திரட்டுவதும், திரட்டிய வருவாயை அரசுக்கருவூலத்தில் பாதுகாத்து வைப்பதும், அவ்வாறு பாதுகாத்த செல்வத்தை மக்களுக்கு முறையாக வழங்குதலும் செய்ய வல்லது தான் சிறந்த அரசு என்று வள்ளுவர் கூறுகிறார்.

மாணவர்: இந்தியாவின் பழம்பெரும் அரசியல் அறிவியல் நூல்கள் குறித்து தங்களிடமிருந்து தெரிந்துகொண்டதில் மிகவும் மகிழ்ச்சி அய்யா.

அதிகாரம் என்பது……

எல்லா சமூகத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவிலான அதிகாரம் இருக்கிறது. அது ஒரேநேரத்தில் ஒருவராலோ அல்லது ஒரு குழுவினாலோ கையாளப்படுகிறது. **– காரல் மார்க்ஸ்**

அதிகாரம் என்பது ஒரு குழு மற்றொரு குழுவின் செயல்பாடுகள் மற்றும் போக்குகளைத் தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கும் உறவுமுறையே ஆகும்.

– டேவிட் ஈஸ்டன்

அதிகாரம் மேலும் அதிகாரங்களை உருவாக்கி கொள்கிறது. அதிகாரமே உயர்குடியினவாதத்தின் மைய கோட்பாடாகும்.

– ராபர்ட் மிச்செல்ஸ்

கட்டமைக்கப்பட்டதாக இருக்க வேண்டியது முக்கியமாகும். இவ்வாறாக அதிகாரம், முறையான ஒழுங்கமைவு, மற்றும் நீதி ஆகியவை அரசியல் பாடத்தின் அடிப்படை கருத்தாக்கங்கள் ஆகும். 19–ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து அரசியல் குறித்த கல்விப்புல படிப்பு அரசியல் அறிவியல் என அழைக்கப்படலாயிற்று.

அரசியல் அறிவியல்

தற்காலத்தில் **'அரசியல்'** என்ற பாடம் **'அரசியல் அறிவியல்'** என்ற பெயரில் புதியதொரு தனித்து இயங்கும் பாடமாக மாறியுள்ளது. பண்டைய கிரேக்கத்தின் சிறிய நகர அரசுகளின் விவகாரங்களைக் குறிப்பது அரசியல் என்ற சொல்லாகும். ஆனால் இப்போது அரசியல் என்ற சொல் "அரசாங்கங்களின் தற்காலப் பிரச்சனைகளைப் பற்றியது" என **ஆடம் கில்கிறிஸ்ட்** (Adam Gilchrist) என்ற அறிஞர் கூறுகிறார். ஒருவன் தனக்கு அரசியலின்மீது ஆர்வம் உள்ளது என்று அவன் அரசியல் பிரச்சனைகள், சட்டமியற்றல், தொழிலாளர் பிரச்சனைகள், கட்சி நடவடிக்கைகள் ஆகியவற்றின் மீதும் ஆர்வமாக இருக்கிறான் என்பதே பொருளாகும். ஆனால் அரசியல் கல்வி என்பது தற்கால அரசியல் நிகழ்வுகளிலிருந்து வேறுபட்டதாகும். மேலும் ஒரு நாட்டின் அரசியல் என்பது

மற்றொரு நாட்டின் அரசியலிருந்து வேறுபட்டதாகும். இந்தியாவில் அரசியலைப்பற்றி நாம் புரிந்துகொண்டிருப்பது மாதிரியே உலகின் எல்லா நாடுகளிலும் அரசியல் இருப்பதில்லை. அது நாட்டுக்கு நாடு வேறுபடும். ஆனால் 'அரசியல் அறிவியல்' என்பது உலகம் முழுவதும் ஒரே பொருளில் அறியப்படுகிறது. அதனால்தான் இப்பாடத்தினை அரசியல் என்று அழைப்பதைக்காட்டிலும் அரசியல் அறிவியல் என்று அழைப்பதே சிறப்பானது ஆகும். 1948-ல் பிரான்சு நாட்டின் பாரிஸ் நகரில் கூடிய அரசியல் அறிஞர்கள் இப்பாடத்தினை அரசியல் அறிவியல் என்று மட்டுமே அழைப்பது என்பதில் ஏற்புடைய கருத்தினைக் கொண்டிருந்தனர். எனவே ஒரே பாடத்தினை 'அரசியல்' என்றும் 'அரசியல் அறிவியல்' என்றும் இரண்டு பெயர்களில் அழைக்காமல் இனி அரசியல் அறிவியல் என்று அழைப்பதே சரியானதாகும்.

இப்பாடத்தினை ஒரு தனித்தியங்கும் துறை சார்ந்த பாடமாக மாற்றியமைத்த பெருமை அமெரிக்க ஐக்கிய நாட்டையே சாரும். அதுவரையிலும் இப்பாடம் தத்துவம், வரலாறு, சட்டம், பொருளியல் போன்ற பாடங்களில் ஒரு துணைப்பாடமாகத்தான் இருந்து வந்தது. 1880-ல் **ஜான் W. பர்ஜெஸ்** (John W Burgess) என்பவர் கொலம்பிய பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் பாடத்திற்கென தனியாக ஒரு துறையை உருவாக்கிய போதுதான் இப்பாடம் தன்னாட்சியான துறையாக உருவானது என்று கூறலாம். அதன் பின்பு படிப்படியாக வளர்ச்சி பெற்று 1920-களில் உலகின் பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் இப்பாடத்திற்கென தனியான துறைகள் ஏற்படுத்தப்பட்டன. தத்துவம், சட்டம், வரலாறு போன்ற பாடங்களின் கீழ் இயங்கிவந்த அரசியல் பாடத்தினை தனிப்பெரும் பாடமாக மாற்றியமைத்த பெருமை முழுவதும் அமெரிக்க அரசியல் அறிஞர்களையே சேரும். இப்பாடம் அதன் பிறகும், இரண்டாம் உலகப்போர் நடைபெறும் காலம் வரையிலும் கூட மிகவும் முறைசார்ந்ததாகவும் நிறுவனம் சார்ந்த அணுகுமுறையிலும் மட்டுமே இருந்தது.

நிலையான நிறுவனங்கள் சார்ந்த படிப்பாக மட்டுமே இருந்த அரசியல் பாடத்தினை சமுதாயப் பிரச்சனைகளைப் பற்றி படிக்கும் பாடமாக மாற்றியமைக்க அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி-**உட்ரோ வில்சன்** (Woodrow Wilson) என்ற அறிஞரும், **பிரான்க் குட்னவ்** (Frank Goodnow) என்ற அறிஞரும் பெரும் முயற்சிகளை எடுத்துக்கொண்டனர். அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த **ஆர்தர் பென்ட்லி** (Arthur Bentley) என்ற அறிஞர் இப்பாடத்தை விழுமியங்கள் நீக்கிய நடுநிலையான அரசியல் பகுப்பாய்வு செய்யும் ஆற்றல் பெற்றதாக (value-free analysis of politics) மாற்றியமைக்க பெரும்பாடு பட்டவர் ஆவார். மேலும் **சார்லஸ் ஈ. மெர்ரியம்** (Charles E.Merriam) என்ற அறிஞர் இப்பாடத்தை செயலறிவிலான கூர்நோக்குதல் மற்றும் அளவீடுகளை உள்ளடக்கியதாகவும் மாற்றியமைக்க பெரும் முயற்சிகளை எடுத்துக்கொண்டார். இம்முயற்சியில் **சார்லஸ் ஈ. மெர்ரியத்தின்** (Charles E. Merriam) "அரசியல் அதிகாரம்" என்ற நூலும், **ஹெரால்ட் லாஸ்வெல்** என்பாரின் "அரசியல்: யார், எப்போது, எதனை, எப்படி அடைகிறார்கள்?" (Politics: Who Gets What, When, How?) என்ற நூலும் அரசியலின் மையக் கருத்தாக அதிகாரம் என்னும் அம்சத்தினை உருவாக்கின.

1920- களிலும் 1930-களிலும் ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளில் நிலவிய முற்றதிகார ஆட்சிகள் மற்றும் இரண்டாம் உலகப்போரின் விளைவாக இந்த அரசியல் அறிவியல் பாடம் தனது அமைப்புகள் மற்றும் நடைமுறைகளின் மீதான கவனத்திலிருந்து மாறி அரசியல் கட்சிகள், அழுத்தக்குழுக்கள், உயர்குடியினர் நடத்தை, தேர்தல் விருப்ப நடத்தைகள், வாக்காளர் நடத்தை என ஒரு நடத்தையியல் (Behavioralism) பாடமாக மாறியது. இதன் விளைவாக **'நடத்தையியல்'** (Behavioralism) என்ற ஒரு புதிய பாடம் பிறந்தது. 'நடத்தையியல்' என்ற இந்த சொல் உளவியல் பாடத்திலிருந்து பெறப்பட்டதாகும். அதன் பிறகு 1960- களில் **'பின்தோன்றிய நடத்தையியல்'** (Post-Behavioralism) என்ற புதிய பாடமும் பிறந்தது. நடத்தையியல் என்பது அளவுக்கு அதிகமான பழமைவாத அணுகுமுறைகளை உருவாக்கியதாலேயே இந்த புதிய முறையான

"பின்தோன்றிய நடத்தையியல்" உருவானது. இதில் ஒரு விந்தை என்னவெனில் இப்புதிய போக்கினை மேம்படுத்தி உருவாக்கிய **டேவிட் ஈஸ்டன்** (David Easton) என்பவரே நடத்தையியல் புரட்சியினை தொடக்கி வைத்தார். டேவிட் ஈஸ்டனின் கருத்துப்படி நடத்தையியல் என்பது யதார்த்தம் மற்றும் உண்மைத்தன்மை ஆகியவற்றுக்கு எதிரானதாக மாறிவிட்டதாக கருதப்பட்டது. ஆகவே பின்தோன்றிய நடத்தையியல் என்பது ஆய்வுகள், விழுமியங்களை மட்டுமே முழுமையாக சார்ந்திருக்காமல் துல்லியத்தன்மையையும் சார்ந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இவ்வாறாக அரசியல் அறிவியலின் அறிவுசார் புரட்சி என்பது சமூகவியல், மானுடவியல் மற்றும் உளவியல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்தது. மேலும் இந்த அறிவுசார் புரட்சியாளர்கள் பழமைவாத கருத்துக்களையும், குறுகிய நோக்கம் கொண்ட அணுகுமுறைகளையும் தீவிரமாக எதிர்த்தனர். முற்கால அரசியல் அறிஞர்கள் அரசு, அரசின் கூறுகள், அரசின் நிறுவனங்கள், அவைகளின் முறையான கட்டமைப்புகள் போன்றவற்றை படித்தனரே தவிர மனிதர்களின் அரசியல் நடத்தையையும் அவர்களுக்குள் உள்ள உறவுமுறைகைள் குறித்தும் படிக்கவில்லை. எனவேதான் தற்கால அரசியல் பகுப்பாய்வாளர்கள்

செயல்பாடு

- **அரிஸ்டாட்டில்** (Aristotle) ஒரு மாபெரும் சிந்தனையாளராக கருதப்படுவதற்கான காரணம் என்ன? விவாதிக்கவும்.
- **பிளாட்டோவும், அரிஸ்டாட்டிலும்** (Plato and Aristotle) கிரேக்கத்தின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார வாழ்க்கையில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளதாக கருதப்படுவது ஏன்? விவாதிக்கவும்.
- **சார்லஸ் ஈ மெர்ரியம்** (Charles E. Merriam), **உட்ரோ வில்சன்** (Woodrow Wilson) மற்றும் **ஆர்தர் பென்ட்லி** (Arthur Bentley) ஆகியோரைப்பற்றியும் அவர்கள் எழுதிய நூல்களைப்பற்றியும் படித்து அறிந்துகொள்க.

பின்வரும் நான்கு அடிப்படைக் கூறுகளில் கவனம் செலுத்தினர்.

- பல்முனைப் பரப்பெல்லையை உள்ளடக்குவதற்கான ஒரு தேடல்
- யதார்த்தத்திற்கான தேடல்
- தெளிவும் சுருக்கமும் பெறுவதற்கான தேடல்
- அறிவுப்பூர்வ வரிசைமுறைக்கான தேடல்

கலந்துரையாடல்

மாணவர் –1 : என்ன ? அரிஸ்டாட்டில் மக்களாட்சியை மோசமான அரசாங்க முறை என்றாரா?

மாணவர் –2 : ஆமாம்! இருப்பினும் மக்களாட்சியை அரிஸ்டாட்டில் கும்பலாட்சி என்ற பொருளில் புரிந்து கொண்டார். தூய அரசியல் அமைப்பு என்பது இதை விட மிகவும் சிறந்த மற்றும் நிலையான அரசாங்க முறை என நினைத்திருப்பார்.

மாணவர் –1 : அப்புறம்….. தூய அரசியல் அமைப்பு (Polity) என்றால் என்ன?

மாணவர் –2 : தூய அரசியல் அமைப்பில் மேலான அதிகாரம் என்பது பெருவாரியாக மக்களிடம் இருப்பதுடன் அது பொது நன்மைக்காகப் பயன்படுத்துகிறது.

மாணவர் –1 : ஓ! அப்படியா..!.!

அரசியல் அறிவியலின் வரையறை

அரசியல் அறிவியல் பற்றி பல்வேறு அறிஞர்கள் மாறுபட்ட விளக்கங்களை அளித்துள்ளனர். **கார்னர்** (Garner) இதனை 'அரசிடம் ஆரம்பித்து அரசிடமே முடியும் ஒரு பாடம்' என்கிறார், **'லீகாக்'கும் 'சீலே'வும்** (Leacock) (Seeley) இப்பாடம் 'அரசாங்கத்தினைப் பற்றி படிக்கும் பாடம்' என்கின்றனர். ராப்சன் (Robson) மற்றும் **லாஸ்வெல்** (Lasswell) ஆகிய இருவரும் இப்பாடம் 'அதிகாரம் மற்றும் செல்வாக்கு ஆகியவைகளைப் பற்றிய படிப்பு' என்கின்றனர். சில அறிஞர்கள் இதனை ஒருங்கிணைக்கப்பட்ட மனித சமூகத்தின் அரசியல் அம்சங்களைப் படிக்கும் பாடம் என்கின்றனர். இவ்வாறாக இப்பாடத்தின் பரப்பெல்லையானது பலமுனைகளிலும்

வளர்ந்துகொண்டே வருகிறது. அரசியல் அறிவியல் என்பது வரலாற்றுப்பூர்வமாக அரசு, அதன் அமைப்புகள், சட்டங்கள், அதன் செயலாக்கங்கள் பற்றிய படிப்பாகவே அறியப்பட்டது. நடத்தைசார் புரட்சிக்குப் பின்னர் தனிமனிதர்கள் மற்றும் குழுக்களின் அரசியல் நடத்தைகளும் இதன் அங்கமாகிவிட்டன. அரசியல் அறிவியல் பாடத்தில் அண்மைக்காலத்தில் சேர்ந்துகொண்ட கருத்தாக்கம் 'ஆளுகை' (Governance) என்பதாகும்.

அரசியல் அறிவியல் என்பது அரசின் தோற்றம், மேம்பாடு, நோக்கம் மற்றும் அதன் பல்வேறு அரசியல் பிரச்சனைகளைப் பற்றி அறிந்து கொள்வதாகும். **– கேரிஸ் (Garris)**

அரசியலைக் கற்றல் என்பது ஒருங்கிணைக்கப்பட்ட ஓர் அரசுடன் மக்களின் வாழ்க்கைக்கு உள்ள தொடர்பினை படிப்பதாகும். **– ஹெரால்ட் லாஸ்கி (Harold Laski)**

அரசியல் அறிவியல் என்பது அரசாங்கம் மற்றும் அரசியல் பொருளாதாரம் என்பவைகளை வளம், உயிரியல் வாழ்க்கை, இயற்கணிதம், வரைகணிதம், விண்வெளி போன்றவற்றோடு தொடர்புபடுத்தி படிப்பதாகும். **– சீலே (Seeley)**

அதிகாரம் வடிவமைத்து பங்கிடப்படுவதை அனுபவ விசாரணை செய்வதே அரசியல் அறிவியல் ஆகும். **– ஹெரால்ட் லாஸ்வெல் (Harold Lasswell)**

அரசியல் அறிவியல் என்பது கடந்த காலத்தை வரலாற்று ரீதியாகவும், நிகழ் காலத்தினை பகுப்பாய்வு ரீதியாகவும், எதிர்காலத்தினை நன்னெறி ரீதியாகவும் படிக்க உதவும் ஒரு பாடமாகும். **– கெட்டல் (Gettel)**

ஒரு சமுதாயத்தின் எல்லைக்குள் ஒரு நகரத்திற்கோ, ஒரு அரசுக்கோ, ஒரு தேசத்திற்கோ அந்த சமுதாயத்தில் நிலவும் பற்றாக்குறையான மனிதவளம், பொருளியல் வளம் போன்றவற்றினை மனித தேவைகளுக்கும், மனித விருப்பங்களுக்கும் ஏற்ப முறைப்படுத்தி வழங்கும் செயல்முறையே அரசியல் ஆகும். **– டேவிட் ஈஸ்டன் (David Easton)**

1.2. அரசியல் அறிவியலின் தன்மை (Nature of Political Science)

மனிதன் என்பவன் ஒரு சமூக விலங்கு ஆவான். மனிதன் தனிமையைவிட பிறருடன் இருப்பதையே விரும்புகிறான். மனிதன் தனது பரந்துபட்ட தேவைகளுக்கும், திருப்திக்கும் சக மனிதனைச் சார்ந்தே வாழவேண்டியுள்ளது. அதனால் மனிதர்கள் எப்போதும் சமூக குழுக்களாகவே வாழ வேண்டியுள்ளது. சமூகத்தின் ஒரு அங்கமாக விளங்கும் மனிதர்கள் பொதுவான நடத்தை விதிகளை கடைபிடித்தே வாழவேண்டியுள்ளது. இத்தகைய சமுதாயம் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு விதிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளதால் அதனை ஏற்பது மிகவும் நன்றாகும். இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட சமுதாயம், அரசு, சட்டம், தனிமனித உரிமைகள், குழுவில் உள்ள உரிமைகள் ஆகியவைகளைப் பற்றியே அக்கறை கொண்டுள்ளது. இவ்வாறாக அரசியல் அறிவியல் என்பது மனித இனத்திற்கு, அரசு மற்றும் அரசாங்கத்துடனான தொடர்பினை முக்கியமாக விளக்குகிறது.

அரசியல் அறிவியல் என்பது கோட்பாடு மற்றும் செயல்முறை ஆகியவற்றை பற்றியதாகும். இது அரசியல் முறைமைகளையும், அரசியல் நடத்தைகளையும் விவரித்து பகுப்பாய்கிறது. அரசின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றி கண்டறிகிறது. அரசுக்கும் அதன் கீழ் உள்ள சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியனவற்றுக்கும் உள்ள தொடர்பினைப் படிக்கிறது. அரசியல் சூழல்களில் ஆடவர் மற்றும் மகளிர் ஆகியோர் என்ன செய்கிறார்கள் என்பதனை விளக்குகிறது. ஆரம்ப காலகட்டத்தில் இப்பாடம் வரலாறு மற்றும் தத்துவம் ஆகிய பாடங்களோடு இணைந்து செயல்பட்டது. 1903– இல் தோன்றிய 'அமெரிக்க அரசியல் அறிவியல் கழகம்' (American Political Science Association) இப்பாடத்தினை வரலாறு, பொருளியல் மற்றும் பல சமூக அறிவியல் பாடங்களின் பிடியிலிருந்து மீட்டெடுத்து ஒரு தனிப்பாடமாக உருவாக வழிவகை செய்தது. பிற்காலத்தில் அதிகமான அறிவியல் அணுகுமுறை ஏற்பட்ட பிறகு இப்பாடம் உளவியல் மற்றும்

நிகழ் ஆய்வு

"எதிர்காலத்தினை நம்பிக்கையோடு சந்திப்போம்" "Tryst with Destiny"

ஜவஹர்லால் நேருவின் வரலாற்று புகழ் மிக்க உரையான "எதிர்காலத்தினை நம்பிக்கையோடு சந்திப்போம்" என்ற உரை குறித்து 14.08.1947 அன்று இந்து நாளிதழில் வெளியான செய்தி பின்வருமாறு –

"நீண்ட வருட காலமாக நாம் நம்பிக்கையோடு காத்திருந்த எதிர்காலம் இப்போது நமக்கு முழுமையாக கிடைக்கவில்லை எனினும் மிகவும் கூடுதலாகவே உறுதிமொழியாக வந்து வாய்த்துள்ளது" என துவங்கிய பண்டித ஜவஹர்லால் நேரு அரசமைப்பு நிர்ணய சபையில் அன்றிரவு பதவியேற்கவிருந்த உறுப்பினர்களுக்கான உறுதிமொழி தீர்மானத்தின் போது பின்வருமாறு கூறுகிறார்.

"உலகமே உறங்கிகொண்டிருக்கும்போது இந்தியா இந்த நள்ளிரவில் விழித்தெழுந்திருக்கிறது. பழமையிலிருந்து புதுமை நோக்கி பயணிக்கத்தயாராகிவிட்டோம். நீண்ட காலம் ஒடுக்கி வைக்கப்பட்ட ஒரு தேசத்தின் ஆன்மா உயிர்ப்பித்திருக்கிறது. இந்த சமயத்தில் இந்திய தேசத்திற்கும், இந்திய மக்களுக்கும் சேவை செய்ய நாம் தியாக உணர்வுடன் சில உறுதிமொழிகளை எடுத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம்".

"சுதந்திரமும், அதிகாரமும் நமக்கு பொறுப்புணர்வினை அதிகமாகக்கொண்டுவந்துள்ளது. அந்த பொறுப்புணர்வு இறையாண்மையுள்ள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இறையாண்மை கொண்ட இந்த அவையிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்த சுதந்திரத்தை நாம் பல வலிகளையும், துன்பங்களையும், துயரங்களையும் தாங்கி, கனத்த இதயத்துடனேயே பெற்று இருக்கிறோம். இவற்றுள் பல வலிகள் இன்னும் தொடரவே செய்கின்றன. எப்படியிருப்பினும் கடந்த காலம் முடிவுக்கு வந்து புதிய எதிர்காலம் நம் கண் முன் வந்துள்ளது.

இந்தியாவுக்கான நமது சேவை கோடிக்கணக்கான இந்திய மக்களை அவர்களின் வறுமை, அறியாமை, பிணி, சமத்துவமின்மை ஆகியவைகளிலிருந்து மீட்டெடுக்க செய்யும் சேவையை பொறுத்தே அமையும். இந்த தலைமுறையின் மிகச்சிறந்த மனிதர்களாக நாம் வாழ விரும்பினால் இந்தியர்கள் ஒவ்வொருவரின் கண்களில் இருந்து வழியும் கண்ணீரை துடைப்பதற்கு முன்வரவேண்டும். அது நமது சக்திக்கு அப்பாற்பட்டு கூட இருக்கலாம். கண்ணீரும், துன்பங்களும் தொடரும்வரை நமது பணிகளும் ஓயப்போவது கிடையாது. ஆகவே நம் கனவுகளை நனவாக்க நாம் மேன்மேலும் கடினமாக உழைக்க வேண்டும். இக்கனவுகள் இந்தியாவுக்கானது மட்டுமல்ல, உலகிற்கானது, உலகின் அனைத்து தேசங்கள் மற்றும் மக்கள் ஒன்றாக இருப்பதால் தனித்து இயங்குவதை கற்பனை கூட செய்ய முடியாது. அமைதி என்பது பிரிக்க முடியாதது. சுதந்திரமும் அது போலத்தானே, தற்பொழுது வளமும் அப்படியே ஆகும். பேரழிவும் அப்படியே இருப்பதால் இந்த ஒரே உலகில் அவற்றினை தனித்தனி பாகங்களாகப் பிரிக்க முடியாது".

முன்பக்கத்தில் உள்ள நேருவின் பேச்சிலிருந்து நீ உணர்ந்து கொண்ட கருத்துக்களின் அடிப்படையில் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.

1. 'எதிர்காலத்தை நம்பிக்கையோடு சந்திப்போம்' என்ற சொற்றொடரிலிருந்து நீ என்ன புரிந்து கொள்கிறாய்?
2. நேரு வெளிச்சமிட்டுக்காட்டியிருக்கும் இந்தியாவின் சவால்களில் எவையேனும் மூன்றினை குறிப்பிடுக.
3. நமது அன்றாட வாழ்வில் சுதந்திரம், அதிகாரம், பாதுகாப்பு, அமைதி போன்றவை முக்கிய அடிப்படை அம்சங்களாக கருதப் படுவது பற்றி கலந்துரையாடுக.

மானுடவியல் போன்ற பாடங்களோடு நெருங்கிய தொடர்பில் இருந்தது. நடத்தையியல் புரட்சி ஏற்பட்ட பிறகு இப்பாடம் தனிமனிதன், குழுக்கள் ஆகியவற்றின் நடத்தைகள் பற்றி ஆய்ந்தது. பின்னர் தோன்றிய நடத்தையியலால் இப்பாடம் சமூகத்தின் அன்றாட பிரச்சனைகளையும், அரசியல் உண்மைகளையும் பற்றிய படிப்பாக மாறியது.

செயல்பாடு

பிளாட்டோ மற்றும் **அரிஸ்டாட்டில்** ஆகியோரின் முக்கியமான படைப்புகளைப் பட்டியலிடுக.

1.3 அரசியல் அறிவியலின் பரப்பெல்லை (Scope of Political Science)

அரசியல் அறிவியல் பாடத்தின் பரப்பெல்லை என்பது இந்தப் பாடத்தின் வரம்பு மற்றும் பாட உள்ளடக்கங்கள் பற்றியதாகும். இது அடிப்படையில் 'அரசு' என்பதைப் பற்றி படிப்பது மிகவும் பரந்த பகுதிகளை கொண்டதாகும். 'அரசு' என்பது ஒரு குறிப்பிட்ட எல்லைப் பகுதிக்குள் தனது சொந்த மக்களின் முறையான மற்றும் மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிசெய்யும் அரசாங்கத்தையும் கொண்டதாகும். மனித நடத்தை என்பது நிலையாக இல்லாமல் மாறிக்கொண்டேயிருப்பதால் இப்பாடத்தின் பரப்பெல்லை தொடர்ந்து விரிவடைந்துகொண்டே செல்கிறது. இப்பாடம் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடன் மற்ற மனிதர்களுக்கும் உள்ள தொடர்பினைப் பற்றிய சட்டமாக்கல் பற்றி படிப்பதால், இதன் பரப்பெல்லையானது பொருளியல், வணிகவியல், சமூகவியல், சட்டம் என பலவகையாக விரிவடைந்து கொண்டே செல்கிறது.

1948-ல் நடந்த பன்னாட்டு அரசியல் அறிவியல் சங்கமாநாடு இப்பாடத்திற்கு பின்வரும் பரப்பெல்லைகளை குறிப்பிட்டது.

- ❖ அரசியல் கோட்பாடு
- ❖ அரசியல் நிறுவனங்கள்
- ❖ அரசியலின் இயக்கவியல்
- ❖ பன்னாட்டு உறவுகள்

அரசியல் அறிவியல் பாடத்தின் பரப்பெல்லையை மேற்கண்ட நான்கு உபதலைப்புகளில் அடக்கிவிட முடியாது என்பதால் பின்வரும் படவிளக்கம் அரசியல் அறிவியலின் பரந்த பரப்பெல்லையை விளக்குகிறது.



அரசியல் அறிவியல் பாடமானது அரசு மற்றும் அரசாங்கங்களின் பிரச்சனைகளைப் பற்றி முக்கியமாகப் படிக்கிறது. தனது குடிமக்களை ஆள்வதற்கான சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தினை அரசு பெற்றுள்ளது. அரசு தனது அதிகாரங்களை அரசாங்கங்கள் மூலமாக செயல்படுத்துகிறது. அரசாங்கம் என்பது அரசின் ஒரு முகமை ஆகும். அரசு என்பது அரசாங்கங்களை உள்ளடக்கியதாக இருப்பதால் பிளண்ட்சிலி (Bluntschli) போன்ற அரசியல் கோட்பாட்டாளர்கள் அரசியல் அறிவியலின் பரப்பெல்லையை மிகவும் குறைத்து அது 'அரசு' என்பதைப் பற்றி மட்டும் படிப்பதாக கூறுகின்றனர். அரசாங்கம் என்பது அரசின் ஒரு பகுதியே ஆகும். அதே சமயம் கார்ல் டாஷ் (Karl Deutsch) போன்ற அறிஞர்கள் 'அரசியல் அறிவியல் என்பது அரசாங்கங்களைப் பற்றி மட்டுமே படிப்பது' என்கின்றனர். ஹெரால்ட் லாஸ்கி (Harold Laski) போன்ற அறிஞர்கள் 'அரசியல் அறிவியல் என்பது அரசுகள் மற்றும் அரசாங்கங்கள் ஆகிய இரண்டையும் படிப்பதாக' வாதிடுகின்றனர். அரசு மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டுக்கும் அடிப்படையான வேறுபாடுகள் இருந்தாலும் அவைகளின் பரப்பெல்லைகளை ஆயும்போது ஒன்றினை விட்டு மற்றதை தனியாகப்

11th Std Political Science Tamil_Unit-1.indd 9 06/12/2022 10:26:08

படிக்க முடியாது. அரசியல் அறிவியலின் பரப்பெல்லையானது, அரசின் கடந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர்கால வளர்ச்சிகளையும் அரசின் மேம்பாட்டினையும் பற்றிப் படிப்பதாகக் கூறலாம்.

அரசியல் கோட்பாடு என்பது அரசியல் அறிவியலின் ஒரு முக்கியமான பகுதியாகக் கருதப்படுகிறது. அரசியல் கோட்பாடு என்பது அரசியல் சிந்தனைகள் மற்றும் அரசியல் தத்துவங்களை உள்ளடக்கிய அரசியல் அறிவியலின் முக்கிய கருத்தாக்கங்களை விவரிக்கும் ஒரு பாடமாகும். அரசியல் அறிவியல் பாடமானது அரசியல் நிறுவனங்களின் தன்மை, அமைப்பு மற்றும் செயல்பாடு ஆகியவைகளைப் பற்றியதாகும். இப்பாடம் மேலும் பலவகையான அரசமைப்புச் சட்டங்களையும் மற்றும் பிற அரசாங்கங்களை ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்யும் பணியினையும் செய்கிறது. இப்பாடத்தின் பரப்பெல்லை தற்கால அரசியல் மற்றும் அரசாங்கங்களின் சக்திகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இப்பாடம் அரசியல் கட்சிகள், தன்னலக்குழுக்கள் மற்றும் அழுத்தக்குழுக்கள் ஆகியவைகளைப் பற்றி படிப்பதாகவும் அமைந்துள்ளது. அரசியல் இயக்கவியல் பற்றிய செயலறிவிலான கற்றலாக தனிமனிதர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகிவைகளின் நடத்தைகள் பற்றியும் ஆராய்கிறது. முக்கியமாக அரசியல் அறிவியல் என்ற பாடம் தனி மனிதனுக்கும், அரசுக்கும் உள்ள உறவுமுறைகளின் மீது பெரிதும் ஆர்வம் காட்டுகிறது. இதன் விளைவாக தற்கால அரசியல் அறிஞர்கள் அரசியல் அறிவியலின் நடத்தையியல் மற்றும் முறைமை அணுகுமுறையின் அடிப்படையில், அரசியல் அறிவியல் பாடத்தின் பரப்பெல்லையை மிகவும் விரிவுபடுத்தியுள்ளனர். இதனால் 'அரசியல் சமூகமயமாதல்', 'அரசியல் பண்பாடு', 'அரசியல் மேம்பாடு', 'முறைசாரா அமைப்புகள்', 'அழுத்தக் குழுக்கள்' போன்றவைகளும் அரசியல் அறிவியல் பாடத்தின் பரப்பெல்லைக்குள் வருகின்றன.

மேலும் அரசியல் அறிவியலின் பரப்பெல்லையின் கீழ் தூதாண்மை (Diplomacy), பன்னாட்டுச் சட்டங்கள், பன்னாட்டு அமைப்புகள் போன்றவைகளும் உள்ளடங்கியுள்ளன. அரசாங்கம் சார்ந்த மற்றும் அரசாங்கம் சாராத நிறுவனங்களின் அரசியல் பிரச்சனைகளின் மீதான பொதுக்கொள்கைகளை வகுப்பது பற்றியும் அரசியல் அறிவியல் பாடம் தனது பரப்பெல்லையில் உள்ளடக்கியுள்ளது.

1.4. அரசியல் அறிவியல் என்பது ஒரு அறிவியலா? அல்லது ஓர் கலையா? (Is Political Science, a Science or an Art?)

அரசியல் அறிவியல் என்ற இந்த பாடம் ஒரு கலைப் பாடமா? அல்லது ஒரு அறிவியல் பாடமா? என்பது பற்றியான ஒரு பெரிய விவாதமே அரசியல் அறிவியல் அறிஞர்களிடையே நிலவி வருகிறது. சில அறிஞர்கள் இப்பாடமானது அரசு மற்றும் அரசாங்கம் என்பது பற்றிய ஒரு அறிவியல் பாடம் என்று கருதுகின்றனர். மற்றும் சிலரோ இப்பாடத்தினை மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள ஒரு கலைப் பாடம் என்கின்றனர். இப்பாடத்தின் தன்மை, வழிமுறைகள், அணுகுமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அறிவியல் தன்மை மிகவும் குறைவாக காணப்படுவதால் **அகஸ்டே கோம்டே** (Auguste Comte) மற்றும் **மைட்லேன்ட்** (Maitland) போன்ற அறிஞர்கள் இப்பாடத்தினை ஒரு கலைப் பாடமாகக் கருதுகின்றனர். ஏனெனில் இப்பாடத்தில் தொடர்ச்சி, மேம்பாட்டுதன்மை, அடிப்படை தெளிவு போன்றவைகளும், உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளக் கூடிய பொதுவான கொள்கைகளும், அறிவியல் பூர்வ அணுகுமுறைகளும், பரிசோதனை முறைகளும் மிகவும் குறைவாகவே இருக்கிறது என்று இவர்கள் வாதிடுகின்றனர். மேலும் நம்பகத்தன்மை, சரிபார்ப்புத்தன்மை, தெளிவு, துல்லியம் போன்ற தூய அறிவியலின் கூறுகள் இப்பாடத்தில் இல்லை என்பதும் இவர்களின் வாதமாகும். தூய அறிவியல் பாடங்களான இயற்பியல், வேதியியல், போன்ற பாடங்களில் உள்ளது போல காரணங்களையும் விளைவுகளையும் (Cause and Effect) தொடர்புப்படுத்தி உருவாக்கும் பொதுக்கோட்பாடுகள் உலகம் முழுதும் இப்பாடத்தில் ஒரே மாதிரியாக இல்லை என்பதனால் இப்பாடத்தினை ஒரு கலைப் பாடம் என்றே பல அறிஞர்களும் கருதுகின்றனர்.

இப்பாடத்தினை ஒரு கலைப் பாடமே என்று வாதிடுவோர் மத்தியில் அரிஸ்டாட்டில்தான்

இதனை ஒரு மேலான அறிவியல் என்று முதன்முதலாக அழைத்தார். **ப்லன்ட்சிலி** (Bluntschli), **மாண்டெஸ்கியு** (Montesquieu), **போடின்**, (Bodin), **ஹாப்ஸ்** (Hobbes) போன்ற அறிஞர்கள் இந்த கருத்தினை ஒப்புக்கொண்டு இப்பாடம் ஒரு அறிவியல் பாடமே என்கின்றனர். முனைவர் **கார்னர்** (Dr.Garner) போன்றோர் இப்பாடத்திலும் முறைமையான அணுகுமுறை, உற்றுநோக்கல், பரிசோதனை போன்றவை இருப்பதாக கூறுகின்றனர். தூய அறிவியல் பாடங்களில் உள்ளதுபோல உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளப்பட்ட கோட்பாடுகள் அரசியல் அறிவியல் பாடத்தில் முழுக்க இல்லாமல் போனாலும் கூட இந்த அரசியல் அறிவியல் பாடத்திலும் பல கருத்துக்களை பொதுமைப்படுத்தி நிரூபிக்க முடியும் என்பது இவர்களின் கருத்தாகும். உதாரணமாக சமூக நல மேம்பாட்டுக்கும், பன்மைத் தன்மை கொண்ட சமுதாயங்களுக்கும் மக்களாட்சியே சிறந்த ஆட்சிமுறை என்ற கருத்து பொதுவானதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த கருத்து முடிவு முற்காலம், இடைக் காலம், நவீனகாலம் ஆகியவற்றில் பல்வேறு வகையான ஆட்சி முறைகளை ஆய்வுக்கு உட்படுத்திய பின்னரே உருவாக்கப்பட்டது. ஆனால் அதே சமயத்தில் இப்பாடத்தின் தன்மை, வழிமுறை, கோட்பாடுகள் ஆகியன பற்றி ஒத்த கருத்துக்களை ஏற்படுத்த முடியவில்லை. ஏனெனில் இப்பாடத்தில் அரசியல் நிறுவனங்கள் அனைத்திலுமே மனித உறவுகள் தொடர்பில் இருக்கின்றன. மனிதனோடு தொடர்புடைய எந்த ஒரு செயல்பாடும் நிலையானதாக இல்லாமல் மாறக்கூடியதாகும். இந்த காரணத்தாலேயே இப்பாடத்திற்கு முழுமையான அறிவியல் என்ற தகுதியினை கொடுக்க இயலவில்லை. எப்படியிருப்பினும் ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், சமத்துவமின்மை, எழுத்தறிவின்மை, வறுமை போன்றவை சமுதாயத்தினை பெரிதும் பாதிக்கும் காரணிகள் என்பதை அனைத்து அரசியல் அறிஞர்களும் ஏகமனதாக ஒப்புக்கொள்கின்றனர்.

அதேபோல 'காரணங்கள் மற்றும் அதன் விளைவுகள்' பற்றிய தூய அறிவியல் கோட்பாடு அரசியல் அறிவியலுக்கு பொருந்தாது என்று கூறினாலும் 'வறுமை, வேலையின்மை போன்ற காரணிகள் புரட்சியினை ஏற்படுத்திவிடும்' என்பது அரசியல் அறிவியலிலும் 'காரண விளைவுக் கோட்பாடு' (Cause and Effect Theory) உள்ளதைக் காட்டுகிறது. எனவேதான் சில அரசியல் அறிஞர்கள் இப்பாடத்தினை ஒரு அறிவியல் பாடம் என தொடர்ந்து கூறிவருகின்றனர்.

எப்படியிருப்பினும், அரசியல் அறிவியலை இயற்கை அறிவியலுடன் ஒப்பிட முடியாமல் இருந்தாலும் அது அரசு மற்றும் அரசாங்கத்துடனான தனிமனிதர்களின் உறவினைப் பற்றிய ஓர் சமூகவியலாகும். அரசியல் அறிவியல் என்பது கலையா அல்லது அறிவியலா என்பது கற்பதற்கு எடுத்துக் கொண்ட பொருள் மற்றும் அதனைக் கற்றறிய பயன்படுத்தும் அணுகுமுறையைப் பொறுத்ததாகும்.



- **அரசியல் அறிவியல் என்றால் என்ன?**
  அரசு அரசாங்கம் மற்றும் அரசியல் பற்றிய அறிவியல் பூர்வ படிப்பே அரசியல் அறிவியல் எனலாம்.
- **அரசியல் அறிவியல் பாடம் எதுவாக இல்லை?**
  அரசியல் அறிவியல் என்பது அனைத்து விடைகளையும் தன்னகத்தே கொண்ட முழுநிறைவான அறிவியலாக இல்லை.
- **அரசியல் அறிவியல் ஓர் அறிவியலா? அவ்வாறெனில், அது எங்ஙனம் அறிவியல் தன்மையுடையதாகிறது?**

'அரசியல்' என்ற இந்த பாடம் அமெரிக்க அரசியல் அறிவியல் சிந்தனையாளர்களின் அறிவியல் பூர்வ அணுகு முறைகளுக்குப் பிறகுதான் "அரசியல் அறிவியல்" எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டது. எனினும் தூய அறிவியல் பாடங்களான இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற பாடங்களுக்கு இணையாக இந்த அரசியல் அறிவியல் பாடத்தினைக் கருத முடியாது. ஆகவே, மனித நடத்தையைப் பற்றியதாக இருப்பதால் மற்றொரு புறத்தில் அரசியல் அறிவியல் என்பது அரசு மற்றும் அரசாங்கத்தைப் பற்றிய அறிவியலாகும் என வாதிட்டனர். அரசியல் அறிவியல் பாடத்தினை ஓர் சமூக அறிவியல் பாடம் என்று அழைப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும்.

11th Std Political Science Tamil_Unit-1.indd 11 06/12/2022 10:26:08

1.5 அரசியல் அறிவியலை படிப்பதற்கான அணுகுமுறைகள்

அணுகுமுறை என்பது ஒரு அரசியல் நிகழ்வினைக் கண்டுணர்ந்து பின்பு அதனை விளக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது ஆகும். அரசியல் அறிவியலை பற்றி அறிந்து கொள்ள பல்வேறு அணுகுமுறைகள் உள்ளன. அவைகளை பாரம்பரிய அணுகுமுறைகள் மற்றும் தற்கால அணுகுமுறைகள் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பாரம்பரிய அணுகுமுறைகள் என்பவை அனுமானங்கள் மற்றும் கருத்தறிவு அடிப்படையிலானவை. தற்கால அணுகுமுறைகள் என்பவை அனுபவ அறிவு மற்றும் அறிவியல் தன்மையை அடிப்படையாக கொண்டவை ஆகும்.

I. பாரம்பரிய அணுகுமுறை (Traditional Approach)

அ) தத்துவார்த்த அணுகுமுறை (Philosophical Approach)

இந்த அணுகுமுறைதான் அரசியலைக் கற்பதற்கான மிகவும் பழமையான அணுகுமுறையாகும். இதனை அனுமானங்கள் மற்றும் மனோதத்துவ அல்லது நன்னெறி சார்ந்த அணுகுமுறை என்றும் கூறலாம். இந்த அணுகுமுறைப்படி அரசு, அரசாங்கம் மற்றும் மனிதனின் அரசியல் நடத்தையைப் பற்றிய படிப்பானது சில இலக்குகள், நீதிநெறிகள் மற்றும் உண்மைகள், ஆகியவற்றை அடைவதில் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இந்த அணுகுமுறைப்படி இந்த அரசியல் அறிவியல்

11th Std Political Science Tamil_Unit-1.indd 12 06/12/2022 10:26:08

பாடம் நன்நெறி உலகத்தோடு நெருக்கமாக கொண்டு செல்லப்படுகிறது. ஆனால் இந்த அணுகுமுறை மிகவும் மேலோட்டமானதாகவும் மிகுந்த யூகங்கள் அடிப்படையிலானதாகவும் இருப்பதாக பல விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

ஆ) வரலாற்று அணுகுமுறை (Historical Approach)

இந்த அணுகுமுறையானது 'அரசியல் அறிவியல்' என்ற இந்த பாடம் கடந்த காலங்களில் அரசுகளும், அரசாங்கங்களும், அரசியல் நிறுவனங்களும் எவ்வாறு தோன்றி படிப்படியாக வளர்ச்சி பெற்று வளர்ந்து வந்தன என்பதை அறிந்துகொள்வதில் இருந்து தொடங்குகிறது. தனி மனிதர்களும், அவர்களின் தனிப்பட்ட விருப்பங்களும் எவ்வாறு அரசியல் அமைப்புகளின் வெற்றி தோல்விகளுக்கு காரணமாக இருந்தன என்பதைப்பற்றியும், அதனால் கற்றுக்கொண்ட பாடங்கள் எவ்வாறு எதிர்கால அரசியல் அமைப்புகளுக்கு உதவின என்பதும் இந்த அணுகுமுறையினால் பெறப்படும் சில தகவல்களாகும். தற்கால அரசியல் பிரச்சனைகளைப் புரிந்து கொள்வதற்கு அதே போன்ற வரலாற்று நிகழ்வுகள் அறியப்பட்டன. இதனை விமர்சிப்பவர்கள் கூறுவது என்னவென்றால் பழங்காலத்தைப் பற்றிய பல தகவல்கள் பிரகாசமாக தோன்றிய போதிலும் அவைகளில் சில மேலோட்டமான ஒற்றுமைகள் தந்து பல சமயங்களில் நம்மை தவறான பாதைக்கு கொண்டு சேர்த்து விடும் என்பது இவர்களின் வாதமாகும்.

இ) சட்ட பூர்வ அணுகுமுறை (Legal Approach)

அரசியல் அறிவியலைப் பற்றி கற்பது என்பது அரசினால் ஓர் அரசியல் அமைப்பினை நிர்வகிக்க உருவாக்கப்பட்ட சமூக நிறுவனங்களுடனான தொடர்புடையதாகும். மேலும் அரசு என்பது சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றியதாக இருப்பதால் அரசியல் கோட்பாட்டாளர்கள் நீதித்துறை நிறுவனங்கள் மீது அதிகக் கவனம் செலுத்துகின்றனர். இந்த அணுகுமுறையானது சட்டத்தினை, உருவாக்கி அதனை செயல்படுத்தும் ஒரு நிறுவனமாகவே அரசினைப் பார்க்கின்றது. சில அரசியல் விமர்சகர்கள் இந்த அணுகுமுறை மிகவும் குறுகிய பார்வையிலானது என்பதுடன் சட்டம் மற்றும் ஒழுங்கினைச் செயல்படுத்துவதைத் தவிர அரசுக்கு பல்வேறு பணிகள் உள்ளனவென்றும், சட்டம் என்பது தனி மனித வாழ்வின் ஒரே ஒரு அம்சம் பற்றியதாகும் என்றும், சட்டத்தை வைத்தே மனிதனின் அரசியல் நடத்தையை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது எனவும் குறிப்பிடப்படுகின்றனர்.

ஈ) நிறுவனம் சார்ந்த அணுகுமுறை (Institutional Approach)

அரசியலின் முறையான அமைப்புகளான சட்டமன்றம், நீதித்துறை மற்றும் செயலாட்சித் துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகளின் அடிப்படையில் அரசியல் அறிவியலை அணுகுவது நிறுவனம் சார்ந்த அணுகுமுறையாகும். இந்த அணுகுமுறையை கட்டமைப்பு அணுமுறை (Structural Approach) என்றும் சிலர் கூறுகிறார்கள். இந்த அணுகுமுறையில் பல்வேறு முறைசாரா அமைப்புக்களைப் பற்றி படிப்பதோடு பல்வேறு வகையான அரசாங்கங்களும் ஒப்பீட்டு முறையில் படிக்கப்படுகின்றன. இந்த அணுகுமுறையில் முறை சார்ந்த மற்றும் முறை சாராத அமைப்புக்களை மட்டும் கவனத்தில் எடுத்துக்கொள்கிறார்களே தவிர அதனுடன் தொடர்புடைய மனிதர்களின் நடத்தையினை கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை என்பது ஒரு குறைபாடாகும்.

II நவீன அணுகுமுறைகள் (Modern Approach)

அ) சமூகவியல் அணுகுமுறை (Sociological Approach)

சமூகவியல் அணுகுமுறையானது சமூக உறுப்பினர்களின் அரசியல் நடத்தையை சமூக சூழலில் புரிந்து கொள்வது குறித்து வலியுறுத்துகிறது.அரசு என்பது அடிப்படையில் ஒரு சமூக உயிரினமாகும். எனவே, அரசியல் என்பதை சமூக காரணிகளின் மூலம் புரிந்து கொள்ளமுடியும். ஆனால், அரசியல் அறிஞர்கள் சிலர் அரசியல் அறிவியல் பாடத்தில் சமூகவியல் பிரச்சனைகளுக்கு அதிகக் கவனம் மற்றும் அதிக முக்கியத்துவம் கொடுப்பது அரசியல் அறிவியலின் தனித்தன்மைக்கு ஏற்புடையதன்று என்று கருதுகின்றனர்.

ஆ) உளவியல் அணுகுமுறை (Psychological Approach)

உளவியல் அணுகுமுறையானது அரசியல் மற்றும் சமூக நிறுவனங்கள் உளவியல் விதிமுறைகளின் அடிப்படையில் இயங்க வேண்டுவதின் அவசியத்தை விளக்குகின்றன. இவ்வணுகுமுறை அரசியல் தலைவர்களைப் பற்றிய உளவியல் பகுப்பாய்வினால் அரசியலைப் பற்றி குறிப்பிடத்தகுந்த அறிவு வெளிப்படுவதாக அனுமானிக்கிறது. இருந்தபோதிலும் இந்த அணுகுமுறையானது சமூகவியல், சட்டம் மற்றும் பொருளியல் காரணிகளை புறந்தள்ளுகிறது என்பது இந்த அணுகுமுறையின் ஒரு குறையாகக் கருதப்படுகிறது.

இ) பொருளியல் அணுகுமுறை (Economical Approach)

பொருள்களின் உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகிய இரண்டும் ஒரு அரசுக்கு மிக முக்கியமான பணிகள் என்பதால் அரசியல் அறிவியலை பொருளியல் அடிப்படையில்தான் படிக்க வேண்டும் என்று கூறுவது பொருளியல் அணுகுமுறையாகும். பொருளாதார விவகாரங்களை ஒழுங்குபடுத்தும் அரசின் பங்கு மற்றும் அரசினுடைய அரசியல் நடைமுறையுடனான பொருளாதாரத்தின் தொடர்பு பற்றியும் இந்த அணுகுமுறை வலியுறுத்துகிறது. ஒரு மனிதனின் அரசியல், மற்றும் பொருளாதார வாழ்வினை புரிந்து கொண்டு தொடர்புபடுத்துவது இந்த அணுகுமுறையாகும். இருந்தபோதிலும் இந்த அணுகுமுறையில் பொருளாதார விவாகரங்களை மட்டுமே கருத்தில் கொண்டு உளவியல் மற்றும் சமூகவியல் பிரச்சனைகளைப் புறந்தள்ளுவது என்பது ஒரு குறைபாடாகும்.

ஈ) நடத்தையியல் அணுகுமுறை (Behavioural Approach)

நடத்தையியல் அணுகுமுறையானது அரசியல் நடத்தை என்பதனை மையமாகக் கொண்டதாகும். ஓர் அரசின் கீழ் வாழும் மனிதர்களின் மனப்பாங்கு மற்றும் முன்னுரிமைகளை அரசியல் சூழலில் கற்பதற்கு இந்த அணுகுமுறை அதிகக் கவனம் செலுத்துகிறது. இந்த அணுகுமுறை அரசியலை முறைமைவாதம் மற்றும் கருத்தறிவுவாதத்தின் அடிப்படையில் கற்பதலிருந்து விலகி மனிதனின் அரசியல் நடத்தையை படிப்பதில் கவனம் செலுத்துகிறது. இருந்தபோதிலும் சில அரசியல் அறிவியல் விமர்சகர்கள் நடத்தையியல் அணுகுமுறை அரசியல் அறிவியல் பாடத்தை அறிவியல் முறைகளின் தவறான கருத்தாக்கப் புரிதலோடு அணுகுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

உ) மார்க்சிய அணுகுமுறை (Marxist Approach)

பிற தற்கால அணுகுமுறைகளைக் காட்டிலும் மார்க்சிய அணுகுமுறை அடிப்படையில் மிகவும் வேறுபட்டதாகும். இந்த அணுகுமுறையானது வர்க்கப் போராட்டத்தில் அரசு என்பது ஒரு தவிர்க்க முடியாத விளைவினால் உருவான அமைப்பு என்று கூறுகிறது. மேலும் அரசியல் மற்றும் பொருளியல் சக்திகள் ஆகியவை ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவை என்பதனையும், இவை இரண்டையும் ஒன்றினைப் பிரிக்க முடியாது என்பதனையும் விளக்குகிறது. இந்த அணுகுமுறை பொருளியல் காரணிகளுக்கு அளவுக்கு அதிகமான முக்கியதுவம் கொடுப்பதாகவும், பிற முக்கியமான காரணிகளை இந்த அணுகுமுறை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதும் இந்த முறையை பற்றிய விமர்சகர்களின் கருத்தாகும்.

மேற்கண்ட பல அணுகுமுறைகளையும் பகுப்பாய்வு செய்து பார்க்கிறபோது, ஒவ்வொரு அணுகுமுறையிலும் ஒருசில குறைபாடுகள் இருப்பினும் ஒவ்வொரு விதத்தில் அவை முக்கியமானவைதான் என்பதும், அரசியல் அறிவியலை முழுமையாகப் புரிந்து கொள்ள இந்த அணுகுமுறைகள் அனைத்துமே பயன்படுகின்றன என்பதும் உணரப்படுகிறது.

III அரசியல் அறிவியலுக்கும் பிற சமூக அறிவியல்களுக்கும் இடையேயான தொடர்பு

அ) அரசியல் அறிவியல் மற்றும் வரலாறு (Political Science and History)

அரசும் அதன் நிறுவனங்களும் வரலாற்றின் படிப்படியான வளர்ச்சியால் உருவானவை ஆகும். அரசு தனக்குரிய பல

பொதுவான சட்டங்களையும், கொள்கைகளையும் வரலாற்று உண்மைகளின் அடிப்படையிலேயே கண்டறிந்துள்ளது என்பது உண்மை ஆகும். அரசியல் வரலாறு என்பது அரசியல் நிகழ்வுகளையும், அரசியல் இயக்கங்களையும் விவரிப்பதாகும். ஃபிரிமேன் (Freeman) என்பவரின் கூற்றுப்படி "வரலாறு என்பது கடந்தகால அரசியல், அரசியல் என்பது நிகழ்காலத்தின் வரலாறு" என்பது ஒரு சரியான மற்றும் பொருத்தமான விளக்கமாகும். ஜான் சீலே (John seeley) தனது மேற்கோளில் "அரசியல் அறிவியல் இல்லாத வரலாறு பழம் இல்லாத மரம் என்றும் அதேபோல வரலாறு இல்லாத அரசியல் அறிவியல் என்பது வேர் இல்லாத மரமாகும்" என்று விளக்குகிறார். இந்த உதாரணம் இந்த இரண்டு பாடங்களுக்கும் உள்ள நெருங்கிய உறவு முறையை தெளிவாக உணர்த்துகிறது.

ஆ) அரசியல் அறிவியல் மற்றும் பொருளியல் (Political Science and Economics)

பொருளியல் என்பது அரசியல் அறிவியலின் ஒரு கிளைப்பிரிவு என்று பண்டைய கிரேக்கர்கள் கருதினார்கள். அவர்கள் அரசியல் அறிவியல் பாடத்தினை அரசியல் பொருளாதாரம் (Political Economy) என்றே அழைத்தனர். அரசியல் பொருளாதாரம் என்ற பாடமானது அரசியல் நிறுவனங்களும், அரசியல் சூழல்களும் பொருளியலுடன் நெருங்கிய உறவுமுறையில் இருப்பதனை விளக்குகிறது. நாட்டிலுள்ள ஒவ்வொரு குழுக்களும் தங்களது பொருளியல் விருப்பங்களை நிறைவு செய்து கொள்ள அரசியல் செயல்பாடுகளையும், அரசியல் சூழல்களையும் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தக்கொண்டு செயல்படுகிறார்கள். இந்த இரண்டு பாடங்களையும் இணைக்கும் பல கருத்துக்கள் பாடத்தில் இருக்கின்றன. இவை ஒரே நோக்கம் கொண்டதாக இருப்பதுடன் மக்களுக்கு சிறந்த வாழ்வினைத் தரும் நோக்கமுடையதாகும்.

இ) அரசியல் அறிவியல் மற்றும் அறவியல் (Political Science and Ethics)

அறவியல் என்பது அரசியலோடு நெருங்கிய தொடர்புடைய சமுதாயத்தில், தனிமனிதர்களுடைய நடத்தையைக் கட்டுப்படுத்தும் விதிகள் மற்றும் ஒழுங்கு-முறைகள் ஆகியவற்றை உருவாக்குவதுடன், நீதிநெறி முறைமையோடும் தொடர்புடைய அறவியலாகும். அறவியல் என்பது நீதி முறைமையின் அறிவியலாகும். அதேபோல அரசியல் அறிவியல் என்பது அரசியல் முறைமையின் அறிவியல் ஆகும். அரசியல் அறிவியல் மற்றும் அறவியல் ஆகிய இரண்டு பாடங்களும் மனித சமுதாயத்தை மிகவும் சரியான மற்றும் மாண்பான வாழ்வினை நோக்கி நெறிப்படுத்துவனவாகும்.

ஈ) அரசியல் அறிவியல் மற்றும் சமூகவியல் (Political Science and Sociology)

அரசியல் அறிவியலும், சமூகவியலும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடைய பாடங்களாகும். அரசு மற்றும் பிற அரசியல் நிறுவனங்கள் அனைத்தும் எவ்வாறு தோன்றி வளர்ந்தன என்பதன் அடைப்படைத் தகவல்களை சமூகவியல் பாடமே நமக்கு தரமுடியும். அரசியல் அறிவியல் பாடத்தினை கொள்கை அறிவியல் (Policy science) பாடம் என்றும் கூறுகின்றனர். அரசின் பொதுக்கொள்கை (Public Policies)களை வகுக்க மக்களின் சமூக தேவைகளைப் பற்றிய அறிவு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது. சமூகவியல் அறிவு இல்லாமல் எந்தவொரு நாட்டின் அரசியலையும் சிறப்பாக நடத்தமுடியாது. அதேபோல சமூகவியலுக்கு அரசியல் அறிவியிலானது அரசின் அமைப்பு மற்றும் பணிகள், அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் சமுதாயத்தை எவ்வாறு பெருமளவில் பாதிக்கிறது என்பன பற்றிய தகவல்களைத் தருகிறது.

உ) அரசியல் அறிவியல் மற்றும் உளவியல் (Political Science and Psychology)

உளவியல் என்பது மனித நடத்தையின் அனைத்து அம்சங்களையும் பற்றி படிக்கும் ஒரு பாடமாகும். அரசியல் அறிவியல் என்பது மனிதர்களின் அரசியல் நடவடிக்கைகளைப் பற்றிய ஒரு பாடமாகும். உளவியல் என்பது தனிமனிதர்கள் மற்றும் குழுக்களின் குறிப்பிட்ட நடத்தைப் பாங்கிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. உளவியல் பாடம் அரசியல் கட்சிகளின் நடத்தை மற்றும் அரசிலுள்ள பிற குழுக்களின் செயல்பாடுகள் ஆகியவற்றினை புரிந்து கொள்ள அரசியல் அறிவியலுக்கு

உதவி செய்கிறது. பார்க்கர் (Barker) என்ற அறிஞர் கூறியது போல "மனிதர்களின் பல புதிரான நடவடிக்கைகளைப்பற்றி அறிந்து கொள்ளும் விடைப்பகுதி உளவியல் பாடத்திலேயே உள்ளது". நமது முன்னோர்கள் உயிரியல் அடிப்படையில் சிந்தித்தார்கள் என்றால் நாம் உளவியல் அடிப்படையில் சிந்திக்கிறோம் என்கிறார்.

ஊ) அரசியல் அறிவியல் மற்றும் பொதுநிர்வாகம் (Political Science and Public Administration)W

அரசியல் அறிவியலும், பொது நிர்வாகமும் மிகவும் நெருங்கிய தொடர்புடைய பாடங்களாகும். பொது நிர்வாகப்பாடத்தில் வரும் 'பொது' என்ற வார்த்தை அரசாங்கத்தை குறிக்கும். பொது நிர்வாகம் என்பது அரசு சாரா அமைப்புகளையும் உள்ளடக்கியதாகும். பொது நிர்வாகம் என்பது அரசாங்கத்தின் கொள்கைகளை செயல்படுத்துவதாகும். அரசியல் அறிவியல் என்பது பொதுக் கொள்கை உருவாக்க நடைமுறையாகும். அரசியல் அறிவியல் மற்றும் பொது நிர்வாகம் ஆகிய இரண்டு துறைகளின் நோக்கங்களுமே ஒப்புமை உள்ளவையாகும். இவை இரண்டுமே வளங்களைத் தகுந்த முறையில் பயன்படுத்துவதுடன் சமூக நலனை மேம்படுத்துகின்றன. இவ்வாறு அரசியல் அறிவியல் பாடம் என்பது ஆளுகை (Governance) என்பதனை முறையாகப் படிக்க உதவும் ஒருபாடமாகும். அரசியல் அறிவியல் பாடத்தில் அறிவியல் பூர்வமான முறைகளும், செயலறிவிலான பகுப்பாய்வும் செயல்படுத்தப்படுகின்றன. அதில் செயலறிவிலான புலனாய்வுகள் இருப்பினும், துல்லியமான முன்கணிப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன. அரசியல் அறிவியலானது அரசு, அதன் அங்கங்கள் மற்றும் நிறுவனங்களை ஆராய்கிறது. மேலும் அரசியல் அறிவியல் பாடத்தில் சமூகம், பண்பாடு, பொருளாதாரம் மற்றும் உளவியல் காரணிகள் அதிகம் கலந்துள்ளன. பிற சமூக அறிவியல் பாடங்கள் அனைத்திலிருந்தும் அரசியல் அறிவியல் பாடம் நிறைய கருத்துக்களையும், தகவல்களையும் பெற்றிருந்தாலும் அதிகாரத்தின் மீதான அதன் தனிக்கவனம் அதனை பிற துறைகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. அரசியல் அறிவியல் என்ற இப்பாடத்தில், அதிகாரம், ஒப்பீட்டு அரசியல், பன்னாட்டு உறவுகள், அரசியல் கோட்பாடுகள், பொதுச்சட்டங்கள், பொதுக்கொள்கைகள், என அரசியல் அறிவியலில் பல உட்பிரிவுப்பாடங்களில் கவனம் செலுத்தப்படுகிறது. அரசியல் அறிவியலைக் கற்பதன் மூலமாக அரசியல் நடைமுறைகள், அரசாங்க முறைமை மற்றும் குடிமக்களின் வாழ்வில் அது எங்ஙனம் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்பதன் அடிப்படைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

செயல்பாடு

- அரசியல் எவ்வாறு உனது அன்றாட வாழ்வில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்பதைப்பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
- உனக்கு மிகவும் விருப்பமான அரசியல் சிந்தனையாளரின் வாழ்வு மற்றும் படைப்புகளைப் பற்றிய படங்களை சேகரிக்கவும். அரசியல் அறிவியலுக்கு அவருடைய பங்களிப்பினைப் பற்றி வகுப்பில் அனைவருக்கும் விளக்கவும்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

நீ யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். நீ எப்படியாக வேண்டுமானாலும் மாற விரும்பலாம். நீ அரசியலின் மீது ஆர்வம் இல்லாமல் கூட இருக்கலாம். ஆனால் அரசியல் உன் மீது ஆர்வமாக இருக்கிறது!

– மார்ஷல் பெர்மன் (Marshall Bermen)

11th Std Political Science Tamil_Unit-1.indd 16 06/12/2022 10:26:09

www.tnschoolbooks.in

கலைச்சொற்கள்: Glossary

அரசியல் முறைமைகள் (Political Systems): பல்வேறு அரசமைப்புச் சட்டங்களின் அடிப்படையில் அமைக்கப்படும் வேறுபட்ட அரசாங்க வகைகளாகும்.

அர்த்தசாஸ்த்திரம் (Arthasastra): பொ.ஆ. மு. 3-ஆம் நூற்றாண்டில் கௌடில்யரால் எழுதப்பட்ட அரசியல் பொருளியல் மற்றும் நிர்வாக ஆளுகை பற்றிய நூலாகும்.

நகர அரசு (City-State): ஒரு நகரத்தில் வாழும் சிறிய சமூகம் சார்ந்த குறைவான மக்கள் தொகைக்கான ஒரு சிறிய அரசு.

அரசியல் நடத்தை (Political Behaviour): அரசியல் நடத்தை என்பது பொதுவாக அதிகாரம் தொடர்பான செயல்பாடாகும் அதிலும் குறிப்பாக அரசாங்கம் தொடர்பானது எனலாம்.

அதிகாரத்துவம் (Authority): ஓர் தனிநபர் அல்லது நிறுவனத்தால் சட்டபூர்வமாக பயன்படுத்தப்படும் சக்தி அல்லது அதிகாரம் அது சட்டபூர்வ அதிகாரப் பயன்பாடு எனவும் அழைக்கப்படுகிறது.

நம்பிக்கை (Tryst): சில நேரங்களிலும் அல்லது சில இடங்களிலும் எதிர்காலத்தினை திறமையோடு சந்திக்க செய்யும் ஏற்பாடு.

அரசியல் இயக்கவியல்(Political Dynamics): அரசியல் நிறுவனங்கள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு தொடர்ச்சியாக மாறிக்கொண்டே இருக்கும் தன்மை..

அரசியல் (Politics): நாட்டின் நிர்வாகம் மற்றும் அதன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உறவுகள் பற்றியும், அரசாங்கம் மற்றும் ஆளுகையைப் பற்றியும் படிக்க உதவும் ஒரு கலை அல்லது அரசாங்கம்பற்றிய அறிவியல் சார்ந்த பாடம் எனலாம்.

அரசியல் அறிவியல் (Political Science): அரசு மற்றும் அரசாங்க முறைமைகளை பற்றி அறிவதுடன் அரசியல் நடவடிக்கைகளைப் பற்றி அறிவியல் பூர்வமாகப் படிக்கும் ஒரு பாடம்.

நடத்தையியல் (Behaviouralism): அரசியல் நடத்தையினை முன்கணித்து நடுநிலையுடன் அதனை அளவிடுதலாகும்.

பின்தோன்றிய நடத்தையியல் (Post-Behaviouralism) : நடத்தையியலின் பழமைவாதத்திற்கு எதிராக உருவானதுடன் பொருத்துமை மற்றும் துல்லியத்தன்மையை வலியுறுத்தி உருவானதாகும்.

பிரபுக்களாட்சி (Aristocracy) : சமூகத்தின் உயர் நிலையில் இருக்கும் ஆள்வதற்குத் தகுதியானவர்கள் என அறியப்பட்ட சிலரால் நடத்தப்படும் ஒரு ஆட்சி முறை.

மக்களாட்சி (Democracy) : மக்களின் விருப்பத்தினை பூர்த்தி செய்ய மக்களே தங்களுக்காக உருவாக்கிய ஒரு ஆட்சி முறையாகும்.

முற்றதிகாரம் (Totalitarianism) : மனிதனின் அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த வல்ல முழுமையான அதிகாரம் கொண்ட அரசு உள்ள ஆட்சி முறை.

சிறுகுழுவாட்சி (Oligarchy) : ஒரு சிறு குழு அனைத்து அதிகாரங்களையும் பெற்று ஊழல் மற்றும் சுயநலம் அடிப்படையில் ஆளும் ஆட்சி முறையாகும்.

ஏகாதிபத்தியம் (Imperialism) : ஒரு பேரரசு அல்லது நாடு தனது ஆதிக்க அதிகார வரம்பினை வேறொரு நாட்டின் மீது செலுத்தி அதனைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அல்லது சார்பு நாடாக்குவதாகும்.

காலனியாதிக்கம் (Colonialism) : ஒரு நாடு தனது கட்டுப்பாட்டில் உள்ள மற்றொரு நாட்டின் மீதோ அல்லது அதன் நிலப்பரப்பின் மீதோ அல்லது மக்களின் மீதோ கட்டுப்பாடு செலுத்தி அதனை ஆட்சி செய்வது ஆகும்.

11th Std Political Science Tamil_Unit-1.indd 17 13/12/2022 10:17:42

www.tnschoolbooks.in

மதிப்பிடுதல் (Evaluation)

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :

1. 'பாலிடிக்ஸ்' என்ற வார்த்தை "பொலிஸ்" (Polis) சொல்லிலிருந்து வந்தது. இந்த "பொலிஸ்" என்ற சொல்லின் பொருள்.

   (அ) நகர அரசு (ஆ) காவல்படைகள்
   (இ) அரசியல் (ஈ) காவல்அரசு

2. "அரசியல் என்பது யார், எதனை, எப்போது, எப்படிப் பெறுகிறார்கள்" என்ற அரசியலின் மையக் கருத்தினைக் கூறியவர்

   (அ) ஹெரால்ட் லாஸ்கி (ஆ) ஹெரால்டு லாஸ்வெல்
   (இ) சார்லஸ் ஈ மெர்ரியம் (ஈ) பிரான்க் குட்நவ்

GVF4Y

3. டேவிட் ஈஸ்டனின் கருத்துப்படி அரசியல் என்பது

   (அ) விழுமியங்களை அதிகாரபூர்வமாக பங்கீடு செய்வதாகும்
   (ஆ) மூலவளங்களை அதிகாரபூர்வமாக பங்கீடு செய்வதாகும்
   (இ) அதிகாரத்தினை அதிகாரபூர்வமாக பங்கீடு செய்வதாகும்
   (ஈ) வலிமையை அதிகாரபூர்வமாக பங்கீடு செய்வதாகும்

4. இந்திய அளவில் மிகப்பழமையான அரசியல் சிந்தனையாளர் என யாரைக் கூறலாம்?

   (அ) கௌடில்யர் மற்றும் திருவள்ளுவர்
   (ஆ) வால்மீகி மற்றும் வராகமிகிரர்
   (இ) சரகர் மற்றும் சுசுருதர்
   (ஈ) வியாசர் மற்றும் ஆரியபட்டர்

5. 'சட்ட அங்கீகாரம்' என்ற சொல் எந்த கருத்தாக்கத்துடன் தொடர்புடையது

   (அ) சட்டப்படிப்பு (ஆ) அரசு மற்றும் அரசாங்கம்
   (இ) சட்டப்படியான சொத்து உரிமை (ஈ) வலிமை மற்றும் அதிகாரம்

6. 'அதிகாரம் அதிகாரத்தை ஈன்றெடுக்கிறது என்றும் அதுவே உயர்குடியினவாதத்தின் மையக்கருத்தாக விளங்குகிறது' என்று கூறியவர்

   (அ) ராபர்ட் மிட்செல்ஸ் (ஆ) ஹெரால்ட் லாஸ்கி
   (இ) டேவிட் ஈஸ்டன் (ஈ) சார்லஸ் ஈ மெர்ரியம்

7. 'அரசியல் அறிவியலின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?

   (அ) அரிஸ்டாட்டில் (ஆ) சாக்ரடிஸ்
   (இ) பிளாட்டோ (ஈ) மாக்கியவல்லி

8. 'மனிதன் இயற்கையில் ஒரு அரசியல் விலங்கு' என்று கூறியவர் யார்?

   (அ) பிளாட்டோ (ஆ) ஜீன் போடின்
   (இ) அரிஸ்டாட்டில் (ஈ) மாக்கிய வல்லி

9. அரசியல் அறிவியலை மதம் சார்ந்த அணுகுமுறையிலிருந்து செயலறிவிலான கூர்நோக்கலுடன் கூடிய மதச்சார்பற்ற பார்வைக்கு மாற்றியவர் யார்?

   (அ) தாமஸ் ஹாப்ஸ் (ஆ) நிக்கோலோ மாக்கியவல்லி
   (இ) ஜான் லாக் (ஈ) ஜெ.ஜெ.ரூசோ

11th Std Political Science Tamil_Unit-1.indd 18 06/12/2022 10:26:09

10. "வரலாறு என்பது கடந்தகால அரசியல்" என்றும் "அரசியல் என்பது நிகழ்கால வரலாறு" என்றும் கூறியவர் யார்?

(அ) ஹெரால்ட் லாஸ்வெல் (ஆ) ஃப்ரீமேன்
(இ) சார்லஸ் ஈ மெர்ரியம் (ஈ) ஜான் மார்ஷல்

II பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி

1. அரசியல் என்ற வார்த்தை தோன்றிய விதத்தினை வரையறுக்கவும்.
2. 'எதிர்காலத்தினை நம்பிக்கையோடு சந்திப்போம்' என்ற வார்த்தையின் மூலம் நீ புரிந்து கொள்வது என்ன?
3. அதிகாரம் பற்றிய கார்ல் மார்க்சின் கருத்தினை விவரிக்கவும்.
4. 'மகிழ்ச்சி' என்பது பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்துக்களை எழுதுக.
5. நேருவினால் கூறப்பட்டுள்ள ஏதேனும் மூன்று சவால்களைப் பட்டியலிடுக.
6. 'மதச்சார்பின்மை' என்னும் கருத்தாக்கத்தினைப் பற்றி எழுதுக.
7. பின் தோன்றிய நடத்தையியலின் அடிப்படைக் கருத்தாக்கத்தினை விளக்குக.

III பின்வரும் கேள்விகளுக்கு சுருக்கமான விடையளி

1. அரசியல் அறிவியலின் தன்மையை விளக்குக.
2. 'அதிகாரம்' என்ற கருத்தாக்கத்தினை விளக்குக.
3. அரிஸ்டாட்டிலுக்கும், பிளாட்டோவுக்கும் உள்ள தொடர்பினைக் கூறுக.
4. அரசியல் அறிவியலின் தத்துவார்த்த அணுகுமுறை பற்றி கூறுக.
5. "அரசியல் இல்லாத வரலாறு பழமில்லாத மரம், வரலாறு இல்லாத அரசியல் வேர் இல்லாத மரம்" என்ற ஜான் சீலேவின் கருத்தினை விளக்குக.
6. அரசியல் அறிவியலில் சட்டபூர்வ அணுகுமுறை பற்றி விளக்குக.

IV பின்வரும் கேள்விகளுக்கு விரிவான விடையாளி:

1. அரசியல் அறிவியல் என்பது கலையா அல்லது அறிவியலா என்பதை நிறுவுக.
2. அரசியல் அறிவியலுக்கும் பிற சமூக அறிவியல் பாடங்களுக்கும் உள்ள உறவுமுறைகளை விவரி.
3. அரசியல் அறிவியலின் பாரம்பரிய அணுகுமுறைகள் பற்றி எழுதுக.
4. பின் தோன்றிய நடத்தையியலின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கு.
5. அரசியல் பாடம் மதவாதத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட சூழல் பற்றி எழுதுக.

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Robert Garner, Peter Ferdinand, Stephen Lawson, Introduction to Politics, Oxford University Press, New York, 2009.
2. O.P. Gauba, An Introduction to Political Theory, Macmillan Publishers India Ltd, New Delhi, 2009.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பல்கலைக்கழக வெளியீடுகள்

1. அரசியலுக்கு ஓர் அறிமுகம் – ரோஜர் எச் ஸோல்ட்டா
2. அரசியல் கோட்பாடுகள் – பெ. நடராசன்
3.அடிப்படை அரசியல் கோட்பாடுகள் – ஞா.வெர்ஜின் சிகாமணி

11th Std Political Science Tamil_Unit-1.indd 19 06/12/2022 10:26:09

அலகு
2

அரசு



அன்பு மாணவர்களே, முந்தைய பாடத்தில் அரசியல் அறிவியல் பாடத்தை பற்றிய ஓர் அறிமுகத்தை பெற்றிருப்பீர்கள். அரசியல் அறிவியல் எதனுடன் தொடர்புடையது என்று சிந்தித்தீர்களா?

தாவரவியல் பாடத்தின் மூலம் தாவரங்களைப் பற்றியும், சமூகவியல் பாடத்தின் மூலம் சமூகத்தைப் பற்றியும் அறிந்து கொள்ளும் போது அரசியல் அறிவியல் பாடம் மூலமாக எதனை நாம் அறிந்து கொள்கிறோம்? குறிப்பாக அரசியல் அறிவியல் படிப்பானது எதைப் பற்றியது?



கற்றலின் நோக்கங்கள்

- 'அரசு' குறித்து விளக்கமான புரிதலை தரும் இவ்வத்தியாயம் கீழ்காணும் தலைப்புகளைக் கொண்டது.
- அரசியல் அறிவியல் ஆய்வுகளின் முக்கிய பொருள், குறிப்பாக அரசு மற்றும் அதன் செயல்பாடுகள் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதல்
- அரசு குறித்து பல்வேறு சிந்தனையாளர்களின் கருத்துகளை அறிதல்
- அரசின் கூறுகளை உங்களுக்கு அறிமுகப்படுத்துதல்
- சமூகம், அரசு மற்றும் அரசாங்கம் ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பை அடையாளம் காணுதல்
- நவீன அரசு, மக்கள் நல அரசு மற்றும் மென்மை அரசு குறித்த கருத்துகளை அறிதல்

அறிமுகம்

அரசியல் அறிவியல் என்பது அரசைப் பற்றிய படிப்பாகும். நாம் அனைவரும் ஓர் அரசின் கீழ் வாழ்ந்து வருகிறோம். இந்த உலகம் என்பது பல்வேறு அரசுகள் அடங்கிய ஓர் வடிவமாகும். அரசு என்ற எண்ணம் அல்லது கருத்தாக்கமானது வரலாற்று ரீதியாக பார்த்தோமேயானால் ஒவ்வொரு பகுதியிலும் அதன் அரசியல், பண்பாடு, மதம் மற்றும் பொருளாதார சூழ்நிலைகளால் உருவானதேயாகும். இன்று அரசு என்ற சொல் நவீன அரசையே குறிக்கிறது. நவீன அரசானது, ஆள்வோர் மற்றும் ஆளப்படுவோரை மட்டும் உள்ளடக்கிய நவீன காலத்துக்கு முன்பிருந்த அரசுகளை விட முற்றிலும் மாறுபட்டதாகும். எனவே, எது அரசு? எது அரசு அல்ல? என்பதைப் பற்றிய ஒரு சரியான புரிதல் அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு அவசியம் ஆகிறது.

2.1 அரசு என்பதன் பொருள் மற்றும் வரையறை

அரசு என்பது உலகளாவிய ஏனைய சமூக அமைப்புகளைவிட, மிகவும் சக்தி வாய்ந்ததாகும். அரசு இயற்கையாக தோன்றிய அமைப்பாகும். 'மனிதன் (மானிடர்) ஓர் சமூக விலங்கு என்பதுடன் மனிதர்கள், அரசியல் சார்ந்து இருப்பது அவர்களின் இயல்பான தன்மை என அரிஸ்டாட்டில் கூறுகிறார். மேலும், 'ஒரு மனிதன் அரசு எனும் அமைப்பிற்குள் வாழ்வது, அவன் மனிதத்தன்மையுடன் வாழ்வது, இவை இரண்டும் ஒன்றே' என அரிஸ்டாட்டில் கருதினார். நவீன சொல்லான அரசு (State) என்பது 'ஸ்டேட்டஸ்' (Status) எனும் சொல்லில் இருந்து உருவானதாகும். நிக்கோலோ

மாக்கியவல்லி (1469 – 1527) எனும் அறிஞர் முதன் முதலில் அரசு எனும் சொற்பிரயோகத்தைத் தமது படைப்புக்களில் பயன்படுத்தினார். மனிதர்கள் வாழ்வதற்கான அடிப்படையினை கொண்டுள்ளதனாலேயே அரசு ஒரு இன்றியமையாத அமைப்பாகக் கருதப்படுகிறது. அரசு என்பது மனித சமுதாயத்திற்கு நல்வாழ்வினை ஏற்படுத்தித் தருவதற்காக நீடிக்கிறது. மனிதர்களின் நோக்கங்கள், ஆசைகள், மற்றும் விருப்பங்கள் ஆகியவை அரசு எனும் அமைப்பின் மூலமே செயல் வடிவம் பெறுகின்றன. மனிதர்களுக்கு அத்தியாவசியமான அமைப்பாக அரசு கருதப்பட்டாலும், அரசு என்பதற்கான வரையறை இதுதான் என எந்த இருவேறு சிந்தனையாளர்களும் கருத்தின் அடிப்படையில் ஒத்துப்போவது கிடையாது.

இந்த கருத்து வேறுபாடு அரசு குறித்த ஆய்வினை மிகவும் ஆக்கப்பூர்வமானதாகவும், ஆர்வமிக்கதாகவும் ஆக்குகிறது. உதாரணமாக, அரசியல் அறிவியலில் சமூக ஒப்பந்தக் கோட்பாடு உள்ளது. தாமஸ் ஹாப்ஸ், ஜான் லாக் மற்றும் ஜீன் ஜாக்குவஸ் ரூசோ ஆகிய மூவரும் சமூக ஒப்பந்த சிந்தனையாளர்கள் என அறியப்படுகின்றனர். மனிதர்களை அரசு தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்பது இவர்களின் உள்ளார்ந்த கருத்தாகும். ஆனால் அக்கட்டுப்பாட்டின் எல்லையினைக் குறித்து அம்மூவருக்கு இடையே ஒருமித்த கருத்து என்பது காணப்படவில்லை.

எம்மைக் கண்டுகொள்...



அரசின் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டினை மூன்று முக்கிய ஒப்பந்தவியலாளர்கள் உருவாக்கினார்கள். அம்மூவருமே மனிதர்கள் அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டியது அவசியம் என்பதை ஒப்புக் கொண்டனர். ஆனால் அக்கட்டுப்பாடு எந்த அளவில் இருக்கவேண்டும் என ஒவ்வொருவரும் தத்தமது வழியில் தீர்மானித்தனர். அம்மூவர் யாவர்?

அரசியல் சிந்தனையாளர்	மனிதனின் இயல்பு	இயற்கையின் நிலை	சமூக ஒப்பந்தம்
ஹாப்ஸ்	மனிதர்கள் ஒவ்வொருவரும் பிறரிடம் ஓநாய்களைப் போன்று பகைமையுடன் இருக்கக்கூடியவர்கள்	போர்ச்சூழல்	லெவியதான் (ஒற்றை ஆட்சியாளர்)
லாக்	மனிதனுக்கு முழுமையான சுதந்திரம் உண்டு	தனி மனிதச் சொத்துக்கள் பாதுகாப்பானதாக இல்லை	பொது நலக் கூட்டமைப்பு
ரூசோ	மனிதன் முழுமையான சுதந்திரம் கொண்டவன் ஆனால் அவன் ஒழுக்கக்கேடானவன்	பாதுகாப்பு மற்றும் அறநெறி கிடையாது	அரசு பொது விருப்பத்தின் வழி நடத்தப்படும்



11th Std Political Science Tamil_Unit-2.indd 21
13/12/2022 10:22:33

2.2 அரசின் முக்கிய கூறுகள்

அரசு என்பது மக்கள் மீது அளப்பரிய ஆதிக்கம் செலுத்தவல்ல அதிகாரத்துவம் கொண்ட அமைப்புகளின் தொகுப்பாகும். எனவே, அனைத்து நவீன அரசுகளும் ஒருபுறம் அரசின் அளப்பரிய கேள்விக்கு அப்பாற்பட்ட அதிகாரத்தினையும், மறுபுறம் குடிமக்களின் சுதந்திரம் மற்றும் சலுகைகளையும் தமது அரசமைப்பு சட்டத்தின் வாயிலாக சமன்படுத்துவதைக் காணலாம். எனவே அரசமைப்பு சட்டம் என்பது அரசின் அளப்பரிய அதிகாரத்துவம் செலுத்தும் தன்மையினை கட்டுப்படுத்தும் ஒரு முகமையாக கருதப்படுகிறது.

மான்டிவீடியோ மாநாட்டில் 1933-ல் நடைபெற்ற அரசுகளின் உரிமைகள் மற்றும் கடமைகளின் மீதான மாநாடு, அரசு என்பதனைப்பற்றிய ஓர் அடிப்படை புரிதலை அளித்தது. அரசு என்பது ஓர் நிரந்தர மக்கள்தொகை, ஓர் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு மற்றும் அந்நிலப்பரப்பின் மீது ஆளுமை செலுத்தும் அரசாங்கம் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்; அரசு அதன் மக்களை கட்டுப்படுத்தக்கூடியது; பிற நாடுகளுடன் பன்னாட்டு உறவுகளையும் நடத்த வல்லதாகும். இதன் விளைவாக, ஓர் அரசினை பிற அரசுகள் அங்கீகரித்தல் என்பது ஒரு அரசின் சட்டப்பூர்வ தன்மைக்கு மிக முக்கியமாகும்.

மக்கள் தொகை

மக்கள்தான் அரசை உருவாக்குகிறார்கள். அரசுக்கு மக்கள் தொகை அவசியமாகும். தத்துவ ஞானி பிளாட்டோவின் கூற்றுப்படி ஓர் இலட்சிய அரசில் 5040 குடிமக்கள் வாழ்வது போதுமானது என்று அறுதியிட்டார். அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி மக்கள் தொகையினை துல்லியமாகக் கூறாமல், மிகக்குறைவாகவோ அல்லது மிக அதிகமாகவோ இருக்கக்கூடாது என்று மட்டும் அறிவுறுத்தினார். அதாவது ஓர் அரசு தன்னிறைவு பெறுவதற்கு ஏற்றவகையிலும், அதே நேரத்தில் திறம்பட ஆட்சி செய்வதற்குத் தகுந்த வகையிலும் மக்கள் தொகை இருக்க

அரசு – வரையறை

- அரசு எனப்படுவது "குடும்பங்கள் மற்றும் கிராமங்கள் ஒன்றிணைந்து அவற்றின் நோக்கத்திற்காகவும், அவைகளின் மகிழ்ச்சியான, மரியாதைக்குரியதுமான வாழ்க்கை மற்றும் முழுமையான சுய சார்பு கொண்ட வாழ்க்கை முறையினை வாழ உதவும் ஓர் அமைப்பு அரசாகும்" என வரையறுத்தார். **–அரிஸ்டாட்டில்**
- அரசு என்பது "பொதுவாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பினை ஆக்கிரமித்து வாழும் மிகப் பெரிய எண்ணிக்கையிலான மனிதர்களின் பெருந்திரள், தம்மிலும் எண்ணிக்கையில் குறைவாக இருக்கும் மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்துதலை நியாயப்படுத்தும் அமைப்பாகும்". **– ஹாலந்து** (*Holland*)
- அரசினை வரையறுக்கும் போது 'மனித வர்க்கத்தின் ஒரு குறிப்பிட்ட பங்கினர் ஒரு அமைப்பாக இருந்து செயல்படுவதே அரசு' என்கிறார். **– பர்ஜெஸ்** (*Burgess*)
- 'அரசு என்பது அரசாங்க வடிவில் தனிமனிதன் அல்லது சங்கங்கள் இணைவதாகும். ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின்மீது அவர்கள் ஒன்றிணைந்து தங்களை அரசியல் ரீதியாக அமைத்துக்கொள்வது அரசு ஆகும்'. **– சிட்ஜ்விக்** (*Sidgwick*)
- அரசு என்பது " ஓர் மக்கள் கூட்டமானது வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் வசித்துக் கொண்டு , அவர்கள் வெளி சக்திகளுக்கு கட்டுப்படாமல் ஒரு முறையான அரசாங்கத்தைப் பெற்று தங்களுக்குள் ஏற்பட்ட இயல்பான கீழ்படிதலை அரசிற்கு செலுத்துதல்" என விளக்குகிறார். **– கார்னர்** (*Garner*)
- "அரசு என்பது ஓர் நிலப்பரப்பில் அமைந்த சமுதாயமாகும். அது அரசாங்கம் மற்றும் குடிமக்கள் என பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு இடையேயான உறவுகள் மேன்மையான அதிகாரத்தை வலுக்கட்டாயமாக பயன்படுத்துவதன் மூலமாகத் தீர்மானிக்கப்படுகிறது" என்கிறார். **– லாஸ்கி** (*Prof. Laski*)

உங்களுக்குத் தெரியுமா?

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு : மக்கள் தொகை 121.02 கோடி

2011 புள்ளி விவரக் கணக்கெடுப்பு

1872ஆம் ஆண்டு தொடங்கி தற்போது 15வது புள்ளி விவரக் கணக்கெடுப்பு

மொத்த செலவு – ரூ.2,200 கோடிகள்

ஒவ்வொரு நபருக்கான செலவு – ரூ.18.19

மொத்த கணக்கெடுப்பாளர்கள் – 0.27 கோடி

விவரப்பட்டியல் தயாரிக்கப்பட்ட மொத்த மொழிகள் – 16

பயிற்சி கையேடு தயாரிக்கப்பட்ட மொழிகள் – 18

காகிதங்களின் பயன்பாடு – 8,000 மெட்ரிக் டன்கள்

உபகரணங்களின் பயன்பாடு – 10,500 மெட்ரிக் டன்கள்

இந்தியாவின் மக்கள் தொகை 121.02 கோடி என்று கணக்கிடப்பட்டது. இது அமெரிக்கா, இந்தோனேஷியா, பிரேசில், பாகிஸ்தான், பங்களாதேசம் மற்றும் ஜப்பான் ஆகிய அனைத்து நாடுகளின் மக்கள் தொகையின் ஒட்டுமொத்த கூட்டுத் தொகைக்கு சமமானதாகும்.

2001 – 2011 ஆகிய பத்தாண்டுக் கணக்கெடுப்புதான் அதன் முந்தைய பத்தாண்டுகளின் கணக்கெடுப்புகளைக் காட்டிலும் குறைவான மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்தினை பதிவு செய்த முதல் பத்தாண்டு கணக்கெடுப்பாகும்.

2001 – 2011 ஆண்டின் மக்கள் கணக்கெடுப்பினை விடவும் 18.1 கோடி மக்கள் பெருகியுள்ளதை இந்தக் கணக்கெடுப்பு காட்டுகிறது.

ஒட்டு மொத்த ஆண் பெண் பாலின விகிதம் 2001ஆம் ஆண்டிலிருந்து 2011ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டுகளில் 7 புள்ளிகள் அதிகரித்து 940 புள்ளியை எட்டியுள்ளது.



2001 புள்ளி விவரம்

பாலின விகிதம்: 933



2001 புள்ளி விவரம்

பாலின விகிதம்: 940



வேண்டும் என அரிஸ்டாட்டில் கருதினார். ரூசோ ஓர் இலட்சிய அரசு என்பது 10,000 மக்கள் தொகையுடையதாக இருத்தல் வேண்டும் என்று கூறினார்.

உங்களுக்குத் தெரியுமா?

பிளாட்டோவின் கருத்துப்படி ஒரு இலட்சிய அரசின் மக்கள்தொகை என்பது 5040 ஆகும். இந்த 5040 என்ற எண்ணிக்கையினை ஏன் அவர் தெரிவு செய்தார் தெரியுமா? இதற்கு முக்கியக் காரணம் இந்த 5040 என்ற எண்ணை 1 முதல் 12 வரையிலான எந்த எண்ணாலும் வகுக்கலாம். உதாரணமாக, இந்த எண்ணினை 12–ஆல் வகுத்தால் மீதம் உள்ளது 2 என்ற எண் மட்டுமே! நெருக்கடியான காலங்களில் மக்களை சிறு சிறு குழுக்களாகப் பிரித்து அவர்களுக்குரிய தனித்தனி அறிவிப்புகள் தருவதற்கு வசதியாகவே இந்த 5040 என்ற இந்த மக்கள் தொகை எண்ணிக்கை பிளாட்டோவினால் தேர்வு செய்யப்பட்டது.

பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற முற்கால சிந்தனையாளர்கள் சிறிய கிரேக்க நகர அரசுகளான ஏதென்ஸ் மற்றும் ஸ்பார்ட்டாவை மனதில் வைத்துக்கொண்டு மக்கள் தொகை எண்ணிக்கையினை முடிவு செய்தனர். நவீன கால அரசுகள் மக்கள் தொகை எண்ணிக்கையில் வேறுபடுகின்றன. இந்தியாவின் 2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 121.02 கோடி மக்களைக் கொண்டுள்ளது.

நிலப்பரப்பு

மக்கள் வசிக்க இருப்பிடம் அதாவது நிலப்பகுதி அவசியமாகிறது. மேலும் மக்கள் தங்களை சமூக மற்றும் அரசியல் அடிப்படையில் தயார்படுத்திக்கொள்ள நிலப்பகுதி தேவையாகிறது. நிலப்பகுதி என்பது அந்நாட்டின் நிலம், நீர், ஆகாயம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். நவீன அரசுகள் அவற்றின் நிலப்பகுதி அளவில் வேறுபடுகின்றன. குடியுரிமைக்கு நிலப்பகுதி முக்கியமானதாகும். மக்கள் தொகை என்ற கூற்றினைப் போல் நிலப்பகுதி என்பதற்கு குறிப்பிட்ட அளவு என்பது கிடையாது. சிறிய மற்றும் பெரிய நிலப்பகுதிகள் கொண்ட அரசுகள் உள்ளன. 'நிலப்பரப்பின் மீதான இறையாண்மை அல்லது அரசின்

மேலான தன்மை' என்பது அந்தந்த அரசின் எல்லைப் பகுதிக்குள் சுதந்திரமாகவும், வெளியிலிருந்து எந்த கட்டுப்பாடும் இல்லாமல் இருப்பதும் தான். இதுவே நவீன அரசுமுறை வாழ்வின் அடிப்படைக்கொள்கையாகும் என **பேராசிரியர் எலியட்** கூறுகிறார்.

இந்திய அரசின் நிலப்பகுதி 32,87,263 சதுர கிலோ மீட்டர் ஆகும். இது உலக அளவில் கிட்டத்தட்ட 2.4% நிலப்பரப்பு ஆகும். இந்திய அரசமைப்பின் முதல் உறுப்பு இந்தியாவின் நிலப்பரப்பைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

நிலப்பரப்பின் மீதான இறையாண்மையின் பெயரால் மக்கள் ஒரு அரசின் நிலப்பரப்பிலிருந்து மற்றொரு அரசின் நிலப்பரப்பிற்கு செல்வது கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

ஆனால் ஒரு நாட்டில் இருந்து கொண்டு நீங்கள் இணையத்தைப் பயன்படுத்தி மற்றொரு நாட்டில் உள்ளவருடன் தொடர்பு கொள்ள முடியும். அரசின் பிரதான உரிமையான இறையாண்மையின் பார்வையில், இதனை நீங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்? முகநூல் (Facebook), கீச்சகம் (Twitter) மற்றும் வலையொளி (You Tube) போன்ற சமூக வலைதளங்கள் சில நாடுகளில் ஏன் தடை செய்யப்படுகின்றன என்பதை ஆராயவும்.

அரசாங்கம்

அரசாங்கம் என்பது அரசின் செயல்படக்கூடிய ஓர் முகமையாகும்.

செயல்பாடு

- இந்திய அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்டுள்ள செய்தித்தாள் விளம்பரங்களைப் பார்த்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.
- 'அரசு' என்ற சொல்லை நீ எவ்வாறு புரிந்து கொள்கிறாய்?
- உங்களுடைய தினசரி வாழ்க்கையில் அரசாங்கத்தினால் ஏற்படும் ஏதேனும் ஐந்து தாக்கங்களைப் பட்டியலிடுக.
- ஒவ்வொருவருக்குமான விதிகளை அரசானது சட்டத்தின் வடிவில் இயற்ற வேண்டியது ஏன் அவசியமாகிறது என்று நீ கருதுகிறாய்?

அரசாங்கம் என்பது அரசின் அரசியல் அடிப்படையிலான ஒருங்கிணைப்பாகும். பேராசிரியர் அப்பாதுரை (A.Appadurai) "அரசின் விருப்பங்களை உருவாக்கி வெளிப்படுத்தி உடன் நிறைவேற்றும் ஓர் முகமையாக அரசாங்கம் விளங்குகிறது" என குறிப்பிடுகிறார். **சி.எப்.ஸ்ட்ராங்** (C.F. Strong) என்பவர், "சட்டத்தை இயற்றி அதனை அமல்படுத்த அரசுக்கு மேலான அதிகாரம் தேவைப்படுகிறது" என்று கூறுகிறார்.

இறையாண்மை

இறையாண்மை என்பது ஓர் அரசின் நான்காவது அடிப்படை கூறாகும். இறையாண்மை என்பதன் பொருள் மேலான மற்றும் இறுதியான சட்ட அதிகாரம் என்பதாகும். எந்த சட்ட அதிகாரமும் இறையாண்மையை விட உயர்ந்ததாக இருக்க முடியாது. நவீன அரசுகள் தோன்றும்போது அதனுடன் இறையாண்மை என்ற கருத்தும் உருவாக்கப்பட்டது. இறையாண்மை எனும் சொல் இலத்தீன் மொழிச்சொல்லான **'சூப்பரானஸ்'** (Superanas) என்பதிலிருந்து பெறப்பட்டது. அதற்கு உயர்ந்த அதிகாரம் என்று பொருளாகும். தொன்றுதொட்டு வரும் புரிதலின்படி இறையாண்மை என்பது முழுமையானது, நிரந்தரமானது, அனைவருக்குமானது, பிரிக்க முடியாதது, தனித்துவமானது மற்றும் மாற்றித்தர இயலாதது என்பன போன்ற பண்புகளை உள்ளடக்கியுள்ளது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜீன் போடின் (Jean Bodin) (1530 -1597) என்பவர் நவீன இறையாண்மைக் கோட்பாட்டின் தந்தையாவார். ஹெரால்டு லாஸ்கியின் (Harold Laski) கருத்துப்படி 'அரசு இறையாண்மை உடையதாக இருப்பதால்தான் பிற மனிதக் கூட்டமைப்புகளிலிருந்து வேறுபடுகிறது'.

2.3 சமுதாயம், அரசு மற்றும் அரசாங்கம்

சமுதாயம், அரசு, அரசாங்கம் – இவை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக உள்ளன?

மனிதர்கள் வேட்டையாடி வாழ்ந்த வரலாற்று ரீதியிலான பண்டைய நிலையிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்து, ஒரு இடத்தில் நிலையாய் குடி கொண்டு வாழும் நிலைக்கு வந்த பின்பு, ஒவ்வொருவரும் பொருட்களை உற்பத்தி செய்யத் தொடங்கினர். குடும்பங்களின் செறிவு சமூகம் எனவும், சமூகங்களின் செறிவு நாம் இன்று காணும் சமுதாயமாகவும் ஆனது. தனிநபர்கள், தங்கள் உளவியல் தேவைக்காக மற்றவரை சார்ந்து இருந்ததினால் குடும்பம் எனும் அமைப்பில் வாழ்ந்து வந்தனர்.

குடும்பங்கள், தங்கள் பாதுகாப்பிற்காகவே சமூகம் எனும் கட்டமைப்பின் கீழ் வந்தன. இவ்வாறு அமையப்பெற்ற சமூகங்கள், தங்களின் மேம்பட்ட பாதுகாப்பிற்காக சமுதாயம் எனும் அமைப்பினைத் தோற்றுவித்தன.

சமுதாயம் சீரழிந்து போகும் போது, அதன் தாக்கம் சமூகக்குழுக்களின் மீதும் ஏற்படும். சமூகங்கள் சிதைவு பெறும்போது குடும்பங்களும் சிதையத்தொடங்கும். குடும்பங்கள் சிதையத்துவங்கினால், ஒவ்வொருவரும் துன்புற நேரிடும். இவ்வாறு ஒரு சரி செய்ய இயலாத சீரழிவைத் தடுக்கும் பொருட்டே, மனிதர்கள் ஒன்றுபட்டு, பகுத்தறிவின் வழிகாட்டுதலின் பேரில் அரசு எனும் மாட்சிமை பொருந்திய வலிமையோடு இருக்கக்கூடிய அமைப்பின் அவசியத்தினை உணர்ந்தனர்.

மனிதர்கள் ஒருவருக்கொருவர் தம்மை அழித்துக்கொள்வதிலிருந்து அவர்களை காக்கும் நோக்கிலேயே அதிகாரங்கள் குவிக்கப்பட்டு அவ்வதிகாரங்களை நிர்பந்திக்கும் அதிகாரமும் கொண்ட 'அரசு' எனும் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. நவீன அரசுகளில் மனிதர்கள் மீதான இக்கட்டுப்பாடுகள், சட்டத்தின் வழியாக உரிய விதிமுறைகள் மூலம் மேற்கொள்ளப் படுகின்றன. மக்களாட்சியில் இச்சட்டங்கள் சட்டமன்றத்தால் இயற்றப்படும்.

இயற்றப்பட்ட சட்டங்கள், செயலாட்சி துறை மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டும், நீதிமன்றத்தால் இச்சட்டங்களின் சட்டபூர்வத்தன்மை மற்றும் நீதிபரிபாலனத்தன்மை ஆகியன ஆய்வு செய்யப்பட்டும் வருகின்றன. சட்டமியற்றுதல், இயற்றிய சட்டத்தை அமலாக்குதல் மற்றும் அதற்கு விளக்கமளித்தல் ஆகியன அரசாங்கத்தின் பணிகளாகும்.

அரசு	சமுதாயம்
சமுதாயம் தோன்றிய பின்னரே அரசு என்ற அமைப்பு தோன்றியது.	சமுதாயமானது அரசு தோன்றுவதற்கு முன்னரே தோன்றியது.
அரசின் எல்லை வரையறுக்கப்பட்டது.	சமுதாயத்தின் பரப்பெல்லை பரந்ததாகும்.
அரசுக்கு ஒரு நிலையான நிலப்பரப்பு உண்டு.	சமுதாயத்திற்கு என நிலையான நிலப்பரப்பு எதுவும் இல்லை.
அரசு என்பது அரசியல் சார்ந்த அமைப்பாகும்.	சமுதாயம் என்பது ஓர் சமூக அமைப்பாகும்.
அரசிற்கு சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் உள்ளது.	சமுதாயத்திற்கு அத்தகைய அதிகாரங்கள் எதுவும் இல்லை.

அரசு மற்றும் சமுதாயத்தின் உறுப்பினராகும் தன்மை என்பது ஒன்றேயாகும். ஆனால் அவை இரண்டும் தத்தமது நோக்கங்களில் மாறுபடுகின்றன. அரசு என்பது ஒரு மிகப்பெரிய ஆனால் ஒரே ஒரு நோக்கத்திற்காக உள்ளது. ஆனால் சமுதாயம், எண்ணிலடங்காத நோக்கங்களுக்கானதாகும். அவற்றில் சில பெரிய நோக்கங்கள் மற்றும் சில சமயம் சிறிய நோக்கங்கள் உள்ளன. சமுதாயத்தின் நோக்கங்கள் ஆழ்ந்ததாகவும், பரந்ததாகவும் காணப்படுகின்றன.

அரசு என்பது சட்டம் சார்ந்த ஒற்றை அமைப்பாகும். ஆனால் சமுதாயம் என்பது பல

அமைப்புகளை உள்ளடக்கியதாகும். அரசு மக்களின் மீது தன் அதிகார வலிமையை பயன்படுத்தி அவர்களை கீழ்ப்படிய வைக்கிறது. ஆனால் சமுதாயமோ மக்களின் மனமுவந்த செயல்பாட்டையே ஊக்குவிக்கிறது. சமுதாயத்தின் பல்வேறு தேவைகளே அது இசைவான வழியில் செயல்படும் முறையை தேவையானதாக்குகிறது. சமுதாயத்தில் பல்வேறு அமைப்புகள் இருப்பதால், ஒருவர் தான் கட்டாயப்படுத்தப்படுவதாக கருதினால் அதிலிருந்து விடுபட்டு வேறு அமைப்பில் தம்மை இணைத்துக் கொள்வதற்கு வாய்ப்புள்ளது. நிர்ப்பந்தத்தின் மூலமாக அமைப்புகள் செயல்பட முடியாது. இதன் வாயிலாக, வலியுறுத்தும் அதிகாரமற்ற அரசும், மக்களை அவர்களின் சுய விருப்பத்துடன் தன்னகத்தே வைத்துக் கொள்ளும் தூண்டல் இல்லாத சமுதாயமும் வீழ்ச்சியடையும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

அரசு மற்றும் அரசாங்கம்

பேச்சு வழக்கில் அரசும், அரசாங்கமும் ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மையில் அரசு என்பதும் அரசாங்கம் என்பதும் வெவ்வேறானவை ஆகும். பின்வரும் அட்டவணையிலிருந்து அரசிற்கும், அரசாங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அறியலாம்.

அரசு	அரசாங்கம்
அரசு என்பது மக்கள் தொகை, நிலப்பரப்பு, அரசாங்கம் மற்றும் இறையாண்மை ஆகிய நான்கு கூறுகளைக் கொண்டதாகும்.	அரசாங்கம் என்பது அரசின் நான்கு கூறுகளில் ஒன்றாகும்.
அரசு மூல அதிகாரங்களை பெற்றதாகும்.	அரசாங்கத்தின் அதிகாரங்கள் அரசிடமிருந்து பெற்றவையாகும்.
அரசு என்பது நிரந்தரமானது என்பதுடன் என்றென்றைக்கும் நீடித்திருப்பதாகும்.	அரசாங்கம் என்பது தற்காலிகமானதாகும். மக்கள் விருப்பத்தின் பேரில் அரசாங்கங்கள் மாற்றப்படலாம்.
அரசு என்பது காண முடியாததும், புலனாகாததும் ஆகும்.	அரசாங்கம் என்பது உறுதியானது மற்றும் காணக்கூடியது.

நவீன அரசு

நவீன அரசைப் பற்றி தெரிந்து கொள்ளும் முன்னர் உங்களுக்கு நவீனத்துவம் பற்றிய புரிதல் வேண்டும். நவீனத்துவம் என்றால் என்ன? நவீன அரசு என்றால் என்ன?

நவீனத்துவம் என்பதனை வரலாற்று அடிப்படையில் பார்த்தால் மரபுகளை கேள்விக்குட்படுத்தி அதன் மூலம் காலம் தொட்டு வந்த நம்பிக்கைகளை, பழக்கங்களை, சமூக பண்பாட்டு நெறிமுறைகளை நிராகரிக்கும் காலகட்டம் நவீனத்துவமாகும். தனி மனிதத்துவத்திற்கு முன்னுரிமை, சமத்துவம், சுதந்திரம், வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அறிவியல் மனப்பாங்கினை வளர்த்தல் போன்றவற்றிற்கு நவீனத்துவம் அடித்தளமிட்டது. நவீனத்துவம் மக்களை விவசாயம் சார்ந்த நிலையிலிருந்து தொழில்மயம், நகரமயம், மதச்சார்பின்மை நோக்கி வழி நடத்தியது. இந்த அறிவார்ந்த நகர்வானது சமுதாயம், அரசு மற்றும் அரசாங்கம் போன்றவற்றை பற்றிய புரிதல் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. உதாரணமாக, இந்திய சமுதாயத்தை சீர்திருத்த இராஜாராம் மோகன்ராய் மேற்கொண்ட முயற்சிகள் போன்றவை இந்திய சிந்தனையாளர்கள் மீது மேற்கத்திய நவீனத்துவத்தின் தாக்கம் நேரடியாக இருந்ததற்கு சான்றாகும்.

அரசியல் அறிவியல் பாடத்தில் நவீனத்துவமானது அரசு, சுதந்திரம், சமத்துவம், நீதி முதலிய கருத்தாக்கங்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. நவீன அரசின் அறிவுப் பூர்வமான அடித்தளம் பெரும்பாலும் 1648-ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட "வெஸ்ட் பாலியா உடன்படிக்கை" (Treaty of Westphalia)யின் விளைவு என்றே கூறப்படுகிறது.

நவீன அரசின் சிந்தனை 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய காலனிமயமாக்கம்

11th Std Political Science Tamil_Unit-2.indd 26 06/12/2022 10:42:51

www.tnschoolbooks.in

மூலம் உலகின் பல்வேறு பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்கு பின் சுதந்திரம் பெற்ற காலனி நாடுகள் இன்றளவும் காலனியாதிக்க காலத்திற்கு பிந்தைய (Post- Colonial States) அரசுகள் என அறியப்படுகின்றன. இவ்வாறு சுதந்திரம் பெற்ற தெற்காசிய நாடுகள் காலனியாதிக்க காலத்திற்குப் பிந்தைய அரசுகள் என்னும் குடையின் கீழ் வருகின்றன. இவ்வாறு உலகெங்கிலும் உள்ள காலனியாதிக்க காலத்திற்கு பிந்தைய அரசுகளை ஒன்றோடு ஒன்று ஒப்பீடு செய்யலாம். இவ்வாறான ஒப்பீடுகள் அவ்வரசுகளின் ஆட்சி முறைமைகளின் சாதக பாதகங்களை அறிந்து கொள்ள உதவும். அதன் மூலம் அவ்வரசுகளின் ஆட்சி முறைமைகளை மேம்படுத்த இயலும்.

2.4 நவீன அரசுகளின் பணிகள்

நவீன அரசு என்பது வளர்ச்சியடைந்த அரசு ஆகும். அது தனது மக்களை பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் வைத்துக் கொள்ள முயல வேண்டும். அரசு தனது எல்லைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யவேண்டும். தனது எல்லைகளுக்குள் வெளிநாட்டவர் எவரும் உட்புகாத வண்ணம் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். சந்தையின் தேவைகளனைத்தும் நன்கு கட்டமைக்கப்பட்ட பேரியல் பொருளாதார கட்டமைப்பு மூலம் சமுதாயத்துடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும். 'முதலில் மக்கள் நன்மை' என்பதே அரசின் தாரக மந்திரமாக இருக்கவேண்டும்.



நவீன அரசின் ஆளுகை கொள்கை என்பது அதன் செயல்கள் மக்களின் நலனை பேணுவதாக இருக்கிறதா என்பதாகும். இவ்வாறு அத்தியாவசிய சேவைகளை செய்துதரும் அமைப்பாக நவீன அரசு இயங்குகிறது. நவீன அரசு கீழ்காணும் மூன்று முக்கிய செல்பாடுகளை மையமாக கொண்டது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு பணிகள்

அரசுகள் இன்றைய உலகளாவிய சூழலில் 'இடர்காப்பு' என்பதனை பன்மடங்கான நிலைப்பாடுகளில் பொருள் கொள்கின்றன. மனித இடர்காப்பு போன்ற சொற்கள் குடிமக்களின் நலனே முதன்மையானது என்பதையே குறிக்கிறது. தத்துவஞானி இம்மானுவேல் காண்ட் அவர்களின் "நிரந்தர அமைதி" எனும் சிந்தனையின் படி உலக நாடுகள் ஒன்றிணைந்து 'பன்னாட்டு சங்கம்' எனவும் பின்னாளில் 'ஐக்கிய நாடுகள் சபை' எனவும் ஒன்றிணைந்து இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு முதலியவற்றை விவாதித்து உலக அமைதியை பேணுகின்றன.

பொருளாதார பணிகள்

அரசியல் முறைமையின் பொருளாதார செயல்பாடுகளில் தலையிடவேண்டிய கடமையில் நவீன அரசுகள் உள்ளன. மக்கள் தங்களின் திறனை உணர்ந்து மேம்படுத்திக்கொள்ள ஏதுவாக அரசு அவர்களுக்கு ஆதரவு தரவேண்டும். நலிவுற்ற பிரிவினர் மற்றும் நுகர்வோரின் நலன்களை பாதுகாத்தல், லாபம் ஈட்ட இயலாத துறைகளில் முதலீடு செய்வது போன்றவை நவீன அரசின் பொருளாதார பணிகளாக கருதப்படுகிறது.

அத்தியாவசிய சேவைகளை வழங்குதல்

'**கருவறையிருந்து கல்லறை வரை**' நவீன அரசு அதன் குடிமக்களை கவனித்துக் கொள்ள வேண்டும். உணவு, சுத்தமான குடிநீர், கல்வி, சுகாதாரம், மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியன அரசின் முதன்மையான பொறுப்புகளாகும். இந்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கங்களின் பல்வேறு நலத் திட்டங்கள் இந்த திசையில் இருப்பதை நீங்கள் காணலாம். தமிழக அரசாங்கத்தின் மதிய உணவு திட்டம் மற்றும் அரசுப் பள்ளிக் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் ஆகியவை நாட்டின் பிற பகுதிகளில்

11th Std Political Science Tamil_Unit-2.indd 27 06/12/2022 10:42:51

பின்பற்றப்படுவது இதற்கு தக்கதொரு சான்றாகும். நவீன அரசு மக்களின் நலனைப் பேணுவதால் "மக்கள் நல அரசு" எனும் மற்றுமொரு கருத்தாக்கம் தோன்றியது

2.5 மக்கள் நல அரசு என்ற கருத்தாக்கம் (Concept of Welfare State)

இந்திய அரசமைப்பின் 'அரசு வழிகாட்டி நெறிமுறைகள்', மேற்கு ஐரோப்பிய நாடுகளின் மக்கள் நல அரசு பற்றிய சிந்தனையை பிரதிபலிப்பதை கவனித்து இருக்கிறீர்களா? குடிமை உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த அம்சங்கள் அரசமைப்பின் அடிப்படை உரிமைகளில் வைக்கப்பட்டுள்ளபோது, சமூக, பொருளாதார மேம்பாட்டினை வலியுறுத்தும் வழிமுறைகள் நான்காம் பகுதியில் 'அரசு வழிகாட்டி நெறிமுறைகள்' எனும் தலைப்பின் கீழ் அமைந்துள்ளது எதனால் என்று அறிவீர்களா? அதன் காரணமென்ன? அரசமைப்பில் உள்ள அடிப்படை உரிமையின் பகுதியாக பொருளாதார உரிமைகள் ஏன் இல்லை?

குறைந்தபட்ச மக்கள்தொகை மற்றும் அதே நேரத்தில் வளங்கள் மிகுதியாக இருப்பது, மக்கள் நல அரசு மாதிரியின் (Welfare State Model) வெற்றியை தீர்மானிக்கும் முக்கிய காரணமாகும். ஸ்கேண்டிநேவியா நாடுகள் மக்கள் நல அரசிற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. இந்தியாவின் அரசமைப்பு ஒர் நல அரசினை நிறுவ முயல்கிறபோதிலும், வளங்கள் போதாமை, அதே சமயம் பெருகும் மக்கள்தொகை ஆகியவை மக்கள் நல அரசின் இலக்குகளை எட்ட தடையாக உள்ளது.

'மக்கள் நல அரசு என்ற கருத்தாக்கம் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்டதாகும். மக்கள் நல அரசில், அரசாங்கத்தினுடைய முதன்மை சிந்தனை என்பது மனித வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்காற்றவேண்டும் என்பதாகும்.

குடிமக்களின் நல்வாழ்விற்கான பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டினை பேணுதல் நல அரசின் பங்காகும். குடிமக்களின் பொருளாதார மற்றும் சமூக நலன் பின்வருவனவற்றின் அடிப்படையிலானதாகும். (1) வாய்ப்புகளில் சமத்துவம் எனும் கொள்கை (2) பொருளாதார வளங்களை சமமாக வழங்குவதற்கான கொள்கை (3) குறைந்தபட்ச நல் வாழ்க்கையை தங்களால் ஏற்படுத்திக்கொள்ள இயலாதவர்களுக்கு, அவ்வாறான வாழ்க்கையினை ஏற்படுத்தித் தருதல் ஆகியனவாகும். சுதந்திரத்திற்கு முன்பு இந்தியா ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் ஒரு காலனித்துவ அரசாக இருந்தது. இந்தியர்கள் ஆங்கிலேய முடியாட்சியின் கீழ் இருந்தனர். நம் நாடு சுதந்திரம் அடைந்ததும், நாம் நமது அரசமைப்பினை உருவாக்கினோம். நமது அரசமைப்பானது மேற்கத்திய மக்கள் நல அரசின் சிந்தனைகளை உள்வாங்கியதாகும்.

செயல்பாடு

- மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத்திட்டம், கல்வி உரிமை சட்டம், தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் ஆகியவற்றின் அவசியத்தினை ஆராயவும். இத்திட்டங்களில் உறுதி செய்யப்பட்டுள்ள உரிமைகள், சட்ட பூர்வ உரிமைகளா? அல்லது அடிப்படை உரிமைகளா?
- மக்கள் நல அரசு எனும் கருத்தாக்கத்திற்கு **ஜே.எஸ்.மில்** மற்றும் **எச்.ஜே.லாஸ்கி** அளித்த பங்களிப்புகள் குறித்து விவாதி.

2.6 மென்மை அரசு என்ற கருத்தாக்கம் (Concept of Soft state)

நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் குன்னர் மிர்டால் (Gunner Myrdal) மேற்கத்திய அரசுகளுடன் ஆசிய அரசுகளை ஒப்பிடும்போது, ஆசிய அரசுகளில் நிலவும் சமுதாய ஒழுங்கீனங்கள் ஆசிய அரசுகளை மென்மை அரசுகளாக ஆக்குவதை கண்டறிந்தார். சமூக ஒழுங்கீனம், ஊழல் மற்றும் மிகப்பலவீனமான சட்ட அமலாக்கம் ஆகியன மென்மை அரசின் முக்கிய தன்மைகளாகும்.

முழு வளர்ச்சி பெறாத ஆளுமை திறன்கள் கொண்ட காலனியாதிக்க காலத்திற்கு பிந்தைய நாடுகள் 'மென்மை அரசுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. தரநிலைகளை கடைபிடிக்காமை, ஒழுக்கத்தை

11th Std Political Science Tamil_Unit-2.indd 28 06/12/2022 10:42:52

பராமரிக்க இயலாமை, சட்ட அமலாக்கம் செய்ய இயலாமை போன்றவை நமது நாட்டினை மென்மை அரசாக மாற்றிவிடுகிறது. தனது மக்களாட்சி பண்புகளை மென்மேலும் மேம்படுத்திக்கொள்ள ஒரு மென்மை அரசால் இயலவே இயலாது.

ஒரு மாணவராக நீங்கள் காணும் சமுதாய ஒழுங்கீனங்களையும், அவற்றை சீர் செய்வதற்காக உங்களின் வழிமுறைகளையும் பட்டியலிடுக.

செயல்பாடு

- மேற்கத்திய நாடுகளில், கருவிலிருக்கும் குழந்தையின் பாலினத்தை அறிந்துகொள்ளுதல் என்பது பேறுகால மருத்துவ நடைமுறையின் ஒரு பகுதியாக விளங்குகிறது. கருவுற்ற தாய்மார்கள் பிறக்கப்போகும் தம் குழந்தைகளின் பாலினத்தை முன்னரே தெரிந்து கொள்வது வழக்கமான ஒன்றாகும்.
- ஆனால் இந்தியாவில் குழந்தை பிறக்கும் முன்னரே அதன் பாலினத்தை தெரிவிப்பதோ, தெரிந்துகொள்ள முயற்சிப்பதோ தண்டனைக்குரிய குற்றமாகும். "கருவிலிருக்கும் குழந்தைகளின் பாலினத்தை கண்டறிதல் தடைச்சட்டம்" [Pre-Conception and Pre-Natal Diagnostic Techniques (PCPNDT) Act] எனும் சட்டம் மூலம் கருவிலிருக்கும் சிசுவின் பாலினத்தை கருவுற்று இருக்கும் பெண்ணிற்கோ,அவரது உறவினருக்கோ சொல், செயல் மற்றும் பிற குறியீடுகள் வழியாக தெரிவிப்பது குற்றமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏன்?

2.7 மிகை மேம்பாட்டு அரசு என்ற கருத்தாக்கம் (Concept of Over Developed State)

தெற்காசிய அரசுகள் பெரும்பாலும் நவீன மக்களாட்சி தத்துவத்தின் படி இயங்கும் அரசுகளாகும். ஆனால், அவை வளர்ச்சியில் மேற்கத்திய நாடுகளை விட பின் தங்கி இருப்பதன் காரணம் யாது? இந்நாடுகளின் ஆளுகை அமைப்புகளான நாடாளுமன்றம், அதிகாரவர்க்கம், திட்டமிடும் துறைகள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டு நிலவியல் சூழலுக்கேற்ப காலனியாதிக்க காலத்திலேயே மாற்றப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் வளர்ச்சி என்பது மிக மந்தமாகவே இருப்பதை காண முடிகிறது. வளர்ச்சி வேகம் மிக மெதுவாகவே இந்நாடுகளில் இருப்பதற்கான காரணம் என்ன? இதனை எடுத்துக்காட்டி ஹம்சா ஆலாவி (*Hamza Alavi*) பாகிஸ்தான் மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளின் ஆளுகைத்தன்மை நெருக்கடியினை விளக்குகிறார். காலனியாதிக்க காலத்திற்கு பிந்தைய நாடுகளின் செயல்படாத தன்மையினை விளக்கும்பொருட்டு மிகை மேம்பாட்டு அரசு எனும் கருத்தாக்கம் பயன்படுகிறது. காலனியாதிக்கக் காலத்தின் போதும், அதற்கு பின்னரும் தொடரும் அதிகாரவர்க்க ஆளுகைக்கட்டமைப்பு மூலமாக 'மிகை மேம்பாட்டு அரசு' புரிந்துகொள்ளப்படுகிறது.

காலனியாதிக்க கால அடிமைத்தளையில் இருந்து இந்நாடுகள் விடுபட்டாலும், புதிதாக பெறப்பட்ட அரசியல் சுதந்திரத்தின் தாக்கத்தினை அந்நாடுகளில் உள்ள நிர்வாகக்கட்டமைப்புகள் எந்த வகையிலும் உள்வாங்கவில்லை. ஐரோப்பிய காலனியாதிக்க சக்திகள் இரட்டை வேடமிட்டு, தங்கள் நாட்டு ஆரோக்கிய அரசியலினை தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள காலனியாதிக்க நாடுகளுக்கு வழங்கவில்லை. அவர்களின் நாடுகளில் அரசுகள் என்பவை குடிமக்களின் அரசியல் வாழ்வு, சுதந்திரம் மற்றும் பொருளாதார சுதந்திரம் போன்ற உரிமைகளை நிலை நாட்டி மக்களுக்கு அதீத சுதந்திரம் வழங்கிய அமைப்பாகக் கருதப்பட்டன. மக்கள் அரசினை தங்கள் 'செல்ல பிராணி' போன்று கருதினர். ஆனால், அதே ஐரோப்பியர்கள் அதற்கு நேர் எதிராக, தங்களின் காலனியாதிக்க நாடுகளில் அரசமைப்புகள் கொடூரமானதாக இருக்குமாறு வடிவமைத்தனர். அதிகாரக் குவிப்பு என்பது பெரும் அளவில் காலனியாதிக்க அரசின் வசம் இருந்தது. இதனால் காலனியாதிக்கம் செய்யப்பட்ட நாடுகளில் இருந்து மிக எளிதாக செல்வங்களை சுரண்டி அவர்கள் தங்கள்

www.tnschoolbooks.in

நாட்டிற்கு கொண்டு செல்ல முடிந்தது. காலனியாதிக்க நாடுகளில் அவர்கள் உருவாக்கி வைத்திருந்த அதிகாரவர்க்கம் இதற்கு மிக சிறப்பாக உதவி புரிந்தது. நாட்டைச் சுரண்ட உதவிய இவ்வகை அமைப்புகளை நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும், பெரும் மரபாகவே கருதி பிந்தைய ஆட்சியாளர்கள் தொடர்ந்தனர். அதிகாரவர்க்கமும் தன்னை பெரிய அளவில் உருமாற்றமும் செய்துகொள்ளவில்லை.

சமுதாயம் மற்றும் அதன் பொருளாதாரம் நவீனமயமாக்கப்படாத நிலையில் அவற்றை கட்டுப்படுத்தும் மாட்சிமை பெற்ற அமைப்பான அரசு மட்டும் நவீனமாக்கப்பட்டால், அது அரசையும் அதன் அங்கமான சமுதாயத்தினையும் ஒன்றோடொன்று தொடர்பில்லாத இரு வேறு கூறுகளாக ஆக்கி விடும். இது அரசு இயந்திரத்திற்கும், மக்களுக்கும் ஒரு பெரிய இடைவெளியினை ஏற்படுத்திவிடும். இவ்வகையான பிரதிநிதித்துவ மக்களாட்சியில், மக்களுக்கு எது நன்மை பயக்கும் என்பது மக்களால் தீர்மானிக்கப்படமாட்டாது. அதற்குமாறாக செல்வாக்கு மிக்க ஒரு சிலரால் மட்டுமே தீர்மானிக்கப்படும். வங்கதேசம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நிலவும் இத்தகைய தன்மையினை 'இராணுவ அதிகாரவர்க்க சிறுகுழுவாட்சி' எனும் சொற்றொடர் மூலம் ஹம்சா ஆலாவி விளக்குகிறார். 'இராணுவ அதிகாரவர்க்கத்தின் சிறுகுழுவாட்சி' என்பது இந்தியாவின் உரிமங்கள் ஆட்சியை (Licence Raj) ஒத்துள்ளதாகும். காலனியாதிக்க கால அனுபவத்தில் இருந்து இந்தியாவில் தொடரும் அதிகாரக்குவிப்பு குறித்த கவலைகள் தொடர்ந்து மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு வருவதைக் காணலாம்.

2.8 காலனியாதிக்க காலத்துக்கு பிந்தைய அரசு என்ற கருத்தாக்கம் (Concept of post–colonial state)

இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் காலனியாதிக்கத்தின் பிடியிலிருந்து விடுபட்டு உருவான புதிய தேசிய அரசுகள் காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகள் என அழைக்கப்படுகின்றன. மேம்பாட்டு அரசுகள் எனவும் காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகள் எனவும் இவை அழைக்கப்படுகின்றன. அரசின் கட்டமைப்பை பொறுத்தவரை காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகளில் காலனியாதிக்க கால அரசுகளின் இயல்புகள் அப்படியே உள்ளன. ஆனால் தற்பொழுது அரசின் கட்டமைப்புகளுடைய குறிக்கோள்கள் காலத்திற்கு ஏற்றாற்போல் மாறிவிட்டதைக் காணலாம். பொதுவாக, காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகளில் அதிக அளவிலான வறுமை, அரசியல் நிலையற்றத்தன்மை, மற்றும் ஆளுகையில் திறனின்மை போன்றவை காணப்படுகிறது. நவீன அரசுக்கும், மரபுசார் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ள சமுதாயத்திற்கும் உள்ள முரண்பாடுகளே இதற்கு காரணம் எனலாம்.

உலகின் புதிய பகுதிகளுக்குள் நுழைந்த காலனியாதிக்கச் சக்திகள், அங்கே நிலவிய பாரம்பரிய மரபுகள் மற்றும் பண்பாட்டினை அழித்ததுடன் தங்கள் மரபுகளையும் பண்பாட்டினையும் தொடர்ந்து திணித்தவாறு இருந்தனர். இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட மரபுகள் மற்றும் பண்பாடுகளுடன் மாற்றத்திற்கு உள்ளான மக்கள், தங்கள் நாடு விடுதலை அடைந்தவுடன், காலனியாதிக்க அடையாளங்களை துறந்து தங்களுக்கென சுய அடையாளங்களை ஏற்படுத்தும் உடனடி கட்டாயத்திற்கு தள்ளப்பட்டனர். அதனால் ஏற்பட்ட முரண்பாடுகளைக் களைந்து அவர்கள் தன்னம்பிக்கையுடன் தங்களின் புதிய தேசிய அடையாளத்தினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. இது காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகளில் ஆள்வோருக்கும், ஆளப்படுவோருக்கும் இடைவெளி ஏற்பட ஒரு முக்கிய காரணமானது. இன்றளவும் காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகளில் ஆள்வோர் அன்னிச்சையாக நடந்து கொள்வதைக் காணலாம்.

அருஞ்சொற்பொருள்: Glossary

அரசு (State): அரசு என்பது குறிப்பிட்ட நிலப்பரப்பையும் அதில் வாழும் மக்களையும் குறிப்பதாகும் .

அரசாங்கம் (Government): ஒரு நாட்டை அதிகாரம் பெற்ற மக்கள் குழுவால் அதிகாரப்பூர்வமாக கட்டுப்படுத்தும் அமைப்பே அரசாங்கம் ஆகும்

சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு (Social Contract Theory): மனிதன் இயற்க்கை நிலையில் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தமே சமுதாய ஒப்பந்தமாகும்.

சமுதாயம்(Society): மக்கள் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு பெரிய குழுவாக இணைந்து, பணிகளை எப்படி பங்கிட்டுக் கொள்வது, எந்த முடிவுகளை எப்படி எடுப்பது போன்றவைகளை அவர்களுக்குள்ளேயே தீர்மானித்துக்கொள்ளும் தன்மை படைத்த ஓர் அமைப்பு சமுதாயம் எனப்படும்.

தனிமனிதத்துவம் (Individualism): அரசின் கட்டுப்பாடுகளிலிருந்து அப்பாற்பட்டு ஓர் தனிமனிதனின் சுதந்திரமானசெயல்பாடுகளை உறுதி செய்யும் கோட்பாடு.

ஸ்கேண்டிநேவியா(Scandinavia): இது வடக்கு ஐரோப்பாவில் உள்ள டென்மார்க், நார்வே, ஸ்வீடன் ஆகிய மூன்று நாடுகளின் ஒருங்கிணைந்த பகுதியைக் குறிப்பதாகும்.

இயற்கை நிலை (State of Nature): சமுதாயத்தில் எவ்விதமான முறைப்படுத்தப்பட்ட அரசாங்க வடிவமும் இல்லாமல் தொன்மையான நிலையில் காணப்படுவது ஆகும்.

மதிப்பிடுதல் (Evaluation)

I) சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

1. 'அரசு' என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்திய அரசியல் அறிஞர் யார்?

அ) நிக்கோலோ மாக்கியவல்லி   ஆ) பிளாட்டோ
இ) அரிஸ்டாட்டில்   ஈ) லாக்

R06IJ

2. 'லெவியதான்' என்ற நூலை எழுதியவர் யார்?

அ) ஹாப்ஸ்   ஆ) லாக்
இ) ரூசோ   ஈ) மார்கந்தோ

3. கீழ்வருபவைகளில் எது அரசிலுள்ள குடிமக்களின் தகுதியை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக கருதப்படுகிறது?

அ) நிலப்பரப்பு   ஆ) அரசாங்கம்
இ) இறையாண்மை   ஈ) மக்கள் தொகை

4. கீழ்வருபவைகளில் எது அரசின் அதிகாரத்துவத்தை கட்டுப்படுத்தும் அதிகாரமாக கருதப்படுகிறது?

அ) அரசமைப்பு   ஆ) மதம்
இ) நீதிமன்றத்தீர்ப்பு   ஈ) மக்கள்

5. "நிலப்பரப்பின் மீதான இறையாண்மை அல்லது அரசின் இறையாண்மை என்பது அதன் எல்லைக்குட்பட்ட பகுதி அனைத்திற்கும், வெளிநாடுகளின் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையான சுதந்திரம் அடைவது என்பதே நவீன அரசுகளில் வாழ்வின் அடிப்படைக் கொள்கையாகும்" என்று கூறியவர்

அ) எலியட்   ஆ) போடின்
இ) ஆஸ்டின்   ஈ) மாக்கியவல்லி

6. கீழ்க்கண்டவர்களில் "நவீன இறையாண்மை கோட்பாட்டின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?

அ) ஜீன் போடின்   ஆ) ஹியுகோ குரோஷியஸ்
இ) ஆஸ்டின்   ஈ) மாக்கிய வல்லி

7. கீழ்வருபவைகளில் எது நவீன அரசின் பணிகளை சார்ந்தது அல்ல?

அ) இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு   ஆ) பொருளாதார பணிகள்
இ) அத்தியாவசிய சேவைகளை வழங்குதல்   ஈ) மதக் கடமைகள்

11th Std Political Science Tamil_Unit-2.indd 31 06/12/2022 10:42:52

www.tnschoolbooks.in

8. தமிழக அரசாங்கத்தின் எந்த தலைசிறந்த திட்டம் இந்தியாவின் பிற மாநிலங்களில் பின்பற்றப்படுகிறது?

அ) மதிய உணவு திட்டம் — ஆ) மழைநீர் சேகரித்தல்

இ) தாலிக்குத் தங்கம் திட்டம் — ஈ) பள்ளி மாணவர்களுக்கான மிதிவண்டி

9. இந்தியாவின் அரசமைப்பில் மக்கள் நல அரசு பற்றிய சிந்தனையை உள்ளடக்கிய பகுதி

அ) பகுதி IV — ஆ) பகுதி III

இ) பகுதி I — ஈ) பகுதி II

II) கீழ்வரும் கேள்விகளுக்கு மிக சுருக்கமாக பதில் அளிக்கவும்.

1. அரசியல் அறிவியல் பாடத்தின் நோக்கங்கள் யாவை?
2. நவீன அரசின் சிறப்பியல்புகளை குறிப்பிடுக.
3. ஒப்பந்த கோட்பாட்டுடன் தொடர்புடைய சிந்தனையாளர்களின் பெயர்களை எழுதுக.
4. அரசின் அடிப்படை கூறுகள் யாவை?
5. இறையாண்மையின் பண்புகளைக் குறிப்பிடுக.
6. நவீன மக்களாட்சியில் செயலாட்சித் துறை, சட்டமன்றத் துறை மற்றும் நீதித்துறையின் பணிகள் யாவை?
7. 'காலனியாதிக்க காலத்திற்குப் பிந்தைய அரசுகள்' என்றால் என்ன?
8. 'மென்மை அரசு தோன்றுவதற்கான காரணிகள் யாவை?

III) கீழ்வரும் கேள்விகளுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

1. ஹாப்ஸ், லாக் மற்றும் ரூசோவின் கருத்து சிந்தனைகளை ஒப்பிட்டு வேறுபடுத்திக் காண்க.
2. அரசு உருவாவதற்கு பங்களிக்கும் காரணிகள் யாவை?
3. அரசு மற்றும் சமுதாயம் ஆகியவற்றினை வேறுபடுத்துக.
4. அரசு மற்றும் அரசாங்கத்திற்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
5. "நவீனத்துவம்" என்பது பற்றி சிறு குறிப்பு வரைக.

IV) விரிவான விடையளிக்கவும்

1. நவீன அரசின் பணிகள் பற்றி விவரி
2. சமுதாயம், சந்தை மற்றும் அரசு ஆகியவைகளிடையே உள்ள தொடர்பினை விவாதி.
3. அரசு பற்றிய முறையான படிப்புக்கு நவீனத்துவத்தின் தாக்கத்தினால் உண்டான விளைவுகளை ஆய்க.
4. 'மக்கள் நல அரசு' என்ற கருத்து பற்றி விவரி.
5. 'மிகை மேம்பாட்டு அரசுகள்' உருவாக்கத்தில் உள்ள அம்சங்களை வெளிப்படுத்துக.

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Introduction to Political Science, R. G Gettel, Ginn and Company, New York
2. Political Theory: An Introduction, Rajesh Bhargava & Ashok Acharya, Pearson, New Delhi
3. Political Science: An Introduction, Michael G. Roskin et al, Pearson, New Delhi

11th Std Political Science Tamil_Unit-2.indd 32 06/12/2022 10:42:52

அலகு 3

அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் பகுதி–I

3.1 இறையாண்மை

அறிமுகம்

3.1.1. இறையாண்மையை பற்றி நாம் விவாதிப்போம்

ஒரு நாடு தன்னிச்சையாக, தன் மக்களைக் கட்டுப்படுத்திப் பாதுகாக்கும்போது இறையாண்மையைப் பெற்றிருப்பதாகக் கருதப்படுகிறது. அவ்வாறு செயல்படும்போது, அந்நாட்டினை அதிகாரம் வாய்ந்ததாகவும், சுயசார்புள்ளதாகவும் ஏனைய நாடுகள் அங்கீகரிக்கின்றன. இறையாண்மை என்பது **"சூப்பரானஸ்"**(superanus) என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து தோன்றியதாகும். இது ஆங்கிலத்தில் '**மிக உயர்ந்த**' அல்லது '**மேலான**' என்றும் பொருள்படுகிறது.

ரோமானிய நீதிபதிகளும், மக்களும் இடைக்காலத்தில் இறையாண்மையை **"சம்மா பொடெஸ்டாஸ்"**(Summa Potestas): என்றும் **"ப்ளெனிடியூட்பொடெஸ்டாஸ்"**(Plenitude Potestas) என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி, அரசின் மேலான தன்மையை பெயரிட்டு அழைத்தனர். அரசியல் அறிவியலில் "இறையாண்மை" என்ற சொல் போடின் என்ற அறிஞர் எழுதி 1576-ல் வெளியான குடியரசு என்ற நூலில் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டது. ஒரு நாட்டின் உறுதித்தன்மை, அந்நாட்டின் இறையாண்மையை அடிப்படையாக கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

அரசமைப்பு என்பது அரசு தொடர்பான சட்டங்களையும், விதிகளையும் எடுத்துரைக்கிறது. மேலும் அரசமைப்பு என்பது அரசின் இறையாண்மையை ப்பிரதிநிதித்துவபடுத்துவதாகும். இந்திய அரசமைப்பின் முகவுரையில் கூறப்பட்டதுபோல, இறையாண்மை என்றால், அரசு எந்த துறை சார்ந்த சட்டத்தினை உருவாக்கினாலும் அது அரசமைப்பின் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

கற்றலின் நோக்கங்கள்

6NYPC

- இறையாண்மை என்பதன் பொருள் மற்றும் பண்புகள்
- இறையாண்மையின் வகைகள் மற்றும் அம்சங்கள்
- பன்மைவாதத்தின் பொருள், மற்றும் தோற்றம்

இறையாண்மை என்றால் என்ன?

"இறையாண்மை என்பது ஒட்டுமொத்த, மற்றும் தடையில்லாத அரசின் அதிகாரமாகும். மேலும் அதீத கட்டளைத்தன்மை உடையதாகவும் காணப்படுகிறது".– **ஜீன் போடின்** (*Jean Bodin*)

3.1.2 இறையாண்மையின் பண்பியல்புகள்:

(அ) நிரந்தரமானது (Permanence)

இறையாண்மையின் முக்கிய பண்பாக அதன் நிரந்தரத்தன்மை திகழ்கிறது. அரசு இயங்கும் வரை இறையாண்மை நீடிக்கிறது. மன்னர் இறப்பதாலும், அரசாங்கம் செயல் இழந்து போவதாலும் இறையாண்மை பாதிக்கப்படுவதில்லை. இதன் எதிரொலியாகவே, "மன்னர் இறந்துவிட்டார், ஆனாலும் அரசபீடம் நீண்டு வாழ்க" என்று இங்கிலாந்து குடிமக்கள் கூறுகின்றார்கள்.

(ஆ) பிரத்தியோகமானது (Exclusiveness)

ஓர் சுதந்திர அரசில், இரண்டு இறையாண்மைகள் இயங்காது, அப்படி இருக்குமேயானால் அரசின் ஒற்றுமையானது சீர்குலைந்துவிடும்.

(இ) அனைத்தையும் முழுமையாக உள்ளடக்கியது (All comprehensiveness)

ஒவ்வொரு தனிமனிதனும் மற்றும் தனிமனிதர்கள் அங்கம் வகிக்கக்கூடிய குழுமமும் அரசின் இறையாண்மைக்கு உட்பட்டதாகும். குழுமங்கள் அல்லது சங்கங்கள் அதிக வலிமை வாய்ந்ததாக

11th Std Political Science Tamil_Unit-3.indd 33 06/12/2022 10:48:20

www.tnschoolbooks.in

இருந்தாலும், பணம் படைத்ததாக இயங்கினாலும் இறையாண்மையின் அதிகாரத்தைத் தடுக்கவோ அல்லது அதற்குக் கீழ்படியாமலோ இருக்க முடியாது.

(ஈ) மாற்றித்தர இயலாதது (Inalienability)

இறையாண்மை என்பது அரசின் உயிர் மற்றும் ஆன்மாவாக விளங்குகிறது. இது அரசை அழிக்காமல் இறையாண்மையை மாற்றித்தர முடியாததாக விளங்குகிறது.

(உ) ஒற்றுமை மற்றும் எக்காலத்திலும் நீடித்திருக்கும் தன்மை (Unity and Everlasting)

இறையாண்மையின் தனித்தன்மை அதன் ஒற்றுமையில் உள்ளது. இறையாண்மை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் செயல்படுவதில்லை. மாறாக அது அரசு இயங்கும் வரை நீடித்திருக்கும் அழியாததன்மை கொண்டதாகும்.

(ஊ) பிரிக்கமுடியாதது (Indivisibility)

இறையாண்மை என்பது பிரிக்க முடியாத தன்மையைக் கொண்டதாகும். இத்தன்மையே இறையாண்மையின் உயிரோட்டமாக விளங்குகிறது.

(எ) முழுமைத்தன்மை (Absoluteness)

இறையாண்மை என்பது நிபந்தனையற்றதாகவும், அளவிட முடியாததுமாக விளங்குகிறது. மேலும் இது கீழ்பணிதலுக்கு அப்பாற்பட்டது. தான் விரும்பிய எதையும் சாதிக்கக் கூடியதாக விளங்குகிறது.

(ஏ) சுயமானத்தன்மை (Originality)

இறையாண்மை தனது அதிகாரத்தினை சுய உரிமையினை மையமாகக் கொண்டு பெற்றிருக்கிறதே தவிர, யாருடைய தயவிலும் அல்ல.

> உங்களுக்குத் தெரியுமா?
>
> ஓர் மரமானது தான் முளை விடுவதை மாற்றித்தர முடியாததைப் போன்று இறையாண்மையையும் மாற்றித்தர இயலாது. இது ஓர் மனிதன் தன்னை அழித்துக் கொள்ளாமல் தனது உயிர் அல்லது ஆளுமையை மாற்றித் தர இயலாததைப் போன்றதாகும். **–லைபர்**

3.1.3 இறையாண்மையின் இரண்டு அம்சங்கள்:

(அ) உட்புற இறையாண்மை (Internal Sovereignty)

இவ்வகையான இறையாண்மை, ஓர் அரசுக்கு உட்பட்டு வாழும் அனைத்து தனிமனிதர்கள் அல்லது அவர்கள் சார்ந்த அனைத்து சங்கங்களையும் கட்டுப்படுத்துவதற்குரிய முழு அதிகாரத்தையும் பெற்றுள்ளது.

(ஆ) வெளிப்புற இறையாண்மை (External Sovereignty)

எளிமையாகக் கூறவேண்டுமெனில் வெளிப்புற இறையாண்மை என்பது தேசிய விடுதலையாகும். அனைத்து நாடுகளும் தங்கள் வெளியுறவு கொள்கையை நிர்ணயிப்பதற்கும், அதிகாரம் படைத்த கூட்டணியோடு இணைவதற்கும் முழு அதிகாரம் பெற்று செயல்படுகின்றன. ஒவ்வொரு அரசும் ஏனைய அரசுகளை சாராமல் சுதந்திரமாக இயங்குவது வெளிப்புற இறையாண்மை எனப்படும்.

> **குறிப்பிடத்தக்க மேற்கோள்**
>
> மக்கள் இறையாண்மை எனப்படுவது பெரும்பான்மை வாக்காளர்களின் அதிகாரமாகும். மேலும் இவ்வகை அதிகாரமானது,வாக்குரிமைசெயல்படக்கூடிய நாட்டில் வாக்காளர்கள் பல்வேறு வழிமுறைகளின் வாயிலாக வெளிப்படுத்தும் விருப்பமாகும். **– கார்னர் (Dr. Garner)**

3.1.4 இறையாண்மையின் வகைகள்

"நடைமுறை மற்றும் சட்டப்படியான இறையாண்மை"

நடைமுறை இறையாண்மை (De–facto sovereignty)

இவ்வகை இறையாண்மை சட்ட பூர்வமாக இல்லாது, உண்மையான அதிகாரத்தைப் பெற்று சட்டத்தை நிறைவேற்றும் இறையாண்மையாகும்.

சட்டப்படியான இறையாண்மை (De–jure sovereignty)

இவ்வகை இறையாண்மை உண்மையாக நடைமுறையில் இல்லாது, சட்டபூர்வமாக மட்டுமே காணப்படுவதாகும்.

11th Std Political Science Tamil_Unit-3.indd 34 06/12/2022 10:48:20

இறையாண்மையின் வகைகள்

- பெயரளவு மற்றும் உண்மையான இறையாண்மை
- சட்ட இறையாண்மை
- அரசியல் இறையாண்மை
- மக்கள் இறையாண்மை

பெயரளவு மற்றும் உண்மையான இறையாண்மை	சட்ட இறையாண்மை	அரசியல் இறையாண்மை	மக்கள் இறையாண்மை
அ) ஆதிகாலத்தில் பல அரசுகளில் முடியாட்சியே இருந்தது. மன்னர்கள் உண்மையான இறையாண்மையைப் பெற்று ஆண்டு வந்தனர்	அரசின் அதிகாரத்துவமானது இறுதிக் கட்டளைகளை வெளியிட சட்டப்படியான அதிகாரம் உண்டு.	பிரநிதித்துவ மக்களாட்சியில் அரசியல் இறையாண்மை என்பது ஒட்டுமொத்த மக்களையும் குறிப்பதாகும்.	மக்கள் இறையாண்மை என்பது பொது மக்களை மேலானவர்களாகப் பாவிக்கின்றது
ஆ) பிரெஞ்சு புரட்சி (1789) முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வந்த ஒரு வரலாற்று நிகழ்வாகும்.	சட்ட அதிகாரத்துவம் படைத்தவர்கள் மூலம் சட்டத்தை நிறைவேற்றி செயல்படுத்துவதால் இது சட்ட இறையாண்மை ஆகும்.	அரசியல் இறையாண்மை என்பது பொது மக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் பெற்ற வர்க்கத்தை குறிப்பதாகும்.	ஆதிகாலங்களில் மக்கள் இறையாண்மையானது, முடியாட்சியின் ஏதேச்சதிகாரத்தை எதிர்க்கும் ஆயுதமாக விளங்கியது.
இ) மன்னர் பெயரளவிலும், மந்திரிசபை உண்மையான இறையாண்மையையும் பெற்றிருந்தது.	சட்ட இறையாண்மை எப்போதும் உறுதியாகவும், ஆற்றல் படைத்ததாகவும் முழுமையாகவும் இறையாண்மையாளரின் அதிகாரம் பெற்றதாகவும் விளங்குகிறது.		

இங்கே ஒரு சுவாரசியமான தகவல்!

இயக்குனரகமுறை ஆட்சியமைப்பினை தூக்கி எறிந்த பின்னர், நெப்போலியன் உண்மையான நடைமுறை இறையாண்மையை (De-facto) பெற்று விளங்கினார். ஸ்பெயினில், சட்ட இறையாண்மையை வேரோடு கலைத்து, ப்ராங்கோ நடைமுறை இறையாண்மையை (De-facto) கையகப்படுத்தினார். அப்டோபர் 28, 1922-இல் நடந்த கறுப்புச்சட்டை புரட்சிக்கு பின்னர், முசோலினி சட்டப்பூர்வமான பிரதம அமைச்சராக அதிகாரம் பெற்றார். இவர் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றி அதன் மூலம் இத்தாலியை ஆட்சி செய்தார். நாடாளுமன்றம் சட்ட இறையாண்மையையும், முசோலினி நடைமுறை இறையாண்மையையும் (De-facto) பெற்று ஆட்சி அரங்கேறியது. மேலும் **ஹிட்லரும்,** ஜெர்மனியில் இச்செயல்பாட்டையே பின்பற்றினார். இவர் சட்ட இறையாண்மையை கையகப்படுத்தியதுடன் மட்டுமல்லாது, நடைமுறை இறையாண்மையைப் (De-facto) பெற்று ஆட்சி செய்தார்.

ஜான்ஆஸ்டின் (1780–1859) இங்கிலாந்து நாட்டை சார்ந்த சட்ட வல்லுனரான இவர் சட்ட இறைமைக்கு தன்னுடைய 'நீதிபரிபாலனமும் விரிவுரைகளும்' (1832) என்ற நூலில் விளக்கம் அளித்துள்ளார் இவர் ஒருமைவாத இறையாண்மை கோட்பாட்டின் தீவிர ஆதரவாளர் ஆவார்.

3.1.5 பன்மைவாதம் என்றால் என்ன?

பன்மைவாதம் என்பது ஒருமைவாத இறையாண்மைக் கோட்பாட்டை எதிர்த்து உருவான வலிமை வாய்ந்த இயக்கமாகும். இவ்வகை இறையாண்மை அரசினுடைய மேலான மற்றும் அளவில்லாத அதிகாரத்திற்கு வகை செய்கின்றது.

அரசிற்கு முன்னரே, பல சமூக, அரசியல், பண்பாடு மற்றும் பொருளாதாரம் சார்ந்த அமைப்புகள், சமுதாயத்தில் அங்கம் வகித்து இருக்கின்றன. உதாரணத்திற்கு குடும்பம் மற்றும் தேவாலயங்கள் அரசு தோன்றுவதற்கு முன்பே செயல்பட்டு வந்தன.

பன்மைவாதக் கோட்பாட்டின் சிந்தனையாளர்கள்

- ஹெரால்ட் ஜெ. லாஸ்கி (Herold J. Laski)
- ஜெ.என்.பிக்கீஸ் (J.N. Figgis)
- எர்னஸ்ட் பார்க்கர் (Ernest Barker)
- ஜி.டி.ஹெச்.கோல் (G.D.H.Cole)
- மேக் ஐவர் (Mac Iver)

பன்மைவாதக் கோட்பாட்டின் தோற்றம்

மக்கள் நல அரசானது, மக்களின் தேவைகளை நிறைவேற்றாத போது, புரட்சிகளையும், எதிர்நடவடிக்கைகளையும் சந்தித்து இருக்கிறது. இப்படிப்பட்ட எதிர்வினை என்பது மேலான மற்றும் இறையாண்மை மிக்க அரசுக்கு எதிராகத் தோன்றியதால் புரட்சி ஏற்பட்டு அதன் விளைவாகப் பன்மைவாதம் மலர்ந்தது.

பன்மைவாதம் முக்கியமானதா?

- பன்மைவாதம் என்பது, கூட்டமைப்புகளின் முக்கியத்துவத்தையும், அதன் சுயாட்சி கோரிக்கையையும் தாங்கி நிற்கிறது.
- மக்களாட்சி மலர வேண்டுமெனில், இறையாண்மை மிக்க அரசானது சட்ட அதிகாரத்துவத்திற்கு கட்டுப்படாததாக இருத்தல் அவசியமாகும்.
- இறையாண்மையில் ஏற்படும் பிரிவினைகள் என்பது அதன் அழிவுக்கு வழிவகுப்பது உறுதியாகிறது. இறையாண்மை இல்லாத தருணத்தில் சமுதாயத்தில் அமைப்பெதிர்வாத சூழலே இருக்கும்.

பன்மைவாதத்தின் மீதான குற்றச்சாட்டுகள் யாவை?

- இறையாண்மை மிக்க அரசு ஒற்றுமையை ஏற்படுத்தி, சமுதாயத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அனைத்துக் கூட்டமைப்புகளையும் ஒன்றுபடுத்தி ஒழுங்குமுறைப்படுத்துகிறது.
- பன்மைவாத நம்பிக்கைக்கு ஒவ்வாததாக அரசே சட்டங்களை இயற்றுகிறது.
- கூட்டமைப்புகளின் எண்ணிக்கை மிகுதியாக அதிகரிக்கும் பட்சத்தில், மக்களை பாதுகாப்பதற்கு அரசின் தேவை இன்றியமையாததாகிறது.

இந்திய அரசமைப்பு மற்றும் இறையாண்மை

இந்திராகாந்தி Vs ராஜ்நாராயணன்(1975) வழக்கில், "இந்தியா என்பது, இறையாண்மை பொருந்திய, மக்களாட்சிக் குடியரசு என்றும், இதுவே அடிப்படைக் கூறாக அரசமைப்பின்படி காணப்படுகிறது" என்றும் கூறியுள்ளது. மேற்கூறியவற்றின் மூலம், இந்திய அரசமைப்பின்படி இறையாண்மை என்பது அரசமைப்பின் முக்கிய அம்சமாக விளங்குவதுடன் முகப்புரையின் மூலமாக மக்களே இறையாண்மை மிக்கவர்கள் என்பது தெரியவருகிறது. சுருங்கக்கூறின், இறையாண்மை என்பது அரசமைப்பைச் சார்ந்துள்ளது. மக்களே அத்தகைய அரசமைப்பின் இறுதி ஆதாரமாக விளங்குகின்றனர்.

11th Std Political Science Tamil_Unit-3.indd 36 06/12/2022 10:48:21

3.2 சமத்துவம்

அறிமுகம்

சமத்துவத்தினை புரிந்து கொள்ளுதல்

மனிதர்கள் அனைவரும் சமம் என்ற கருத்து இன்று வரை புரியாத புதிராகவே விளங்குகிறது. சமத்துவத்தை விரும்புகின்ற நாடானது சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சட்டங்களை உருவாக்குகிறது. வளர்ந்த நாடானாலும், வளர்ச்சிகுன்றிய நாடானாலும், சமத்துவம் தொடர்பான சட்டம் போதுமானதாக இல்லை. பன்மைத்துவ சமுதாயம் நிலைநாட்டப்பட்டுவிட்டதால் சமத்துவ சட்டம் அதிகமாக எதிர்க்கப்படுகிறது. அரசியல் கோட்பாட்டில் அமைந்துள்ள சுதந்திரம் மற்றும் உரிமைகள் என்ற கொள்கைகள் சமத்துவம் என்ற மூன்றாவது கொள்கை அமைவதற்கு காரணமாக உள்ளன. உரிமைகள் என்பவை குடிமக்களுக்கும், மக்கள் குழுமங்களுக்கும் அரசால் விநியோகம் செய்யப்படுவதை சமத்துவ கொள்கையே நிர்ணயிக்கிறது.

கற்றலின் நோக்கங்கள்

- சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாத கற்பனைவாத நம்பிக்கையாகத் தெரிந்தாலும் அதனைப் புறக்கணிக்கும்பட்சத்தில், அமைப்பெதிர்வாதமும், குழப்பமும் ஏற்பட்டு மக்கள் நல அரசு என்பது பொருளற்றதாகிவிடும்.
- மாறுபட்ட பின்னணியிலிருந்து படிக்கும் மாணவர்களுக்கு சமத்துவம், சமத்துவமின்மை, சமூகம் பற்றிய கருத்துகளை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது.
- பெண்கள், சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்டோர், மாற்று மொழி சார்ந்த குழுமங்கள், போன்றோரின் சமத்துவத்திற்கான போராட்டங்களின் தேவையினை கண்டறிதல்.
- தேசத்தின் குடிமகனாக நீதியை நிலை நாட்டி சமத்துவத்தை உருவாக்க தனிமனிதர்களின் பங்கேற்பினை மேம்படுத்தவும், தேசிய இலக்காக இதை நிர்ணயிப்பது அவசியமாகும்.

3.2.1 சமத்துவம் என்பதன் பொருள்

சமத்துவம் என்பது "இக்குவாலிஸ்" (aequalis) என்ற வார்த்தையிலிருந்து உருவானதாகும். இது "நியாயமான" என்று பொருள்படுகிறது. ஒரே மாதிரியான உரிமைகள், சலுகைகள், நிலைகள், வாய்ப்புகள் மற்றும் நடத்தப்படும் முறைகள் போன்றவை, சமூகத்தில் மக்களுக்குச் சமமான உரிமையுடன் கிடைத்தல் ஆகியவை சமத்துவத்தை குறிப்பதாகும். மேலும் சமத்துவம் பங்கீட்டு கொள்கையாக பாவிக்கப்பட்டு உரிமைகள், வாய்ப்புகள், நடத்தும் முறைகள் ஆகியவை பயனாளிகளுக்கு நியாயமான முறையில் வழங்கப்படுதலைக் குறிக்கிறது.

மேலும் பங்கீட்டுக் கொள்கை என்பது, அனைவரையும், அனைத்து சூழ்நிலைகளிலும் ஒரே மாதிரியாக நடத்துவதல்ல, மாறாக சமமாக இல்லாதவர்களை சமமற்ற வகையில் நடத்துதலும் சமத்துவ கொள்கையில் ஒரு அம்சமாகும். ஆகவே சமத்துவம் என்பது சம நீதியை அடிப்படையாக கொண்டதாகவும் விளங்குகிறது.

3.2.2. சமத்துவத்தின் முக்கியத்துவம்

ஏன் சமத்துவம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது?

சமத்துவ கொள்கையானது, மனிதர்களை, நிறம், பாலினம், இனம், தேசம் போன்றவைகளின் பாகுபாடு காட்டாமல் சமமான மதிப்புடன் நடத்தும் அரசியல் லட்சியமாக சமத்துவம் விளங்குகிறது. மனிதநேயம் எவ்வாறு பொதுவானதோ, அதே போன்று சகமனிதர்களை மரியாதையுடனும், மனிதாபிமானத்துடனும் நடத்த வேண்டியது அவசியம் என சுதந்திரம் வலியுறுத்துகிறது. இம்மனிதநேய நம்பிக்கையே அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் உருவாக காரணமாக அமைந்தது.

சமூக அமைப்புகளையும், அரசுகளையும் எதிர்த்துப் போராட சமத்துவ முழக்கம் மிகவும் உதவிகரமாய் இருந்தது. ஏனெனில் நவீனயுகத்தில் பணி, செல்வவளம், நிலை மற்றும் சலுகை அடிப்படையில் தற்பொழுதும் பிரிவினை இருக்கத்தான் செய்கிறது.

www.tnschoolbooks.in

காட்சிகளை விவாதிக்கவும்

18-ஆம் நூற்றாண்டில் நிலப்பிரபுத்துவ ஆட்சியையும், முடியாட்சியையும் எதிர்த்து, "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற முழக்கத்தை பிரெஞ்சு புரட்சியாளர்கள் ஓங்கி முழங்கினர். 20-ஆம் நூற்றாண்டில் ஆசிய மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களில், சமத்துவக் கொள்கையை நிலைநாட்டக் காலனியாதிக்கத்திற்கு எதிராக புரட்சி நிகழ்த்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, மேற்கூறிய சமுதாயங்களில் விளிம்பு நிலைக்குத்தள்ளப்பட்டவர்களும், பெண்களும் தங்களின் சமத்துவத்திற்காக புரட்சியை மேற்கொண்டனர்.

சமத்துவம் என்பது தற்பொழுது உலகெங்கிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாபெரும் லட்சியவாதமாக உலக அளவில் சட்டங்களிலும், அரசமைப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான புரட்சிகளும், எழுச்சிகளும் ஆங்காங்கே எழுந்தபோதிலும் சமத்துவமின்மை என்பது உலக சமுதாயத்தில் தற்பொழுதும் உள்ளது என்பதே வெளிப்படையான உண்மை ஆகும். அனைத்து நாடுகளிலும் வீடு மற்றும் வசதிமிக்க வாழ்க்கைக்கு நடுவே சரிவர பாரமரிக்கப்படாத கழிவறைகளும், குடிநீரற்ற நிலையும் கொண்ட பள்ளிகள் உள்ளன. உணவை வீணடிக்கும் சிலரும், பசிக்கொடுமையால் வாடும் சிலரும் இருக்கின்ற நிலை பலவித சங்கடங்களை அளிக்கிறது. சட்டப்படியான உத்திரவாதங்களுக்கும், நடைமுறையில் நாம் பார்ப்பவற்றிற்கும் இடையே நிறைய வேறுபாடுகளைக் காணலாம்.

இந்தியா, தன் அரசமைப்பின் மூலமாக பணக்காரவர்க்கத்திற்கும், ஏழை வர்க்கத்திற்கும் இடையேயான இடைவெளியினை குறைப்பதற்கு இயன்ற வரையில் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

3.2.3. சமத்துவத்தின் பரிமாணங்கள்

சமத்துவம் என்றால் என்ன?

மனித வாழ்க்கையானது பல்வேறு வேற்றுமைகளுக்கிடையில் அமைந்துள்ளது. மனிதர்களுக்கிடையே நிறம், இனம் போன்ற வேற்றுமைகள் இருப்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. மனசாட்சியின் அடிப்படையில் தவறானது என தெரிந்தபோதிலும், சக மனிதர்களிடையே மரியாதையும், அங்கீகாரமும் மறுக்கப்படுவது வேதனைக்குரிய நிகழ்வு ஆகும். எந்த ஒரு சமுதாயமும் அனைத்து மக்களையும் சரிசமமாக

11th Std Political Science Tamil_Unit-3.indd 38 06/12/2022 10:48:21

www.tnschoolbooks.in

நடத்துவது இல்லை. மனிதர்களுக்கிடையேயான தேவைகள், திறமைகள் மாறுபடுகின்ற பொழுது அனைத்து மக்களையும் சரிசமமாக பார்ப்பதும், பாவிப்பதும் இயலாததாகக் கருதப்படுகிறது. சமமாக உள்ளவர்கள் சமமில்லாமல் நடத்தப்படுவதும், சமமில்லாதவர்களை சமமாக நடத்துவதும், அநீதிக்கு வழி வகுக்கின்றன. இயற்கை அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்பாற்பட்டு சமூக ரீதியான பிறப்பு, செல்வவளம், அறிவு, மதம் போன்றவைகளில் சமத்துவமின்மை காணப்படுகிறது.

எவ்வித வரலாற்றின் இயக்கமும், சமத்துவத்தை நோக்கி செல்வது இல்லை. ஏனெனில் ஓர் ஏற்றத்தாழ்வு நிலையை சரிசெய்கின்றபோது மற்றொரு ஏற்றத்தாழ்வு நிலை உருவாகுகிற சூழ்நிலை நிலவுகிறது. இதன் விளைவாக அறியப்படுவது என்னவென்றால், அழிக்கப்படுகின்ற ஏற்றத்தாழ்வுநிலை நியாயமற்றதாகவும், புதியதாக உருவாக்கப்படுகின்ற நிலை நியாயமானதாகவும் கருதப்படுகிறது. இதனால் அரசியல், சமூக மற்றும் கல்வி சமத்துவத்தை வலுப்படுத்தவும், ஒருமுகப்படுத்தவும், புதிய தலைமுறை கடமைப்பட்டிருக்கிறது. சுதந்திரத்தைபோன்று, சமத்துவ கொள்கையும் நேர்மறை மற்றும் எதிர்மறை கோணங்களையும் பெற்று விளங்குகிறது. எதிர்மறை சமத்துவம் என்பது யாருக்கும் எந்தவித சலுகைகளும் காட்டாத சமூக நிலையையும், நேர்மறை சமத்துவம் என்பது அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் உள்ள சமூக நிலையையும் பற்றியதாகும்.

லாஸ்கியின் (Laski) கூற்றுப்படி சமத்துவத்தின் விளக்கம்

- இது சலுகைகள் இல்லாத நிலையாகும். இது சமுதாயத்தில் வாழும் ஒருவருடைய விருப்பமானது வேறொருவருடைய விருப்பத்திற்கு சமமாக கருதப்படுகின்ற சூழ்நிலை ஆகும். சமுதாயத்தில் வாழும் அனைவருக்கும் உரிமைகள் சமமானதாக வழங்கப்படும். இதுவே சமத்துவ உரிமை ஆகும்.
- போதுமான வாய்ப்புகள் அனைத்து மக்களுக்கும் வழங்கப்படுதல். ஒவ்வொரு தனிமனிதனும் தன் ஆளுமைத்தன்மையை உணருவதற்கு வாய்ப்பான சூழ்நிலைகளை உருவாக்கித்தருதல்.
- சமூகத்தின் பலன்கள் அனைவருக்கும் சமமான அளவில் கிடைக்கும்படியாகவும், எந்தவொரு அடிப்படையிலும் யாரையும் இதனை அடையவிடாமல் தடுக்கக்கூடாது. ஒரு மனிதனின் பிறப்பினை அடிப்படையாகக் கொண்ட ஏற்றத்தாழ்வுகள், ஆகியவை பாரம்பரியம் மற்றும் மரபுவழி காரணங்களின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் அர்த்தமற்றவையாகும்.
- பொருளாதார மற்றும் சமூக சுரண்டல் இல்லாத சமுதாயமாக விளங்குதல்.

பெருமளவில் இருக்கக்கூடிய ஏழை வர்க்கமும், சிறியளவில் வாழும் பணக்காரவர்க்கமும் உள்ள அரசில்,அரசாங்கத்தின் செயல்பாடுகள் பணக்கார வர்க்கத்தின் உடைமைகளை பாதுகாக்கும் பொருட்டே அமையும்.

– ஹெரால்ட் லாஸ்கி (Herold Laski)

பார்க்கரின் கூற்றுப்படி சமத்துவம்:

- அனைவருக்கும் அடிப்படை சமத்துவம்
- சமமான வாய்ப்புகள்
- வாழ்வுக்கான சமதளத்தை உருவாக்கும் சமத்துவ நிலைகள்
- விளைவுகளின் அடிப்படையில் சமத்துவத்தினை ஏற்படுத்துதல்

வாய்ப்புகளில் சமத்துவம்

சமத்துவம் என்பது அனைத்து மக்களுக்கும் சம உரிமைகளையும், வாய்ப்புகளையும் அளித்து அவர்களின் இலக்குகள் மற்றும் இலட்சியங்களை அடைவதற்குண்டான திறமைகளையும், திறன்களையும் வளர்ப்பது ஆகும்.

இயற்கை சமத்துவமின்மை மற்றும் சமூக சமத்துவமின்மை

இயற்கை சமத்துவமின்மை என்பது மக்களுக்கு இடையேயான திறன் மற்றும் திறமைகளுக்கு இடையேயான வேறுபாட்டினால் உருவாகிறது. இது போன்ற சமூக

11th Std Political Science Tamil_Unit-3.indd 39 06/12/2022 10:48:22

சமத்துவமின்மையானது, மக்களுக்கு வழங்கப்படும் சமமில்லாத வாய்ப்புகள் மற்றும் சில சமுதாயக் குழுக்களினுடைய சுரண்டலின் மூலமாக உண்டாக்கப்படுகிறது. இயற்கை சமத்துவமின்மை என்பது பிறப்பிலிருந்து உருவாகின்ற பல இயல்புகள் மற்றும் திறமைகளின் வெளிப்பாடாகும்.

ஆனால் சமூக சமத்துவமின்மை என்பது சமுதாயத்தினால் சமமற்றமுறையில் நடத்தப்படுவதால் உண்டாக்கப்படுகின்ற நிலையைக் குறிக்கின்றது. மேலும் இவ்வகை சமத்துவமின்மை என்பது இனம், ஜாதி, மதம், பாலினம், நிறம் போன்றவற்றின் அடிப்படையில் சமுதாயத்தில் மக்களை வேற்றுமைப்படுத்தி நடத்துவதால்உருவாகிறது.பலநூற்றாண்டுகளாக பெண்களுக்கான சம உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அதேபோல, அடிமைத்தனம் பற்றிய எதிர்க்கேள்வி கேட்கப்படும்வரை, கறுப்பின மக்கள், அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். மேலும் பிறப்பிலேயே உடல் ஊனமுற்றோராக பிறந்த சிலர் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவி கொண்டு இயல்பான மக்களுக்கு சமமாக சமூகத்திற்கு தங்களின் பங்களிப்பினைச் செய்கின்றனர். சமீபத்தில் மறைந்த ஸ்டீபன் ஹாக்கிங்ஸின் இயற்பியல் கல்விக்கான பங்களிப்பு, அவருடைய உடல் ஊனத்தையும் தாண்டிய குறிப்பிடத்தகுந்த பங்களிப்பாகும். அரசியல் தத்துவஞானிகள் பலர் தங்களின் கோட்பாடுகள், தத்துவங்கள் மற்றும் சித்தாந்தங்கள் மூலமாக சமமான மற்றும் நியாயமான சமூகத்தினை உருவாக்கும் வழிமுறைகள் பற்றி எழுதியுள்ளனர்.

பின்வரும் கேலிச்சித்திரத்தை உற்றுநோக்கி அதில் காணப்படும் சமத்துவமின்மையின் வகைகளை விவரி.

சமத்துவத்தின் வகைகள்

- சமூக சமத்துவம்
- குடிமை சமத்துவம்
- அரசியல் சமத்துவம்
- இயற்கை சமத்துவம்
- பொருளாதார சமத்துவம்

சமத்துவத்தின் வகைகள்

சமூக சமத்துவம்
- சமமான வாய்ப்புகள்
- சலுகைகள்

குடிமை சமத்துவம்
- மதம், மற்றும் நம்பிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு இல்லாதிருத்தல்.

அரசியல் சமத்துவம்
- அதிகாரத்துவத்தை அணுகுவதற்கான வாய்ப்பு
- வாக்குரிமை

இயற்கை சமத்துவம்
- இயற்கை உரிமைகள்

பொருளாதார சமத்துவம்
- செல்வ வளம்

சமத்துவத்தின் வகைகள் (Types of Equality)

அ) சமூக சமத்துவம்

சமூக சமத்துவம் என்பது பிறப்பு, சாதி, மதம், இனம், நிறம், பாலினம் மற்றும் சமூக நிலை அடிப்படையாக கொண்டு உரிமைகள், சலுகைகள் மற்றும் வாய்ப்புகளை வழங்குவதல், பாகுபாடில்லாத சமூக அமைப்பு போன்றவை ஆகும். ஒவ்வொருவருக்கும், தங்கள் ஆளுமைகளை மேம்படுத்துவதற்கு சமமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். சமூக சமத்துவம் என்பது சில முக்கிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. அவை, சமூக நிலையை அடிப்படையாக கொண்ட பாகுபாட்டினை நீக்குதல், சிலருக்கு மட்டுமே உரித்தான சிறப்புச் சலுகைகளை நீக்குதல் மற்றும் அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவது ஆகியவை ஆகும்.

11th Std Political Science Tamil_Unit-3.indd 40 06/12/2022 10:48:24

பிரான்சு நாட்டின் "மனிதர்கள் மற்றும் குடிமக்களின் உரிமைப் பிரகடனம்" குறிப்பிடுகையில், "மனிதர்கள் சுதந்திரமாக பிறந்த உடன் எப்பொழுதும் சுதந்திரமான மற்றும் சமமான உரிமைகளை பெற்றிருக்கிறார்கள்" என்று கூறுகிறது. 1948, டிசம்பர் 10–ஆம் நாளன்று வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் அச்சபையின் மனித உரிமைகள் பிரகடனம் உலகமக்களின் சமூக சமத்துவத்தை உறுதி செய்துள்ளது.

அகிம்சை அடிப்படையிலான அமெரிக்க குடிமை உரிமைகள் இயக்கத்தின் ஈடுஇணையற்ற தலைவராக மார்ட்டின் லூதர்கிங் ஜுனியர் கருதப்படுகிறார். 1950 மற்றும் 1960–களில் சமூக நீதிக்காக கறுப்பினத்தவர்கள், அமெரிக்காவில் ஏற்படுத்திய சம உரிமைகளைப் பெறுவதற்கான புரட்சியே குடிமை உரிமைகள் இயக்கமாகும். இந்தியாவில் டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் துவங்கிய கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான இயக்கமானது வரலாற்று சிறப்புமிக்கதாக இந்தியாவில் கருதப்படுகிறது. மேலும் இவ்வியக்கம் சமூக சமத்துவத்திற்கான விதையாகும்.

ஆ) குடிமை சமத்துவம்

சிவில் என்கின்ற வார்த்தை சிவில்ஸ் (Civils) அல்லது சிவிஸ் (Civis) என்ற லத்தீன் மொழிச்சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டு ஆங்கிலத்தில் "குடிமக்கள்" எனப்பெயர் பெறுகிறது. குடிமை சமத்துவம் எனப்படுவது சமமான குடிமையுரிமைகளும், பிற சுதந்திரங்களும் ஒரு குடிமகனுக்குத் தரப்படுவதாகும். குடிமை சமத்துவம் என்பது அனைத்து குடிமக்களுக்கும் ஒரே மாதிரியான குடிமை சுதந்திரங்கள் மற்றும் குடிமை உரிமைகளை உள்ளடக்கியதாகும் சமுதாயத்தில் உயர்த்தோர், தாழ்த்தோர், ஏழை ,பணக்காரர், ஜாதி, இன, மத அடிப்படையில் வேறுபாடு காட்டுதல் கூடாது என்பதாகும்..

விவாதம்



'சட்டத்தின் ஆட்சி எவ்வாறு குடிமை சமத்துவத்துடன் தொடர்புடையது?'

இ) அரசியல் சமத்துவம்

அரசின்நடவடிக்கைகளில்பங்குபெறுவதற்கு எத்தகைய பாகுபாடுமின்றி அனைத்து மக்களுக்கும் அளிக்கப்படும் சமமான உரிமைகள் அரசியல் சமத்துவம் எனப்படுகிறது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்பதன் மூலம் இந்த அரசியல் உரிமை உறுதி செய்யப்படுகிறது.

குடிமக்களின் அரசியல் உரிமைகளை உறுதி செய்யும் பிற காரணிகள்

- வாக்குரிமை
- தேர்தலில் போட்டியிடும் உரிமை
- அரசாங்கப்பதவிகளை வகிப்பதற்கான உரிமை.
- அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக மனு செய்தல் மற்றும் பொது கொள்கைகள் மீதான விமர்சனம் செய்யும் உரிமைகள்.

அரசியல் சமத்துவம் என்பது உண்மையில் மக்களாட்சி பரிசோதனைகளுக்கான தேர்வாகும். அரசியல் அதிகாரத்தை மக்களிடையே பரவ செய்வதற்கு அரசியல் சமத்துவம் மட்டுமே போதாது. மேலும் சமூக, பொருளாதார சமத்துவம் என்பது அரசியல் சமத்துவத்தை அடைய அவசியமாகிறது.

ஈ) இயற்கைச் சமத்துவம்

மனிதன் பிறக்கும்போதே ஜாதி, மதம், இனம், மொழி, நிறம், பால், பிறப்பிடம், மற்றும் இருப்பிடம் போன்ற ஏற்றத்தாழ்வு இன்றி இருக்கும் நிலையே இயற்கை உரிமை என்கிறோம்

உ) பொருளாதார சமத்துவம்

பொருளாதார சமத்துவம் என்பதை அனைத்து மக்களும் தங்களை முழுமையாக மேம்படுத்திக் கொள்வதற்கு நியாயமான வாய்ப்புகள் இருந்தால் மட்டுமே நியாயப்படுத்த இயலும். தகுந்த வேலைவாய்ப்பு, உரிய கூலி, போதுமான ஓய்வு, மற்றும் பொருளியல் மேலாண்மையில் சமபங்கு ஆகிய இவையனைத்தும் பொருளாதார சமத்துவத்தினை அர்த்தமுள்ளதாக்குகின்றன.

பேராசிரியர் லாஸ்கி பொருளாதார சமத்துவத்தை பற்றி கூறும் பொழுது "அரசியல் சமத்துவம் என்பது பொருளாதார சுதந்திரமின்றி, மெய்மையாவதில்லை என்றும் அப்படியில்லாத நிலையில் வழங்கப்படும் அரசியல் அதிகாரம் என்பது பொருளாதார அதிகாரத்தின்

கைப்பாவையாகும்" என்று கூறுகிறார்.

இங்கு பொருளாதார சமத்துவம் என்பது சமமான வாய்ப்புகளை அனைத்து மக்களுக்கும் அளிக்கும் போது பொருளாதாரம் மேம்பாடு அடையும் எனப் பொருள்படுகிறது. மேற்கூறிய முறையானது சமதர்மத்தில் சாத்தியமாகுமேயன்றி லட்சியவாதத்தின் அடிப்படையில் முதலாளித்துவத்தில் நடக்காது எனலாம்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

செல்வ வளங்களில் உள்ள வேறுபாடுகளை அகற்றி, ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், நாட்டின் வளமைகளில் சமமான பங்கை அளிப்பது பொருளாதார சமத்துவமாகும்". **– ப்ரைஸ் பிரபு**

நிகழ் ஆய்வு

பொருளாதார சமத்துவமின்மையும், அரபு நாடுகளில் எழுச்சியும்

ஒரு நாட்டின் நிலைத்தன்மைக்கு வறுமை என்னும் பிரச்சனை அச்சுறுத்தலாக இருக்கிறது. உதாரணத்திற்கு துனீஷியாவில் நடைபெற்ற 'மல்லிகைப்' புரட்சியில் ஆச்சரியப்படும் விதமாக, அந்நாட்டு மக்கள் ஏதேச்சதிகார ஆட்சியை எதிர்த்தது அரபு உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 29 நாட்கள் நடந்த புரட்சியில், அந்நாட்டில் 23 வருடங்கள் ஆட்சி செய்த 'பென் அலி' என்பவரின் சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. முஹமத் புவாஸ்ஸி என்ற வேலைவாய்ப்பு கிடைக்காத மனிதரை காவலர்கள் துன்புறுத்தியதால் அவர் டிசம்பர் 17, 2010–ஆம் நாள், சிடி புஸித் என்ற துனீஷிய நகரத்தில் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டது ஒட்டுமொத்த புரட்சிக்கு வித்திட்டது. மக்கள் இதன் விளைவாக "மல்லிகைப் புரட்சியை" தொடங்கினார்கள். (மல்லிகை, துனிஷியாவின் தேசிய மலராகும்). பொருளாதார வாய்ப்பில்லாமை, மற்றும் தொடர்ச்சியான காவலர் துன்புறுத்தலிலும் சிக்கித் தவித்த, அந்நகரத்து மக்கள், "ஒரு கையில் அலைபேசியையும், மற்றொன்றில் பாறையையும்" கொண்டு புரட்சியை மேற்கொண்டனர்.

கோபம், விரக்தி, இணக்கமற்ற சூழ்நிலை மற்றும் மக்களாட்சி கோரிக்கைக்கான ஒன்றிணைந்த இந்த அலையானது அரபு நாடுகள் அத்தனையையுமே உலுக்கியது. அரபு உலகத்தில் எழுந்த இந்த கிளர்ச்சிப் போராட்டம் மக்களாட்சிக்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையே நடந்த போராட்டம் மட்டுமல்ல. மாறாக இப்புரட்சியானது நியாயமற்ற பொருளாதார முறைமையை எதிர்த்து உண்டான மாபெரும் எதிர்ப்புப் புரட்சியாக அமைந்தது.

நன்றி – ப்ரெண்ட்லைன், பிப்ரவரி 26, 2011.

ஊ) வாய்ப்பு மற்றும் கல்வியில் சமத்துவம் :

வாய்ப்பு மற்றும் கல்வியில் சமத்துவம் என்பதன் பொருள் அரசு என்பது அனைத்து மக்களுக்கும் சமமான மற்றும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் அளிக்க வேண்டும் என்பதாகும். அனைத்துக் குடிமக்களுக்கும் தங்களது ஆளுமைகளை மேம்படுத்திக் கொள்வதற்காக சமமான மற்றும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் அரசினால் அளிக்கப்படவேண்டும். சாதி, மதம், இனம், மொழி, ஏழை, பணக்காரர், பாலினம் போன்றவற்றை அடிப்படையாக கொண்ட பாகுபாடுகள் நீக்கப்பட வேண்டும். இந்திய அரசமைப்பு அனைத்து மக்களுக்கும் சமமான வாய்ப்புகள் மற்றும் சமமான கல்வியை அளிக்கிறது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

"பசியோடு வாழும் ஒரு மனிதனுக்கு சுதந்திரம் என்ன நன்மையை அளிக்கமுடியும்? அவனால் அந்த சுதந்திரத்தை சாப்பிடவோ அல்லது குடிக்கவோ முடியாது. **– தாமஸ் ஹாப்ஸ்**

3.2.4 சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும் இடையேயான உறவுகள்:

சமத்துவம் இல்லாமல் சுதந்திரத்திற்கு எந்தவொரு விழுமியமும் கிடையாது. இவற்றை பல்வேறு பார்வைகளில் புரிந்து கொண்டு அரசியல் சிந்தனையாளர்களான ஆக்டன் பிரபு, டி டாக்வில், ஹெரால்டு லாஸ்கி

11th Std Political Science Tamil_Unit-3.indd 42 06/12/2022 10:48:24

www.tnschoolbooks.in

(Lord Acton, De Tocqueville and Harold J.Laski) போன்றோர் அறிவார்ந்த விளக்கங்களை அளித்துள்ளனர்.

வேறுபடுத்தி நடத்துதல் மூலம் எவ்வாறு சமத்துவம் அடையப்படுகிறது?



ஆக்டன் பிரபு, டி டாக்வில் (Lord Acton, De Tocqueville) போன்ற அறிஞர்கள் சுதந்திர கொள்கையின் ஆதரவாளர்கள் ஆவர். 'சுதந்திரம் இருக்குமிடத்தில் சமத்துவம் இருக்காது எனவும் அதே போல சமத்துவம் இருக்கும் இடத்தில் சுதந்திரம் இருக்காது' என்பது மேற்கூறிய சிந்தனையாளர்களின் கருத்து ஆகும். ஹெரால்ட் லாஸ்கி சுதந்திரத்தை பற்றி கூறும்பொழுது, "சுதந்திரமும், சமத்துவமும் ஒன்றுடன் ஒன்று இணைந்து இருப்பது நல்லியல்பு" என கூறுகிறார். மேலும் அவர் கூறும் பொழுது தடையற்ற சுதந்திரம் அளிக்கப்படும்போது, தனிமனிதர்கள் சக மனிதர்களுக்கு தீங்கு இழைக்கிறார்கள். இவ்வகை சுதந்திரம் சமுதாயத்தில் குழப்பத்தை உண்டாக்குகிறது என்கிறார். 19-ஆம் நூற்றாண்டில், தனிமனிதத்துவவாதிகள் "சுதந்திரத்திற்கு" தவறான வரையறையை அளித்துவிட்டார்கள். அவர்கள் பொருளாதார சமத்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் அரசாங்கத்தின் தாராளமயக் கொள்கைக்கு மட்டுமே அழுத்தம் அளித்தார்கள் என்று ஹெரால்ட் லாஸ்கி கூறுகிறார்.

மேலும் ஹெரால்ட் லாஸ்கி, கூறுகையில் "எங்கு பணக்கார வர்க்கம் – ஏழை வர்க்கம், படித்தவர்கள் – படிக்காதவர்கள் என்ற பிரிவினை இருக்கிறதோ, அங்கு கண்டிப்பாக முதலாளி, பணியாளர் என்ற வகுப்புவாத நிலையினை காணமுடியும் என்று தெரிவித்துள்ளார்.

"தனியாருக்கு இடையேயான பரிமாற்றங்கள் அரசாங்க தலையீடுகளான கட்டுப்பாடு, சலுகைகள், வரி, மானியம் போன்றவை இல்லாமல் சுமூகமாகவும், சுதந்திரமாகவும் நடக்கும் பொருளாதார முறைமையே தாராளமயக் கொள்கை (Laisszr Faire) எனப்படும்."

மற்றுமொரு பொருளாதார நிபுணரான ஆடம் ஸ்மித், "முதலாளிகளுக்கும், தொழிலாளர் சங்கத்தலைவர்களுக்கும் இடையே சுதந்திரமான போட்டி நிலவ வேண்டும்" என்ற தனிமனிதத்துவவாதிகளின் கூற்றை ஆதரிக்கிறார். அரசாங்கமானது, பொருளாதாரம் தொடர்பான விவகாரங்களில் தலையிடுவதை தனிமனிதத்துவவாதிகள் விரும்புவதில்லை. அரசாங்கத்தினால் தேவை-வழங்கல் சூத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொருளாதாரம் தொடர்பான பிரச்சினைகள் இந்த சூத்திரத்தின் மூலமாக நீங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஐரோப்பாவில் இதன் மூலம் ஆபத்தான விளைவுப்பயன்களை சந்திக்க நேரிட்டது.

முதலாளிவர்க்கமானது வாய்ப்புகள் அனைத்தையும் அதிகபட்சமான சுரண்டலுக்குப் பயன்படுத்தினால், ஏழை வர்க்கத்திற்கும், பணக்காரவர்க்கத்திற்குமான இடைவெளி பெரிதும் அதிகமாகிறது. இதனால் உழைக்கும் வர்க்கம் அதிகம் பாதிக்கப்படுவதால் உண்டான பின்விளைவு, தனிமனிதத்துவத்தினை எதிர்க்கவும் அதனால் சமதர்மம் உதயமாகவும் காரணமாகிறது. இவ்வாறு எழுச்சிபெற்ற சமதர்மமானது தனிமனிதத்துவவாதத்தின் கொள்கைகளை மறுக்க ஆரம்பித்தது. இந்த மாற்றம் "பொருளாதார சமத்துவமில்லாமல் சுதந்திரம் என்பது பொருளற்றது" என்ற நிலை உருவாக காரணமாக அமைந்தது.

அரசியல் சுதந்திரம் ஏற்படுவதற்கு பொருளாதார சமத்துவம் மிகவும் அத்தியாவசியமாகிறது. இது சாத்தியம் இல்லாதபோது, அரசாங்கமுறையானது முதலாளித்துவ மக்களாட்சியாக மாறி அதன் விளைவாக தொழிலாளர் வர்க்கம் என்பது வாக்குரிமையை மட்டுமே பெற்று, அதன் மூலம் அவர்களுக்கு எந்தவித பயனுமில்லாமல் போகும் சூழ்நிலை உருவாகும். சுதந்திரமும்,

11th Std Political Science Tamil_Unit-3.indd 43 06/12/2022 10:48:26

சமத்துவமும் சமதர்ம மக்களாட்சியில் மட்டுமே ஒன்றோடு ஒன்றாக இணைந்து பயணம் செய்ய முடியும். சுதந்திரத்திற்கு ஒரே ஒரு தீர்வுதான் உண்டு. அது என்னவெனில் சமத்துவம் மட்டுமே. "இதனால் சுதந்திரமும், சமத்துவமும் ஒன்றுடன் மற்றொன்று நெருக்கம் பாராட்டுகின்றன" என்று கூறுகிறார் **பொல்லார்டு.**

சமத்துவத்தை எவ்வாறு ஊக்குவிக்கலாம்?

சுதந்திர வாதிகளுக்கும், சமதர்மவாதிகளுக்கும் இடையேயான வேறுபட்டை நாம் உணரும்பட்சத்தில், சமத்துவ இலக்கை அடையும் வழிமுறையும் நமக்கு தெளிவடைகிறது. பின்வரும் சமத்துவத்தை ஊக்குவிக்கும் வழிமுறைகளைப் பற்றிய பரந்த விவாதம் நம்மை சில முறைகளுக்கு வழிகாட்டுகிறது. அவற்றினைப் பற்றி தெரிந்து கொள்வோம். அவைகள்,

- முறைசார்ந்த சமத்துவத்தை உருவாக்குதல்
- வேறுபடுத்தி நடத்துதலின் மூலம் சமத்துவத்தை ஏற்படுத்துதல்
- உடன்பாடான நடவடிக்கைகள் மூலம் சமத்துவம்

ஆண்ட்ரூ ஹேவுட் (Andrew Heywood) கூறும் பல்வேறுவகை சமத்துவ லட்சியங்களைப் பற்றிய பார்வை:

சுதந்திரவாதிகள்

சுதந்திரவாதிகள், நம்புவது என்னவெனில் பிறக்கும்போது அனைத்து மக்களும் சமமாவர். இவர்கள் நீதிநெறி அடிப்படையில் சமமாக கருதப்படுகிறார்கள். இது முறையான சமத்துவத்தை உணர்த்துவதாகவும், குறிப்பாக சட்ட மற்றும் அரசியல் சமவாய்ப்புரிமை என்றாலும், சமூக சமத்துவம் என்பது சுதந்திரத்தை தியாகம் செய்து பெறக்கூடியதாகும்.

பழமைவாதிகள்

சமூகம் இயற்கையிலேயே படிநிலை அமைப்புடையது என்றும், சமத்துவம் என்பதை எப்போதுமே அடைய முடியாத ஒரு கற்பனை இலக்காக கருதுகின்றனர்.

சமதர்மவாதிகள்

சமதர்மச் சிந்தனையாளர்கள் சமத்துவத்தை அடிப்படையான விழுமியமாகவும், அதிலும் குறிப்பாக சமூக சமத்துவத்தை முக்கியமாக ஒப்புக் கொள்கிறார்கள். சமூக மக்களாட்சி தொடர்பான கருத்தாக்கத்தில் பல பரிமாணங்கள் இருந்தாலும், இவ்வகையான சமத்துவம் நிச்சயமாக சமூக ஒருங்கிணைப்பிலும், சகோதரத்துவத்திலும் கால்தடம் பதிக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

அமைப்பெதிர்வாதிகள்

இவ்வகை கொள்கைவாதிகள் அரசியல் சமத்துவத்தை மையப்படுத்தி தங்கள் கருத்தாக்கத்தை வலிமைப்படுத்தியுள்ளார்கள். அரசியல் சமத்துவம் தனிநபர் சுதந்திரத்தை வழங்கும் என்றும், அனைத்து விதமான அரசியல் சமத்துவமின்மையும் எதிர்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கிறார்கள். பயன்தரக்கூடிய வளங்களை கூட்டு சொத்துடைமை ஆக்குவதன் மூலம் சமூக சமத்துவத்தை அடையலாம் என்பது அமைப் பெதிர்வாத பொதுவுடைமைவாதிகளின் (Anarcho-Communists) நம்பிக்கையாகும்.

பாசிசவாதிகள்

மனித குலமே இன அடிப்படையிலான சமத்துவமின்மையுடன் இருக்கிறது. இவ்வுலகில் இப்பாகுபாடு தலைவர், தொண்டர், நாடுகள் மற்றும் பல இனங்களுக்கு இடையேயும் இவ்வுலகத்தில் காணப்படுகிறது. ஒரு தேசமோ அல்லது இனமோ எதுவானாலும், அதில் அங்கம் வகிக்கும் நபர்கள் சமமாக பாவிக்கப்படுகிறார்கள். அவர்களின் பிரதான அடையாளமே அவர்களை கண்டறிய பயன்படுகிறது.

பெண்ணியவாதிகள்

பாலின சமத்துவமே இக்கொள்கைவாதிகளின் குறிக்கோள் ஆகும். ஆண்களுக்கு சமமாக பெண்களும் சம உரிமைகள், சமவாய்ப்புகள் பெறுவதோடு மட்டுமல்லாமல், சமூக, பொருளாதார நிலைகளிலும் சம அதிகாரம் பெறுவதை இவர்கள் ஆதரிக்கிறார்கள்.

சூழலியல்வாதிகள்

உயிரி மைய சமத்துவமானது, வாழ்வின் அனைத்து வடிவங்களும் வாழவும், மலர்ந்து வளம் பெறவும் சம உரிமை உள்ளது என வலியுறுத்துகிறது.

3.2.5 இந்திய அரசமைப்பில் சமத்துவம்

இந்திய அரசமைப்பின் சமத்துவ கருத்தாக்கம்

இந்திய அரசமைப்பின் உறுப்பு – 14–ன் படி 'சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்றும்

பிறப்பிடம், சாதி, மதம், மொழி, இனம், பாலினம், நிறம் போன்றவை அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என்றும் தெரிவிக்கிறது என்றும், இதைப் போல உறுப்பு - 15, உறுப்பு - 14-ஐ உறுதிப்படுத்தும் நோக்குடன் இவ்வகை பாகுபாடுகளை தடை செய்துள்ளது. 'சட்டத்தின் முன் சமம்' மற்றும் 'சமமான சட்டப் பாதுகாப்பு' ஆகியவை இந்திய அரசமைப்பின் உறுப்பு - 21-ன் மூலம் வலிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 'எந்தவொரு தனி நபரும், சட்ட நடை முறையன்றி அவரது வாழ்வு அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தினை இழக்க வைக்க முடியாது' என்றும் விளக்குகிறது. ஒரு தனிநபரை தண்டிக்க வேண்டும் என்றால், அதை சட்டத்தின் நடைமுறை மூலம் மட்டுமே செயல்படுத்த முடியும். இது போல ஒருதலைபட்சமாகவோ, பாகுபாடான முறையிலோ அல்லது சமமற்ற முறையில் பல தனிமனிதர்களை நடத்துதலோ தவறு ஆகிறது'.

3.3 சுதந்திரம்

மனிதர்களுடைய வளர்ச்சிக்கும், அரசின் மேம்பாட்டிற்கும் சுதந்திரம் அதிமுக்கியமான அடிப்படைக் கூறாகும். முற்காலத்திலும், இடைக்காலத்திலும், இங்கிலாந்து முடியாட்சி மக்களுக்குத் தேவையான சுதந்திரத்தை ரத்து செய்தது வரலாற்று பதிவாகும். மக்களின் பொறுமையை சோதித்த முழுமையான முடியாட்சி புரட்சியை சந்திக்க நேரிட்டது. இங்கிலாந்து பேரரசர் ஜான் பணிய நேர்ந்ததுடன் குடிமக்களுக்கு சுதந்திரத்தை அளித்து பதவியை விட்டு விலகியதிற்கு பிறகே இந்த புரட்சி ஓய்ந்தது.

டியூடர் மற்றும் **ஸ்டூவர்ட்** பேரரசர்களுக்குப் பின்னால் வந்தவர்களும் முழுமையான முடியாட்சி முறையைத் தொடர்ந்ததால் "உள்நாட்டுப்போர்" வெடித்தது. சுதந்திர வேட்கையினால் உந்தப்பட்டு இப்போராட்டத்தில் அனைத்து குடிமக்களும் பங்கேற்றனர். **சார்லஸ்** மன்னர் சிரச்சேதம் செய்யப்பட்டு, பின்னர் **க்ரோம்வெல்** ஆட்சியில் இருந்தபோதும் கூட மக்களுக்கு தேவையான அடிப்படை சுதந்திரம் கிடைக்கவில்லை என்பது வரலாற்று நிகழ்வு ஆகும்.

சமத்துவம் உரிமை (உறுப்பு 14 –18)

- சட்டத்தின் முன் சமம் (உறுப்பு -14)
- மத அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு தடை (உறுப்பு -15)
- பொது வேலைவாய்ப்பில் சம வாய்ப்புரிமை (உறுப்பு -16)
- தீண்டாமை ஒழிப்பு (உறுப்பு -17)
- பட்டங்கள் ஒழிப்பு (உறுப்பு -18)

சில நேரங்களில் தனிநபர்களை வேறுபடுத்தி நடத்துதல் மூலம், சம உரிமைகள் உறுதிசெய்யப்படுவது அவசியமாகிறது. இது போலவே சமத்துவம் பாதிக்கப்படாமல் இருக்க, அரசாங்கத்தின் மூலம் சில கொள்கைகள் அவசியமாகிறது. உதாரணத்திற்கு இந்தியாவில் இடஒதுக்கீடு கொள்கையும், ஏனைய பிற நாடுகளில் "உடன்பாட்டு நடவடிக்கை"யும் (Affirmative Action) பின்பற்றப்படுகிறது.

கற்றலின் நோக்கங்கள்

- சுதந்திரத்தின் பொருள், மற்றும் முக்கியத்துவத்தினை பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை விளக்குவதன் மூலம் அறிமுகப்படுத்துதல்.
- சுதந்திரத்தின் வகைகளை தெரிந்து கொள்வதின் மூலம் மாணவர்களுக்கு பல வகையான சுதந்திரங்களையும், அதனைப் பற்றி அரசினுடைய கருத்துக்களையும் விளக்குதல்.
- ஓர் சமுதாயத்தில் குடிமகனுக்கு சுதந்திரத்தின் விழுமியங்களைப் புரிய வைப்பது மூலம், அரசு மற்றும் அரசமைப்பு அதிகாரத்துவம் பற்றியும் விளக்கி சுதந்திரம் எனும் கருத்தாக்கத்தின் முக்கியத்துவத்தினை அறிய வைத்தல்.
- சட்டத்தின் மூலமான கட்டுப்பாடு என்பதும் ஒரு வகை சுதந்திரம் என்பதை மாணவர்களுக்கு போதித்தல்.
- மக்களாட்சி மற்றும் சுதந்திரமான நீதித்துறையும், சுதந்திரத்தின் விழுமியங்களை உட்புகுத்துவதற்கான காரணிகள் என்றும், சுதந்திரத்தின் பாதுகாவலர்கள் என்றும் புரிய வைத்தல்.

இவ்வாறு மக்கள் போராட்டத்தின் விளைவாக, இங்கிலாந்தில் 1688-இல் "மகத்தான புரட்சி", முடியாட்சியை எதிர்த்து அரங்கேறியது. இதில் மக்களுக்கு மகத்தான வெற்றிகிடைத்ததுடன் சிலகாலம் முழுமையான முடியாட்சி கட்டுப்படுத்தப்பட்டது. இதற்குப் பிறகு வெடித்த "பிரெஞ்சு புரட்சி" 1789-ல் ஏற்பட்டது. இது பல மாற்றங்களை ஏற்படுத்தினாலும், மக்களின் விடுதலை வேட்கைக்கு சரியான அளவில் தீர்வு ஏற்படாதிருந்தது. ஏனெனில் நெப்போலியனுக்கு பின்னர் ஆட்சியில் அமர்ந்தவர்களும் முடியாட்சியைத் தொடர்ந்தார்கள். மூன்றாம் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு பிறகு மூன்றாவது பிரெஞ்சு குடியரசு நிறுவப்பட்டது. 1940-இல் இதன் வீழ்ச்சிக்குப் பின்னர் வரிசையாக நான்காம் குடியரசும், 1958-இல் அதன் வீழ்ச்சிக்குப் பின்னர் ஐந்தாம் குடியரசும் நிறுவப்பட்டது. இதற்கிடையே காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகள் விடுதலைக்கான நீண்ட நெடிய புரட்சிக்குப் பின்னர் சுதந்திரத்தை பெற்றன. 19-ஆம் நூற்றாண்டில் இத்தாலியும், 20-ம் நூற்றாண்டில் இந்தியாவும் மிகுந்த தியாகங்களுக்கு பின்னரே தேசிய சுதந்திரம் அடைந்தன.

சுதந்திரத்தின் பொருள் விளக்கம்

சுதந்திரம் என்பது "லிபர்" என்கிற லத்தீன் வார்த்தையிலிருந்து உருவாகி ஆங்கிலத்தில் "கட்டுப்பாடில்லாதது" என்று பொருள் பெறுகிறது. "லிபர்" என்கிற வார்த்தைக்கு "தடைகள் இல்லாத" எனப் பொருள்படுகிறது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

மனிதர்கள் சிறப்பாக செயல்படும் வாய்ப்பிற்குரிய சூழ்நிலையை நிர்வகிப்பதே சுதந்திரம் ஆகும். **– ஹெரால்ட் லாஸ்கி**

சுதந்திரம் தொடர்பான அறிஞர்களின் கருத்துக்கள்

சுதந்திரம் என்பது தனிமனிதர்கள், தங்கள் ஆளுமைத்தன்மையில் எந்தவித பாதிப்பும் இல்லாமல் தங்களை வெளிப்படுத்துவதாகும்.

– ஜி.டி.எச். கோல் (G.D.H.Cole)

சுதந்திரம் என்பதன் பொருள் தடைகள் இல்லாத நிலை என்பதல்ல, மாறாக சுதந்திரத்தை மேம்படுத்துவதில் உள்ளது

– மகாத்மாகாந்தி (Mahatma Gandhi)

- சுதந்திரம் என்பது அடக்குமுறையிலிருந்தும், வெளிகட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபெறும் விடுதலை நிலை ஆகும்.
- 'எஜீஸ்டெம் ஜெனரிஸ்' (இலத்தின் வார்த்தை) எனும் சட்டமொழியில் கூறுவதுயாதெனில் 'சுதந்திரம்' என்ற சொல் உறுப்பு 19-ல் உள்ள பொதுவான வார்த்தையாகும். உறுப்பு 21-ல் 'சுதந்திரம்' என்ற சொல்லுக்கு முன்பாக 'தனிப்பட்ட' என்னும் குறிப்பிட்ட வார்த்தை மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

சுதந்திரத்தின் இரண்டு கட்டங்கள் (Two Phases of liberty)

நேர்மறை சுதந்திரம் (Positive Liberty)

நேர்மறை சுதந்திரம் என்பது சிலவற்றை செய்வதற்கான சுதந்திரம் ஆகும். இது தனிமனிதன் தன்னுடைய உரிமைகள் மூலம் ஆளுமை தன்மையை மேம்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றது.

எதிர்மறை சுதந்திரம் (Negative Liberty)

ஜே.எஸ்.மில்லின் கூற்றுப்படி சுதந்திரம் என்பது எதிர்மறையானதாகும். இது சுதந்திரம் என்ற நூலில் உள்ளது மனிதனின் மீதும், அவனது செயல்பாட்டின் மீதும் எவ்வகை கட்டுப்பாடுகளும் விதிக்கப்படக் கூடாது என்கிறார். மேலும் மனிதனின் பாதையில் எவ்வகை தடைகளும் இருக்கக் கூடாது என வலுயுறுத்துகிறார்.

சுதந்திரத்தின் வகைகள் (Types of Liberty)



அ) இயற்கை சுதந்திரம் (Natural Liberty)

ஒருவர் நினைப்பதைத் தங்கு தடையில்லாமல் நடத்தி முடிப்பதற்கான சுதந்திரமே இயற்கை சுதந்திரம் ஆகும். முற்றிலும் தடைகளில்லாத, கட்டுப்பாடுகளற்ற மற்றும் ஒருவர் நினைக்கக்கூடியதை செய்யக்கூடிய சுதந்திரமே இயற்கை சுதந்திரமாகும்.

அனைவருக்குமே சுதந்திரத்தைப் பற்றிய தெளிவற்ற பார்வைகள் உண்டு. அது அவரவர்களின் விருப்பத்தைப் பொறுத்து அமைகிறது. பத்து நபர்கள் சுதந்திரத்தைப் பற்றி கருத்துரைக்கிறார்கள் எனும்போது ஒரு வேளை எந்த இருவேறு நபர்களும் அவர்களின் சுதந்திரத்தைப் பற்றிய வரையறையில் ஒன்றுவது இல்லை. மேலும் சுதந்திரத்தின் கருப்பொருளையும் அவர்கள் விரும்பியவகையில்தெளிவாக்கூறுவதில்லை. இந்தப் பொதுப்படையான அறிவியல் சார்பில்லாத சொற்பிரயோகத்தினையே இயற்கை சுதந்திரம் என்கிறோம். – **ஆர்.என். கில்ரீஸ்ட். (R.N.Gilchist)**

ஆ) குடிமைச் சுதந்திரம் (Civil Liberty):

சட்டத்தின் ஆட்சியை பிரதிபலிப்பதே குடிமை சுதந்திரமாகும். இது குடிமக்கள் சமுதாயத்தில் அனுபவிக்கும் சுதந்திரம் அரசில் உள்ளது என்பதைக் குறிப்பதாகும். சட்டத்தின் வரன்முறைகளுக்கு உட்பட்டு அச்சுதந்திரம் அனுபவிக்கப்படுகிறது. குடிமை சுதந்திரத்தை, பாதுகாப்பதற்கு உண்டான உத்திரவாதத்தை அரசின் சட்டங்கள் வழங்குகின்றன.

இ) அரசியல் சுதந்திரம் (Political Liberty)

அரசியல் சுதந்திரம் என்பது குடிமக்கள் அரசியல் வாழ்வில் பங்கேற்பதுடன், அரசின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதும் ஆகும். (*i*) வாக்குரிமை (*ii*) தேர்தலில் போட்டியிடும் உரிமை, (*iii*) பொதுக்கருத்து உரிமை (*iv*) அரசாங்கத்தின் குறைபாடுகளை எடுத்துரைக்கும் உரிமை, (*v*) மனுசெய்யும் உரிமை போன்றவை ஆகும்.

ஈ) தனிப்பட்ட சுதந்திரம் (Personal Liberty)

தனிமனிதர்கள் தாங்கள் நினைக்கும் காரியங்களை செயல்படுத்தும் நிலையினை இச்சுதந்திரம் எடுத்துரைக்கின்றது. மேலும் எந்த ஒரு தனிநபரின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், அடுத்தவர்கள் குறுக்கிட அனுமதிக்காத உரிமையும் ஆகும். அனைத்து தனிநபர்களுள்க்குமே உடுத்துதல், உண்ணுதல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், திருமணம் மற்றும் குழந்தைகளின் கல்வி போன்றவைகளில் தனிப்பட்ட உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு, தனிநபர் விவகாரத்தில் தலையிடுவது ஆகாது.



ஒரு செம்மறியாட்டின் கழுத்தை பிடித்திருக்கும் ஓநாயை, மேய்ப்பவன் துரத்தியடிக்கிறான். அதற்காக அந்த செம்மறியாடு அவனுக்கு நன்றியை தெரிவிக்கிறது. ஆனால் அந்த ஓநாயோ, அவனை சுதந்திரத்தை ஒழிப்பவன் என குறை கூறுகிறது. ஏனெனில் குறிப்பாக அந்த ஓநாய்க்கும், கறுப்பு செம்மறியாட்டிற்கும் சுதந்திரம் தொடர்பான ஒத்த கருத்துகள் அமைவதில்லை. இதைப் போலவே தான் மனித இனத்திற்கு இடையேயும் தற்பொழுது சுதந்திரத்தைப் பற்றிய வேறுபாடுகள் உள்ளன. – **ஆப்ரகாம்லிங்கன் (*Abharam Lincoln*)**



உ) பொருளாதார சுதந்திரம்

ஒருவரின் அன்றாட வாழ்வாதாரத்திற்கான உணவை தேடி கொள்ளும் தனிநபர் சுதந்திரம் பொருளாதார

சுதந்திரம் ஆகும். சாதி, நிறம், இனம், மற்றும் பாலினம் போன்றவைகளுக்கு அப்பாற்பட்டு சுதந்திரமாக வருவாய் ஈட்டுவதே பொருளாதார சுதந்திரம் ஆகும்.

ஏ) நிதி சுதந்திரம்

பிரதிநிதித்துவம் இன்றி வரிவிதிப்பு கூடாது. தங்களுடைய வரிப்பணம் எவ்வாறு செலவிடப்பட வேண்டும். யாருக்குபோய் சேர வேண்டும் என்பதில் தெளிவு வேண்டும் என்பது நடுத்தர வர்க்கத்தின் கோரிக்கையாகும்.

ஐ) குடும்பம் சார்ந்த சுதந்தரம்

பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் கல்வியுரிமை வழங்க வேண்டும் என்பதே குடும்ப சுதந்திரத்தின் சிறப்பு அம்சங்களாகும். கொடுமையாக நடத்துதல் மற்றும் சுரண்டல் போன்ற அநாகரீகமான செயல்களுக்கு எதிராக அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஒ) தேசிய சுதந்திரம்

ஒரு நாட்டில் நிலவக்கூடிய சுதந்திர சூழ்நிலையை தேசிய சுதந்திரம் என்கிறோம். ஒரு நாடு இறையாண்மையுடன் கூடிய நிலையை அடையும் போது தேசிய சுதந்திரம் இருக்கிறது எனலாம்.

சுதந்திரம் என்பது மனிதர்களை நோக்கி வருவது அல்ல, மாறாக மனிதர்களே சுதந்திரத்தை நோக்கி எழுச்சி கொண்டு செல்ல வேண்டும். மகிழ்வுடன் வாழ்வதற்காக சிரமப்பட்டு பெறப்படுகின்ற சுதந்திரம் ஓர் ஆசீர்வாதமாகும்.

– புது தில்லி, மத்திய செயலகத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

ஓ) பன்னாட்டு சுதந்திரம்

உலகநாடுகளிடையே கூட்டாட்சியையும், பன்னாட்டு கூட்டுறவையும் மற்றும் பன்னாட்டு அமைதியையும் பேணுவதையே பன்னாட்டு சுதந்திரம் ஆகும்

குறியீட்டு பொருள்

சுதந்திரதேவி சிலைக்கென்று ஒரு குறிக்கோள் உள்ளது. அது விடுதலையை பற்றிய உலகளாவிய நினைவூட்டலாகவும், அமெரிக்க குடிமக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாகவும் அமைந்துள்ளது.

சுதந்திரம், இறையாண்மை மற்றும் சட்டம் ஆகியவை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது?

அரசு ஒழுங்குமுறையில் இயங்கினால் மட்டுமே சுதந்திரம் செயல்படுகிறது.

அரசு சட்டங்களை இயற்றுகிறது. இறையாண்மை மிக்க அரசு செயல்படுவது சட்டங்களால் மட்டுமே ஆகும். சுதந்திரம், இறையாண்மை,மற்றும் சட்டம் ஆகியவற்றிற்கு இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது.

சட்டம் எவ்வாறு சுதந்திரத்தை பாதுகாக்கிறது?

- சட்டம் குற்றவாளிகளை தண்டித்து தனிமனிதர்களின் உரிமைகளை பாதுகாக்கின்றது.
- தனிமனித உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு சட்டம் உத்திரவாதம் அளிப்பதுடன் அவற்றை பாதுகாக்கவும் செய்கிறது. சக மனிதர்களுக்கு, ஒருவர் தீங்கு விளைவிக்கும்போதும், அவர்களின் வழியில் குறுக்கீட்டு சீர்குலைக்கும்போதும் அரசு அவர்களை தண்டிக்கிறது.
- சுதந்திரத்தின் பாதுகாவலனாக அரசமைப்பு விளங்குகிறது. அரசின் அதிகாரத்துவத்தை கட்டுப்படுத்துவதுடன் மக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்கின்றது.

சுதந்திரம் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது?

அ) மக்களாட்சி

சுதந்திரம் என்பது மக்களாட்சியில் பாதுகாப்பாக இருக்கிறது. மக்களின் அரசாங்கமாக மக்களாட்சி செயல்படுகிறது.

ஆ) அரசமைப்பு

ஒரு நாட்டின் அரசமைப்பில் இருந்து தான் அரசின் அதிகாரத்துவம்/ ஆணையுரிமை பெறப்படுகிறது.

மக்களாட்சியைப் பற்றிய கவிதையாக இந்திய அரசமைப்பின் முகவுரை விளங்குகிறது. இது ஒட்டுமொத்த இந்திய அரசமைப்பினுடைய அடிப்படை தத்துவத்தை தன்னுள் கொண்டதாகும். அரசாங்கத்தால் உருவாக்கப்படுகின்ற சட்டமும், அதனால் நிறைவேற்றப்படுகின்ற மக்கள் நல நடவடிக்கைகளும், மக்கள் நலனிற்கு

11th Std Political Science Tamil_Unit-3.indd 48 06/12/2022 10:48:29

உகந்ததா, இல்லையா என்பதை ஆராய்ந்து மதிப்பிடும் தன்மை படைத்தது அரசமைப்பு முகவுரையாகும். இந்திய அரசமைப்பின் ஆன்மாவாக முகவுரை கருதப்படுகிறது.

இ) அடிப்படை உரிமைகள்

அரசின் அதிகாரத்துவத்தை வரையறுப்பது அடிப்படை உரிமைகள் ஆகும். தனிமனிதர்களின் சொந்த விவகாரங்களில் அரசாங்கத்தின் தலையீடின்றி இருப்பதற்கு இவ்வகை உரிமைகள் உறுதியளிக்கின்றன.

அடிப்படை உரிமைகள்

- சமத்துவ உரிமை (உறுப்பு 14–18)
- சுதந்திர உரிமை (உறுப்பு 19–22)
- சுரண்டலுக்கு எதிரான உரிமை (உறுப்பு 23–24)
- மதச்சுதந்திர உரிமை (உறுப்பு 25–28)
- பண்பாடு மற்றும் கல்வி உரிமை (உறுப்பு 29–30)
- அரசமைப்பு பரிகார உரிமைகள் (உறுப்பு 32–35)

ஈ) அதிகாரப் பரவலாக்கம்

சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு அதிகாரப் பரவலாக்கம் அவசியமாகின்றது. அதிகாரங்கள் முறையே மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அரசாங்கத்திற்கு பகிர்ந்து அளிக்கும் பட்சத்தில் நிர்வாகம் திறம்பட செயலாற்ற இயலும்.

சுதந்திரமான நீதித்துறை

இந்திய அரசமைப்பு, நீதித்துறை சுதந்திரமாக செயல்படத் தகுந்த முறையிலான அம்சங்களை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் சுதந்திரமாக செயல்படும் நீதித்துறையே, மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும், அரசமைப்பின் மேலான தன்மையையும் பாதுகாக்கிறது.

- நீதிபதிகளின் நியமனத்திற்கு பாகுபாடற்ற நடைமுறை பின்பற்றப்படுகிறது.
- நீதிபதிகளுக்கு, உயர்ந்த தகுதிகளை நிர்ணயித்துள்ளது.
- உச்சநீதிமன்ற நீதிபதிகள் 65 வயது வரையிலும், உயர்நீதிமன்ற நீதிபதிகள் 62வயது வரையிலும் பணியாற்றுவார்கள்.

உ) பொருளாதார இடர்காப்பு

சுதந்திரத்தின் நிபந்தனையாக பொருளாதார சுதந்திரம் அமைகிறது. "ஏழை மற்றும் பணக்காரர், படித்தவர் மற்றும் படிக்காதவர் என்ற பிரிவினை சமூகத்தில் நிலைக்கும் வரையிலும் எஜமானர் மற்றும் பணியாளர் என்ற உறவுமுறை நீடிக்கும்".

ஊ) சட்டத்தின் ஆட்சி

சட்டத்தின் ஆட்சி என்பது இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது. சாதி, இனம், நிறம், மற்றும் நம்பிக்கை போன்றவைகளில் வேறுபாடுகள் இல்லாத சமமான ஆட்சியே சட்டத்தின் ஆட்சியாகும். சட்டத்தின் பார்வையில் அனைவரும் சமம். குற்றங்களில் ஈடுபடும் போது தண்டனைக்கு உள்ளாக வேண்டிய நிலை அனைவருக்குமே ஏற்படுகிறது.

எ) அரசியல் கல்வி மற்றும் காலவரம்பற்ற கண்காணிப்பு

சுதந்திரம் என்பதை நிரந்தரமாக பாதுகாக்க முடியும். கல்வியறிவு பெற்றவர்கள் முற்றிலுமாக உரிமைகளையும் கடமைகளையும் பற்றி அறிவர். காலவரம்பற்ற கண்காணிப்பு இருந்தாலொழிய, மக்கள் தவறுகள் செய்வதை நாம் கண்டறியமுடிவதில்லை. அரசாங்கம் தன் அதிகார எல்லையை மீறி மக்களின் தனிப்பட்ட வாழ்வில் தலையிடும்போது அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் புரட்சி செய்கிறார்கள்.

கலைச்சொற்கள்: Glossary

நிரந்தரச்சட்டம் (Statues) : ஒரு நாட்டின் சட்டமன்ற அமைப்பின் மூலமாக எழுதப்பட்ட சட்டமாக ஏற்படுத்தபடுத்தப்படுவதாகும். இவை தகுந்த விவாதங்களுக்கும் பின்னர் நாடாளுமன்ற சட்டங்களில் இணைக்கப்படும்.

சட்டப்படியான (De-jure): சட்டத்தின் மூலமாக அதிகாரம் பெற்றிருத்தல்.

நடைமுறை (De-facto): உண்மையில் யார் ஒருவர் நடைமுறையில் நிலையான அதிகாரம் பெற்றிருக்கின்றனர் என்பதாகும்.

www.tnschoolbooks.in

மதிப்பிடுதல் (Evaluation)

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

1. இறையாண்மையின் தந்தை எனக் கூறப்படுபவர் யார்?

(அ) போடின் (ஆ)ஆஸ்டின்
(இ) பிளாட்டோ (ஈ) அரிஸ்டாட்டில்

2. ஒருமைவாத இறையாண்மை கோட்பாட்டை எடுத்துரைத்தவர்

(அ) ஆஸ்டின் (ஆ) ஹெகல்
(இ) மரியம் (ஈ) வில்லோபை

3. மக்களாட்சியில் இறையாண்மையின் உறைவிடமாக இருப்பது

(அ) அரசு (ஆ) அரசாங்கம்
(இ) மக்கள் (ஈ) ஊடகம்

4. 'இரட்டை குடியுரிமை' காணப்படும் நாடு

(அ) அமெரிக்கா (ஆ) சீனா
(இ)ஜப்பான் (ஈ) ஆஸ்திரேலியா

5. "இறையாண்மை என்பது பொது விருப்பத்தை உறைவிடமாகக் கொண்டதாகும்" என கூறியவர்

(அ) ரூசோ (ஆ) டி.எச்.கிரின்
(இ)ஆஸ்டின் (ஈ) போடின்

6. 'சுதந்திரம்' என்ற நூலை எழுதியவர்

(அ) ஜே.எஸ்.மில் (ஆ) லாக்
(இ) ரூசோ (ஈ) போடின்

7. 'சட்டத்தின் ஆட்சி' என்பதன் முக்கிய நோக்கம் உறுதிப்படுத்துவது என்னவெனில்

(அ) பத்திரிக்கை சுதந்திரம் (ஆ)குடிமக்களின் சுதந்திரம்
(இ) சுதந்திரமான நீதித்துறை (ஈ) மேற்கூறிய அனைத்தும்

8. இந்திய அரசமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகள் பெறப்பட்ட நாடு

(அ) அமெரிக்கா (ஆ) பிரான்ஸ்
(இ) பிரிட்டன் (ஈ) ரஷ்யா

9. 'மூலதனம்' என்ற நூலை எழுதியவர் யார்?

(அ) மார்க்ஸ் (ஆ)கிரபோட்கின்
(இ)ஓவன் (ஈ) நேதாஜி

11th Std Political Science Tamil_Unit-3.indd 50 06/12/2022 10:48:29

II. கீழ்வரும் கேள்விகளுக்கு மிக சுருக்கமான விடையளிக்கவும்

1. இறையாண்மையை வரையறுக்கவும்.
2. இறையாண்மையின் வகைகள் யாவை?
3. பாகுபாடு பற்றிய குறிப்பு வரைக.

III. கீழ்வரும் கேள்விகளுக்கு சுருக்கமான விடையளிக்கவும்

1. 'எதிர்மறை சுதந்திரம்' பற்றிய சிறு குறிப்பு வரைக
2. 'அமைப்பெதிர்வாதம்' என்றால் என்ன?
3. 'சாதிய பாகுபாடு' பற்றி விவாதிக்கவும்.
4. மனித உரிமைகள் என்றால் என்ன?

IV. கீழ்வரும் கேள்விகளுக்கு விரிவான பதில் அளிக்கவும்

1. இறையாண்மையின் கருத்து மற்றும் சிறப்பியல்புகளை ஆராய்க
2. சுதந்திரத்தின் மீறலுக்கான காரணிகளை விளக்குக
3. இந்திய அரசமைப்பிலுள்ள சமத்துவத்தை பற்றி விளக்குக.

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Agarwal R.C. Political theory (Principles of Political science), chand & company, New Delhi, 2005.
2. Rajeev Bhargava & Ashok Acharya (Ed), Political theory: An Introduction, Thomson press, New Delhi, 2016.

அலகு
4

அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் – பகுதி II



4.1 சட்டம்

4.1.1 அறிமுகம்

சட்டம் என்றால் என்ன?

அரசால் அமலாக்கம் செய்யப்படுகின்ற விதிமுறைகளின் தொகுப்பிற்கு சட்டம் என்று பொருள்.

அரிஸ்டாட்டில் "சட்டம் செயல்படாத நிலையில் மனிதர்கள் விலங்குகளாக மாறுகிறார்கள்" என்று சரியாக சுட்டிக்காட்டுகிறார். சமுதாயத்தின் கட்டுக்கோப்பினைப் பாதுகாக்கவும், தேசத்தின் வளர்ச்சியை மேம்படுத்தவும், சட்டமானது உலகம்முழுமைக்கும்இன்றியமையாததாகிறது. சமுதாய ஒழுங்கினைப் பராமரிக்க, சட்டத்தின் அபரிமிதமான சக்தி மட்டுமே முழு தீர்வாக விளங்க முடியாது. ஏனெனில் சட்டத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட வரையறை உள்ளது. குற்றவாளிகளுக்கு சட்டம் கொடுங்கோலனாகவும், குடிமக்களுக்கு அதே சட்டம் பாதுகாவலனாகவும் விளங்குகிறது.

உலகத்தின் ஒரு பகுதியில் சட்டம், கடினமானதாகவும் மறுபக்கம் இணக்கமாகவும் விளங்கக்கூடிய காரணம் என்பது எப்போதும் சர்ச்சைக்குரியதாகவும், விவாதத்திற்குரியதாகவும் தொடர்கிறது. மேற்கூறிய வாதமும், விவாதமும் தத்தம் நாடுகளின் பணிகள், குறிப்பாக தண்டனைகளைப் பொறுத்து அமைகிறது. உதாரணத்திற்கு மக்களாட்சி நாடுகளில் நிறைவேற்றப்படக் கூடிய சட்டம், முற்றதிகார நாடுகளின்சட்டங்களைவிட வேறுபட்டதாகவும், மக்கள் நலனுக்காகவுமாக செயல்படுகிறது. இதை தவிர்த்துத் சட்டம், ஒரு நாட்டு மக்களுக்கு எந்த அளவிற்கு சுதந்திரத்தை வழங்குகிறது என்பது குறிப்பிட்ட சட்டத்தை நிர்வகிக்கும்போதும், செயல்படுத்தும் போதும் தெரிய வருகிறது. உலகின் எந்த நாட்டிலுமே சட்டத்தினை அறியாமை என்பது தண்டனையிலிருந்து தப்பிக்கும் ஒரு காரணியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

கற்றலின் நோக்கங்கள்

- சட்டத்தின் சாராம்சத்தை அறிந்து கொள்வதன் மூலம் மாணவர்கள் நீதியைப் பற்றிய சிந்தனைக்கு நெருக்கமாதல்.
- சட்டத்தின் வகைகளை தெரிந்து கொள்வதன் மூலம் மாறுபட்ட சட்டங்களின் செயல்பாட்டையும், அதனால் சமூகத்தில் ஏற்படும் விளைவுகளையும் புரிய வைத்தல்.
- சட்டத்தின் ஆதாரங்களைப் புரிந்து கொள்ளுதல்.
- சட்டம், அரசு மற்றும் நீதிநெறி ஆகியவைகளிடையேயான தொடர்பை புரியவைப்பது.

DB6AG

இங்கிலாந்து சட்ட நிபுணரான ஏ.வி. டைசி 'சட்டத்தின் ஆட்சி' என்ற கருத்தாக்கத்தினை 19–ஆம் நூற்றாண்டில் மேலும் பிரபலப்படுத்தியவர் ஆவார். அரசியல் அமைப்புச் சட்டதின் அறிமுகம் என்ற நூலில் கூறியுள்ளார். முற்கால தத்துவ ஞானிகளுக்கு 'சட்டத்தின் ஆட்சி' என்னும் சொற்றொடர் அறிமுகமில்லாவிட்டாலும் அக்கருத்தாக்கத்தினை அரிஸ்டாட்டில் எனும் ஞானி 'சட்டமே ஆளுகை புரிய வேண்டும்' என எழுதியுள்ளதை காணலாம்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

தனியார் சட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தனி நபர்களாகவும், அவர்களுக்கு மேலாகவும், இடையேயும் ஓர் பாரபட்சமில்லாத நடுவராக அரசு இருக்கிறது. – **ஹாலந்து** (*Holland*)

எனவே சட்டத்தின் கருத்தாக்கத்தினை இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்துவதும், அவை

11th Std Political Science Tamil_Unit-4.indd 52 06/12/2022 10:53:06

அரசமைப்பு வழங்கும் அடிப்படை சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறை என புரிய வைப்பதும் இன்றியமையாததாகிறது.

❖ **சட்டம் – நீதி ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு**

-சமூகத்தில் நீதியை அடைவது சட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

-நீதி என்பது எது சரி, எது தவறு, எது நல்லது, எது சமத்துவம் போன்றவைகளை விளக்கக்கூடிய ஓர் புலனாகாத கருத்தாகும்.

-எனவே ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எது சரியானதோ அல்லது எது நியாயமானதோ அதைச் செய்வதாகும்.

சட்டம் பற்றிய கருத்துகள்

❖ சட்டம் என்பது இறையாண்மையின் கட்டளை – *ஜான் ஆஸ்டின் (John Austin)*

❖ நீதி நிர்வாகத்தை செயல்படுத்துவதற்காக அரசு அங்கீகரித்த விதிமுறைகளின் தொகுப்பே சட்டம் ஆகின்றது. – **சல்மாண்டு**

❖ சட்டங்கள் இல்லையென்றால் அங்கே சுதந்திரம் இல்லை – **ஜான் லாக்**

சட்டத்தின் நோக்கங்கள்:

❖ அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்தல்

❖ நியாயத்தை ஊக்குவித்தல்

❖ சச்சரவுகளை தீர்த்தல்

❖ நீதியை ஊக்குவித்தல்

❖ ஒழுங்கையும், நிலைத்தன்மையையும் ஏற்படுத்துதல்

❖ விரும்பத்தகுந்த சமூக மற்றும் பொருளாதார நடத்தையை ஊக்குவித்தல்

❖ பெரும்பான்மை விருப்பத்தை பிரதிநிதித்துவப்படுத்துதல் (சில பிரச்சனைகளில்)

❖ சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

4.1.2. சட்டத்தின் பொருள்

சட்டம் என்கிற வார்த்தை பண்டைய டியூட்டோனிக் (Teutonic) மொழியிலுள்ள "லாக்" என்ற வேர்ச்சொல்லிலிருந்து உருவானதாகும். சட்டமில்லாத சமுதாயம் மற்றும் ஆட்சி, குழப்பவாதத்திலும், கலகத்திலும் முடிவுறும். உண்மையில் சட்டமே வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகிறது. சட்டம் என்ற சொல் 'சீரானது' என்பதைக் குறிக்கிறது. அரசியல் அறிவியலில் சட்டம் என்பது மனித நடவடிக்கைகளை வழிநடத்துகிற விதிகளைக் கொண்ட தொகுப்பு ஆகும். அரசின் கடமைகளை அரசாங்கம் செயல்படுத்துகிறது.

4.1.3 சட்டங்களின் வகைகள்:

அ) தனியார் சட்டங்கள் (Private Laws)

குடிமக்களிடையேயான உறவுகளும், அவ்வுறவுகளை கட்டுப்படுத்தும் விதிமுறைகளும் தனியார் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

ஆ) பொதுவுடைமைச் சட்டங்கள் (Public Laws)

குடிமக்களுக்கும், அரசுக்கும் இடையேயான உறவுகளை முடிவு செய்வது பொது சட்டமாகும். இவ்வகை சட்டத்தில் அரசு நடுவராகவும், கட்சிகாரராகவும் பார்க்கப்படுகிறது.

இ) அரசமைப்பு சட்டங்கள் (Constitutional Laws)

அரசை வழி நடத்தக்கூடிய அடிப்படை சட்டங்கள் அரசமைப்பு சட்டங்கள் ஆகும். அரசாங்கத்தின் செயல்பாடுகளை வரையறுத்து, தெளிவுபடுத்தக்கூடிய சட்டங்களே அரசமைப்பு சட்டங்களாகும். உதாரணத்திற்கு, குடியரசு தலைவர் தேர்தல், உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பொதுசட்டம், சட்டமன்றத்தால் இயற்றப்படக் கூடிய நிரந்தர சட்டத்திலிருந்து வேறுபடுகிறது.

11th Std Political Science Tamil_Unit-4.indd 53 06/12/2022 10:53:06

(ஈ) நிரந்தர சட்டங்கள் (Statute Laws)

நிரந்தர சட்டங்கள் என்பவை மாநில சட்டமன்றத்தின் மூலமாகவும், நாடாளுமன்றத்தின் மூலமாகவும் இயற்றப்படும் சட்டங்களாகும். மக்களாட்சி நாடுகளில் பெரும்பான்மையான சட்டங்கள் நாடாளுமன்றத்தின் மூலமாகவே இயற்றப்படுகின்றன.

உ) அவசர சட்டம் (Ordinance)

பொதுவாக அரசினுடைய சட்டங்களின் அடிப்படையில், அரசாங்கத்தின் செயலாட்சி துறை மூலம் இது பிறப்பிக்கப்படுகின்றது. இவ்வகை சட்டம், குறைந்த கால கட்டமே நீடிக்கும். நாடாளுமன்றம் இயங்காத காலங்களிலும், அவசர காலங்களிலும் குடியரசு தலைவர் மூலம் அவசர சட்டம் பிறப்பிக்கப்படும்.

ஊ) பொது சட்டங்கள் (Common Laws)

பொது சட்டங்களானது மரபுகளையும், பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் அடிப்படையாக கொண்டது. ஆனால் நிரந்தர சட்டங்களைப் போல நீதிமன்றங்களால், அமலாக்கம் செய்யக்கூடிய தன்மை உடையதாகும். பொதுச் சட்டங்கள் இங்கிலாந்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சட்டங்கள் ஆகும்.

எ) நிர்வாக சட்டங்கள் (Administrative Laws)

அரசாங்க பணியாளர்களின் அலுவல் மற்றும் பொறுப்புகளை பற்றி விளக்கமளிப்பதுடன், ஆளுகையை முறைப்படுத்துவதற்கான சட்டம் நிர்வாக சட்டம் எனப்படும். தனி மனிதர்களுக்கும், பொதுநிர்வாக அதிகாரிகளுக்கும் இடையே சட்டத்தையும், அதன் செயல்பாட்டையும் பிரித்து நடைமுறைப்படுத்துவது நிர்வாக சட்டமாகும். மேலும் இது அரசாங்க அதிகாரிகளின் சலுகைகளை பற்றி விளக்கம் அளிக்க முயலுகிறது. குடிமக்களுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையே சர்ச்சை ஏற்படும் பட்சத்தில் நிர்வாக நீதிமன்றம், நிர்வாக சட்டத்தின் மூலம் தீர்வு காண்கிறது.

ஏ) பன்னாட்டு சட்டங்கள் (International Laws)

பன்னாட்டு சூழலில் நாகரீகமடைந்த நாடுகளுக்கு இடையேயான உறவுமுறைகளையும், நடத்தையையும் நிர்ணயிக்கும் சட்டம், பன்னாட்டு சட்டமாகும். பன்னாட்டு உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்கென்று, தனித்தன்மையுடைய பன்னாட்டு சட்டம் என்ற ஒன்று வழக்கில் இல்லை. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையும், உலக பொதுமக்களின் கருத்துமே, ஒவ்வொரு நாடும் தங்கள் இறையாண்மையை முழுவதுமாக அனுபவிக்க வழிவகை செய்கின்றது.

மேலும் கடல் எல்லை பாதுகாப்பு சட்டம், வான்எல்லை சட்டம் என்றும் பன்னாட்டு சட்டங்களின் பிரிவுகள், தரைவழி, கடல்வழி, ஆகாய வழி என்று நாடுகளுக்கிடையே சர்வதேச எல்லைகளை வரையறுக்கிறது. வான்எல்லைச் சட்டங்களின் மூலம் ஒரு நாட்டின் ஆகாய விமானம் இன்னொரு நாட்டின் வான் எல்லையில் பறக்கும்போது அனுமதி பெற்ற பிறகே பறக்க வழி செய்கிறது.

4.1.4 சட்டத்தின் மூல ஆதாரங்கள்:



அ) வழக்காறுகள் (Customs)

சட்ட உருவாக்கத்திற்கு பழக்கவழக்கங்கள் மிகவும் உதவி புரிந்துள்ளன. பழக்கவழக்கங்களின் மூலமாக பயன்படுத்தப்பட்டுவந்த வழக்காறுகள் யாவும் நாளடைவில் அரசால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாகின. ஒரு நாட்டின் மரபுகளையும், பழக்க வழக்கங்களையும் அரசால் மறுதலிக்க முடிவதில்லை. இன்றளவில் இங்கிலாந்தின், பொது சட்டமானது வழக்காறுகளில் இருந்து பெறப்பட்டது என்பது ஒரு முக்கிய உதாரணமாகும். உதாரணத்திற்கு இந்தியாவில் தமிழ் மக்களிடையே 'ஏறு தழுவுதல் ' (Bull

Taming Sport) என்ற பண்பாடு சார்ந்த விளையாட்டானது 2017-ஆம் ஆண்டு 'ஜல்லிக்கட்டு சட்டம்' என்ற புதிய சட்டம் உருவாகக் காரணமாக அமைந்தது.

ஆ) மதம் (Religion)

ஆதிகால சமூகங்கள் பின்பற்றிய மத சம்பிரதாயங்களும் அரசினுடைய, சட்ட உருவாக்கத்தில் பெரிதான பங்கை ஆற்றியுள்ளது. பெரும்பான்மையான நாடுகளில் மதமே சட்டத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது. இந்து மதச் சட்டமானது பெரும்பாலும் மனுவின் விதிமுறையிலிருந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இஸ்லாமியச் சட்டமானது ஷரியத் சட்டங்களின் மூலத்திலிருந்து பின்பற்றப்படுகிறது. தெய்வீகச் சட்டமானது, மனிதனின் மூலமாக கடவுள் வழங்கிய சட்டங்கள் என்று கருதப்படுகிறது. தெய்வீக சட்டத்தின் ஆதிமூலமாக கடவுளே இருப்பதாகக் கருதப்படுகிறது. கிறித்துவர்களுக்கு, அவர்களின் பரமபிதா முதன் முதலில் அருளிய பத்து கட்டளைகளே சட்டத்தின் அடிப்படையாகக் கருதப்படுகிறது.

செயல்பாடு

அலங்காநல்லூர் -ஜல்லிகட்டு

இந்த படம் ஏறுதழுவுதல் என்ற தமிழரின் பண்பாடு விளையாட்டான ஜல்லிகட்டு பற்றியது ஆகும். இது மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் நடைபெறும். அலங்காநல்லூர் என்றால் ஜல்லிகட்டு என்றும், ஜல்லிகட்டு என்றால் அலங்காநல்லூர் என்றும் அழைக்கப்படுமளவுக்கு அவ்வூரின் பண்பாடு மற்றும் வரலாற்றுடன் அவ்விளையாட்டு ஒன்றிணைந்துள்ளது. இது பொதுவாக பொங்கல் கொண்டாடப்படும் ஜனவரி மாதத்தில் தமிழகத்தில் நடைபெறும் ஒரு தமிழர் பண்பாட்டு விழாவாகும். நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு சமூகத்தினருக்கும் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரத்திற்கான உரிமை மற்றும் தங்கள் பண்பாட்டையும், மரபையும் காப்பதற்கான உரிமை ஆகியவை உண்டு. ஆனால் ஜல்லிகட்டு என்பதில் பண்பாட்டிற்கும், விலங்குகளின் உரிமைக்கும் இடையே முரண்பாடு தோன்றியது. அரசமைப்பின் பகுதி மூன்றில் அடிப்படை உரிமை உறுப்பு 29(1) -இல் கல்வி மற்றும் பண்பாடு உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. 2014 -இல் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் "விலங்குகளும் புலன் உணர்வு கொண்டவை, ஆதலால் அடிப்படை உரிமை உறுப்பு 29(1) -படி வாழும் உரிமையைப் பெறுகின்றன என்றும் ஆதலால் அவற்றை துன்புறுத்துவதை அனுமதிக்க இயலாது" என தீர்ப்பு கூறியது. இந்த முரண்பாடுகள் இவ்விளையாட்டை முறைப்படுத்துவதில் பல்வேறு விளக்கங்களுக்கு வித்திட்டன.

இ) வழக்குமன்றங்களின் முடிவுகள் (Judicial Decisions)

நீதித்துறையின் செயல்பாடானது சட்டங்களை தெளிவுபடுத்தவும், சட்டங்களை நடைமுறைப்படுத்துவதுமாக அமைகிறது. நீதிமன்றங்களின் தீர்ப்புகள் புதிய சட்டங்களாக உருவாகின்றன. அதன் பிறகே இவ்வகை சட்டங்கள் அரசு மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்றன. எனவே, நீதிமன்ற தீர்ப்புகள் இவ்வகையில் புதிய பல சட்டங்களை உருவாக்குவதற்கு மூல ஆதாரமாக அமைகிறது. சிலசமயங்களில், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றங்களின் தீர்ப்புகள் சட்டங்களாக பாவிக்கப்படுகின்றன.

ஈ)சமச்சீராக்கம் (Equity)

சட்டங்கள் எப்போதெல்லாம், தெளிவற்று சூழ்நிலைக்கு பொருந்தாமல் இருக்கிறதோ, அந்தச் சமயங்களில் இந்த சம நீதி பங்கிலான கொள்கைகளும், நல்லியல்புகளும், பொது அறிவு அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு அக்குழப்பமான சூழலுக்கானத் தீர்வு காணப்படுகிறது. ஆங்கிலேய சட்டத்தின்படி,

சமச்சீராக்கம் என்பது இங்கிலாந்து உயர் நீதி மன்றத்தால் மட்டுமே அமல்படுத்த கூடிய விதிகளின் தொகுப்பாகும்.

உ) அறிவியல் விளக்கவுரைகள் (Scientific Commentaries)

சட்ட வல்லுநர்களின் அறிவியல் விளக்கவுரைகள், மற்றுமொரு சட்டமூலமாக விளங்குகின்றன. முதன்முதலில் இத்தகைய அறிவியல் விளக்கவுரைகள் தோன்றியபோது, அனைவரும் அதனை ஒரு வாதமாக மட்டுமே வர்ணித்தார்கள். நாளடைவில் இதன் சிறப்புத் தன்மையும், அதிகாரமும், நீதி மற்றும் நீதிமன்ற முடிவுகளையும் விட அதிகாரத்துவம் பெற்று விளங்கியது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

சட்ட நிபுணர்களின் கருத்துக்கள் பெரும்பாலான நேரங்களில் சட்டமாகவே கருதப்படுகிறது. உதாரணத்திற்கு, இங்கிலாந்தில் **கோக்** மற்றும் **ப்ளாக் ஸ்டோனின்** விளக்கவுரைகள் (Coke and Blackstone), அமெரிக்காவின் **ஸ்டோரி** மற்றும் **கென்ட்** (Story and Kent), இந்தியாவின் விஞ்நானேஸ்வரா மற்றும் அபரார்கா (Vijnaneswaa and Aprarka) ஆகியோரின் விளக்கவுரைகளைக் கூறலாம்.– **அப்பாதுரை**

ஊ) சட்டமன்றம் (Legislature)

தற்காலத்தில் பெரும்பான்மையான சட்டங்கள் சட்டமன்றத்தின் மூலமே இயற்றப்படுகிறது. சட்டத்தின் மிக முக்கிய ஆதாரங்களுள் ஒன்றாக இது உள்ளது. பிற நாட்டு அரசமைப்புகளில் உள்ள சிறந்த அம்சங்களைப் பெற்று அதை தன் சொந்த நாட்டின் நன்மைக்கு பயன்படுத்துவதற்கு சிறந்த உதாரணமாக இந்திய அரசமைப்பு உள்ளது.

இந்திய அரசமைப்பின் ஆதாரங்கள்:

- இந்திய அரசாங்க சட்டம் 1935
- பிரிட்டன் அரசமைப்பு
- அமெரிக்க அரசமைப்பு

4.1.5. சட்டம் எவ்வாறு அரசுடனும், நீதி நெறியுடனும் தொடர்பு கொண்டுள்ளது?

சட்டமும், நீதிநெறியும் சமமாக பாவிக்கப்படுகிறது. நீதிநெறியானது குடிமக்களுக்கு ஒழுக்க விதிகளை போதிக்கிறது. அதேபோல, அரசால் இயற்றப்படுகின்ற சட்டமும் இந்த லட்சியத்தை அடைய பாடுபடுகிறது.

சட்டமும் ஒழுக்கமும் ஒன்றோடு ஒன்று மிகுந்த தொடர்புடையன ஆகும். ஒழுக்க விதிமுறைகள் என்பவை குடிமக்களின் நன்னடத்தைகளுக்கு அடிப்படையாகும். நல்லியல்பு அரசு நற்குடிமக்களை பெற்று சிறந்து விளங்குகிறது. நல்லியல்பற்ற அரசானது, ஒழுக்கம் தவறிய குடிமக்களைப் பெற்று சீரழியும். அரசின் உயிர்மூச்சான செயல்பாடாக "நீதி நெறிகள்" விளங்குகின்றன

குறிப்பிடத்தக்க மேற்கோள்

"தனிமனிதனின் நல்லொழுக்கத்திற்கு சரிசமமாக இயங்கக்கூடியது நல்லரசாகும். அரசியல் உடற்கூறில் ஏதேனும் ஒரு பகுதி பாதிக்கின்றபோது, ஒட்டுமொத்த உடலும் பாதிப்புறும்". – **பிளாட்டோ (Plato)**

குறிப்பிடத்தக்க மேற்கோள்

நீதிநெறியானது நல்லியல்பு கடமைகளைப் பற்றியது, ஆனால் அரசால் இயற்றப்படும் சட்டமோ சட்டக் கடமைகளை பற்றியதாகும்.

சட்டத்திற்கும் நீதிநெறிக்கும் உள்ள வேறுபாடுகள் (The Distinction between Law and Morality)

- சட்டத்தின் கட்டளைகளையும், கட்டுப்பாடுகளையும் மீறுபவர்கள் சட்டத்தினால் தண்டிக்கப்படுகிறார்கள்.
- சமூக விதிகளையும், சமூக நீதிநெறிகளையும் மதியாதவர்களுக்கு சமூக புறக்கணிப்பு என்பதே மாபெரும் தண்டனையாக அமைகிறது.
- நீதிநெறி என்பது மனிதர்களின் அக மற்றும் புற நடவடிக்கைகள் தொடர்புடையதாகும். ஆனால் சட்டமோ மனிதர்களின் புற நடவடிக்கைகளுடன் மட்டுமே தொடர்புடையதாகும். இதனாலேயே மனிதர்கள் தங்கள் புற நடவடிக்கைகளின் மூலம் சட்டத்தை மீறும்போது, தண்டிக்கப்படுகிறார்கள்.

பொதுக் கருத்து !
பொதுவான நலனுக்கான மக்களின் கருத்தாகும்.

நீதிநெறி என்றால் என்ன?
சமூக எதிர்மறைகளான மது, சூது, திருட்டு, வழிப்பறி, கொலை, கொள்ளை, போன்றவைகளை கட்டுப்படுத்தும் சமூக உறுப்புகள் நீதிநெறி எனப்படுகிறது. நீதிநெறிகள் தொடர்பான சட்டங்கள் எப்போதும் நிலையானவைகளாகும்.

4.1.6. பொதுக்கருத்தும், சட்டமும் ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்புடையவை?

மக்களாட்சி நடைமுறையில், தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் மக்கள் அரசியலில் பங்கேற்பதுதான், மக்களாட்சியை வலிமையுள்ளதாக மாற்றுகின்றது. சட்ட உருவாக்கத்தில் மக்கள் நேரடியாக பங்கு பெறவில்லையென்றாலும், சட்ட மன்றத்தின் பிரதிநிதிகளை அவர்களே தேர்ந்தெடுக்கின்றார்கள். இவ்வாறு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றமானது மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கின்றது.

மக்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டே மக்களாட்சியில் சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. மக்கள் தங்கள் அதிருப்தியையும், கோபத்தையும் அமைதியான போராட்டங்களின் மூலமாக அரசுக்கு வெளிப்படுத்துகிறார்கள். மக்களின் பொதுநலனும், சமூக மேம்பாடும், பொதுக் கருத்தின் இரு கண்களாகும்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

தற்கால அரசானது, நீதிநெறி, மதம் மற்றும் இயற்கை சட்டத்தின் லட்சியவாத அடிப்படையில் நீடிக்கிறது எனலாம். அதே சமயத்தில் அரசு, தனது சுயபாதுகாப்பிற்காக மேற்குறிப்பிட்ட ஒன்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுகிறது. **– கோட்ஸீ**

குறிப்பிடத்தக்க மேற்கோள்

சட்டமும், ஒழுங்கும் நீதியை நிலைநாட்டுவதற்காக இயங்குகிறது. இதை செய்ய தவறும்பட்சத்தில், சமூக வளர்ச்சியை தடுக்கும் ஆபத்தான தடுப்பு அணைகளாக இவை மாறுகின்றன.
–மார்டின் லூதர்கிங் ஜுனியர்

4.2. குடியுரிமை

4.2.1 அறிமுகம்

அரசியல் கோட்பாட்டில், குடியுரிமை என்பது குடிமக்களுக்கான சட்டப்பூர்வமான அங்கீகாரம் மட்டுமல்லாது, அரசியல் செயல்பாடுகளில் முழுமையாகவும், சமமாகவும் பங்கேற்கின்ற உரிமையையும் அனைத்து குடிமக்களுக்கும் அளிப்பதாகும். மக்களாட்சியும், குடியுரிமையும் எப்போதும் ஒரே நேர்கோட்டில் செல்லக்கூடியது ஆகும்.

குடியுரிமையானது ஒவ்வொரு நாட்டிற்கும் வேறுபட்டதாக இருக்கிறது. தற்கால அரசுகளில், குடியுரிமையானது, குடிமக்களுக்கான உரிமைகள் மட்டுமல்லாது மக்கள் அரசுக்கு ஆற்றவேண்டிய கடமைகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது.

இயற்கை குடியுரிமை (Natural Citizenship)

இயற்கையான குடிமக்கள் என்பது இம்மண்ணில் பிறந்ததன் மூலமாக இயற்கையாக அந்த குடியுரிமையை அடைவது ஆகும்.

தகுதி ஆக்கப்பட்டு பெறப்படும் குடியுரிமை (Naturalized Citizenship)

தங்கியிருத்தல், திருமணம் போன்றவற்றால் பெறப்படும் குடியுரிமை தகுதி ஆக்கப்பட்டு பெறப்படும் குடியுரிமை ஆகும்.

அரிஸ்டாட்டிலின் கூற்றுபடி, குடியுரிமை என்பது பிறப்பிடம், குடும்பம், பரம்பரை மற்றும் பண்பாட்டைச் சார்ந்து அமைவதாகும்.

11th Std Political Science Tamil_Unit-4.indd 57 06/12/2022 10:53:07

4.2.2 குடியுரிமை மற்றும் நகரஅரசு (Citizenship and City-State)

கிரேக்க மற்றும் ரோமானிய குடியரசுகளில் முக்கியத்துவம் பெற்ற குடியுரிமை நிலப்பிரபுத்துவ காலங்களில் முற்றிலுமாக மறைந்தது. மறுபடியும், மறுமலர்ச்சி காலக்கட்டத்தில் மனிதத்தன்மையின் விரும்பத்தக்க பகுதியாக குடியுரிமை மலர்ந்தது. பண்டைய ஏதென்சின், நகர அரசில் குடியுரிமை என்பது அரசின் கடமைகளில் பங்கேற்பதாக அறியப்பட்டது.

4.2.3. மார்ஷலின் பகுப்பாய்வு (Marshall's Analysis)

சுதந்திர சமூக மக்களாட்சிவாதியான மார்ஷல், குடியுரிமையை மூன்றாக வகைப்படுத்துகிறார். அவை குடிமை, அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த குடியுரிமைகளாகும்.

அனைத்து தனிமனிதர்களுக்கும் சுதந்திரம் என்பது குடிமை விவகாரங்களில் தேவைப்படுகிறஒருமுக்கியமானஅம்சமாகும். ஒரு குடிமகனாக, நமக்கு அரசியல் தொடர்பான முடிவெடுக்கும் முறைமையில் பங்குபெறுவதற்கு முழு உரிமை உண்டு. இது அரசியல் வகைப்பாட்டில் பிரதிபலிக்கிறது.

4.2.4. இந்தியாவில் குடியுரிமை (Citizenship in India)

இந்திய அரசமைப்பானது பாரபட்சமின்றி அனைத்து மக்களுக்கும் குடியுரிமை வழங்குகிறது.

குடியுரிமை பற்றிய சட்டங்கள், அரசமைப்பின் பகுதி இரண்டிலும் மற்றும் அவை தொடர்பான நாடாளுமன்ற சட்டங்களிலும் காணப்படுகிறது. இந்தியாவில் குடியுரிமையானது, பிறப்பு, வம்சாவழி, பதிவு, இயல்புரிமை மற்றும் பிரதேச உள்ளடக்கத்தின் மூலம் பெறப்படுகிறது. அரசமைப்பின்படி அரசாங்கம் குடிமக்களை இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் போன்ற நிலைகளில் வேற்றுமைப்படுத்தல் ஆகாது. மேலும் மதம் மற்றும் மொழி சார்ந்த சிறுபான்மையின மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படுகிறது.

கலந்துரையாடல்

ஒரு மகனாகவோ அல்லது மகளாகவோ நீங்கள் உங்கள் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை வகுப்பில் விவாதி.

செயல்பாடு

ஒரு குடிமகனின் நற்பண்புகளை விளக்கப்படமாக தயாரித்து, உனது ஆசிரியருக்கும், நண்பர்களுக்கும் பகிர்வு செய்க.

4.2.5 உலக குடியுரிமை மற்றும் தேசியக் குடியுரிமை

தேசியக் குடியுரிமை என்பது, நாம் குடியிருக்கும் நாட்டின் அரசாங்கம் நமக்களிக்கும் பாதுகாப்பும் உரிமையுமாகும். ஆனாலும் அரசிற்கு தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் பெருமளவில் இருப்பதால், தனிமனித உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டு சட்டத்தினால் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

உலக குடியுரிமை என்பது தேசிய எல்லைகளை கடந்த குடியுரிமையாகும். இவ்வுரிமையானது, பலதரப்பட்ட மக்களும், நாடுகளும் சோந்த கூட்டுறவு நடவடிக்கையை வலியுறுத்துகிறது. இதனால், குடியுரிமை என்பது பல்வேறுபட்ட சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை தீர்க்கக்கூடியதாக அமைகிறது. மேலும் உலகளாவிய குடியுரிமை, உலக நாடுகளின் ஒற்றுமையையும், கூட்டுறவின் வலிமையையும்பறைசாற்றுகிறது.

செயல்பாடு

- 1955 –ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம் மற்றும் அதன் தற்போதைய சட்ட சீர்திருத்தங்கள் ஆகிவைகளைப் பற்றி உனது வகுப்பறையில் கலந்துரையாடுக.
- வெளிநாடு வாழ் இந்தியர்கள் (Non-Resident Indian – NRI), கடல் கடந்து வாழும் இந்தியக் குடிமக்கள் (Overseas Citizen of India-OCI) மற்றும் இந்திய வம்சவளியினர் (Person of Indian Orgin-PIO) ஆகியோரிடையே உள்ள வேறுபாடுகளைக் கண்டுபிடி.

உங்களுக்குத் தெரியுமா?

வயதான பெற்றோர், முதியோர் பராமரிப்பு மற்றும் நலன் சார்ந்த சட்டம் (MWPSC Act) 2007-ல், முதியவர்கள் மற்றும் பெற்றோர் நலனுக்காக இயற்றப்பட்டது .

இச்சட்டத்தின் படி....

- முதியோருக்கு துரிதமாகவும், பயனுள்ளதாகவுமான நிவாரணத்தை வழங்க "பராமரிப்பு தீர்ப்பாயத்தினை" (Maintenance Tribunal) நிறுவியது.
- இச்சட்டத்தின்படி, பராமரிப்பு என்பது உணவு, உடுத்த உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ சிகிச்சையையும் உள்ளடக்கியது ஆகும்.
- இச்சட்டத்தின் ஒரே நிபந்தனையாக, எவரெல்லாம் தன் சொந்த வருமானத்திலும், உடைமையின் மூலமும் தன்னை பராமரிக்க இயலாதவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் இப்பராமரிப்பின் கீழ் உட்படுவார்கள்.
- இச்சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகபட்ச பராமரிப்புச் செலவாக மாதம் ₹10,000 அளிக்க கட்டாயமாக்கப்பட்டது. பராமரிப்புத் தொகையானது, உரிமை கோருபவர்களின் தேவைகள் மற்றும் அவர்கள் இயல்பு வாழ்க்கையை வாழ்வதற்கான தேவைகளைப் பொருத்தும் அமைகிறது.
- பெற்றோர்களும், முதியோர்களும் அரசாங்கத்தின் இச்சலுகையை அனுபவிக்க, பாரமரிப்பு தீர்ப்பாயத்தின் முன் பராமரிப்பு அதிகாரியிடம் தங்கள் விருப்பங்களை முறையிடலாம். இச்சட்டத்தின்படி, வழக்கறிஞர்கள், தீர்ப்பாயத்தின் முன் எவருக்காவும் வாதாட இயலாது.
- முதியோர் நலனைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருக்கக்கூடிய யாரேனும் நன்கறிந்தே அவர்களை கைவிடும்பட்சத்தில், ₹5,000 அபராதமோ அல்லது மூன்று மாதம் சிறை தண்டனையோ அல்லது மேற்கூறிய இரண்டு தண்டனையுமோ வழக்கப்படலாம்.

4.3. உரிமைகள் மற்றும் கடமைகள்

4.3.1. அறிமுகம்

உரிமைகள் என்பது பொதுவாக உலகில் காணப்படுவது, மேலே உள்ள நீதிநெறி, சட்டம், அரசியல் ஆகிய அனைத்தும் ஒன்றாக இணைந்து உருவானதே மனித உரிமைகள் ஆகும். இந்த உரிமைகள் இன்றியமையாதவையாக நவீன காலத்தில் அமைந்துள்ளதற்கு அது அரசமைப்பிலும், பன்னாட்டு மனித உரிமை பிரகடனங்களிலும் இடம் பெற்று இருப்பது காரணம் ஆகும். மனித இனத்தில் பிறந்த அனைவரும் மனிதனாக பிறந்ததற்கான அடிப்படையில் மனித உரிமைகளை கொண்டு இருக்கின்றார்கள். இந்த அடிப்படையில் அனைத்து மனிதர்களும் சாதி, மத, இன, வகுப்பு வேறுபாடுகளைக் கடந்து நீதிநெறியிலான சமத்துவத்தின் அடிப்படையில் மனித உரிமைகளைப் பெறுகிறார்கள்.

கற்றலின் நோக்கங்கள்

- உரிமைகளின் பொருள் மற்றும் அதன் இயல்புகள்
- உரிமைகள் மற்றும் பொறுப்புக்களுக்கிடையே உள்ள வேற்றுமைகள்
- பல்வேறு வகையான உரிமைகள்
- அரசின் வழிகாட்டும் நெறிமுறைகள்
- குடிமக்களின் அரசியல் கடப்பாடுகள்
- குடியுரிமை
- சொத்து பற்றிய கோட்பாடுகளின் பார்வை

இயல்புகள்

- உரிமைகள் என்பது மக்களின் சமூக மேம்பாட்டிற்கு முக்கியமானதாக அமைந்துள்ளது.
- உரிமை என்பது மதம், சாதி, இனம், பாலினம் என்று பாராமல், அனைவருக்கும் கிடைக்க கூடியது.

- உரிமைகள் மற்றும் கடமைகள் இவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்ததாகும்."கடமைகள் இல்லை என்றால் உரிமைகள் இல்லை".
- உரிமைகள் அனைத்தும் நீதி மன்றத்தில் வழக்கிட்டு பெறக்கூடியது ஆகும்.
- மக்களின் உரிமைகளை பாதுகாப்பது அரசின் கடமை ஆகும்.

உரிமைகளின் வகைகள் :



அ) இயற்கை உரிமைகள் (Natural Rights)

இந்த வகையான உரிமைகள் மனித இயல்பு மற்றும் பகுத்தறிவின் ஒரு பகுதியாகும். இதனை பற்றி அரசியல் கோட்பாடுகள் கூறுவது என்னவென்றால் ஒவ்வொரு மனிதனும் சில அடிப்படை உரிமைகளைப் பெற்றுள்ளான். இதனை அரசாங்கங்கள் கூட மறுக்க இயலாது.

ஆ) நீதிநெறி உரிமைகள் (Moral Rights)

நீதிநெறி உரிமை என்பது நன்னடத்தை, மரியாதை, நல்லொழுக்கம் ஆகியன பற்றியது ஆகும். இது அறநெறியின் படி மக்களை முழுமையாக வழி நடத்தி செல்கின்றது.

இ) சட்ட உரிமைகள் (Legal Rights)

சட்ட உரிமைகள் என்பது நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் சமமாகக் கிடைக்க கூடிய ஒன்றாகும். இதில் எவ்வித பாகுபாடும் இன்றி பின்பற்றப்படுகிறது. சட்ட உரிமைகள் என்பது அரசினால் ஏற்று கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட விதிமுறைகள் ஆகும். சட்ட உரிமைகள் என்பது மூன்று வகைப்படும்.

(i). குடிமை உரிமைகள் (Civil Rights)

இந்த வகையான உரிமைகள் ஓர் மனிதன் சமூகத்தில் நாகரிகமான வாழ்க்கையை வாழ்வதற்கு அடிப்படை உரிமைகளை வழங்குகிறது. இது அரசினால் பாதுக்காக்கப்படுகிறது. அதாவது உயிர் வாழுகின்ற உரிமை, சுதந்திரம், மற்றும் சமத்துவம் ஆகிய குடிமை உரிமைகளை அரசு நிலைநாட்டி பாதுகாக்கிறது.

(ii). அரசியல் உரிமைகள் (Political Rights)

மக்கள் தங்களது நன்னடத்தையின் மூலம் அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு வழிவகை செய்வது அரசியல் உரிமைகள் ஆகும். இது வாக்களிக்கும் உரிமை, தேர்ந்தெடுக்கப்படும் உரிமை, பொதுப் பதவி வகிக்கும் உரிமை போன்றவை ஆகும்.

(iii). பொருளாதார உரிமைகள் (Economic Rights)

இந்த உரிமைகள் தனிமனிதனுக்கு பொருளாதார பாதுகாப்பு அளிப்பதாகும். எ.கா பொருளாதார உரிமை என்பது ஒருவருக்கு வேலைவாய்ப்பு உரிமை, தகுந்த பாதுகாப்பு உரிமை, சமூக பாதுகாப்புரிமை போன்றவை ஆகும்.

ஈ) ஒப்பந்தம் மூலம் பெறும் உரிமைகள் (Contractual Rights)

இவ்வகையான உரிமைகள் என்பது தனி மனிதனுக்கு ஒரு குறிப்பிட்ட நிகழ்வில் வழங்கப்படுகிற வாக்குறுதிகள் அல்லது ஒப்பந்தங்கள் வாயிலாக தோற்றுவிக்கப்படுகிறது.

உ) மனித உரிமைகள் (Human Rights)

மனித உரிமைகள் என்பவை உரிமைகளில் மிகவும் உயர்ந்து இருப்பதாகும். இது உள்நாட்டு அளவிலும், சர்வதேச அளவிலும் சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் மூலமாக ஆதரவளிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. இது ஒரு சட்ட அமைப்பினால் பல்வேறு காலக்கட்டங்களில் உருவாக்கப்பட்டு முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர்-10 நாள் பன்னாட்டு மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது.

உரிமைகள் மசோதா மற்றும் அடிப்படை உரிமைகள்:

உரிமைகள் மசோதா என்பது அமெரிக்காவில் டிசம்பர் 15-ல், 1791-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தனிமனித உரிமைகளின் உத்திரவாதங்களை மிகுந்த வலிமையுடன் மத்திய மற்றும் மாநில அரசுகளால் கருத்திணைவு அடிப்படையில் செயல்படுத்த வழிவகை செய்தது.

அடிப்படை உரிமைகள்

கருத்து சுதந்திரம் மற்றும் இணைய வழி சவால்கள். கீழே கொடுக்கப்பட்டுள்ள சில நிகழ்வுகளின் அடிப்படை உரிமைகள் ஒவ்வொன்றும் மீறப்படுகிறதா அல்லது ஆதரவு அளிக்கிறதா என பதிவிடுக.

எண்.	வழக்குகள்	ஆதரவு / உரிமை மீறல்
1.	ஒரு பெண் பார்வையாளர் கலைக்கூடப் பகுதிக்கு செல்வதை அவரது பாலினம் அடிப்படையில் தடை செய்தல்	
2.	சிறுபான்மையினர் தங்களுக்கான தனிப்பட்ட கல்வி நிறுவனங்களை உருவாக்கி நிர்வகிக்க முடியும்.	
3.	ஸ்ரேயா சிங்கல் (Shreya Singhal) என்பவர் டெல்லியில் வசிக்கும் 21 வயது பெண் ஆவார். இவர் உச்ச நீதிமன்றத்தில் பொது நலமனு ஒன்றினை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் பிரிவு 66A மீதுள்ள சந்தேகத்தினால் அதனை எதிர்த்து தாக்கல் செய்துள்ளார்.	
4.	கேலிச்சித்திர வரைவாளர் (Cartoonist) அசிம் த்ரிவேதி மீது மகாராஷ்டிர அரசு ராஜதுரோக வழக்கு தொடுத்துள்ளது. இது அவர் இணையதளத்தில் வெளியிட்ட கேலிச்சித்திரம் காரணமாக தொடுக்கபட்டுள்ளது.	
5.	வடகிழக்கு மாநில பெண் ஒருவர் பெங்களூரு மாநகரில் வசிப்பதற்கு அனுமதி மறுக்கப்படுதல்.	
6.	சமூக ஊடகங்கள் மீது தடைகளை விதிக்கக்கூடிய சட்டப்பிரிவுகளை உருவாக்கி, ஊடகத்தின் செயல்பாடுகள் முடக்கப்படுவது என்பது குடிமை சமூகத்திற்கு விடுக்கப்படும் சவாலாகும்.	
7.	2012-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பாகிஸ்தான் சமூக ஆர்வலர் மலாலா யூசப்ஜாய் (Malala Yousafezai) என்பவர் பெண் கல்வியை வலியுறுத்தியதற்காக தாலிபான்களால் தலையில் சுடப்பட்டார்.	

ஜேம்ஸ் மேடிசன் இந்த 'உரிமைகள் மசோதா'வை அறிமுகப்படுத்தினார். இது, அவர் 1776இல் வெளியிட்ட புகழ்பெற்ற வெர்ஜீனியா மனித உரிமைகள் பிரகடனத்தின் அடிப்படையில் அமைந்தது ஆகும். உரிமைகள் மசோதா என்பது இங்கிலாந்தின் மகாசாசனம் (Magna Carta) (1215) மற்றும் ஆங்கில உரிமைகள் மசோதா (1689) ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டது. **– ஜேம்ஸ் மேடிசன்**

உங்களுக்குத் தெரியுமா?

அரசமைப்பு நிர்ணயசபையானது இந்திய அரசமைப்புச்சட்டத்தினை வரையறை செய்ய 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 20 நாட்கள் எடுத்துக்கொண்டது.

அடிப்படை உரிமைகள்



செயல்பாடு

கேலிச்சித்திரத்தைப் பார்த்து என்ன அனுமானிக்கிறீர்கள்? (தி இந்து 5.12.2012).

தகவல் தொழில் நுட்ப சட்டப் பிரிவு 66A எதைப்பற்றிக் கூறுகிறது.____________________

____

இந்திய அரசமைப்பின் சட்டப் பகுதி III–இல் அடிப்படை உரிமைகள் உள்ளன..

சமத்துவ உரிமை (Right to Equality)

சமத்துவ உரிமை என்பது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உத்திரவாதத்தினை அளிக்கிறது. இது சாதி, மதம், மொழி, இனம், பாலினம் ஆகியவற்றிலான பாகுபாட்டை தடை செய்கின்றது.

சுதந்திர உரிமை (Right to Freedom)

சுதந்திரமான பேச்சு மற்றும் கருத்து உரிமை, பொதுஇடத்தில் ஆயுதங்களின்றி அமைதியாகக் கூடுதல், சங்கம் அமைக்கும் உரிமை, நாடு முழுவதும் சுதந்திரமாக உலவுகின்ற உரிமை போன்றவற்றை வழங்குகிறது.

வாழும் உரிமை மற்றும் தனிநபர் சுதந்திரம் (Right to Life and Personal Liberty)

எந்த ஒரு குடிமகனுக்கும் தனிநபர் சுதந்திரம் மறுக்கப்பட கூடாது. அதாவது எந்த ஒரு மனிதனும் கைது செய்யப்படும் போது அதற்கான காரணத்தை அவனுக்கு தெரிவிக்காமல் காவலில் வைக்கக் கூடாது. மேலும் அவர் தனது சார்பாக வாதாட ஒரு வழக்குறைஞரை தேர்தெடுத்து கொள்ளும் உரிமை வழங்கப்பட வேண்டும். அவர் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள்ளாக நீதிமன்றத்தின் முன்பாக ஆஜர்படுத்தப்பட வேண்டும்.

தடுப்புக் காவல் (Preventive Detention)

தடுப்புக் காவல் என்பது காலத்தின் கட்டாயத்தினால் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவரின் செயலை தடுப்பதற்கானதாகும். தடுப்பு காவல் என்பது ஒருவர் சட்டம் மற்றும் ஒழுங்கை அச்சுறுத்தும் வகையிலும், தேசப்பாதுகாப்பு மற்றும் அமைதிக்கு குந்தகம் விளைவிப்பதையும் தடுப்பதற்காக அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை ஆகும். இதற்காக அந்த நபரைக் கைது செய்யவோ அல்லது காவலில் வைக்கவோ அரசாங்கத்திற்கு அதிகாரம் உள்ளது.

செயல்பாடு

மக்களாட்சி மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்

ஏற்றுகொள்கிறேன் / மறுக்கிறேன்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்கள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில் நீங்கள் எது சரியாக இருக்கும் என்று கருதுகின்றீர்களோ அதனை அதில் குறிப்பிடவும்.

- பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் கல்வி அறிவு வழங்கப்பட்டால் அது அவர்களுடைய குடும்பம் மற்றும் சமுதாயத்தின் வளர்ச்சியை அதிகப்படுத்துகிறது.
- பெண்கள் எப்போதும் ஆண் துணைகளைச் சார்ந்தே இருப்பார்கள். உதாரணமாக தந்தை, கணவர், சகோதரர், மற்றும் மகன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.
- பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கல்வி அளிக்கபட்டால் பொருளாதாரம் வளரும், உடல்நலம் மேம்படும், நாடு எழுச்சியுறும்.
- பெண்கள் வீட்டை பராமரிப்பதற்கும், சமையல் செய்யவும் மட்டுமே உள்ளனர்.
- பெண்கள் மற்றும் சிறுமிகள் ஆகியோர் பொதுவாக நடனம், ஓவியம், மற்றும் சமையல் போன்றவற்றில் சிறந்தவர்களாக விளங்குவார்கள்.
- கல்வி அறிவு என்பது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு வாழ்க்கை பாதையை அமைத்துக் கொடுக்கும். மேலும் அமைதியையும், அதிகாரத்தையும் அளிக்கும்.
- மாலாலா யூசுப்சாய் (Malala Yousufzai) என்ற 17 வயது பாகிஸ்தான் நாட்டு இசுலாமிய இளம்பெண் ஒருவர் பெண் கல்விக்கு தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றார்.

நான் இதனை ஏற்றுகொள்கிறேன்____________

____

நான் இதனை மறுக்கிறேன்______________

____

சுரண்டலுக்கு எதிரான உரிமை (Right Against Exploitation)

குழந்தைத் தொழிலாளர் முறை, ஆட்கடத்தல் செய்தல் மற்றும் கட்டாயப்படுத்தி பிச்சையெடுக்க வைத்தல் குழந்தைகளைக் கட்டாயப் பணி செய்ய வைத்தலின் வடிவங்களாகும். மேலும் இது பதினான்கு வயதிற்குட்பட்ட சிறார்களை தொழிற்சாலைகள், சுரங்கங்கள் அல்லது உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய எத்தொழிலும் ஈடுபட வைப்பதை தடை செய்கிறது.

மத சுதந்திர உரிமைகள் (Right to Freedom of Religion)

இந்தியாவில் அனைத்து மக்களும் தங்களது மதம் மற்றும் நம்பிக்கையினைத் தேர்தெடுத்து அதன்வழி செல்லும் உரிமையை அரசமைப்பு சட்டம் வழங்கி உள்ளது. அரசமைப்பின் உறுப்பு 26-ன் படி ஒவ்வொருவரும் மத விவகாரங்களின் அடிப்படையில் சேவை புரிவதற்காக நிறுவனங்களை உருவாக்கி, அதற்கென அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை உரிமையாக்கி சட்டத்தின் அடிப்படையில் நிர்வகிப்பதாகும்.

பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள் (Cultural and Educational Rights)

இந்தியாவின் மதம், மொழி மற்றும் பண்பாடு அடிப்படையிலான சிறுபான்மையினர், குழுக்கள் அல்லது பிரிவினருக்கு அரசமைப்பின் மூலம் இந்த அரசியல்சாராத உரிமைகள் வழங்கப்படுகிறது.

எந்த குடிமகனும் அரசு நடத்தும் அல்லது அரசின் நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் கல்விபெறுவதற்கு உரிமையுண்டு என்பதனை மறுக்க இயலாது. இந்த உரிமையை சாதி, மதம், இனம், பாலினம், நம்பிக்கை போன்றவற்றைக் காரணம் காட்டி மறுக்க இயலாது. குடிமக்கள் தாங்கள் விரும்பும் பள்ளிகள் அல்லது கல்லூரிகளில் கல்வி கற்றும் உரிமை உள்ளது. எந்த ஒரு கல்வி நிறுவனமாவது இந்த அடிப்படையில் பாகுபாடு காட்டுமாயின் அரசின் நிதி உதவி அந்தக் கல்வி நிறுவனத்திற்கு மறுக்கப்படும். மேலும் இந்த சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் எவ்விதமான கல்வி முறையை பின்பற்ற வேண்டும் என்பதனை அரசு வலியுறுத்த முடியாது. அந்தக் கல்வி நிறுவனங்களை அவரவர்களது பண்பாட்டினை பாதுகாக்கும் வகையில் செயலாற்ற அனுமதிக்க வேண்டும்.

செயல்பாடு

1. இந்தியாவில் எத்தனை மொழிகள், எழுத்துவடிவங்கள், மற்றும் வட்டார வழக்கு மொழிகள் உள்ளன எனக் கண்டுபிடி.
2. இந்தியாவின் ஆட்சி மொழிகள் யாவை?

அரசமைப்பு சட்ட பரிகார உரிமைகள் (Right to Constitutional Remedies)

அரசமைப்பின் உறுப்பு 32-இன்படி உச்ச நீதிமன்றம் பரிகாரம் செய்யலாம். அதுவே அரசமைப்புச் சட்ட உறுப்பு 226-இன்படி உயர்நீதிமன்றம் பரிகாரம் செய்கின்றது. இதற்காக நீதிமன்றம் நீதிப்பேராணைகளை பிறப்பிக்கிறது. இவைகள், ஐந்து வகைப்படும்.

- ஆட்கொணர்வு நீதிப் பேராணை (Writ of Habeas Corpus)
- கட்டளை நீதிப் பேராணை (Writ of Mandamus)
- சான்றாய்வு நீதிப் பேராணை (Writ of Certiorari)
- தகுதி வினவும் நீதிப் பேராணை (Writ of Quo Warranto)
- தடைநீதிப் பேராணை அல்லது தடை உத்தரவு (Writ of Prohibition or Injunction)

11th Std Political Science Tamil_Unit-4.indd 63 06/12/2022 10:53:10

ஆகவே அடிப்படை உரிமைகள் என்பது தனிமனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை பாதுகாக்கின்ற கருவியாக நம் நாட்டில் பயன்படுகிறது. அந்த வகையில் அடிப்படை உரிமைகளை செயல்படுத்தும்போது, மக்களாட்சி அடிப்படையிலான வாழ்க்கை முறையும் அதன் அடிப்படைக்கொள்கைகளான சமத்துவம் மற்றும் நீதியையும் சமூகத்தில் நிலைநிறுத்துகிறது. அடிப்படை உரிமைகள் நம் நாட்டின் சுதந்திரத்தில் ஒரு மைல்கல் ஆகும். இது வழக்கு விசாரணை மற்றும் பெருந்துன்பத்திற்குப் பிறகு நமக்கு கிடைத்துள்ளதாகும்.

உங்களுக்குத் தெரியுமா? இந்திய அரசமைப்பின் உயிர் மற்றும் இதயமாக எதனை நீங்கள் கருதுவீர்கள்?

புதிய உரிமைகள்:

தகவல் அறியும் உரிமை (Right to Information)

தகவல் உரிமை சட்டம் 2005 அரசாங்கத்திடம் மக்கள் தகவல்கள் கேட்பதனை சட்டப்பூர்வமாக்கியுள்ளது. இந்தச்சட்டமானது அரசாங்கங்களை வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும், குடிமக்களுக்கு பொறுப்புணர்வு கொண்டதாகவும் மாற்றியுள்ளது. இதன் மூலமாக அரசின் நடவடிக்கைகளை தகவலறிந்த குடிமக்கள் எளிதாகக் கண்காணிக்க முடியும். இதனால் அரசாங்கம் மக்களுக்கு கடமைப்பட்டதாக மாற்றப்பட்டுள்ளது.

தனியுரிமை (Right to Privacy)

அரசிடம் தனி மனிதனின் அனைத்து உரிமைகளை சமர்ப்பிக்க வேண்டியதில்லை. தனியுரிமை என்பது மனிதனின் மாண்புடன்

செயல்பாடு

ஒவ்வொரு கேள்விக்கான குறியீட்டிற்கும் அதற்குத் தொடர்புடைய உதாரணத்தைத் தருக.



11th Std Political Science Tamil_Unit-4.indd 64 06/12/2022 10:53:10

ஒன்றிணைந்ததாகும். தனியுரிமையைப் பாதுகாப்பதற்கு அரசமைப்பின் உறுப்பு 21-இல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுதந்திரத்தின் உள்ளார்ந்த பகுதியாகும். இந்த உரிமைகள் அரசமைப்பின் பகுதி – III-இல் இடம் பெற்றுள்ளது.

மாற்றுப்பாலினத்தவரின் உரிமைகள் (Rights of Transgenders)

மாற்றுப்பாலினத்தவர் தங்களது குணாதிசயங்களில் ஆடவர் அல்லது மகளிரிடமிருந்து மாறுபட்டு காணப்படுவார்கள். வெகு சமீப காலங்களில்தான் அவர்களின் பிரச்சனைகள் பேசப்படுகின்றன. அவர்கள் இப்போது 'மூன்றாம் பாலினம்' என்று அழைக்கப்படுகின்றனர். உச்சநீதிமன்றமானது இவர்களின் பாலின அடையாளத்தினை சட்ட பூர்வமாக அங்கீகரிக்கும்படி கூறியுள்ளது. மாற்றுப்பாலினத்தவக்கும் மற்றவர்களுக்கு அளிக்கப்பட்ட அனைத்து அடிப்படை உரிமைகளையும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

4.4 அரசியல் கடப்பாடு (Political Obligation)

அரசியல் கடப்பாடுகள் என்பது அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை ஒருவர் நிறைவேற்றுவதற்கான பிணைப்பாகும். ஒவ்வொரு தனி மனிதனும் தன் சுய நலத்திற்காகவும், சமுதாய நலத்திற்காகவும் அரசமைப்புச் சட்ட உறுப்புகள் மற்றும் ஒழுங்குமுறைகளை பின்பற்றுகிறான். அரசாங்கம் எப்படி குடிமக்களுக்கு பொறுப்பானதோ, அதே போன்று குடிமக்களும் அரசாங்கத்திற்கு பொறுப்பானவர்கள் ஆவர்.

4.4.1 அரசியல் கடப்பாடு மற்றும் அரசியல் அதிகாரத்துவம் (Political Obligation and Political Authority)

ஒரு அரசு, அரசியல் அதிகாரத்துவம் கொண்டு இருந்தால் அதனால் கீழ்படியாதவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தமுடியும். உதாரணமாக அரசால் வரி விதிக்கப்படுகிறது எனில் வரி செலுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வரி வசூல் செய்ய அரசால் முடியும். எனினும் அரசு அவ்வாறு செய்ய வில்லை என்றால் கூட குடிமகன் தார்மீக அடிப்படையில் அரசின் சட்டத்தினை மதித்து அதற்கு கீழ்ப்படிய வேண்டும். எனவே அரசியல் கடப்பாடு என்பது எங்கும் நிறைந்திருக்கக்கூடிய தற்கால தேசிய அரசில் ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டியதாகும்.

அரசியல் கடப்பாடுகள் மூன்று முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாகும்

(i) அடையாளம் காண கூடிய அதிகாரத்திடம் அரசியல் கடப்பாடுகளை காண்பித்தல்

(ii) எதுவரை அரசியல் கடப்பாடுகளை ஆற்ற வேண்டும்?

(iii) அரசியல் கடப்பாடுகளின் அடிப்படை (The Basis of Political Obligations)

அரசியல் கடப்பாட்டின் இயல்புகள் (Features Political Obligations)

- அரசியல் ஆர்வம் கொள்வதும், சமூகப் பணி செய்தலும் விரும்பத்தக்கதாக உள்ளது.
- பொதுப்பணி செய்பவர்களுக்கு நாணயம் மற்றும் நேர்மை ஆகியவை இன்றியமையாத அம்சங்களாகும்.
- சட்டபூர்வ தன்மை மற்றும் திறனை மேம்படுத்துதல் ஆகியவை இருக்க வேண்டும்.
- குடிமக்கள் தங்களது காப்பாளரை பாதுகாக்கின்ற பொறுப்பினைக் கொண்டுள்ளனர்.



அரசியல் கடப்பாடுகளின் வகைகள்:

அரசியல் கடப்பாடுகள் நான்கு வகைப்படும்.

அ) நீதிநெறி கடப்பாடு (Moral Obligation)

வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரிக்கிறீர்களா? ஏழைகளுக்கு உதவுகிறீர்களா? வயதான பெற்றோரை பேணுகிறீர்களா? இவை உங்களின் நீதி நெறி சார்ந்த கடப்பாடுகள் ஆகும். இது சமூகத்தில் சட்டத்தின் படி நடைபெறுவதில்லை. மேலும் இவற்றை நீங்கள் நிறைவேற்றவில்லை என்றால் உங்களுக்கு சட்டப்படியான தண்டனை எதுவும் கிடையாது.

ஆ) சட்டப்படியான கடப்பாடு (Legal Obligation)

நம் நாடு மக்கள் நல அரசு கொள்கையைக் கொண்ட நாடாகும். இதில் அரசாங்கமானது நாட்டிற்கு உள் கட்டமைப்பு, வசதிகளை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. சாலை வசதி, சுகாதார மையங்கள், மருத்துவம், கல்வி, போன்றவற்றை வழங்குவது அரசின் கடமை என்பதற்கான சில உதாரணங்களாகும்.

இ) நேர்மறை கடப்பாடு (Positive Obligation)

அரசு சில விதிமுறைகளை உருவாக்கி செயல்படுத்துகிறது. அவற்றை நம்மால் கீழ்ப்படியாமல் இருக்க முடியாது. இவற்றைத்தான் நேர்மறை கடப்பாடு என்று கூறுகிறோம். உதாரணமாக வரி செலுத்துதல், நாட்டின் பாதுகாப்பு பணியில் ஈடுபடுதல்.

ஈ) எதிர்மறை கடப்பாடு (Negative Obligation)

அரசால் தடுக்கப்பட்ட எந்தவொரு செயலையும் ஒரு குடிமகன் செய்யாமல் இருப்பதே எதிர்மறை கடப்பாடு ஆகும். குற்றம் செய்தல் என்பதே ஓர் எதிர்மறைக் கடப்பாடாகும்.

நீங்கள் அரசுக்கு ஆற்ற வேண்டிய கடப்பாடுகள் எவை?

- நண்பர்களுடன் விளையாடுதல்
- தேர்தல் நேரத்தில் வாக்களித்தல்
- சகோதர / சகோதரிக்கு கற்பித்தல்
- அரசுக்கு வரி செலுத்துதல்
- பொது பணியில் சேருதல்
- அவசர காலத்தில் இராணுவத்தில் பணிபுரிதல்

அரசமைப்புச் சட்டம் கூறும் முக்கிய கடப்பாடுகள்

எந்தவொரு சட்டமும் நல்லது செய்யவில்லை என்றால் அதனை மாற்றிவிட வேண்டும். சில சமயங்களில் சில சட்டங்களை அரசு உருவாக்கும் போது அவை மக்களுக்கு தீங்கு விளைவித்தாலும் அதற்கு ஆதரவு அளிக்கப்படுகிறது. இத்தகைய சட்டமே நீராவி உருளைச் சட்டம் என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய சட்டங்களை கடுமையாக எதிர்ப்பது குடிமக்களின் கடமை ஆகும். இதன் மூலமாக நாம் அறிவது அரசியல் கடப்பாடுகள் என்பது சட்டத்தினை மதித்து நடப்பது மட்டுமல்ல சில சமயங்களில் சமுதாய நலனுக்கு எதிராக இருந்தால், சட்டத்தினை எதிர்க்கச் சொல்வதும் அரசியல் கடப்பாடுகளே ஆகும்.

அரசியல் கடப்பாடு பற்றிய கோட்பாடுகள் (Theories of Political Obligation)

வாழ்க்கையில் நாம் அனைவரும் பல கோட்பாடுகளை பின்பற்றி வருகிறோம். அதேபோன்று அரசியல் கடப்பாடுகள் பற்றி சில கோட்பாடுகளை இங்கு காண்போம்.

அ) தெய்வீகக் கோட்பாடு (Divine Theory)

முற்காலத்தில் மக்கள் நினைத்தது என்னவென்றால் "அரசினை கடவுள் படைத்தார் என்றும், அரசர் கடவுளின் பிரதிநிதியாவார்" என்றும் அவர்கள் நம்பினார்கள். இந்தக்கோட்பாடு முற்காலத்திலும், இடைக் காலத்திலும் புகழ் பெற்று இருந்தாலும் தற்காலத்தில் இந்தக் கோட்பாட்டுக்கு இடமில்லை.

ஆ) ஒப்புதல் கோட்பாடு (Consent Theory)

அரசின் அதிகாரம் அனைத்தும் மக்களின் ஒப்புதல் அடிப்படையிலானதாகும். ஹாப்ஸ், லாக், ரூசோ போன்றோர் இந்த கோட்பாட்டினை நியாயப்படுத்துவதுடன், அரசின் அதிகாரம் மக்களின் ஒப்புதல் அடிப்படையிலேயே அமைகிறது என்று கூறுகிறார்கள். ஆனாலும் பிற்காலத்தில் இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

11th Std Political Science Tamil_Unit-4.indd 66 06/12/2022 10:53:11

இ) பரிந்துரைக் கோட்பாடு (Prescriptive Theory)

இக்கோட்பாடானது அரசியல் நிறுவனங்கள் என்பவை பழங்காலத்தொட்டு அமைந்து இருந்தன என்று கூறுகிறது. இக்கருத்தினை எட்மண்ட் பர்க்கும் (Edmund Burke) ஆதரிக்கிறார். ஆனாலும் காலப்போக்கில் இது செயல் இழந்து போனதற்கு காரணம் அளவுக்கு அதிகமாக நன்கு கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகளை வலியுறுத்தியதாகும்.

ஈ) இலட்சியவாதக் கோட்பாடு (Idealistic Theory)

இந்த கோட்பாடு மனிதன் மற்றும் அரசு ஆகிய இரண்டும் தனித்தனியான குணகூறுகள் கொண்டவை என்று குறிப்பிடுகிறது. 'மனிதன்' என்பவன் அரசியல் மற்றும் பகுத்தறிவினால் உருவானவன் என்றும், அரசு என்பது சுயசார்புடைய சமூக அமைப்பு என்றும் கூறுகிறது. மேலும் இக் கோட்பாடானது மனிதன் தன் அதிகாரத்தை அரசிடம் இருந்து மட்டுமே பெறுகிறான் எனும் போது அவன் அரசிடம் இருந்து மாறுபடுகின்ற அதிகாரத்தை இழக்கின்றான் என்பதே சரியானது ஆகும் என்று கூறுகிறது. இந்த கோட்பாட்டின் கருத்துக்கள் பெரும்பாலும் மனிதனால் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு கற்பனையாக அமைந்துள்ளது.

உ) மார்க்சின் கோட்பாடு (Marxian Theory)

மார்க்சின் கோட்பாடு மூன்று நிலைகளாகப் பிரிக்கப்படுகிறது.

புரட்சிக்கு முந்தையநிலை

இந்நிலையில் மனிதன் முழுவதும் அரசியல் கடப்பாடுகளின்றி இருப்பதை கூறுகிறது.

புரட்சிக்கால நிலை

அரசியல் கடப்பாடு இல்லாத நிலையில் இருந்து மேம்பட்டு முழுவதுமாக அரசியல் கடப்பாட்டுக்கு உட்படுகின்ற நிலைக்கு மாறுவதைப் பற்றியது, இந்த புரட்சிக்கால நிலையாகும்.

புரட்சிக்குப் பிந்தையநிலை

இந்த நிலையானது முழுவதுமான அரசியல் கடப்பாடுகளில் இருந்து சமூக மேம்பாட்டிற்கு மாறும் நிலை பற்றியதாகும்.

நாம் ஏன் அரசுக்கு கீழ்படிய வேண்டும்? அது தேவையானதா?

இக்கோட்பாடுகள் அரசியல் கடப்பாடு பற்றியவையாக இருந்தாலும் சில புலனாகாதவை மற்றும் சில கோட்பாடுகள் தர்க்க அடிப்படையில் பொருத்த மற்றவையாகும். எந்த காரணத்திற்காக தனி மனிதன் அரசிடம் கீழ்ப் படிகிறான் என்பதைக் காண்போம்.

அ) தண்டணை பற்றிய பயம்

நமது கடமைகளை ஒழுங்காகச் செய்யாத போது பயம் வருகிறது. அதே போன்று தண்டனை கிடைக்கும் என்ற பயத்தின் காரணமாகவே தனிமனிதர்கள் தங்களின் பணிகளைச் செய்கிறார்கள். அரசு தனது அதிகார வலிமையைப் பயன்படுத்தியே மனிதனை முறைமைக்குத் தக்கவாறு விதிகளை பின்பற்றவைக்கின்றது.

ஆ) தேசப்பற்று

தேசிய கீதத்திற்கு ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? அவ்வாறு நிற்பதற்குக் காரணம் தேசப்பற்று ஆகும். நாம் நமது நாட்டினை நேசிக்கிறோம். ஆதலால் நாட்டின் மீது குடிமகன் என்ற முறையில் அக்கறை உணர்வுடன் செயல்பட வேண்டும்.

இ) சமூக ஒழுங்கின்மை மற்றும் அமைப்பெதிர்வாதம் பற்றிய பயம்

மனித இனம் அமைதியையும், ஒழுங்கினையும் விரும்புவது பொதுவான கொள்கையாகும். சட்டத்திற்கு கீழ்படிதலையும் மனிதர்கள் விரும்பியே ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வாறு சட்டத்திற்கு கீழ்படியாதவர்களை மனிதன் தனித்துப் பார்க்கிறான்.

ஈ) மரபுகள் மற்றும் பழக்கங்கள்

நாம் அனைவரும் துணிவு, நேர்மை, வீரம், ஒழுக்கம், கீழ்படிதல் போன்ற நல்லொழுக்கங்களை பழக்கங்களாகவே பின்பற்றி வருகிறோம். இது நமக்கு மரபார்ந்த விழுமியங்களால் ஏற்பட்டதாகும். இதே போன்று நாட்டில் குடிமக்கள் நல் மரபுகளை

நிறுவ விரும்புவதுடன் அரசுக்குக் கீழ்படிதல், போன்ற செயல்களும் பழக்கமாகின்றன.

ஆகவே அரசியல் கட்டுப்பாடு என்பது தேசிய அளவில் சிறந்த முறைமையை நிர்வகிக்க அவசியமாகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆதலால் ஒவ்வொருவரும் அரசிடமிருந்து சிறந்த கைமாறு எதிர்பார்த்தால் சட்டத்தினை மதித்து கீழ்படிய வேண்டும்.

விவாதம்



சொத்துக்களில் சமத்துவமின்மை பற்றி கூர்ந்து விவாதிப்போம்

நம் நாட்டில் அனைத்து பகுதிகளிலும் குடும்ப சொத்து என்பது தந்தைக்கு பின் அவரது மகன்களுக்கு மட்டுமே பிரித்து வழங்கப்படுகிறது. ஆனால் அதே தந்தைக்குப் பிறந்த ஒர் மகளுக்கு அந்த உரிமை வழங்கப்படவில்லை. 1956 – ஆம் ஆண்டு இந்து வாரிசு சட்டம் பெண்களுக்கும் ஆண்களைப் போன்று பிரிக்கப்படாத குடும்ப பாரம்பரிய சொத்தில் சமமான பங்கு உண்டு என உரிமையை வழங்கியுள்ளது.

கூர்ந்து விவாதிக்கவும்

ஆசிரியர் வகுப்பில் இரண்டு குழுக்களை பிரித்து, ஒவ்வொன்றிலும் மூன்று உறுப்பினர்களையும் மற்றும் ஒரு நடுவரையும் நியமனம் செய்ய வேண்டும். பின்னர் இந்து வாரிசு உரிமை சட்டம் பற்றி விவாதிக்கவும். ஒரு குழு 1956 ஆம் ஆண்டு இந்து வாரிசு சட்டத்திற்கு ஆதரவாகவும், மற்றொரு குழு அந்தச் சட்டத்திற்கு எதிராகவும் விவாதம் செய்யவும்.

4.5. சொத்து

சொத்து என்பது இயற்கை உரிமையாகும். அது மனித மாண்பு, சுதந்திரம் மற்றும் மாண்பமை வாழ்விற்கு அவசியமாகிறது. சொத்து என்பது மனிதனுடன் சட்ட தொடர்புடைய பொருள்களாகவோ அல்லது புலனாகாதவைகளாவோ இருக்கலாம்.

4.5.1. லாக் மற்றும் பயன்பாட்டு வாதத்தினரின் நியாயவாதம் (Locke and the Utilitarian Justification)

லாக்கின் கூற்றுப்படி அரசாங்கத்தின் முக்கிய பணி என்பது குடிமக்களின் உரிமைகளைக் காப்பதுடன், அமைதியான முறையில் தங்களின் சொத்துக்களை அனுபவிக்கும் நிலையினை உருவாக்கி அவர்களை மகிழ்ச்சியுடன் வாழச் செய்வதாகும். மனித இனம் வாழ்வதற்கு சொத்து அடிப்படைத் தேவை எனறு கூறுகிறார். மனிதர்கள் ஒவ்வொரு தருணத்தைப் பற்றியும் திட்டமிடுவதில்லை. ஆனால் அதே மனிதன் தனது எதிர்கால பொருளாதாரப் பாதுகாப்பிற்காகத் திட்டமிடுகிறான்.

இதனையே பயன்பாட்டு வாதம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது. "சொத்துரிமை என்பது தனிநபர்க்குத் தேவையானது. அதுவே அவனுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையைக் கொடுக்கிறது. எந்தவொரு அரசாங்கமும் மக்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையை அளிக்க நினைத்தால், முதலில் மக்களின் சொத்துரிமைக்குத் தகுந்த பாதுகாப்பு அளித்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். எந்த ஒரு அரசும் சொத்துக்களை மக்களிடம் இருந்து பறிக்கக் கூடாது. சொத்து என்பது மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவது என்பது உறுதியாகும்".

4.5.2 பெண்ணியவாதிகளின் கண்ணோட்டம் (Feminist Perspectives)

21–ஆம் நூற்றாண்டில் பெண்களில் ஆற்றலாதல் துவங்கியவுடன் சம உரிமைக் கோரிக்கை பெண்களால் முன் வைக்கப்பட்டது. இந்த பெண்ணியவாதிகள் கூறுவது என்ன என்றால் பெண்களின் இன்றைய அடிமை நிலைக்குக் காரணம் அவர்களுக்கு வருவாய், நிலம் போன்ற ஆதாரங்கள் மறுக்கப்படுவதாகும். சொத்து உரிமைகள் முழுவதும் ஆண்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு அவர்களால் கட்டுப்படுத்தப்படுவதால் பெண்கள் ஆண்களை சார்ந்தே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது, இந்தச் சார்பு நிலைதான் பெண்கள் தங்களது உரிமைகளையும், சொத்து உரிமையையும் கோருவதற்கு காரணமாக அமைந்து இருக்கின்றது.

இந்திய அரசமைப்பு சொத்து உரிமையை அடிப்படை உரிமையில் இருந்து நீக்கியது. 1978-ஆம் ஆண்டு 44-வது அரசமைப்பு சட்ட திருத்தம் மூலம் சொத்துரிமை நீக்கம் மேற்கொள்ளப்பட்டது எனினும் சொத்துரிமை என்பது விதி 300 (A) யில் சாதாரண உரிமையாக வழங்கப்பட்டுள்ளது. இதன்படி சட்டத்தினால் வழங்கப்பட்ட யாருடைய சொத்துரிமையையும் மறுக்க இயலாது என கூறப்பட்டுள்ளது. ஆகவே சொத்துரிமை தற்பொழுது சட்ட அங்கீகாரம் உள்ளதாக விளங்குகிறது.

இன்றைய குடிமைச் சமூகத்தில் வலியுறுத்தியோ அல்லது அதிகாரப்படுத்தியோ, சொத்துக்களை கையகப்படுத்தும் முறை குறைக்கப்பட வேண்டும். எனினும் சூழ்நிலையின் காரணமாக அல்லாமல் வலிமையைப் பயன்படுத்தி மக்களின் சொத்துகளை கையகப்படுத்துவதை செய்யக் கூடாது. அரசு பல நேரங்களில் பெரிய தொழிலதிபர்களுக்கு முகவர்களாகவும், இடைத்தரகர்களாகவும் செயல்படாமல் விவசாயிகளின் உறுதியான சொத்துரிமைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

கலைச்சொற்கள்: Glossary

வழக்கிட்டு நிலை நாட்டுதல் (Justiciable): நீதி மன்றத்தில் விசாரணையின் மூலமாக நிலை நாட்டக்கூடியவை.

சுதந்திரம் (Liberty): சமுதாயத்தில் அடக்குமுறையிலான கட்டுப்பாடுகளற்ற சுதந்திரமான நிலையை இது குறிக்கிறது. இது அதிகாரத்துவத்தினால் ஒருவரின் நடத்தை மற்றும் அரசியல் கருத்துக்களின் மீது திணிக்கப்படுகிறது.

மக்களாட்சி (Democracy): மக்களுக்கான சமூக சமத்துவத்தை ஏற்படுத்தும் ஆட்சிமுறை.

கடப்பாடு (Obligation): கடமை அல்லது அர்ப்பணிப்பு.

தேசப்பற்று (Patriotism): ஒருவர் தன்னுடைய நாட்டிற்கு தரும் தீவிரமான ஆதரவு.

அமைப்பெதிர்வாதம் (Anarchy): இது ஒரு ஒழுங்கற்ற நிலையாகும். அதிகாரத்துவம் இல்லாமை அல்லது அங்கீகரிக்காத நிலையாகும்.

கையகப்படுத்துதல் (Acquisition): சொத்துக்களை வாங்குதல் அல்லது சொத்துக்களை கையகப்படுத்துதல்.

பயன்பாட்டுவாதம் (Utilitarian): எந்தவொரு செயலும் மக்களைக் கவர்வதைக் காட்டிலும் அவர்களுக்குப் பயனுள்ளது அல்லது நடைமுறையிலானது என்ற வாதம்.

மறுமலர்ச்சி (Renaissance): கலை மற்றும் இலக்கியங்கள் புத்துணர்வு பெற்று மீண்டெழுதல்.

மதிப்பிடுதல் (Evaluation)

I சரியான விடையை தேர்தெடுக்கவும் .

1. எந்த உரிமை ஒருவர் தன்னுடைய கருத்தினை பொது வெளியில் தெரிவிக்க வழிவகை செய்கிறது?
   - (அ) சுதந்திர உரிமை
   - (ஆ) கல்வி உரிமை
   - (இ) சுதந்திரமாக வெளிப்படுத்தும் உரிமை
   - (ஈ) மத உரிமை
2. வாழும் உரிமை, சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியவை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   - (அ) அரசியல் உரிமைகள்
   - (ஆ) குடிமையியல் உரிமைகள்
   - (இ) சட்ட உரிமைகள்
   - (ஈ) இயற்கை உரிமைகள்
3. உரிமைகளை பாதுகாத்து ஆதரிப்பதற்கான பன்னாட்டு மற்றும் தேசிய சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பவை
   - (அ) அடிப்படை உரிமைகள்
   - (ஆ) உரிமைகள் மசோதா
   - (இ) இயற்கை உரிமைகள்
   - (ஈ) மனித உரிமைகள்

VFPI3

www.tnschoolbooks.in

4. அரசமைப்பு நிர்ணயசபையின் வரைவு குழு யாருடைய தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது?

(அ) Dr.பி.ஆர். அம்பேத்கர் (ஆ) பண்டித ஜவஹர்லால் நேரு
(இ) சர்தார்வல்லபாய் பட்டேல் (ஈ) இராஜேந்திர பிரசாத்

5. சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்ற இரண்டு உரிமைகள் கண்டிப்பாக தேவைப்படும் ஆட்சி முறை

(அ) பொதுவுடைமை (ஆ) மக்களாட்சி
(இ) முடியாட்சி (ஈ) வகுப்புவாதம்

6. நாட்டின் பாதுகாப்பு கருதி ஒருவரை தடுப்பு காவலில் வைப்பது.

(அ) ஆட்கொணர்வு ஆணை (ஆ) நீதிக்கட்டளை ஆணை
(இ) தடுப்புக் காவல் (ஈ) தடை ஆணை

7. உச்சநீதி மன்றத்தின் மூலம் குடிமக்களுக்கு அரசமைப்புச் சட்ட பரிகாரம் பெறுவதற்கு எந்த உறுப்பு வழிவகை செய்கிறது

(அ) உறுப்பு 21 (ஆ) உறுப்பு 15
(இ) உறுப்பு 32 (ஈ) உறுப்பு 18

8. அனைவருக்கும் பொதுவான குடிமையியல் சிவில் சட்டம் என்பதை எதன் மூலமாக அடையாளம் காண்கிறோம்.

(அ) அடிப்படை கடமைகள் (ஆ) அடிப்படை உரிமைகள்
(இ) அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் (ஈ) மனித உரிமைகள்

II பின்வரும் வினாக்களுக்கு மிகச்சுருக்கமாக விடையளிக்கவும்

1. இயற்கைச் சட்டம் என்றால் என்ன?
2. இயற்கைக் குடியுரிமை என்றால் என்ன?
3. நமக்கு கிடைக்கக் கூடிய அடிப்படை உரிமைகள் யாவை?
4. இந்தியக் குடிமக்களுக்கு அரசமைப்பு சட்டம் வழங்கியுள்ள பரிகார உரிமைகள் யாவை?

III. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி

1. அரசியல் கடப்பாடு பற்றிய தெய்வீகக்கோட்பாட்டினை விவரி?
2. அரசியல் கோட்பாட்டில் குடியுரிமை என்றால் என்ன?
3. இந்தியாவில் குடியுரிமை பெறக்கூடிய பல்வேறு வழிமுறைகள் யாவை?
4. பயன்பாட்டு நியாயவாதம் பற்றி லாக்கின் வரையறை யாவை?

IV. பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடையளி

1. அடிப்படை உரிமைகளுக்கும் மற்றும் உரிமைகள் மசோதாவிற்கும் உள்ள வேறுபாடுகளை கூறுக.
2. சட்டத்தின் வகைகளை விளக்குக?
3. அரசியல் கடப்பாடுகள் என்றால் என்ன? அவற்றின் இயல்புகள் யாவை?
4. அரசியல் கடப்பாடுகள் பற்றிய பல்வேறு கோட்பாடுகளை விளக்குக.

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Rajeev Bhargava, Ashok Acharya, “Political Theory- An Introduction”, Pearson India Education Services Pvt.Ltd., Uttar Pradesh, 2017.
2. Biswaranjan Mohanty, “Dynamics of Political Theory- The Current Analysis” Atlantic Publishers and Distributors (P) Ltd., New Delhi, 2010.
3. Sushila Ramaswamy, “Political Theory – Ideas and Concepts”, Macmillan India Ltd., Chennai, 2009.

11th Std Political Science Tamil_Unit-4.indd 70 06/12/2022 10:53:12

www.tnschoolbooks.in

ICT Corner

அரசியல் அறிவியலின் அடிப்படை கருத்தாக்கங்கள் – பகுதி II

குடியுரிமை அறிவோமா !

குடியுரிமை

செயல்முறை

படி 1 : குடியுரிமை செயல்பாடு பக்கத்தைத் திறப்பதற்கு உரலி (URL) அல்லது விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தவும்.

படி 2 :செயல்பாட்டுச் சாளரத்தில், செயல்பாட்டைத் தொடங்க கீழே உள்ள Explore பொத்தானைச் சொடுக்கவும்.

படி 3 : குடியுரிமை அம்சங்களை அறிய Navigation என்பதைச் சொடுக்கவும்.

குடியுரிமை URL:

http://mocomi.com/what-is-citizenship/

ICT Corner

அரசியல் அறிவியலின் அடிப்படை கருத்தாக்கங்கள் – பகுதி II

இந்தியக் குடிமகனாய் நம் கடமைகளை அறிவோமா !



இந்திய குடிமகனின் அடிப்படை கடமைகள்

செயல்முறை

படி 1 : இந்தியக் குடிமகனின் அடிப்படை கடமைகள் செயல்பாடு பக்கத்தைத் திறப்பதற்கு உரலி (URL) அல்லது விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தவும்.

படி 2 : திறக்கும் செயல்பாட்டுச் சாளரத்தின் மேல் வலது மூலையில் உள்ள Navigation பொத்தானைச் சொடுக்கவும்.

படி 3 : ஒரு சிறிய கதை வடிவ அறிமுகத்திற்குப் பிறகு , அடிப்படை கடமைகள் பற்றிய விளக்கம் தொடங்கும்.

படி 4 : Forward பொத்தானை கிளிக் செய்வதன் மூலம் அடிப்படை கடமைகளின் பல்வேறு அம்சங்களை அறிந்துகொள்ளலாம்.

இந்திய குடிமகனின் அடிப்படை கடமைகள் URL:

http://mocomi.com/indian-fundamental-duties/

11th Std Political Science Tamil_Unit-4.indd 71 06/12/2022 10:53:13

அலகு
5

மக்களாட்சி



5.1 மக்களாட்சியின் வரையறை மற்றும் வகைகள்

மக்களாட்சி என்ற சொல், கிரேக்க சொற்களான "டெமோஸ்" மற்றும் "கிரேட்டோஸ்" என்ற இரு சொற்களில் இருந்து உருவானது. கிரேக்க மொழியில் டெமோஸ் என்றால் மக்கள் என்றும் "கிரேட்டோஸ்" என்றால் ஆட்சி என்றும் பொருள்படும். இவ்விரு வார்த்தைகளின் இணைப்பிலிருந்து தான் மக்களாட்சி என்ற சொல் பிறந்தது. இதற்கு மக்களின் ஆட்சி அல்லது மக்களால் ஆளப்படுகின்ற ஆட்சி என்பது பொருள்.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து மக்களாட்சி என்பது பெரிதும் விவாதிக்கப்படுகிற ஒரு முக்கியமான கருத்தாக இருந்து வருகிறது. இருபத்தியோராம் நூற்றாண்டில் இதன் முக்கியத்துவம் மேலும் அதிகரித்துள்ளது. மக்களாட்சியின் தொடக்கம் பண்டைய கிரேக்கத்தில் இருந்தாலும் தற்போதைய நவீன கால மக்களாட்சி முறையானது பிரிட்டனில் இருந்தே தொடங்கி வந்துள்ளது.

தற்காலத்தில் மக்களாட்சி, மக்களால் மிகவும் விரும்பக்கூடிய ஒரு அரசாங்க முறையாகத் திகழ்கிறது. மேலும் உலக மக்களால் உயர்ந்த அரசியல் கருத்தாக்கமாக இது உருவாகி உள்ளது.

மக்களாட்சியின் பண்புகள்

அ) தனிமனித உரிமைகள், மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளை உள்ளடக்கிய பெரும்பான்மையோரின் ஆட்சி என்ற கொள்கை அடிப்படையில் மக்களாட்சி அமைந்துள்ளது.

Y39EH

ஆ) மக்களாட்சியின் முக்கிய அம்சமே, மக்களுக்கு தாங்கள் தேர்ந்தெடுத்த அரசிடம் கேள்வி கேட்கும் உரிமை உள்ளது என்பது மற்றும் மக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு மக்கள் எளிதாக அணுகக் கூடிய அளவிலும், அவர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுப்பதும் அரசின் கடமை என்பதும் ஆகும்.

இ) மக்களாட்சியின் தலையாய பணியே

1) சட்டத்தின் முன் அனைவரும் சமம்,

2) அனைவருக்கும் சமமான சட்டப் பாதுகாப்பு

மக்களாட்சி: தத்துவவாதிகளின் வரையறை



மக்களாட்சி என்பது ஒரு மகிழ்ச்சியான அரசாங்க வகையாகும். இவ்வகை அரசில் எவ்வளவு குழப்பங்கள் இருந்தாலும் எந்த வித பாகுபாடுமின்றி அனைவரும் சமமாக நடத்தப்படுவதற்கும் அதன் மூலம் சமத்துவ சமுதாயத்திற்குமான வழி உள்ளது.

– சாக்ரடீஸ் (Socrates)



ஓர் அரசின் மகிமையே அதன் மக்களாட்சியில் உள்ள சுதந்திரம்தான். எனவே மக்களாட்சியானது இயற்கையாகவே அரசில் சுதந்திரம் இருக்குமாறு உருவாக்கப்பட்டுள்ளது.

– பிளாட்டோ (Plato)



ஓர் மக்களாட்சி அரசமைப்பின் அடித்தளமே சுதந்திரம்தான். மக்கள் இதை விரும்பக் காரணமே, இந்த அரசமைப்பில்தான் அனைவருக்கும் சமமான அளவில் சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கும்.

– அரிஸ்டாட்டில் (Aristotle)

3) பேச்சுரிமை

4) மத சுதந்திரம்

5) அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டு நிகழ்வுகளில் பங்கேற்பது அவற்றை சமுதாயத்தில் ஏற்பாடு செய்யவுமான உரிமை போன்றவைகளும் மற்றும் மனிதனின் அடிப்படை உரிமைகளை காப்பதுமேயாகும்.

ஈ) மக்களாட்சியில் மட்டுமே சுதந்திரமான மற்றும் நேர்மையான அனைத்து குடிமக்களும் பங்கேற்கும் வகையில் தேர்தல் நடைபெறும்.

உ) மக்களாட்சியானது அனைத்து குடிமக்களும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படுவதையும், அவர்களது உரிமைகள் அரசமைப்பு சட்டங்களினால் பாதுகாக்கப்படுவதையும் உறுதிசெய்கிறது.

ஊ) மக்களாட்சி முறையானது ஒவ்வொரு நாட்டின் அரசியல், சமூக மற்றும் பண்பாட்டு வாழ்வினைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கும்.

எ) அரசியல் அமைப்பில் குடிமக்களின் பங்கேற்பை மக்களாட்சி உறுதி செய்கிறது.

ஏ) மக்களாட்சி முறை அரசாங்கத்தில் அதிகார மற்றும் குடிமை பொறுப்புகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடமே உள்ளது.

மக்களாட்சியின் வகைகள் (Types of Democracy)

மக்களாட்சி அதன் செயல்பாட்டையும் நோக்கங்களையும் பொறுத்து பல்வேறு விதங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அ) அரசியல் மக்களாட்சி (Political Democracy)

ஆ) சமூக மக்களாட்சி (Social Democracy)

இ) தொழில்சார் மக்களாட்சி (Industrial Democracy)

ஈ) பொருளாதார மக்களாட்சி (Economic Democracy)

உ) முற்றதிகார மக்களாட்சி (Totalitarian Democracy)

ஊ) தீவிர முன்னேற்றவாத மக்களாட்சி (Radical Democracy)

எ) பொது வாக்கெடுப்பு முறை மக்களாட்சி (Plebiscitary Democracy)

அ) அரசியல் மக்களாட்சி

அரசியல் மக்களாட்சியில் அரசாங்கத்தில் குடிமக்கள் தங்களின் பங்கேற்பின் மூலமாக பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுப்பர். தேர்ந்தேடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களுக்கு பதில்சொல்ல கடமைப்பட்டவர் ஆவர். மக்களின் நேரடி ஈடுபாட்டின் மூலமோ அல்லது அவர்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் இயற்றும் சட்டங்களின் மூலமோ மக்களாட்சி செயல்படுகிறது. இது மக்களின் துவக்கமுறை (Popular Initiative) என்று அறியப்படுகிறது. இதை போலவே ஒரு சட்ட முன்வரைவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உருவாக்கும் போது அதற்கு மக்கள் தங்கள் வாக்கின் மூலமாக ஒப்புதல் அளிக்கின்றனர். இது பொது மக்கள் வாக்கெடுப்பு (Referendum) என்று அறியப்படுகிறது.

இதில் இரண்டாவது வகை மக்களாட்சி முறை, பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை எனப்படும். இதில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை குறிப்பிட்ட சில காலத்திற்கு தேர்ந்தெடுக்கிறார்கள். இப்பிரதிநிதிகள் மக்களின் சார்பாக கொள்கைகளை தீர்மானிக்கிறார்கள். இந்த பிரதிநிதித்துவ மக்களாட்சி முறையே உலகின் பிரதான மக்களாட்சி முறையாக பல்வேறு நாடுகளில் உள்ளது. அதே சமயத்தில் நேரடி மக்களாட்சி முறையானது கூட்டாட்சி குடியரசான சுவிட்சர்லாந்து நாட்டில் மட்டுமே நடைமுறையில் உள்ளது.

ஆ) சமூக மக்களாட்சி

இம் மக்களாட்சி முறையானது பொருளாதாரத்தையும், சமூக நீதியையும், சமூக சமத்துவத்தையும் மேம்படுத்துகிறது. சமூக மக்களாட்சியானது பாலினம், பண்பாடு, நம்பிக்கைகள்,மரபுகள் மற்றும் விழுமியங்களில் சமூக சமத்துவத்தை நிலை நாட்டுவதை அடிப்படைக் கொள்கையாக கொண்டுள்ளது. அனைவருக்குமான சுதந்திரம் மற்றும் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளே மனித உரிமைகளுடனான வாழ்விற்கு அடிப்படை என்று சமூக மக்களாட்சி வலியுறுத்துகிறது. மேலும் ஒவ்வொரு தனிமனிதனையும் அவர்களின் உழைப்பின் மூலம் வாழ்வில் வெற்றிபெற அவனை இயன்றவனாக்குகிறது.

சமத்துவ வளர்ச்சியே சுதந்திரத்திற்கும், சுதந்திரத்தின் வளர்ச்சியே ஒரு நாட்டின் சிறந்த மக்களாட்சிக்கும் அடிப்படை என்று சமூக மக்களாட்சி வலியுறுத்துகிறது.

இ) தொழில்சார் மக்களாட்சி

தொழில்சார் மக்களாட்சி என்பது தொழிற்சாலைகளில் மக்களாட்சிக் கொள்கைகளின் அடிப்படையில் தொழிலாளர்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் மேம்படுத்தி அவர்களைப் பொறுப்புடன் செயலாற்ற வைக்கும் முறையாக இம் மக்களாட்சி முறை உள்ளது.

முடிவுகள் எடுப்பதில் நிர்வாகத்துடன் தொழிலாளர்கள் இணைந்து செயல்படுவதை இம் மக்களாட்சி முறை ஊக்குவிக்கிறது. இது தொழிலாளர்களைத் தொழிலின் பங்குதாரர்களாக ஆக்குவதன் மூலம் அவர்களை ஆற்றலுறச் செய்கிறது. நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களின் இணைந்த செயல்பாட்டின் மூலமாகவே சமுதாய வளர்ச்சி மற்றும் நாட்டின் வளர்ச்சி சாத்தியப்படும், உற்பத்தி பெருகும் என்று இம்மக்களாட்சி முறை வலியுறுத்துகிறது.

ஈ) பொருளாதார மக்களாட்சி

பொருளாதார மக்களாட்சி என்பது பல்வேறு வகுப்புகளுக்கிடையே சமத்துவத்தை ஏற்படுத்தவும் அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி, சமூக மற்றும் பொருளாதார வேறுபாடுகளையும், ஏழை – பணக்காரன் என்ற இடைவெளியை குறைப்பதுடன் பொருளாதார உற்பத்தி பெருக மக்களாட்சி முறையில் தகுந்த சூழலை ஏற்படுத்துவதும் பொருளாதார மக்களாட்சியின் அடிப்படைப் பண்புகளாகும்.

உ) முற்றதிகார மக்களாட்சி

முற்றதிகார மக்களாட்சி முறையில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்த பின் வேறு எந்த முடிவையும் எடுக்கும் அதிகாரமற்றவர்கள் ஆவர். மக்கள் பிரதிநிதிகளே நாட்டின் அனைத்து முடிவுகளையும் எடுக்கின்றனர். இந்த முறை மக்களாட்சியில் மக்கள் பிரதிநிதிகள் தேர்தல்கள் மூலம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தாலும் அவர்கள் வாக்களித்த மக்களை விட மேம்பட்டவர்களாகவே உள்ளனர். மக்களாட்சி முறையில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி இருந்தாலும் சர்வாதிகார முறையிலேயே ஆட்சி புரிகின்றனர். மக்களின் விருப்பங்களை விட ஆட்சியாளர்களின் கொள்கைகளும் ஆளும் கட்சியின் சித்தாந்தமுமே உயர்வாக இந்த மக்களாட்சி முறையில் காணப்படுகிறது. மக்களின் நலன் என்ற பெயரில் மக்களின் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு எதிராக வன்முறையை கட்டவிழ்த்து விடுவதும், பேச்சு மற்றும் எழுத்து சுதந்திரத்தை பறித்து ஒட்டுமொத்த மக்களையும் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் இதன் பண்புகள் ஆகும். முற்றதிகார மக்களாட்சி என்பது நாட்டின் பொருளாதாரத்தின் மேல் முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. மேலும் அதன் மூலம் இது மக்களையும் கட்டுப்படுத்துகிறது.

ஊ) தீவிர முன்னேற்றவாத மக்களாட்சி (Radical Democracy)

இந்த மக்களாட்சி முறையை புகழ்பெற்ற இந்திய அரசியல் சிந்தனையாளர் எம்.என்.ராய் அவர்கள் சிறந்த மக்களாட்சி முறை என்று பரிந்துரைத்தார். இந்த முறையில் மட்டுமே உண்மையான மக்களாட்சி மலரும் என்று நம்பினார். இந்த மக்களாட்சி முறையில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள் மக்களுக்கு நேரடியாகப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவர். தீவிர முன்னேற்றவாத மக்களாட்சியானது மனித நேயத்தின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமியற்றுபவர்களை விட மக்களே அரசியல் அதிகாரத்தின் உண்மையான தலைவர்கள் என்று இது கூறுகிறது.

மக்கள் பங்களிப்புடன் கூடிய உண்மையான மக்களாட்சியை தீவிர முன்னேற்றவாத மக்களாட்சி நிலைநாட்டுகிறது இதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் அதிகாரிகளும் மக்களுக்கு பொறுப்புடையவர்களாக உள்ளனர். தேவைப்பட்டால் அரசாங்கத்தை மாற்றும் அதிகாரம் மக்களிடம் உள்ளது.

எ) பொது வாக்கெடுப்பு முறை மக்களாட்சி (Plebiscitary Democracy)

பொது வாக்கெடுப்பு முறை மக்களாட்சியில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை அல்லது கட்சியை தேர்ந்தெடுத்தல்,

பொதுவான பிரச்சனைகளில் முடிவெடுத்தல், புதிய அரசியல் அமைப்பைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் மாகாணசுய நிர்ணயம் போன்றவற்றில் பொது வாக்கெடுப்பின் மூலம் தங்களது நிலைப்பாட்டினை தெரிவிக்கின்றனர்.

மக்கள் விரும்பினால் ஒரு சட்ட முன்வரைவை கொண்டுவருவதற்கும், கொள்கை உருவாக்குவதற்கும் உரிமை இந்த மக்களாட்சி முறையில் உள்ளது. ஒரு குறிப்பிட்ட அளவு ஆதரவை மக்கள் தாங்கள் கையெழுத்திட்ட மனு மூலம் தெரிவித்து தாங்கள் விரும்பிய மாற்றங்களை செய்ய அரசுக்கு பரிந்துரைக்கலாம்.

மேலும் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி சரியாக செயல்படாதபோது அல்லது மக்கள் விருப்பத்திற்கு மாறாக செயல்படும் போது, மக்கள் ஒரு குறிப்பிட்ட அளவு கையெழுத்துக்களை அவருக்கு எதிராக சேகரித்து அதன் மூலம் அவரை திரும்ப அழைக்கலாம். (இம்முறைக்கு திரும்ப அழைத்தல் என்று பொருள்)

5.2 மக்களாட்சிக் கோட்பாடுகள்

மக்களாட்சி என்ற ஒரு கோட்பாடு பல்வேறு வரலாற்றுக் காலகட்டங்களில் பல்வேறு நாகரீகங்களில் பல்வேறுவிதமாக உபயோகிக்கப்பட்டுவந்துள்ளது.மக்களாட்சியின் தொன்மை கோட்பாடானது பண்டைய கிரேக்கத்தில் தோன்றியது ஆகும். கிரேக்கத்தின் புகழ்பெற்ற நகர அரசுகள் யாவும் நேரடியான தேர்தல், பொதுக்கொள்கை மீதான விவாதங்கள், மற்றும் பொதுமக்களே முடிவெடுக்கும் முறை போன்ற மக்களாட்சி விழுமியங்களைக் கொண்டிருந்தன. கிரேக்கப் பண்பாடு, நாகரிகம் மற்றும் மொழியானது ஐரோப்பா, வட மற்றும் தென் அமெரிக்கா நாடுகளில் மெல்ல பரவத் தொடங்கிய போது இந்த மக்களாட்சியும் ஒரு ஆட்சி முறையாக அங்கெல்லாம் பரவியது.

கிரேக்க மக்களாட்சி முறையானது மெல்ல பிரதிநிதித்துவ மக்களாட்சியாக வளர தொடங்கியவுடன் அதன் முக்கியத்துவமும் அதன் தற்காலத்தைய பொருத்தமும் அதிகரித்தன. பின்பு பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை அறிவொளி காலகட்டங்களில் ஒரு பிரதான ஆட்சி முறையாக பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் பரவத்தொடங்கியது. அமெரிக்க புரட்சி (1775 – 1783) மற்றும் பிரெஞ்சு புரட்சி

செயல்பாடு

கீழ்க்கண்ட வாக்கியங்களுள் எது சரி அல்லது தவறு

1. முடியாட்சி முறை ஆட்சி தற்போது வழக்கத்தில் இல்லை.
   பதில்: ________
2. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நாடுகளுக்கிடையேயான உறவுகள் மிகுதியாக மக்களாட்சித்தன்மை வாய்ந்ததாக இப்போது உள்ளன.
   பதில்: _____________
3. நாளுக்கு நாள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசுகள் ஆளக்கூடிய நாடுகள் பெருகிக் கொண்டிருக்கின்றன.
   பதில்: __________
4. இராணுவ சர்வாதிகாரிகள் என்று தற்போதைய உலகில் யாரும் இல்லை.
   பதில்: __________
5. எது தூய அரசியல் அமைப்பிலான ஆட்சி அரசாங்கம் மக்களாட்சி அரசாங்கத்தை விட சிறந்தது?
   பதில்: ____________
6. மக்களின் அறியாமை அதிகம் உள்ள நாடுகளில் மக்களாட்சி முறை தோல்வி அடைகிறது.
   பதில்: ______
7. மக்களின் உரிமைகள் பறிக்கப்படும் போது மக்களாட்சி தோல்வியடைகிறது.
   பதில்: _______

(1789–1799) காலங்களில் மக்களாட்சியானது அனைத்து தரப்பு மக்களின் பெரும் கோரிக்கையாக உருவெடுத்தது. தற்காலத்தில் மக்களாட்சி என்பது பல்வேறு மக்களாலும், பண்பாடு மற்றும் நாடு, மொழி ஆகியவற்றைக் கடந்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு ஆட்சி முறையாக மாறிவிட்டது. மக்களாட்சி கோட்பாடுகள் அதன் நோக்கம் மற்றும் விளைவுகளைப் பொறுத்து பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



மக்களாட்சி பற்றி அறிஞர்கள் பார்வை

மக்களாட்சி என்பது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் தளத்தில் வாழும் ஓர் நிதர்சனம்/ மெய்மையாகும்

–G.D.கோவார்டு கோல்

1. மக்களாட்சி என்பது மக்களால் நடத்தப்படும் அரசாங்கம், குறிப்பாக பெரும்பான்மை மக்களால் ஆகும்.
2. மக்களாட்சி அரசாங்கத்தில் மேலான அதிகாரம் மக்களிடம் இருக்கும். இந்த அதிகாரத்தை மக்கள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க பயன்படுத்துவர். இங்கு தேர்தல்கள் சீரான இடைவெளியிலும் மற்றும் சுதந்திரமாகவும் நடைபெறும். **– தாமஸ் ஜெஃபரசன்**

5.2.1 மக்களாட்சியின் தொன்மைக் கோட்பாடு (Classical Democracy)

பண்டைய கிரேக்கத்தில் நேரடியான மக்களாட்சி முறையாக தொன்மை மக்களாட்சி முறை உருவானது. இந்த மக்களாட்சி முறையானது ஏதென்ஸ் நகரத்தில் தான் முதன் முதலில் கிமு 800 மற்றும் கிமு 500 க்கும் இடையே உருவானது. ஏதென்ஸ் நகரின் நேரடி மக்களாட்சி முறையில் நகர அரசின் (City State) குடிமக்கள் அனைவரும் சட்டமன்றத்தின் உறுப்பினர்கள் ஆவர். அவர்கள் சட்டமியற்றுதலிலும், முடிவுகள் எடுப்பதிலும் நேரடியாக பங்கேற்றனர். குடியுரிமை பெற்ற குடிமக்கள் குறைவான எண்ணிக்கையில் இருந்ததால், அவர்கள் நகரின் பிரதான இடத்தில் கூடுவதற்கும், கூடி விவாதிப்பதற்கும் எளிதாக இருந்தது. அனைத்து குடிமக்களும் தங்களது கருத்துகளை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், விவாதிக்கவும், மற்றும் வாக்களிக்கவும் முழு உரிமை இருந்தது. இதுவே தொன்மை மக்களாட்சி என அழைக்கப்படுகிறது.

தொன்மை மக்களாட்சி வெற்றிகரமாக இயங்க இரண்டு நிபந்தனைகள் உள்ளன:

அ) குடிமக்களின் எண்ணிக்கை குறைவாக இருத்தல் வேண்டும். அப்போது தான் அவர்கள் விவாதங்களில் பங்கு பெறவும் முக்கிய பிரச்சனைகளில் வாக்களிக்கவும் இயலும்.

ஆ) அனைத்து குடிமக்களையும் அரசியலில் ஈடுபடவைக்கும் அளவிற்கு தொன்மை மக்களாட்சியின் பொருளாதாரம் இருத்தல் வேண்டும்.

தொன்மை மக்களாட்சியின் விதிகளாக கீழ்க்கண்டவைகள் உள்ளன.

அ) அரசியலின் முதன்மை கருத்தியல்களாக மக்களிடையே சமத்துவம், சுதந்திரம், சட்டம் மற்றும் நீதிக்குரிய மதிப்பு ஆகியவை இருத்தல்.

ஆ) அனைவருக்கும் பொதுவான மற்றும் அனைவரையும் சமமாக நடத்தும் நீதி அமைப்பு சமுகத்தின் எல்லா தளங்களிலும் இருத்தல். எளிதானதாக மற்றும் அனைவருக்குமான சுதந்திர அரசியல் வாழ்க்கை முறையும் இருப்பதாகும்.

தொன்மை மக்களாட்சியின் சிறப்பியல்பே அரசின் அனைத்து நிலைகளிலும் மக்களின் பங்களிப்பு இருப்பதே ஆகும்.

பாதுகாக்கும் மக்களாட்சி (Protective Democracy)

உரிமைகளைப் பாதுகாக்கும் மக்களாட்சி முறை அரசாக இது இருப்பதால் இந்த மக்களாட்சி முறையானது 'பாதுகாக்கும் மக்களாட்சி' என்றழைக்கப்படுகிறது. இந்த முறை மூலம் தனிமனிதர்கள் தங்களது உரிமையையும், சுதந்திரத்தையும் பாதுகாத்துக்கொள்கிறார்கள். பதினேழு மற்றும் பதினெட்டாம் நுற்றாண்டில் தோன்றிய இந்த பாதுகாக்கும் மக்களாட்சி, உரிமைகளை அடிப்படையாக கொண்டது. இது நாட்டு மக்களின் மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைக் காப்பதற்கான வழிமுறைகளை கொண்டுள்ளது. பிரிட்டனின் புகழ்பெற்ற அரசியல் சிந்தனையாளரான ஜான் லாக் (1631-1704) இந்த மக்களாட்சி முறையை பரிந்துரைப்பவர்களின் முதன்மையானவர் ஆவார். இயற்கை உரிமைகளான வாழ்வதற்கான உரிமை, சுதந்திர உரிமை மற்றும் சொத்துரிமை எந்த அளவுக்கு ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கிறதோ அந்த அளவிற்கு தான் அவர்களின்

11th Std Political Science Tamil_Unit-5.indd 76 07/12/2022 17:03:22

சுதந்திரமும், வாக்குரிமையும் இருக்கும் என்று லாக் கூறுகிறார். **ஜெரமி பெந்தம்** (1748-1832), **ஜேம்ஸ் மில்** (1773-1836) மற்றும் **ஜான் ஸ்டுவர்ட் மில்** (1806-1873) போன்ற பயன்பாட்டுவாத சிந்தனையாளர்கள் பாதுகாக்கும் மக்களாட்சி முறையை ஆதரிக்கின்றனர்.

பாதுகாக்கும் மக்களாட்சியின் அடிப்படை அம்சங்கள்

- பாதுகாக்கும் மக்களாட்சியானது மக்கள் இறையாண்மையில் நம்பிக்கை கொண்டுள்ளது.
- மக்கள் இறையாண்மை மற்றும் பிரதிநிதித்துவ மக்களாட்சி இரண்டுமே சட்டப்பூர்வமானவை ஆகும்.
- குடிமக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளைக் காப்பதே ஓர் அரசின் அடிப்படைக் கடமையாகும்.
- அதிகாரத்துவம் மக்களுக்குப் பொறுப்புடையதாக உள்ளது. இதை நிறுவ அவ்வப்போது தேர்தல்கள் நடைபெறும்.
- நீதி, நிர்வாகம் மற்றும் சட்டமன்ற அதிகாரங்களை அதிகாரப் பிரிவினை செய்தல் மூலமே உரிமைகள், சுதந்திரம் போன்றவற்றைக் காப்பதும், சலுகைகளை அனைவருக்கும் சமமாக அளிப்பதும் சாத்தியமாகும்.
- உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட பாதுகாக்கும் மக்களாட்சி அரசமைப்புவாதத்தைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. அரசமைப்பு வாதத்தில் ஆள்பவர் மற்றும் ஆளப்படுவோர் அனைவரும் அரசமைப்பு வகுத்த விதிகளுக்கும், கொள்கைகளுக்கும் கட்டுப்பட்டவர்கள் ஆவர். அரசமைப்பு மட்டுமே அதிகாரத்தின் ஊற்றாகக் கருதப்படும். இதுவே உரிமைகளுக்கும், சுதந்திரத்திற்கும் உத்திரவாதமளிக்கிறது.

5.2.2 மக்களாட்சியின் மார்க்சிய கோட்பாடு

மார்க்சிய கோட்பாடானது மக்களாட்சியை சமூகத்தில் உள்ள வர்க்க அமைப்பின் பின்னணியில் காண்கிறது. இந்த வர்க்கப் பிரிவினையானது தொழிற்புரட்சி காலத்தில் தோன்றியதாகும். சமூகம் இரு வர்க்கங்களாக பிரிந்திருந்தது. அவை முதலாளிகள் அல்லது உரிமையாளர்கள் வர்க்கம் என்றும் தொழிலாளிகள் அல்லது பாட்டாளிகள் வர்க்கம் என்றும் அழைக்கப்பட்டன. மார்க்சின் மக்களாட்சிக் கோட்பாடானது எப்போதுமே முதலாளித்துவத்தின் மேலாதிக்கத்திற்கு சவால் விடும் வகையிலும், பாட்டாளி வர்க்கம் சுரண்டப்படுவதற்கு எதிரான வகையிலும் தனது அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. மார்க்சின் கோட்பாடு தேர்தல் தொடர்பான உரிமைகளை வலியுறுத்தவில்லை. மாறாக பொருளாதார உரிமைகளையே வலியுறுத்தி சமதர்ம மக்களாட்சி உருவாக வேண்டும் என்கிறது.

மார்க்சிய மக்களாட்சி, முதலாளித்துவத்தின் வீழ்ச்சியையும் அதன் பின் புரட்சியின் மூலம் சமூக மாற்றத்திற்கும் அறைகூவல் விடுக்கிறது. சமதர்ம சித்தாந்தத்தின் மூலமே அரசியல் அதிகாரம் சாத்தியம் என்றும் இது நாட்டின் வளத்தையும், உற்பத்தி மீதான உரிமையையும் சரிசமமாக மக்களுக்கு பிரித்தளிப்பதன் அடிப்படையில் மட்டுமே நிகழும் என்றும் கூறுகிறது. வர்க்க வேறுபாடுகள், சிறப்பு சலுகைகள் போன்றவற்றை நீக்குவதன் மூலமே சுதந்திரம், சமூக நிலை மற்றும் மக்களாட்சிச் போன்றவை சாத்தியப்படும் என்று மார்க்சிய மக்களாட்சிவாதிகள் வாதிடுகின்றனர்.

சமதர்ம சிந்தனையாளர்கள் அனைவருக்குமான கல்வி மூலம் மக்கள் தங்களை தாங்களே ஆள கற்றுக்கொள்வர் என்கின்றனர். மார்க்சின் கோட்பாடு தாராளவாத மக்களாட்சியைப் போலியானது என்று விமர்சிக்கின்றது. அது ஆளும் வர்க்கத்துக்கு ஆதரவாக இருப்பதாக கூறுகிறது. பொருளாதார ஏற்ற தாழ்வே வர்க்க பிரிவினைக்கு அடிப்படை என்றும் உற்பத்தி மற்றும் அதன் விநியோகம் மீதான உரிமையே வர்க்க பிரிவினையை ஏற்படுத்துகிறது என்றும் மார்க்சிய கோட்பாடு கூறுகிறது.

கீழ்கண்ட மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் மக்களாட்சியில் சமதர்மம் மலர முடியும் என்கின்றனர்.

அ) மார்க்சிய மக்களாட்சிவாதிகள் அரசை மக்களுக்கு எதிராக குற்றமிழைக்கின்ற ஒரு நிறுவனமாக பார்க்கின்றனர். நாட்டின்

11th Std Political Science Tamil_Unit-5.indd 77 07/12/2022 17:03:23

இராணுவத்துக்கு பதிலாக குடிமக்கள் அடங்கிய குடிமக்களின் படை ஏற்படுத்தப்படுதல்.

ஆ) அரசை நடத்துவோர் தேர்ந்தெடுக்கப்படுதல் மற்றும் அவர்கள் செயல்படாத நிலையில் அவர்களைத் திரும்ப அழைத்தல்.

இ) அரசியல் சார்புடைய காவல்துறை முழுவதுமாக நீக்கப்படல்.

ஈ) முடியாட்சியை அகற்றுதல்.

மக்களாட்சி பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்



மக்களாட்சியே சமதர்மத்திற்கான பாதை ஆகும்.

– கார்ல் மார்க்ஸ் (*Karl Marx*)



மக்களாட்சி என்பது மக்களால் மக்களுக்காகவே மக்களாலான அரசாங்க முறை ஆகும்.

– ஆப்ரகாம் லிங்கன்



எளியோருக்கும் வலியோருக்கும் சம வாய்ப்பு வழங்குதல் மக்களாட்சியில் மட்டுமே நடைபெறும் என்பதே என் கருத்து. இது வன்முறையற்ற வழியில் மட்டுமே சாத்தியப்படவேண்டும்.

– மகாத்மா காந்தி (*Mahatma Gandhi*)

5.2.3 மக்களாட்சியின் உயர்ந்தோர் குழாம் கோட்பாடு: (Elitist Theory)

மக்களாட்சியில் சமூக மற்றும் பொருளாதாரத்தில் உயர் அடுக்கில் உள்ளோரின் பங்கு தவிர்க்க முடியாதது. பல நூற்றாண்டுகளாக உயர் அடுக்கில் இருப்போர் முக்கிய வளங்களை தங்கள் கட்டுக்குள் வைத்துள்ளனர். இச்சமூகங்களில் உயர் அடுக்கில் உள்ளோர் நிலப்பிரபுக்களாகவும் தொழிற்சாலை முதலாளிகளாகவும் உள்ளனர். பின்னர் அவர்கள் ஆட்சி அதிகாரத்தையும் கைப்பற்றி ஆளத் தொடங்கி விடுகின்றனர்.

உயர்ந்தோர் குழாம் மக்களாட்சி கோட்பாட்டாளர்களுள் வில்பிரெடோ பரேட்டோ (1848–1923) கெய்டன் மோஸ்கா (1857–1941) மற்றும் ராபர்ட் மைக்கேல் (1876–1936) ஆகிய மூவரும் முக்கியமானவர்கள் ஆவர். பரேட்டோ மக்களை ஆளும் உயர்ந்தோர் மற்றும் ஆளாத உயர்ந்தோர் என்று இரண்டாக பிரிக்கிறார். ஆளும் உயர்ந்தோரிடம் ஆட்சி அதிகாரம் உள்ளது. அவர்கள் தங்களது அதிகாரத்தை கல்வி, சமூக நிலை அரசியல் பதவி தொடர்புகள் மற்றும் செல்வம் மூலம் அடைகின்றனர். இவர்களுடைய பண்புகளை பரேட்டோ உளவியல் ரீதியாக இரண்டாக பிரிக்கிறார் (அ) நரிகள்: தந்திரத்தின் மூலம் மக்களை ஏமாற்றி ஆள்வர், சூழ்ச்சியின் மூலமாக மக்களின் ஆதரவை பெறுவர். (ஆ) சிங்கங்கள்: மேலாதிக்கம் பலவந்தப்படுத்துதல் மற்றும், வன்முறை மூலமாக ஆட்சி அதிகாரத்தை அடைவர்.

மக்களாட்சி மற்றும் சமதர்மம் முதலிய சமத்துவ கருத்துக்களை விமர்சித்து அதற்கெதிராக உயர்குடியின வாதம் வளர்ந்தது. ஆனால் ராபர்ட் மைக்கேல் (Robert Michels) எனும் சிந்தனையாளர் மக்களாட்சி பற்றி மாறுபட்ட கருத்தினைக் கொண்டுள்ளார். மக்களாட்சி முறையில் மக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு நிர்வாகத்தில் மக்களின் அல்லது மக்கள் பிரதிநிதிகளின் பங்கு இருக்கும்படி இருந்தாலும் அவர்களுள் சிறு குழுவினரே அனைவரின் சார்பாகவும் முடிவுகள் எடுத்துக் கொள்கைகளை உருவாக்கி நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இதை சிறுகுழு ஆட்சியின் இரும்புச்சட்டம் (Iron Law of Oligarchy) என்று இவர் கூறுகிறார்.

5.2.4 மக்களாட்சியின் பன்மைவாத கோட்பாடு (Pluralist Theory of Democracy)

இது சிறுபான்மையினரின் விருப்பங்கள் மற்றும் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிறது. எனவே இது தாராளவாத மக்களாட்சியின் அடிப்படைப் பண்புகளை கொண்டுள்ளதாக கூறலாம். மக்களாட்சி நடைமுறைகளுக்காக சில அமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது. குறிப்பாக சட்டமன்றத்திற்கு இரு அவைகள், ஆட்சி அமைப்பிற்கு கூட்டாட்சி முறை என

சிலவற்றை இந்த கோட்பாடு பரிந்துரைக்கிறது. பன்மைவாத மக்களாட்சியில் சமுகத்தின் பல்வேறுவகையான குழுக்களும் பங்கேற்று தங்கள் உரிமைகளை பாதுகாத்திட இயலும். இந்த முறையிலான மக்களாட்சியில் சமூகத்தின் பல்வேறு வகையான குழுக்களிடம் அதிகாரமானது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இதன் மூலம் சமூகத்தின் அனைத்து பிரிவுகளும் பயன்பெறுகின்றன. மக்களாட்சியில் சீரான கால இடைவெளியில் தேர்தல்கள் நடைபெற வேண்டும். அதில் கட்சிகள், குழுக்கள் மற்றும் தனிமனிதர்களிடையே அரசியல் போட்டியை பன்மைவாத மக்களாட்சி முறை ஊக்குவிக்கிறது. ஜேம்ஸ் மேடிசன், (James Madison) ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill) மற்றும் டி டாக்வில் (Tocqueville) போன்ற பயன்பாட்டுவாத சிந்தனையாளர்கள் தேர்தல்களின் மூலமே மாறுபட்ட மற்றும் பல்வேறுவிதமான மக்களின் விருப்பங்கள் வெளிப்படும் என்கின்றனர்.

ராபர்ட் டால் (Robort Dhal) எனும் அறிஞர் மக்களாட்சியின் சாராம்சமே குழுவாட்சி (Polyarchy) எனப்படும் பல்வேறு சிறுபான்மை சமூகத்தினரும் இணைந்து பணியாற்றும் அரசியல் அமைப்பில் தான் சிறப்பாக வெளிப்படும் என்கிறார்.

உங்களுக்குத் தெரியுமா?

ராபர்ட் டாலின் கோட்பாட்டில் பின்பு ஒரு திருத்தம் செய்யப்பட்டது. அமெரிக்காவில் மக்களாட்சி செயல்படும் விதத்தை சிறப்பாக விவரிப்பதற்காக உருக்குலைந்த குழுவாட்சி என்ற கோட்பாட்டினை முன்னிறுத்த அந்த திருத்தத்தை **ராபர்ட் டால்** செய்தார்.

5.2.5 மக்களாட்சியின் ஆழ்விவாதக் கோட்பாடு (Deliberative Theory of Democracy)

மக்களாட்சியின் நோக்கமே ஆழ்ந்த பொது விவாதங்கள், பரப்புரைகள், மற்றும் வாத பிரதிவாதங்கள் வழியே பொதுமக்களின் நலன் காக்கப்படுவதாகும். இதையே இம் மக்களாட்சி முறை வலியுறுத்துகிறது. பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் விவாதங்கள் ஆகியவை கிராம அளவில் வெகு காலமாகவே உறுதியாக உள்ளன. அரசாங்கத்தின் செயல்பாட்டை கீழ்மட்டத்தில் பஞ்சாயத்து அமைப்புகள் வலுப்படுத்துகின்றன. ஜேம்ஸ் மில்லரின் கூற்றுப்படி ஆழ் விவாத கோட்பாடானது பங்கேற்பாளர்களின் பொதுவிவாதம், அதன் மூலம் அனைவரின் கருத்தையும் உள்ளடக்கிய முடிவுகள் என்ற அம்சங்களை கொண்டுள்ளது. இதன் சிறப்பம்சமே மக்கள் பொறுமையாக மாற்றுக்கருத்தை கேட்பதும், அதன் அடிப்படையில் தங்களது கருத்தில் மாற்றங்கள் கொண்டுவருவதும் தான். பொதுவிருப்பமும், பொது கருத்துமே ஆழ் விவாத கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட மக்களாட்சியின் முக்கிய பண்புகளாகும். இந்த மக்களாட்சி முறையானது பிரதிநிதித்துவ மக்களாட்சி மற்றும் நேரடியான மக்களாட்சியுடன் இணக்கமாக உள்ளது. நீதி கோட்பாடுகளின் புகழ் பெற்ற சிந்தனையாளர்களான **ரால்ஸ்** (Rawls) மற்றும் **ஹேபர்மாஸ்** (Habermas) இருவரும் அரசியல் தேர்வானது முறையாக, சட்டப்படியாக இருத்தல் வேண்டும் என்றும், ஒரு தெளிவான இலக்கை நோக்கிய சுதந்திரமான விவாதம் சமமான மற்றும் பகுத்தறியும் நபர்களிடையே நடந்து அதன் அடிப்படையில் அரசியல் தேர்வுகள் இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

செயல்பாடு

- தொலைகாட்சிகளில் நம் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றங்களில் தங்கள் தொகுதி பிரச்சனைகள் தொடர்பாக பேசுவதை கவனிக்கவும்.
- வகுப்பில் மாணவர்கள் தங்கள் வகுப்பு தலைவரை ரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கவும்.
- நாடாளுமன்ற நடைமுறைகளை பின்பற்றி வகுப்பிலும் மாணவர் நாடாளுமன்றம் ஏற்பாடு செய்து விவாதங்கள் நடத்தவும்.

www.tnschoolbooks.in

செயல்பாடு

அ) மக்களாட்சி நடைபெறும் சமூகங்களில் மதத்தையும், அரசையும் பிரிப்பது ஏன் முக்கியமாகிறது?

ஆ) அரசு பள்ளிகள் எந்த ஒரு மதத்தையும் ஏன் ஊக்குவிக்க கூடாது?

இ) இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்பதற்கான ஏதேனும் இரண்டு சான்றுகளை தருக.

ஈ) இந்தியா ஒரு மதச்சார்பற்ற அரசாக இருப்பதற்கு அச்சுறுத்தலாக உள்ள முக்கிய காரணங்கள் ஏதேனும் மூன்றினைக் கூறு.

உ) நாடாளுமன்றம், சட்டமன்றம், மாநகராட்சி மற்றும் பஞ்சாயத்துகள் என எல்லா மக்களாட்சி அமைப்புகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிகாலம் 5 ஆண்டுகள் என்று வரையறுக்கப்பட்டுள்ளதாக நீ படித்துள்ளாய். அது ஏன் அவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது?

ஊ) தினசரி பத்திரிகைகளில் நீ கண்ட ஏதேனும் மூன்று வித போராட்டங்களை பட்டியலிடு அதை ஒரு விளக்கபடத்தில் (chart) ஒட்டி உன்னுடைய வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

எ) வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களும் சுழற்சி முறையில் பங்கேற்றல்: மக்களாட்சியின் குறைகள் பற்றி முதல் மாணவனிடமிருந்து தொடங்கி ஒவ்வொரு மாணவனாக பேசவும்.

தற்காலத்தில் மக்களாட்சிமுறை ஒரு சிறந்த அரசாங்க முறையாக உருவாகி உள்ளது. ஆனாலும் அதில் குறைகள் இல்லாமலில்லை. இந்த வாக்கியம் சரியானது என நிரூபிக்க ஏதேனும் ஐந்து குறைகளை எழுதுக.

நிகழ் ஆய்வு

இரண்டு கேலிச்சித்திரங்கள் கூறும் நிகழ்வுகள்

நன்றி : தி ஹிந்து 31.12.2007 வரைந்தவர்: சுரேந்திரா

நேபாள நாட்டில் ஏப்ரல் புரட்சியும், மக்களாட்சியும்

ஏப்ரல் மாதம் 2006 –ஆம் ஆண்டு ஏழு கட்சி கூட்டணி என்ற மக்களாட்சியை ஆதரிக்கின்ற தலைவர்கள் நேபாள தலைநகரான காட்மாண்டுவை சுற்றி ஏழு இடங்களில் எதிர்ப்பு கூட்டங்களை நடத்த மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். அதை ஏற்று கூடிய லட்சக்கணக்கான நேபாள நாட்டு மக்கள் எதேச்சாதிகார முடியாட்சியை முடிவுக்கு கொண்டுவரவும், முழுமையான மக்களாட்சியை கொண்டுவரவும் நேபாள நாட்டுமுடியரசுடன் போராடத் தொடங்கினர். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இருந்த இந்த போராட்டம் அரசர் கியானேந்திராவை (King Gyanendra) பதவி விலக வைத்து மக்களாட்சிக்கு வழி வகுத்தது.

11th Std Political Science Tamil_Unit-5.indd 80 07/12/2022 17:03:25

பூடானில் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க மாற்றம்

நன்றி : தி ஹிந்து 03.11.2008 வரைந்தவர்: கேசவ்

பூடானின் நான்காவது அரசர் ஜிக்மே சிங்யே வாங்சக் (Jigme Singye Wangchuck) பூடானின் 20 மாவட்டங்களுக்குப் பயணம் செய்தார். ஒரு வரலாற்று சிறப்பு மிக்க மாற்றத்தை விளக்கவே அந்த பயணம். பூடானின் அரசர் அந்நாடு பரம்பரை முடியாட்சியிலிருந்து நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கு மாறவேண்டியதன் அவசியத்தை இந்த பயணத்தில் மக்களிடம் எடுத்துரைத்தார். அவர் 2006 – ம் ஆண்டு, தான் 34 ஆண்டுகாலமாக அமர்ந்திருந்த அரியாசனத்தை துறந்தார். பூடான் நாடு நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கு மாறியது. அரசின் தலைவராக பூடான் மன்னரின் மகன் ஜிக்மே கேசர் நம்கெயில் வாங்சக் (Jigme Khesar Namgyel Wangchuck), பொறுப்பேற்றார். இப்பொழுது பூடான் நாடாளுமன்ற மக்களாட்சியை கொண்டுள்ளது மற்றும் அரசர் ஜிக்மே ஓர் அரசமைப்பிலான மன்னராவார்.

நவீன மற்றும் சமகால மக்களாட்சி (Modern and Contemporary Democracy)

நவீன மற்றும் சமகால மக்களாட்சியானது 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கு ஐரோப்பாவில் தொழிற்புரட்சியின் விளைவாகத் தோன்றியது. அதனுடன் கூடவே தொழிலாளர்கள் எழுச்சியும் சமூக மாற்றமும் தோன்றின.

நவீன மற்றும் சமகால மக்களாட்சியின் சிறப்பம்சங்கள்

- எழுதப்பட்ட அரசமைப்பு. மக்களின் அன்றாட வாழ்வின் தேவைக்கேற்றார்போல் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் இதை வைத்திருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு தனி மனிதனுக்கும், சமூக குழுக்களுக்கும், குறிப்பாக எளியோர் மற்றும் மத சிறுபான்மையினோருக்கான அரசமைப்பு உத்திரவாதமளிக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள்.
- அரசின் பல்வேறு அமைப்புக்களுக்கிடையேயான அதிகார பிரிவினை.
- அரசாங்கம் (நிர்வாக அதிகாரம்) நாடாளுமன்றம் (சட்ட அதிகாரம்) மற்றும் நீதி அமைப்புகள் (நீதி அதிகாரம்).
- கருத்து, பேச்சு, எழுத்து மற்றும் பத்திரிகை சுதந்திரம்.
- மத சுதந்திரம்.
- அனைவருக்கும் சமமான மற்றும் பொதுவான வாக்குரிமை (ஒருவருக்கு ஒரு ஓட்டு) மற்றும் வயது வந்தோர் வாக்குரிமை.

மக்களாட்சியின் முக்கிய அம்சமாக "பெரும்பான்மையினரின் ஆட்சி" கூறப்பட்ட போதிலும் அந்த நடைமுறையானது நேர்மையான மற்றும் சுதந்திரமான தேர்தல் மூலமே சாத்தியப்படுகிறது. மேலும் உரிமைகளுக்கு தரப்படும் முக்கியத்துவம் அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் மற்றும் பத்திரிகை சுதந்திரம் முதலான சுதந்திரங்கள் பிரதிநிதித்துவ மக்களாட்சியில் இன்றியமையாதவை ஆகும். மேலும் மக்கள் அரசியல் பரப்புரைகள், தேர்தல் அறிக்கைகள் மூலம் வேட்பாளர் யார் என்று அறிகிறார்கள், அதனடிப்படையில் தங்கள் வாக்குகளை முடிவு செய்கிறார்கள்.

மக்களாட்சி முறையானது ஒரு கட்சி ஆட்சி முறையில் இருந்து பல கட்சி ஆட்சி முறை வரை பல்வேறு நாடுகளில் செயல்பட்டுவருகிறது. பல நாடுகளில் அனைவருக்கும் சமமான வாக்குரிமை என்ற கொள்கையின் அடிப்படையில் மக்களாட்சி

செயல்படுகிறது. ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சி என்ற சொற்பதத்தை மக்கள் தாராளவாத மக்களாட்சியாகவே உணர்கிறார்கள். இதன் சிறப்பம்சமே அரசியல் பன்முகத்தன்மை, சட்டத்தின் முன் அனைவரும் சமம், குடிமைச் சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகள் ஆகியவைகளாகும். பேச்சு சுதந்திரமே நவீன மக்களாட்சியின் அடிப்படைத் தேவையாகும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து அரசாங்கங்களுமே மக்களின் பேச்சு சுதந்திரத்தின் மூலம் பொறுப்புடையதாக்கப்படுகின்றன. தற்போது எளிதாக கிடைக்கின்ற தகவல்களால் மக்களும், அரசாங்கமும் சிறந்த முடிவுகளை எடுக்க முடிகின்றது.

மக்களாட்சி கீழ்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது.

- அதிகாரப் போட்டி நிறைந்த அரசியல் அமைப்பு
- பொதுவாழ்வில் பங்கேற்கும் உரிமை
- சட்டத்தின் ஆட்சி

தற்கால மக்களாட்சியின் வகைகள்:

பிரதிநிதித்துவ மக்களாட்சி (Representative Democracy)



பிரதிநிதித்துவ மக்களாட்சியில் தகுதிவாய்ந்த அனைத்து குடிமக்களும் வாக்களித்தலின் மூலம் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனர். ஒவ்வொரு தொகுதிக்கும் பிரதிநிதிகளை அந்தந்த தொகுதி மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். ஒவ்வொரு தொகுதியும் மக்கள் தொகையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கும். சமூக, அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனித்தனியே சித்தாந்தங்கள், கொள்கைகள் மற்றும் திட்டங்களைக் கொண்டுள்ளன. அவற்றை சீர்தூக்கி ஆராய்ந்து மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். வெற்றி வாய்ப்பு, மக்களிடம் உள்ள செல்வாக்கு போன்றவற்றின் அடிப்படையில் கட்சிகள் தங்கள் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கின்றன.

தேர்தலின் போது கட்சிகள் தங்கள் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை தேர்தல் அறிக்கையாக வெளியிடுகின்றன. இந்தியா போன்ற மிகப்பெரிய மக்களாட்சி நாட்டில், தேசிய மற்றும் பிராந்தியக் கட்சிகள் தங்கள் எதிர்காலத் திட்டங்கள், அதை அடையும் வழிகள் என அனைத்தையும் தேர்தல் அறிக்கையாக தயாரித்து அதன் மூலம் மக்களின் நம்பிக்கையை வெல்ல முற்படுகின்றன. எந்த ஒரு குடிமகனும், கட்சி சார்பின்றி தேர்தல்களில் போட்டியிட விரும்பினால் சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கவும் அனுமதி உண்டு. பிரதிநிதித்துவ மக்களாட்சி அமைப்பில் அரசியல் கட்சிகளின் பங்கு முக்கியமானது. அரசியல் கட்சிகள் அவ்வப்போது நடத்தும் பொதுக்கூட்டங்கள், அரசின் கொள்கைகளை விமர்சித்தோ ஆதரித்தோ வெளியிடும் அறிக்கைகள், முதலியவற்றின் வழியே மக்களை விழிப்புணர்வடையச்செய்கின்றனர். எனவே இதன் மூலம் அரசியல் கட்சிகள் மக்கள் தங்கள் தேவையை அறியச்செய்கின்றன. மேலும் அதனுடன் முக்கிய பிரச்சனைகளில் ஒரு பொதுக்கருத்தையும் உருவாக்குகின்றன. மக்கள் பிரதிநிதிகள் அரசமைப்பால் அங்கீகரிக்கப்பட்டவர்கள். இப்பிரதிநிதிகள் மக்கள் நலனுக்கான தங்களது பொறுப்பையும், கடமையையும் செய்வதற்கு அரசமைப்பால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை, தாராளவாத மக்களாட்சி முறையுடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. தாராளவாத மக்களாட்சி முறையானது

11th Std Political Science Tamil_Unit-5.indd 82 07/12/2022 17:03:27

அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பாவில் தோன்றி பின்பு பல மூன்றாம் உலக நாடுகளில் பரவி தற்போது முன்னாள் சோவியத் ரஷ்ய நாடுகளிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் காலுன்றியுள்ளது. தாராளவாத மக்களாட்சி அரசானது அதிபர் முறை மக்களாட்சி அல்லது நாடாளுமன்ற முறை மக்களாட்சி என இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தாலும் அவற்றுள் சில வேறுபாடுகளும் உள்ளன. பிரதிநிதித்துவ மக்களாட்சியானது ஒன்றுக்கொன்று தொடர்புடைய எண்ணிலடங்கா கொள்கைகளால் ஆனது.

அவற்றுள் சில:

- ஒரே சீரான இடைவெளியில் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறும் தேர்தல். வயதுவந்தோர் வாக்குரிமை மற்றும் வாக்களித்தலின் ரகசியம் காக்கப்படுதல் அடிப்படையில் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் எனும் ஒரு சுயேச்சையான அமைப்பு.
- மக்கள் தேர்ந்தெடுப்பதற்கு வசதியாக பல கட்சிகள் போட்டியிடும் தேர்தல்.
- சுதந்திரமான நீதிமன்றத்தின் மேற்பார்வையில் இயங்கும் தேர்தல் சட்டங்கள்.
- பேச்சு மற்றும் கூட்டங்கள் கூடுவதற்கான சுதந்திரம்.
- தேர்தலில் ஒரு வேட்பாளராக பங்கேற்கும் சுதந்திரம்.

பங்கேற்பு மக்களாட்சி (Participatory Democracy)

பங்கேற்பு மக்களாட்சியானது, சமத்துவம் என்ற நிலையிலிருந்து சம நீதியின் அடிப்படையிலான பங்கு என்ற நிலைநோக்கி செல்ல ஊக்குவிக்கிறது. சமீப காலங்களில் பங்களிப்பு மக்களாட்சியில் மக்களின் பங்களிப்பு அதிகரித்து வருகிறது. தொன்மை பிரதிநிதித்துவ மக்களாட்சியை விட மக்களே நேரடியாக பங்கேற்கும் மக்களாட்சியில் தான் மக்களாட்சியின் தன்மை அதிகமிருக்கும். இது குடிமை சமூகத்தின் அடிப்படையிலானது. அனைவருக்குமான வாய்ப்புகளை ஏற்படுத்தி, அந்த வாய்ப்புகளை அனைவரும் பயன்படுத்த ஏதுவான சூழலையும், முடிவெடுத்தலில் அனைவருக்குமான பங்கையும் இது உறுதி செய்கிறது. சமூக உறவுகளே அரசியல் நடவடிக்கைகளுக்கு அடிப்படையாகும். பங்களிப்பு மக்களாட்சியானது மக்களின் பங்களிப்பை அதிகரித்து அரசியல் சமத்துவத்தை ஏற்படுத்தி அதன் மூலம் சமூகத்தையே மக்களாட்சிமயமாக்குகிறது.

பங்கேற்பு மக்களாட்சியின் நோக்கமே ஆர்வமுள்ள மக்களை அரசியல், பொருளாதார மற்றும் சட்ட நடைமுறைகளில் பங்கேற்கச் செய்வதும், மக்களை அரசின் முடிவுகளுக்கு பொறுப்புடையவர்களாக மாற்றுவதுமே ஆகும். பங்கேற்பு மக்களாட்சியின் சிறப்பம்சமே அரசின் செயல்பாடுகள் மற்றும் முடிவுகள் எடுப்பதில் மக்கள் நேரடியாக பங்கேற்கும் வாய்ப்பை ஏற்படுத்துவதுதான். இந்த முறை மக்களாட்சியில் அதிகாரம் நேரடியாக மக்களிடம் மட்டும் இருக்குமே தவிர வேறு எந்த அமைப்பிடமோ, தனி நபர்களிடமோ இருக்காது. தற்போதைய பொருளாதார வளர்ச்சிக் காலத்தில் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகளை நீக்கி சமத்துவத்தை ஏற்படுத்த, மக்கள் தங்கள் பங்கேற்புகளை அளிக்கும் வகையில் பங்கேற்பு மக்களாட்சியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மிக முக்கிய பண்பே அரசியல் சமத்துவம் உள்ள ஒரு மக்களாட்சி முறையாக இருப்பதாகும். அதில் அனைவருக்கும் சமமான அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் உறுதிபடுத்தப்பட்டிருக்கும்.

5.3 மக்களாட்சியை அளவிடுதல் மற்றும் மதிப்பிடுதல்

மக்களாட்சி என்பது மக்கள் தங்களது ஒப்புதலையோ அல்லது ஒப்புதலின்மையையோ காட்டுவதற்கான ஒரு சரியான முறையான வழியாகும். இந்திய அரசமைப்பின் வரைவுக் குழு தலைவர் முனைவர் பி.ஆர்.அம்பேத்கர் இதை வலியுறுத்திக் கூறுகிறார். "அரசியலில் நமக்கு சமத்துவம் இருக்கும். ஆனால் சமூக மற்றும் பொருளாதார வாழ்வில் சமத்துவமற்ற தன்மையே நிலவும்" என்றார். அரசியலில்

ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒவ்வொரு வாக்கிற்கும் ஒரே மதிப்பு என்ற விதியை அங்கீகரிக்கிறோம். ஆனால் நம் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பின் காரணமாக நம்முடைய சமூக பொருளாதார வாழ்வில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரே மதிப்பு என்ற விதிமுறையை தொடர்ந்து மறுத்தே வருகிறோம். மக்களாட்சியை மதிப்பிடுதல் மற்றும் அளவிடுதல் என்பது அதன் தரம் மற்றும் அளவின் அடிப்படையில் நிகழ்கிறது. தர நிலையை பகுப்பாய்வு செய்வதன் மூலம் சமூக மாற்றத்தின் இயக்காற்றலை கண்டறிய ஏதுவாகிறது. அதே சமயத்தில் அளவு நிலையை பகுப்பாய்வு செய்வதன் மூலம் சிறப்பான மக்களாட்சி நடைமுறைக்கான மாற்றம் எவ்வாறு உள்ளது என்று அறிய முடிகிறது.

மக்களாட்சியின் தர நிலையினை மக்கள் பங்கெடுக்கும் ஆர்ப்பாட்டங்கள், கண்டன கூட்டங்கள், பிரச்சாரங்கள், மக்கள் கருத்து சுதந்திரத்தினை பயன்படுத்தும் விதம் மற்றும் அரசமைப்பு மக்களுக்கு கொடுத்திருக்கும் உரிமைகள் இவற்றின் மூலம் அறியலாம். சமூகத்தில் நடக்கும் நிகழ்வுகள் சமூக மாற்றத்திற்கான குறிப்பாக சாதி, மத, பாலின மற்றும் பண்பாட்டு கண்ணோட்டங்களில் முன்னோக்கி செல்லவேண்டியதை வலியுறுத்துகின்றன. வளர்ச்சிக்கான பொருளாதார முறையானது மாறிக்கொண்டேயிருக்கிறது. இதில் கொள்கைகள் வகுப்பதன் மூலம் ஏற்றத்தாழ்வுகளை களைவதற்காக மக்களாட்சி இம் மாறிவரும் பொருளாதார முறையுடன் நேரடி தொடர்பில் உள்ளது. மனித வள மேம்பாட்டுக் குறியீடு மற்றும் தனி நபர் வருமானத்தின் மூலம் மக்களாட்சியானது மதிப்பிடப்படுகிறது. கீழ்கண்ட அடிப்படை காரணிகள் மக்களாட்சியை அளவிடவும் மதிப்பிடவும் உதவுகின்றன.

1. இறையாண்மை: ஒரு ஆட்சியானது எந்த அளவிற்கு மற்ற நாடுகளின் குறுக்கீடு இல்லாமல் தன் நாட்டின் உள் விவகாரங்கள் மற்றும் வெளியுறவு கொள்கைகளை கையாள முடிகிறதோ அதுவே அதன் இறையாண்மை எனப்படும்.
2. ஆட்சி அதிகாரம்: நாட்டின் எல்லைக்குள் எந்த அளவிற்கு மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் செல்லுபடியாகுமோ அந்த எல்லைகள் ஆட்சி அதிகாரத்துக்குட்பட்டவை எனப்படும்.
3. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம்: இரகசிய வாக்கெடுப்பு முறை தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கையில் ஆட்சி அதிகாரம் இருப்பதை இது குறிக்கிறது.
4. வயது வந்தோர் வாக்குரிமை: தேர்தல்களில் ஒரு குறிப்பிட்ட வயதை கடந்த அனைத்து குடிமக்களுக்கும் எந்த வித பாகுபாடுமின்றி வாக்களிக்க கொடுக்கப்பட்டிருக்கும் உரிமை.
5. மொத்த வாக்குப்பதிவு : தேர்தல் நாளன்று வாக்களித்த மக்களின் வாக்கு சதவீதத்தை குறிக்கிறது.
6. முறைப்படுத்தப்பட்ட தேர்தல்கள்: தேர்தல் ஒரு சீரான இடைவெளியில் (5 ஆண்டுக்கு ஒரு முறை) குறிப்பிட்ட அட்டவணையில் அரசமைப்பு கூறியுள்ளபடி நடத்துதல்
7. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள்: அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் வாக்கு எண்ணிக்கையை பார்வையிட நியாயமான வாய்ப்புகளை வழங்குதல். மேலும் வாக்காளர்கள் எந்த வித பயமும், பாரபட்சமுமின்றி தங்கள் வாக்கை பதிவு செய்தல்.
8. ஊடகங்களை அணுகுதல் மற்றும் பரப்புரை : அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கும் ஊடகங்கள் மற்றும் பொதுவெளியில் பரப்புரை செய்ய அவர்களின் வாக்கு விகிதத்திற்கு ஏற்றார் போல் வாய்ப்பு வழங்குதல்.
9. சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்தல்: அரசமைப்பில் கூறியுள்ளபடியும் நீதிமன்றங்களின் விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதலின் படியும் சட்டத்தை ஆட்சியாளர்கள் செயல்படுத்துதல்.
10. சட்டமன்ற அதிகாரம்: நாடாளுமன்ற அமைப்பின் மூலமாக சட்டமன்றமானது செயலாட்சித்துறை மீது ஏற்படுத்தும் கட்டுப்பாடு சட்டமன்ற அதிகாரம் எனப்படும்.
11. சுதந்திரமான நீதித்துறை: நீதித்துறையானது செயலாட்சி துறை மற்றும் எந்த ஒரு

11th Std Political Science Tamil_Unit-5.indd 84 07/12/2022 17:03:28

வெளிப்புற குறுக்கீடும் இல்லாமல் சுதந்திரமாக செயல்படுதலை இது குறிக்கிறது.

12. எதிர்க் கட்சிகளின் பங்கு: எதிர்க் கட்சிகள், ஆளும் கட்சியின் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணித்தும், விமர்சித்தும் அது அரசமைப்பு வகுத்த பாதையை விட்டு விலகாமல் ஆட்சி புரிய வைத்து நாடாளுமன்ற மக்களாட்சியைக் காப்பதை இது குறிக்கிறது.

13. நீதிப் புனராய்வு: சட்டமன்றம் இயற்றும் சட்டங்களையும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும், அரசமைப்பு விதிகளின் அடிப்படையில் சீராய்வு செய்யவும், அவை மற்ற அமைப்புகளால் எந்த அளவிற்கு மதிக்கப்படுகிறது என்பதை கண்காணிக்கவும் உள்ள நீதிமன்ற அதிகாரம்.

14. கட்சி பலம்: கட்சிகள் நிறுவனமயமாக்கப்பட்டு அவற்றின் அதிகாரம் மற்றும் பணிகள் பரவலாக்கப்பட்டு அவை அனைவருக்குமான கட்சிகளாக இருப்பதே அவற்றின் பலத்தை தீர்மானிக்கிறது.

15. கட்சியின் சித்தாந்தம்: அரசியல் கட்சிகள் நன்கு வரையறுக்கப்பட்ட நிலையான மற்றும் ஒத்திசைவான கட்சி சித்தாந்தங்களை வகுத்துள்ளன.

16. கட்சி முறை அமைப்பு : சட்டமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை.

17. பத்திரிகை சுதந்திரம்: பத்திரிகைகள் சுதந்திரமாகவும், பயமின்றியும் தங்களது பல்வேறு வகையான அரசியல் கருத்துக்களையும், விமர்சனங்களையும் மக்களிடம் கொண்டு செல்ல எந்த அளவிற்கு முடிகிறதோ அதுவே பத்திரிகை சுதந்திரமாகும்.

18. சுதந்திரமான குடிமைச்சமூகம்: குடிமைச் சமூகமானது அரசுக்கு எதிரான அரசியல் தலைவர்களுக்கு எதிரான தங்களது கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை எந்த வித அச்சுறுத்தலுமின்றி வெளிப்படுத்தும் சூழல்.

19. குடிமைச்சுதந்திரம்: அரசமைப்பில் பேணப்பட்டுள்ள அடிப்படை மற்றும் மனித உரிமைகள் அனைத்து குடிமக்களுக்கும் வழங்கப்படுதல்.

20. சொத்துரிமை: அரசமைப்பில் பாதுகாப்பளிக்கப்பட்டிருக்கும் சொத்து உரிமைகள்.

21. மத சுதந்திரம்: மதங்களிடையே நல்லிணக்கத்தை பேணுவதற்கும் அரசியல் கொள்கைகள் மற்றும் திட்டங்களில் மதச்சார்பின்மையை நிலைநாட்டவும் மத சுதந்திரமானது அரசமைப்பால் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ளது.

22. வளங்கள் மீதான அனைவருக்குமான வாய்ப்பு: வளங்கள் சரிசமமாக அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு பொருளாதார சமநிலையை வருவாய், கல்வி மற்றும் சுகாதாரத்தின் மூலம் ஏற்படுத்துதல். இது அரசியலில் அனைவரும் பங்கேற்பதற்கான ஒரு சிறந்த யுத்தியாகும்.

23. இயற்கைச் செல்வங்கள் மற்றும் பொதுச்சொத்துக்கள் மீதான அனைவருக்குமான வாய்ப்பு: இயற்கை செல்வங்கள் மற்றும் பொதுச் சொத்துக்கள் மீது அனைவருக்கும் சரிசமமான வாய்ப்பு மற்றும் அதை எளிதில் பயன்படுத்தும் வழிகள் இருப்பின் அது அனைவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் மற்றும் சமூக விடுதலைக்கு வித்திடும்.

24. பாலின சமத்துவம்: சட்டமன்றம், சமூக அமைப்புகள் மற்றும் அரசின் பல்வேறு பதவிகளில் பெண்ணுக்கும், ஆணுக்கும் இணையான பிரதிநிதித்துவம் மற்றும் அவர்களை கண்ணியமாக நடத்துதல்.

25. ஏழை எளியோரின் சமூக பொருளாதார நிலை மேம்பட அரசியல் சமத்துவம்: சாதி, இன, பழங்குடியினர் மற்றும் மத சிறுபான்மையினருக்கு அரசமைப்பில் சமஉரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் மூலம் அவர்கள் தங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை எட்டவும் அரசின் நிர்வாக அதிகாரத்தில் பங்கேற்கவும் ஏதுவாகிறது. மேலும் சட்ட மன்றத்தில் அவர்களுக்கான பிரதிநிதித்துவத்தை பெறவும், ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்பதையும் அவர்கள் தங்களின் அரசியல் பங்கேற்பின் மூலம் பெறுகின்றனர்.

5.4 இந்திய மக்களாட்சியின் சாதனைகள்

இந்தியாவையும், இந்திய அரசமைப்பையும் உருவாக்கிய நம் முன்னோர்கள் ஒரு வலிமையான மக்களாட்சிக்கு அடித்தளத்தை இட்டுச்சென்றுள்ளனர். இது நம் இந்தியாவை சிறந்த ஒரு நாடாகத் திகழச்செய்கின்றது. நமது மக்களாட்சியின் அடித்தளமானது நம் அரசமைப்பின் சமூக அரசியல் மற்றும் பொருளாதார மாற்றத்திற்கு வலு சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது. நம் அரசமைப்பின் முகவுரையானது அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள், வழிகாட்டு நெறிமுறைகள், நாடாளுமன்ற மக்களாட்சி முறை மற்றும் சட்ட திருத்த நடைமுறைகள், நீதிப் புனராய்வு மற்றும் அரசமைப்பின் அடிப்படை அம்சக் கோட்பாடுகள் என அரசு செயல்பட வேண்டிய விதத்தை காட்டும் ஒரு வழிகாட்டியாக உள்ளது.

அரசியல் தளம் (Political Front)

- சுதந்திர இந்தியாவின் முதல் பொது தேர்தல் 1951-52ம் ஆண்டு நடந்த போது, களத்தில் 53 அரசியல் கட்சிகள் இருந்தன. சமீபத்தில் நடந்து முடிந்த 2014ம் ஆண்டு பொது தேர்தலின் போது அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 263 ஆக கூடி இருந்தது. இதிலிருந்து அரசியல் நடைமுறை விரிவாகவும் ஆழமாகவும் மாறிவருவது புலனாகிறது.
- சுதந்திர இந்தியாவில் 1951ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுத்தேர்தலில் 17.3 கோடி இந்திய மக்கள் வாக்களிக்கும் உரிமை பெற்று இருந்தனர். இவர்களில் 44.87 சதவிகிதத்தினரே வாக்களித்தனர். நாட்டின் 16வது பொதுத்தேர்தல் 2014ஆம் ஆண்டு நடந்த போது வாக்காளர்களின் எண்ணிக்கை 81.40 கோடியாக அதிகரித்திருந்தது. இதில் 66.4 சதவிகிதத்தினர் வாக்களித்தனர். இவர்களில் 67.9 சதவீதத்தினர் ஆண்கள் மற்றும் 65.6 சதவீதத்தினர் பெண்கள். இந்த தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கையும் 8251 ஆக அதிகரித்திருந்தது.
- 2004ஆம் ஆண்டு முதல் வாக்குகள், மின்னணு வாக்குபதிவு இயந்திரத்தின் மூலமாக பதிவு செய்யப்படுகின்றன. இந்த இயந்திரங்கள், இந்தியாவிலேயே தயார் செய்யப்படுகின்றன. இவற்றின் துல்லியம், மற்றும் ரகசியம் காக்கப்படுதல் ஆகியவை வெற்றிகரமாக சோதித்தறியப்பட்டுள்ளது.
- நம் தேர்தல் முறையானது அதிக வாக்குகளை எண்ணிக்கை அடிப்படையில் பெற்றவர் வெற்றி பெற்றவர் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பிரதிநிதி பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறார். சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் தேர்தல் நடைபெறும். இதன் மூலம் வாக்காளர்கள் தங்களின் பிரதிநிதிகளை சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கின்றனர்.
- நம் நாட்டில் 1989ஆம் ஆண்டிலிருந்து 18 வயது பூர்த்தியான அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இது மக்களாட்சி எனும் மகுடத்தில் மேலும் ஒரு சிறகாகும்.
- உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடான இந்தியா, தனது அனைத்து தரப்பு மக்களையும் அரவணைத்து, மாநிலங்களின் பல்வேறு கோரிக்கைகளையும் ஏற்று கூட்டாட்சி தத்துவத்துடன் ஒரு வெற்றிகரமான அரசாக திகழ்கிறது.
- இந்திய அரசமைப்பின் 73-வது மற்றும் 74-வது சட்டத் திருத்தம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கும், பெண்களுக்கும் உள்ளாட்சி அரசாங்க அமைப்புகளான கிராம ஊராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் உறுப்பினர்களாகவும், தலைவர்களாகவும் போட்டியிட இட ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தியது.
- இந்திய மக்களாட்சி முறையானது இளமைத் துடிப்போடு உள்ள உத்வேகமான ஒரு மக்களாட்சியாகும். இந்திய ராணுவம் கூட அரசியல் மற்றும் ஆட்சி அதிகாரத்தின் மீது எவ்வித செல்வாக்கையும் செலுத்த முடியாது. அதேசமயத்தில் ராணுவ அமைப்புக்கு முழு அதிகாரமும், உரிய மரியாதையும் அளிக்கப்படுகிறது.

சமூகதளம் (Social Front)

மக்களாட்சி முறையானது அரசியல் அதிகாரத்தில் மிக முக்கிய மாற்றத்தைக் கொண்டுவந்தது. மக்களாட்சி முறையினால், அரசியல் அதிகாரமானது மத்திய மற்றும் உயர் வர்க்கம் மற்றும் நகர சமூகத்திடமிருந்து மெல்ல விலகி அது தற்போது சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களிடம் உள்ளது. சுதந்திரத்திற்குப்பின் அரசமைப்பின் மூலமாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு போலவே பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் அரசு பதவிகளிலும், சட்டமன்றங்களிலும் இடஒதுகீட்டை பெற்றுள்ளனர்.

- இந்தியாவின் பத்திரிகை சுதந்திரம் மற்றும் சுதந்திரமான நீதித்துறையானது இந்திய சமூகம் தொடர்ந்து சட்டத்தின் ஆட்சியின் படி செயல்பட வழிவகை செய்கிறது.
- இந்தியர்களின் சராசரி ஆயுட்காலமானது 36 வருடங்கள் என்று 1951ஆம் ஆண்டில் இருந்தது. இது 2011-ஆம் ஆண்டு கிட்டதட்ட இரட்டிப்பாகி 66 வருடங்கள் என்று உயர்ந்துள்ளது. இதற்கு காரணமாக மருத்துவத்துறையில் இந்தியாவின் வளர்ச்சி, அனைவரையும் சென்றடைய கூடிய வகையில் அரசின் சுகாதார திட்டங்கள், தொற்றுநோய்கள் மற்றும் கொள்ளைநோய்கள் ஒழிப்புக்கான மருந்துகள் மற்றும் அதற்கான திட்டமிடல் போன்றவற்றை கூறலாம்.
- இதை போலவே சின்னம்மை மற்றும் இளம்பிள்ளை வாதம் ஆகிய நோய்களும் முழுமையாக ஒழிக்கப்பட்டுவிட்டன. கல்வித்துறையிலும் மாபெரும் வளர்ச்சியை இந்தியா கண்டுள்ளது. 1950-51-ல் வெறும் 27 பல்கலைக்கழகங்களும் 578 கல்லூரிகளும் இருந்த இந்தியாவில், 2014ஆம் ஆண்டு கணக்கின்படி சுமார் 712 பல்கலைகழகங்களும் 36,671 கல்லூரிகளுமாக பெருகி வளர்ந்து உள்ளன. இதை போலவே, எழுத்தறிவு விகிதமும் 1951-ல் 18.3 சதவிகிதத்திலிருந்து 2011-ல் 73 சதவிகிதமாக கிட்டத்தட்ட நான்கு மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளது.

பொருளாதார தளம் : (Economic Front)

இது பாதுகாப்பு விவகாரங்கள், அரசமைப்பு சட்டப்படியான மக்களாட்சி ஆளுகை, சமூகம் மற்றும் நாட்டின் பொருளாதாரம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

- இந்தியா தன் பொருளாதாரம், ராணுவம் மற்றும் அணு ஆற்றலின் காரணமாக ஆசியாவில் ஒரு வட்டார சக்தியாகவும், தெற்கு ஆசியாவில் ஒரு வல்லரசாகவும் உருவாகியுள்ளது.

இதன்படி 1991ஆம் ஆண்டு வரை நாட்டின் வளர்ச்சிக்கு ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டமிடல், வேலை வாய்ப்பிற்கு பெரிய அளவில் பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்துதல், இளைஞர்களுக்கு அறிவியல் தொழில்நுட்ப கல்வி என்றிருந்த நிலையில் 1991ஆம் ஆண்டு தாராளமயம் மற்றும் சந்தை சார்ந்த மாதிரியிலான உலகமயமாதல் என்ற பொருளாதாரத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. இது கட்டமைப்பு, சீரமைப்பு செயல்திட்டம் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு பிறகு நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அயல் நாட்டவரின் பங்களிப்பு அதிகரித்தது. இதன் மூலம் புதிய தொழில்முறை நடுத்தர வர்க்கம் என்ற பிரிவு உண்டாக்கியது. கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்தில் தொழில் நுட்ப புதுமைகள் மிகப்பெரும் வளர்ச்சியை கொண்டு வந்தன. மேலும் நகரங்களிலும், கிராமங்களிலும் உள்கட்டமைப்பு மற்றும் சாலை வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இதன் மூலம் மின்னனு தொழில்நுட்ப இந்தியா என்ற வளர்ந்த நிலை நோக்கி இந்தியா நகரத் தொடங்கியுள்ளது. வங்கித் துறை சீர்திருத்தங்களும் பெரிய சமூக மாற்றங்களை சாத்தியப்படுத்தியுள்ளன.

- இந்தியாவின் ஒட்டு மொத்த தேசிய வருவாயானது 1950-51-ல் ருபாய் 2.92 லட்சம் கோடியாக இருந்து 2014-2015-ல் கிட்டத்தட்ட 35 மடங்கு வளர்ந்து ரூபாய் 105.28 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அதை போலவே, தனி நபர் வருமானமும் 1950-51-ல் ரூபாய் 274ஆக இருந்து, 2014-2015ஆம் ஆண்டு ரூபாய் 88,533ஆக உயர்ந்துள்ளது.
- இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி 1950-51ஆம் ஆண்டுகளில் 50.8 கோடி டன்களாக இருந்தது. அது 2014-15ஆம் ஆண்டுகளில் 264.77 கோடி டன்களாக

கிட்டத்தட்ட ஐந்து மடங்கு உயர்ந்துள்ளது. உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைந்துள்ளது. இந்திய விவசாயத் துறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியே இதன் முக்கிய காரணமாகும்.

5.5 இந்திய மக்களாட்சியின் சவால்கள்:

இந்திய மக்களாட்சியில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் மற்றும் ஒட்டு மொத்த சமுகத்திற்குமான சவால்கள் உள்ளன. குறிப்பாக அனைவருக்குமான கல்வித் திட்டம் சரியாக செயலாக்கப்படாததால் இன்று இந்தியாவின் மிக முக்கிய பிரச்சினையாக எழுத்தறிவின்மை உள்ளது. வறுமை, மதவாதம், மத அடிப்படைவாதம், பாலினப் பாகுபாடு, பெண்களுக்கெதிரான வன்முறை, அரசியல் வன்முறை, சீர்திருத்தங்கள் செய்யப்படாமலே இயங்கி கொண்டிருக்கும் நீதித்துறை மற்றும் நிர்வாகத் துறை, குடிமைச் சமூகத்தின் குறைவான பங்களிப்பு, அரசியலில் அதிகரித்து வரும் குற்றவாளிகளின் எண்ணிக்கை, அதிகரித்து வரும் பொருளாதார குற்றங்கள், வளர்ச்சித் திட்டங்களில் மாநிலங்களுக்கிடையே பாகுபாடு காட்டும் மத்திய அரசு மற்றும் அனைவரையும் சரிசமமாக சென்றடையாத வளர்ச்சி போன்ற பிரச்சனைகள் இந்தியாவில் தலையாய பிரச்சனைகளாக உள்ளன. மேலும் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்பு, பணிபுரிவதற்கான சுதந்திரம் மற்றும் கட்டுப்பாடுகளும் -சம நிலைகளும் (Checks and Balances) போன்ற இந்திய மக்களாட்சியின் அடிப்படை கட்டமைப்புகள் தான் தற்கால மற்றும் எதிர்கால சவால்களாக இந்தியாவிற்கு உள்ளன.

உங்களுக்குத் தெரியுமா? அரசமைப்பின் 73-வது மற்றும் 74-வது சட்ட திருத்தத்திற்குப் பிறகும் இந்தியாவின் சில கிராமங்களில் உள்ளாட்சித் தேர்தலே பல ஆண்டுகளாக நடைபெறாமல் உள்ளதை நீங்கள் அறிவீர்களா?

கலைச்சொற்கள்: Glossary

அதிகாரத்துவம் (Authority): அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, நன்கறிந்த நடைமுறையின் வாயிலாக பெறப்படும் அதிகாரத்தை செயல்படுத்தும் உரிமை மற்றும் ஒரு குறிப்பிட்ட பதவியின் செல்வாக்கு.

குடிமைச் சமூகம் (Civil Society) : குடிமைச் சமூகம் என்பது சுயேச்சையான குழுக்கள் மற்றும் சங்கங்கள் தங்களுக்கென்று ஒரு தனியான தளத்தில் ஆட்சி அதிகாரத்திலிருந்து விலகியே இருக்கும் ஒன்றாகும்.

வகுப்புவாதம் (Communalism) : இது ஒரு அரசியல் சித்தாந்தம். பல்வேறு மதம், இனம் மற்றும் மொழியினருக்கிடையே ஏற்படும் முரண்பாடுகள், பதற்றங்கள் மற்றும் அதன் விளைவாக தோன்றும் வன்முறைகளுடன் தொடர்புடையது.

ஊழல் (Corruption) : ஊழல் என்பது சட்டத்துக்கு புறம்பான வழியில் ஒருவருக்கு ஆதரவாக செயல்படுவது. மேலும் தனி நபரின் இலாபத்திற்காக பொறுப்புகளை சரிவர செயல்படாமல் இருத்தல்.

ஆழ்விவாத மக்களாட்சி (Deliberative Democracy) : ஆழ்ந்த விவாதங்களின் தேவையை வலியுறுத்துகிற ஒரு மக்களாட்சி முறை. இது விவாதங்களின் வழியே பொது விருப்பத்தை வரையறுக்கிறது.

நீதி (Justice) : ஒவ்வொரு மனிதனுக்கும் அவரவர்க்கேற்றவாறு தண்டனைகள் மற்றும் வெகுமதிகளை நியாயமான பகிர்மானத்தின் அடிப்படையில் வழங்குதல்.

உயர்ந்தோர்குழாம் (Elite): அதிகாரம், செல்வம் மற்றும் கௌரவம் போன்றவற்றை கொண்டிருக்கும் ஒரு சிறுபான்மையினர் குழு.

பாலின பாகுபாடு (Gender Discrimination) : ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையே அவர்களின் வேறுபட்ட சமூக நிலை மற்றும் சமூகத்தில் அவர்களின் பங்கின் அடிப்படையில் பாகுபாடு காட்டுதல்.

கடைநிலை மக்களாட்சி (Grass-root Democracy) : கடைநிலை மக்களாட்சி என்பது கீழ்நிலையில் மக்களின் சமூக பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்வதற்கான முடிவுகளை மக்களின் பங்களிப்போடு சுய அரசாங்கத்தின் வழியே அவர்கள் மூலமே எடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

அரசியல் வன்முறை (Political Violence) : அரசியல் அமைப்பில் உள்ளோர் தங்களின் அரசியல் குறிக்கோளை அடைவதற்காக வன் செயல்களில் ஈடுபடுகின்றனர். மேலும், மக்களில் ஒரு சிறு பிரிவினர், அரசு தங்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காது என்று நம்புவதால் வன்முறையை அரசியல் ஆதாயத்திற்காக கையிலெடுக்கின்றனர்.

குழுவாட்சி (Polyarchy) : ஒரு குழுவால் ஆளப்படுகின்ற ஆட்சி. இசைவினால் உருவான ஒரு எல்லைக்குள் விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ இருக்கின்ற நபர்கள் தங்களுக்குள் எந்த மோதலுமின்றியும் ஒருவர் மேல் ஒருவர் மேலாதிக்கம் செய்யாமலும் ஆட்சி செய்தல்.

குடியரசு (Republic): இது அரசியல் அதிகாரமானது மக்களின் கருத்திசைவிலிருந்து உருவாகிறது என்ற கொள்கையின் படி உள்ளது. முடியாட்சி மற்றும் பரம்பரை விதிகளை இது புறந்தள்ளுகிறது.

உரிமை (Right): உரிமை எனும் கருத்தாக்கமானது தனி மனித அதிகாரம், தனித்துவம், சுதந்திரம் மற்றும் மனிதர்களுக்கிடையேயான சமத்துவம் போன்ற கருத்துக்களை ஏற்றுக் கொள்கிறது. மேலும் தகுந்த காரணங்கள் இருந்தாலன்றி மனிதர்களுக்கிடையில் பாகுபாடு காட்டுதல் கூடாது என்கிறது.

விடுதலை (Freedom): 1. ஒரு மனிதன் தான் விரும்பும் வகையில் சிந்திக்கவும், செயல்படவுமான திறன். விடுதலை என்பது குறுக்கிடாமை அல்லது தனி மனித சுய வளர்ச்சி.

2. கொடுங்கோல் மன்னனின் எதேச்சாதிகாரத்திலிருந்து விடுதலை பெற்று குடிமக்கள் அரசின் செயல்பாடுகளில் பங்கேற்று தங்களை தாங்களே நிர்வகித்து கொள்ளும் மக்களின் உரிமை.

சுதந்திரம் (Liberty): ஒரு குறிப்பிட்ட வகையில் செயல்பட அதிகார அமைப்பு அளிக்கும் உரிமை.

சமத்துவம் (Equality): ஒரே மாதிரியாக இல்லாமல் அனைவருக்கும் சரியான முறையில் பகிர்ந்தளித்தல். சமத்துவம் என்பது உரிமைகள், வாய்ப்புகள் மற்றும் விளைவுகள் அனைத்திலும் இருத்தல் வேண்டும்.

சகோதரத்துவம் (Fraternity): சகோதரத்துவம் என்பது மனிதர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் அனுதாபம், மற்றும் தோழமை கொண்டு செயல்படுதல்.

இறையாண்மை (Sovereignty): அறுதியான மற்றும் இறுதியான அதிகாரம்.இறையாண்மை என்பது அரசிடம் உள்ள உச்ச சட்ட அதிகாரம் அல்லது எதிர்க்க முடியாத அரசியல் அதிகாரம்.

சமதர்மம் (Socialism): சமதர்மம் என்பது ஒரு சித்தாந்தம். இதன்படி சொத்தானது தனி நபரின் உடைமையாக இல்லாமல் பொதுச் சொத்தாக இருக்கும். ஒரு பொருளாதார அமைப்பில் சமத்துவத்தை நிலை நாட்டுவதற்காக இது உருவானது. இதில் அரசுக்கும், சமூகத்துக்குமான உறவை தீர்மானிப்பது அரசியலின் படிநிலைகள் ஆகும்.

மதச் சார்பின்மை (Secularism): அரசானது எந்த ஒரு மதத்திற்கும் ஆதரவளிக்காமல் இருத்தல். அனைத்து மதங்களையும் சமமாக நடத்துதல்.

அரசு (The State):நிலம், மக்கள், அரசாங்கம் மற்றும் இறையாண்மை ஆகிய இந்நான்கையும் ஒருங்கே கொண்ட ஒரு அரசியல் நிறுவனம்.

11th Std Political Science Tamil_Unit-5.indd 89 07/12/2022 17:03:28

www.tnschoolbooks.in

மதிப்பிடுதல் (Evaluation)

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்

1. மக்களாட்சி என்ற சொல்லின் பொருள்

அ. மக்களின் ஆட்சி | இ. மக்களின் அதிகாரம்
ஆ. புரட்சி | ஈ. குழுவாட்சி

2. மக்களாட்சி என்பது

அ. அரசாங்க வகை | இ. சட்டத்தின் படி ஆட்சி
ஆ. அரசியல் அமைப்பு | ஈ. மக்களின் அதிகாரம்

3. மக்களாட்சி அடிக்கோடிட்டு காட்டும் கொள்கை

அ. மக்களின் ஆட்சி | இ. அரசமைப்பின் படி ஆட்சி
ஆ. தேர்தல் | ஈ. ஆளும் விதி

4. சமூக மக்களாட்சி வலுவாக நம்புவது யாதெனில்

அ. சமவாய்ப்பு மற்றும் சுதந்திரம் | இ. மனித உரிமைகள்
ஆ. சம தர்மம் | ஈ. சுதந்திரம்

5. நேரடி மக்களாட்சி இங்கு நடைமுறையில் உள்ளது.

அ. சுவிட்சர்லாந்து கூட்டாட்சி குடியரசு | இ. ரஷ்யா
ஆ. அமெரிக்க ஐக்கிய நாடுகள் | ஈ. சீனா

6. பொருளாதார மக்களாட்சி எதனை முக்கிய அடிப்படையாகக் கொண்டுள்ளது

அ. பொருளாதார உரிமைகள் மற்றும் சமூக சமத்துவம் | இ. பணியிட மக்காளட்சி
ஆ. தொழிலாளர் உரிமைகள் | ஈ. வேலைவாய்ப்பு உறுதி

7. தீவிர முன்னேற்றவாத மக்களாட்சியை முன்மொழிந்த முன்னோடி அரசியல் சிந்தனையாளர்

அ. எம்.என்.ராய் | இ. நேரு
ஆ. காந்தி | ஈ.அம்பேத்கர்

8. தீவிர முன்னேற்றவாத மக்களாட்சி எதுவாக நம்பப்படுகிறது?

அ. மக்களின் அதிகாரம் | இ. உள்ளூர் சமூகத்தின் ஆட்சி
ஆ. சட்டத்தின் ஆட்சி | ஈ. பங்கேற்பு மக்களாட்சி

9. பாதுகாப்பு மக்களாட்சி எதனை அடிப்படையாக கொண்டுள்ளது?

அ. சமத்துவம் | இ. சுதந்திரம்
ஆ. உரிமைகள் | ஈ. சமூக பாதுகாப்பு

10. மார்க்சிய கோட்பாடானது மக்களாட்சியை இந்த சமூக சூழலில் காண்கிறது.

அ. சமூகம் | இ. சமூக குழு
ஆ. வர்க்க பகுப்பாய்வு | ஈ. முதலாளித்துவ வர்க்கம்

11. மக்களாட்சியின் எந்த கோட்பாடு முதலாளித்துவத்தின் வீழ்ச்சியை ஆதரித்து சமூகத்தின் புரட்சிகர மாற்றத்திற்கு அறை கூவல் விடுத்தது.

அ. தொன்மை கோட்பாடு | இ. சமத்துவ கோட்பாடு
ஆ. மார்க்சிய கோட்பாடு | ஈ. உயர்ந்தோர் குழாம்

12. பன்மைத்துவ அரசாங்கத்தின் மூலம் எதை ஏற்படுத்தி குறிப்பிட்ட நலன்களை பாதுகாக்கிறது.

அ. சமூக சமநிலை | இ. போட்டி சமநிலை
ஆ. பொருளாதார சமநிலை | ஈ. அரசியல் சமத்துவம்

11th Std Political Science Tamil_Unit-5.indd 90 07/12/2022 17:03:28

www.tnschoolbooks.in

13. இந்திய மக்களாட்சியின் சிறப்பம்சங்களுள் ஒன்று

அ. குடிமக்களின் பங்கேற்பு
இ. நாடாளுமன்ற மக்களாட்சி
ஆ. இரகசிய வாக்குச்சீட்டு
ஈ. மேற்கூறிய அனைத்தும்

II. பின்வரும் வினாக்களுக்கு மிக சுருக்கமாக விடையளி:

1. மக்களாட்சி பற்றி ஏதாவதொரு பிரபல வரையறையை தருக.
2. பரேட்டோவின் உயர்ந்தோர்குழாம் வகைகள் குறித்து விளக்குக.
3. தீவிர முன்னேற்றவாத மக்காளட்சியின் அத்தியாவசியங்கள் யாவை?
4. மார்க்சின் வர்க்கப் பகுப்பாய்வை பற்றிக் கூறுக?
5. குழுவாட்சி என்ற பதத்தின் பொருள் என்ன?
6. பிரதிநிதித்துவ மக்களாட்சியின் கொள்கைகள் சிலவற்றை கூறுக.
7. தரநிலை மக்களாட்சிக்கு தேவையான காரணிகள் யாவை?

III. கீழ்க்கண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

1. தீவிரமுன்னேற்றவாத மக்களாட்சியில் எம்.என்.ராயின் உள்ளூர் குடியரசு பற்றி ஒரு சிறுகுறிப்பு வரைக.
2. பரேட்டோவின் உயர்ந்தோர்குழாம் கோட்பாட்டில், உயர்ந்தோர் குழுவின் தகுதிகளாக கூறப்பட்டவற்றை விவரி.
3. குடியாட்சி குறித்த ராபர்ட் டாலின் கருத்துக்கள்– வரையறு.
4. பங்கேற்பு மக்களாட்சியின் நன்மைகள் யாவை?
5. பி.ஆர். அம்பேத்கரின் மக்களாட்சி குறித்த கருத்துக்களை எழுதுக.

IV கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி:

1. மக்களாட்சி பற்றிய உயர்ந்தோர்குழாம் கோட்பாட்டை விளக்குக.
2. அரசியல் தளத்தில் இந்திய மக்களாட்சியின் சாதனைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
3. பொருளாதார தளத்தில் இந்திய மக்களாட்சியின் சாதனைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Iain McLean and Alistart McMillan (2006),Oxford Concise Dictionary of Politics (Indian Edition), Oxford University Press, New Delhi.
2. SushilaRamaswamy(2005),Political Theory: Ideas and Concepts, MacMillan India Limited, New Delhi.
3. Andrew Heywood (2002), Politics (Second Edition), Palgrave Foundations, New York.
4. Joseph A. Schumpeter (1980), Capitalism, Socialism and Democracy,S.Chand and Company, New Delhi. (with introductory note by Tom Bottomore).
5. C.B.Macpherson (1977), Democratic Theory: Essays in Retrieval, Clarendon Press, Oxford, London.

11th Std Political Science Tamil_Unit-5.indd 91 07/12/2022 17:03:28

www.tnschoolbooks.in

ICT Corner

மக்களாட்சி

மக்களாட்சி நாடுகளை
வரைபடம் வழி அறிவோமா!



மக்களாட்சி வரைபடம்

செயல்முறை

படி 1 : மக்களாட்சி வரைபடம் செயல்பாடு பக்கத்தைத் திறப்பதற்கு உரலி (URL) அல்லது விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தவும்.

படி 2 : செயல்பாட்டைத் தொடங்குவதற்குச் செயல்பாட்டுச் சாளரத்தின் கீழே அமைக்கப்பட்ட Forward பொத்தானைச் சொடுக்கவும்.

படி 3 : மக்களாட்சி நடைபெறும் நாடுகளை வண்ணக் குறியீடுகள் மூலம் அடையாளம் காண்க.

மக்களாட்சி வரைபடம் URL:

https://www.nobelprize.org/educational/peace/democracy_map/production/index.html

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்

11th Std Political Science Tamil_Unit-5.indd 92 07/12/2022 17:03:29

அலகு
6

அரசாங்கத்தின் வகைப்பாடுகள்



6.1 அறிமுகம்

அரசாங்கம் என்பது அரசின் மிக முக்கிய அங்கமாகும். அரசாங்கம் என்பது அரசியல் மற்றும் நிர்வாகம் சார்ந்த துறைகளின் உறுப்பினர்களை உள்ளடக்கியது ஆகும்.

அரசாங்கத்தின் உறுப்புகள்
- சட்டமன்றம்
- செயலாட்சி
- நீதிமன்றம்

மக்கள் நலன் சார்ந்த கொள்கை உருவாக்கத்திலும், நடைமுறைப்படுத்துவதிலும் அரசாங்கம் மிக முக்கியப்பங்கு வகிக்கின்றது. மேலும் அரசாங்கம் என்பது சட்டம் இயற்றுதல், நடைமுறை சார்ந்த பணிகளையும் மேற்கொள்கிறது. சட்டமன்றம், செயலாட்சித் துறை மற்றும் நீதிமன்றம் ஆகிய மூன்றும் அரசமைப்பின் அடிப்படையில் அரசாங்கத்தின் அங்கங்கள் ஆகும். இம்மூன்று அங்கங்களும் அரசின் நோக்கங்களுக்குச் செயல்முறை வடிவம் கொடுக்கின்றது. அரசாங்கத்தைப் பின்வரும் வகையில் ஒற்றையாட்சி, கூட்டாட்சி, நாடாளுமன்ற முறை, குடியரசுத்தலைவர் முறை என வகைப்படுத்தாலம்.

கற்றலின் நோக்கங்கள்

மாணவர்கள் பின்வருவனவற்றை அறிந்து கொள்ளலாம்

- அரசாங்கத்தினை வரையறை செய்தல்
- அரசாங்கத்தின் நோக்கத்தினைப் புரிந்து கொள்ளுதல்
- அரசாங்கத்தின் பல்வேறு வகைகளை விவரித்தல்
- அரசாங்கத்திற்கும் மற்றும் குடிமக்களுக்கும் இடையேயான தொடர்பினைப் புரிந்து கொள்ளுதல்
- அரசாங்கத்தின் செயல்பாடுகளை கூர்ந்து ஆராய்தல்

மாணவர்களின் சிந்தனைக்கு.....



- அரசாங்கம் எனும் சொல்லைக் கேட்டவுடன் மாணவர்கள் மனதில் தோன்றுவது என்ன?
- எந்தெந்த வகையில் நீங்களோ, உங்கள் குடும்பமோ அல்லது குடிமக்களோ அரசாங்கத்துடன் எவ்வகை தொடர்பில் இருக்கிறீர்கள்?
- உங்கள் அன்றாட வாழ்க்கையில் அரசாங்கத்தின் பங்களிப்பை கண்டுணர முடிகிறதா?
- அரசாங்கம் என்பது தவிர்க்க முடியாததா? அல்லது அரசாங்கம் இல்லாத நிலையிலும் குடிமக்கள் வாழ்க்கையை தொடர இயலுமா?
- அரசாங்கத்தின் செயல்பாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பங்களிப்பையும், நியமனம் செய்யப்பட்ட அதிகார வர்க்கத்தினரின் பங்களிப்பையும் உங்களால் பிரித்து அறிய முடிகின்றதா?
- அரசாங்கத்தின் சில துறைகளை கண்டுணர்ந்து அவற்றை மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி சார்ந்த துறைகள் என இனம் கண்டு வகைப்படுத்தவும்.
- அரசாங்கத்தை உங்கள் சொந்த வார்த்தைகளில் வரையறுக்கவும்.

www.tnschoolbooks.in

கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலைகள் (குடியரசுத் தலைவர் முறை)
ஐக்கிய அமெரிக்க குடியரசு – Checks and Balances (Presidential form)

செயலாட்சிப் பிரிவு (குடியரசுத் தலைவர் சட்டங்களைச் செயல்படுத்துகிறார்) 	**சட்டமன்றப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள்** ❖ சட்டங்களை முன்மொழியலாம் ❖ சட்டங்களை ரத்து செய்தல் காங்கிரசின் சிறப்புக் கூட்டத் தொடர்களுக்கு அழைக்கலாம் ❖ நியமனங்கள் செய்தல் ❖ வெளிநாட்டுடனான உடன்டிக்கைகளுக்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடுதல்	**நீதித்துறை பிரிவின் மீதான கட்டுப்பாடுகள்** ❖ கூட்டாட்சி நீதிபதிகளை நியமிக்கிறார் ❖ கூட்டாட்சியிலுள்ள குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குதல்
சட்டமன்றப் பிரிவு (காங்கிரஸ் சட்டங்களை வருவாக்குகிறது) 	**செயலாட்சிப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள்** ❖ குடியரசுத் தலைவரின் ரத்து அதிகாரங்களை மீறிச் செயல்படும் அதிகாரமிக்கதாகும் ❖ செயலாட்சியின் நியமனங்களை உறுதிசெய்தல் ❖ உடன்படிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்தல் ❖ போரைப் பிரகடனப்படுத்துதல் ❖ நிதி ஒதுக்கீடு செய்தல் ❖ குடியரசுத் தலைவரை பதவி நீக்க நடைமுறையின் மூலம் அகற்றுதல்	**நீதித்துறைப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள்** ❖ கூட்டாட்சியின் கீழமை நீதிமன்றங்களை உருவாக்குதல் ❖ நீதிபதிகளைப் பதவி நீக்கமுறையின் மூலம் அகற்றுதல் ❖ நீதித்துறையின் முடிவுகளை மீறும் அதிகாரம் கொண்டதுடன் சட்டத்திருத்தத்தினை முன்மொழியலாம் ❖ கூட்டாட்சி நீதிபதிகளின் நியமனங்களை அங்கீகரித்தல்
நீதித்துறைப் பிரிவு (உச்சநீதிமன்றமானது சட்டங்களுக்கு விளக்கமளித்தல்) 	**செயலாட்சிப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள்** ❖ செயலாட்சியின் நடவடிக்கைகளை அரசமைப்பிற்கு முரணானதாக பிரகடனப்படுத்துதல்	**சட்டமன்றப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள்** ❖ சட்டமன்றத்தின் நடவடிக்கைகளை அரசமைப்பிற்கு முரணானதாக பிரகடனப்படுத்துதல்

குறிப்பிடத்தக்க மேற்கோள்

"எந்த ஒரு மனிதனும் தனக்கு தெரியாத அல்லது அனுபவம் இல்லாத துறையில் செயல்பட விரும்புவதில்லை, அரசாங்கம் என்ற கடினமான மற்றும் மிகுதியான திறன் தேவைப்படும் துறையில் ஈடுபட தமக்குத் தகுதி உள்ளதாகக் கருதி அனைவரும் செயல்பட விரும்புகின்றனர்". – **சாக்ரடீஸ்**

அரசாங்கத்தை அறிந்து கொள்வதற்கான அணுகுமுறைகள்

பல்வேறு வகையான அணுகுமுறைகள் மூலம் அரசாங்கத்தை அறிந்து கொள்ள முயல்வது நமக்கு அரசாங்கத்தின் தோற்றம் மற்றும் அதன் செயல்பாடுகளை விரிவாக அறிந்து கொள்ள உதவுகிறது.

(அ) ஒப்பீட்டு மற்றும் வரலாற்று அணுமுறை

ஒப்பீட்டு மற்றும் வரலாற்று அணுகுமுறையானது மேற்கத்திய அரசியல்

11th Std Political Science Tamil_Unit-6.indd 94 06/12/2022 11:07:29

நிறுவனங்களைப் பண்டைய காலம் முதல் தற்காலம் வரை கற்றறிந்து உள்ளது. இந்த அணுகுமுறை விளக்கரீதியான தன்மையை கொண்டது. **அரிஸ்டாட்டில், மாண்டெஸ்க்யூ** மற்றும் **லாக்** ஆகியோர் இவ்வணுகுமுறையினைக் கையாண்டு அரசாங்கங்களை பகுத்தாய்ந்தனர்.

உதாரணமாக, அரிஸ்டாட்டில் தனது மிகச்சிறந்த படைப்பான 'அரசியல்' எனும் புத்தகத்தை எழுதும்முன் 158 நாடுகளின் அரசமைப்புகளை பகுத்தாய்ந்துள்ளார். **மாண்டெஸ்க்யூ** இங்கிலாந்து அரசமைப்பை பகுத்தாரய்ந்து பின்னர் இங்கிலாந்து அரசமைப்பின் உறுதித்தன்மைக்கு '**அதிகாரங்களின் பிரிவினையே காரணம்**' என கண்டுணர்ந்தார்.

(ஆ) சட்ட மற்றும் நிறுவனம் சார்ந்த அணுகுமுறை

பெந்தம், ஆஸ்டின் மற்றும் **டைசி** போன்ற அறிஞர்கள் இந்த அணுகுமுறையினைக் கையாண்டனர். இது அரசியல் நிறுவனங்களின் முறையான சட்டக் கட்டமைப்பை மையமாக கொண்டதாகும்.

அரசாங்கம் மற்றும் சட்டத்திற்கு இடையேயான தொடர்புகளை விளக்குவதற்கு ஏதுவாக சிலகோட்பாடுகளை உருவாக்கம் செய்ய இந்த அணுகுமுறை உதவுகின்றது. பெந்தம் இங்கிலாந்து சட்டத்தை சீரமைப்பு செய்த தன்னிகறற்ற அறிஞர் ஆவார். **ஆஸ்டின்** இறையாண்மையின் சட்டரீதியான அடிப்படையை உணர்த்தியவர் ஆவார். மேலும் இவர் இறையாண்மை என்பது பிரிக்க இயலாத, மாற்றித்தர முடியாத மற்றும் இறுதியான அதிகாரம் என்று கூறியவர் ஆவார். **ஏ.வி.டைசி** அரசாங்கத்தினை சட்டத்தின் அடிப்படையிலும், அரசாங்கங்கள் பிற கிளைகளில் அதன் செயலாக்கத்தினைப் பொறுத்தும் மதிப்பிடுகிறார்.

(இ) அரசியல் பொருளாதார அணுகுமுறை

இது அரசியலுக்குப் பொருளாதாரம் சார்ந்த விளக்கங்களை அளிக்கின்றது. மேலும் சந்தையின் பங்களிப்பு, உற்பத்தி வழிமுறைகள் மற்றும் சமூகத்திற்கு உற்பத்தி பொருட்களை கொண்டு செல்வது குறித்தும் இது விவாதிக்கின்றது. இந்த அணுகுமுறை தாராளவாத அரசியல் பொருளாதாரம் மற்றும் மார்க்சிய அரசியல் பொருளாதாரம் என இருவகையாக வகைப்படுத்தப்படுகின்றது.

(ஈ) அரசியல் சமூகவியல் அணுகுமுறை

இந்த அணுகுமுறையானது சமூகவியல் மற்றும் மானுடவியல் சார்ந்து உள்ளது. மேலும் இதனை அமைப்புசார் அணுகுமுறை என்றும் கூறலாம். அரசாங்கம் அல்லது அரசியல் அமைப்பு என்பது சமூகம் எனும் பெரிய கட்டமைப்பில் உள்ளடங்கிய துணை அமைப்பு என்று அரசியல் சமூகவியல் உறுதி செய்கின்றது. இந்த அணுகுமுறை பெரிய மற்றும் சிறிய அமைப்புகளுக்கிடையேயான தொடர்பை ஆராய்கின்றது.

மாண்டெஸ்க்யூ அரசாங்கத்தை மூன்று விதமாக வகைப்படுத்துகிறார், அவை முறையே குடியரசு, முடியாட்சி மற்றும் கொடுங்கோல் அரசாங்கம் ஆகும்.

குடியரசு அரசாங்கம்

இவ்வகை அரசாங்கத்தில் மக்கள் இறையாண்மை அதிகாரத்தை பெற்றுள்ளனர்.

முடியாட்சி அரசாங்கம்

இது ஒரு தனி மனிதனின் ஆட்சியாகும். அத்துடன் நிலையாக நிறுவப்பட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடத்தப்பெறுவது ஆகும்.

கொடுங்கோல் அரசாங்கம்

ஒருதனிமனிதனின் விருப்பு, வெறுப்பிற்கு உட்பட்டே ஆளுகை நடைபெறும். மேலும் நிறுவப்பெற்ற மற்றும் நிலையான சட்டதிட்டங்கள் கிடையாது. மாண்டெஸ்க்யூவின் கூற்றுப்படி, அரசு தொடர்ந்து நீடித்திருப்பதற்கு "உறுதியான சமுதாயத்தினுடைய குறிப்பிட்ட உத்வேகத்தின் பண்பியல் வடிவத்தை சார்ந்திருக்கிறது".

6.2. அரசாங்கத்தின் பொருள் வரையறை மற்றும் தன்மை:

அரசாங்கம் என்பது அரசின் செயலாட்சிப் பணிகளைக் குறிப்பதாகும். இது குடிமை, பெருநிறுவனம், மதம், கல்வி மற்றும் பிற குழுக்களுக்கு சட்டம் இயற்றி செயல்படுத்தும் அதிகாரம் கொண்ட அமைப்பினைக் குறிப்பதாகும்.

அரசாங்கம் எனும் சொல்லானது பழைய பிரெஞ்சு, வார்த்தையான 'ஆளுநர்' (Governor) என்பதிலிருந்து பெறப்பட்டதாகும். அது 'குபர்நேட்'

(Gubernate) என்ற லத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் இயக்குதல், ஆட்சி, வழிகாட்டு, ஆளுகை என்பதாகும்.

மிகப்பழமையான அரசாங்க முறை எது?:

இங்கிலாந்தின் முடியாட்சியே மிகப் பழமை வாய்ந்த அரசாங்க வடிவமாகும். முடியாட்சியில் மன்னர் அல்லது ராணி அரசின் தலைவராக இருப்பார். இங்கிலாந்து முடியாட்சியானது அரசமைப்பிலான முடியாட்சி என அழைக்கப்படுகிறது. மன்னர் அரசினுடைய தலைவராக இருந்தாலும், சட்டமியற்றக்கூடிய தகுதி தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்திடமே உள்ளது என்பது இதன் பொருளாகும்.

அரசாங்கத்தின் வகைப்பாடு பற்றி அரிஸ்டாட்டில்

அரிஸ்டாட்டில் இரண்டு அடிப்படைகளின் இணைவில் அவர் பகுப்பாய்ந்த அரசமைப்புக்களை வகைப்படுத்தியுள்ளார்.

முதலாவது அடிப்படை

ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை ஒன்று, சில மற்றும் பல என்பதன் அடிப்படையில் முடியாட்சி, பிரபுக்கள் ஆட்சி, தூயஅரசியல் அமைப்புமுறை (Polity) என வகைப்படுத்தியுள்ளார்.

இரண்டாவது அடிப்படை

அரசாங்கம் யாருடைய நலனுக்காக செயல்படுகின்றது என்ற அடிப்படையில் பொதுநலம் மற்றும் சுயநலம் என்று வகைப்படுத்தியுள்ளார். கீழ்வரும் அட்டவணை மூலம் நெறி தவறிய மூன்று வடிவங்களான கொடுங்கோலாட்சி, சிறுகுழு ஆட்சி மற்றும் மக்களாட்சியினை காணலாம்.

அதிகாரத்தில் உள்ளோர் எண்ணிக்கை	மக்கள் நலம்	சுயநலம்
ஒன்று	முடியாட்சி	கொடுங்கோல் ஆட்சி
சிலர்	பிரபுக்கள் ஆட்சி	சிறுகுழுவின் ஆட்சி
பலர்	தூய அரசியல் அமைப்பு முறை (Polity)	மக்களாட்சி அல்லது கும்பல் ஆட்சி

செயல்பாடு

ஒவ்வொரு தனிமனிதனின் "கருவறை முதல் கல்லறை "வரையிலான செயல்பாடு அரசு முகமைகளின் மூலமே ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு கட்டுப்படுத்தப்படுகிறது.

கருவறை முதல் கல்லறை வரையிலான தனிமனித வாழ்வில் அரசாங்கத்தின் பங்களிப்பை வரிசைப்படுத்துக.

1.
2.
3.
4.

விவாதம்

வகுப்பறையில் கீழ்கண்ட தலைப்பினை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவும்.

- அரிஸ்டாட்டிலின் அரசாங்க வகைப்பாட்டினை தற்போதைய நமது இந்திய அரசியல் முறைமையுடன் ஒப்பிடுக.
- நமது அரசாங்கம் மக்களின் பொது நலனுக்காக செயல்படுகிறதா? அல்லது ஒரு சிலரின் சுயநலனுக்காக செயல்படுகிறதா?
- உண்மையில் இந்திய மக்களாட்சி மக்களின் பொது நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறதா? அல்லது ஒரு சிலரின் சுயநலத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறதா?



6.3 ஒற்றையாட்சிமுறை அரசாங்கம் (Unitary Form of Government):

ஒற்றையாட்சி அரசாங்கம் என்பது ஒரு இறையாண்மையுடைய அரசு ஆகும். மத்திய அரசாங்கமே அனைத்து அதிகாரத்தையும் உள்ளடக்கியதாகும். மத்திய அரசாங்கம் தற்காலிகமாகப் பகிர்ந்தளித்த அதிகாரத்தின் அடிப்படையிலேயே பிற அமைப்புகள் செயல்பட இயலும். ஒற்றையாட்சி அரசாங்கத்தில் அனைத்து அதிகாரங்களும் மையமாக ஒரிடத்தில் குவிந்து இருக்கும்.

ஒற்றையாட்சி முறை அரசாங்கங்கள் – உதாரணம்: இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான் மற்றும் இலங்கை.

ஒற்றையாட்சியின் வரையறை:

ஏ.வி.டைசி:

ஓர் மைய சக்தியே மேலான சட்டமியற்றும் அதிகாரத்தினை வழக்கமாகச் செயல்படுத்துகிறது.

கார்னர்:

ஓர் மத்திய அமைப்பிடம் அரசாங்கத்தின் அனைத்து அதிகாரங்களும் அரசமைப்பு மூலம் வழங்கப்பட்டிருக்கும்.

சி.எஃப்.ஸ்ட்ராங்:

ஒற்றையாட்சி அரசாங்கத்திற்கு இரண்டு முக்கியத் தகுதிகள் உள்ளன அவையாவன:-

- ❖ மத்திய அரசாங்கத்தின் மேலான தன்மை
- ❖ இறையாண்மையுடைய துணை அமைப்புகள் இல்லாதிருத்தல்

ஒற்றையாட்சி முறை அரசாங்கத்தின் நிறைகள் (*Merits of Unitary form of Government*)

- ❖ சிறிய நாடுகளுக்கு உகந்தது
- ❖ அதிகாரம் மற்றும் பொறுப்பு சார்ந்த மோதல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை.
- ❖ ஒற்றையாட்சி முறையில் சரியான நேரத்தில் முடிவுகள் எடுக்கப்படுவதுடன் செயல்பாடுகள் விரைவாக இருக்கும்.
- ❖ ஒற்றையாட்சி முறை அரசாங்கம் குறைந்த செலவீனம் கொண்டதாகும்.
- ❖ அரசமைப்பில் திருத்தங்கள் கொண்டுவருவது எளிதாகும்.
- ❖ நாடு முழுவதற்குமான ஒரே சீரான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிர்வாகம் ஆகியவை இருக்கும்.

ஒற்றையாட்சி முறை அரசாங்கத்தின் குறைகள் (*De-merits of Unitary form of Government*)

- ❖ பெரிய நாடுகளுக்கு ஒற்றையாட்சி முறை பொருந்தாது.
- ❖ மத்திய அரசாங்கம் பல சிக்கலான பிரச்சினைகளை சமாளிக்க நேர்வதால் நிர்வாக ரீதியான தாமதம் எற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகும்.
- ❖ மத்திய அரசானது வட்டாரத் தேவைகள் சார்ந்த துவக்கமுறை மற்றும் பிரச்சனைகளில் கவனம் செலுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை.
- ❖ மத்திய அரசாங்கத்தில் அதிக அதிகாரங்கள் குவிந்து உள்ளதால், மத்திய அரசாங்கம் ஏதேச்சதிகாரமான போக்கை கடைபிடிக்க வாய்ப்புள்ளது.

இந்திய அரசமைப்பின் ஒற்றையாட்சி இயல்புகள்

அ) உறுதியான மத்திய அரசாங்கம்

அதிகாரப் பகிர்வானது மத்திய அரசுக்குச் சாதகமாக இருப்பதுடன், அதிகாரம்

சமநிலையற்று பகிரப்பட்டிருக்கும். முதலில் இந்தியாவில் மத்தியப்பட்டியலானது மாநிலப் பட்டியலைவிட அதிக அதிகாரங்கள் கொண்டிருக்கிறது. இரண்டாவதாக முக்கியமான அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடமே இருக்கிறது. மூன்றாவதாக பொதுப்பட்டியலிலும் மத்திய அரசின் அதிகாரமே மேலோங்கி இருக்கிறது.

ஆ) மாநில நிலப்பரப்புகளின் மீதான மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடு

இந்திய நாடாளுமன்றம் தன்னிச்சையாக மாநிலங்களின் பெயர், நிலப்பரப்பு மற்றும் எல்லைகளை வரையறை செய்ய இயலும்.

இ) ஒற்றை அரசமைப்பு

இந்திய அரசமைப்பானது மத்திய அரசமைப்பை உள்ளடக்கியது ஆகும். இதன்படி மட்டுமே மத்திய, மாநில அரசாங்கங்கள் செயல்பட முடியும்.

ஈ) அரசமைப்பின் நெகிழும் தன்மை

இந்திய அரசமைப்பின் பெரும்பான்மையான பகுதியை நாடாளுமன்றம் தன்னிச்சையாக அரசமைப்பு சட்ட திருத்தத்தின் மூலமாக மாற்றலாம். இம்மாற்றங்களைச் செய்ய சாதாரண பெரும்பான்மை அல்லது சிறப்பு பெரும்பான்மை பெற்றிருந்தால் போதுமானதாகும்.

உ) மாநிலங்களின் சமநிலையற்ற பிரதிநிதித்துவம்

கூட்டாட்சி தத்துவத்தின்படி நாடாளுமன்றத்தின் மேலவையில் மாநிலங்களுக்கு சமமான பிரதிநிதித்துவம் அளித்தல் வேண்டும். மாறாக இந்திய மாநிலங்களுக்கு சமமான பிரதிநிதித்துவம் மாநிலங்களவையில் அளிக்கப்படவில்லை.

ஊ) நெருக்கடி நிலை அதிகாரங்கள்

இந்தியாவில் நெருக்கடி நிலை பிரகடனத்தின் போது மத்திய அரசாங்கம் மிகவும் வலிமையாக இருப்பதுடன் மாநில அரசுகள் மத்திய அரசின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் சென்றுவிடும். நெருக்கடி நிலை காலத்தில் கூட்டாட்சி நடைமுறையானது அரசமைப்புச் சட்டதிருத்தம் செய்யப்படாமலேயே ஒற்றையாட்சி நிலைக்கு சென்றுவிடும். இவ்வகையான மாற்றம் எந்தவொரு கூட்டாட்சி அமைப்பிலும் கிடையாது.

எ) ஒற்றைக் குடியுரிமை

இந்தியா ஒற்றைக்குடியுரிமை என்னும் முறையினை ஏற்றுக்கொண்டுள்ளது. நம் நாட்டில் இந்தியக் குடியுரிமை மட்டுமே உள்ளது, மாநிலங்களுக்கு தனி குடியுரிமை கிடையாது.

நம் நாட்டில் எந்த மாநிலத்திலும் பிறந்த அல்லது வசிக்கின்ற அனைத்து குடிமக்களும், மாநில வேறுபாடின்றி நாடு முழுவதும் ஒரே மாதிரியான உரிமைகளைக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்கா, சுவிட்சர்லாந்து மற்றும் ஆஸ்திரேலியா போன்ற கூட்டாட்சி அரசுகளில் குடிமக்கள் 'இரட்டைக் குடியுரிமை' பெற்றுள்ளனர். அதாவது தேசியக் குடியுரிமை மற்றும் மாநிலக் குடியுரிமை ஆகியவையாகும்.

ஏ) ஒருங்கிணைந்த ஒரே நீதித்துறை

இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றத்திலிருந்து கீழமை நீதிமன்றங்கள் வரை படிநிலை அமைப்பின் அடிப்படையில் உள்ளது. இந்திய நீதிமன்றங்களுக்கு நேரடி மற்றும் மேல்முறையீட்டு அதிகாரங்கள் உள்ளன.

ஐ) அகில இந்தியப் பணிகள்

இது அகில இந்திய பணிகள் அல்லது மத்தியப் பணிகள் மற்றும் மாநில குடிமைப் பணிகள் ஆகியவற்றின் இயல்புகளைக் கொண்டுள்ளது. மத்திய மற்றும் அகில இந்தியப் பணிகள் ஆகியவை ஒரே சீரான நிர்வாக முறைமை மற்றும் செயல்முறையினை இந்தியா முழுமைக்கும் ஊக்குவிக்கின்றன.

ஒ) ஆளுநர் நியமனம்

மாநில ஆளுநர் தேர்ந்தெடுக்கப் படுவதில்லை, குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகிறார், இவர் குடியரசுத் தலைவரின் விருப்பத்தின் அடிப்படையிலேயே பணியைத் தொடர்கிறார். ஆளுநர் என்பவர் மாநிலத்தின் செயலாட்சித்துறைத் தலைவர் ஆவார். அவருக்கு சட்டமன்றம், செயலாட்சி, நீதித்துறை மற்றும் நெருக்கடி நிலை தொடர்பான அதிகாரங்கள் உண்டு.

6.4 கூட்டாட்சி முறை அரசாங்கம்

ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சி என்ற வகைப்பாடு என்பது மாநிலங்கள் மற்றும்

11th Std Political Science Tamil_Unit-6.indd 98 06/12/2022 11:07:32

மத்திய அரசாங்களுக்கிடையேயான உறவுகளின் அடிப்படையில் அமைவதாகும். கூட்டாட்சி அரசாங்கம் என்பது தேசிய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கிடையே அரசமைப்பிலான அதிகார பிரிவினையின் அடிப்படையில் அமைவதாகும். அதன் அடிப்படையில் அவ்வரசுகள் தங்களுக்கென உள்ள அதிகார எல்லையின் படி சுதந்திரமாகச் செயல்பட முடியும். அமெரிக்கா, ஸ்விட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, கனடா, ரஷ்யா, பிரேசில் மற்றும் அர்ஜென்டினா ஆகிய நாடுகள் கூட்டாட்சி முறையிலான அரசாங்கத்தினை கொண்டுள்ளன. கூட்டாட்சி மாதிரியிலான அரசமைப்பில் தேசிய அரசாங்கமானது மத்திய அரசாங்கம் அல்லது ஒன்றிய அரசாங்கம் எனவும், வட்டார அரசாங்கங்கள் மாநில அரசாங்கம் அல்லது மாகாண அரசாங்கம் எனவும் அறியப்படுகின்றன.



இந்திய அரசமைப்பின் கூட்டாட்சி இயல்புகள்

அ) இரட்டை அரசாங்கம்

இந்திய அரசமைப்பின்படி மத்திய அளவில் ஒன்றியமும் அதன் பரப்பரளவிற்குள் மாநில அரசாங்கங்கள் என இரண்டு வகையான அரசாங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த இரண்டு அரசாங்கங்களும் அரசமைப்பில் கூறப்பட்டுள்ளவாறு தனக்கென தனிப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு செயல்படுகின்றன.

ஆ) எழுதப்பட்ட அரசமைப்பு

இந்திய அரசமைப்பு எழுதப்பட்ட விதிகளைக் கொண்டிருப்பதால் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் திருத்தங்கள் கொண்டுவருவது கடினமாகும்.

இ) அதிகாரப் பங்கீடு

இந்திய அரசமைப்பின் ஏழாவது அட்டவணையின்படி மத்திய மற்றும் மாநில அரசுகளிடம் மத்திய பட்டியல், மாநில பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல் என்ற அடிப்படையில் அதிகாரம் பங்கிட்டு அளிக்கப்பட்டுள்ளது.

ஈ) அரசமைப்பின் மேலான தன்மை

இந்தியாவில் அரசமைப்புச் சட்டமே நாட்டின் மிகவும் உயர்ந்த சட்டமாகும். மத்திய மற்றும் மாநில அரசுகள் இயற்றும் சட்டங்கள் அரசமைப்பு சட்டத்திற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

உ) நெகிழா அரசமைப்பு

ஒவ்வொரு அவையிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்ற நடைமுறையின் மூலமே அரசமைப்புச் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் ஆளும் கட்சியினரால் மிக எளிதாக அரசமைப்பு சட்டத்திருத்தம் கொண்டுவர இயலாது.

ஊ) சுதந்திரமான நீதித்துறை

இந்தியாவில் நீதிமன்றமானது சட்டமன்றம் மற்றும் செயலாட்சித் துறையின் தலையீடு இல்லாமல் செயல்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் தேசிய மற்றும் மாநில அளவிலான அதிகார எல்லைகளின் படி அவை நேரடி, மேல் முறையீட்டு மற்றும் நீதிப்புனராய்வு பணிகளை மேற்கொள்கிறது.

ஏ) ஈரவைச் சட்டமன்றம் முறை (Bicameralism)

இந்திய நாடாளுமன்றமானது மேலவை மற்றும் கீழவை என இரண்டு அவைகள் கொண்டதாகும். மேலும் கீழவை நிதி தொடர்பான சட்டமியற்றலை மேற்கொள்ளும் அதிகாரம் கொண்டதாகும்.

கூட்டாட்சி முறை அரசாங்கத்தின் நிறைகள்

- உள்ளாட்சியினுடைய தன்னாட்சி மற்றும் தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கு இடையே சமரசத்தினை ஏற்படுத்துகிறது.
- மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையே அதிகாரம் பகிரப்படுபவதால் நிர்வாகத் திறன் மேம்படுகிறது.
- அளவில் மிகப்பெரிய நாடுகள் உருவாவதற்கு வாய்ப்புகள் உருவாகின்றது.
- அதிகாரங்கள் பங்கீடு செய்யப்படுவதால் மத்திய அரசாங்கம் ஏதேச்சதிகாரத்துடன் செயல்படுவதைக் கட்டுப்படுத்த இயலும்.
- மிகப்பெரிய நாடுகளுக்கு கூட்டாட்சி அரசாங்கம் மிகவும் பொருத்தமானதாகும்.
- பொருளாதார மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு இது மிகவும் நன்மையாகும்.

கூட்டாசி முறை அரசாங்கத்தின் குறைகள்

- ஒற்றையாட்சி அரசாங்கத்தோடு ஒப்பிடும்போது கூட்டாட்சி அரசாங்கங்கள் வலிமையற்றவை ஆகும்.
- கூட்டாட்சி அரசாங்கங்கள் அதிக செலவினங்களை கொண்டதாகும்.
- பிரிவினைவாத மனப்போக்கு உருவாக பொதுவான வாய்ப்புகள் உள்ளன.
- நிர்வாகத்தில் ஒருமுகத் தன்மையை கொண்டுவர இயலாது.
- தேசிய ஒருமைப்பாட்டிற்கு இது ஒரு அச்சுறுத்தலாகும்.
- மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான அதிகாரப் பங்கீடு பிரச்சனைகளை ஏற்படுத்தும்.
- இரட்டைக் குடியுரிமை
- மாறிவரும் சூழல்களுக்கேற்ப நெகிழா அரசமைப்பினை எளிதாகத் திருத்துவது இயலாததாகும்.
- சில சமயங்களில் மாநில அரசாங்கங்கள் அயலுறவுக் கொள்கையில் தடையை ஏற்படுத்துகின்றன.

கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி அரசாங்கத்திற்கிடையேயான வேறுபாடுகள்

வ.எண்.	ஒற்றையாட்சி	கூட்டாட்சி
1.	ஒரு அடுக்கு அரசாங்கம் மற்றும் துணை அலகுகள்	இரண்டு அடுக்கு அரசாங்கம்
2.	பெரும்பாலும் ஒற்றை குடியுரிமை	இரட்டைக் குடியுரிமை
3.	துணை அலகுகள் சுதந்திரமாகச் செயல்பட இயலாது	கூட்டாட்சி அலகுகள் மத்திய அரசுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும்.
4.	அதிகாரப் பகிர்வு என்பது கிடையாது	அதிகாரப் பகிர்வு என்பது இருக்கும்
5.	அதிகாரக் குவிப்பு	அதிகாரப் பரவலாக்கம்

வ.எண்.	நாடு	நாடாளுமன்றம்
1.	இஸ்ரேல்	நெசெட்
2.	ஜெர்மனி	பன்டஸ்டாக்
3.	ஜப்பான்	டயட்
4.	நார்வே	ஸ்டோர்டிங்
5.	நேபாளம்	ராஷ்டிரிய பஞ்சாயத்து

வ.எண்.	நாடு	நாடாளுமன்றம்
6.	பாகிஸ்தான்	தேசிய சபை
7.	ரஷ்யா	டூமா
8.	அமெரிக்கா	காங்கிரஸ்
9.	தென் ஆப்பிரிக்கா	நாடாளுமன்றம்
10.	சுவிட்சர்லாந்து	கூட்டாட்சி சபை

www.tnschoolbooks.in

வ.எண்.	வகையினம்	வகைகள்	நாடுகள்
1.	அரசாங்கத்தின் முறைகள்	குடியரசு தலைவர் முறை அரசாங்கம்	அமெரிக்கா
		நாடாளுமன்ற முறை அரசாங்கம்	இங்கிலாந்து, இந்தியா
		நேரடி மக்களாட்சி	சுவிட்சர்லாந்து
		மறைமுக மக்களாட்சி	இந்தியா
		முடியாட்சி	முழுமையான முடியாட்சி – பஃரைன்
			அரசமைப்பிலான முடியாட்சி - ஜப்பான்
			காமன்வெல்த் பகுதிகள் – ஆஸ்திரேலியா
		சர்வாதிகாரம்	ஹிட்லரின் ஜெர்மனி, முசோலியின் இத்தாலி
2.	மதத்தின் பங்கு	மதச்சார்பின்மை	இந்தியா
		சமய ஆட்சி	பாகிஸ்தான், ஈரான், வாடிகன், நேபாளம்
3.	நிலப்பரப்பு சார்ந்த அதிகாரப் பங்கீடு	ஓரவை சட்டமன்றம்	சீனா
		ஈரவை சட்டமன்றம்	இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா
4.	செயலாட்சியின் வகைகள்	ஒற்றை செயலாட்சி மாதிரி	அமெரிக்கா
		பன்மை செயலாட்சி மாதிரி	பிரான்சு
5.	நீதித்துறையின் வகைகள்	சுதந்திரமானது	அனைத்து மக்களாட்சி நாடுகள்
		அர்ப்பணிப்பு உறுதியுடையது	முன்னாள் சோவியத் ரஷ்ய குடியரசு
6.	அரசமைப்பின் தன்மை	நெகிழாதது மற்றும் எழுதப்பட்டது	அமெரிக்கா
		நெகிழும்/நெகிழா	இந்தியா
		நெகிழும் தன்மையுடையது மற்றும் எழுதப்படாதது	இங்கிலாந்து
7.	அரசின் தன்மை (நோக்கம், லட்சியம் மற்றும் கொள்கைகள் அடிப்படையிலானது)	முதலாளித்துவம்	அமெரிக்கா
		பொதுவுடைமை	கியூபா, சீனா, வடகொரியா
		சமதர்மம்	ரஷ்யா

11th Std Political Science Tamil_Unit-6.indd 101 06/12/2022 11:07:33

www.tnschoolbooks.in

6.5 நாடாளுமன்ற முறை அரசாங்கம்

மக்களால் தேர்தெடுக்கப்பட்ட மக்களாட்சி அரசே நாடாளுமன்ற முறையாகும். நாடாளுமன்ற முறை அரசாங்கத்தில் செயலாட்சியானது தனது கொள்கைகள் மற்றும் செயல்பாட்டிற்காக, நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பானதாகும். மாறாக குடியரசுத் தலைவர் முறை அரசாங்கத்தில், செயலாட்சியானது சட்டமன்றத்திற்கு தங்களது கொள்கைகள் மற்றும் செயல்பாட்டிற்காக பதில் சொல்ல அவசியம் கிடையாது. மேலும் செயலாட்சியானது அரசமைப்பின் அடிப்படையில் சட்டமன்றத்திடம் இருந்து சுதந்திரமாக இயங்குகிறது.

நாடாளுமன்ற முறை அரசாங்கம் என்பது அமைச்சரவை முறை அரசாங்கம் என்றும், கடமைப்பாடுடைய அரசாங்கம் அல்லது வெஸ்ட் மினிஸ்டர் (West Minster) அரசாங்கம் என்றும் அழைக்கப்படுகிறது. இங்கிலாந்து, ஜப்பான், கனடா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் நாடாளுமன்ற முறை அரசாங்கத்தைப் பின்பற்றுகின்றன.

ஐவர் ஜென்னிங்ஸ் நாடாளுமன்ற முறை அரசாங்கத்தை அமைச்சர் குழுமுறை என்று அழைக்கிறார். ஏனெனில் அமைச்சரவை என்பது நாடாளுமன்ற அரசாங்க முறையினுடைய அதகாரத்தின் மையக்கருவாக விளங்குகிறது. நாடாளுமன்ற முறை அரசாங்கம் என்பது கடமைப்பாடுடைய அரசாங்கமாகும். இதில் அமைச்சரவை என்பது உண்மையான செயலாட்சியாகும். மேலும் இது நாடாளுமன்றத்திற்கு பொறுப்பானதாக இருப்பதுடன் அதன் நம்பிக்கையை பெற்ற வரையிலும் பதவியில் நீடிக்கிறது. இங்கிலாந்தில்தான் நாடாளுமன்ற முறை அரசாங்கம் தோன்றியது. இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் அமைவிடம் வெஸ்ட் மினிஸ்டர் (West Minster) ஆகும். எனவே நாடாளுமன்ற முறை அரசாங்கம் வெஸ்ட் மினிஸ்டர் (West Minster) முறை அரசாங்கம் என்றும் அழைக்கப்படுகிறது. இங்கிலாந்தின் பிரதம மந்திரி மற்ற அமைச்சர்களை ஒப்பிடுகையில் அதிக அதிகாரம் கொண்டவர். இவர் தனது அமைச்சரவையில் சம்மானவர்களில் முதன்மையானவராக (Primus interpares) கருதப்படுகிறார். தற்போதைய காலகட்டத்தில் பிரதம மந்திரியின் அதிகாரங்கள் அதிகரித்துள்ளது. பிரிட்டனின் அரசியல் மற்றும் நிர்வாகத்தில் தற்போதைய பிரதம மந்திரி ஆதிக்கம் செலுத்துகிறார்.



நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் இயல்புகள்

அ) பெயரளவு செயலாட்சி மற்றும் உண்மையான செயலாட்சி

குடியரசுத் தலைவர் பெயரளவு அதிகாரம் கொண்ட செயலாட்சியாவார் (de-jure executive (or) titular executive). மாறாக பிரதம மந்திரி உண்மையான அதிகாரம் கொண்ட செயலாட்சியாக விளங்குகிறார் (de-facto executive). இவ்வகையில் குடியரசுத் தலைவர் நாட்டின் தலைவர் என்றும் பிரதம மந்திரி அரசாங்கத்தின் தலைவர் என்றும் கருதப்படுகிறார்.

ஆ) பெரும்பான்மை பெற்ற அரசியல் கட்சியின் ஆட்சி

நாடாளுமன்றத்தின் கீழவையில் பெரும்பான்மைப் பெற்ற கட்சியே ஆட்சி அமைக்கின்றது. அக்கட்சியின் தலைவர் குடியரசுத் தலைவரால் பிரதம மந்திரியாக நியமிக்கப்படுகிறார். பிற அமைச்சர்கள் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் கட்சிகளின் கூட்டணியை குடியரசுத் தலைவர் ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பார்.

இ) கூட்டுப் பொறுப்புணர்வு

அமைச்சர்கள் நாடாளுமன்றத்திற்கு கூட்டுப் பொறுப்பாகும் கடமைப்பட்டவர்கள். இதுவே நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் அடிப்படை கோட்பாடாகும்.

ஈ) இரட்டை உறுப்பினராதல்

அமைச்சர்கள் ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்திலும் செயலாட்சிப் பிரிவிலும் உறுப்பினர்களாக இருப்பர்.

உ) பிரதம மந்திரியின் தலைமை

நாடாளுமன்ற முறை அரசாங்கத்தில் பிரதம மந்திரியே தலைமை பொறுப்பு வகிக்கிறார். அவரே அமைச்சரவை குழு, நாடாளுமன்றம் மற்றும் ஆட்சியிலுள்ள கட்சியின் தலைவர் ஆவார். இவ்வகையில் பிரதம மந்திரி அரசாங்கத்தின் செயல்பாடுகளில் குறிப்பிடத் தகுந்த மிக முக்கிய பங்கு வகிக்கிறார்.

நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் நிறைகள்

அ) சட்ட மன்றம் மற்றும் செயலாட்சி இடையேயான நல்லிணக்கம்

நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் மிகப்பெரிய நன்மையாதெனில் அது அரசாங்கத்தின் அங்கங்களான சட்டமன்றம் மற்றும் செயலாட்சிக்கு இடையே நல்லிணக்கமான உறவுகள் மற்றும் கூட்டுறவினை ஏற்படுத்துகிறது. செயலாட்சி பிரிவு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருப்பதால் அவர்களுக்கிடையே சிக்கல்கள் எழுவதிற்கான சாத்தியம் குறைவாகிறது. எனவே அவர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

ஆ) கடமைப்பாடுடைய அரசாங்கம்

நாடாளுமன்ற முறை அரசாங்கம் ஒரு கடமைப்பாடுடைய அரசாங்கம் உருவாவதற்கு வழிவகுக்கின்றது.அமைச்சர்கள் அவர்களுடைய அனைத்து செயல்களுக்கும் நாடாளுமன்றத்திற்கு கடமைப்பட்டவர்கள் ஆவர்.நாடாளுமன்றமானது கேள்வி நேரம், விவாதங்கள், ஒத்திவைப்பு தீர்மானம் மற்றும் நம்பிக்கையில்லா தீர்மானம் போன்ற கருவிகள் மூலம் அமைச்சர்கள் மீது கட்டுப்பாடுகள் செலுத்துகின்றது.

இ) எதேச்சதிகாரத்தை தடைசெய்தல்

அதிகாரங்கள் ஒரு தனி நபரிடம் இல்லாமல் அமைச்சரவை என்ற ஒரு குழுவிடம் உள்ளதால் தனிநபர் தன்னிச்சையாக செயல்படும் வாய்ப்புகள் குறைவாகும். இதன் மூலம் அமைச்சர்கள் சர்வாதிகாரியாக செயல்பட இயலாது. மேலும் அமைச்சர்கள் நாடாளுமன்றத்திற்கு பதில் சொல்ல கடமைப்பட்டவர்களாக இருப்பதுடன் அவர்களை நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் நீக்கம் செய்வதற்கும் வாய்ப்புகள் உண்டு.

ஈ) பரவலான பிரிதிநிதித்துவம்

நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் அனைத்து வகுப்பினர் மற்றும் அனைத்து பகுதியினர் என அனைவருக்கும் பரந்துபட்ட பிரதிநிதித்துவம் அளிக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் பிரதமந்திரி இக்காரணிகளை தனது அமைச்சரவையை முடிவு செய்யும்போது கருத்தில் கொள்வார்.

நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் குறைகள்

அ) நிலைத்தன்மையற்ற அரசாங்கம்

நாடாளுமன்ற முறையானது நிலைத்தன்மை உடைய அரசாங்கத்தைத் தராது. அரசாங்கம் தன்னுடைய பதவிகாலத்தை நிறைவு செய்வதற்கான எந்த ஒரு உத்திரவாதமும் கிடையாது. அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கையின் அடிப்படையிலேயே பதவியை தொடர இயலும். ஒரு நம்பிக்கையில்லா தீர்மானமோ, கட்சி தாவலோ அல்லது நிலைத்தன்மையற்ற கூட்டாட்சி அரசாங்கமோ எந்நேரத்திலும் அரசாங்கத்தின் நிலைத்தன்மையை பாதிக்கும் வாய்ப்புகள் உள்ளன.

ஆ) கொள்கைகளில் தொடர்ச்சி இல்லாமை

நீண்ட கால கொள்கைகளையோ, திட்டங்களையோ நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் மூலம் உருவாக்கி செயல்படுத்துவது கடினமாகும். இதற்கு காரணம் அரசாங்கத்தின் நிலைத்தன்மையற்ற பதவிக் காலமே ஆகும். ஆளுங்கட்சி மாறும் நிலையில் அரசாங்கத்தின் கொள்கைகள் மாறுவது சாதாரணமாக நடக்கக்கூடியதாகும்.

இ) அமைச்சரவையின் சர்வாதிகாரம்

ஆளுங்கட்சி நாடாளுமன்றத்தில் ஒரு உறுதியான பெரும்பான்மை பெறும் நிலையில் அமைச்சரவையானது எல்லையற்ற அதிகாரம் பெற்று ஒரு சர்வாதிகார தன்மையுடன் செயல்பட வாய்ப்புகள் உண்டு.

ஹெரால்டு J. லாஸ்கி (*Harold J.Laski*) கூற்றுப்படி நாடாளுமன்ற முறை அரசாங்கம் செயலாட்சி பிரிவிற்கு சர்வ வல்லமையுடன் செயல்படுவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

ராம்சே முர் (*Ramsay Muir*) முன்னாள் பிரிட்டிஷ் பிரதம மந்திரி இதனை அமைச்சர் குழுவின் சர்வாதிகாரம் என்று குற்றம் சாட்டுகிறார்.

ஈ) அதிகார பிரிவினைக்கு எதிராக இருத்தல்.

நாடாளுமன்ற முறை அரசாங்கத்தில் செயலாட்சியும், சட்டமன்றமும் ஒருங்கிணைந்து உள்ளது. அமைச்சரவையானது சட்டமன்றம் மற்றும் செயலாட்சி பிரிவிற்கு தலைமை ஏற்கிறது. இக்காரணத்தால் நாடாளுமன்ற முறை அரசாங்கம் அதிகார பிரிவினை அடிப்படையிலான கோட்பாட்டிற்கு எதிராக செயல்படுகிறது என்றே கூறலாம்.

இந்திய அரசமைப்பினை உருவாக்கியவர்கள் ஏன் நாடாளுமன்ற அரசாங்க முறையினை ஏற்றனர்?

- நாடாளுமன்ற அரசாங்க முறையுடனான பரிச்சயம் உண்டு
- அதிக பொறுப்புணர்வுக்கான விருப்புரிமை
- சட்டமன்றத்திற்கும், செயலாட்சிக்கும் இடையேயான பிரச்சனைகளைத் தவிர்க்க வேண்டியது அவசியமாகும்.
- இந்திய சமுதாயத்தின் தன்மை அடுத்த முக்கியமான காரணமாகும். இந்தியா உலகிலேயே மிகவும் அதிகமான கலப்பு மரபுகளையும், சிக்கலான பன்மை சமூகங்களையும் கொண்ட மாநிலங்கள் உள்ள நாடுகளில் ஒன்றாகும். ஆகவே அரசமைப்பினை உருவாக்கியவர்கள் நாடாளுமன்ற அரசாங்க முறையினை ஏற்றனர். அது பல்வேறு பிரிவுகள், விருப்பங்கள் மற்றும் பகுதிகளுக்கு அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் தர பெரும் வாய்ப்புள்ளதாகும். இது மக்களிடையே தேசிய உணர்வினை வளர்ப்பதுடன் தணிக்கை செய்யப்பட்ட இந்தியாவினை கட்டமைக்கிறது எனலாம்.

6.6 குடியரசுத் தலைவர் முறை அரசாங்கம்

குடியரசுத்தலைவர் முறை அரசாங்கமானது அதிகாரப் பிரிவினை கோட்பாட்டின்படி கட்டமைக்கப்பட்டது. இது கடமைப்பாடற்ற, நாடாளுமன்றம் சாராத அல்லது நிரந்தரமான செயலாட்சி அமைப்பு என்று அழைக்கப்படுகிறது. அமெரிக்கா, பிரேசில், ரஷ்யா மற்றும் இலங்கை போன்ற நாடுகள் குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்திற்கு உதாரணமாகும்.

குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்தின் இயல்புகள்

அமெரிக்க குடியரசுத் தலைவர் அரசு மற்றும் அரசாங்கத்திற்கு தலைவர் ஆவார். அரசின் தலைவர் என்ற முறையில் அவர்

பெயரளவிலான நிலையினை வகிக்கிறார். அரசாங்கத்திற்குத் தலைவர் என்ற முறையில் அரசாங்கத்தின் செயலாட்சி பிரிவை தலைமையேற்று நடத்துகிறார்.

குடியரசுத் தலைவர் வாக்காளர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவரது பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் ஆகும். அமெரிக்கா நாடாளுமன்றத்தின் (காங்கிரஸ்) பதவி நீக்க முறையின் மூலம் அரசமைப்பிற்கு எதிரான தீவிரமான செயல்பாட்டின் காரணமாக மட்டுமே அவரை பதவி நீக்கம் செய்ய முடியும்.

குடியரசுத் தலைவர் தனது அமைச்சரவை குழு அல்லது சிறிய அமைப்பின் உதவியுடன் அரசாங்கத்தை நடத்துகிறார். அது 'சுயவிருப்ப அமைச்சரவை' (Kitchen cabinet) என அழைக்கப்படுகிறது. இது தேர்ந்தெடுக்கப்படாத துறை செயலாளர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைக் குழுவாகும். இந்த அமைச்சரவை குழுவில் உள்ளவர்கள் அனைவரும் குடியரசு தலைவராலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் குடியரசுத் தலைவருக்கு கடமைப்பட்டவர்கள் ஆவர். மேலும் அவர்கள் குடியரசுத் தலைவரால் எந்த நேரத்திலும் பதவி நீக்கம் செய்யப்படலாம்.

குடியரசுத் தலைவரும் அவருடைய செயலாளர்களும் (அமைச்சர்கள்) அமெரிக்க நாடாளுமன்றத்திற்குப் (காங்கிரஸ்) பொறுப்பானவர்கள் அல்ல. மேலும் அவர்கள் நாடாளுமன்றத்தில் (காங்கிரஸ்) உறுப்பினர்களாக இருக்க வேண்டுமென்பதோ அதன் கூட்டத்தொடரில் பங்குகொள்ள வேண்டுமென்ற அவசியமோ கிடையாது.

குடியரசுத் தலைவருக்கு நாடாளுமன்றத்தின் கீழவையான பிரதிநிதிகள் சபையினைக் கலைக்கும் அதிகாரம் இல்லை. அமெரிக்க குடியரசுத் தலைவர் முறையின் அடிப்படை சாராம்சமானது 'அதிகார பிரிவினைக் 'கோட்பாடு' ஆகும். மேலும் சட்டமன்றம், செயலாட்சி மற்றும் நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள் தனித்தனியே பிரிக்கப்பட்டு மூன்று வெவ்வேறு சுதந்திரமான அங்கங்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற முறை அரசாங்கத்திற்கும், குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்திற்கும் இடையேயான வேறுபாடுகள்.

வ. எண்	குடியரசுத் தலைவர் முறை அரசாங்கம்	நாடாளுமன்ற முறை அரசாங்கம்
1.	குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்	நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்ட அரசியல் கட்சியின் தலைவரே பிரதம மந்திரியாவார்.
2.	குடியரசுத் தலைவரே மேலான அதிகாரம் பெற்றவர்	மத்திய சட்டமன்றமே மேலான அதிகாரம் கொண்டதாகும்.
3.	அதிகாரப் பிரிவினை	அதிகாரப் பிரிவினை கிடையாது அதிகாரம் மையப்படுத்தப்பட்டிருக்கும்.
4.	சுதந்திரமான கிளைகள்	ஒன்றுடன் ஒன்று கலந்த பணிகளை உடைய சுதந்திரமான கிளைகள்.
5.	குடியரசுத் தலைவரே அரசின் தலைவராவார்	குடியரசுத் தலைவரே அரசின் தலைவராவார்.
6.	குடியரசுத் தலைவரே அரசாங்கத்தின் தலைவராவார்	பிரதமமந்திரியே அரசாங்கத்தின் தலைவராவார்
7.	குடியரசுத் தலைவரே தலைமைப் பணியை ஏற்கிறார்	கூட்டுத்தலைமை
8.	குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்திற்கு (காங்கிரஸ்) பொறுப்பானவர் கிடையாது.	நாடாளுமன்றத்தில் கூட்டுப் பொறுப்புணர்வு மற்றும் தனிப்பொறுப்புணர்வு உண்டு.

11th Std Political Science Tamil_Unit-6.indd 105 06/12/2022 11:07:33

" உலக வங்கி – உலக மேம்பாட்டு அறிக்கை 1997: மாறிவரும் சூழலில் அரசின் நிலை"

இந்த அறிக்கையானது வேகமாக மாறிவரும் உலக சூழலில் அரசு எவ்வகையில் நாட்டின் வளர்ச்சியில் சிறப்பாகப் பங்களிக்கலாம் என்பதைக் குறித்ததாகும். அரசு என்ன செய்ய வேண்டும், எவ்வாறு செய்ய வேண்டும் என்பதுடன் அரசு தன்னை எவ்வாறு மேம்படுத்திக் கொள்ளலாம் என்பன குறித்தும் இவ்வறிக்கையில் விவாதம் செய்யப்பட்டுள்ளது. மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் கலப்பு பொருளாதாரம் சார்ந்த அரசாங்கங்கள் தற்போதைய காலகட்டத்தில் சந்தை சார்ந்த பங்கினைக் குறைத்துக் கொண்டு வருகின்றன. இதற்குத் தோல்வியில் முடியும் அரசின் தலையீடுகள் காரணமாகும்.

இவ்வறிக்கை மேற்கூறிய கருத்துக்கு எதிராக சில முக்கியமான தருணங்களில் அரசின் தலையீடு சந்தையில் தேவை என்பதை வலியுறுத்துகிறது. பொருளாதாரம் சார்ந்த நிறுவனச் சூழலில் சட்டத்தின் ஆட்சியைச் செயல்படுத்தும் பங்கு அரசிற்கு உள்ளது. மேலும் நாட்டின் மேம்பாட்டிற்கு அரசின் சந்தை சார்ந்த தலையீடு அத்தியாவசியம் என கருதுகிறது. அரசாங்கத்தை குறைந்தபட்ச அரசாக சுருக்குவதற்கு இது எதிர்ப்பு தெரிவிக்கிறது. மேலும் தனியார் தொழில்கள் மற்றும் தனிமனிதர்களின் செயல்பாடுகளுக்கு தகுந்த ஊக்கம் மற்றும் ஆதரவினை நல்கும் சிறப்பான அரசே மேம்பாட்டிற்குத் தேவை என விளக்குகிறது.

இவ்வறிக்கை அரசிற்கு சில சீர்திருத்தங்களை வலியுறுத்துகிறது. முதலாவதாக, அரசின் செயல்பாடுகளையும், அதன் திறன்களையும் சமன்படுத்துதலில் கவனம் செலுத்துதல் மற்றும் இரண்டாவதாக, அரசின் திறன்களை மேம்படுத்துவதற்கு அரசு நிறுவனங்களை மாற்றியமைப்பதற்கான வழிமுறைகளை கண்டுணர வேண்டும்.

இவ்வறிக்கையின்படி, பின்வரும் ஐந்து அடிப்படைப் பணிகளை அரசாங்கம் தனது நோக்கங்களாக மேற்கொள்ள வேண்டும். இவை இல்லையென்றால் நிலையான, வறுமையில்லாத மற்றும் அனைவருக்குமான வளர்ச்சியை நாம் அடைவது சாத்தியமற்றதாகும்.

அவையாவன………..

1. நாட்டில் அடிப்படைச் சட்டத்தை நிறுவுதல்
2. பேரியல் பொருளாதார நிலைத்தன்மையை பாதுகாத்தல்
3. அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பில் முதலீடு செய்தல்
4. சமூகத்தில் எளிதில் இலக்காகும் நிலையில் உள்ளவர்களை பாதுகாத்தல்
5. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

6.7 அரசாங்கத்திலிருந்து ஆளுகை வரை பற்றிய கருத்தாக்கம்

நல்ஆளுகை என்ற சொல்லானது பொது நிறுவனங்கள் எவ்வாறு மக்களின் பிரச்சனைகளை நிர்வகித்து நாட்டின் வளங்களையும் சரியான முறையில் மேலாண்மை செய்கின்றன என்பதைப் பற்றியதாகும். ஆளுகை என்பது "முடிவுகள் எந்த செயல்முறையில் எடுக்கப்பட்டு அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதே ஆகும்".

அரசாங்கத்திலிருந்து ஆளுகை வரை

- கூட்டு ஆளுகை அடிப்படையிலானது
- நெகிழ்வானது
- வெளிப்படையானது
- புதுமையானது
- துணிந்து முடிவெடுப்பது
- மக்களுக்கானது
- உள்நோக்கமுடையது

11th Std Political Science Tamil_Unit-6.indd 106 06/12/2022 11:07:34

'அரசாங்கம்' மற்றும் 'ஆளுகை' ஆகிய இரண்டுமே ஒரே பொருளைக் கொண்டதாகும். இது ஓர் அமைப்பு, நிறுவனம் அல்லது அரசில் அதிகாரத்தைச் செயல்படுத்துவதைக் குறிப்பதாகும். கீழ்க்கண்ட பரிமாணங்களில் அரசாங்கம் மற்றும் ஆளுகையை வேறுபடுத்தலாம்.

அ) ஆளுகைசெயல்பாட்டிலுள்ளநடவடிக்கைள் யாவை?

ஆ) ஆளுகையில் உள்ளடங்கிய செயலமைப்புகள் யாவை?

இ) இம் மறுவரையறையைத் தேவையாக்கிய நடைமுறைகள் யாவை ?

ஈ) நல் ஆளுகையை மதிப்பீடு செய்ய பயன்படுத்தப்பட்ட வரைகூறுகள் யாவை?

உ) இதனை அடைவதற்காக மேம்படுத்தப்பட வேண்டிய திறன்கள் யாவை?

ஆளுகை என்பது ஒரு தேசத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதற்காக அரசியல், பொருளாதார மற்றும் நிர்வாக அதிகாரத்தினை செயல்படுத்துவதாகும். ஆளுகை என்பது அனைத்து முறைகளையும் உள்ளடக்கியதாகும். நன்மையோ, தீமையோ ஆனாலும் சமுதாயங்கள், அதிகாரத்தினைப் பங்கிட்டு பொது ஆதாரங்கள் மற்றம் பிரச்சனைகளை கையாளுகின்றன. (UNDP, 1997)

ஒரு நாட்டின் மேம்பாட்டிற்காக அதன் சமூக மற்றும் பொருளாதார வளங்களை மேலாண்மை செய்வதற்காக அதிகாரத்தினை செயல்படுத்தும் பாங்கே ஆளுகையாகும். (ADB, 2000)

அரசாங்கத்திலிருந்து ஆளுகைக்கு செல்வது என்பது புதிய அமைப்புக்களை உருவாக்குவது மட்டுமல்லாமல் பழைய அமைப்புக்களையும் புதுப்பிப்பதாகும். தனது புதிய பங்கினை ஆற்றுவதற்கு அரசு வலுப்படுத்தப்பட வேண்டும். மக்களாட்சி என்பது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்களைச் சந்திப்பது மட்டுமல்ல, அமைப்பின் செயல்திறனை விழிப்புடன் கண்காணித்து அவ்வாண்டுகளில் அதனை பொறுப்பானதாக்குவது குடிமைச் சமுதாயத்தின் பணியாகும்.

குடிமைச் சமுதாயத்துடனான கூட்டுப்பங்காண்மை

ஆட்சியை ஆளுகையாக மாற்றும் முனைப்பில் குடிமைச் சமுதாயத்தின் பங்கு குறிப்பிடத்தகுந்ததாகும். அதன் பங்கினை இருவகையான இழைகளாகப் பார்க்கலாம்.

1. சமூக இயக்கங்கள்
2. அரசு சாரா அமைப்புகள்

சமூக இயக்கங்கள் வறுமை நிலையில் உள்ள மக்கள் மற்றும் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்காகப் போராடுவதன் மூலம் அரசாங்கத்தின்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். இவ்வகையான அழுத்தத்தினால் அராசாங்கம் மக்களுக்காக நிறுவனங்கள், சட்டங்கள் மற்றும் நடைமுறைகளில் சில மாற்றங்களைக் கொண்டுவருகிறது.

அரசு சாரா அமைப்புகளும் பல்வேறு வகையில்மக்கள்நலனுக்காகசெயல்படுகின்றன. மேலும் அவர்கள் அரசாங்கத்தின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் உதவிகரமாக உள்ளனர்.

சமூக இயக்கங்களும், அரசு சாரா அமைப்புகளும் தற்போதைய காலகட்டத்தில் அரசியல் செயல்பாடுகள் மற்றும் பொது சேவைகள் ஆகியவை மக்களைச் சென்றடைவதில் மிகப்பெரிய பங்காற்றுகின்றன.

செயல்பாடு

உலகளாவிய பார்வையிலான சிந்தனை பற்றிய கேலிச் சித்திரம்

கோபன் ஹேகன் பருவநிலை உச்சிமாநாடு 09.12.2009/ P.8 மற்றும் 18.12.2009/ P.10

197 நாடுகள் பசுமை வாயுக்களை படிப்படியாக நீக்க ஒப்புகொண்டன.

இது கரியமில வாயுவைவிட ஆயிரம் மடங்கு மோசமான வாயுக்களை குறைத்து புவி வெப்பமயமாதலைதடுக்கும்சட்டப்பூர்வமான ஒப்பந்தமாகும்

மூன்று குழுவிலான நாடுகள்

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள் தங்களின் ஹைட்ரோ ப்ளூரோ கார்பன் பயன்பாட்டினை 2019–ஆம் ஆண்டுவாக்கில் பத்து சதவீதம் 2011 - 2013–ஆம் அளவிலிருந்து குறைப்பதுடன் 2036–ஆம் ஆண்டுவாக்கில் என்பத்து ஐந்து சதவீதம் வரை குறைக்க வேண்டும்

இரண்டாவது குழுவானது சீனா மற்றும் சில ஆப்பிரிக்க நாடுகளைக் கொண்ட வளரும் நாடுகள் இம்மாற்றத்தினை 2024–ஆம் ஆண்டிற்குள் செய்து முடிக்க உறுதிபூண்டுள்ளன. இவை 2020 - 2022–ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பத்து சதவீதமாவது 2029–ஆம் ஆண்டுவாக்கில் குறைப்பதுடன் இதனை நீட்டித்து 2045–ஆம் ஆண்டுவாக்கில் எண்பத்து ஐந்து சதவீதம் வரை குறைக்க வேண்டும் என எதிபார்க்கப்படுகிறது.

இதில் மூன்றாவது குழுவாக, வளரும் நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், ஈரான், ஈராக் மற்றும் வளைகுடா நாடுகள் உள்ளன. இவை இந்நடைமுறையை 2028–ல் தொடங்குவதுடன் 2024–2026–ல் அளவிலிருந்து கணக்கிடும் போது பத்து சதவீதம் வரை 2032–ல் குறைக்க வேண்டும். இது 2047–ல் எண்பத்து ஐந்து சதவீதமாக இருக்க வேண்டும்.

கிகாலி (ருவாண்டா)– Kigali (Rwanda)

புவி வெப்பமயமாதலைத் தடுப்பதற்கான ஒரு முக்கியப் படியாக 200 நாடுகளின் பிரதிநிதிகள் சந்தித்து குளிர்ப்பதனப் பெட்டி மற்றும் காற்றுப் பதனி ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் அச்சுறுத்தலான பசுமை வாயுக்களை படிப்படியாக நீக்குவதற்கு ஒப்பந்தம் மேற்கொண்டனர். 1987–ஆம் ஆண்டு ஓசோன் படலப் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட மாண்ட்ரீயல் நெறிமுறைகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு பணக்கார நாடுகள், வளரும் நாடுகளைக் காட்டிலும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ருவாண்டாவின் தலைநகர் கிகாலியில் இரவு முழுவதும் கண்விழித்து ஹைட்ரோ ப்ளூரோ கார்பன் உற்பத்தி மற்றும் நுகர்வினை படிப்படியாக குறைப்பதற்கான ஒப்பந்தத்தை உருவாக்கும் இறுதி கட்டத்தில் இருந்த பிரதிநிதிகள் மகிழ்வுடன் கைதட்டி இதனை வரவேற்றனர்.

இருப்பினும் சில பிரதிநிதிகள் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வளைகுடா நாடுகள் ஆகியவை இம்மாற்றத்தினை பிற நாடுகளைக் காட்டிலும் பின்னே மேற்கொள்வதற்கு வருத்தம் தெரிவித்தனர். மார்ஷல் தீவுகள் என்ற குட்டி பசிபிக் நாட்டின் பிரதிநிதி கூறுகையில் "இது மார்ஷல் தீவுகள் முழுமையாகவிரும்பியதாகஇல்லாவிடினும், சிறந்த ஒப்பந்தமாகும்" என்றார். ஹைட்ரோ ப்ளூரோ கார்பன்கள் அகற்றப்பட்டால் 2100–ஆம் ஆண்டுவாக்கில் புவிவெப்பமயமாதல் 0.5 சதவீதம் குறையும் என 2015–ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தெரிவிக்கிறது.

இருப்பினும் இந்தியா போன்ற அதிக உஷ்ணமான தட்பவெப்ப நிலையை கொண்ட வளரும் நாடுகள் ஹைட்ரோ ப்ளூரோ கார்பன்களுக்கு மாற்றாக அம்மோனியா, தண்ணீர் அல்லது ஹைட்ரோ ப்ளூரோலெபீன்ஸ் (Hydro flurolefins) போன்ற வாயுக்களை பயன்படுத்தினால் செலவினம் அதிகரிக்கும். இந்த ஒப்பந்தம் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் இந்திய சுற்றுச்சூழல் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகத்தைச் சேர்ந்த அஜய் நாராயண் ஜா கூறுகையில் "இதில் செலவினப் பிரச்சனை, தொழில் நுட்ப பிரச்சனை, நிதிப்பிரச்சனை ஆகியவை உள்ளன" என்கிறார். அவர் மேலும் கூறுகையில் "எந்த ஒப்பந்தமாக இருந்தாலும் அது ஒரு பக்கத்திலிருந்து நெகிழ்வானதாக இருக்க வேண்டுமே தவிர மறுபக்கத்தில் இருந்தல்ல என்பதை நாம் வலியுறுத்த விரும்புகிறோம்" என்றார்.

ஓசோன் படலத்தை ஹைட்ரோ ப்ளூரோ கார்பன்களின் முன்னோடியான குளோரோ ப்ளூரோ கார்பன்கள் அழிப்பதை உணர்ந்த விஞ்ஞானிகள் அவற்றினை மாண்ட்ரியல் நெறிமுறைகளின் அடிப்படையில் கைவிட்டனர். தற்பொழுது சரியாகி வரும் ஓசோன் படலத்திற்கு ஹைட்ரோ ப்ளூரோ கார்பன்கள் பாதுகாப்பானவையாக தெரிந்தாலும் முக்கிய பசுமை வாயுவான கரியமில வாயுவை விட வெப்பமாக்குதலில் ஆயிரம் மடங்கு மோசமானதாக இருக்கிறது.

புதிய இந்தியன் எக்ஸ்பிரஸ் 16.10.2016

உலகளாவிய பார்வையிலான ஓர் சிந்தனை

ஓர் உலகளாவிய பார்வை என்பது உங்களை நான், எனது குடும்பம், எனது பள்ளி, எனது சமூகம், எனது கிராமம், எனது மாவட்டம், எனது மாநிலம் அல்லது நான் வாழும் நாடு என்பதைத் தாண்டி சிந்திக்க வைக்கிறது. செய்திகளில் வரும் பிரச்சனைகள் உலகளாவிய தன்மையுள்ளவையாகும். உதாரணமாக சுற்றுச்சூழல் பிரச்சனையைக் கூறலாம்.

பெரும்பாலும் உலகளாவிய பிரச்சனைக்கு ஓர் உலகளாவிய தீர்வு தேவைப்படுகிறது. பருவநிலை மாற்றம் என்ற உலகளாவிய பிரச்சனையை உள்ளூர் தீர்வுகளால் சரி செய்ய இயலாது. இருப்பினும் உள்ளூரில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உலகளாவிய தீர்விற்கு வழிசெய்ய உதவுகிறது. பருவநிலை மாற்றம் தொடர்பான பிரச்சனைக்கு, உதாரணமாக உள்ளூர் அளவிலான விழிப்புணர்வினை தெரு நாடகங்கள், கண்காட்சி, மனிதச் சங்கிலி மற்றும் சுவரொட்டி பிரச்சாரம் போன்றவற்றின் மூலமாக மக்களை உலகளாவிய அளவில் சிந்திக்க வைத்து உள்ளூர் அளவில் செயல்பட வைக்கிறது எனலாம்.

நல்ஆளுகையின் பண்பியல்புகள்

அ) பங்கேற்பு

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆண்களும், பெண்களும் அரசாங்கத்தின் முடிவெடுத்தலில் குரல் கொடுக்க வேண்டும். அதனை அவர்களின் விருப்பங்களைப் பிரதிபலிக்க கூடிய சட்டப்பூர்வமான இடைநிலை அமைப்புகளின் வாயிலாக பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். இத்தகைய பரந்த பங்கேற்பானது மக்களின் பேச்சுரிமை, ஒன்று கூடும் உரிமை மற்றும் ஆக்கப்பூர்வமான பங்கேற்புத்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது.

ஆ) சட்டத்தின் ஆட்சி

சட்டக்கட்டமைப்பு என்பது நியாயமாகவும், நடுநிலையுடனும் செயல்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக மனித உரிமைகள் தொடர்பான சட்டங்களைக் கூறலாம்.

இ) வெளிப்படைத் தன்மை

கட்டுப்பாடற்ற சுதந்திரமான தகவல் பரிமாற்றமே வெளிப்படைத்தன்மையை கட்டமைக்கிறது. நடைமுறைகள், நிறுவனங்கள் மற்றும் தகவல்கள் ஆகியவை அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாக அணுகத்தக்க வகையில் இருப்பதுடன் புரிந்து கொள்ளக்கூடிய அளவிலான தகவல்கள் வழங்கப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும்.

ஈ) மறுமொழி பகிர்தல்

நிறுவனங்களும் அவைசார்ந்த செயல்பாடுகளும் மக்களின் தேவைக்கேற்ப செயலாற்ற முயல வேண்டும்.

உ) ஒருமித்த கருத்திலான திசைப்போக்கு

நல் ஆளுகை என்பது மாறுபட்ட விருப்பங்களுக்கு இடையே ஓர் பரந்த ஒப்புதலை ஏற்படுத்த நடுவுநிலைப் பங்காற்றுகிறது. இது குழுவினுடைய சிறந்த நலன்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின்படி அவை எவ்வாறு சாத்தியமாகும் என்பது பற்றியதாகும்.

ஊ) சமச்சீராக்கம்

ஆண்களும் பெண்களும் தங்களை மேம்படுத்திக் கொள்வதற்கான, சமமான வாய்ப்புகள் அல்லது தங்களின் நலனை நிர்வகிப்பதாகும்.

நல்ல அரசாங்கம்

- ஒரு மித்த கருத்திலான திசைப்போக்கு
- சிறப்பானது மற்றும் செயல்திறன் வாய்ந்தது
- சட்டத்தின் ஆட்சியைப் பின்பற்றுகிறது
- சமநீதிப்பங்கிலானது மற்றும் உள்ளடக்கியது
- பொறுப்பானது
- பங்கேற்பிலானது
- மறுமொழி பகிர்தல்
- வெளிப்படையானது

எ) சிறப்பான தன்மை மற்றும் செயல்திறன்

நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவை தேவைகளை நிறைவேற்றும் விதத்தில் சிறப்பாக வளங்களைப் பயன்படுத்தி முடிவுகளைத் தரவேண்டும்.

ஏ) பொறுப்புடைமை

அரசாங்கத்தில் முடிவு எடுக்கும் நிலையில் உள்ளவர்கள், தனியார் துறையினர் மற்றும் குடிமைச்சமூக அமைப்புகள் ஆகியவை பொதுமக்களுக்கும், அமைப்பின் பங்கேற்பாளர்களுக்கு பதில் சொல்ல கடமைப் பட்டவர்களாக இருத்தல் வேண்டும். இப்பொறுப்புடைமை என்பது அமைப்புக்களைப் பொறுத்து மாறுபடுவதுடன் அமைப்பில் எடுக்கப்படும் முடிவானது உட்புறமானதா அல்லது வெளிப்புறமானதா என்பதையும் பொறுத்தாகும்.

ஐ) திறன்சார்ந்த தொலைநோக்கு பார்வை

தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் நல்ஆளுகை மற்றும் மனித மேம்பாட்டினை நீண்டகால தொலைநோக்கு பார்வையுடன் அணுகுதல் வேண்டும். மேலும் வரலாறு, பண்பாடு மற்றும் சமூக சிக்கல்களையும் தொலைநோக்குப் பார்வைக்காகக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஆதாரம்: ***(ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்டம் – 1997), (நிலையான மனித மேம்பாட்டிற்கான ஆளுகை பற்றிய ஐ. நா.வின் மேம்பாட்டுத் திட்டம்)***

6.8. அரசாங்கத்தின் செயல்திறனை எவ்வாறு மதிப்பிடுவது?

ஒரு அரசாங்கத்தின் செயல்பாடுகளை ஏதோ ஒரு காரணியைக் கொண்டு பகுப்பாய்தல் என்பது இயலாத காரியமாகும். ஆகவே உண்மையான மதிப்பீட்டினை மேற்கொள்ள ஆளுகையின் பல்வேறு அம்சங்களான சமூக பண்பாட்டு காரணிகள், அரசியல், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகள் ஆகியவற்றினை பரிசீலிக்க வேண்டும். எனவே கீழ்காணும் காரணிகளைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்தின் செயல்பாடுகளை மதிப்பிடலாம்.

சமூக பண்பாட்டு காரணிகள்

- பாலின சமநிலை குறியீடு
- மதச்சுதந்திரம்
- சாதி அடிப்படையிலான சமநிலை
- மதம் மற்றும் மொழி அடிப்படையிலான சிறுபான்மையினர் உரிமைகளின் பாதுகாப்பு
- பாலினம் சார்ந்த வரவுசெலவு திட்டம்

அரசியல் காரணிகள்

- மக்களாட்சி நடைமுறையின் சிறப்பான செயல்பாடு
- சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள்
- ஊழலற்ற அரசியல் மற்றும் நிர்வாகம்
- நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை
- சுதந்திரமான பத்திரிக்கைகள்
- சுதந்திரமான நீதித்துறை
- மனித உரிமைகள்

பொருளாதாரக் காரணிகள்

- மனித வளமேம்பாட்டுக் குறியீடு (HDI)
- மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
- வாங்கும் திறன் சமநிலை (PPP)
- வளர்ச்சி Vs மேம்பாடு
- சமமாக வளங்களைப் பங்கிடுதல்

சுற்றுச்சூழல் காரணிகள்

- நிலையான மேம்பாட்டு இலக்குகள்
- பருவநிலை மாற்றத்திற்கான தேசிய செயல்திட்டம்(NAPC)
- பசுமை வரவு செலவு திட்டம்
- பேரிடர் மேலாண்மை

தேசிய ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீடு (GNH):

தேசிய ஒட்டுமொத்த மகிழ்ச்சிக்குறியீடு என்பது தற்பொழுது மேம்பட்டு வரும் ஒரு

11th Std Political Science Tamil_Unit-6.indd 110 06/12/2022 11:07:35

தத்துவம் மட்டுமல்லாமல் குறிப்பிட்ட எந்தவொரு தேசத்தின் கூட்டு மகிழ்ச்சியினை அளவீடு செய்யும் "குறியீடு" ஆகும். இக்கருத்து முதன்முதலில் 18 ஜீலை 2008-ல் இயற்றப்பட்ட பூடான் நாட்டினுடைய அரசமைப்பில் குறிப்பிடப்பட்டது.

1970 களில் பூடானின் நான்காவது மன்னரான ஜிக்மே சிங்யே வாங்சுக் அவர்களால் "ஒட்டுமொத்த தேசிய மகிழ்ச்சி" (Gross National Happiness) என்ற சொல் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. "ஒட்டு மொத்த தேசிய மகிழ்ச்சி"- என்பதன் மைய சால்புகள் "நிலையான மற்றும் சமநீதிப்பங்கிலான சமூக – பொருளாதார மேம்பாடு; சுற்றுச்சூழல் பாதுகாப்பு; பண்பாட்டினை வளர்த்தல் மற்றும் பாதுகாத்தல்; நல் ஆளுகை" ஆகியவையாகும்.

"ஒட்டுமொத்த தேசிய மகிழ்ச்சி" யை வேறுபடுத்திப் பார்ப்பதற்கு உதாரணமாக கூட்டு மகிழ்ச்சியை ஆளுகையின் இலக்காகக் கொள்வதுடன் இயற்கை மற்றும் மரபார்ந்த விழுமியங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தையும் வலியுறுத்துவதைக் கூறலாம்.

செயல்பாடு

கீழ்க்கண்டவற்றின் சமீபகால வெளியீடுகளைப் பற்றி விவாதிக்கவும்.

- மனித வள மேம்பாட்டுக் குறியீடு (Human Development Index)
- சர்வதேச வெளிப்படைத்தன்மைக்கான அமைப்பு (Transparency International)
- இந்தியப் பொருளாதாரக் கணக்கெடுப்பு (Economic survey of India)
- வரவு செலவுத்திட்டம் – பசுமை வரவுசெலவுத்திட்டம்,
- பாலின வரவு செலவுத்திட்டம்
- பாலின சமநிலை குறியீடு
- கீழ்க்கண்ட அமைப்புகளின் வருடாந்திர அறிக்கைகள்
- தேசிய மனித உரிமைகள் ஆணையம் (National Human Rights Commission- NHRC)
- தேசிய பட்டியல் வகுப்பினருக்கான ஆணையம் (National Commission for Schedule of Castes- NCSC)
- தேசிய பழங்குடியினர் ஆணையம் (National Commission for Scheduled Tribes- NCST)
- தேசிய மகளிர் ஆணையம் (National Commission for Women- NCW)
- தேசிய சிறார் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்(National Commission for Protection of Child Rights- NCPCR)

கலைச்சொற்கள்: Glossary

பிரபுக்களாட்சி (Aristocracy): உயர்குடி மக்களின் ஆட்சியாகும்

கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலைகள் (Checks and Balances): இந்த கோட்பாடு அமொரிக்காவில் தோன்றியதுடன் அமெரிக்க அரசாங்கத்தால் பின்பற்றப்படுகிறது. இதனடிப்படையில் அரசாங்கத்தின் ஒரு அங்கம் மற்றொரு அங்கத்தின் செயல்பாடுகள் மீது கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது.

பொது அதிகாரங்கள் (Concurrent Powers): தேசிய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் ஒருங்கே பெற்ற அதிகாரங்களாகும்.

கூட்டமைப்பு முறை (Confederal system): இது இறையாண்மை மிக்க சுதந்திரமான அரசுகளின் சங்கமாகும். இவ்வகை சங்கத்தால் உருவாக்கப்படும மத்திய அரசாங்கம் பிற அரசுகளின் மீது வரையறுக்கப்பட்ட அதிகாரங்களையே கொண்டுள்ளது.

மக்களாட்சிக் குடியரசு (Democratic Republic): மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் சட்டம் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதாகும்.

அதிகாரப் பகிர்வு (Devolution): தேசிய அல்லது மத்திய அரசிலிருந்து மாநில அரசுக்கோ அல்லது உள்ளாட்சி அரசுக்கோ அதிகாரங்களை மாற்றித் தருவதாகும். இருபதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இந்நடைமுறை பின்பற்றப்பட்டது.

நேரடி மக்களாட்சி (Direct Democracy): மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் காட்டிலும் அரசியல் முடிவுகளை மக்கள் தாங்களே எடுப்பதாகும்.

கூட்டாட்சி தத்துவம் (Federalism): மத்திய அரசாங்கம் மற்றும் மாநில அல்லது உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு இடையேயான அதிகாரப்பகிர்விலான அரசியல் முறைமையாகும்.

சுதந்திரத்துவ மக்களாட்சி (Liberal Democracy): தனிநபரின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் மக்களாட்சியிலான அரசாங்கம், சிறுபான்மையினரை பெரும்பான்மையினரின் ஆதிக்கத்திலிருந்து தடுத்து பாதுகாக்கிறது.

சுதந்திரத்துவம் (Liberalism): மக்கள் நலன், குடிமை உரிமைகளுக்கு ஆதரவு மற்றும் சமூக, அரசியல் மாற்றங்களின் சகிப்புத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக செயல்படும் நேர்மறை அரசாங்கத்தை புரிந்து பேசுதல்.

வரையறுக்கப்பட்ட அரசாங்கம் (Limited Government): அரசாங்கத்தின் அதிகாரங்கள் குறிப்பாக அமைப்புரீதியிலான கட்டுப்பாடுகளால் வரையறுக்கப்பட்டிருக்கும்.

குடியரசுத்தலைவர் முறை அரசாங்கம் (Presidential System): பிரதிநிதித்துவ மக்களாட்சியின் அடிப்படையில் அரசியல் அதிகாரம் என்பது தனியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தின் அமைப்புகளிடம் இருக்கும் இம்முறைக்கு உதாரணமாக அமெரிக்காவை குறிப்பிடலாம்.

பிரதிநிதித்துவ மக்களாட்சி (Representative Democracy): இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு சட்டம் மற்றும் கொள்கைகளை உருவாக்கி செயல்படுத்தக்கூடிய அரசாங்கத்தின் வடிவமாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே அரசியல் முடிவுகளை மேற்கொள்வர் (சில மக்களாட்சிகளில் சம்பிரதாய அளவிலான பங்குடைய முடியாட்சியைதக்கவைத்துள்ளனர்).

குடியரசு (Republic): குடியரசு அரசாங்கத்தில் மக்களோ அல்லது ஒரு பகுதியோ இறையாண்மை அதிகாரம் பெற்றிருப்பர். மாறாக முடியாட்சியில் மன்னரே இறையாண்மை அதிகாரம் பெற்றிருப்பார். இம்முறையிலான பிரதிநிதித்துவ அரசாங்கம் அமெரிக்க அரசமைப்பினை உருவாக்கியவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

அதிகாரப்பிரிவினை (Separation of Power): அரசாங்கத்தின் பல்வேறு பிரிவுகளுக்கிடையே அதன் பணிகளைப் பங்கிட்டுக் கொள்வதுடன் ஒவ்வொரு குழுவின் சுயநலன்களை பிற குழுக்கள் ஒழுங்குமுறை செய்யும் முறையிலானதாகும்.

இறைவழி ஆட்சி (Theocracy): இது கிரேக்க வார்த்தைகளான கடவுள் என பொருள்படும் 'தியோஸ்' மற்றும் ஆட்சி என்ற பொருளிலான 'கிரேட்டீன்' என்ற வார்த்தைகளிலிருந்து உருவானதாகும். ஆகவே இதனைக் 'கடவுளின் ஆட்சி' எனக் கூறலாம்.

முற்றதிகாரம் (Totalitarian): அரசாங்கத்தின் நடப்பாட்சி அதிகாரத்துடனான குடிமக்களின் கீழ்ப்படிதலாகும். இவ்வாட்சி அரசியல் மற்றும் சமூக வாழ்வின் அனைத்து அம்சங்களையும் கட்டுப்படுத்துகிறது. (ஜார்ஜ் ஆஸ்வெல் 1984) அதிகாரத்துவ அரசுக்கு மாறாக இதில் அனைத்து சமூக மற்றும் பொருளாதார அமைப்புகளும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

ஓரவை சட்டமன்றம் (Unicameral legislature): ஒரு சட்டமன்றமானது ஒரேயொரு அவையை மட்டும் கொண்டிருத்தல் ஆகும். உதாரணமாக அமெரிக்காவில் நெப்ரஸ்கா என்ற ஒரு மாகாணம் மட்டுமே ஓரவையைக் கொண்டுள்ளது.

11th Std Political Science Tamil_Unit-6.indd 112 06/12/2022 11:07:35

மதிப்பிடுதல் (Evaluation)

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. 'நாடாளுமன்ற முறை அரசாங்கம்' என்பது

அ) அமைச்சரவை அரசாங்கம் ஆ) பொறுப்பான அரசாங்கம்
இ) வெஸ்ட் மினிஸ்டர்அரசாங்கம் ஈ) இவை அனைத்தும்

2. கீழ்க்கண்டவற்றில் கூட்டாட்சி அரசாங்கத்துடன் தொடர்பில்லாத பண்பியல்பு எது?

அ) எழுதப்பட்ட அரசமைப்பு ஆ) நெகிழும் அரசமைப்பு
இ) அரசமைப்பின் மேலான தன்மை ஈ) சுதந்திரமான நீதித்துறை

3. இந்திய கூட்டாட்சி முறை எந்த நாட்டின் மாதிரியிலானது?

அ) கனடா ஆ) இங்கிலாந்து
இ) அமெரிக்கா ஈ) ஜப்பான்

4. கீழ்க்கண்டவற்றுள் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டில் (HDI) உள்ள மூன்று குறியீடுகள் யாவை?
I.வாழ்க்கைத் தரம் II. கல்வி III. சராசரி ஆயுட்காலம் IV. சுற்றுச்சூழல் நிலை

அ) I,II மற்றும் IV மட்டும் ஆ) I,II மற்றும் III மட்டும்
இ) I மற்றும் II மட்டும் ஈ) இவை அனைத்தும்

5. கீழ்க்கண்ட இயல்புகளில் இந்திய நாடாளுமன்ற முறை அரசாங்கம் செயல்பட அடிப்படையானவை யாவை?

அ) பெயரளவிலான மற்றும் உண்மையான செயலாட்சி
ஆ) கீழவைக்குப் பொறுப்பான செயலாட்சி
இ) உண்மையான செயலாட்சியாக பிரதமர் இருத்தல்
ஈ) இவை அனைத்தும்

6. கீழ்க்கண்டவற்றில் எக்காரணங்களுக்காக நமது அரசமைப்பினைத் தோற்றுவித்தவர்கள் இங்கிலாந்து நாடாளுமன்ற முறையினைத் தோந்தெடுத்தனர்?

1) அம்முறைமையுடனான பரிச்சயம் 2) அதிக பொறுப்புணர்வு
3) அதிகாரப் பிரிவினை 4) பன்முகத்தன்மையுள்ள இந்திய சமுதாயம்

அ. 1,2,4 மட்டும் ஆ. 1,2,3 மட்டும்
இ. 2,3,4 மட்டும் ஈ. இவை அனைத்தும்

7. அரசமைப்பின் அம்சங்கள் மற்றும் நடைமுறைகள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடும் கூட்டாட்சி அமைப்பு எது?

அ) சட்டமன்றம் ஆ) செயலாட்சி
இ) நீதித்துறை ஈ) அமைச்சரவை

8. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள அரசாங்க முறை;

அ) நாடாளுமன்ற முறையிலானது ஆ) குடியரசுத்தலைவர் முறையிலானது
இ) முழுமையானமுடியாட்சி ஈ) வரையறுக்கப்பட்ட முடியாட்சி

9. எழுதப்பட்ட அரசமைப்பு இல்லாத ஒரே நாடு எது?

அ) ரஷ்யா ஆ) ஈரான்
இ) ஜெர்மனி ஈ) இங்கிலாந்து

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு மிகச் சுருக்கமாக விடையளிக்கவும்.

1. அரசாங்கம் – வரையறு.

2. ஒற்றையாட்சி முறை அரசாங்கத்தின் நிறைகளைப் பற்றி எழுதுக.

11th Std Political Science Tamil_Unit-6.indd 113 06/12/2022 11:07:35

III. கீழ்க்கண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

1. இந்திய அரசமைப்பின் ஒற்றையாட்சி இயல்புகளை பட்டியலிடுக.
2. கூட்டாட்சி அரசாங்க முறையின் நிறைகள் மற்றும் குறைகளைப் பட்டியலிடுக.
3. இந்திய அரசமைப்பினை உருவாக்கியவர்கள் ஏன் நாடாளுமன்ற அரசாங்க முறையினை ஏற்றுக்கொண்டனர்?

IV கீழ்க்கண்ட வினாவிற்க்கு விரிவான விடையளி:

1. நாடாளுமன்ற முறை அரசாங்கத்திற்கும், குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்திற்கும் இடையேயான வேறுபாடுகள் பற்றி எழுதுக.

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Vijayaragavan, Political Thought, New Delhi, Sterling Publications
2. D.D.Basu, Introduction to the Constitution of Indian, New Delhi, Lexisnexis
3. R.C.Agarwal, Political Theory, New Delhi, S.Chand
4. IGNOU Politcal Science B.A and M.A
5. The Oxford Hand Book of The Indian Constitution

இணையவழி ஆதாரங்கள் (Internet Resources)

1. http://www.worldbank.org/
2. https://openknowledge.worldbank.org/handle/10986/5980
3. http://www.grossnationalhappiness.com/articles/

ICT Corner

அரசாங்கத்தின் வகைப்பாடுகள்

அரசாங்கத்தின் வகைப்பாடுகளை அறிந்து கொள்வோமா !

அரசாங்கத்தின் வகைகள்

செயல்முறை

படி 1: அரசாங்கத்தின் வகைப்பாடுகள் பக்கத்தைத் திறப்பதற்கு உரலி (URL) அல்லது விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தவும்.

படி 2: அரசாங்கத்தின் பல்வேறு வகைப்பாடுகள் நழுவல்களில் (slide) விளக்கப்பட்டிருக்கும்.

படி 3: அவ்விளக்கங்களை அறிய நழுவல்களைச் சொடுக்கி அறிந்து கொள்ளவும்.

படி 4: வினாடி வினாவை இயக்கவும், மீண்டும் நினைவுகூரவும் சாளரத்தின் மேல் உள்ள Play பொத்தானைச் சொடுக்கவும்.

அரசாங்கத்தின் வகைப்பாடுகள் URL:

http://www.brainrush.com/lesson/play/types-of-government

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்

அலகு 7

அரசியல் சிந்தனை



7.1 பிளாட்டோ (Plato)

(கி.மு (பொ.ஆ.மு.427 – (கி.மு) பொ.ஆ.மு.347)



- ❖ சாக்ரடீசின் மாணவர்
- ❖ அகாடெமியைத் தோற்றுவித்தார் – இது முதலாவது உயர்கல்வி நிறுவனமாகும்.
- ❖ தற்பொழுது வரை தனது படைப்புகள் நீடித்திருக்க கூடிய முதலாவது மேற்கத்திய சிந்தனையாளர்.
- ❖ சாக்ரடீசைப் பற்றி நாம் அறிவதன் பெரும் பகுதி பிளாட்டோவின் படைப்புக்களால் ஆகும்.
- ❖ இவ்வுலகைப் புரிந்துகொள்ள கணிதம் அடிப்படையானது என்ற பிதாகரசின் கருத்தினை ஏற்றுக்கொண்டார்.

கற்றலின் நோக்கங்கள்

- ❖ பிளாட்டோவின் அரசியல் சிந்தனையைப் புரிந்துகொள்ளுதல்.
- ❖ அவரின் சிந்தனையைத் தற்கால சூழலில் செயல்படுத்துதல்.
- ❖ அரசு, அரசாங்கம், நீதி, கல்வி, பொதுவுடைமை பற்றிய பிளாட்டோவின் கருத்துக்கள் மீதான அறிவைப் பெருக்குவதாகும்.

பிளாட்டோ கி.மு. 427–ல் பிறந்தார். இவர் கிரேக்க நகர அரசில் உள்ள ஏதென்சில் பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரின் இயற்பெயர் 'அரிஸ்டோகிள்ஸ்' (Aristocles) என்பதாகும். இது அவருடைய தாத்தாவின் பெயராகும். சில வரலாற்று அறிஞர்கள், பிளாட்டோவின் பயிற்சியாளரான ஆர்காசின் அரிஸ்டன் (Ariston of Argos) என்பவர் பிளாட்டோவின் பரந்த உடலமைப்பின் காரணமாக அவரை 'பரந்த' எனப்பொருள்படும் 'பிளாட்டோன்' (Platon) எனப்பெயரிட்டு அழைத்ததாகக் கூறுகின்றனர். இவர் கிரேக்கத்தின் முன்னணித் தத்துவ ஞானிகளில் ஒருவரான சாக்ரடீசின் சீடராவார். இவருடைய காலத்தில் கிரேக்கத்தின் நகர அரசான ஏதென்சின் அரசியல் வாழ்வு பெரும் குழப்பம் நிறைந்ததாக இருந்தது. இதன் விளைவாக ஏதென்சின் அரசாங்கம் சாக்ரடீசின் போதனைகளுக்காக அவருக்கு மரணதண்டனை அளித்தது. இது பிளாட்டோவின் ஏதென்ஸ் அரசியல் பற்றிய பார்வையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது.

பிளாட்டோ தனது 'அகாடெமியை' (Academy) பொ.ஆ.மு.387ஆம் ஆண்டுவாக்கில் தோற்றுவித்தார். அக்காலத்தில் ஏதென்சின் மிகவும் புகழ்வாய்ந்த நபரான 'அகடெமோஸ்' (Akademos) என்பவரின் பெயரால் 'அகாடெமி' அமைந்தது. இதில் பிளாட்டோ அரசியல், நன்னெறி, கணிதம் மற்றும் சமூகவியல் ஆகியவற்றை உள்ளடக்கிய அரசியல் தத்துவத்தினைப் போதித்தார்.

பிளாட்டோவின் படைப்புகள்

குடியரசு (The Republic) (கி.மு 386), ராஜதந்திரி (The Statesman)–(கி.மு360) மற்றும் சட்டங்கள் (The Laws)–(கி.மு 347) ஆகியவை பிளாட்டோவின் மூன்று

முக்கியப்படைப்புகளாகும். இப்படைப்புகளைத் தவிர பல சிறிய புத்தகங்களையும் பிளாட்டோ எழுதியுள்ளார்.

பிளாட்டோவின் சிந்தனை

பிளாட்டோவின் முக்கியக் கருத்துகளை அவரது மூன்று முக்கியப் படைப்புகளில் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்.

லட்சிய அரசு (Ideal State)

'அரசு' என்பது அரசியல் அறிவியலைக் கட்டியெழுப்பும் மிக முக்கியமான கருத்தாக்கமாகும். அவரைப் பொறுத்தவரை லட்சிய அரசு (பிளாட்டோவின் கூற்றுப்படி மனிதன் வாழ்வதற்கு மிகவும் உகந்த அரசு) என்பது ஆளும் வர்க்கம், இராணுவ வர்க்கம் மற்றும் பொருளாதார வர்க்கம் என மூன்று வர்க்கங்களைக் கொண்டதாகும். இது எவ்வாறு சாத்தியம் என அவர் தனது பின்வரும் நீதி மற்றும் கல்வி பற்றிய கருத்துக்களில் விவரிக்கிறார்.

நீதி பற்றிய கருத்து (Idea of Justice)

நீதி என்பது ஒரு தனி மனிதனிடம் மட்டுமல்லாமல் அரசிடமும் இருக்கவேண்டும் என பிளாட்டோ நம்புகிறார். ஒவ்வொரு மனிதனிடமும் மூன்று தகுதிகள் வெவ்வேறு விகிதாச்சாரங்களில் இயல்பாக அமைந்திருப்பதாகக் கூறுகிறார். அவை ஒரு மனிதனின் தலைப்பகுதியை உறைவிடமாகக் கொண்ட பகுத்தறிவு, இதயத்தை உறைவிடமாகக் கொண்ட உத்வேகம் மற்றும் வயிற்றுப்பகுதியை உறைவிடமாகக் கொண்ட உணவு நாட்டம் ஆகியவை ஆகும். இவையே மனித ஆத்மாவின் மூன்று பாகங்களாகும் எனக் கூறுகிறார். முதலாவதாக, உண்மையான நீதி என்பது ஒரு மனிதனை முழுமையாக்க இம்மூன்று பகுதிகளும் தங்களின் பணிகளை சரியாகச் செய்யவேண்டும் என்றார். இரண்டாவதாக, ஒரு மனிதனிடம் உள்ள இம்மூன்று பகுதிகளும், அரசிடம் பிரதிபலிக்க வேண்டும் என்றார். ஏனென்றால் அரசு என்பது ஒட்டுமொத்த மனிதர்களையும் முழுமையாக உள்ளடக்கியதாகும். இதனால் தான் ஆளும் வர்க்கம், இராணுவ வர்க்கம் மற்றும் பொருளாதார வர்க்கம் ஆகியவற்றுடன் பிளாட்டோவின் லட்சிய அரசு உருவாக்கம் பெற்றது.

மனிதன்	அரசு
பகுத்தறிவு	ஆளும் வர்க்கம்
உத்வேகம்	இராணுவ வர்க்கம்
உணவு நாட்டம்	துணை வர்க்கம்

கல்வி பற்றிய கருத்தாக்கம் (Concept of Education)

குழந்தைப் பருவத்திலிருந்து வளர்ந்த பருவம் வரை மாணவர்களின் வயதுக்குத் தகுந்த பல்வேறு நிலைகளை அடிப்படையாகக் கொண்டு கல்வி முறையை பிளாட்டோ வடிவமைத்தார். மனிதர்களுடைய ஆன்மாவின் மூன்று பகுதிகளான பகுத்தறிவு, உத்வேகம் மற்றும் உணவு நாட்டம் ஆகியவற்றின் விகிதங்கள் அடிப்படையில் கல்வியின் உயர்நிலைகளில் வெளியேற்ற முறையினை உருவாக்கியுள்ளார். அரசின் பொருளாதாரக் கடமைகளை நிறைவேற்றத் தகுந்தோர் கண்டறியப்பட்டு ஆட்சி மற்றும் இராணுவப் பணிகளில் இருந்து பிரிக்கப்படுவர். இரண்டாம் கட்டமாக தகுதியற்றவர்கள் நீக்கப்பட்டு ஆள்வதற்குத் தகுந்தவர்களுக்கு சிறப்புப் பயிற்சி கொடுக்கப்பட்டு பிளாட்டோவின் லட்சிய அரசினை ஆளுவதற்கான தத்துவ அரசனாக உருவாக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு தத்துவ ஞானியும் அவர் வாழ்ந்த காலத்தின் வெளிப்பாடாவார். கிரேக்கத்தின் மிகப்பெரும் ஞானியான சாக்ரடீசின் படுகொலையால் பிளாட்டோ மக்களாட்சியின் மீது அவமதிப்புக் கொண்டார். அதனால் மக்களாட்சிக்குப் பதிலாக தத்துவ ஞானிகளின் ஆட்சி மீது நம்பிக்கை கொண்டார்.

மக்களாட்சி பற்றிய கருத்துக்கள்

பிளாட்டோ தனது குடியரசு என்னும் நூலில் மக்களாட்சிக்குக் கண்டனம்

தெரிவித்துள்ளார். இவரின் கருத்து யாதெனில் அனைவரும் ஆள்வதற்குத் தகுதியானவர்கள் அல்ல. ஆள்வதற்காக சிறப்புப் பயிற்சி பெற்ற தத்துவ அரசர்களே ஆட்சி செய்யவேண்டும். ஏதென்சின் மக்களாட்சியே தனது ஆசிரியரான சாக்ரடீஸ் கொல்லப்படக் காரணம் என பிளாட்டோ எண்ணியதே அவர் மக்களாட்சிக்குக் கண்டனம் தெரிவிக்க காரணமாகும்

அரசமைப்புக்களை வகைப்படுத்துதல்

பிளாட்டோவின் கருத்துப்படி அரசமைப்பு என்பது ஓர் சமுதாயத்திலுள்ள மக்கள் தங்களின் நலனுக்காக குறிப்பிட்ட வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுப்பதாகும். இது சமூகப் பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள், நடைமுறைகள் மற்றும் இவற்றினை மேற்பார்வையிடும் அரசியல் மற்றும் அரசாங்கத்தினை உள்ளடக்கியதாகும். பிளாட்டோ தான் வாழ்ந்த காலத்தில் உலகத்தின் பல பகுதிகளில் இருந்த அரசமைப்புக்களை உள்ளவாறே விவாதித்தார். இவர் அரசமைப்புக்களை பிரபுக்களாட்சி, புகழ் விரும்புபவர் ஆட்சி, சிறுகுழு ஆட்சி, மக்களாட்சி மற்றும் கொடுங்கோலாட்சி என ஐந்து வகைகளாகப் பிரிக்கிறார். அவர் கூறுகையில் பிரபுக்களாட்சி தன் இயல்பிலிருந்து சிதைவுற்று புகழ் விரும்புபவர் ஆட்சியாகவும், பின்னர் அது சிறுகுழு ஆட்சியாக உருமாறி அதன் பின்னர் மக்களாட்சியாகிறது. மக்களாட்சியும் தன் பண்பிலிருந்து சிறைவுறும்போது கொடுங்கோலாட்சி ஆகிறது என்கிறார்.

குழந்தைகள் வளர்ப்பு

பிளாட்டோவின் கூற்றுப்படி குழந்தைகளை தேசியச் சொத்துக்களாகக் கருதி அவர்களின் மனப்பாங்கிற்குத் தக்கவாறு வளர்ப்பது அரசின் கடமையாகும் என்று கூறுகிறார்.

பிளாட்டோவின் தர்க்கவாத முறை (Plato's Dialectical Method)

பிளாட்டோ தனது 'குடியரசு'நூலில் இம்முறையினைப் பின்பற்றினார். இவர் இந்நூலினை எழுதும் போது தம்மை ஒரு மாணவனாகக் கருதி கேள்விகள் கேட்க ஓர் ஆசிரியராக சாக்ரடீஸ் அதற்கு பதிலளிக்கும் வகையில் அமைந்துள்ளார். ஓர் ஆசிரியர் அனைத்தும் அறிந்தவராக பாடத்தினை மாணவர்களுக்குக் கற்பிக்கும் "அறிவு போதனை"(Didactics) போலன்றி 'தர்க்கவாதம்'(Dialectics) என்பது கேள்வி பதில் முறையிலானதாகும். இம்முறையில் சிலவற்றைப் பற்றிய தெளிவற்ற சிந்தனையில் மாணவர்கள் ஆசிரியர்களிடம் கேள்வி கேட்பர். அதற்கு ஆசிரியர்கள் அளிக்கும் பதிலில் இருந்து மீண்டும் கேள்விகள் கேட்பர். இதன்மூலமாக மாணவர்கள் தங்களின் கருத்தினை உருவாக்கவும், மறுஉருவாக்கம் செய்யவும் ஆசிரியர் உதவி செய்கிறார். இறுதியாக மாணவர்கள் ஓர் கருத்தைப் பற்றிய சரியான புரிதலுக்கு வருகின்றனர்.

மதிப்பீடு

பிளாட்டோ முதல் தத்துவஞானி மட்டுமல்லாமல் சந்தேகத்திற்கு இடமின்றி குறிப்பிடத்தகுந்த படைப்புகளையும் முற்காலத்தில் நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். மக்களுக்குத் தொல்லை தரக்கூடிய பல்வேறு விஷயங்களைக் கேள்விகளாகக் கேட்டு அதற்கான பதில்களை அளிப்பதில் தம் பெரும் பகுதி நேரத்தைச் செலவழித்தார். அவர் மறைந்து பல நூற்றாண்டுகள் கடந்த பின்னரும் காலங்களைக் கடந்தும் தீவிரமான தாக்கத்தினை ஏற்படுத்துபவராக பிளாட்டோ கருதப்படுகிறார்.

11th Std Political Science Tamil_Unit-7.indd 117 06/12/2022 11:37:40

7.2 அரிஸ்டாட்டில் (Aristotle) (பொ.ஆ.மு.384 – பொ.ஆ.மு.322)

கற்றலின் நோக்கங்கள்

- அரிஸ்டாட்டிலின் அரசியல் சிந்தனையைப் புரிந்து கொள்ளுதல்
- ஒத்த கருத்தாக்கங்களைக் கொண்ட சிந்தனையாளர்களை ஒப்பிட உதவுதல்.
- லட்சிய அரசு, குடியுரிமை, இயல்பான மற்றும் திரிந்த அரசமைப்பு வடிவங்கள் மற்றும் முடியாட்சி, அரசாங்கத்தின் வடிவங்கள் மற்றும் மக்களாட்சி பற்றிய அறிவினைப் பெறுதல்.

மனிதன் என்பவன் இயற்கையாகவே ஓர் அரசியல் விலங்கு! இயற்கையில் ஒரு மனிதன் அரசு இல்லாமல் வாழ முடியாது! அவ்வாறு அரசின்றி வாழ்பவன் மனித குலத்திற்கு மேலானவன் அல்லது கீழானவன் ஆவான்!

– அரசியல் என்ற நூலில் அரிஸ்டாட்டில்

அரிஸ்டாட்டிலின் வாழ்வும் காலமும்

"அரசியல் தத்துவத்தின் வரலாற்றில் அனைத்துத் தகவல்களையும் தேடிப் பெறும் விருப்பத்தில் அரிஸ்டாட்டிலை மிஞ்சியவர் எவருமில்லை" என்கிறார் வில்லியம் எபென்ஸ்டீன்.

அரிஸ்டாட்டில், பிளாட்டோவின் அகாடெமியினுடைய மாணவராவார். பிளாட்டோவின் மரணத்திற்குப் பின்னர் அரிஸ்டாட்டில் கி.மு 355 -ல் 'லைசீயம்' (Lyceum) என்ற பள்ளியைத் தானே தொடங்கினார். இங்குதான் அலெக்சாண்டர் அரிஸ்டாட்டிலிடம் கல்வி கற்றார். இங்கு அனைத்துத் துறைகளிலும் ஆராய்ச்சி மற்றும் கல்வி போதனைகள் நிகழ்ந்தன. அரிஸ்டாட்டில் பொ.ஆ.மு.384-ல் ஸ்டாகிராவில் பிறந்தார். பிளாட்டோவைப் போலன்றி அரிஸ்டாட்டில் ஒரு உயர் நடுத்தர வகுப்புக்குடும்பத்தில் பிறந்தார். மாசிடோனியாவின் மன்னரான அமின்டாசின் (Amyntas) தனி மருத்துவராக இவரின் தந்தை நிக்கோமாகஸ் (Nicomachus) இருந்தார்.

அரிஸ்டாட்டில் என்பதன் பொருள் 'சிறந்த நோக்கம்' என்பதாகும். இவரின் பெயர்க்காரணத்தை மெய்ப்பிக்கும் வகையில் பிளாட்டோவின் லட்சிய அரசுக்கு மாற்றாக சிறப்பாக நடைமுறைப்படுத்தக்கூடிய அரசினை முன்மொழிந்தார். அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி அரசு என்பது குறிப்பிட்ட நோக்கத்திற்கானதாகும். இந்நோக்கமே மனிதனின் நீதிநெறி மற்றும் அறிவார்ந்த வாழ்வில் மேலான நன்மையைத் தருவதாகும்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

முழுமை என்பது பகுதிகளின் தொகுப்பைவிட மிகுதியானதாகும்.

– அரிஸ்டாட்டில் (Aristotle)

அரிஸ்டாட்டிலின் படைப்புகள்

கிரேக்க இலக்கியத்திலிருந்து விலங்கியல் வரை இவர் பல்வேறு துறைச்சார்ந்த புத்தகங்களை எழுதினார். இருப்பினும் இவரின் மிகச் சிறந்த படைப்பான 'அரசியல்' என்னும் நூலிலிருந்து தற்கால அரசியல் அறிவியல் வளர்ந்துள்ளது. இதனால் இவர் 'அரசியல் அறிவியலின் தந்தை' என அழைக்கப்படுகிறார். இது வெளியிடப்பட்ட மிகச்சரியான நாள் தெரியவில்லை. எனினும் இப்படைப்பு 1000 பக்கங்களுக்கு மேல் உள்ள 8 புத்தகங்களைக் கொண்ட பெரும் படைப்பாகும்.

பிளாட்டோ தனது ஆசிரியரான சாக்ரடீசுடன் ஏற்புடையவராக இருந்தாலும்,அரிஸ்டாட்டில் தன் ஆசிரியரான பிளாட்டோ கூறிய பலவற்றில் உடன்பாடின்றி இருந்தார்.

அரிஸ்டாடிலின் சிந்தனைகள்

அரிஸ்டாட்டிலின் அனைத்து விதமான அரசியல் கருத்துக்களை இவருடைய 'அரசியல்' என்ற புத்தகத்தில் காணலாம்.

அரசு ஓர் இயற்கை அமைப்பு (State as a natural Institution)

அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி அரசு இயற்கையானது. அரசின் அதிகாரம் நீதி நெறியிலானதாகும். குடும்பத்தால் மக்களின் அதிகரித்துக்கொண்டிருக்கக்கூடிய தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தால் தங்களின் குறுகிய வட்டத்திலிருந்து வெளிவந்து மக்கள் அரசினை உருவாக்க நினைக்கின்றனர். குடும்பங்கள் ஒன்றிணைந்து அரசினை ஓர் முழுமையான அமைப்பாக்குகின்றனர். தனி மனிதனின் பெரிய வடிவமே அரசு எனவும் ஓர் அரசில் மட்டுமே தனி மனிதனால் முழுமையாகச் சிந்திக்க இயலும் எனவும் அரிஸ்டாட்டில் நம்புகிறார்.

அரசின் பணிகள் (Functions of State):

அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி அரசின் தலையாயப் பணி என்பது நல்வாழ்வினை ஊக்குவித்து மக்களின் மனநலம், ஒழுக்க நெறி மற்றும் உடல்வளர்ச்சி ஆகியவற்றிற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதாகும். அரசானது மக்களின் நல்ல பழக்கவழக்கங்களை சிறந்த செயல்பாடுகளாக மாற்றி நலனை மேம்படுத்துவதோடு, மகிழ்வு மற்றும் மதிப்பிற்குரியதாக வாழ்வினை மாற்றும் வகையில் செயல்படவேண்டும்.

அரிஸ்டாட்டில்	: உனக்கு என்ன வேண்டும்?
மனிதன்	: நல் வாழ்வு.
அரிஸ்டாட்டில்	: அப்படியெனில் அரசின் அங்கமாக இரு.
மனிதன்	: எவ்வாறு?
அரிஸ்டாட்டில்	: குடிமகனாவதன் மூலம் இருக்கலாம்.

குடியுரிமைக் கோட்பாடு

ஒரு நபரின் வாழ்விடம், சட்ட உரிமை மற்றும் பிறப்பு ஆகியவை மட்டுமே குடியுரிமையை வழங்காது என அரிஸ்டாட்டில் நம்பினார். அவர் செய்யக்கூடிய பணியே ஒரு நபரை குடிமகனாக்குகிறது எனக்கூறுகிறார். ஒரு நபர் மட்டுமே இறையாண்மை அதிகாரங்களைக் கொண்ட மக்கள் சபையில் பங்கேற்க வேண்டும். ஒரு குடிமகன் அரசாங்கத்தின் முடிவாக்க நடைமுறையில் பங்கேற்க வேண்டும்.

அரசுகளை வகைப்படுத்துதல்

அரிஸ்டாட்டில் அளவு மற்றும் தரத்தின் அடிப்படையில் அரசுகளை வகைப்படுத்துகிறார்.

அளவு	தரம்	
வகை	சிறந்த வடிவம்	திரிந்த வடிவம்
ஒன்று	முடியாட்சி	கொடுங்கோலாட்சி
சிலர்	பிரபுக்களாட்சி	சிறுகுழு ஆட்சி
பலர்	தூய ஆட்சி அமைப்பு முறை	மக்களாட்சி

அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி இறையாண்மையானது ஒருவரிடம் இருந்தால் அது முடியாட்சியாகும். அது பின்னர் கொடுங்கோலாட்சியாக சிதைவுறுகிறது. அப்பொழுது மக்கள் ஆட்சியாளருடன் போராடி அதனை ஆள்வதற்கு சிலரிடம் தருகின்றனர். இவ்வாறு பிரபுக்களாட்சி வருகிறது. பின்னர் இதுவும் சிதைவுற்று சிறுகுழு ஆட்சியாகிறது. இதனால் மக்கள் மீண்டும் புரட்சி செய்து அதிகாரத்தினைப் பல ஆட்சியாளர்களிடம் அளிக்கின்றனர். இதனால் அரசு தூய ஆட்சி அமைப்பாகிறது. இது மீண்டும் சிதைவுறும்போது மக்களாட்சியாகிறது. இதன் ஆட்சியாளர்கள் அரசின் அடிப்படை நோக்கத்தைப் பற்றிய பொது நலப் பார்வையற்றவர்களாக இருப்பர். இது மீண்டும் முடியாட்சியின் எழுச்சிக்கு வகை செய்கிறது.

அடிமை முறை பற்றிய கருத்துக்கள்

அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி அடிமைகளே எஜமானரின் முதல் அசையும் சொத்தாவர். அதாவது ஓர் வீட்டின் தலைவராக எஜமானரின் உயிருள்ள சொத்துக்களில் அடிமைகள் முதலாவதாவர். அரிஸ்டாட்டில் நல்லொழுக்கம் இல்லாதவர்களே அடிமையாவர் எனக்கூறுகிறார். ஏனெனில் அடிமை என்பவன் செயல்பாட்டிற்கான கருவியேயன்றி உற்பத்திக்கு இல்லை என்கிறார். ஒருவேளை உற்பத்திப் பணிகளில் ஈடுபட்டால் ஓர் அடிமையாகத் தனது பண்பை இழந்து நல்லொழுக்கம் உள்ளவர்களாவர்.

குடும்பம் பற்றிய கருத்துக்கள்

குடும்பம் என்பது அரசிற்கு முந்தைய இயற்கை அமைப்பாகும். தனி மனிதர்கள் தங்களின் பிறப்பிலிருந்தே உறுப்பினர்களாக இருப்பதால் அது இயற்கையானதாகும். அதுவே நீதிநெறியிலான வாழ்வின் தொடக்கமாகவும் அரசின் மையக்கருவாகவும் உள்ளது.

சொத்து பற்றிய கருத்துக்கள்

தனி நபர் சொத்து என்பது சிறந்த மற்றும் இயல்பான வாழ்விற்கான அடிப்படை என அரிஸ்டாட்டில் ஆதரித்தார். இருப்பினும் தனிநபர் சொத்துக்களுக்கு சில வரையறைகளை அவர் பரிந்துரைத்தார். மேலும் அவர் தனிநபர் சொத்து ஒழிப்பிற்கு ஆட்சேபனை தெரிவித்தார்.

செயல்பாடு

அரிஸ்டாட்டில் அலெக்சாண்டருக்குப் பயிற்றுவித்தது உண்மையா?

ஆம். அவர் அலெக்சாண்டரின் தந்தையும் மாசிடோனியாவின் மன்னருமான இரண்டாம் பிலிப் கேட்டுக்கொண்டதால் பயிற்றுவித்தார்.

ஓய்வு பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்து

ஒரு நாட்டின் குடிமக்களுக்கு சொத்து மற்றும் அடிமைகள் அவசியம் என அரிஸ்டாட்டில் கூறுகிறார். இதற்குக் காரணம் என்னவென்றால், அப்பொழுது தான் குடிமக்களுக்கு ஓய்வு கிடைக்கும் என்றும் பயனுள்ள வகையில் சிந்திக்க நேரமும், நாட்டினர் அனைவரின் வாழ்வும் நலம்பெற திட்டமிடவும் இயலும் என்கிறார்.

புரட்சி பற்றிய கருத்துக்கள்:

அரசமைப்பு மாற்றங்களாலேயே முதலில் புரட்சி ஏற்படுவதாக அரிஸ்டாட்டில் கருதுகிறார். இம்மாற்றம் சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ இருக்கலாம். உதாரணமாக முடியாட்சியில் இருந்து கொடுங்கோலாட்சிக்கு ஏற்படும் மாற்றமானது மக்களிடையே புரட்சியைத் தூண்டுகிறது. இரண்டாவதாக அரசமைப்பில் மாற்றங்கள் நிகழாவிட்டாலும் அரசின் நோக்கங்கள் தவறினால் புரட்சிகள் ஏற்படுவதாகக் கூறுகிறார்.

மதிப்பீடு

அரசியல், உளவியல், மற்றும் நன்னெறி சார்ந்த மிகப்பெரும் அரசியல் சிந்தனையாளர்களில் ஒருவராக அரிஸ்டாட்டில் கருதப்படுகிறார். அவர் பெரும்பான்மையான அறிவியல் மற்றும் கலைகளில் பரந்த அறிவைக் கொண்டிருந்தார். அவரது படைப்புக்கள் பல நூற்றாண்டுகளுக்கான தத்துவத்தின் அடித்தளத்தினை ஏற்படுத்தியுள்ளன. மறுமலர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் அறிவொளி போன்ற அறிவுப் புரட்சிகள் ஏற்பட்ட காலத்திற்குப் பின்னரும் அரிஸ்டாட்டிலின் கருத்துக்கள் உலகத்தத்துவத்தின் அடித்தளத்தில் இருக்கின்றன. ஆகவே, சந்தேகத்திற்கிடமில்லாமல் எக்காலத்திலும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தத்துவ ஞானிகளில் ஒருவராக அரிஸ்டாட்டில் விளங்குகிறார்.

7.3 புனித தாமஸ் அக்வினாஸ் (Saint Thomas Acquinas) (பொ.ஆ.1225 – பொ.ஆ.1274)

கற்றலின் நோக்கங்கள்

- புனித தாமஸ் அக்வினாசின் அரசியல் சிந்தனையைக் கற்றறிதல்
- அக்வினாசின் சட்டம் பற்றிய கருத்தாக்கத்தினை புரிந்துகொள்ள உதவுகிறது.
- அரசின் தோற்றம், அரசின் பணிகள், அரசாங்கத்தின் வகைப்பாடு, சட்ட வகைப்பாடு திருச்சபை மற்றும் அரசிற்கு இடையேயான உறவுகள் பற்றிய அக்வினாசின் கருத்துகளில் அறிவு பெறுதல்

வாழ்வும் காலமும்

பதிமூன்றாம் நூற்றாண்டு மேற்கு ஐரோப்பாவில் மேற்கத்திய தத்துவத்தின் பொற்காலமாகக் கருதப்படுகிறது. மேற்கு ஐரோப்பாவின் பெரும்பான்மை மதமாக கத்தோலிக்கம் உருவானது. இதன் விளைவாக 13 ஆம் நூற்றாண்டில் அரிஸ்டாட்டிலின் அரசியல் மீண்டும் தோன்றியது. அரிஸ்டாட்டிலின் மதச்சார்பற்ற கருத்துக்களுக்கும் புனித அகஸ்டினின் பாவம் பற்றிய மத கருத்துகள், அரசியல் சமூகம் ஆகிய கருத்தாக்கங்களுக்கும் இடையே கூர்மையான வேறுபாடுகள் தோன்றின. இதனைத் திருச்சபை ஏற்றுக்கொண்டு பிணைப்புக் கோட்பாடாக்கியது.

இருப்பினும், சில தத்துவ ஞானிகள் மதச்சார்பற்ற அரசியல் அனுமானங்களுடன் தங்களின் சமயக் கருத்துக்களை உட்புகுத்துவதில் சவால்களைச் சந்தித்தனர். இதனால் இறுதியில் உலகைப் புரிந்துகொள்ளும் இரு வெவ்வேறு வழிமுறைகளுக்கிடையே இது சமரசத்தை ஏற்படுத்தியது. இதனைக் கடைசியில் அரசியல் மற்றும் அரசியல் கோட்பாடு ஆக்குவதன் மூலம் கடவுளுடன் நெருங்கும் மக்களின் உயர்ந்த விருப்பத்தில் வெற்றி கண்டனர். இம்முக்கிய தத்துவ வெற்றிக்கு சிற்பியாக இருந்த கிறித்துவ சமயவாதிகளில் புனித தாமஸ் அக்வினாஸ் மிக முக்கியமானவராவார்.

புனித தாமஸ் அக்வினாஸ் நேப்பிள்சின் வடக்கே உள்ள ராக்காசீக்காவில் (Roccasecca) உள்ள தனது குடும்பத்துக்குச் சொந்தமான கோட்டையில் பொ.ஆ. 1225 –ல் பிறந்தார். அவரது தந்தையான அக்விேனா லேண்டல்ஃப் (Landulf of Aquino) ஓர் முக்கிய நிலவுடமைக் குடும்பத்தின் தலைவராவார். தாயாரான தியோடோரா ரோசி (Theodora Rossi) அவர்கள் நியோபாலிட்டன் கராசியோலோ (Neapolitan Carracciolo) குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அக்வினாசின் படைப்புக்கள்

19 ஆம் நூற்றாண்டில் போப் பதிமூன்றாம் லூயி அவர்கள் அக்வினாஸின் தத்துவார்த்த முறையைக் கத்தோலிக்க சமயவாதத்தின் அலுவல் மதமாகும் என பிரகடனப்படுத்தினார். இது கத்தோலிக்கர்கள் அவரின் படைப்புக்களை வாசிப்பதை முக்கியமாக்கியதுடன் கிறித்துவ மதத்தின் இப்பிரிவினை புரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கும் முக்கியமானதாக விளங்கியது. அக்வினாசின் படைப்புகளிலுள்ள கருத்துரைகள் அனைத்தும் அவரது சமயவாத வடிவமைப்பிலிருந்து தோன்றியதாகும். இவரது முக்கியப் படைப்புகள் (1) சம்மா காண்ட்ரா ஜெண்டிலஸ் (Summa Contra Gentiles) (கி.மு 1264) (2) சம்மா தியாலஜிகா (Summa Theologica) (கி.மு 1274) (3) அரசுரிமை (On Kingship).

11th Std Political Science Tamil_Unit-7.indd 121 06/12/2022 11:37:42

அக்வினாசின் சிந்தனை

சம்மா காண்ட்ரா ஜென்டிலெஸ் (Summa Contra Gentiles):

அக்வினாஸ் தனது சம்மா காண்ட்ரா ஜென்டிலெஸ் என்னும் நூலினை ஸ்பெயின் நாட்டில் இஸ்லாமிய மதத்துடான கணக்கீட்டினை கிறித்துவர்கள் நேர்செய்ய டொமினிக்கன் சமயப் பரப்புக் குழுவினருக்கு ஓர் கையேடு அல்லது பாடநூலாக வடிவமைத்தார் என பரவலாகக் கூறப்படுகிறது. இப்படைப்பு கிறித்துவ மத நம்பிக்கை மீதான குற்றச்சாட்டுக்கள் மற்றும் குற்றம்சாட்ட வாய்ப்புள்ளவற்றினைப் பாதுகாக்கும் வகையிலான படைப்பாகும்.

சம்மா தியாலஜிகா (Summa Teologica)

அக்வினாஸ் தன்னுடைய சம்மா தியாலஜிகாவில் பகுத்தறிவு அடிப்படையில் ஒற்றுமையை ஏற்படுத்த நான்கு நிலைகளிலான சட்டங்களை நிலைநாட்டினார். இவை சட்டத்தினை ஓர் வடிவத்திலிருந்து மற்றொன்றிற்கு வேறுபடுத்துவது சம்பந்தப்பட்ட பகுத்தறிவின் நிலைகளாகும். இப்பிரபஞ்சம் முழுமைக்கும் செயலாற்றக்கூடிய பகுத்தறிவே இவற்றில் மிகவும் உயர்ந்த மற்றும் விரிவானதாகும். இதனை 'நித்திய சட்டம்' (Eternal Law) என பெயரிட்டுள்ளார். இது கடவுளால் நிறுவப்பட்ட இயற்கையான நன்னெறி முறைமையாகும். இதற்கு அடுத்தாக நித்திய சட்டத்தின் சிறப்புப் பிரிவாக 'தெய்வீக சட்டம்' (Divine Law) உள்ளது. இது பல்வேறு மத இலக்கியங்களில் கடவுளின் வெளிப்பாடுகளைக் கொண்டதாகும்.

இதற்கடுத்த நிலையில் உள்ள சட்டத்தினை அக்வினாஸ் 'இயற்கைச் சட்டம்' (Natural Law) என அடையாளம் காட்டுகிறார். இந்த இயற்கைச் சட்டக் கருத்தானது உணர்வடக்கத் தத்துவத்தின் அடிப்படையில் பகுத்தறிவினால் கண்டறியப்பட்ட நீதிநெறிச் சட்டமாகும். இது மனிதனுக்குப் பகுத்தறிவுத் திறன் உள்ளது எனவும், சட்டத்தினால் குறிப்பிடப்பட்டாலும் இல்லாவிடினும் சில நன்னெறிகளுக்கு மனிதனை உட்படுத்துகிறது எனவும் அனுமானிக்கிறது. உதாரணமாக கொலை செய்தல் என்பது தவறு என்றும் தகுந்த முறையிலான நடத்தையினைப் புரிந்துகொள்ள நமக்கு ஓர் குற்றவியல் சட்டம் தேவையில்லை எனவும் கூறுகிறது.

அக்வினாசின் இயற்கைச் சட்ட கோட்பாட்டின் தனித்தன்மை யாதெனில் அது இயற்கை மற்றும் தெய்வீகம், அதாவது இயற்கை மற்றும் பரிசுத்த ஆவியுடன் தொடர்பினை ஏற்படுத்துவதாகும். கடவுளின் நித்திய சட்டத்தால் சரியானவை மற்றும் தவறானவை எவை என தீர்மானிக்கப்படுகிறது. ஆகையால் இயற்கைச் சட்டம் என்பது வேறொன்றுமல்ல நித்திய சட்டத்தில் பகுத்தறிவிலான படைப்பின் பங்கேற்பாகும். மனிதனின் நீதிநெறியிலான பகுத்தறிவு என்பது சுருக்கமாக இயற்கையைக் கடந்த பரிசுத்த ஆவி கொள்கையின் நீட்டிப்பாகும். இறுதியாக, மனிதச்சட்டம் என்பது குறிப்பிட்ட புவிசார் சூழ்நிலைகளில் இயற்கைச் சட்ட நல்லொழுக்க நெறியுரைகளில் மனித பகுத்தறிவின் செயலாக்கமாகும்.

அரசுரிமை பற்றிய கருத்துக்கள் (*On Kingship*)

அக்வினாசின் அரசியல் கோட்பாடானது அரிஸ்டாட்டிலின் கோட்பாட்டினை ஒத்துள்ளது. அரசுரிமை பற்றிய அக்வினாசின் எழுத்துக்கள் மிகச் சீரான அரசியல் படைப்பாகக் கருதப்படுகிறது. அரிஸ்டாட்டில் தனது 'அரசியல்' என்னும் நூலில் பின்பற்றிய தர்க்க முறைபாணியினை அக்வினாசும் பின்பற்றுகிறார். இவர் "அரசு இயற்கையானது ஏனெனில் அது மனிதனுக்கும் இயற்கையானது. ஓர் சமூக மற்றும் அரசியல் விலங்காக ஓர் குழுவாக வாழ்வதற்கு" என வாதிடுகிறார். இதன் விளைவாக அரசியல் செயல்பாடுகள் தேவை மற்றும் நன்மையானதாகும் என வலியுறுத்துகிறார். அரிஸ்டாட்டிலைப் போலவே அக்வினாசும் மக்களின் அரசியல் தன்மைக்கு அவர்களின் பகுத்தறிவு மற்றும் பேச்சுத்திறன் ஆகியவை அடிப்படையாகும் என்கிறார்.

இதற்கு அடுத்ததாக அரசியல் அரங்கில் பகுத்தறிவிலான நடவடிக்கையின் மூலமாக மனிதர்கள் நல்லொழுக்கத்தைப் பெற்று

மகிழ்ச்சி மற்றும் நிறைவடைகின்றனர் என கூறுகிறார். இவர் அரிஸ்டாட்டிலைப் போன்றே 'அரசு' என்பது நீதிநெறியிலான சமூகம் என நம்பினார். மேலும் அதன் நோக்கமே உறுப்பினர்களின் நீதிநெறியிலான நன்மையாகும். இவ்வாறு அரசு என்பது நீதியின் அடிப்படையிலானது எனவும் சட்டவரையறைக்கு உட்பட்ட குடிமக்களின் நன்மைக்காக சிறந்தவர்களே ஆளவேண்டும் எனவும் வாதிட்டார். இத்தகைய வாதமானது நம்மைநேரடியாகஅரசமைப்பு வகைப்படுத்தல் பிரச்சனைக்கு வழிநடத்திச் செல்கிறது என்பதால் மீண்டும் அக்வினாஸ் அவர்கள் அரிஸ்டாட்டிலின் கொள்கைகளைப் பின்பற்றி தரம் மற்றும் அளவீட்டு முறைகளைப் பயன்படுத்தினார். இவர் அரசமைப்பினை ஆள்பவர்களின் எண்ணிக்கை மற்றும் ஆட்சியின் தரத்தின் அடிப்படையில் வகைப்படுத்துகிறார்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

சட்டம் என்பது சமூக அக்கறையுடன் உள்ள நபரால் பொது நலனுக்காக பகுத்தறிவின் அடிப்படையில் குறிப்பிட்ட விதிமுறைகளை ஏற்படுத்துவதன்றி வேறொன்றுமில்லை

– தாமஸ் அக்வினாஸ் (*Thomas Aqinas*)

மதிப்பீடு

புனித தாமஸ் அக்வினாஸ் இடைக்காலச் சிந்தனையாளர்களில் பெரும் சிந்தனையாளராகக் கருதப்படுவதுடன் புதிய மரபினையும் தோற்றுவித்தார். இது 'தாமிசம்' (Thomism) என அழைக்கப்படுகிறது. இவரது அரசியல் கோட்பாட்டின் அடிப்படைகளை இவரின் அரிஸ்டாட்டிலினுடைய அரசியல் பற்றிய கருத்துரையான 'டி ரெஜிமினிபிரின்சிபம்' (de regimineprincipum இறைமை ஆட்சி) என்பதில் காணலாம். அப்பொழுது அவர் போப்பின் அவையில் இத்தாலி நாட்டில் (1259-68) இருந்தார். அரிஸ்டாட்டிலைப் போன்றே அரசு இயற்கையானது என்றும் அது மரபார்ந்த நிறுவனமல்ல மிகச்சரியான சமுதாயமாகும் எனவும் கூறுகிறார். மனிதர்கள் சமூக விலங்காக இருப்பதால் அரசு என்பது மரபார்ந்ததல்ல என்பதுடன் இயற்கையானதாகும் என்கிறார். அவர்கள் வாழ்வதற்காகவும், வளம் பெற்று பண்பாட்டு மேம்பாடு அடைவதற்காகவும் சமுதாயத்தை உருவாக்க விழைகின்றனர். இதனைக் கூடிவாழும் விலங்குகள் உள்ளுணர்வின் அடிப்படையிலும், மனிதர்கள் பகுத்தறிவின் அடிப்படையிலும் மேற்கொள்கின்றனர்.

அக்வினாசின் கூற்றுப்படி அனைத்து வலிமையும் கடவுளிடம் இருந்தே வருகின்றன. இதற்குக் காரணம் வாழ்வின் வலிமை மற்றும் இறப்பு ஆகியவை திருச்சபை கோட்பாட்டின்படி கடவுளின் தனிச்சிறப்புரிமையாகும். இச்சந்தர்ப்பத்தில் அக்வினாஸ் அவர்கள் அரிஸ்டாட்டிலிடம் இருந்து மாறுபட்டாலும் இறையாண்மை இயற்கையானது எனும் கேள்வியில் மீண்டும் திரும்புகிறார். மக்களைக் கட்டுப்படுத்தும் முடிவுகளை எடுக்கக்கூடிய ஆளும் அமைப்பு இல்லாவிடில் குழப்பம் விளைந்து மக்கள் ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்வர் என்கிறார். அக்வினாசின் கருத்துப்படி இறையாண்மை மிக்க அரசன் அல்லது அரசாங்கம் என்பது ஆளப்படுவோரின் பிரதிநிதியாகும்.

இங்ஙனம் அரசு என்பது எவ்வகையிலும் திருச்சபையினை சாராததாகும். இவை ஒவ்வொன்றும் தனித்தனி பங்கு மற்றும் நோக்கங்களைக் கொண்டதாகும் என அக்வினாஸ் வாதிடுகிறார். அக்வினாசின் கருத்துப்படி திருச்சபை அரசிற்கு கீழானதல்ல. ஆனால் அரசு என்பது திருச்சபையினை கருத்தில் கொள்ளவேண்டும். இதற்கு திருச்சபையின் நோக்கம் அரசின் நோக்கத்தினை விட உயர்ந்ததாக இருப்பதுடன் குடிமக்களின் அடிப்படை நோக்கமாகவும் இருப்பதாகும்.அக்வினாஸ் திருச்சபைக்கும், அரசுக்கும் உள்ள உறவினை ஆன்மாவிற்கும், உடம்பிற்கும் உள்ள உறவாக கருதுகிறார். ஒவ்வொன்றும் தனிப்பட்ட பங்கினை கொண்டிருந்தாலும் ஆன்மாவின் நோக்கம் உயர்ந்ததாகும்.

7.4 நிக்கோலோ மாக்கியவல்லி
(Niccolo Machiavelli)
(பொ.ஆ.1469 – பொ.ஆ.1527)

கற்றலின் நோக்கங்கள்

- நிக்கோலோ மாக்கியவல்லியின் அரசியல் சிந்தனையைப் புரிந்துகொள்ளுதல்
- இது ஒத்த கருத்துடைய சிந்தனையாளர்களுடன் ஒப்பிட உதவுகிறது
- அரசியல், மதம், அரசு, இளவரசனுக்கான அறிவுரை பற்றிய மாக்கியவல்லியின் கருத்துக்களை அறிந்து கொள்ளுதல்

வாழ்வும் காலமும்

இத்தாலிய பண்பாட்டின் மையமான ஃபிளாரன்சில் மாக்கியவல்லி பிறந்தார். பிற பகுதிகளை விட அங்கு ஐரோப்பிய மறுமலர்ச்சியின் தாக்கம் அதிகமாக இருந்தது. இவர் வழக்கறிஞரான பெர்னார்டோ டி நிக்கோலோ மாக்கியவல்லி (Bernardo di Niccolo Machiavelli) மற்றும் அவரது துணைவியரான ஸ்டெஃ பானோ நெல்லி பார்த்தோலோமியா(Bartolomea of Stefano Nelli) ஆகியோருக்கு மூன்றாவது குழந்தையாகப் பிறந்தார். மறுமலர்ச்சின் தாக்கத்தின் அடிப்படையில் சிறப்பான மனிதநேயக் கல்வியை இவர் பெற்றுள்ளதை அவரது எழுத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. இவர் பொ.ஆ.1494-ல் மெடிசி (Medici) வீழ்ந்த பிறகு குடியரசு அரசாங்கத்தின் பணியில் நுழைந்தார். பொ.ஆ. 1498 முதல் 1512 வரை வேந்தர் பணியகத்தின் செயலராக இருந்தார். இப்பதவி தூதாண்மை, இராணுவம் மற்றும் நிர்வாக விவகாரங்கள் தொடர்பான முக்கியப் பதவியாகும். கி.மு 1512-ல் மெடிசி மீண்டும் நிறுவப்பட்டதன் விளைவாக மாக்கியவல்லி தனது பதவியை இழந்து சில காலத்திற்கு சிறைப்படுத்தப்பட்டார். இதன் பின்னர் அவர் இலக்கியப் பாதையில் பயணித்தார். கி.மு 1513-ல் லோரென்சோ டி மெடிசிக்காக (Lorenzo de Medici) 'இளவரசன்' (The Prince) என்னும் தனி வரைவு நூலை எழுதினார். இக்காலகட்டத்திலேயே அவர் தனது அடுத்த முக்கியப் படைப்பான டைட்டஸ் லிவியசின் முதல் பத்து புத்தகங்களுக்கான உரைக்கோவை (சுருங்கக்கூறின் லிவி மீதான உரைக்கோவை – Discourses on Livy) என்னும் நூலினை 1517-ல் நிறைவுசெய்தார். இருப்பினும் இவ்விரு படைப்புகளும் அவரது மறைவிற்குப் பின்னர் 1531-ல் வெளியிடப்பட்டன. மாக்கியவல்லி மேலும் சில சிறிய இலக்கிய படைப்புகளை உருவாக்கினாலும் ஓர் அரசியல் சிந்தனையாளராக அவரது மதிப்பு இவ்விரு புத்தகங்களின் அடிப்படையிலேயே நீடிக்கிறது.

மனிதனின் தன்மை பற்றிய மாக்கியவல்லியின் கருத்துக்கள் (Machiavelli on Human Nature)

மாக்கியவல்லியின் அரசாங்கம் பற்றிய கோட்பாடானது அவரது மனிதனின் தன்மை பற்றிய கருத்தாக்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவரும் ஹாப்சைப் போன்றே மனிதனின் தன்மை மீது அவநம்பிக்கை கொண்டிருந்தார். மனிதர்கள் இயற்கையில் முழுமையான சுயநலம் கொண்டிருப்பதுடன் அவர்களின் வாழ்விலும் சுயநல விருப்பங்களால் உந்தப்படுகின்றனர் என நம்புகிறார். இளவரசன் நூலின் ஓரிடத்தில் மனிதன் நன்றி மறந்தவன், நிலையற்றவன்,ஏமாற்றுபவன்,கோழைத்தனம் மற்றும் கஞ்சத்தனமுள்ளவன் என கூறுகிறார். மன்னரானவர் மக்களால் விரும்பப்படுவதைக் காட்டிலும் அவரைக் கண்டு மக்கள் அஞ்சுவதையே இலக்காக்க வேண்டும் என பரிந்துரைக்கிறார். மாக்கியவல்லியைப் பொறுத்தவரை அன்பு என்பது ஓர் கடப்பாட்டுப் பிணையாகும். மனிதர்கள் அடிப்படையில்

சுயநலமாக இருப்பதால் தங்களின் தேவைக்குத் தக்கவாறு அதனை ஒவ்வொரு சமயத்திலும் மீறுவர்.

ஆனால் பயம் என்பது அக்காரணத்திற்காகவே அவர்களைக் காலவரையறையின்றி கட்டுப்படுத்தி வைக்கிறது. மனிதர்கள் தோற்றத்தின் அடிப்படையிலேயே விஷயங்களைத் தீர்மானிக்கின்றனர் என்பதால் இதனை ஆட்சியாளர் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு செயல்படவேண்டும். அவரைப் பொறுத்தவரை மனிதர்கள் பலவீனமானவர்களாகவும், அறியாமையில் உள்ளதுடன், அடிப்படையில் கெட்டவர்களாகவும், தேவையின் அடிப்படையில் நல்லவர்களாகவும் உள்ளனர். இதனால் ஆட்சியாளர் தனது மன்ற உறுப்பினர்களை எப்பொழுதும் நம்பாமல் தனது சுய முடிவினைப் பயன்படுத்துமாறு எச்சரிக்கிறார்.

மனிதர்கள் முடிவற்ற விருப்பமுள்ளவர்கள் என்றும் அதில் மிக முக்கியமான விருப்பமாக தனிநபர் சொத்து உள்ளது எனவும் கூறுகிறார். அவர் பொருள்முதல்வாத தனிமனிதத்துவதத்தினை சுதந்திரம் மற்றும் சுய அரசாங்கத்தின் மீதான விருப்பத்தின் விளக்கமாக கூறுகிறார். அவர் தனது உரைக்கோவையில் (The Discourses) மனிதனின் தன்மை மீதான அவநம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார். மனிதனின் அடிப்படை விருப்பமாக பொருளாதார ஆதாயமே உள்ளது என்பதைப் பேணுகிறார். மக்களின் இந்நோக்கமே அவர்களை குடியரசினை விரும்பவும், முடியாட்சியை வெறுக்கவும் வைக்கிறது என்கிறார். குடியரசிலான அரசாங்கத்தின் கீழ் மக்கள் அதிகமான பொருளாதார ஆதாயங்களை பெறும் வாய்ப்பு அதிகமாகும். இது முடியாட்சியில் சாத்தியமாகாததற்குக் காரணம் யாதெனில் இளவரசன் அனைத்து ஆதாயங்கள் மற்றும் லாபங்களைத் தனக்கே எடுத்துக்கொள்வதாகும். ஓர் சுதந்திரமான தேசம் விரும்பப்படுவதற்கான காரணம் என்னவெனில் அச்சுதந்திர தேசத்திலேயே மக்களின் வளம் பன்மடங்காகப் பெருக வாய்ப்புள்ளது.

அரசியல் மற்றும் நீதிமுறைமையைப் பிரித்தல்

கிரேக்க அரசியல் சிந்தனையில் அரசியலின் அடிப்படையாக நன்னெறி கருதப்படுகிறது. ஆனால் மாக்கியவல்லி இம்மரபார்ந்த லட்சியத்திலிருந்து குறிப்பிடத்தகுந்த அளவில் மாறுபட்டிருக்கிறார். அரசியல் என்பது அதன் சுதந்திரமான சுயமதிப்பளவின் அடிப்படையிலானதாகும். ஆகவே அதனை மரபார்ந்த நன்னெறி மதிப்பளவின் கீழ் வரையறை செய்ய முடியாது என்கிறார். மேலும் அவர் அரசியல் மற்றும் நன்னெறியினைப் பிரிப்பதனை வலியுறுத்துகிறார். அவரைப் பொறுத்தவரையில், ஆட்சியாளர் ஒழுங்கானவராகவும், நேர்மையானராகவும் தனது வார்த்தைப்படி நடப்பவராகவும் இருக்கவேண்டும். உண்மையில் எந்தவொரு ஆட்சியாளரும் இத்தகைய தகுதிகளுடன் இருப்பதில்லை. கெட்ட எண்ணமுள்ள மக்களை ஆள்வதற்காக ஆட்சியாளருக்கு இத்தகுதிகள் உகந்தவையல்ல. மேலும் நீதிநெறி கடப்பாடுகளற்ற அரசைப் பாதுகாப்பதில் இளவரசன் கவனம் செலுத்தவேண்டும். 'முடிவுகளே வழிமுறைகளைத் தீர்மானிக்கின்றன, என்பதனுடன் மாக்கியவல்லி திருப்தியடையவில்லை. மக்கள் தீர்ப்பின் அடிப்படையிலேயே ஆட்சியாளரின் வெற்றி தீர்மானிக்கப்படுகிறது'. நம்பத்தகாத வழிமுறைகளைப் பின்பற்றினாலும் இறுதியில் வெற்றியடைந்தால் இளவரசன் மன்னிக்கப்படுகிறார். அரசியல் செயல்பாடுகளுக்கு அவசியப்படும்போது மரபார்ந்த நீதிமுறைமையை ஒதுக்கி வைத்துவிட்டு வெற்றிகரமான அரசியலுக்கு மேற்செல்ல வேண்டும்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

ஓர் இளவரசன் அரசினைக் கைப்பற்றி நிர்வகிக்கும் பணியினை செய்யமுற்படுவதால் அவரது முறைகள் எப்பொழுதுமே மேன்மையானதாகக் கருதப்படுவதுடன் அனைத்து தரப்பினராலும் பாராட்டப்படுகிறார்.

உங்களுக்குத் தெரியுமா?

மாக்கியவல்லி (இளவரசன்)

மாக்கியவல்லியின் முறைமை (Machiavelli's Method)

மாக்கியவல்லியைப் பொறுத்தவரை வரலாற்று முறையே அரசியல் அறிவியலைக் கற்கும் சரியான முறையாகும். இவர் மனித விருப்பங்கள் மற்றும் பேரார்வம் ஆகியவை எப்பொழுதும் ஒரே மாதிரியானவை எனக்கூறுகிறார். வாழ்விலுள்ள சம்பவங்களை ஒப்பிடும் போது மனித இனம் ஒரே மாதிரியான பரிகாரங்களைத் தேட முனைவதுடன் ஒரே மாதிரியான நடத்தையை மீண்டும் கொண்டிருக்கின்றன எனக்கூறுகிறார். ஆகவே கடந்த காலத்தைப் படித்தறிவது என்பது தற்காலத்தைப் புரிந்து கொள்வதுடன் எதிர்காலத்திற்கான முன்கணித்தலை மேற்கொள்வதை எளிமையாக்குகிறது என்கிறார். அவர் அரசியலை வரலாறு மற்றும் மெய்மைவாத அடிப்படையில் கற்பதுடன் குறிப்பாக அரசியல் நடத்தையைக் கற்றறிவதற்கு செயலறிவு முறையினைச் சார்ந்துள்ளார். அவர் நடத்தையியலின் முன்னோடியாக விவரிக்கப்படுகிறார். இளவரசன் மற்றும் உரைக்கோவை ஆகிய இரண்டிலுமே இம்முறையினை அவர் பின்பற்றுகிறார். அவர் அதிகாரத்தினை கையகப்படுத்தி, பாதுகாத்து விரிவாக்கம் செய்யும் கருவியே அரசியல் என்பதுடன் அவற்றினை அடைவதற்காக இம்மெய்யான உலகில் உள்ள மக்களின் அறிவுத்திறனுக்குத் தக்கவாறு அணிதிரட்டி அடைவதாகக் கருதுகிறார்.

மாக்கியவல்லியின் முறையானது உய்த்தறிதல் அல்லது அறிவியல் முறையாக அழைக்கப்படுகிறது. இதற்கான அடிப்படை யாதெனில் அவர் பல்வேறு அரசியல் ஆட்சி காலங்களின் மனிதனின் தன்மை பற்றிய நடைமுறை அல்லது வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் முடிவுரைகளை எட்டுகிறார். அரசியலைப் பகுத்தறியும் சில நீதிநெறிகளுக்கு மாற்றாக மனித நடத்தையின் பாங்கில் கவனம் செலுத்துவதில் அவருடைய சுயத்தன்மை உள்ளது. இருப்பினும் மாக்கியவல்லியின் முறையானது மேலோட்டமான அறிவியல் மற்றும் வரலாற்று முறையாகும் என விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். அவர் குறிப்பிட்டவற்றிலிருந்து பொதுவானவற்றை (Particular to General) நோக்கிய நடைமுறையிலான உய்த்தறிதல் முறையினைப் (Inductive Method) பின்பற்றவில்லை. அதே நேரத்தில் 'பொதுவானவற்றிலிருந்து குறிப்பிட்டவற்றிற்கான'(General to Particular) நடைமுறையில் கொணர்முறையினையும் (Deductive Method) பின்பற்றவில்லை. அவர்களைப் பொறுத்தவரையிலும் மாக்கியவல்லி அரசியல் தத்துவத்தின் மையப் பிரச்சனைகளை எப்பொழுதும் தொடவில்லை. உதாரணமாக அரசு நீடித்தலுக்கான நியாயவாதம் மற்றும் அரசியல் கோட்பாட்டின் அடிப்படைகள் மற்றும் வரையறைகளைக் குறிப்பிடலாம். அவருடைய பார்வை பரந்ததாக இருந்தாலும் நடைமுறை அரசியலின் தேவைகளைத் தாண்டி அவர் எப்பொழுதும் பார்த்ததில்லை.

"அரசுகளைக் கண்டறிய மற்றும் சீர்திருத்த ஓர் ஆட்சியாளர் தேவை. அவை நிறுவப்பட்ட பின்னர் தாங்கிப் பிடிப்பதில் குடியரசிலான அரசாங்கங்கள் சிறந்தவையாகும்".

அரசியல் மற்றும் மதத்தினை பிரிப்பது பற்றி நிக்கோலோ மாக்கியவல்லி

அரசின் நன்னெறி நோக்கம் பற்றிய பிளாட்டோ, அரிஸ்டாட்டில், புனித தாமஸ் அக்வினாஸ் மற்றும் பலரின் நம்பிக்கையில் இருந்து மாக்கியவல்லி மாறுபட்டுள்ளார். அவர் அரசியலை மதம் மற்றும் நீதிமுறைமை ஆகியவற்றிலிருந்து பிரித்து அரசியலுக்கு ஓர் தன்னாட்சி நிலையினைத் தருகிறார். மதம் மற்றும் நீதிநெறி ஆகியவை இளவரசனின் ஆட்சிக்கலையில் நடைமுறைக் கொள்கையாகாது என மாக்கியவல்லி கூறுகிறார்.

மாக்கியவல்லி (லிவி மீதான உரைக்கோவை– Discourses on Livy)

மாக்கியவல்லியின் இரு முன்னணி புத்தகங்களான 'இளவரசன்' மற்றும் 'லிவி மீதான உரைக்கோவை' ஆகியவற்றிற்கிடையே எத்தகைய முரண்பாடுகளும் இல்லை என ஜார்ஜ் H. சபைன் என்னும் அறிஞர் சரியாக உற்று நோக்குகிறார். இரண்டுமே ஒரே பொருளைப் பற்றியவையாகும். அதாவது அரசுகளின் எழுச்சி மற்றும் வீழ்ச்சிக்கான காரணங்கள் மற்றும் அவற்றை நிரந்தரமாக்குவதற்கான வழிமுறைகள் ஆகியவை ஆகும். 'இளவரசன்' நூல்

11th Std Political Science Tamil_Unit-7.indd 126 06/12/2022 11:37:42

முடியாட்சிகள் அல்லது முழுமையான அரசாங்கங்களைப் பற்றியும் உரைகோவையானது முக்கியமாக ரோமப் பேரரசின் விரிவாக்கம் பற்றியதாகும்.

மாக்கியவல்லியின் ஆட்சிக்கலை (Machiavelli's Statecraft)

ஆட்சிக்கலை என்பது மாக்கியவல்லி எடுத்தியம்பியவற்றில் குறிப்பிடத்தகுந்த மற்றும் சர்ச்சைக்குரிய பங்களிப்பாகும். அது தனித்தன்மையான வழிகாட்டு முறைகளைக் கொண்டிருப்பதால் குறிப்பிடத்தகுந்ததாகவும், வெற்றிகரமான ஆளுகைக்காக ஆட்சியாளர் குறிப்பிட்ட அநீதியான நடைமுறைகளைப் பயன்படுத்துவதால் சர்ச்சைக்குரியதாகவும் உள்ளது. ஆட்சியாளர் தமது நோக்கத்தினை எட்டுவதற்காக நீதிநெறியிலான கட்டமைப்பினை ஒதுக்கிவைக்க வேண்டுமென மாக்கியவல்லி அறிவுரை கூறுகிறார். இருப்பினும் மரபார்ந்த நீதிமுறைமை என்பது அரசியலுக்கு முற்றிலும் தேவையற்றது எனவும் அவர் நினைக்கவில்லை. ஒன்று ஆட்சியாளருக்கும் மற்றொன்று அவரது பணியாளர்களுக்கும், குடிமக்களுக்குமாக அவர் நீதிநெறியில் இரட்டை மதிப்பளவினை எடுத்தியம்புகிறார். ஆட்சியாளரின் நீதிநெறி என்பது அரசினை வலிமைப்படுத்தும் அவரது குறைவுபடாத அர்ப்பணிப்பு மற்றும் தமது வலிமையை உயர்த்தி அரசின் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பாதுகாப்பதுடன் வெளிநாட்டு படையெடுப்பாளர்களிடம் இருந்து சிறந்த பாதுகாப்பினைஉறுதிசெய்வதில்உணர்த்துகிறது. அவர் தமது கடமையை நிறைவேற்றுவதில் வெற்றியடைவதில் இருந்து அவரது திறன் மதிப்பிடப்படுகிறது. ஆனால் அவரது பணியாளர்களும், குடிமக்களும் மரபார்ந்த நீதிமுறைமையில் இருந்து விலகிச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. ஏனெனில் அவ்வாறு செய்தால் அரசின் அடிப்படையே அர்த்தமற்றுப் போய்விடும்.

இளவரசன் தமது குடிமக்கள் மத்தியில் தாம் மிகவும் உயர்ந்த மதிப்பீட்டில் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென மாக்கியவல்லி விரும்புகிறார். உலகளாவிய தன்முனைப்பு வாதம் பற்றி இளவரசன் கவனமுடன் இருக்கவேண்டும். அரசாங்கமானது உள்நாட்டு குற்றவாளிகள் மற்றும் வெளிநாட்டு எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்கவேண்டும். ஓர் அறிவார்ந்த ஆட்சியாளர் மக்களின் உயிர் மற்றும் உடைமைக்கான பாதுகாப்பு மற்றும் மக்களின் மாண்பினைப் பாதுகாக்கும் சூழலை ஏற்படுத்தும் வகையிலான கொள்கைகளை உருவாக்குகிறார். தம் அரசிலுள்ள பெண்களுக்குத் தகுந்த பாதுகாப்பினை அளிக்க அவர் இளவரசனுக்கு அறிவுறுத்துகிறார். ஓர் அரசில் மக்கள் தங்களது உயிர், உடைமை மற்றும் பெண்கள் பாதுகாப்பாக இருந்தால் தங்களின் ஆட்சியாளருக்கு விசுவாசமாக இருப்பர்.

மதிப்பீடு

சமூகத்தில் நீதிமுறைமையின் அடித்தளத்தினை கீழ்நிலைப்படுத்த மாக்கியவல்லி கருதவில்லை. ஒரு உண்மையான தேசபக்தனாக ஓர் வலுவான தேசிய அரசாக இத்தாலியைக் கட்டியெழுப்ப அவர் ஏங்கினார். அக்காலத்தில் இத்தாலி ஐந்து பகுதிகளாகப் பிரிந்து கிடந்தது. அவை ஃபிளாரன்ஸ், வெனிஸ், நேப்பிள்ஸ், மிலன் மற்றும் ரோமன் கத்தோலிக்க திருச்சபை நிலப்பரப்பு ஆகியவை ஆகும். ஐரோப்பாவின் பிற தேசிய அரசுகளிடம் ஓர் மதிக்கத்தக்க இடத்தினை தன் நாடு பெறவேண்டும் என அவர் விரும்பினார். ஆனால் இத்தாலியர்களிடம் இருந்த நீதிநெறி சீர்கேட்டினைப் பற்றி அவர் மிகவும் கவலையடைந்தார். அவர் ஓர் குடியரசினை விரும்பினாலும் அக்கால இத்தாலியின் சூழ்நிலைகளால் முடியாட்சியை முன்மொழிந்தார்.

செயல்பாடு

1. முதலாவது தற்காலச் சிந்தனையாளராக மாக்கியவல்லி ஏன் கருதப்படுகிறார் என ஆராய்க.
2. முடியாட்சி மற்றும் குடியரசு முறை அரசாங்கங்களின் இயல்புகளை கற்கவும்.

11th Std Political Science Tamil_Unit-7.indd 127 06/12/2022 11:37:42

7.5 தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes) (பொ.ஆ.1588 – பொ.ஆ.1679)



கற்றலின் நோக்கங்கள்

- தாமஸ் ஹாப்சின் அரசியல் சிந்தனையைப் புரிந்து கொள்ளுதல்
- இயற்கை நிலை, சமூக ஒப்பந்தம், சட்டங்கள், உரிமைகள், சுதந்திரம், இறையாண்மை மற்றும் சமூக ஒப்பந்தக் கோட்பாடு ஆகியவை பற்றிய தாமஸ் ஹாப்சின் கருத்துக்களை அறிந்து கொள்ளுதல்.

வாழ்வும் காலமும்

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலேய தத்துவ ஞானியான தாமஸ் ஹாப்ஸ் அறிவியல் புரட்சி (Scientific Revolution) நிகழ்ந்த காலத்தவர். தற்காலச் சமூகக் கோட்பாட்டிற்கான முதல் முயற்சியினை இவரே மேற்கொண்டார். அவர் தனது கருத்துக்களை நீதிநெறி சார்புநிலைவாதத்தின் (Moral Relativism) அடிப்படையில் கூறுவதுடன் இயற்கை நிலை மீதான அதிகபட்ச அவநம்பிக்கையுடன் அனைவருக்கெதிராகவும் அனைவரும் மேற்கொள்ளும் யுத்தம் என்கிறார். தாமஸ் ஹாப்ஸ் ஏப்ரல் 5, 1588 -ல் மால்ம்ஸ்பெரி (Malmesbury) என்னுமிடத்தில் இங்கிலாந்தின் கடற்பகுதிக்கு அருகில் ஸ்பானிஷ் கடற்படைத்தொகுதி (Spanish Armada)

> **குறிப்பிடத்தக்க மேற்கோள்**
>
> "அச்சமும் நானும் இரட்டையர்களாகப் பிறந்தவர்கள். – **ஹாப்ஸ் (Hobbes)**

தென்பட்டதாக வந்த செய்தியைக் கேட்ட தாய்க்கு குறைப்பிரசவத்தில் பிறந்தார். ஹாப்சின் தந்தை அக்குடும்பத்தைக் கைவிட்ட பின்னர் ஹாப்ஸ் தனது வசதியான மாமாவின் வீட்டில் வளர்ந்தார். ஹாப்ஸ் தனது பள்ளிக்கல்வியை விரைவில் துவக்கியதுடன் பின்னர் ஆக்ஸ்போர்டின் மெக்தலீன் கல்லூரியில் சேர்ந்தார். தமது பத்தொன்பதாவது வயதில் பட்டம்பெற்ற பிறகு கேவன்டிஷ் குடும்பத்தினருடன் தொடர்பு ஏற்பட்டு வில்லியம் கேவண்டிஷ்க்கு ஆசிரியரானார். தத்துவக் கூறுகளின் மீது ஹாப்ஸ் சிறிதளவே விருப்பம் காட்டினாலும் ஐரோப்பா கண்டத்தில் வில்லியம் கேவண்டிசுடன் சுற்றுப்பணம் மேற்கொண்டபிறகு மரபுநடை கொண்டவற்றில் விருப்பம் காட்டினார். அவர் வரலாற்றின் நகர்வுகள், தேசங்கள் மற்றும் பேரரசுகளின் விதியினைப் பற்றி அறிவதில் விருப்பம் கொண்டார். 1692ஆம் ஆண்டு தூசிடிடசின் 'பெலோப்பனீசியப் போர் வரலாறு' (History of the peliponnesian War) என்னும் நூலினை மொழி மாற்றம் செய்து பதிப்பித்தார்.

ஹாப்சின் பல படைப்புகளில் **டி சைவ்** (De Cive) மற்றும் லெவியதான் (Leviathan) ஆகியவை மிகவும் முக்கியமானவையாகும். ஹாப்சின் லெவியதான் அவரின் மிகவும் முதிர்ந்த மற்றும் அற்புதமான படைப்பாகும். இதில் கலிலியோவின் இயற்பியல் வழியில் மனித உளவியலுக்கு செயல்விளக்கமளிக்க முயற்சித்ததுடன் தற்கால அரசியலுக்கு அடித்தளமிடுகிறார். மனிதனின் தன்மை பற்றிய கருத்தாக்கம், இயற்கை நிலை, சமூக ஒப்பந்தம் மற்றும் அவரது இறையாண்மை பற்றிய கருத்துகள் ஆகியவை அவருடைய அரசியல் தத்துவத்தினை படிக்கும் அனைவரின் விருப்பத்தினையும் கவர்ந்துள்ளது. கீழ்க்காணும் பகுதிகளில் ஹாப்சின் முக்கியப் படைப்புக்களை ஆராய்ந்து புரிந்துகொள்ள முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

மனிதகுலம் முழுமைக்கும் உள்ள பொதுவான மனச்சார்பாக நான் முன்வைப்பது யாதெனில் அவர்கள் அதிகாரத்தின் மேல் கொண்டுள்ள இடைவிடாத மற்றும் ஓய்வற்ற விருப்பம் ஆகும். அவ்விருப்பம் அவர்கள் மரணத்தின் போதுதான் முடிவுக்கு வருகிறது. – **ஹாப்ஸ்**

மனிதனின் தன்மை (Humman Nature)

பல சமயங்களில் ஹாப்சின் லெவியதான் மனிதனைப் பற்றி தெளிவும், எளிமையும் கொண்ட கோட்பாட்டுடன் தொடங்குவதாகவும் அரசியலைப் புரிந்துகொள்வதன் முன்தேவையாகவும் இருக்கிறது. அரசியல் அறிஞர்கள் அடிக்கடி 'ஹாப்சியன்' (Hobbesian) என்ற பதத்தினை பயன்படுத்துகின்றனர். இது மனிதனின் மீதான அவநம்பிக்கைக் கருத்தினைக் குறிப்பதாகும். அதாவது மனிதன் அடிப்படையில் சமூக விரோதி, சுயநலமிக்கவன், கொடுமைமிக்கவன் மற்றும் அதிகார ஆசையுடையவன் என்பதாகும். மனிதன் சமூகம் மற்றும் அரசிற்கு முன்னரே இருந்தவன் என்ற ஹாப்சின் அனுமானங்களை ஏற்றுக்கொண்டால் பின்னர் மனிதன் தன் தேவை மற்றும் விருப்பங்களை மட்டுமே திருப்திப்படுத்துவதை மேற்கொள்வான் என்பதையும் ஏற்றுக்கொள்வதாகும். ஹாப்சின் வார்த்தைப்படி மனித இனம் தனது உணர்ச்சி வழி நடப்பதாகும். தங்களின் அறிவுத்திறனை அவர்கள் அதிக மகிழ்ச்சி மற்றும் குறைவான வலி ஆகியவற்றினைப் பெறுபவை எவை என தீர்மானித்துப் பயன்படுத்துகிறார்கள். ஹாப்ஸ் மேலும் கூறுகையில் மனிதனின் நோக்கமானது ஒரே ஒரு தடவை தனது விருப்பத்தை நிறைவேற்றுவது மற்றும் ஒரு நிகழ்வில் மட்டுமல்லாமல் தனது எதிர்கால விருப்பங்களை உறுதியுடன் நிறைவேற்றுவது ஆகும். ஹாப்ஸ் மிகவும் கவனமாகக் கூறுவது யாதெனில் பல்வேறு மக்கள் பலதரப்பட்ட மகிழ்வின் வடிவங்களை விரும்பினாலும் மக்களிடம் பொதுவாக உள்ள ஒரு விருப்பம் அதிகாரமாகும். மகிழ்ச்சியைத் தேடுபவர்கள் அனைவருமே தர்க்கத்தின் அடிப்படையில் அதிகாரத்தைத் தேடுபவர்களாவர். இங்ஙனம் ஹாப்ஸ் மனிதனின் தன்மை முழுமையான தன்னலப் பற்றுள்ளதாகவும், தன்னைப் பற்றியதாகவும் மட்டுமானது எனக் கருதுகிறார்.

இயற்கை நிலை (State of Nature)

ஹாப்ஸ் தனது இயற்கை நிலைக் கோட்பாட்டில் மனித நடத்தையைப் புரிந்துகொள்வதற்கான அனுமான முறையினைத் தந்துள்ளார். இயற்கை நிலை என்பது முழுமையான சுதந்திரம் மற்றும் சமத்துவம் உள்ள சூழல் என வாதிடுகிறார். தனி மனிதர்களைக் கட்டுப்படுத்த எவ்விதச் சட்டமும் இல்லாத முழுமையான சுதந்திரத்தில் அனைத்தையும் செய்யும் உரிமை உண்டு. அதில் மனிதர்கள் ஏறத்தாழ சமமான உடல் மற்றும் அறிவுத்திறனைப் பெற்றிருப்பது முழுமையான சமநிலையாகும். மேலும் அத்தகைய சூழலில் அனைத்தையும் செய்யும் உரிமை அனைவர்க்கும் உள்ளதாலும், அனைவருமே தங்கள் உரிமைகளைச் செயல்படுத்துவதில் சமமான திறனுள்ளவர்களாக இருப்பதாலும் அனைவரும் அனைவராலும் தாக்கப்படுகின்றனர். ஆகவே, இயற்கை நிலை என்பது ஓர் போர்ச் சூழ்நிலையாக உள்ளது. உயிர் வாழ்தல் என்பது மனிதர்கள் அதிகாரத்தைப் பெறுவதன் அடிப்படை நோக்கமாக உள்ளது. ஆகவே, இயற்கை நிலையில் அனைவருமே மற்றவரின் மீதான நிலையான பயத்திலேயே வாழ்கின்றனர். இதனால் மனிதர்கள் இயற்கையில் சமூக விரோதமாக அதிகாரத்தைப் பெறுபவர்களாக உள்ளனர்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

பிறர் உனக்கு பாதகமானவற்றை செய்வதற்கு முன் நீ அவர்களுக்குப் பாதகமானவற்றைச் செய்துவிடு.

– **ஹாப்ஸ் (Hobbes)**

சமூக ஒப்பந்தம் (Social Contract)

மனிதனின் தன்மை பற்றிய ஹாப்சின் கருத்துக்கள் அவரது அரசியல் கோட்பாட்டில் ஆழ்ந்தத் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. மனிதனின் உண்மையான தன்மையை

11th Std Political Science Tamil_Unit-7.indd 129 06/12/2022 11:37:43

அறிந்ததால் ஹாப்ஸ் அரசியலின் அறிவியல் கோட்பாடாக சமூக ஒப்பந்தத்தினை முன் வைத்தார். சமூக ஒப்பந்தத்தின் அடிப்படைக் கருத்து மிகவும் எளிமையானதாகும். மனிதர்களுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் விளைவே அரசாகும். அதில் அரசாங்கத்தின் அதிகார எல்லையானது ஒப்பந்தத்தின் வரையறைகளால் பகுப்பாய்வு செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படுகிறது. அரசானது பரஸ்பர ஒப்பந்தம் அல்லது உறுப்பினர்களின் ஒப்புதல் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது. இதன் விளைவாக மக்கள் ஒப்புதல் அளித்ததற்குத் தகுந்தவாறு இருக்கும்போது அரசாங்கம் சட்டப்பூர்வமானதாகிறது.

இது தற்கால மதச்சார்பற்ற அரசினைப்பற்றிய புதிய கருத்தாக உள்ளதுடன் மதச்சார்பற்ற அரசாங்கம் இறைவழி ஒப்புதலுடன் நீடிக்கிறது என்ற இடைக்கால சிந்தனைக்கு முரணானதாகும். அத்தகைய கருத்தினை அரச வம்சத்தினர் இன்றும் பயன்படுத்துவதுடன் இறைவழி உரிமையின்படியே மன்னர் ஆளுகிறார் எனவும் வாதிடுகின்றனர். ஆனால் ஒப்புதல் – ஒப்பந்தம் இதனை ஒரேயடியாக நிராகரிப்பதுடன் அதற்கு முரணாக மக்கள் ஒப்புதல் அளித்ததற்கு தகுந்தவாறே அரசாங்கம் சட்டப்பூர்வமானதாக உள்ளதாகக் கோருகிறது. ஹாப்சின் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் முக்கியத்துவம் யாதெனில் அரசைப் பற்றிய ஓர் தர்க்க மற்றும் அறிவியல் பகுப்பாய்வாக அவர் நம்பினார். மனிதர்கள் தங்களுடைய பகுத்தறிவின் அடிப்படையில் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்குத் தக்கவாறே ஒப்புதல் அளிப்பர் எனவும் அவர் வாதிடுகிறார்.

இறையாண்மை (Sovereignty)

தனிமனிதனுக்கும், அரசனுக்கும் இடையேயோன உறவு என்பது முழுமையான அதிகாரமற்ற நிலை மற்றும் முழுமையான அதிகார ஒன்றிப்பு ஆகியவற்றிற்கு இடையேயானதாகும். பொதுநலக் கூட்டமைப்பில் (Commonwealth) தனிமனிதனின் அனைத்து அதிகார அடிப்படைகளையும் நீக்குவதுடன் அதனை அரசனிடம் ஒருமுகப்படுத்துவது அவசியமாகும் என ஹாப்ஸ் வாதிடுகிறார். வேறு வழியில் கூறவேண்டுமென்றால் மனிதனின் பகுத்தறிவின்மைக்குத் தக்கவாறு சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலைநாட்டுவதில் சற்றும் அதிகாரக் குறைவுபடாத ஓர் முழுமையான இறைமையாளரை உருவாக்குவதற்கு ஹாப்ஸ் ஆதரவளித்தார். ஓர் முழுமையான அதிகாரத்தை உருவாக்கும் முழுமையான தேவை அவரது அரசியல் சிந்தனைக்குத் திறவுகோலாக அமைகிறது. இறைமையாளர் ஒருவராகவோ ஓர் அவையாகவோ இருப்பினும் ஹாப்ஸ் தனி மனிதனின் இறையாண்மை மிக்க அதிகாரத்தை விரும்பித் தேர்வுசெய்கிறார்.

- அச்சம் மற்றும் சுதந்திரம் ஆகியவை நிலையானது ஆகும்.
- சுதந்திரம் மற்றும் தேவைகள் ஆகியவை நிலையானது ஆகும்.
- சமர்ப்பித்தல் என்பது நமது கடப்பாடு மற்றும் சுதந்திரம் ஆகும் இரண்டையும் உள்ளடக்கியதாகும்.
- சட்டத்தின் அமைப்பைச் சார்ந்தே பிற சுதந்திரங்கள் உள்ளன.

மதிப்பீடு

ஹாப்சின் முக்கியத்துவம் அவரது அரசியல் தத்துவத்தில் மட்டுமல்ல அரிஸ்டாட்டிலின் சிந்தனைக்கு எதிரான அவருடைய பங்களிப்பு மற்றும் அரசியலைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தாக்கம் ஆகியவற்றிலும் உள்ளது. அவருடைய படைப்புக்களின் வாயிலாக இலக்கற்ற நோக்கில் அரசியலைப் புரிந்து கொள்வதில் என்பது தொடங்கியது எனலாம். அவரது அரசியல் தத்துவமே ஜான்லாக், ஜீன் ஜாக்குவஸ் ரூசோ, இம்மானுவேல் காண்ட் போன்ற பிற அரசியல் சிந்தனையாளர்களுக்கு அடிப்படையாக இருந்தது. அவர்கள் தற்கால அறிவியல் அணுகுமுறையின் வழியே அரசியலை ஆராயும் ஹாப்சின் மரபினைப் பின்பற்றினர்.

7.6 ஜான் லாக்
(John Locke)
(பொ.ஆ.1632– பொ.ஆ.1704)



கற்றலின் நோக்கங்கள்

- ஜான் லாக்கின் அரசியல் சிந்தனையைப் புரிந்து கொள்ளுதல்.
- அரசியல் கோட்பாடு, மனிதனின் தன்மை, இயற்கை நிலை, சமூக ஒப்பந்தம், சட்டங்கள், உரிமைகள், சுதந்திரம், இறையாண்மை மற்றும் சமூக ஒப்பந்தக் கோட்பாடு, இயற்கைச் சட்டம் மற்றும் சமூக ஒப்பந்தம், புரட்சி ஆகியவை பற்றிய ஜான் லாக்கின் கருத்துக்களை அறிந்து கொள்ளுதல்.

வாழ்வும் காலமும்

இங்கிலாந்தின் சோமர்செட்ஷயரில் உள்ள ரிங்டன் என்னுமிடத்தில் ஆகஸ்ட் 29, 1632-ல் தத்துவார்த்தமான சுதந்திரத்துவத்தின் தந்தையான ஜான் லாக் பிறந்தார். பிரிஸ்டல் அருகிலுள்ள பென்ஸ்போர்டு என்னுமிடத்தில் தனது குழந்தைப்பருவத்தை அவர் கழித்தார். ஆரஞ்சின் இளவரசர் வில்லியமுடன் (William of Orange) லாக்கிற்கு நட்பு ஏற்பட்டது. 1688-ல் நடைபெற்ற மகத்தான புரட்சியின் (Glorious Revolution) விளைவாக வில்லியம் இங்கிலாந்தின் அரியணை ஏறினார். 1689-ல் மூன்றாம் வில்லியம் லாக்கை முறையீட்டு ஆணையாளராக்கினார். ஆனால் சாதகமற்ற அரசியல் சூழ்நிலை அவரை பதவி விலக வைத்ததுடன் எஸ்ஸெக்சில் குடியமர வைத்தது. அவர் தனது பொது வாழ்வினை தேயிலை வாரிய ஆணையாளர் பணியுடன் முடித்துக் கொண்டார்.

லாக்கின் படைப்புகள்

சகிப்புத்தன்மை தொடர்பான கடிதங்கள் (1689), மனிதப் புரிதலைப் பற்றிய கட்டுரை (1690), குடிமை அரசாங்கம் பற்றிய இரு ஆய்வு நூல்கள் (1690), சகிப்புத்தன்மை பற்றிய இரண்டாவது கடிதம் (1692), சகிப்புத்தன்மை பற்றிய மூன்றாவது கடிதம் (1692), சகிப்புத்தன்மை பற்றிய நான்காவது கடிதம் (1693) கல்வி தொடர்பான சில சிந்தனைகள் (1693).

மைய கருத்துக்கள்

லாக்கின் மையக் கருத்துக்களை கீழ்க்கண்டவாறு விவாதிக்கலாம்.

மனிதனின் தன்மை பற்றிய கருத்தாக்கம் (Conception of Human Nature)

ஹாப்சைப் போல மனிதனின் தன்மை மீதான அவநம்பிக்கையை லாக் பரிந்துரைக்கவில்லை. காரணங்களை ஆராய்வதே மனிதர்களின் பகுத்தறிவு உருவாகக் காரணமாகும் என அடையாளப்படுத்துகிறார். தனிமனித மற்றும் சமூக வாழ்வின் அடிப்படையாக பகுத்தறிவினை ஒப்புக் கொள்கிறார். மனிதர்கள் சமூகமயமானவர்கள், பகுத்தறிவு, நாகரீகம், நிலையான மனநிலை மற்றும் தன்னாட்சித் திறனுள்ளவர்கள் ஆவர். தனிமனிதனின் இயற்கைச் சமநிலையை லாக்கின் கருத்து ஆதரிக்கிறது. அவரைப் பொறுத்தவரை, மனிதர்கள் இயற்கையில் சுதந்திரமானவர்கள். எத்தகைய மேலான அதிகாரத்திடமிருந்தும் சுதந்திரமாக இருக்கக்கூடிய உள்ளார்ந்த முன்னுரிமைக்குத் தகுதியான மற்றும் இயற்கையின் வழிகாட்டுதல் படி நடப்பவர்களாக உள்ளனர். அறிவு, வலிமை மற்றும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தனிமனிதர்கள் சிறிய அளவிலான மாறுபாடுகளைக் கொண்டிருப்பதாக ஒப்புக்கொள்கிறார். எனினும் அவரது தனிமனிதர்களின் ஒற்றுமைகள் மீதான சார்பு, வேறுபாடுகளை விட அதிகமாகவே உள்ளது. மனிதர்களின் பயன்பாட்டுவாதப் பண்பினை லாக் குறிப்பாக பிரதிபலிக்கிறார். பெந்தாமின் அடியொற்றி லாக் கூறுவது யாதெனில் மனிதர்கள் மகிழ்வு மற்றும் வலி ஆகியவற்றிற்கிடையே ஓர் சமநிலையை ஏற்படுத்த முயல்வதாக கூறுகிறார். அவரது உடன்படிக்கையின் அடிப்படையாக மகிழ்வு அல்லது பயன்பாடு பற்றிய கருத்தே உள்ளது.

11th Std Political Science Tamil_Unit-7.indd 131 06/12/2022 11:37:43

இயற்கை நிலை (State of Nature)

லாக்கின் இரண்டாவது ஆய்வு நூலில் 'இயற்கை நிலை' பற்றிய சிந்தனையைக் காணலாம். ஹாப்சின் இயற்கை நிலைக்கு முரணாக மனிதனுடைய சமூக உள்ளுணர்வின் காரணமாக நல்லொழுக்கத்தினால் அமைதியான சூழ்நிலை ஏற்படுவதாக அனுமானிக்கிறார். இயற்கைச் சட்ட நியதிகளின்படி அவரது இயற்கை நிலை முழுமையான சுதந்திரத்தின் அடிப்படையிலானதாகும். பரஸ்பர வலிமை மற்றும் அதிகார எல்லையால் வரையறுக்கப்பட்ட சமத்துவமே இக்காலக்கட்டத்தின் பண்பியல்பாகும். அவருடைய வார்த்தைகளின்படி இயற்கை நிலை என்பது ஓர் அமைதியான நிலை, நல்விருப்பம், பரஸ்பர உதவி மற்றும் பாதுகாப்பாகும். சுருங்கக் கூறின், மனிதர்களின் மீதான தனது நம்பிக்கையினை அடிக்கோடிடுகிறார்.

உரிமைகள் மற்றும் கடமைகளின் ஆதாரமாக 'இயற்கைச் சட்டம்' கருதப்படுகிறது. மனிதர்கள் தங்களின் உரிமைகளை இயற்கைச் சட்டத்திலிருந்து பெறுகிறார்கள். மேலும் விதிக்கப்பட்டுள்ள உரிமைகளை பரஸ்பர அடிப்படையில் பாதுகாப்பதற்காக மதிக்க வேண்டுமெனஇயற்கைச்சட்டம்எதிர்பார்க்கிறது. இயற்கைச் சட்டத்தைக் கடவுளால் இயற்றப்பட்ட நீதிநெறிச் சட்டமாக குறிப்பதுடன் பகுத்தறிவின் மூலம் அதனை உணரலாம் என்கிறார். அவரது இயற்கை நிலையினை 'அமைப்பெதிர்வாதிகளின் சொர்க்கம்' என்றால் அது தவறாகாது.

இறுதியாக, இயற்கை நிலையின் சமநிலைக்கு அச்சுறுத்தலாக உள்ள மூன்று அடிப்படைக் குறைபாடுகளை லாக் அடையாளம் காட்டுகிறார். முதலாவதாக, சட்டப்படியான கட்டமைப்பு இல்லாததாகும். இரண்டாவதாக, அறிவார்ந்த மற்றும் நடுநிலையான நீதிபதி இல்லாமையாகும். மூன்றாவதாக, முடிவுகளைச் செயலாக்கப்படுத்த ஓர் ஆட்சித்துறை அமைப்பின் தேவையாகும். ஆகவே இப்பணியிலிருந்து விடுபடும் வழிமுறையே அரசு எனும் நிகழ்வாகும். லாக்கின் இயற்கை நிலை என்பது உண்மைகளுக்கு முரணானதாக உள்ளதை மனதில் கொள்ள வேண்டும். இது எத்தகைய வரலாற்று நியாயவாதத்தின் ஆதரவும் இல்லாத புனைவு முதற்கோளாகும்.

சமூக ஒப்பந்தம் (Social Contract)

குடிமைச் சமூகத்தில் நுழைவதற்கான கருவியாகவே சமூக ஒப்பந்தம் கட்டமைக்கப்பட்டுள்ளது. லாக்கின் கருத்துப்படி இரு சமூக ஒப்பந்தங்கள் முன்மொழியப்படுகின்றன. முதலாவது குடிமைச் சமூகத்தை நிறுவவும், இரண்டாவது அரசமைப்பிலான அரசாங்கத்திற்கானதும் ஆகும். ஒப்பந்தத்தின் அஸ்திவாரமாக ஒப்புதலை லாக் அங்கீகரிக்கிறார். அவரைப் பொறுத்தவரை பொது நலக்கூட்டமைப்பில் யாருடைய சுய ஒப்புதலின்றியும் சேர்க்க முடியாது. லாக் இரண்டு வகையான ஒப்புதலைப் பற்றி பேசுகிறார்.

1) இயற்கையால் மாற்ற இயலாத முறையான அல்லது உயிர்ப்புள்ள ஒப்புதல்
2) உட்கிடையான அல்லது மறைமுகமான ஒப்புதல்.

இது பங்கேற்பாளர்களை நம்பிக்கை என்ற நிலையிருந்து புதிய முறைமையைத் துவக்க அனுமதிக்கிறது. ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில் லாக் முன்கூறியதற்கே முன்னுரிமை அளிப்பதுடன் மீண்டும் இயற்கை நிலைக்குத் திரும்ப இயலாது என தெளிவுப்படுத்துகிறார். லாக்கினுடைய ஒப்பந்தத்தின் முக்கிய இயற்பண்பு யாதெனில் தனிமனிதர்கள் இயற்கை நிலையில் பெற்றிருந்த உரிமைகளை ஒப்படைக்க மாட்டார்கள் என்பதாகும். உரிமைகளை ஒப்படைத்தல் என்பது ஒப்பந்தத்தின் நோக்கத்தையே தோல்வியடையச் செய்துவிடும். ஏனெனில் அரசு என்பது உரிமைகளின் உத்திரவாதி மற்றும் பாதுகாவலனாகவே கட்டி எழுப்பப்படுகிறது. ஆகவே ஒப்பந்தமானது சுதந்திரச் சாசனம் எனப் பொருள்படுமேயன்றி அடிமைப்படுத்துதலுக்கான உரிமமாக இருக்காது. லாக்கின் சமூக ஒப்பந்தமானது ஒருவேளை கொடுங்கோலாட்சி முறையில் ஆளுகை இருப்பின் புரட்சி செய்யும் விருப்பத்தேர்விற்கு அதிகாரமளிக்கிறது. தனிமனிதர்களுடைய இயற்கை உரிமைகளின் பாதுகாவலனாக அரசின் பங்கினை உறுதிப்படுத்துவதற்காக இந்நடவடிக்கை இணைக்கப்பட்டது. மேலும் புரட்சி பற்றிய முடிவினை சட்டமன்றத்திடம் விடுவதுடன் ஒப்புதல் மற்றும் பெரும்பான்மைத்துவக் கொள்கையில் லாக் கவனம் செலுத்துகிறார்.

அதிகாரத்தின் தன்மை பற்றிய கேள்விக்கு, லாக் வரையறுக்கப்பட்ட இறையாண்மை (Limited Sovereignty) என்னும் கருத்தினைக் கோடிட்டுக் காட்டுகிறார். முழுமையான இறையாண்மை என்பது அவரது குடிமைச் சமூகக் கட்டமைப்பிற்கு எதிரானதாகும். அதிகாரப் பிரிவினைக்கான மாற்று செயல்திட்டத்தினை வழங்கவும் லாக் தயங்கவில்லை. அவரைப் பொறுத்தவரையிலும் அரசாங்கத்தின் அதிகாரங்கள் மூன்று அங்கங்களிடம் பிரிக்கப்பட்டுள்ளன. முதலாவதாக சட்டமன்றம் ஆகும். இதனைப் பொதுநல கூட்டமைப்பின் மேலான அதிகாரம் எனக் குறிப்பிடுகிறார். இரண்டாவதாக நீதித்துறையின் அதிகாரங்களை உள்ளடக்கிய ஆட்சித்துறையாகும். மூன்றாவதாக அரசின் வெளியுறவு அதிகாரத்தைக் குறிக்கும் கூட்டாட்சியாகும். ஒருவரின் கையில் அனைத்து அதிகாரங்களையும் கொண்ட ஆட்சியாளர் பற்றிய கருத்தை லாக் ஏற்றதுடன் அது பெரும்பான்மையினருடைய ஒப்புதலின் வெளிப்பாடாகும் என்கிறார்.

> சொத்தினைப் பாதுகாப்பதைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு நோக்கம் கிடையாது.
>
> **–ஜான் லாக்** (*John Locke*)

மதிப்பீடு

ஜான் லாக் தமது அறிவியல் மனப்பாங்கு மற்றும் பகுத்தறிவிலான நன்னடத்தையின் மூலமாக மேற்கத்திய அரசியல் சிந்தனையில் குறிப்பிடத்தகுந்த இடத்தினைப் பெற்றுள்ளார். தனிமனிதவாதியாக தமது மனத்திண்மையின் அடிப்படையில் அவர் நம்புவது என்னவெனில் தமது தலையெழுத்தினை மனிதர்கள் தாமே தீர்மானிக்கின்றனர் என்பதாகும். வால்டேர், (Voltaire) டிடராட் (Diderot), ரூசோ (Rousseau) போன்ற சிந்தனையாளர்களுக்கு மட்டுமல்லாமல், பிரெஞ்சுப் புரட்சிக்கும் கூட தூண்டுதல் மற்றும் உத்வேகம் அளித்த பெரும் மூல ஆதாரமாக அவரது படைப்புக்கள் உள்ளன. பாரிங்டனின் (Parrington) கூற்றுப்படி லாக்கின் அரசாங்கம் பற்றிய இருஆய்வுநூல்கள் அமெரிக்கப்புரட்சியின் பாடப்புத்தகமாகவே மாறின. சுதந்திரத்தைப் பெறுவதே அரசின் மிக முக்கியப் பிரச்சினையாக லாக் பார்த்தார். இதனைத் தனிமனித நலனுக்காக வரையறுக்கவே அவர் கடும்முயற்சி செய்தார்.

7.7 ஜீன் ஜாக்குவஸ் ரூசோ (Jean Jacques Rousseau) (பொ.ஆ.1712–பொ.ஆ.1778)



கற்றலின் நோக்கங்கள்

- ஜீன் ஜாக்குவஸ் ரூசோவின் அரசியல் சிந்தனையைப் புரிந்து கொள்ளுதல்
- மனிதனின் தன்மை, பொதுவிருப்பக் கோட்பாடு, இறையாண்மை மற்றும் சமூக ஒப்பந்தக் கோட்பாடு பற்றிய ஜீன் ஜாக்குவஸ் ரூசோவின் கருத்துக்களை அறிந்து கொள்ளுதல்.

வாழ்வும் காலமும்

தற்கால அரசியல் உரைக்கோவையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் தத்துவஞானிகளுள் ஒருவரான ஜீன் ஜாக்குவஸ் ரூசோ ஜூலை 28, 1772 -ல் ஜெனீவாவில் பிறந்தார். சிதறுண்ட குடும்பத்திலிருந்து வந்த ரூசோ பராமரிப்புடனான குழந்தைப் பருவ வாய்ப்பினை இழந்தார். ஒருசில பணிப்பயிற்சிகளுக்குப் பின்னர் தம்மை விடுவித்துக் கொண்டு ஜெனீவாவை விட்டுச் சென்று சுற்றித் திரியும் ஆவலில் வாழ்ந்தார்.

இளம் விதவையான டி வாரன்ஸ் அம்மையார் (Madame de Warens) உதவியுடன் தூரினிலுள்ள (Turin) மடாலயத்திலும் பின்னர் அன்னெசியிலுள்ள (Annecy) ஓர் இறையியல் கல்லூரியிலும் ரூசோவுக்கு முறைசார்ந்த

11th Std Political Science Tamil_Unit-7.indd 133 06/12/2022 11:37:43

கல்வி அறிமுகபடுத்தப்பட்டது. அந்நிறுவனங்களின் கற்பித்தல் முறையின் விளைவாக ஏற்பட்ட வெறுப்பு அவரை முறைசார்ந்த கல்வியைக் கைவிடத் தூண்டியது. தொடர் தோல்விகளால் 1730-ல் அவரை லியான்ஸ் நகருக்கு அனுப்ப அம்மையார் கட்டாய சூழலுக்குள்ளானார். ஓராண்டு அங்கு அலைந்து திரிந்த பின்னர் மீண்டும் 1731 -ல் அம்மையாரிடம் ரூசோ அடைக்கலமானார்.1740 வரை அம்மையாரின் கொடையிலேயே அவர் வாழ்ந்தார். அம்மையாருடைய அறிவு ஒளியின் தாக்கத்தினாலும், அவரது மதிப்புமிக்க உதவியினாலும் மாண்சியர் டி மால்பை (Monsier de Malby) குடும்பத்தில் ஆசிரியராக ரூசோ பணியில் சேர்ந்தார். இருப்பினும் அவர் தனது பணியை விட்டு விலகி இலக்கற்ற ஆத்மாவாக தனது பயணத்தினை தொடர்ந்தார்.

1744-ல் பிரான்சுக்கு அவர் மேற்கொண்ட இரண்டாவது பயணம் அவரது வாழ்வில் குறிப்பிடத்தகுந்த மாற்றங்களை ஏற்படுத்தியது. இசை, நாடகம், கவிதை மற்றும் பிறவற்றில் வெற்றிகரமில்லாத பல பரிசோதனைகளுக்குப் பின்னரும் ரூசோ தனது உறுதி மற்றும் நேர்மறை மனநிலையினை தக்க வைத்துக்கொண்டார். 1749-ல் வருடம் அவரது வாழ்வில் ஓர் திருப்பு முனையாக அமைந்தது. டிஜோன் அகாடெமியானது 'அறிவியல் மற்றும் கலைகளின் முன்னேற்றம் நீதிநெறிகளை வீழ்ச்சியடைய வைத்துள்ளதா அல்லது தூய்மைப்படுத்த பங்களித்துள்ளதா?' என்னும் தலைப்பில் சிறந்த கட்டுரைக்கான பரிசினை அறிவித்தது. ரூசோ தனது ஒப்புதலில் பின்னர் எழுதும்போது நான் உடனடியாக மற்றொரு பிரபஞ்சத்தைப் பார்த்தேன், நான் வேறொரு மனிதனானேன் என்றார். 1750-ல் இவர் சமர்ப்பித்த படைப்பிற்கு முதல் பரிசு கிடைத்தது. அது பின்னர் 'கலைகள் மற்றும் அறிவியல்களினுடைய நீதிநெறி விளைவுகளின் சொற்கோவை' என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டது.

1754 -ல் ஜெனீவாவிற்குத் திரும்பிய பின்னர் கத்தோலிக்கரான ரூசோ கால்வினிச சமயப்பிரிவினை ஏற்றுக் கொண்டு குடியுரிமையை மீண்டும் பெற்றார். பாரீசுக்குப் பயணப்பட்ட பின்னர் அவர் எட்டு ஆண்டுகள் தமது வாழ்வினை மாண்ட்மோரென்சியில் (Montmorency) டி எ஁பினே அம்மையாரின் (Madame d' Epinay) மாணவராகக் கழித்தார். புதிய ஹெலாய்சே - New Helosie (1761), எமிலி - Emile (1762), சமூக ஒப்பந்தம் – Social Contract (1762) ஆகிய மிக முக்கியப் படைப்புக்களை இக்காலகட்டத்தில் தான் ரூசோ உருவாக்கினார். அவரது புத்தங்களுக்குப் பதிலாகக் கண்டனங்களையே பெற்றதால் பல்வேறு இடங்களுக்கு அவர் குடிபெயர வேண்டியதாயிற்று. ஜுலை 2, 1778-ல் ரூசோவின் மறைவு அதிர்ச்சியுடனும், தத்துவத்திற்குப் பெரும் இழப்பாகவும் பார்க்கப்பட்டது.

மையக் கருத்துக்கள்

அரசியல் தத்துவ உலகினில் ரூசோ முக்கிய நிலையினை வகிக்கிறார். அவரது சமூக ஒப்பந்தக் கோட்பாட்டிற்காக அவர் முக்கியமாக அறியப்படுகிறார். தீவிர சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளரான ரூசோ 'பொதுவிருப்பம்' (General Will) மூலமாக அரசின் தோற்றத்தினை வெளிப்படுத்த முனைகிறார். 'இயற்கை நிலை' மற்றும் 'சமூக ஒப்பந்தம்'ஆகிய இரு வளர்ச்சி நிலைகளின் விளைவே அரசின் தோற்றத்திற்கான இயற்பண்பாகிறது என்று கூறுகிறார்.

இயற்கை நிலை (State of Nature)

ஹாப்சைப் போலன்றி ரூசோவின் கருத்துரைப்படி நிறைவான சுதந்திரம், சமத்துவம் மற்றும் நிறைவான பேதைமை ஆகியவற்றின் சுருக்கமே இயற்கை நிலை ஆகும். அதனை அவர் மிகவும் அமைதியான மற்றும் மகிழ்வூட்டும் ரம்மியமான சூழலாக அடையாளம் காட்டுகிறார். இயற்கை நிலையில் மனிதன் தனிமையில் ஆசைகளற்ற சுதந்திரமான வாழ்வு வாழ்ந்தான். முன்பின் முரணான சீரமை வாழ்வு மற்றும் தெளிவற்ற பேச்சு இருப்பினும் வாழ்வு என்பது மனநிறைவு, சுதந்திரம், தன்னிறைவு மற்றும் வளம் ஆகியவற்றால் வடிவம் பெறுகிறது.

பொல்லாங்கின்மையே ரம்மியமான மகிழ்ச்சிக்கு வழிவகுக்கிறது. அவருடைய வார்த்தையின்படி 'மேலான பேரின்பம்' காலத்தின் விதிமுறையாகும்.

காலப்போக்கில் மனித வாழ்வினுடைய நாகரீகத்தின் மாற்றங்களால் அந்நிலைக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது. இயற்கை நிலை நீடிப்பதற்குச் சவால்களாக மாறுபடும் தட்பவெப்பம், பருவகாலம் மற்றும் மண் சார் தொழில் அமைவு, தனிநபர் சொத்து ஆகிய பலதரப்பட்டக் காரணிகளை அவர் ஒப்புக்கொள்கிறார். ரூசோவின் கருத்துப்படி மனிதனின் முன்னேற்றம் மற்றும் உயர்வான பகுத்தறிவுடன் கூடிய புரட்சி என்பது, மனித சிந்தனை மற்றும் வாழ்வில் இருப்பின், அதன் தொடர்ச்சியாக புதிய அடுக்கிலான தீமைகளைக் கொண்டு வரும். இத்தொடர் மாற்றங்களே, இயற்கை நிலையின் கட்டமைப்பினை அசைத்துப் பார்த்து, சமத்துவமின்மையின் தோற்றத்திற்கு வகை செய்வதாக அடையாளப்படுத்துகிறார். தனிநபர் சொத்து என்னும் கருத்தாக்கமே சமூக கோளத்தில் ஏழை மற்றும் பணக்காரன் என்ற புதிய பிளவினை உருவாக்கியுள்ளது. அவரின் சொற்படி 'முதல் மனிதன் ஒரு துண்டு நிலத்தை வேலி போட்டுத் தனக்குத் தானே இது என்னுடையது என்று கூறிக்கொண்டதை மக்கள் நம்புவதைக் கண்டான். அவனே குடிமைச் சமூகத்தின் உண்மையான நிறுவனராவான்' என்று கூறுகிறார்.

அக்காலமானது தொடர் போர்கள், கொலைகள் மற்றும் ஏழை, பணக்காரன், பிளவு ஆகியவற்றின் சாட்சியாக இருந்தது. இப்புதிய முறைமை காட்டுமிராண்டி அரசில் காணப்படாத பிரபஞ்ச அளவிலான தீமைகளை அனுமதித்தது. இத்தகைய திருப்பம் நிறைந்த சம்பவங்களின் தவிர்க்க முடியாத உச்சகட்டமாக சமத்துவமின்மை உதயமானதுடன் எஜமானர் மற்றும் அடிமைகள் என்ற அடுக்கினை உருவாக்கியது. இரண்டு மெய்க்கோள்களின் அடிப்படையில் காட்டுமிராண்டித்தனமான செயல்பாடு இருப்பதாக ரூசோ கருத்து தெரிவிக்கிறார். முதலாவதாக ஒவ்வொருவரும் தனது சுய நல்வாழ்விற்காகவும், சுய பாதுகாப்புத் தேவைக்காகவும் உந்தப்படுகின்றனர். இரண்டாவது மரணத்தைப் பற்றிய பயமாகும். அவர் பகுத்தறிவு மற்றும் காரண காரிய அறிவின் தோற்றத்தினை ஆழ்ந்த உணர்வு நிலையில் காண்கிறார். மனிதர்கள் இயற்கையில் சிந்திக்கும் திறனற்றவர்கள் என்பது ரூசோவின் கருத்தாகும். குடிமைச் சமூகம் இயற்கைக்கு முரணானதாகவும், மனிதனின் பகுத்தறிவினுடைய வெளிப்பாடாகவும் உள்ளது. இயற்கைக்குத் திரும்புதல் என்னும் முழக்கத்தினை இவர் வலியுறுத்தினார். அவருடைய கோரிக்கையான இயற்கைக்குப் பின்னோக்கிச் செல்லுதல் என்பது புதிதாகப் பின்னப்பட்ட சமூகக் கட்டமைப்பினைத் தகர்ந்து போகச் செய்வதைக் குறிப்பதற்கு ஒப்பானதல்ல, ஆனால் இயற்கை விதிக்கானதாகும். தத்துவம் மற்றும் பகுத்தறிவே மனித வாழ்வினை கவர்வதுடன் இயல்பாற்றலை வெளிப்படுத்துவதாக ரூசோ கூறுகிறார்.

சமூக ஒப்பந்தம் (Social Contract)

இயற்கை நிலையின் ரம்மியமான பண்பு குறுகிய காலமே நீடித்தது. பொருளாதார உயர்வு மற்றும் சமூகத்தின் பரிணாம வளர்ச்சி ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட மனிதனின் சிக்கலான வார்ப்புருக்கள் வெளிப்பட்டது பேரழிவிற்கு வகை செய்கின்றன. குடிமை அரசினை அமைப்பதைத் தவிர மனிதர்களுக்கு வேறு வழியில்லை. அது சமூக ஒப்பந்த அம்சம் மூலமாக நிறைவேறியது. சமூக ஒப்பந்தத்தின் ஆறாவது அத்தியாயத்தில் ரூசோ கூறுவது யாதெனில் 'மனிதர்கள் தொடக்க நிலையில் ஜீவித்திருந்த வரன்முறைகளைத் தாண்டிய ஓர் நிலையில், தான் நீடித்திருக்கும் முறையினை மாற்றிக் கொள்ளாவிடில் மனித இனமே அழிந்து விடும் என அனுமானிக்கிறேன்' என்பதாகும். இயற்கை நிலை என்பதன் வெற்றி தனிமனிதர்களின் சுயநலத்திற்கான தேடலின் ஒரு குறிப்பிட்ட நிலையில், பிறரின் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் பாதுகாப்பின்மைக்கு முன் தமது சுயபாதுகாப்புத் திறன் அடிப்படையில்

11th Std Political Science Tamil_Unit-7.indd 135 06/12/2022 11:37:44

போதுமான வலிமையற்றவராக உணர்வது வரையிலாகும். சமூக ஒப்பந்தத்தின் பயன்பாடு என்பது ஒப்பந்தத்தில் நுழைவது வரை தனிமனிதர்களிடம் இருந்த பெறப்பட்ட பாதுகாப்பிற்கான வாய்ப்புச் சூழலை ஏற்படுத்துவதாகும். அடுத்ததாக பாதுகாப்புத் தொடர்பான சக்தியைப் பற்றிய கேள்வியே தனிமனிதர்களிடம் உள்ள குழப்பமாகும். அவரைப் பொறுத்தவரையிலும் மனிதர்கள் எவ்வகைப் புதிய சக்தியையும் உருவாக்கும் திறனற்றவர்கள். ஏற்கனவே உள்ளவற்றை வழிகாட்டி திசைதிருப்ப மட்டுமே அவர்களால் இயலும். ஆகவே இப்பாதையில் ஒருங்கமைந்த அணு குமுறையே அவரால் பரிந்துரைக்கப்படுகிறது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

மனிதனின் சுதந்திரமாகப் பிறக்கிறான், ஆனால் எங்கெங்கு காணினும் அவன் விலங்கிடப்பட்டிருக்கிறான். ஒரு மனிதன் தன்னையே பிறரின் எஜமானராக எண்ணுகிறான், எனினும் பிறரைக் காட்டிலும் மிகவும் அடிமையாகவே தொடர்ந்து காணப்படுகிறான்.

–ரூசோ (Rousseau)

எத்தகைய வடிவில் இருந்தாலும், ஒப்புதல் இல்லாத அதிகாரம் என்பது எளிதில் காணாமல் போகும் என கைவிடுகிறார். அவரது வாக்கின்படி உடன்படிக்கை மற்றும் ஒப்புதல் இல்லாத ஒரு மனிதனின் மீதான மற்றொரு மனிதனின் அதிகாரம் எத்தகைய பகுத்தறிவு அடிப்படையும் இல்லாததாகும். குடிமை அரசு பற்றிய ரூசோவின் சமன்பாடு பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது. "ஒவ்வொருவரும் தான் மற்றும் தனது அதிகாரத்தினைப் பொது விருப்பம் என்ற மேலான வழிகாட்டுதலின் கீழ் ஒரே பெருநிறுவனத் திறனாக்கி பின் ஒவ்வொன்றும் பிரிக்க இயலாத முழுமையாகப் பெறப்படுகிறது". ஆகவே அரசு என்பது தனது உறுப்பினர்களிடமிருந்து மாறுபட்ட வாழ்வு மற்றும் சுய விருப்பம் கொண்ட ஒரு நீதிநெறியிலான அமைப்பாக உருவாகிறது. அரசாங்கம் என்பது தனிமனிதர்களை இணைத்து ஒன்றாக்குவது மட்டுமல்ல உள்ளார்ந்த அடையாளம், ஆளுகை மற்றும் சுயஉயிர்ப்புக் கொண்ட புதிய அமைப்பாகும் என ரூசோ கூறுகிறார். அனைத்திற்கும் மேலாக அரசு என்பது தனக்கென சுயவிருப்பம் கொண்டது எனவும் அதனைப் 'பொது விருப்பம்' (General Will) என்ற பதமிட்டு அழைக்கிறார். ஏதேனும் தனிப்பட்ட அல்ல குறிப்பிட்ட விருப்பம் இருப்பின் அது பொது விருப்பத்திற்குக் கீழானதாகும்.

இயற்கை நிலையில் உள்ளுணர்வினால் உந்தப்பட்ட வாழ்க்கை என்பதற்குப் பதிலாக நீதி மற்றும் நீதிநெறிமுறைமையிலான வாழ்வில் புதிய குடிமைஅரசு அமைகிறது. தனிமனிதர்கள் தங்களின் இயற்கை சுதந்திரம் மற்றும் அனைத்திற்குமான வரையறையற்ற உரிமையை இழந்து அதற்குப் பதிலாக குடிமை சுதந்திரம் மற்றும் சொத்துரிமையைப் பெறுகின்றனர். இயற்கை நிலையில் உள்ள சுதந்திரம் தவறானது என்றும் தங்களின் கட்டுப்படுத்தமுடியாத விருப்பங்களுக்கு அது அடிமையாக்குகிறதேதவிர வேறொன்றுமில்லை எனவும் கண்டனம் தெரிவிக்கின்றனர். இதற்கு மாறாக, குடிமைச் சமூகத்தினால் வழங்கப்படும் நீதிநெறியிலான சுதந்திரம் என்பது அவர்களைத் தாங்களே தங்களின் எஜமானர்களாக ஆக்குகிறது. அவரின் வார்த்தைப்படி 'சட்டத்திற்குக் கீழ்ப்படிதல்' என்பதனைக் குறிப்பது நமது சுதந்திரமாகும். ஹாப்ஸ் மற்றும் லாக்கைப் போலன்றி, ரூசோ 'தனிமனிதன் இறையாண்மை மிக்க சமூகத்திடம் சமத்துவத்தை அடையும் பொருட்டு முழுமையாகச் சரணடைய வேண்டும்' எனக் கூறுகிறார். தனிமனிதன் தனது உரிமைகளை அரசாங்க அமைப்பிடம் ஒப்படைப்பதால் சுதந்திரம் மற்றும் அதிகாரத்திற்கு இடையே இணக்கமான சூழல் வளர்கிறது.

இறையாண்மை:

மாற்றித்தர இயலாத, பிரிக்க முடியாத, முழுமையான மற்றும் நிரந்தரமான தன்மையுடைய இறையாண்மை பற்றி ரூசோ குறிப்பாக உள்ளார். அவரைப் பொறுத்தவரையிலும் இறையாண்மையே பொது விருப்பமாகும். சிலரிடம் நிர்வாக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டதாலேயே

11th Std Political Science Tamil_Unit-7.indd 136 06/12/2022 11:37:44

அவர்கள் இறையாண்மை மிக்கவர்களாகிவிட முடியாது, அவர்கள் வெறும் சார்நிலை முகவர்களாவர். இறையாண்மையை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அம்முகவர்களில் ஒருவரிடம் மாற்றித்தர சமூகம் முயன்றால், அது அரசியல் அமைப்பின் இறங்குமுகத்தில் முடியும். ரூசோவின் ஒப்பந்தத்தில் இறையாண்மை அதிகாரமிக்கவர் ஓர் அங்கமாவார். மேலும் அவர் 'மக்கள் இறையாண்மை' (Popular Sovereignty) என்ற கருத்தினை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

பொது விருப்பம் (General Will)

பொது விருப்பம் மற்றும் சமூகம் ஆகியவை அரசிற்கு ஒரேமாதிரியானதாகும். மக்கள் தங்களின் அதிகாரம் மற்றும் ஆளுகை ஆகியவற்றினைப் பொது விருப்பத்தினுடைய கட்டளையின் கீழ் சமர்ப்பிக்கிறார்கள். பொது விருப்பமானது தனிமனிதர்களுடைய விருப்பத்தினை விஞ்சியதாகும். மேலும் இறையாண்மை என்பது முறைமை முழுவதும் நிறைந்திருப்பதுடன் பொதுவிருப்பத்தைத் தவிர வேறு எதனுடனும் ஒத்துப்போவதில்லை. சமூகத்தில் பொது விருப்பம் உறைந்துள்ளதை வைத்துப் பார்க்கும் போது அது மக்களின் இறையாண்மை மற்றும் மேலதிகாரத்தைச் சுமப்பதான 'மக்கள் இறையாண்மை' ஆகும். ரூசோ அதிகாரத்தின் மாற்றத்தக்க முறையினை வலியுத்துகிறார். பொது விருப்பம் என்பது அனைவரின் விருப்பத்திற்கும் சமமானதல்ல. ஏனென்றால் முன்னது பொது நலனையும் பின்னது பன்மடங்கான தனிப்பட்ட நலனையும் கொண்டதாகும். பொது விருப்பத்தினை இரண்டுமெய்க்கோள்கள் தீர்மானிக்கின்றன. முதலாவது, பொது நலனை நாடுகிறது. இது விருப்பத்தின் நோக்கத்தினைக் குறிப்பதாகும். இரண்டாவதாக அது அனைவரிடமிருந்தும் வருவதாகவும் அனைவருக்கும் பொருந்துவதாகவும் உள்ளது. இது அதன் தோற்றத்தினை முன்மொழிகிறது. பொது விருப்பம் என்பது பிரதிநித்துவப் பண்பு இல்லாததாகும்.இதற்குக்காரணம்பிரதிநிதித்துவ அமைப்புகள் சமூகத்தின் தேவைகளில் கவனம் செலுத்தாமல் தங்களின் தனிப்பட்ட விருப்பத்தினைமேம்படுத்தும்மனப்போக்கினைக் கொண்டிருப்பதாகும். நன்னெறி விழுமியங்கள் மற்றும் நல்மனப்பாங்கு ஆகியவை அனைவரின் விருப்பத்துடனும் ஒன்றிப்பொருந்துகிறது. பொது விருப்பம் என்பது மனசாட்சி மற்றும் உள்ளார்ந்த விருப்பத்தின் தவிர்க்க இயலாத வெளிப்பாடாகும். மேலும்அது சரியான பொது நலத்திலானதாகவும், பிரபஞ்சத்தின்பொதுநன்மைஅடிப்படையிலானது எனவும் அங்கீகரிக்கப்படுகிறது.

மதிப்பீடு

ரூசோவின் ஆளுமை மற்றும் அவரது படைப்புக்களைப் பற்றி பல்வகையான கருத்துக்கள் உள்ளன. ஜி.டி.எச்.கோல் என்னும் அறிஞர் அவரது 'சமூக ஒப்பந்தம்' பற்றி கருத்துக் கூறும் பொழுது 'இன்று வரை உள்ள அரசியல் தத்துவப் பாட நூல்களில் இது மிகச் சிறந்ததாகும்' என்கிறார். மார்லே பிரபு அவர்கள் ரூசோவின் 'தத்துவார்த்தமான சொற்கோவை' பற்றிய தமது மாறுபட்டக் கருத்தினை வெளிப்படுத்தும் போது "ரூசோ பிறக்காமலே இருந்திருப்பின் உலகம் மேலும் சிறந்திருக்காதோ?" என்று கூறுகிறார். அவர் கூற முயல்வது யாதெனில் ரூசோ வாழ்ந்திருக்காவிட்டால் பிரெஞ்சுப் புரட்சியின் மிக மோசமான அனுபவங்களைத் தவிர்த்திருக்கலாம். ஏனென்றால் அவரது கருத்துக்களே அந்த இயக்கத்தின் அடிப்படையாக இருந்ததாகும்.

அவரது தத்துவமானது சமதர்மத்தின் பின்னணியைக் கொண்டதாகும். முதலாளித்துவம் என்பது ரூசோவின் கைகளில் மிக மோசமாக நடத்தப்பட்டது. அவர் கல்வியை தேசியமயமாக்குதலை ஆதரித்ததுடன் தனிநபர் சொத்து என்னும் கருத்தினை எதிர்த்தார். மேலும் அவரது சொற்கோவையில் முற்றாட்சி மற்றும் அதிகாரப் போக்கினை இணக்கமாக்கினார். பொது விருப்பம் என்னும் சாக்கில் அவர் கிட்டத்தட்ட பெரும்பான்மையின் கொடுங்கோன்மையை ஆதரிக்கிறார். இவை அனைத்திற்கும் மாறாக, தற்கால அரசியல் தத்துவ ஞானிகளுள் ரூசோ ஈடு செய்ய முடியாத இடத்திற்குத் தகுந்தவராவார்.

7.8 ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill) (பொ.ஆ.1806– பொ.ஆ.1873)



கற்றலின் நோக்கங்கள்

- **ஜே. எஸ். மில்லின்** அரசியல் சிந்தனையைப் புரிந்து கொள்ளுதல்
- பயன்பாட்டுவாதம் மற்றும் சுதந்திரம் பற்றிய கூர் மதிப்பீட்டினை அறிதல்

வாழ்க்கை மற்றும் படைப்புகள்

மே 20, 1806-ல் ஜான் ஸ்டூவர்ட் மில் லண்டனின் வடக்குப் புறநகர்ப்பகுதியில் உள்ள பென்டன் வில்லே (Bentonville) என்னுமிடத்தில் ஹரியத் பரோ (Harriet Barrow) மற்றும் ஜேம்ஸ் மில் (James Mill) ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவரது தந்தையார் எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் பயின்ற ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவராவார். ஒரு சமூக மற்றும் அரசியல் சிந்தனையாளராக ஜான் ஸ்டூவர்ட் மில்லின் வளர்ச்சியினை மூன்று குறிப்பிட்ட காலகட்டங்களாகப் பிரிக்கலாம். முதலாவது காலகட்டம், இவரின் குழந்தைப் பருவ பயிற்சி காலமாகும். இக்காலகட்டத்தில் இவர் தனது தந்தை ஜேம்ஸ் மில் மற்றும் ஜெரேமி பெந்தாம் ஆகியோரிடம் குழந்தைப்பருவத்தில் பயிற்சி பெற்றார். இரண்டாவது காலகட்டமாக 1830 களின் இறுதியில் அவர்தம் முன்னிருபது வயதினில் சந்தித்த மனப்போராட்டங்களில் இருந்து மீளுதலும், தீவிரத் தத்துவப்போக்கு கலைந்து தனித்துவம் பெறுதல் ஆகியவையுமாகும். இக்காலகட்டத்தில் தான் அவர் பலதரப்பட்ட அறிவுப்பூர்வமான மற்றும் உணர்வுப்பூர்வமான தாக்கங்களின் அடிப்படையில் தன் சிந்தனையை மறுவடிவமைத்துக் கொண்டார். அவரது வாழ்வின் இறுதிக் காலகட்டமான, அடுத்த முப்பது ஆண்டுப்பணியில் அவரது முக்கியப் படைப்புகளான தர்க்கவாத முறைமை (A System of Logic), அரசியல் பொருளாதாரத் தத்துவத்தின் கொள்கைகள் (Principles of Political Economy), சுதந்திரம் (On Liberty), பிரதிநிதித்துவ அரசாங்கம் மீதான பரிசீலனைகள் (Considerations of Representative Government) போன்றவை பதிப்பிக்கப்பட்டன.

சுதந்திரம் (On Liberty)

1859-ல் வெளியிடப்பட்ட 'சுதந்திரம்' (On Liberty) என்னும் நூல் மில்லிற்கு நீடித்த புகழைத் தேடித்தந்தது. பிரபுக்களாட்சியிலிருந்து, மக்களாட்சிக்கு, அமைப்புக்கள் மாற்றம் பெற்ற போது அதனுடன் நன்மைகள் மற்றும் தீமைகளும் உடன் வந்தன. அதற்கு முந்தைய சகாப்தங்களின் ஆட்சிகளை விட சமூகப் பெருந்திரளான மக்களின் ஆட்சியாக மிகவும் வலிமையுடன், சீராகவும் எங்கும் நிறைந்திருக்கக்கூடியதாகவும் மக்களாட்சி விளங்குகிறது. பெரும்பான்மையின் ஆதிக்கம் என்பது முடியாட்சியை விட இடர்நிறைந்ததாகவும், சட்டமியற்றுவதன் மூலம் தனிமனிதர்களின் சுதந்திரத்திற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கும் திறனுள்ளதாகவும் உள்ளது. மக்களாட்சியிலான சமூகத்தில் சமுதாய அழுத்தம் மற்றும் எதிர்பார்ப்பு போன்ற முறைசாராத வழிமுறைகள் அனைத்தையும் கட்டுப்படுத்துவதாக உள்ளது. கருத்து, பண்பு மற்றும் நடவடிக்கையை அனுசரிக்கக்கூடியவற்றினை மறைக்கும் திறன் அத்தகைய அதிகாரங்களுக்கு உண்டு என மில் வெளிப்படுத்துகிறார். இத்தையை

சூழலில் தான் சுதந்திரம் என்ற நூல் எழுதப்பட்டது. இப்படைப்பின் நோக்கம் அதன் முதல் அலகில் எழுதப்பட்டதுடன் ஒரு எளிமையான கொள்கையை உறுதியாகக் கூறுகிறது. 'மனிதகுலத்திற்குத் தனியாகவோ அல்லது ஒட்டுமொத்தமாகவோத் தேவைப்படும் ஒரே நோக்கம் என்னவெனில் எத்தகைய எண்ணிக்கையிலான சுதந்திரமான நடவடிக்கை என்றாலும் சுய பாதுகாப்பிற்காக தலையிடக்கூடியதாகும்'. (சுதந்திரம் XVIII 223) இவ்வாறு மில்லின் இந்த நடைமுறைத் தத்துவம் அடிப்படையில், பயன்பாட்டுவாதமாகும்.

மில் தனது சுதந்திரம் என்னும் நூலில் கருத்து, விவாதம், பண்பு மற்றும் செயல்பாட்டுச் சுதந்திரத்திற்கான பல்வேறு மூல உபாயங்களை முன்வைத்து வாதிடுகிறார். கருத்து மற்றும் விவாதத்திற்கான சுதந்திரம் பற்றி 'சுதந்திரம்' என்னும் நூலின் இரண்டாவது அலகில் விவாதிக்கப்பட்டுள்ளது. அதில் உணர்ச்சி வெளிப்பாட்டினைக் கட்டுப்படுத்துவதற்கு எதிரான வாதங்களை விளக்கியுள்ளார். சுதந்திரத்தின் மூன்றாவது அலகில் பண்பியல் சுதந்திரம் (தனி மனிதத்துவம்) என்பதற்கு சாதகமான வாதங்களை முன்வைக்கிறார். மில் தனிமனிதர்களின் சுயபண்பியல்புகளின் மேம்பாட்டினாலான தனிமனித புறவெளிச் சுதந்திரத்திற்காக வாதிடுகிறார். அது சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் என்று கூறுகிறார். 'மனிதனின் தன்மை என்பது எந்திரத்தைப் போல ஒரு மாதிரியின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டு, குறித்துக் கொடுத்த பணியினைத் துல்லியமாக செய்யுமாறு உள்ளதல்ல. ஆனால் ஒரு மரமாக, அனைத்துப் பகுதிகளிலும் தானே வளர்ந்து மேம்படுவதுடன் உள்ளார்ந்த சக்திகளின் மனப்போக்கின் படி அது உயிருள்ளதாகிறது'. (சுதந்திரம் XVIII 263). மில்லின் கருத்துப்படி பெருந்திரள் சமுதாயம் என்பது சுய அடக்குமுறைத் தன்மையுடையதாகவும் மனிதனின் ஆற்றல் மற்றும் திறனை நலிவடையச் செய்வதாகவும் உள்ளது. விக்டோரியா சமுதாயம் (Victorian Society) என்பது மரியாதையான நடத்தைத் தொகுதியால் கிறிஸ்துவ சுயமறுப்பின் அடிப்படையில் ஆளப்படுகிறது எனக் கூறுகிறார். இதற்கு மாறாக மில் சுயமேம்பாட்டின் கிரேக்க மாதிரியினை ஊக்கப்படுத்துகிறார். தனிமனிதர்கள் தங்களின் வாழ்வாதாரங்களைத் தாங்களே மேம்படுத்திக்கொள்ளும் சூழலை உருவாக்குவது சமுதாயத்திற்கு முக்கியமானதாகும். இது பலவகை வேற்றுமையைப் பண்பு மற்றும் பண்பாட்டில் இயலச் செய்வதுடன் உற்பத்தி இழுவிசை எந்திரமாக மாறி தேசத்தினை முன்னெடுத்துச் செல்கிறது. 'சுதந்திரம்' எனும் நூல் முழுவதுமே மில் சட்டமன்றம் அல்லது அரசின் வலிந்த மாற்றத்திலிருந்தும், ஏமாற்றக்கூடிய சமூக வலிந்த மாற்றத்தின் வடிவங்களிலிருந்தும் தனிமனித சுதந்திரத்தினைப் பாதுகாக்க நாடுகிறார்.

பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் மீதான பரிசீலனைகள் (Considerations on Representatived Government)

1861 ஆம் ஆண்டு மில்லின் அரசியல் பற்றிய கருத்துக்களைக் கொண்ட பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் மீதான பரிசீலனைகள் பதிப்பிக்கப்பட்டது. மில் ஒரு பற்றுறுதியுள்ள மக்களாட்சி வாதியாவார். எனினும் அவரது படைப்பு தன்னாட்சி அரசாங்கம் பற்றிய ஏமாற்றங்கள், சந்தேகங்கள் மற்றும் சிக்கல்களை வெளிப்படுத்துகிறது. அவரது கருத்து முரண்பாடான தன்மை கொண்டதாக உள்ளது. அதாவது பெரும்பான்மையினரே ஆட்சி செய்தாலும் சிறுபான்மையினர் ஆட்சியே அநேகமாக சரியாக உள்ளது எனக் கருதுகிறார். பெரும்பான்மையிடம் அதிகாரம் இருந்தாலும் சிறுபான்மையினரிடமே ஞானம் உள்ளது என வாதிடுகிறார். இப்படைப்பில் மில் நல்ல அரசாங்கத்தை வரன்முறைப்படுத்துவதற்காக பெரும்பான்மையின் கொடுங்கோன்மையினால் ஏற்படும் அபாயங்களை வெளிப்படுத்துகிறார். ஒட்டுமொத்த சமூகத்திடமும் இறையாண்மை

உள்ள பிரதிநிதித்துவ முறையே லட்சிய அடிப்படையில் சிறந்த அரசாங்க முறையாகும் என நிறைவு செய்கிறார். ஒவ்வொரு குடிமகனுக்கும் எப்பொழுதேனும் அரசாங்கத்தின் பொதுவான மக்கள் பணிகளில் உண்மையாகப் பங்கேற்க அழைப்பு வரும் என்கிறார்.

மதிப்பீடு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பரந்து விரிந்த அறிவியல் சிந்தனை வரலாற்றில் ஜான் ஸ்டூவர்ட் மில் முக்கிய இடத்தினைப் பெறுகிறார். அவரது படைப்புக்கள் அரசினைப் புரிந்து கொள்ளவும், முறையாகக் கற்றறியவும், மனிதனின் தன்மையினுடைய முக்கியத்துவத்தினையும் வலியுறுத்துகிறது. அவர் வாக்குரிமை பற்றிய சுயதத்துவத்தினைத் தானே மேம்படுத்தினார். மில் கூறுகையில் 'சுவாசிக்கும் காற்றைப் போல மனிதனுக்கு அரசியல் விலங்காக வாக்களித்தல் அவசியாமாகும்' என்கிறார். மில்லைப் போன்று வாக்களித்தலைப் பற்றிய கருத்தாக்கத்தினை வேறு எந்த அரசியல் சிந்தனையாளரும் வலியுறுத்தியதில்லை. மில்லின் மீதான பயன்பாட்டுவாதத்தின் தாக்கமானது அவரது பொருளாதாரக் கொள்கை மற்றும் பிரதிநிதித்துவ அரசாங்கம் பற்றிய கருத்துகளை உருவாக்கியதில் முக்கியமானதாகும். பிரதிநிதித்துவ அரசாங்கத்தில் தனிமனிதன் தனது திறனை மேம்படுத்துவதற்கான சுதந்திரத்தில் தலையீடு இருக்கவே கூடாது என்றார். மில்லின் இந்த ஒவ்வொரு தலைப்பும் ஆர்வத்தைத் தூண்டக் கூடியதாக இருப்பதனை இத்துறையின் எந்தவொரு மாணவனும் புறந்தள்ளிவிட முடியாது.

உங்களுக்குத் தெரியுமா?

- பயன்பாட்டுவாதம் என்பது அதிக எண்ணிக்கையிலானவர்களின் அதிகப்படியான மகிழ்ச்சியாகும்
- ஜேம்ஸ் மில் மற்றும் ஜெரேமி பெந்தாம் ஆகிய பயன்பாட்டு சிந்தனையாளர்களின் வழிகாட்டுதலின் கீழ் ஜே.எஸ். மில் கொண்டு வரப்பட்டாலும் பயன்பாட்டு வாத்த்தினைப் பற்றிய மாறுபட்ட சிந்தனையினை அவர் தந்தார்.

7.9 காரல் மார்க்ஸ் (Karl Marx)
(பொ.ஆ. 1818 – பொ.ஆ. 1883)

கற்றலின் நோக்கங்கள்

- காரல் மார்க்சின் அரசியல் சிந்தனையைப் புரிந்து கொள்ளுதல்
- காரல் மார்க்சின் சிந்தனை- தர்க்கவாதப் பொருள்முதல்வாதம் – உபரி மதிப்புக் கோட்பாடு – வர்க்கப் போராட்டம் மற்றும் புரட்சி – பாட்டாளிகளின் சர்வாதிகாரம் – அரசு உதிர்தல் ஆகியவை பற்றிய காரல் மார்க்சின் சிந்தனையை அறிந்து கொள்ளுதல்

அறிமுகம்

நாம் உலகினைப் பார்க்கக்கூடிய பார்வையினை மாற்றிய ஒரு சிலரில் காரல்மார்க்சும் ஒருவராவார். மார்க்சைப் பொறுத்தவரையிலும் கோட்பாடு என்பது நம்மைச் சுற்றியுள்ள உலகைப் புரிந்து கொள்வதற்கு மட்டுமல்ல ஒருபடி முன்னே சென்று உலகை மாற்றுவதற்கும் ஆதரவளிக்கவேண்டும். இவரது படைப்புக்களான - பொதுவுடைமை அறிக்கை, வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கருத்தாக்கம் மற்றும் மூலதனம் ஆகியவை உழைக்கும் வர்க்கத்தின் சுயவிடுதலை என்னும் ஒரே இலக்கை நோக்கிய பல்வேறு பொருளாதார கருத்துகளின் உச்ச நிலையாகும். ஹெகல், புனித சைமன், ஜே.சி.எல் டி சிஸ்மாண்டி, டேவிட் ரிக்கார்டோ, சார்லஸ் ஃபோரியர் மற்றும்

11th Std Political Science Tamil_Unit-7.indd 140 06/12/2022 11:37:45

லூயிஸ் பிளான்க் போன்ற முந்தைய சிந்தனையாளர்களிடமிருந்து பல்வேறு கூறுகளை மார்க்ஸ் பெறுகிறார் என்பதனை அறிவது முக்கியமாகும்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் நீங்கள் இழப்பதற்கு உங்கள் விலங்கினைத் தவிர வேறொன்றுமில்லை.

– காரல் மார்க்ஸ் (Karl Marx)

ஐரோப்பாவில் சமதர்மத்தின் வளர்ச்சிக்கு 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதி சாட்சியானது எனலாம். இக்காலகட்டம் 'இரட்டைப்புரட்சி சகாப்தம்' என அறியப்படுகிறது. பிரான்ஸ் நாட்டில் அரசியல் அடிப்படையில் 1789ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டு முழுமையான முடியாட்சி தூக்கி எறியப்பட்டதுடன் சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் உள்ள குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரெஞ்சு மனிதனின் உரிமையும் பறைசாற்றப்பட்டது. இக்காலத்தின் இரண்டாவது முக்கியப் புரட்சியாக ஐரோப்பாவில் நீண்ட நெடிய தாக்கத்தினை ஏற்படுத்தியது 'தொழிற் புரட்சியாகும்' (Industrial Revolution). இவ்விரண்டு நிகழ்வுகளும் மார்க்சின் படைப்புகளின் மீது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தின.

மார்க்சின் படைப்புகள்

பொதுவுடைமை அறிக்கை (Communist Manifesto)

பொதுவுடைமை அறிக்கை (1848) என்பது காரல் மார்க்ஸ் மற்றும் ஃபிரடெரிக் ஏங்கல்சின் கூட்டுப் படைப்பாகும். இது 1850ஆம் ஆண்டிற்கு முன்னர் ஐரோப்பாவில் இருந்த சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பெருங்குழப்பங்களின் விளைவான படைப்பாகும்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

தற்பொழுது வரையிலான அனைத்து சமுதாயங்களின் வரலாறுமே வர்க்கப் போராட்டத்தின் வரலாறாகும்.

– காரல் மார்க்ஸ் (Karl Marx)

இக்கட்டுரை புரட்சியின் வாயிலான சமூக மாற்றத்தினை விளக்குகிறது. வர்க்கப் போராட்டத்தின் தன்மை என்பது

உற்பத்தியின் தன்மைக்குத் தக்கவாறு மாறுபடும் என பொதுவுடைமை அறிக்கை வாதிடுகிறது. ஆகவே விவசாய உற்பத்தியை முக்கிய வடிவமாகக் கொண்ட நிலப்பிரபுத்துவ சமுதாய முறைகளில் வர்க்கப் போராட்டம் என்பது உடமையாளர்களுக்கும் (தொழிற்சாலை உரிமையாளர்கள்), பாட்டாளிகளுக்கும் (தொழிற்சாலை பணியாளர்கள்) இடையே நடப்பதாகும். உண்மையில் முழுமையான சமுதாயமானது மேன்மேலும் பிளவுபட்டு இருபெரும் பகைமை முகாம்களாகிவிட்டது. அவை ஒன்றையொன்று நேரடியாக எதிர்த்து நிற்கக்கூடிய இருபெரும் வர்க்கங்களாக, உடமையாளர்கள் மற்றும் பாட்டாளிகள் என்றானது. மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் ஆகியோர் இம்மெய்க்கோளின் சாட்சியாகக் கூறுவது யாதெனில் தற்பொழுது வரையிலான அனைத்து சமுதாயங்களின் வரலாறுமே வர்க்கப் போராட்ட வரலாறு என்பதாகும்.

பொதுவுடைமை அறிக்கையை நிறைவு செய்யும் வகையில் இரு கருத்துகள் அருகருகே வைக்கப்படுகின்றன. ஒன்று பாட்டாளிகளை ஆளும் வர்க்கம் என்ற நிலைக்கு உயர்த்துவது ஆகும். மற்றொன்று மக்களாட்சி யுத்தத்தில் வெற்றி பெறுவதாகும். மார்க்ஸ் இப்படைப்பில் தனிநபர் சொத்து என்பதற்குப் பதிலாக அனைத்துச் சொத்துக்களையும் பொதுவான கட்டுப்பாட்டில் வைப்பதை பொதுவுடைமைவாதிகள் இலக்காகக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மூலதனம் (Das Capital)

மார்க்சின் தலைசிறந்த படைப்பான மூலதனம் 1867-ல் பெர்லினில் வெளியிடப்பட்டபோது அது 'உழைக்கும் வர்க்கத்தின் வேதாகமம்' (Bible of the Working Class) என்று விவரிக்கப்பட்டது. மார்க்சின் வாழ்நாளில் அதன் முதல் தொகுதி மட்டுமே

நிறைவுபெற்று வெளியிடப்பட்டது. மார்க்ஸ் நிறைவு செய்யாத இரண்டாவது மற்றும் மூன்றாவது தொகுதிகள் ஏங்கல்ஸ் அவர்களால் தொகுத்து அமைக்கப்பட்டு 1885 மற்றும் 1894ல் வெளியிடப்பட்டது. முதல் தொகுதியானது, மூலதனத்தின் உற்பத்தி நடைமுறையினைப் பற்றியதாகும். இரண்டாவது தொகுதி மூலதனத்தின் சுழற்சி நடைமுறையினைப் பற்றியதாகும். மூன்றாவது தொகுதி முதலாளித்துவ உற்பத்தியின் ஒட்டுமொத்த நடைமுறையினைப் பற்றியதாகும்.

இயங்கியல் பொருள் முதல்வாதம் (Dialectical Materialism)

இயங்கியல் பொருள் முதல்வாதம் என்பது காரல் மார்க்ஸ் மற்றும் ஃபிரடெரிக் ஏங்கல்ஸ் ஆகியோரின் போதனைகளிலிருந்து உண்மையில் பெறப்பட்டத் தத்துவார்த்த அணுகுமுறையாகும். கோட்பாடு அளவில் தர்க்கவாதப் பொருள்முதல்வாதம் என்பது அறிவியல் பிரச்சனைகளைப் புலனாய்வு செய்ய பொதுவான உலகளாவிய பார்வை மற்றும் அதற்கான முறையினைத் தந்துள்ளது. மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் ஆகியோர் சமுதாயத்தினுடைய ஒவ்வொரு அடிப்படைப் பிரிவினையையும் பொருளாகப் பார்ப்பதுடன் சமூக மாற்றம் என்பது எதிர்த்தரப்பினரின் போராட்டத்தின் மூலமே நிகழும் என்றனர். கொள்கையளவில் பொருள்முதல்வாதம் என்பது சமுதாய உலகைப்பற்றியதாகும். பொருள் சார்ந்த உலகம் எப்பொழுதும் இயக்க நிலையிலும், முரண்பாடுகள் மற்றும் மாற்றங்களுடனும் இருக்கும். சமுதாயத்தின் நிலையான இயக்கத்தினால் ஏற்படும் உராய்வுகள் சமூக முரண்பாடுகளுக்கு வழி செய்வதன் விளைவாக சமூக மாற்றம் ஏற்படுகிறது. தர்க்கவாதப் பொருள்முதல்வாதம் என்பது சமுதாய உலகைப் பற்றியதாகும். தர்க்கவாதப் பொருள்முதல்வாதம் என்பது சமுதாய உபரி நடைமுறைகள் தொடர்பானதாகும்.

உபரி மதிப்புக் கோட்பாடு (Theory of Surplus Value)

உபரி மதிப்புக் கோட்பாடு என்பது மூலதனம் என்ற நூலில் உள்ளதாகும். மனிதனின் உழைப்பு என்பது பொருளாதார மதிப்பின் ஆதாரமாகும் என காரல் மார்க்ஸ் கருதுகிறார். ஆகவே 'உபரி மதிப்பு' என்னும் பதம் உழைப்பு மற்றும் உழைப்பாளர் சக்தியின் வேறுபாட்டினைக் குறிப்பதாகும். தொழிலாளியின் அதிகப்படியான உழைப்பினால் கிடைக்கும் 'உபரி மதிப்பு' முதலாளிகளைச் சென்று சேர்கிறது. எத்தனை நீண்ட வேலை நாள் என்பது முக்கியமல்ல, ஆனால் உபரி மதிப்பு என்பது உருவாகிறது. ஒருவேளை தொழிற்சாலையில் ஒரு மணிநேரம் வேலை நடந்தாலும் முதலாளிகள் அவர்களது பங்கான உபரி உழைப்பினை வலிந்து வெளிக்கொணர்கின்றனர். இதுவே உபரி மதிப்பாகும். முதலாளிகள் தங்களின் தொழிலாளர்களுடைய உழைப்பின் மதிப்பினை விடக் குறைவாகவே ஊதியமளிக்கின்றனர். அது பெரும்பாலான தருணங்களில் தொழிலாளர்களை ஜீவன நிலையில் வைத்திருக்க மட்டுமே போதுமானதாக இருக்கிறது.

செயல்பாடு

மார்க்சின் படைப்புகள்

- ஹெகலின் உரிமைகள் பற்றிய தத்துவம் மீதான கூர்மதிப்பீடு,
- புனிதக் குடும்பம், பியுபர்சேச் பற்றிய ஆய்வேடு,
- ஜெர்மானிய லட்சியவாதம்,
- பொதுவுடைமை அறிக்கை,
- கோதா திட்டத்தின் கூர்மதிப்பீடு,
- மூலதனம்

வர்க்கப் போராட்டம் மற்றும் புரட்சி (Class Struggle and Revolution)

வர்க்க உணர்வு நிலை மற்றும் போராட்டம் ஆகியவை உற்பத்தியின் சமூக உறவுகளுடன் தொடர்புடையது ஆகும். மார்க்ஸ் வர்க்கத்தை ஓர் லட்சியவாதக் காரணியாகப் பார்க்காமல் குறிப்பிட்ட சமூக நிலையிலுள்ள மனிதனாகப் பார்க்கிறார். 'வர்க்கம்' என்னும் பதம் சொத்து

அடிப்படையிலான உரிமையினைக் குறிப்பதாகும். உதாரணமாக உடமையாளர்கள் (உற்பத்திவழிமுறைகளைச்சொந்தமாக்கியவர் மற்றும் நில உடமையாளர்கள்) மற்றும் பாட்டாளிகள் ஊதியத்திற்காக தனது உழைப்பினை விற்பவர்) ஆகியோரைக் குறிப்பிடலாம்.

மார்க்சின் படைப்பான 'பிரான்சின் வர்க்கப் போராட்டம்' என்னும் நூல் 1848 முதல் 1850 வரையிலான காலகட்டத்தில் வர்க்கப்போராட்டத்தின் வாதங்கள் மற்றும் புரட்சியின் தேவையினை மதிப்பிடுகிறது. 1848ம் ஆண்டு நடந்த பிரெஞ்சுப் புரட்சியின் அடிப்படையில் தமது வர்க்கப் பிளவுக் கருத்தை மார்க்ஸ் கொண்டிருந்தார். இப்புரட்சியின் போது உடமையாளர்கள் மற்றும் பாட்டாளிகள் ஆகியோர் இணைந்து பிரபுக்களாட்சிக்கு எதிராகப் போராடி குடியரசினைப் பிரகடனப்படுத்துவதில் வெற்றியடைந்தனர். பிப்ரவரிப் புரட்சியின் மூலம் பாட்டாளிகளின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த பின்னர் உடமையாளர்கள் தேர்தல் நடைமுறையினை தங்களுடைய சட்டபூர்வமான ஆட்சியின் உரிமையாகக் கோரினர். உடமையாளர் வர்க்கமானது உழைப்பாளர் வர்க்கத்தினை தமது அனைத்து தளைகளிலிருந்தும் விடுவிப்பதற்குப் பதிலாக அதிகமாக அவர்களை அந்நியப்படுத்தியது எனலாம்.

உடமையாளர்கள் அதிகாரத்திற்கு வந்த பின்னர் அரசு மற்றும் படைகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைக்க ஆரம்பித்ததுடன் பாட்டாளிகளை நசுக்க ஆரம்பித்தனர். இது முன்னதை உண்மையில் உள்நாட்டுப் போராக்கியது. வர்க்கப் போராட்டம் என்பது புரட்சிக்கு வழிகோலுவதாகவும், பாட்டாளிகளின் சர்வாதிகாரம் மற்றும் தனியார் உற்பத்தி ஒழிப்பு சமதர்மத்தில் முடிவதாகவும் வலியுறுத்துகிறார்.

பாட்டாளிகளின் சர்வாதிகாரம்(Dictatorship of the Probletariat)

'பாட்டாளிகளின் சர்வாதிகாரம்' என்பது உழைக்கும் வர்க்கமானது அதிகாரத்தில் அமர்வதைக் குறிக்க காரல் மார்க்ஸ் பயன்படுத்திய சொற்றொடராகும். மார்க்சைப் பொறுத்தவரை அது உடமையாளர்களின் அரசியல் ஆட்சியைத் தூக்கி எறிவதற்கும், வர்க்கமற்ற சமுதாயம் உருவாவதற்கும் இடைப்பட்ட காலமாகும். அரசியல் சிந்தனைக்கான மார்க்சின் அனைத்து பங்களிப்புகளைக் காட்டிலும் பாட்டாளிகளின் சர்வாதிகாரம் என்பது உண்மையான ஆளுகைக்கான பெரிதும் ஆழ்ந்த பொதி பொருளைக் கொண்டதாக விளங்குகிறது.

முதலாவது குழுவான உழைப்பாளர் வர்க்கம் (பாட்டாளிகள்), பாரம்பரியமான ஆளும் வர்க்கத்தின் (உடமையாளர்கள்) மீது தங்களின் அதிகாரத்தினை அழுத்தந்திருத்தமாக்கிய பின்னர் அனைத்து முதலாளித்துவ உற்பத்தி முறைகளும் ஒழிக்கப்பட்டு சமதர்ம உற்பத்தி முறைகள் முதன்மையாகின. சமதர்மத்திலான உற்பத்தி முறைகளை நிறுவியதன் விளைவாக சமுதாயத்தின் வர்க்கக் குழுக்கள் மறைந்து பாட்டாளிகளின் சர்வாதிகாரம் வந்தது.

அரசு உதிர்தல் (Withering Away of the State)

சமுதாயம் பல வர்க்கங்களாகப் பிளவுபட்டதன் விளைவாக, ஒடுக்கும் மற்றும் ஒடுக்கப்பட்ட குழுக்கள் உருவாகி, அரசு சுரண்டலுக்கான கருவியாகிறது. இந்த வர்க்கப் பிளவு மிகவும் தீவிரமடைந்து பாட்டாளிகளின் சர்வாதிகாரத்திற்கு வழிகாட்டுகிறது. அரசாங்கத்தைக் கைப்பற்றுவதன் மூலமாக பாட்டாளிகளின் வெற்றிக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. பாட்டாளிகள், அரசின் கட்டுப்பாட்டினை எடுத்துக்கொள்வதுடன் உற்பத்தியின் வழி முறைகளை அரசின் உற்பத்தி வழிமுறைகளாக மாற்றுகின்றனர். அரசு மற்றும் உற்பத்தியைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின்னர், பாட்டாளிகள் அனைத்து வர்க்க பேதங்கள் மற்றும் வர்க்கப் பகை முரண்பாடுகளையும் அழிக்கின்றனர். இதன் விளைவாக இறுதியில் அரசு உதிர்தல் நிகழ்கிறது.

11th Std Political Science Tamil_Unit-7.indd 143 06/12/2022 11:37:45

மதிப்பீடு

1852ஆம் ஆண்டு மார்க்ஸ் தமது பங்களிப்புக்களை மூன்று பிரிவுகளாகத் தொகுத்துள்ளார்:

அ) வர்க்கங்கள் (பாட்டாளிகள் மற்றும் உடைமையாளர்கள்) சமுதாயத்தின் நிரந்த இயல்பு அல்ல.

ஆ) வர்க்கப் போராட்டமானது பாட்டாளிகளின் சர்வாதிகாரம் என்பதற்கு வழிசெய்து இறுதியாக உற்பத்தியை உழைப்பாளர்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வருகிறது.

இ) 'பாட்டாளிகளின் சர்வாதிகாரம்' என்பது வர்க்கமற்ற சமுதாயத்திற்கு வழிசெய்வதுடன் சமூக வேற்றுமைகள் மறைவதால் அரசு உதிர்ந்து போகிறது.

மனிதகுலத்தின் மீதான மார்க்சியத்தின் தாக்கத்தினை மனிதனின் மீதான மதத்தின் தாக்கத்துடன் மட்டுமே ஒப்பிட இயலும். ஏறத்தாழ உலகின் பாதி மக்கள்த் தொகை மார்க்சிய வாதத்தின் தாக்கத்திற்கு உள்ளாகி இருக்கிறது. அதே சமயத்தில், மார்க்ஸ், தான் எழுதியவை அனைத்தையும் பின்பற்றாவிட்டாலும், அவரது படைப்புகள் பலரின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தின. மார்க்சியக் கோட்பாடுகளின் தாக்கத்திற்கு உள்ளான, லெனின், ஸ்டாலின், மாவோ போன்ற தலைவர்கள் ரஷ்யா, சீனா, கியூபா, வியட்நாம் போன்ற நாடுகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு முயன்று சாதித்தனர். தற்காலத்தில் பெரும்பாலான முன்னாள் பொதுவுடைமை நாடுகள் மக்களாட்சி தன்மையுடையவர்களாக மாறி உள்ளனர். இருப்பினும் வர்க்க மாறுபாடுகள் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டிருப்பதை இச்சமூகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, சமுதாயத்தில் முதலாளித்துவவாதிகள் மற்றும் சுரண்டல் ஆகியவை இருக்கின்ற வரையிலும் மார்க்சின் கருத்துகளைப் புறக்கணிக்கவோ, மறக்கவோ இயலாது எனலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

மார்க்சியவாதத்தின் மீதான தற்கால விவாதங்களின் முக்கிய அடிப்படைச் சால்புகள் தற்காலச் சமுதாயத்தில் உருவாகும் சில முக்கிய வடிவங்களிலான பிளவுகளை அடையாளம் காட்டுகின்றன. இவ்வகை விவாதங்கள் புதிய மார்க்சியவாதத்தின் எழுச்சிக்கு வகை செய்கின்றன.

கலைச்சொற்கள்: Glossary

பிரபுக்களாட்சி (Aristocracy): ஒரு அரசை ஆளுகின்ற அதிகாரம் உயர்குடியினரிடம் இருத்தல்

உடைமையாளர்கள் (Bourgeosie): சமுதாயத்தின் பெரும்பகுதி வளம் மற்றும் உற்பத்தி வழிமுறைகளை சொந்தமாக்கிக் கொண்ட முதலாளி வர்க்கமாகும்.

வர்க்கமற்ற சமுதாயம் (Classless Society): உண்மையான பொதுவுடைமை மலரும் போது எதிர்பார்க்கப்படும் சமுதாய அமைப்பின் அடிப்படைச் சூழ்நிலையாகும்.

இயங்கியல் (Dialectic): மாறாநிலைவாத முரண்பாடுகள் மற்றும் அவற்றின் தீர்வுகளை பற்றிய வினவலாகும்.

பாட்டாளிகளின் சர்வாதிகாரம் (Dictatorship of the Proletariat): மார்க்சியவாதத்தின்படி தங்கள் உழைப்பில் இருந்து மட்டுமே வருவாயை ஈட்டக்கூடிய தொழிற்சாலைப் பணியாளர்களைக் கொண்ட பொருளாதார மற்றும் சமூக வகுப்பினரின் ஆட்சி பாட்டாளிகளின் சர்வாதிகாரமாகும். இந்த பாட்டாளிகளின் ஆட்சியானது முதலாளித்து ஒழிப்பிற்கும், பொதுவுடைமையை நிறுவுதலுக்கும் இடைப்பட்ட காலமாகும்.

அறிவொளிக்காலம் (Enlightenment): இது 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் 18ஆம் நூற்றாண்டில் இருந்த ஓர் ஐரோப்பிய அறிவார்ந்த இயக்கமாகும். இது மரபுகளைக் காட்டிலும் பகுத்தறிவு மற்றும் தனிமனிதத்துவத்தினை வலியுறுத்தியது.

www.tnschoolbooks.in

பொது விருப்பம் (General Will): அரசியல் கோட்பாட்டில், பொது நலன் அல்லது பொது நன்மைக்கான நோக்கங்கள் தொடர்பான விருப்பங்களை ஒட்டுமொத்தமாக்கி வைப்பதாகும்.

மகத்தான புரட்சி (Glorious Revolution): 1688–89ல் நடந்த நிகழ்வுகளால் இரண்டாம் ஜேம்ஸ் மன்னர் பதவி விலக நேர்ந்தது. மன்னரின் மகளான இரண்டாம் மேரி மற்றும் அவருடைய கணவரும் ஆரஞ்சின் இளவரசர் மற்றும் நெதர்லாந்தின் முதன்மை அதிகாரியுமான மூன்றாம் வில்லியம் ஆகியோர் அரியணையில் அமர்ந்தனர்.

தனிமனிதத்துவம் (Individualism): ஒட்டுமொத்த அல்லது அரசின் கட்டுப்பாட்டிற்கு மாறாக தனிமனிதர்களின் செயல்பாட்டு சுதந்திரத்திற்கு சாதகமான ஓர் சமூகக் கோட்பாடாகும்.

பெரும்பான்மைத்துவம் (Majoritarianism): பெரும்பான்மையினரின் ஆட்சியைத் தூக்கிப் பிடிக்கும் ஓர் மக்களாட்சி வடிவமாகும்.

அரசியல் பொருளாதாரம் (Political Economy): இது தனிமனிதன், சமுதாயம், சந்தைகள் மற்றும் ஆகிய பெற்றிடும் உறவினைக் கற்றறியும் சமூக அறிவியல் பிரிவாகும்.

பாட்டாளிகள் (Proletariat): ஒட்டுமொத்த உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்த மக்களைக் குறிப்பதாகும்.

பகுத்தறிவு (Rationality): ஒருவரின் காரணகாரிய அறிவு அல்லது தர்க்கத்தின் அடிப்படையிலான தரநிலையாகும்.

சீர்திருத்தம் (Reformation): இது ஓர் 16ஆம் நூற்றாண்டு இயக்கமாகும். ரோமானியத் திருச்சபையில் இருந்த அத்துமீறல்களைச் சீர்திருத்தி பின்னர் சீர்திருத்தத் திருச்சபைகள் நிறுவப்பட்டன.

வியன்புனைவியக்கம் (Romanticism): இது 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய கலை மற்றும் இலக்கிய இயக்கமாகும். இது அகத்தூண்டுதல், உள்ளுணர்வு மற்றும் தனிமனிதனின் முதன்மையை வலியுறுத்துகிறது.

இயற்கை நிலை (State of Nature): அரசியல் கோட்பாட்டில் ஓர் அரசியல் அமைப்பு தோன்றுவதற்கு முன்னரோ அல்லது இல்லாத நிலையிலோ இருந்த உண்மையான அல்லது அனுமானத்திலான மனிதர்களின் நிலையினைக் குறிப்பதாகும்.

ஆட்சிக்கலை (Statecraft): அரசு விவகாரங்களைத் திறம்பட மேலாண்மை செய்தல், அரசியல் மேதகைமை.

செல்வராட்சி (Timocracy): பதவி வகிப்பதற்கு சொத்துக்களை உடைமையாகப் பெற்றிருத்தலை அவசியமாக்கும் அரசாங்க முறையாகும்.

மதிப்பிடுதல் (Evaluation)

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

1. 'குடியரசு' என்னும் நூலினை எழுதிய தத்துவ ஞானியின் பெயர்

அ. மார்க்ஸ் ஆ. அரிஸ்டாட்டில்

இ. பிளாட்டோ ஈ புனித தாமஸ் அக்வினாஸ்

2. 'அரிஸ்டாகிள்ஸ்' என்பது யாருடைய இயற்பெயராகும்?

அ. சாக்ரடீஸ் ஆ. பிளாட்டோ

இ. அரிஸ்டாட்டில் ஈ. செனோபோன்

3. அரசியல் அறிவியலின் தந்தை யார்?

அ. சாக்ரடீஸ் ஆ. பிளாட்டோ

இ. அரிஸ்டாட்டில் ஈ. செனோபோன்

11th Std Political Science Tamil_Unit-7.indd 145 06/12/2022 11:37:45

4. 'திருச்சபை நிறைஞர்' எனப் பிரபலாக அறியப்படுபவர் யார்?
அ. புனித தாமஸ் அக்வினாஸ் ஆ. பிளாட்டோ
இ. அரிஸ்டாட்டில் ஈ. செனோபோன்

5. 'லிவி மீதான உரைக்கோவை' என்ற நூலின் ஆசிரியர் யார்?
அ. புனித தாமஸ் அக்வினாஸ் ஆ. மாக்கியவல்லி
இ. அரிஸ்டாட்டில் ஈ. செனோபோன்

6. தத்துவார்த்தமான சுதந்திரத்துவத்தின் தந்தை யார்?
அ. புனித தாமஸ் அக்வினாஸ் ஆ. மாக்கியவல்லி
இ. மார்க்ஸ் ஈ. ஜான் லாக்

7. 'அரசியல் பொருளாதாரத்தின் கொள்கைகள்' என்ற படைப்பின் ஆசிரியர் யார்?
அ. புனித தாமஸ் அக்வினாஸ் ஆ. தாமஸ் ஹாப்ஸ்
இ. ஜான் ஸ்டூவர்ட் மில் ஈ. பிளாட்டோ

8. 'உழைக்கும் வர்க்கத்தின் வேதாகமம்' என அழைக்கப்படும் படைப்பு எது?
அ. அரசியல் பொருளாதாரத்தின் கொள்கைகள் ஆ. மூலதனம்
இ. உபரி மதிப்புக் கோட்பாடு ஈ. பிரான்சின் வர்க்கப் போராட்டம்

9. 'பாட்டாளிகளின் சர்வாதிகாரம்' என்னும் கருத்தினைப்பிரகடனப்படுத்தியவர் யார்?
அ. மார்க்ஸ் ஆ. புனித தாமஸ் அக்வினாஸ்
இ. தாமஸ் ஹாப்ஸ் ஈ. ஜான் ஸ்டூவர்ட் மில்

II கீழ்க்கண்ட வினாக்களுக்கு மிக சுருக்கமாக விடையளி:

1. 'இராஜதந்திரி' என்னும் நூல் யாரால் எப்பொழுது எழுதப்பட்டது?'
2. பிளாட்டோவின் கூற்றுப்படி 'லட்சிய அரசினை' ஆள்பவர் யார்?
3. கூடிவாழும் விலங்குகளின் எந்த பண்பியல்புகளைப் பற்றி தாமஸ் அக்வினாஸ் எழுதினார்.

III. கீழ்க்கண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி.

1. பிளாட்டோவின் நீதி கருத்துகளைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
2. அரிஸ்டாட்டில் அரசினை எவ்வாறு வகைப்படுத்துகிறார்?
3. புனித தாமஸ் அக்வினாசின் வாழ்வு மற்றும் படைப்புக்களைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
4. அரசியல் மற்றும் நீதிநெறியை மாக்கியவல்லி எவ்வாறு பிரிக்கிறார்.
5. மாக்கியவல்லியின் ஆட்சிக்கலை பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
6. ஹாப்சின் இயற்கை நிலையினை மதிப்பிடுக.

IV. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவாக விடையளி:

1. கல்வி, மக்களாட்சி மற்றும் அரசமைப்பு பற்றிய பிளாட்டோவின் படைப்புக்களைப் பகுப்பாய்க.
2. அரசின் பணிகள் மற்றும் வகைப்பாட்டினைப் பற்றிய அரிஸ்டாட்டிலின் விளக்கத்தினை மதிப்பிடுக.
3. மனிதனின் தன்மை பற்றிய மாக்கியவல்லியின் அணுகுமுறையினை மதிப்பிடுக.
4. ஜான் லாக்கினுடைய இயற்கை நிலை மற்றும் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டினை பற்றி விரிவாகக் குறிப்பு எழுதுக.

11th Std Political Science Tamil_Unit-7.indd 146 06/12/2022 11:37:45

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Barker, E, Political Thought of Plato and Aristotle, Methuen & Co., London, 1905.
2. Vivian Boland OP (2007) 'St. Thomas Aquinas', London: Bloomsbury Publishing.
3. Western Political Thought, Dr.O.P.Gauba, MacMillan Publishers India Limited,Delhi,2011.
4. From Plato to Marx, Amal Kumar Mukhopadhyay, K.P. Bagchi & company, Calcutta, 2014.
5. Locke, John. The Second Treatise on Civil Government. Amherst, N.Y: Prometheus Books, 1986.
6. Rousseau, Jean-Jacques. The Social Contract. Harmondsworth: Penguin, 1968.
7. Jean-Jacques Rousseau, Britannica Encyclopaedia. https://www.britannica.com/biography/Jean-Jacques-Rousseau. Assesses on 04 February, 2018.
8. Lawrence Cahoone (2014) The Modern Political Tradition: Hobbes to Habermas', Virginia: The Great Courses

ICT Corner

அரசியல் சிந்தனை

அரசியல் சிந்தனையாளர்களின் படைப்புகளைப் படித்துப் பார்ப்போமா!



சிறந்த சிந்தனைகள்

செயல்முறை

படி 1: சிறந்த சிந்தனையாளர்களின் பக்கத்தைத் திறப்பதற்கு உரலி (URL) அல்லது விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தவும். இதில் அரசியல் சிந்தனையாளர்களின் பட்டியல்கள் சாளரத்தின் மேல் வலப் பக்கத்தில் காணப்படும்.

படி 2 :கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலில் தேவைப்படும் பெயரைச் சொடுக்கியதும், அவரின் விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

படி 3: சிந்தனையாளரின் விவரங்களை மேலும் விரிவாக அறிய, முகப்புப் பொத்தானுக்கு அடுத்துள்ள பையோகிரா:பி பொத்தானைச் சொடுக்குக.

படி 4: இதேபோல் சிந்தனையாளரின் படைப்புகள், படைப்புகள் மீதான விவாதங்கள், விளக்க வீடியோக்கள் ஆகியவற்றை ஆராய்வதற்குத் தொடர்ச்சியான பொத்தான்களைச் சொடுக்கவும்.

சிறந்த சிந்தனைகள் URL:

http://thegreatthinkers.org/plato/biography/

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்

11th Std Political Science Tamil_Unit-7.indd 147 06/12/2022 11:37:46

அலகு
8

அரசியல் கொள்கைகள் – பகுதி I

கற்றலின் நோக்கங்கள்

- எதிர்மறைத் தாராளவாதம், நேர்மறைத் தாராளவாதம் மற்றும் புதியத் தாராளவாதம் ஆகியவற்றின் பொருள் மற்றும் தன்மைகளை புரிந்து கொள்ளுதல்.
- தாராளவாதத்தின் சிந்தனையாளர்களையும் தலைவர்களையும் அடையாளம் காணுதல்.
- காரல் மார்க்சின் காலத்திற்கு பின் வந்த பொதுவுடைமைவாதம் சிந்தனையாளர்களை, கருத்துக்களை அறிந்து கொள்ளுதல்.
- சமதர்ம கொள்கையில் பல விதமான உட்பிரிவுகளின் சாரத்தை அறிந்து சமதர்மவாதத்தை பொதுவுடைமைவாதத்துடன் ஒப்பிடுதல்.
- தேசியத்தின் பொருள், தோற்றம், கோட்பாடுகள், உள்நாட்டு, வெளிநாட்டு சவால்கள் ஆகியவற்றைக் காண்பது.
- இந்திய தேசியத்தின் உருவாக்கக் காரணிகளை ஆய்வு செய்தல்.
- பாசிசத்தின் தோற்றம், பொருள் மற்றும் அடிப்படைத் தன்மைகளைப் பற்றி அறிதல்.

8.1 தாராளவாதம்

நவீன அரசியல் கோட்பாட்டின் மிக முக்கிய கொள்கையாக உள்ளது. இது 17-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. சம கால உலகில் பெருமளவில் உலக நாடுகளால் தாராளவாதம் பின்பற்றப்படுகிறது. இலத்தீன் மொழியில் "Liber" என்றால் விடுதலை என்று பொருளாகும். தாராளவாதத்தின் ஆங்கிலச் சொல்லான "Liberlism" இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து தோன்றியது. 19-ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டில் அரசியல் அமைப்பை ஆதரித்தவர்கள் இச்சொல்லைப் பயன்படுத்தினார்கள். மேற்கத்திய நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் தாராளவாதத்தை அரசியலிலும், பொருளாதாரத்திலும் பின்பற்றுகின்றன.

PGBU8

தாராளவாதம் வரலாற்றில் மூன்று வகைகளாகக் காணப்படுகின்றது. முதலாவதாக 1930-ஆம் ஆண்டு வரையில் இது 'எதிர்மறைத் தாராளவாதம்' என அழைக்கப்பட்டது. இரண்டாவதாக, உலகப் பொருளாதார மந்த நிலைக்குப் பின் 'நேர்மறைத் தாராளவாதம்' என அழைக்கப்பட்டது. மூன்றாவதாக, 1970-களுக்குப் பின்னர் இது 'சமகாலத் தாராளக் கொள்கை' என அழைக்கப்படுகிறது.

அ) எதிர்மறைத் தாராளவாதம்

எதிர்மறைத் தாராளவாதம் பாரம்பரிய தாராளவாதம், Laissez Faire (பிரெஞ்சு மொழியில்) என்றும் அழைக்கப்படுகிறது. ஜான் லாக் என்ற அரசியல் சிந்தனையாளர் 'சிவில் அரசாங்கத்தின் இரண்டு ஒப்பந்தங்கள்' (Two Treaties of Civil Government) என்ற தனது நூலில் எதிர்மறைத் தாராளவாதத்தை எடுத்துரைத்தார்.



ஜான் லாக், பாரம்பரியத் தாராளவாதத்தின் தந்தை. உயிர், விடுதலை, தனிச் சொத்துகள் சமஉரிமை.

தாமஸ் பெயின், மாண்டெஸ்க்யூ, பெந்தம் ஆகியோரும் எதிர்மறைத் தாராளவாதத்தை ஆதரித்தனர். பொருளாதாரப் பாடத்தில் ஆதம் ஸ்மித் 'தேசங்களின் செல்வங்களைப் பற்றிய ஓர் ஆய்வு' (An Inquiry Into the Nature and Causes of Wealth of Nations) என்ற நூலில் எதிர்மறைத் தாராளவாதத்தை ஆதரித்தார்.

எதிர்மறைத் தாராளவாதத்தின் சாரம்

எதிர்மறைத் தாராளவாதம் மனிதனைப் பகுத்தறிவு உள்ள, திறமையான, சுதந்திரமான தன்மைகளை உடையவன் என்று கூறுகிறது. எல்லா மனிதர்களும் சமமானவர்கள். ஒவ்வொரு மனிதனும் தனது தேவையை அறிந்து இருக்கிறான். சமூகம் என்பது தனிமனிதர்களின் கூட்டமைப்பு ஆகும். மனிதனின் வாழ்க்கையில் தலையிடுவதற்கு அரசிற்கோ, சமூகத்திற்கோ அதிகாரம் இல்லை. அரசு ஒரு அவசியமான தீமை ஆகும். சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கு அரசு தேவைப்படுகிறது. ஏனென்றால் அது மனிதனின் சுதந்திரத்தைப் பறிக்கக் கூடும்.

அரசு எதிர்மறை அரசு ஆகும். ஏனென்றால் முன்னேற்றத் திட்டங்களை அது கொண்டு வரக் கூடாது. அரசை Laissez Faire அரசு என்று அழைக்கிறோம். பிரெஞ்சு மொழியில் இதனுடைய பொருள், 'தனியே விடு' என்பதாகும். அதாவது அரசு மனிதனை சுதந்திரமாக விட்டு விட வேண்டும். அவனது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக் கூடாது. சட்ட ஒழுங்கைப் பராமரிப்பது, சட்டப்பூர்வமாக உருவான ஒப்பந்தங்களை அமல்படுத்துவது அரசின் பணிகள் ஆகும்.

பொருளாதாரத்தில் எதிர்மறைத் தாராளவாதம் தேவை மற்றும் வழங்கலின் அடிப்படையில் இயங்கும். சந்தைப் பொருளாதார நடவடிக்கைளை அரசு கட்டுப்படுத்தக் கூடாது. அரசானது கிரிக்கெட் விளையாட்டின் நடுவரை போன்றது. விளையாட்டில் நடுவர் பங்கேற்கமாட்டார். வீரர்கள் விதிகளுக்குட்பட்டு விளையாடுகிறார்களா என்று கண்காணிப்பார். அதைப்போல அரசு சந்தையைக் கண்காணிக்க வேண்டும். சந்தையின் நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது.

எதிர்மறைத் தாராளவாதம் இயற்கை உரிமைகள் கோட்பாட்டை ஆதரிக்கின்றது. இயற்கை அன்னை மனிதனை படைத்து அவனது முன்னேற்றத்திற்காக உரிமைகளை வழங்கியுள்ளது. இந்த இயற்கை உரிமைகளை பறிக்கும் அதிகாரம் அரசுக்கு இல்லை.

மூன்று இயற்கை உரிமைகள் மனிதனுக்கு இன்றியமையாதவை ஆகும்.

1) வாழ்க்கை உரிமை
2) சுதந்திர உரிமை
3) சொத்துரிமை

இவைகள் மனிதனுக்கு அவசியமானவைகள் ஆகும். சொத்துரிமை எதிர்மறை தாராளவாதத்தின் மிக முக்கிய உரிமை ஆகும். சொத்துக்களை வாங்கவும், விற்கவும், அனுபவிக்கவும் மனிதனுக்கு உள்ள உரிமையை அரசு கட்டுப்படுத்தக் கூடாது.

ஆ) நேர்மறைத் தாராளவாதம்

20-ஆம் நூற்றாண்டில் எதிர்மறைத் தாராளவாதம், நேர்மறைத் தாராளவாதமாக மாற்றப்பட்டது. எதிர்மறைத் தாராளவாதம் மேற்கத்திய நாடுகளின் வளத்தைப் பெருக்கியது. ஆனால் சாதாரண மக்களுக்கு கடுமையான துன்பங்களை அளித்தது. மக்களிடையே விரும்பத்தகாத ஏற்றத் தாழ்வுகள், நகரங்களில் பெருகி ஆரோக்கியமற்ற குடிசைப் பகுதிகள், தொழிலாளர்களைச் சுரண்டுவது போன்ற துன்பங்கள் மக்களை வாட்டியது. ஜான் ரஸ்கின் போன்ற மனித நேய சிந்தனையாளர்கள் எதிர்மறைத் தாராளவாதத்தை விமர்சித்தனர்.

www.tnschoolbooks.in

இரண்டு காரணிகளால் தாராளவாதம், நேர்மறைத் தாராளவாதமாக மாறியது. அவைகள் 1) மக்களாட்சி 2) மார்க்சியம் ஆகும். 19–ஆம் நூற்றாண்டில் மக்களாட்சி மேற்கத்திய நாடுகளில் பரவியது. மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. மக்கள் எதிர்மறைத் தாராளவாத கொள்கையை மாற்ற வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தார்கள். மேலும் புரட்சிகர சிந்தனையாளர் காரல் மார்க்ஸ் தனது பொதுவுடைமைவாதம் பற்றிய சிந்தனையை எடுத்துரைத்தார். மார்க்சியமும் மக்களாட்சியும் கொடுத்த அழுத்தத்தால் எதிர்மறைத் தாராளவாதகொள்கைநேர்மறைத்தாராளவாதக் கொள்கையாக மாறியது.

உலகபொருளாதாரமந்தநிலைமேற்கத்திய நாடுகளை 1928–முதல் பாதித்தது. அமெரிக்காவின் அதிபரான பிராங்கிளின் ரூஸ்வெல்ட் பொருளாதார மந்த நிலையில் இருந்து அமெரிக்காவை மீட்டெடுப்பதற்காக "New Deal" என்று அழைக்கப்படும் புதிய ஒப்பந்தத்தை அமல்படுத்தினார். அவருடைய பொருளாதார ஆலோசகரான ஜே.எம்.கீன்ஸ் நேர்மறைத் தாராளவாதத்தை அமல்படுத்த ஆலோசனை வழங்கினார். டி.எச்.கிரின், ஹரால்டு லாஸ்கி, எல்.டி.ஹார்டு ஹவுஸ் ஆகியோரும் நேர்மறைத் தாராளவாத கொள்கையை ஆதரித்தனர்.



"நான் உங்களுக்கு உறுதி மொழியளிக்கிறேன், எனக்கும் உறுதி மொழியளிக்கிறேன், அமெரிக்க மக்களின் புதிய ஒப்பந்தத்தின் பேரில்".

– பிராங்கிளின் ரூஸ்வெல்ட்

நேர்மறைத் தாராளவாத கொள்கை சமூக நலஅரசு என்ற புதிய சிந்தனையை உருவாக்கியது. அரசானது மக்களின் நலனுக்கான ஒரு கருவி ஆகும். மக்களுக்கு சேவை ஆற்றுவதே அரசின் முக்கிய பணி ஆகும். கல்விக் கூடங்கள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள் அடிப்படைக் கூட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை உருவாக்குவது அரசின் முக்கிய கடமையாகும். அரசு என்பது சமூக மக்களாட்சி அரசு ஆகும். நேர்மறை தாராளவாதம், சமூக நலனுக்கும் மக்களாட்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

பிராங்கிளின் ரூஸ்வெல்ட் மிக நீண்ட காலங்கள் அமெரிக்காவின் அதிபராக இருந்தவர். அமெரிக்காவின் முன்னேற்றத்திற்கு அருமையாக பணியாற்றினார். பொருளாதார மந்த நிலையில் இருந்து தனது புதிய ஒப்பந்த திட்டத்தின் மூலம் அமெரிக்காவை மீட்டெடுத்தார். கோடிக்கணக்கான மக்கள் இன்றைக்கும் அவரால் ஊக்குவிக்கப்படுகின்றனர். அவர் போலியோ நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டவர் ஆவார். அமெரிக்காவின் அதிபர் தேர்தலில் 1932–ஆம் ஆண்டு போட்டியிட்டுவெற்றிபெற்றார். மக்களிடையே வாக்குகளை சேகரிப்பதற்காகஅவர் உணர்ச்சிகரமாக பேசினார். சக்கர நாற்காலியில் வரும் நான் மீண்டும் அமெரிக்காவை முன்னேற்றம் என்னும் சக்கரத்தில் அமர்த்துவேன் என்று கூறினார். வாழ்க்கையில் இன்னல்களை சமாளித்து வெற்றிச் சிகரங்களை தொடுவது எப்படி என்பதற்கு இலக்கணமாக ரூஸ்வெல்ட் இன்றைக்கும் விளங்குகிறார்.

அரசின் பணிகள்

நேர்மறைத் தாராளவாதம்

- கல்வி
- உடல்நலம்
- தொழிற்சாலை
- போக்குவரத்து
- நியாய விலைக்கடை

மக்களின் உரிமைகளை சமூக நலத்திற்காக அரசு கட்டுப்படுத்தலாம். மக்கள் நலஉரிமைக் கோட்பாட்டை நேர்மறைத் தாராளவாதம் ஆதரிக்கின்றது. உரிமைகள் இருந்தால் கடமைகளும் இருக்கும். விடுதலை என்பது நேர்மறையானது ஆகும். எதிர்மறைத் தாராளவாதம் அரசிடம் இருந்து மனிதனுக்கு விடுதலை கோரியது. நேர்மறைத் தாராளவாதம் அரசின் மூலமாக மனிதனுக்கு விடுதலை கோருகிறது. அரசின் மக்கள் நல நடவடிக்கைகள் தான் மனிதனுக்கு விடுதலையைக் கொடுக்கும்.

அரசு பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும். மக்களை எதிர்பாராத பொருளாதார ஏற்றம் மற்றும் மந்த நிலைகளில் இருந்து அரசு காப்பாற்ற வேண்டும். மக்கள் நல திட்டங்களுக்காக முற்போக்கான வரி விதிப்பை மேற்கொள்ளலாம். வங்கிகளை தேசியமயமாக்குதல், தொழில்களை பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஒதுக்குதல் மற்றும் குறைந்தபட்ச ஊதியம் ஆகிய நடவடிக்கைகள் மூலம் மக்கள் நலஅரசு கொண்டு வரலாம்.

நேர்மறைத் தாராளவாதம் 1930-களில் இருந்து மேற்கத்திய மக்களாட்சி நாடுகளில் பின்பற்றப்பட்டது. ஆனால் மெல்ல மெல்ல தத்துவ ஞானிகளும், அரசியல் தலைவர்களும் நேர்மறைத் தாராளவாதத்தை விமர்சிக்க ஆரம்பித்தனர். பொருளாதாரத்தில் அரசு தலையிடுவதால் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன என குற்றம் சாட்டப்பட்டது. பொருளாதாரத் திறமையின்மை, குறைந்து போன உற்பத்தி திறன், ஊழல், பொருளாதார மந்த நிலை, பறிபோன மக்கள் உரிமைகள் போன்ற தீமைகளுக்காக நேர்மறைத் தாராளவாதம் விமர்சிக்கப்பட்டது.

இ) சமகாலத் தாராளவாதம் (புதியத் தாராளவாதம்)

தற்போதைய தாராளவாதம் சமகாலத்திய தாராளவாதம் என்று அழைக்கப்படுகிறது மேற்கத்திய நாடுகளில் 1970-இல் தொடங்கி உலகம் முழுவதும் தற்போது பரவி வருகிறது. அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்த ரொனால்டு ரீகன் அந்நாட்டில் சமகாலத்திய தாராளவாதத்தைக் கொண்டு வந்தார்.

சமூகம் என்று ஒன்று கிடையாது. தனி ஆண்கள், பெண்கள் மற்றும் குடும்பங்கள் மட்டுமே உள்ளன.

– மார்கரெட் தாட்சர்

பல அரசியல் அறிஞர்கள் சமகாலத் தாராளவாதத்தை ஆதரித்துள்ளனர். பிரெட்ரிக் ஹேயக். ஆல்பெர்ட் ஜே.நாக், மில்டன் ஃபிரிட்மென், எம்.ஒக்ஸாட், காரல் பாப்பர், நாஸிக் போன்றவர்கள் முக்கியமான ஆதரவாளர்கள் ஆவர்.

சம காலத்திய தாராளவாத கொள்கை, பழைய எதிர்மறைத் தாராளவாத கொள்கையை 20-ஆம் மற்றும் 21-ஆம் நூற்றாண்டுகளில் மீண்டும் அமல்படுத்துகிறது. தனிமனிதனின் முக்கியத்துவத்தையும் மதிப்பையும் இது ஆதரிக்கின்றது. தனிப்பட்ட சுயாட்சிக் கருத்து சமகாலத் தாராளவாதத்தின் முக்கிய சிந்தனை ஆகும். இதன்படி, ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையில் விரும்பியதை செய்யும் விடுதலை உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். அரசானது சட்ட ஒழுங்கை மட்டுமே பாராமரிக்க வேண்டும். நாசிக் என்ற சிந்தனையாளர் "குறைந்த அதிகார அரசு எழுச்சியுட்டுகிறது, சரியானதும் ஆகும்" என்று முழங்கினார். மற்றொரு சிந்தனையாளர் எம்.ஒக்ஸாட் "அரசாங்கம் அமைதியை மட்டுமே கண்காணிக்கிறது" என்று கூறினார்.

இந்த உலகில் மக்களை சமமாக பார்ப்பதற்கும், மக்களை சமமாக ஆக்குவதற்கும் மிக பெரிய வித்தியாசம் உள்ளது.

– பிரெட்ரிக் ஹேயக்

இங்கிலாந்தின் முதல் பெண் பிரதமரான மார்க்ரெட் தாட்சர், சமகால தாராளவாதத்தை ஆதரித்தார். சோவியத் ரஷ்யாவின் கடைசி

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 151 07/12/2022 17:09:30

அதிபரான மைக்கேல் கோர்பசேவ் மறுசீரமைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை (Glasnost) ஆகியவைகள் மூலம் சோவியத் ரஷ்யாவில் சமகால தாராளவாதத்தை அமல்படுத்தினார்.

மற்றொரு சிந்தனையாளர் எம்.ஒக்.ஸாட் "அரசாங்கம் அமைதியை மட்டுமே கவனிக்கிறது" என்று கூறினார்.

முன்னேற்றம், சமூக நலன் என்ற பெயரில் அரசின் அதிகாரங்கள் அதிகரித்தால் மனிதனின் தனி நபர் உரிமைகள் பறிபோகிவிடும் என்று சமகால தாராளவாதம் வாதிடுகின்றது.



ஆல்பெர்ட் ஜேநாக் தனது புத்தகத்திற்கு "அரசு, நமது எதிரி" என்று பெயர் சூட்டினார்.

உங்களுக்குத் தெரியுமா?

காரல் பாப்பர், பிளாட்டோவை வெளிப்படையான சமூகத்தின் முதல் எதிரி என்று 'Open Society and its Enemies' என்ற தனது நூலில் விமர்சித்தார்.



கொள்கையின் முடிவு

சில அரசியல் சிந்தனையாளர்களும், அரசியல் சமூகவியலாளர்களும் 1950-களில் கொள்கையின் முடிவு என்ற கருத்தை கொண்டு வந்தனர். டேனியல் பெல் "கொள்கையின் முடிவு", என்ற நூலை எழுதினார். அவரும், அரசியல் சமூகவியலாளரான மார்டின் லிப்செட்டும் இக்கருத்தை ஆதரித்தனர்.

சமூக நல அரசு அல்லது தாராள மக்களாட்சி அரசு தோன்றியதால் மனிதனின் அரசியல் பொருளாதார தேடுதல் முடிவுக்கு வந்துள்ளது. மனித வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்றால் மக்கள் நலஅரசு, அதிகார பரவல், கலப்புப் பொருளாதாரம் மற்றும் போட்டி அரசியல் கட்சிகள் அமைப்பு ஆகியவைகள் பின்பற்றப்பட வேண்டும். மேற்கத்திய நாடுகள் இந்த அருமையான சமூக அரசியல் தன்மைகளைப் பெற்றுள்ளன. ஆகவே, தாராளவாதத்திற்கும், பொதுவுடைமைக்குமான போட்டி முடிவு பெற்றது. மக்களாட்சி தான் உன்னதமான ஆட்சி முறை ஆகும். மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் நல்ல ஆட்சியை வழங்குவதற்கும் மக்களாட்சி பொருத்தமானது என்று பாராட்டுகிறார்கள்.

ஆனால் "புதிய இடது சாரிகள்" என்ற சிந்தனையாளர்கள் கொள்கை முடிவு கருத்தை நிராகரிக்கின்றனர். இவர்கள் பொதுவுடைமையில் சில மாற்றங்கள் செய்து அதனை அமல்படுத்த வேண்டும் என்று கூறுகிறார்கள். சீரமைக்கப்பட்ட பொதுவுடைமைவாதம் தாராள மக்களாட்சியை விட சிறப்பானது என்று இவர்கள் கூறுகிறார்கள்.

மேலும் சில சிந்தனையாளர்கள், கொள்கையின் முடிவை விட தாராளவாதத்தின் பொருள் வேட்கையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று கூறுகிறார்கள்.

வரலாற்றின் முடிவு

அமெரிக்கா அரசியல் சிந்தனையாளர் பிரான்சிஸ் புக்கியோமோ "வரலாற்றின் முடிவும் கடைசி மனிதனும்" என்ற நூலை எழுதினார். பனிப்போர் முடிவடைந்ததால் வரலாறே முடிவடைந்தது என்று அவர் கூறினார். மனிதனின் வரலாறே சரியான அரசியல் சமூக பொருளாதார முறையை பெறுவதற்கான மனிதனின் தேடுதல் ஆகும். பனிப்போருக்கு பின் தாராளவாதம் பொதுவுடைமையை வெற்றி கண்டுள்ளது. தாராள அரசும், பொருளாதாரமும் உருவான பின் மனிதனின் வரலாற்றுத் தேடுதல் முடிவுக்கு வருகின்றது என்று புக்கியோமா கூறினார்.

வரலாற்றின் முடிவு என்ற கருத்தை பல அறிஞர்கள் ஏற்கவில்லை. டெரிடா என்ற அறிஞர் தாராள மக்களாட்சி உன்னதமானது என்ற கருத்தை மறுக்கிறார். வன்முறை, ஏற்றத்தாழ்வு, ஒதுக்குதல், பஞ்சம் மற்றும் பொருளாதார ஒடுக்குமுறை தாராள மக்களாட்சி விட வேறு எந்த அமைப்பிலும் மனித இனம் காணவில்லை என்று கூறினார்.

நாகரிகங்களின் மோதல்

அமெரிக்க அரசியல் அறிஞரான சாமுவேல் ஹண்டிங்டன் நாகரிகங்களின் மோதல் என்ற கோட்பாட்டை வரலாற்றின் முடிவு என்ற கருத்துக்கு எதிராக கொண்டு வந்தார். பனிப்போர் முடிவடைந்ததால் எல்லா போர்களும் முடிவடைந்தன என்று கூற முடியாது. தற்போது உலகத்தில் ஒரு புதிய போர் அல்லது மோதல் தோன்றியுள்ளது. உலகின் மிக பெரிய நாகரிகங்களான மேற்கத்திய நாகரிகமும், இஸ்லாமிய நாகரிகமும் தற்பொழுது மோதுகின்றன. இந்த நாகரிகப் போரில் இதர உலக நாகரிகங்களும் வருங்காலத்தில் பங்கேற்கும். நாகரிகப் போர் வருங்கால வரலாற்றைத் தீர்மானிக்கும் என்று அவர் கூறினார்.

இந்தியாவும் புதியத் தாராளவாதமும்

நமது நாட்டில் 1991–ஆம் ஆண்டு புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. தனியார்மயமாதல், தாராளமயமாதல் மற்றும் உலகமயமாதல் முக்கியத்துவம் பெற்றுள்ளன. பொருளாதார சமூக நடவடிக்கைகளில் இருந்து அரசு தற்போது பின்வாங்கியுள்ளது. "குறைவான அரசாங்கம் சிறந்த ஆட்சி" என்ற முழக்கம் இந்திய அரசை வழிநடத்தி வருகிறது. புதிய தாராளவாதத்தால் ஐந்தாண்டுத் திட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் திட்டக் கொள்கைக்கு பதிலாக குறியீட்டு திட்டமிடல் கொண்டு வரப்பட்டது. தற்பொழுது திட்டக்குழு கலைக்கப்பட்டு நிதி ஆயோக் (National Institution for Transforming India, NITI Aayog) உருவாக்கப்பட்டுள்ளது.

8.2 பொதுவுடைமைவாதம் (Communism)

விளாடிமர் லெனின்

புரட்சிகர சிந்தனையாளராகிய லெனின், 1917ஆம் ஆண்டு ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியை நடத்தினார். இது பொதுவுடைமைவாத புரட்சி ஆகும். லெனின் USSR என்ற 15 குடியரசுகளைக் கொண்ட சோவியத் சோசியலிஸ்ட் குடியரசுகள் யூனியன் ("Union of Soviet Socialist Republics") என்ற நாட்டையும் உருவாக்கினார்.

பொதுவுடைமைவாத கட்சி

பொதுவுடைமைவாத கட்சிக் கோட்பாட்டை லெனின் உருவாக்கினார். "செய்ய வேண்டியது என்ன?" (What is to be done?) என்ற தனது நூலில் பொதுவுடைமைவாதக் கட்சியைப் பற்றி விளக்கினார். பொதுவுடைமைவாதக் கட்சி பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கருவியாக செயல்படும்.

கட்சியின் கிளைகள் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் உருவாக வேண்டும். கட்சியின் உறுப்பினர்கள் புரட்சிகர

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 153 07/12/2022 17:09:31

உங்களுக்குத் தெரியுமா?

விளாடிமர் லெனின் 1924–ஆம் ஆண்டு இயற்கைஎய்தினார். அவருடைய உடல் இரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் இன்றுவரை பதனிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. அவருடைய பூத உடல் இரசாயனப் பொருள்கள் மூலமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில், உடல் பாதுகாப்புக்கான செலவை அரசே ஏற்றுக்கொண்டது. 1991–ஆம் ஆண்டு லெனின் உருவாக்கிய நாடான USSR உடைந்த பிறகு பொதுமக்களின் நன்கொடையால் உடல் பாதுகாக்கப் படுகிறது. அவருடைய பூத உடலை, அவருடைய அன்னையின் கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்யவேண்டும் என்று சிலர் கோருகின்றனர்.

மார்க்சியத்தைப் புரிந்திருக்க வேண்டும். உறுப்பினர்கள் கடமை, தியாகம், கட்டுப்பாடு, கடின உழைப்பு ஆகிய குணங்களைப் பெற்றிருக்க வேண்டும். பொதுவுடைமைவாதப் புரட்சிக்காக மக்களைத் தயார்படுத்த வேண்டும். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முன்னணியில் பொதுவுடைமைவாதக் கட்சி செயல்படும்.

அமைப்பு ரீதியாக ஒரு புதிய கோட்பாட்டை பொதுவுடைமைவாத கட்சிக்கு லெனின் வழங்குகிறார். இதற்கு மக்களாட்சி மத்தியத்துவம் என்பது பெயராகும். பொதுவுடைமைவாத கட்சிக்கு இரண்டு அமைப்பு கோட்பாடுகள் உள்ளன. ஒன்று, மக்களாட்சி, இரண்டாவது மத்தியில் அதிகார குவிப்பு. பொதுவுடைமைவாத கட்சியின் கீழ்நிலையில் உள்ள கிளைகள் தங்களுக்கு மேல் நிலையில் உள்ள கட்சிக் கிளைகளை மக்களாட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்க வேண்டும். கிராமப்புற கிளைகள் பொதுவுடைமைவாத கட்சியின் மாவட்டக் கிளையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டக் கிளைகள் மாநிலக் கிளையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பொதுவுடைமைவாத கட்சியின் மாநில கிளைகள் மத்தியக் கிளையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மத்தியக் கிளை பாலிட்பியுரோவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பாலிட்பியுரோட் பொது செயலாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதுவே மக்களாட்சி கோட்பாடாகும்.

அதிகார குவியல் அதாவது அதிகார மத்தியத்துவம் பொதுவுடைமைவாத கட்சியில் காணப்படுகிறது. மேல்நிலையில் உள்ள கட்சி கிளைகள் சொல்வதை கீழ்நிலையில் உள்ள கட்சி கிளைகள் கண்டிப்பாக கேட்க வேண்டும். கட்சியின் மத்திய கிளையின் முடிவுகளை மாநிலக் கிளைகள் கேட்க வேண்டும். மாநிலக் கிளையின் முடிவுகளை மாவட்டக் கிளைகள் கேட்க வேண்டும். மாவட்டக் கிளையின் முடிவுகளை கிராமக் கிளைகள் கேட்க வேண்டும். இதுதான் மத்தியத்துவம் அல்லது அதிகாரக் குவியல் கோட்பாடு ஆகும். லெனின், மக்களாட்சி மத்தியத்துவக் கோட்பாட்டின்படி, பொதுவுடைமைவாத கட்சியில் கீழ் கிளைகளில் இருந்து மேல் கிளைகளுக்கு மக்களாட்சியும், மேல் கிளைகளில் இருந்து கீழ் கிளைகளுக்கு அதிகாரக் குவியலும் அமைப்பு ரீதியாக காணப்படுகிறது.

மக்களாட்சி மத்தியத்துவம்

ஏகாதிபத்தியம்

ஐரோப்பிய நாடுகள், ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை இராணுவ பலம் மூலம் அடிமையாக்கி சுரண்டிய முறையே ஏகாதிபத்தியம் ஆகும். லெனின், "ஏகாதிபத்தியம்; "முதலாளித்துவத்தின்

உச்சக்கட்டம்" (Imperialism: The Highest Stage of Captalism) என்ற தனது நூலில் ஏகாதிபத்தியத்திற்கும்,முதலாளித்துவத்திற்கும் உள்ள தொடர்பை விவரிக்கின்றார். முதலாளித்துவம் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் என்று காரல் மார்க்ஸ் கூறியுள்ளார். ஆனால் அது நடக்கவில்லை. அதற்கு காரணம் ஏகாதிபத்தியம் ஆகும்.

ஏகாதிபத்தியத்தின் மூலமாக ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை அடிமைப்படுத்தி அவைகளின் செல்வங்களைக் கொள்ளை அடித்து தங்கள் நாடுகளுக்கு முதலாளித்துவம் எடுத்துச் சென்றது. கொள்ளையடித்ததில் ஒரு பகுதியை தங்கள் நாட்டின் தொழிலாளிகளுக்கு முதலாளித்துவம் வழங்கியது. இவ்வாறு தான் முதலாளித்துவம் தன்னைக் காப்பாற்றிக் கொண்டது. உலகில் இரண்டு வகை புரட்சிகள் நடைபெற வேண்டும். முதலாவதாக ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் ஏகாதிபத்திய மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக புரட்சி செய்ய வேண்டும். இரண்டாவதாக மேற்கத்திய நாடுகளில் உள்ள தொழிலாளிகள் முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராக புரட்சி செய்ய வேண்டும். இந்த இரண்டு புரட்சிகள் மூலமாக ஏகாதிபத்தியமும், முதலாளித்துவமும் அழிக்கப்படும். சமத்துவம், சகோதரத்துவம் அடிப்படையில் சர்வதேச அளவிலும் மேலை நாடுகளிலும் பொதுவுடைமைவாத சமுதாயம் மலரும் என்று லெனின் கூறினார்.

ஜோசப் ஸ்டாலின்

லெனினுடைய காலத்திற்கு பின் 1953 வரை சோவியத் ரஷ்யாவின் தலைவராகவும் பொதுவுடைமைவாத கட்சியின் பொது செயலாளராகவும் ஜோசப் ஸ்டாலின் இருந்தார். "ஒரு நாட்டில் சமதர்மவாதம்" என்ற புதிய கருத்தை மார்க்சியத்தில் உருவாக்கினார். பொதுவுடைமைவாத கோட்பாட்டாளரான நிகோலை புக்காரின் இக்கருத்தை முதலில் தோற்றுவித்தார்.

மார்க்சியம் தேசியவாதத்தை நிராகரித்தது, சர்வதேசவாதத்தை ஆதரித்தது. காரல் மார்க்ஸ் தேசியவாதத்தை முதலாளிகளின் கருத்து என்று விவரித்தார். பாட்டாளி வர்க்கப் புரட்சி மூலமாக உலக சமுதாயத்தை உருவாக்குவது காரல் மார்க்சின் அடிப்படை நோக்கமாகும். "தொழிலாளிகளுக்கு சொந்த நாடு இல்லை" என்று கூறினார். லெனின் அவர்களும் இக்கருத்தை ஆதரித்தார். ரஷ்யாவின் 1917-ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சி உலகப் புரட்சிக்கு வழிவகுக்கும் என்று லெனின் கூறினார்.

ஆனால் ஒரு நாட்டில் சமதர்மவாதம் என்ற கருத்தின் மூலம் ஸ்டாலின் பெரிய மாற்றுக் கருத்தை முன் வைக்கின்றார். "ஐரோப்பிய ஐக்கிய நாடுகளுக்கான முழக்கம்" என்ற உரையின் மூலம் லெனினே இக்கருத்தை வலியுறுத்தினார் என்று ஸ்டாலின் கூறினார். ரஷ்யாவில் மட்டுமே சமதர்மவாதம் இருந்தால் தற்பொழுது போதும், உலக நாடுகளுக்கு சமதர்ம புரட்சியை ஏற்றுமதி செய்யத் தேவையில்லை என்பது தான் இக்கோட்பாட்டின் அடிப்படை கருத்தாகும். சோவியத் ரஷ்யாவின் பொதுவுடைமைவாதம் முதலாளித்துவ எதிரிகளால் சூழப்பட்டு இருக்கிறது. சோவியத் ரஷ்யாவின் பொதுவுடைமைவாதத்தை தற்பொழுது காப்பாற்றுவது தான் முக்கிய கடமையாகும் என்று ஸ்டாலின் கூறினார். சோவியத் ரஷ்யாவும் சர்வதேச பொதுவுடைமைவாத நிறுவனமும் ஸ்டாலினின் கொள்கையை ஏற்றுக்கொண்டன.

லியோன் ட்ராட்ஸ்கி ஸ்டாலினின் சமதர்மத்தை நிராகரித்தார். நிரந்தர உலகப் புரட்சி, காரல் மார்க்ஸ் கூறியதை போல வேண்டும் என்றார். சோவியத் ரஷ்யா தனது பொதுவுடைமைவாதத்தை உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அந்த நாட்டிலேயே பொதுவுடைமைவாதம் மறைந்து விடும் என்று ட்ராட்ஸ்கி எச்சரித்தார்.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 155 07/12/2022 17:09:31

மாவோ

பொதுவுடைமைவாதத்தின் மிகப்பெரிய கொள்கைவாதிகளில் ஒருவராக மாவோ உள்ளார். அவர் சீன பொதுவுடைமைவாதக் கட்சியைத் தோற்றுவித்து 1949-ஆம் ஆண்டு பொதுவுடைமைவாத புரட்சியை நிகழ்த்தினார்.



பொதுவுடைமைவாதம் சீனமயமாதல்

பொதுவுடைமைவாத கொள்கையில் சீனாவின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சில மாறுதல்களை மாவோ கொண்டு வந்தார். இதற்கு பொதுவுடைமைவாத சீனமயமாதல் என்பது பெயராகும்.

விவசாயிகள் தலைமையில் புரட்சி

காரல் மார்க்ஸ் தொழிற்சாலைகள் நிறைந்த, தொழிலாளர்கள் நிறைந்த, மேற்கு ஐரோப்பிய நாடுகளில்தான் பொதுவுடைமைப் புரட்சிக்கு சாத்தியம் இருந்ததாகக் கூறினார். புரட்சியை தொழிலாளர்கள்தான் நடத்துவார்கள் என நம்பினார். ஆனால் 1940-களில் சீனா ஒரு பின்தங்கிய விவசாய நாடு ஆகும்.தொழிற்சாலைகளோ,தொழிலாளிகளோ அதிகம் இல்லை. மாவோ விவசாயிகளை ஒருங்கிணைத்து வெற்றிகரமாக பொதுவுடைமைவாதப் புரட்சியை நடத்தினார். சீனாவில் மாவோவின் வெற்றி விவசாய நாடுகளான ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளுக்கு ஊக்கத்தை வழங்கியது.

மக்கள் முன்னணி

லெனின், பொதுவுடைமைவாத கட்சியின் முன்னணியில் தொழிலாளர்கள் இருக்க வேண்டும் என்றார். மாவோ புரட்சியின் முன்னணியில் மக்கள் இருக்க வேண்டும் என்று கூறினார். பொதுவுடைமைவாத கட்சியின் கொள்கையிலும், போராட்டத்திலும் மக்கள் முக்கிய அங்கமாக இருப்பார்கள். "மக்களிடம் இருந்து மக்களுக்காக" என்பது மாவோவின் பொதுவுடைமைவாத கட்சியின் வழிகாட்டுக் கோட்பாடாக இருந்தது.

மக்கள் போர், கொரில்லா போர்

சுரண்டலுக்கு எதிரான பொதுவுடைமைப் புரட்சியில், மக்களுக்கு முக்கியத்துவத்தை மாவோ வலியுறுத்துகிறார். பல கோடிகணக்கான மக்களை நேரடியாக போரில் ஈடுபடுத்த மாவோ வாதிட்டார். ஏகாதிபத்தியமும், நிலப்பிரபுக்கள் முறையும் மக்களின் எதிரிகள் என்று கூறினார். கிராமப்புற விவசாயிகளை ஒருங்கிணைத்து நகரங்களை கைப்பற்ற வேண்டும் என்பது மாவோவின் உத்தி ஆகும்.

மாவோ கொரில்லா போர் முறையைப் பின்பற்றினார். இந்த உத்தியில் மூன்று கட்டங்கள் உள்ளன. முதல் நிலையில், பொதுவுடைமைவாத தொண்டர்கள் பிரச்சாரம் மூலம் மக்களை கவர்வார்கள். இரண்டாம் நிலையில், பொதுவுடைமைவாத கட்சியினர் இராணுவ மற்றும் அரசாங்க நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்துவார்கள். மூன்றாம் கட்டத்தில், ஒரு வழக்கமான இராணுவமாக மாறி பொதுவுடைமைவாத கட்சி கிராமங்களையும், நகரங்களையும்வெற்றி கொள்ளும்.தேவைக்குத் தகுந்தவாறு இந்த மூன்று நிலைகளை பொதுவுடைமைவாத கட்சி பின்பற்றலாம்.

நூறு மலர்கள் மலரட்டும்

1950-களில் நூறு மலர்கள் மலரட்டும் இயக்கம் சீனாவில் நடைபெற்றது. "நூறு மலர்கள் மலரட்டும், நூறு வகையான சிந்தனைகள் போட்டியிடட்டும்" என்று மாவோ கூறினார்.

கருத்துச்சுதந்திரம் மக்களுக்கு வழங்கப்பட்டது. நல்ல புதிய கருத்துகள், பழைய, தேவையற்ற கருத்துக்களைத் தோற்கடிக்கும் என மாவோ கூறினார். தொடக்கத்தில் பொதுவுடைமைவாத அரசாங்கம் இந்த இயக்கத்தை நடத்தியது. பின்னர், பொதுவுடைமைவாத கட்சிக்கு எதிராக கருத்துக்கள் தோன்றியதால் இந்த இயக்கம் கைவிடப்பட்டது.

நூறு மலர்கள் மலரட்டும்

பொருள் எல்லோருக்கும் சிந்திக்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். 1956–ஆம் ஆண்டு மாவோ இதனை அமல்படுத்தினார். சீன மக்களின் ஆலோசனை, கருத்துக்கள் பொதுவுடைமை கட்சிக்கு வேண்டும் என்று அவர் கூறினார்.

பண்டைய கால சீன சிந்தனையாளர் கன்ஃபுசியஸ் தனது கவிதையில் இந்த வாசகத்தை தோற்றுவித்தார்

கலாச்சாரப் புரட்சி

உங்களுக்குத் தெரியுமா?

கலாச்சாரப் புரட்சி

1960 களில் மாவோ தனது அதிகாரத்தை பலப்படுத்துவதற்காக புதிய புரட்சிகர இயக்கத்தைத் தொடங்கினார். மாணவர்கள், விவசாயிகள், இராணுவ வீரர்கள் ஆகியோரைக் கொண்டு சிவப்பு காவலர்களை உருவாக்கினார்.

மாவோ பாட்டாளி வர்க்க கலாச்சார புரட்சியை 1965–66ஆம் ஆண்டு அமல்படுத்தினார். பழைய கருத்துக்கள், பழைய பழக்கங்கள், பழைய கலாச்சாரம், பழைய வழக்கங்கள் ஆகிய "நான்கு 'பழையவைகள்' நீக்கத்திற்காக இப்புரட்சியைக் கொண்டு வந்தார். பொதுவுடைமைவாத கட்சி அரசாங்கம், இராணுவம், கலாச்சாரத்தில் தேவையில்லா கருத்துகள் புகுந்துவிட்டன. அவைகளை அகற்றி பொதுவுடைமையைக் காக்க வேண்டும் என்பதுதான் நோக்கமாகும். தொழில்மயம் ஆக்குவதையும், நிலம் மற்றும் தொழில் கூட்டுவாதத்தையும் அமல் படுத்தி விரைவாக சீனாவை சமதர்ம அமைப்பாக மாற்ற மாவோ முயற்சித்தார். ஆனால் துரதிஷ்டவசமாக அவரது நடவடிக்கைகள் கொடிய பஞ்சத்தைக் கொண்டுவந்தது. பொதுவுடைமைவாத அரசைக் காப்பாற்ற, பொதுவுடைமையின் எதிரிகளை வீழ்த்துவதற்கு சிவப்பு காவலர்கள் உருவாக்கப்பட்டனர்.

புதிய மக்கள் ஆட்சி

மாவோ புதிய மக்களாட்சி என்ற கொள்கையைக் கொண்டு வந்தார். அரசு ஏழைகளைச் சுரண்டும் பணக்காரர்களின் ஆயுதம் என்ற மார்க்ஸிய கருத்தை மாவோ சிறிது மாற்றியமைத்தார். விவசாயிகள், தொழிலாளிகள், சிறிய முதலாளிகள், தேசிய முதலாளிகள் என்ற நான்கு வர்க்கங்களுக்காக புதிய மக்களாட்சியை உருவாக்கினார். புதிய மக்களாட்சிக்கு மக்கள் மக்களாட்சி சர்வாதிகாரம் என்ற பெயரையும் அவர் சூட்டினார், இம்முறையில் தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சிறிய முதலாளிகளும், பெரிய முதலாளிகளும் அரசின் இளைய பங்குதாரர்களாகக் கருதப்பட்டனர். இந்த நான்கு வகை வர்க்கங்களுக்கும் அரசு மக்களாட்சியாக செயல்பட்டது. மற்ற வர்க்கங்கள் அரசின் எதிரிகளாகக் கருதப்பட்டனர். அவர்களை 'ஏகாதிபத்தியத்தை இயக்கும் நாய்கள்' என்று மாவோ கடுமையாக வர்ணித்தார்.

'பூனை கருப்பா, சிவப்பா என்பது முக்கியமல்ல, அது எலியை பிடித்தால் போதும்'.
– டெங் ஜியாபெங்

இருபத்தியோராவது நூற்றாண்டில் கூட மாவோயிசம் பல மாற்றங்களுடன் சீனாவில் பின்பற்றப்படுகிறது. சீனாவின் தேசிய தலைவரான டெங் ஜியாபெங் 1978 ஆம் ஆண்டிற்கு பிறகு சீனப் பொருளாதாரத்தில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவந்தார். தாராளமயமாதல் சீனப்பொருளாதாரத்தில் முன்னுக்கு கொண்டுவரப்பட்டது.

இருந்தபோதிலும் அரசியலில் சீனப் பொதுவுடைமைவாதக் கட்சி எல்லையற்ற ஆதிக்கத்தைத் தொடர்ந்து பெற்றிருக்கிறது.

ஆண்டனியோ கிராம்சி

இத்தாலிய மார்க்சியவாதியான கிராம்சி மேலாதிக்கம் என்ற புதுக்கருத்து மூலம் முதலாளித்துவ அரசின் செயல்பாடுகளை விவரித்தார். மேலாதிக்கம் என்றால் அறிவுசார், தார்மீக தலைமை என்பது பொருளாகும். அரசு மக்களுடைய ஆதரவை தனக்குச் சாதகமாக அறிவுசார் தார்மீக தலைமையின் மூலம் உருவாக்குகின்றது. பிரச்சாரத்தின் மூலம் தனக்கு ஆதரவாகப் பொய் எழுச்சி மற்றும் விழிப்புணர்வை உருவாக்குகிறது.

அரசின் எண்ணங்கள், நோக்கங்கள் மக்களின் மனதில் திரும்பத்திரும்ப பதியப்படுகின்றன. மக்களின் மனதை மயக்க முடியாத போதுதான வன்முறையை அரசு பயன்படுத்துகிறது. முதலாளித்துவ அரசை வீழ்த்துவதற்கு உயிரோட்டமான அறிவு ஜீவிகளும் பொதுவுடைமைவாத கட்சியும் சேர்ந்து பணியாற்ற வேண்டும். அறிவு ஜீவிகள் அரசைப்பற்றி யோசித்து எவ்வாறு அதை தோற்கடிப்பது என்று கூறுவார்கள். பொதுவுடைமைவாத கட்சி அதன் பின் புரட்சியை நடத்தி பொதுவுடைமையை நிறுவும் என்று கிராம்ஸி கூறினார்.

எல்லா மனிதர்களும் அறிவு ஜீவிகளே ஆனால் சமூகத்தில் அறிவு ஜீவிகளின் பணியை எல்லோரும் செய்வது இல்லை.

–ஆண்டனியோ கிராம்ஸி

புது மார்க்சியம்

ஜெர்மனியில் உள்ள பிராங்பர்ட் சமூக ஆய்வு நிறுவனத்தின் தத்துவஞானிகள் புது மார்க்சியம் அல்லது விமர்சனக் கோட்பாடு என்பதை உருவாக்கினர்.

இவர்கள் அனைவரும் ஆதிக்கத்தையும் சுரண்டலையும் எதிர்த்தவர்கள், ஆதிக்கத்தின் வேர்களை புரிந்துகொள்ள முயற்சித்தவர்கள். புரட்சிகர மாற்றத்திற்காக மக்களின் உண்மை விழிப்புணர்வைத் தட்டியெழுப்பினார்கள். ஆதிக்கம் சார்ந்த சமூக கலாச்சாரத் தன்மைகளை எதிர்த்து கேள்வி கேட்க வேண்டும் என்று கூறினார்கள். இவர்களுடைய கருத்துகள் மக்களின் விடுதலைக்கான கருத்துகளாகவும், ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு கலாச்சாரமாகவும் இருந்தன.

செயல்பாடு

பொதுவுடைமையின் பல சிந்தனையாளர்களை தற்பொழுது மாணவர்கள் படித்துள்ளார்கள். காரல் மார்க்சின் அரசில்லா சமூகம் சாத்தியமானதா என்று விளக்கம் கூறவும்.

கருவி மார்க்சிசம்

ரால்ஃப் மிலிபன்ட், கருவி மாக்ஸிசம் எனும் கருத்தை வலியுறுத்தினார். அரசை இவர் கருவியாக பார்க்கிறார். பணக்காரர்களும் அரசாங்கத்தின் அதிகாரிகளும் ஒரே சமூக வர்க்கத்தில் இருந்து தோன்றுகிறார்கள். அரசு அதிகாரிகள் பணக்காரர்களின் சொந்தக்காரர்களாக உள்ளனர். இந்த தனிப்பட்ட உறவினால் அரசு பணக்காரர்களுக்கு சாதகமாக செயல்படுகிறது. பணக்காரர்கள் ஏழைகளை சுரண்டுவதற்கும் மேலாதிக்கம் செய்வதற்கும் அரசானது துணை போகிறது என்று ரால்ஃப் மிலிபன்ட் கூறினார்.

உங்களுக்குத் தெரியுமா?

கிராம்சி நவீன அரசியல் சிந்தனையாளர்களில் மிகுந்த சிந்திக்கும் திறன் கொண்ட ஒருவராவார். இத்தாலியின் பாசிச அரசாங்கம் அவரைச் சிறையில் அடைத்தது. 20 ஆண்டுகளுக்கு இவரது மூளையின் செயல்பாட்டை நிறுத்தி வைக்க வேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிட்டது. சிறையில் கையில் கிடைத்த காகிதத்தில் தனது கருத்துக்களை கிராம்சி எழுதினார். பின்னர் சிறையில் இருந்து அந்த குறிப்புகள் வெளி உலகத்திற்கு கடத்தி வரப்பட்டன. ஆகவே அவரது புத்தகத்திற்கு 'சிறைச் சாலை குறிப்பேடுகள்' (Prision Notebooks) எனப் பெயரிடப்பட்டது.

கட்டுமான மார்க்சிசம்

பிரான்சு நாட்டின் தத்துவ ஞானியான லூயிஸ் அல்துசர், நிகோஸ் போலன்ட்ஸ்சாஸ் கட்டுமான மார்க்சியம் என்ற கருத்தை 1970களில் வலியுறுத்தினர். இவர்கள் கருவி மார்க்சிய கருத்தை நிராகரித்தனர். அல்துசருக்கும். மிலிபேன்ட் அவருக்கும் இடையே நீண்ட விவாதம் நடந்தது. அதிகாரிகளுக்கும், பணக்காரர்களுக்கும் இடையிலான தனிப்பட்ட உறவு முக்கியம் இல்லை. அதிகாரிகளின் தனிப்பட்ட சமூக உறவுகள் அரசின் தன்மையை பாதிப்பது இல்லை. அரசு எப்பொழுதுமே பணக்காரர்களால், ஏழைகளை சுரண்டும் கருவியாக செயல்படும் என்று கட்டுமான மார்க்சிசம் கூறுகிறது.

லூயி அல்துசர்

மார்க்சியத்தின் அரசு கோட்பாட்டில் புதிய கருத்துகளை இவர் கொண்டு வந்தார். முதலாளித்துவ அரசு ஏழைகளை அடக்குவதற்கு 2 வகையான கருவிகளை பயன்படுத்துகிறது.

1. கொள்கை அரசு கருவிகள்
2. அடக்குமுறை அரசு கருவிகள்

கொள்கை அரசு கருவிகளில் குடும்பம், பள்ளிகள், கல்லூரிகள், ஊடகங்கள் போன்றவைகள் அடங்கும். அரசானது, கொள்கைகருவிகள் மூலமாகபிரச்சாரங்களைச் செய்து, மக்களின் மனதை மயக்கி தனது நலனுக்கு தகுந்தவாறு மாற்றுகிறது.

அடக்குமுறை அரசுக் கருவிகளில், காவல்துறை, இராணுவம் போன்றவைகள் அடங்கும். அரசானது, கொள்கை அரசு கருவிகளால் செயல்பட முடியாவிட்டால், அடக்குமுறை அரசு கருவிகளை பயன்படுத்தும். வன்முறை, மிரட்டல் போன்ற நடவடிக்கைகளை பயன்படுத்தி மக்களை அடக்கும் என்று அல்துசர் கூறினார்.

8.3 சமதர்மவாதம்

சமதர்மவாதம் செல்வங்கள் அனைத்தும் பொதுச் சொத்துக்களாக இருக்க வேண்டும். தனிச் சொத்து உரிமைக்குக் கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என்று கூறுகின்றது. தாராள வாதத்திற்கு எதிரான கோட்பாடு சமதர்ம கொள்கை ஆகும். பல வகையான சமதர்ம வாதங்கள் உள்ளன. மக்களாட்சி சமதர்ம வாதம், ஃபேபியன் சமதர்மவாதம், பரிணாம சமதர்மவாதம், கில்டு சமதர்மவாதம் என்பவைகள் முக்கியமானவைகள் ஆகும். பல நேரங்களில் சமதர்மவாதமும் பொதுவுடைமைவாதத்தையும் ஒரே பொருள் கொண்டவைகள் போல அழைக்கப்படுகின்றன. ஆனால் காரல் மார்க்ஸ் இரண்டையும் வேறுபடுத்தினார். தனது பொதுவுடைமையை அறிவியல் சமதர்மவாதம் என்றும் இதர சமதர்மவாதங்களைக் கற்பனை சமதர்மவாதம் என்றும் வர்ணித்தார்.

1. கற்பனை சமதர்மவாதம்

பல அரசியல் அறிஞர்கள் 19ம் நூற்றாண்டில் தாராளவாதத்தின் எதிர்மறை விளைவுகளைத் தாக்கி பேசினார். உழைக்கும் வர்க்கத்தின் நலன்களைக் காப்பாற்ற வேண்டும் என்றனர். இராபர்ட் ஓவன் என்பவர் மனித நேயம் உள்ள தொழில் அதிபர் ஆவார். அவர் கூட்டுறவு முறையில் தனது தொழிற்சாலைகளை நடத்தினார். தொழிலாளிகளை நன்கு கவனித்துக் கொண்டார். தொழிற்சாலைகளின் மேலாண்மையில் தொழிலாளிகளையும் சேர்த்துக் கொண்டார். தொழிலில் வரும் இலாபத்தில் தொழிலாளிகளுக்கும் பங்கு வழங்கினார். தூய சைமன் என்பவர் பிரான்சு நாட்டை சேர்ந்த தொழில் அதிபர் மற்றும் அறிஞர் ஆவார். திறமையான பொருளாதாரத்திற்கு தொழிலாளிகளின் நலன்களை முதலாளிகள் பாதுகாக்க வேண்டும் என்றார்.

சார்லஸ் ஃபுரியர் என்ற அறிஞர் தொழிலாளர்களின் அமைப்புகள் உருவாக வேண்டும் என்றார். அந்த அமைப்புகளுக்கு ஃபலான்ஜீஸ் (Phalanges) என்று பெயரிட்டார். இவர் முதலாளிகள் மனசாட்சியுடன், தொழிலாளர்களுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றார்.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 159 07/12/2022 17:09:32

காரல் மார்க்ஸ் இவர்களின் தொழிலாளர்களுக்கான கரிசனத்தை பாராட்டினார். ஆனால் இவர்களின் கருத்துக்கள் ஆழமற்றவை, அறிவியல் பூர்வமாக இல்லை என்று விமர்சித்தார். ஆகவே இவர்களின் சமதர்மவாதக் கருத்துக்களை கற்பனை சமதர்மவாதம் என்று பெயரிட்டார்.

2. மக்களாட்சி சமதர்மவாதம்

விடுதலையும் சமத்துவத்தையும் அடைவதற்கு மக்களாட்சியும் சமதர்மவாதமும் தேவை என்று மக்களாட்சி சமதர்மவாதம் வாதிடுகின்றது. இது தனது அரசு கோட்பாட்டில் பொதுவுடைமையில் இருந்து வேறுபடுகின்றது. அரசு சுரண்டலின் கருவி கிடையாது. அரசு மக்களின் நலன்க் காக்கும் கருவியாகும். அரசு முதலாளிகள் கைப்பாவை இல்லை. சமூக நலனை காக்கும் தன்மை அரசிடம் உள்ளது. அரசு மக்களாட்சி அடிப்படையில் இருக்க வேண்டும். சமூகத்தில் உள்ள எல்லா வர்க்கங்களுக்கும் பொதுவானது அரசு ஆகும்.

சமூக மாற்றங்கள் அமைதியான முறையில் மெல்ல மெல்ல வரவேண்டும். மக்களாட்சி சமதர்மவாதம் வாக்குப் பெட்டி சமதர்மவாதம் என்றும் அழைக்கப்படுகிறது. மக்கள் தங்களின் ஓட்டுகள் மூலம், தேர்தல் பாதை மூலம் மாற்றங்களைக் கொண்டு வரமுடியும். புரட்சியும் வன்முறையும் தேவையில்லை என்று மக்களாட்சி சமதர்மவாதம் கூறுகின்றது. தனி சொத்துக்களை முற்றிலும் அகற்ற வேண்டாம். சமூக நலனுக்காக தனி சொத்துரிமை மீது கட்டுப்பாடுகளை விதிக்கலாம். தனி சொத்துரிமையை அழிக்க வேண்டியது இல்லை என்று மக்களாட்சி சமதர்ம வாதம் கூறுகின்றது.

3. ஃபேபியன் சமதர்மவாதம்

இது இங்கிலாந்து நாட்டின் சமதர்ம வாதம் ஆகும். ஃபேபியன் குழுவால் 1884 முதல் இவ்வகை சமதர்மவாதம் ஆதரிக்கப்பட்டு வந்தது. பண்டையகால ரோமானிய ஜெனரல் 'ஃபேபியஸ்' பெயரால் இது அழைக்கப்படுகின்றது. 'காத்திரு, சரியான நேரத்தில் தீவிரமாக தாக்கு' என்பது ஃபேபியஸ் அவர்களின் இராணுவ உத்தியாகும்.

சிட்னி வெப், H.G.வெல்ஸ் உள்ளிட்டோர் ஃபேபியன் சமதர்மவாதத்தைக் கொண்டு வந்தனர். ஆங்கில எழுத்தாளர் பெர்னார்ட் ஷா ஃபேபியன் சமதர்மவாதத்தின் தலை சிறந்த அறிஞர் ஆவார். ஃபேபியன் சமதர்மவாதம் முதலாளித்துவத்தைக் கடுமையாக எதிர்த்தது. எதிர்மறை தாராளவாதத்தை விமர்சித்தது. அரசியலையும் பொருளாதாரத்தையும் மாற்றி அமைக்க வேண்டும் என்று கூறியது. மக்களாட்சி அரசை ஃபேபியன் சமதர்மவாதம் ஆதரித்தது. அரசிற்கு இரண்டு தன்மைகள் உள்ளன. ஒன்று அதனுடைய அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு இருக்க வேண்டும். இரண்டாவதாக நிபுணர்களிடம் அதிகாரம் இருக்க வேண்டும். அரசை நாம் அகற்ற வேண்டாம். அதனை இந்த இரண்டு தன்மைகள் அடிப்படையில் மாற்றினால் போதும் என்று ஃபேபியன் சமதர்மவாதம் கூறியது.



"புரட்சிகள் கொடுங்கோலாட்சியின் கொடுமையை குறைக்க வில்லை. இன்னொரு கொடுங்கோலனிடம் தான் ஆட்சியை ஒப்படைத்துள்ளன."

-ஜார்ஜ் பெர்னார்ட் ஷா

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஃபேபியன் சமதர்ம வாதத்தின் ஆதரவாளர் ஆவார்.

ஃபேபியன் சமதர்மவாதம் மக்களாட்சியும் சமதர்மமும் மிகவும் நெருங்கிய கோட்பாடுகள் ஆகும். இரண்டு கொள்கைகளும் நீதியையும் சமத்துவத்தையும் மிகவும் ஆதரித்தன. ஃபேபியன் சமதர்மவாதம் தனி சொத்துரிமையை அழிக்க வேண்டும் எனக் கூறவில்லை. சமூக நலனுக்காக தனி சொத்துரிமை மீது கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என்று கூறியது.

ஃபேபியன் சமதர்மவாதம் பொதுவுடைமைவாத கொள்கையின் புரட்சியை எதிர்த்தது. வன்முறை மாற்றம் தராது. அமைதியான முறையில் பேச்சு வார்த்தைகள் மூலம் மாற்றம் வர வேண்டும் என்று கூறியது.

4. பரிணாம சமதர்மவாதம்

ஜெர்மன் சமதர்ம மக்களாட்சி கட்சியின் தலைவரான இலசல் (Lassalle) பரிணாம சமதர்ம வாதத்தை ஆதரித்தார். ஜெர்மனியில் 1875-ஆம் ஆண்டு வந்த கோட்டா திட்டம் (Gothe Programme) பரிணாம சமதர்மவாதத்தை வளர்த்தது எட்வர்ட் பெர்ன்ஸ்டன் "பரிணாம சமதர்ம வாதம்"(Evolutionary Socialism) என்ற நூலை எழுதினார். இத்தாலியின் அன்சில், பிரான்சின் ஜாரஸ் என்று பல அறிஞர்கள் பரிணாம சமதர்மவாதத்தை ஆதரித்தனர்.

மாற்றங்கள் பரிணாமத்தின் மூலம் மெல்ல மெல்ல வரவேண்டும். வன்முறை மூலம் வரக்கூடாது. புரட்சி மூலம் மாற்றங்கள் வரவேண்டிய அவசியம் இல்லை என்று பரிணாம சமதர்மவாதம் கூறுகின்றது. மேலும் மனித வாழ்க்கையை பொருளாதார காரணிகள் மட்டும் தீர்மானிப்பது கிடையாது. இதர காரணிகளும் மனித வாழ்வை நிர்ணயிக்கின்றன. பரிணாம சமதர்மவாதமும் மக்களாட்சி சமதர்மவாதமும் நெருங்கிய தொடர்பு உடையவைகள் ஆகும். மார்க்சியம் பரிணாமசமதர்மவாதத்தைதரகர் கண்ணோட்ட சமதர்மவாதம் என்று விமர்சித்தது.

கில்டு சமதர்மவாதம்

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இங்கிலாந்தில் கில்டு சமதர்ம வாதம் தோன்றியது. தேசிய கில்டுகள் அமைப்பின் தலைவரான G.D.H. கோல் கில்டு சமதர்மவாதத்தை ஆதரித்தார். அவர் கில்டு சமதர்மவாதம்: பொருளாதார மீட்புக்கான திட்டம்₹₹ (Guild Socialism; A Plan for Economic Recovery) என்ற நூலை எழுதினார். தொழிலாளர்களை சுரண்டுவதால் முதாலாளித்துவத்தை விமர்சித்து கில்டு சமதர்மவாதம் தோன்றியது.

இடைக்கால வரலாற்றில் ஐரோப்பாவில் ஒரு குறிப்பிட்ட தொழிலில் உள்ள நிபுணர்கள் சேர்ந்து உருவாக்கிய சங்கம் தான் கில்டு ஆகும். அத்தொழிலில் உள்ளவர்கள் பரஸ்பர ஒத்துழைப்புடன் வாழ்வதற்கு கில்டுகள் உதவின. கில்டு சமதர்மவாதம் ஐரோப்பாவின் இடைக்கால கில்டுகளையும் நவீன தொழிற்சங்கங்களையும் இணைக்கின்றது. கில்டுகள் தான் ஆட்சி செய்ய வேண்டும். தொழிலில் ஈடுப்பட்டுள்ள நிபுணர்கள் தான் அதன் பிரதிநிதியாக செயல் பட வேண்டும். கில்டுகள் இணைந்து தல, மாவட்ட, மாநில, மத்திய ஆட்சி குழுக்களை உருவாக்கி நாட்டை நிர்வகிக்க வேண்டும். முக்கியமான அதிகாரங்கள் கில்டுகளிடமே இருக்க வேண்டும்.

கில்டு சமதர்மவாதம் அரசை அழிக்க வேண்டும் என்று கூறவில்லை. ஒரு சில பணிகளை மட்டுமே அரசு செய்யவேண்டும். கல்வி மற்றும் சுகாதாரப் பணிகளை மட்டுமே அரசு செய்யவேண்டும். மாற்றங்கள், புரட்சி மற்றும் வன்முறை மூலமாக வரக்கூடாது. அமைதியான மக்களாட்சி முறையில் மட்டுமே மாற்றம் வரவேண்டும் என்பது கில்டு சமதர்ம வாதத்தின் முக்கிய கொள்கையாகும்.

ஆனால் விமர்சகர்கள் கில்டு சமதர்ம வாதத்தை நடைமுறைக்கு சாத்தியம் இல்லாதது என்று விமர்சிக்கின்றனர். அரசை ஒரு சாதாரண கில்டு என கருதுவது அரசின் சிறப்புத் தன்மையை சிதைத்து விடும். அரசின் சக்தியை, அதிகாரத்தை கில்டு சமதர்மவாதம் குறைத்து மதிப்பிட்டுள்ளது. கில்டு சமதர்மவாதத்தின் அதிகாரம் இல்லாத அரசினால் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க முடியாது. போர்கள் மற்றும் கிளர்ச்சிகளில் இருந்து மக்களை காப்பாற்ற முடியாது என்று எதிர்ப்பாளர்கள் விமர்சிக்கின்றனர்.

இந்தியாவின் சமதர்மவாதம்

"சமதர்மவாத வகையான சமுதாயம்" என்பது தான் இந்தியாவின் சமதர்மவாதம் ஆகும். 1950-களில் இந்திய அரசு இதனை கொண்டு வந்தது. மத, இன, மொழி, ஜாதி வேறுபாடின்றி அனைவருக்கும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்வதும் ஏழ்மை, கல்லாமை ஆகியவற்றை அகற்றுவதும் இந்தியாவின் சமதர்மவாதம் ஆகும். 1950 ஆம் ஆண்டு பாராளுமன்றம் தனது தீர்மானத்தின் மூலம் திட்டக் குழுவை அமைத்தது.

1951 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. நாம் பொதுத் துறையும் தனியார் துறையும் செயல்படும் கலப்பு பொருளாதாரத்தைப் பின்பற்றினோம். பொருளாதாரத்தில் பொதுத் துறை நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் இந்தியா தந்தது.

மேலும் 42-வது அரசமைப்பு திருத்தச் சட்டம் சமதர்மவாதத்தை அரசமைப்பின் முகவுரையில் சேர்த்தது. 44-வது அரசமைப்பு திருத்தச் சட்டம் சொத்துரிமையை அடிப்படை உரிமைகள் பகுதியில் இருநது நீக்கி சாதாரண சட்ட உரிமையாக அரசமைப்பின் 12-ஆம் பகுதியில் வைத்தது. அரசமைப்பின் நான்காவது பகுதியில் வேலை உரிமை, சிலர் இடத்தில் செல்வங்கள் குவியாமை, போன்ற சமதர்மவாத கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. சுதந்திரம் முதல் 1991-ஆம் ஆண்டு வரை இந்தியா சமதர்மவாத கருத்துக்களை பின்பற்றியது.

வேறுபாடுகள்	
பொதுவுடைமைவாதம்	**சமதர்மவாதம்**
புரட்சி மாற்றத்தின் மருத்துவச்சி ஆகும். பேறு காலத்தில் அன்னையரிடம் இருந்து மருத்துவச்சி குழந்தையை உலகிற்கு எடுத்து வருகிறாள். புரட்சி மாற்றத்தின் மூலம் புதிய சமூகத்தை உலகிற்கு கொண்டு வருகிறது.	பரிணாம மாற்றங்களே நன்மையை தருகின்றன. நீடித்து நிற்கின்றன. புரட்சி தேவையில்லை.
பணக்கார வர்க்கம் ஏழை வர்க்கத்தை சுரண்டுவதற்கான கருவியே தான் அரசாகும். ஆகவே நாம் அரசை அழிக்க வேண்டும்.	அரசை நாம் அழிக்கக் கூடாது அரசை மக்களாட்சி மற்றும் மக்கள் நலன் அடிப்படையில் மாற்றி அமைக்க வேண்டும்.
வர்க்கம் போராட்டம், மனித வரலாற்றில் மாற்றத்தின் அடிப்படை சக்தியாகும்.	வன்முறையான வர்க்கப் போராட்டம் தேவையில்லை.
தனி சொத்துரிமை அழிக்கப்பட வேண்டும்.	தனி சொத்துரிமை மாற்றப்பட வேண்டும். சமூக நலனுக்காக சொத்துரிமை மீது கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்.
வரலாற்று பொருள் முதல் வாதம் வரலாற்றை விளக்கும். பொருளாதாரம் தான் மனிதனை இயக்குகிறது.	வரலாற்று பொருள் முதல் வாதம் மட்டுமே மனித வரலாற்றை விளக்காது. கலாச்சாரம், மதம், அரசியல் போன்ற காரணிகளும் மனித வரலாற்றை தீர்மானிக்கன்றன.

8.4 தேசியவாதம்

பொருள், தோற்றம் மற்றும் பரவல்

ஒரு நாட்டின் மேல் மக்களுக்கு உள்ள பாசம், அன்பு, விசுவாசம் போன்ற உணர்வுகளை தேசியவாதம் என்று கூறுகிறோம். மக்களிடையே குறிப்பிட்ட நிலப்பரப்பிற்கும், மொழிக்கும் அல்லது மொழிகளுக்கும், விழுமியங்களுக்கும், பாரம்பரியத்திற்கும் பாசம் காட்டுவதே தேசியவாதம் ஆகும். மக்களின் விசுவாசம் எல்லா குழுக்களை விடவும் தேசத்திற்கு முதன்மையாக இருக்க வேண்டும். ஏர்னஸ்ட் கெல்னெர் "தேசமும் தேசியவாதமும்" (Nations and Nationalism) என்ற நூலை எழுதினார். "தேசியவாதம் என்பது அரசியல் தளமும், தேசத் தளமும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று முதன்மையாக வலியுறுத்தும் அரசியல் கொள்கை" என்று அவர் கூறினார்.

தேசியவாதம் நவீன காலத்தில் இங்கிலாந்தில் முதன்முதலில் தோன்றியது. பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் பிரெஞ்சு புரட்சிக்கு பின்னர் பரவியது. வடஅமெரிக்க காலனிகள் ஐரோப்பாவிற்கு

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 162 07/12/2022 17:09:32

எதிராக தங்களது தேசியவாதத்தை உருவாக்கின. ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் பின் காலனிஆதிக்கத் தேசியவாதம் என்ற புதுவகை தேசியவாதத்தை உருவாக்கின. பல காரணிகள் தேசியவாதம் உலகம் முழுவதும் பரவுவதற்கு வழிவகுத்தன. முதலாளித்துவம், பிரெஞ்சுப் புரட்சி, தொழில் புரட்சி, உலகப் போர்கள் மற்றும் காலனி ஆதிக்கம் போன்றவைகள் தேசியவாதத்தை வளர்த்தன.

தேசியவாதம் கோட்பாடுகள்

தேசியவாதத்தைப் பற்றி பல கோட்பாடுகள் உள்ளன.

அ) ஆதிகால தேசியவாத கோட்பாடு

ஆ) சமூக உயிரியல் தேசியவாத கோட்பாடு

இ) சமூகத் தொடர்பு தேசியவாத கோட்பாடு

ஈ) மார்க்சிய தேசியவாத கோட்பாடு

உ) பின் கொள்கை தேசியவாத கோட்பாடு

மேற்கண்ட கோட்பாடுகளை நிரந்தரக் கோட்பாடுகள் மற்றும் நவீன கோட்பாடுகள் எனப் பிரிக்கலாம். முதல் இரண்டுக் கோட்பாடுகள் நிரந்தரக் கோட்பாடுகளாகும். கடைசி மூன்று கோட்பாடுகள் நவீன கோட்பாடுகளாகவும் கருதப்படுகின்றன.

அ) ஆதிகால தேசியவாத கோட்பாடு

ஆதிகாலத்தில் ஓர் இடத்தில் வாழ்ந்து வந்த மக்கள் தங்களுக்குள்ளே உருவாக்கிக் கொண்ட பாச உணர்வே தேசியவாதம் ஆகும். மொழி, மதம், பகுதி, இனம் போன்ற காரணிகளின் அடிப்படையில் ஆதிகாலம் முதல் இணைந்து வசிப்பதால் தேசிய உணர்வு இங்கு வளர்கிறது. அவர்கள் இன உணர்வையும், விசுவாசத்தையும் பெற்று இருக்கிறார்கள். தங்களது சமூக நடவடிக்கைகளில் தினந்தோறும் தனிப்பட்ட முறையில் போட்டிகள் இருந்தாலும், பொது வாழ்வில் இன உணர்வுகள் அடிப்படையில் செயல்படுகின்றனர். இன தேசியவாதம் என்ற கொள்கையை இக்கோட்பாடு ஆதரிக்கின்றது.

ஆ) சமூக உயிரியல் தேசியவாத கோட்பாடு

ஒரு தாய் வழியில் வந்தவர்கள் இடையே காணப்படும் பாச உணர்வே தேசியவாதம் என்று இக்கோட்பாடு குறிப்பிடுகின்றது. மக்கள் அனைவரும் ஒரு வம்சத்தை சேர்ந்தவர்கள். தேசமே ஒரு விரிவான குடும்பம் ஆகும். தேசியவாதம் என்பது பகுத்தறிவையும் பெற்று இருக்கின்றது. உணர்வுப் பூர்வமாகவும் உள்ளது. இது "பழங்கால மனதையும் நவீன தொழில் நுட்பத்தையும்" கொண்டுள்ளது. தங்கள் சமூகத்தின் வேர்களைக் கண்டறிய வரலாற்றில் தேசியவாதம் பயணிக்கின்றது. ஆனால் அருகில் வசிக்கும் இனக் குழுக்களிடம் பழகும் பொழுது தற்காலத்தில் செயல்படுகின்றது. தம் மக்களிடையே இனப் பாசத்தை காட்டுகின்றது. இதர மக்களிடையே இன வெறுப்பை தேசியவாதம் விதைக்கின்றது.

இ) பின் கொள்கை தேசியவாத கோட்பாடு

இக்கோட்பாட்டை பல்வேறு அறிஞர்கள் ஆதரித்து உள்ளனர். அந்தோணி கிடன்ஸ், மைக்கல் மான், பால் பிராஸ் ஆகியோர் முக்கிய ஆதரவாளர்கள் ஆவர். அரசு தான் தேசியவாதத்தை கொண்டு வந்தது என்று இக்கோட்பாட்டாளர்கள் கூறுகின்றனர். தேசங்களும், தேசிய உணர்வுகளும் இடைக்கால வரலாற்றில் இருந்த போதிலும், நவீன அரசு வந்த பிறகுதான் தேசியவாதம் முழுமையாக வளர்ந்தது என்று இவர்கள் கூறுகிறார்கள். அந்தோணி கிடன்ஸ் பிரெஞ்சு புரட்சியால்தான் ஐரோப்பிய நாடுகளில் தேசியவாதம் உருவானது என கூறுகிறார்..

மைக்கல் மான் சமூக சக்திக்கு நான்கு ஆதாரங்கள் உள்ளன என கூறினார். அவைகள் 1) கொள்கை சக்தி, (2) பொருளாதார சக்தி, (3) இராணுவ சக்தி, (4) அரசியல் சக்தி. இந்த நான்கு சக்திகளும் வரலாற்றில் ஒன்று சேர்ந்து தேசியவாதத்தை உருவாக்கின என்று கூறினார். கொள்கை சக்தி காரணி 16–ஆவது நூற்றாண்டில் இங்கிலாந்தில் தேசியவாதத்தை உருவாக்கியது. பொருளாதார சக்தி பின்னர் மேற்கு ஐரோப்பா முழுவதும் தேசங்களையும் தேசியவாதத்தையும் உருவாக்கியது. பின்னர், இராணுவ சக்தியும், அரசியல் சக்தியும் தேசியவாதத்தையும் வளர்ச்சிப் பெற வைத்தன.

பின் கொள்கை தேசியக் கோட்பாட்டார்களிடையே பல வேறுபாடுகள் உள்ளன. ஆனால் எல்லோரும் நவீன அரசும்,

வர்த்தக முதலாளித்துவமும் தேசியவாதத்தை வளர்த்தன என்று கூறுவதில் ஒற்றுமையுடன் உள்ளனர்.

ஈ) சமூகத் தொடர்பு தேசியவாத கோட்பாடு

காரல் டியூட்ச், பெனிடிக்ட் ஆண்டர்சன் தகவல் தொடர்பு தேசியவாத கோட்பாட்டை பிரபலப்படுத்தினார்கள். டியூட்ச் தேசத்தை இவ்வாறு விளக்கினார். "மற்றவர்களை விட தங்களுடைய குழு உறுப்பினர்களுடன் திறமையாகவும், உணர்வுப் பூர்வமாகும் தகவலை பகிர்ந்துகொள்ளும் மக்கள் குழுவே தேசம்". அவர் பொருளாதாரம், வரலாறு, மக்கள் தொகையியல் ஆகிய பாடங்களைப் படித்து ஒரு முடிவிற்கு வருகிறார். தேசம் மற்றும் தேசியவாதம் தோற்றத்தில் தகவல் தொடர்புதான் பெற்றோராக பங்காற்றியுள்ளது. மக்களிடையே உள்நாட்டு தகவல் தொடர்பு தார்மீக மற்றும் அரசியல் அடையாளத்தை உருவாக்கி தேசியவாதத்தை வளர்த்தது.

பெனிடிக்ட் ஆண்டர்சன் தேசத்தை கற்பனை சமுதாயம் என்றும், தேசியவாதத்தை கற்பனை சமுதாயத்தின் உயிர் சக்தி என்றும் கூறினார். அவர் 'கற்பனை சமூகங்கள்' (Imagined Communities) என்ற நூலை எழுதினார். தேசம் என்பது மனிதனின் எண்ணத்தில், கற்பனையில் இருக்கின்றது. ஒரு தேசத்தின் உறுப்பினர்கள், எல்லா உறுப்பினர்களுடன் பேசுவதில்லை, பார்ப்பதில்லை. இருந்தபோதிலும் எல்லோரையும் தம்முடைய மக்களாக பார்க்கிறார்கள். கிரிக்கெட் விளையாடும் போது மைதானத்திலும், தொலைக்காட்சி முன்பும் அமர்ந்திருக்கும் கோடிகணக்கான மக்கள் தங்கள் தேசிய அணி வெற்றி பெற்றால் ஆனந்தம் கொள்கிறார்கள். தங்கள் தேசிய அணி தோல்வியுற்றால் தாங்களே தோற்றதாக வருத்தப்படுகிறார்கள். பல நாடுகளில், மறைந்த பெயர் தெரியாத ராணுவ வீரரின் கல்லறை உள்ளது. இங்கு புதைக்கப்பட்ட வீரரின் பெயர் தெரியாவிட்டாலும் அந்த கல்லறை மீது மக்கள் மரியாதை செலுத்துகிறார்கள்.

ஆண்டர்சன் முதலாளித்துவமும், அச்சகமும் தேசியவாதம் தோன்றுவதற்கு முக்கிய பங்கை ஆற்றின என்று கூறினார். அச்சகம் கண்டுபிடிக்க பட்டவுடன் பல ஆயிரக்கணக்கான நூல்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளில் அச்சு அடிக்கப்பட்டு விற்கப்பட்டன. இப்புத்தகங்களை மக்கள் திரும்ப திரும்ப படிப்பதால் ஒரே மாதிரியான எண்ணங்கள் மக்கள் மனதில் விதைக்கப்பட்டன. நாம் எல்லாம் ஒரே சமூகம் என்ற உணர்வு பிறந்தது. முதலாளித்துவமும் கற்பனை சமூகத்தை ஊக்கப்படுத்தியது. முதலாளிகள் இலாபத்தை மனதில் வைத்து, நூல்களை அச்சிட்டு அதிகம் விற்பனை செய்தார்கள். ஆகவே அச்சக முதலாளித்துவம் (அச்சகமும் முதலாளித்துவமும்) இணைந்து கற்பனை சமூகத்தை உருவாக்கி தேசியவாதத்தை வளர்த்தன.

"மிகச்சிறிய நாட்டில் கூட ஒருவரையொருவர் மக்கள் தெரிந்திருப்பதில்லை, சந்திப்பதில்லை, கேள்விப்படுவதில்லை. இருந்தபொழுதிலும் ஒவ்வொருவருடைய எண்ணத்திலும் சமூகத்தின் நினைவுகள் இருக்கின்றன. சமூகங்களை உண்மை – பொய் என்று வேறுபடுத்த வேண்டியதில்லை. எவ்வாறு மக்கள் எண்ணத்தில், மனதில் நினைக்கப்பட்டு இருக்கின்றன என்பதுதான் முக்கியம்."

பெனடிக்ட் ஆண்டர்சன்

உ) மார்க்சிய தேசியவாத கோட்பாடு

மார்க்சியம் தேசியவாதத்தை முதலாளித்துவத்தின் குழந்தையாக கருதுகின்றது. ஏழைகளைச் சுரண்டுவதற்காக பணக்காரர்கள் தேசியவாதத்தை உருவாக்கியுள்ளார்கள் என்று இக்கோட்பாடு கூறுகின்றது. முதாலளித்துவ வர்க்கம் தனியார் சொத்துக்களைக் கொண்டுள்ளதோடு ஏழைகளின் உழைப்பைச் சுரண்டுகிறது. முதலாளித்துவ வர்க்கம் தேசியவாதத்தை தொழிலாளி வர்க்கத்தின் உணர்சிகளை ஊக்கப்படுத்தி தனது சொந்த நலனுக்காக பயன்படுத்தியது. "தேசியவாத உணர்வு சுரண்டலை சட்டபூர்வமாக ஆக்குவதற்கும்

நீடிக்க வைப்பதற்கும் பணக்காரர்களால் உருவாக்கப்பட்ட உணர்வாகும்". காரல் மார்க்ஸ் "பாட்டாளிகளுக்கு தந்தைநாடு இல்லை" என்று கூறினார். ஆகவே தான் கம்யூனிஸ்ட் மெனிபெஸ்டோ என்ற தனது நூலில் 'உலக தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், புரட்சி செய்து புதியதோர் உலகத்தை உருவாக்குங்கள்' என்று கூறினார். காரல் மார்க்ஸ் தேசியவாதத்தை நிராகரித்தார். சர்வதேசிவாதத்தை ஆதரித்தார்.

மைக்கல் எக்டர், டாம் நரின் ஆகியோரும் தேசியவாதத்தை மார்க்சிய வழியில் ஆய்வு செய்தனர்.

இந்திய தேசியவாதம்

இந்திய தேசியவாதம் 19–ஆம் நூற்றாண்டில் இரண்டாம் பகுதியில் தோன்றியது. மதம், மொழி, பகுதி, இன வேறுபாடுகளை கடந்து இந்தியர்கள் தேசிய உணர்வைப் பெற்றனர். இரண்டு வகையான காரணிகள் இந்திய தேசியவாதத்தை வளர்த்தன. அவைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் காரணிகள் ஆகும்.

உள்நாட்டுக்காரணிகளை பொருத்தமட்டில் பல நூற்றாண்டுகளாக நாம் இந்தியர் என்ற உணர்வு மக்கள் மனதில் மலர்ந்து வந்துள்ளது. அரசியல் பிளவுகளைத் தாண்டி கலாச்சார ரீதியாக மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்துள்ளனர். பண்டைகாலம் முதலே 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற கருத்து இந்திய பாரம்பரியத்தில் தழைத்து வந்துள்ளது. நவீன இந்திய தேசியவாதம் விதைகள் பல நூற்றாண்டு கால கலாச்சார பூமியில் வளர்ந்து வந்துள்ளது.

வெளிக்காரணிகளைப் பொருத்தமட்டில் ஆங்கிலேய காலனி ஆதிக்கம் தேசியவாதத்தைத் தட்டி எழுப்பியது. முக்கிய காரணிகள் கீழ்க்கண்டவைகளாகும்.

1. காலனி ஆதிக்கம், அரசியல், நிர்வாக, பொருளாதார, தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பை இந்தியாவில் உருவாக்கியது. அரசியலிலும், நிர்வாகத்திலும் ஏழுநூறுக்கும் மேற்பட்ட இந்திய அரசுகளை காலனியாதிக்கம் ஒருங்கிணைத்தது. முன்னர், இந்தியா கிராமப் பொருளாதாரத்தைப் பின்பற்றியது. ஆங்கிலேயர் ஆட்சி நவீன பொருளாதாரத்தைக் கொண்டு வந்து பொருளாதார ரீதியாக இந்தியாவை ஒருங்கிணைத்தது. இரயில்கள், தந்தி, சீரான அஞ்சல் முறை ஆகியவைகளை அறிமுகப்படுத்தி தகவல் தொடர்புத் துறையில் இந்தியாவை ஒருங்கிணைத்தது. ஆகவே தேசியவாதம் வளர்வதற்கான சூழல் தோன்றியது.
2. காலனியாதிக்கம் மேற்கத்திய கல்வியை இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. நாம் நவீன அரசியல் கருத்துக்களான விடுதலை, சமத்துவம், இறையாண்மை போன்ற கருத்துக்களை அறிந்து கொண்டோம். இந்திய தாய்திருநாடு இக்கருத்துக்களை பெறவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.
3. ஆங்கில மொழி இந்தியாவின் தொடர்பு மொழியாக காலனி ஆதிக்கத்தால் பயன்படுத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான மொழிகளை நாம் பேசுவதால் தொடர்பு கொள்வதில் சிரமம் இருந்தது. ஆங்கிலப் பயன்பாட்டால் தேசியவாதிகள் இந்தியா முழுவதையும் ஒருங்கிணைத்து தேசியவாதத்தை வளர்த்தனர்.
4. 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பல்வேறு சமய சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. இராஜா ராம் மோகன்ராயின் 'பிரம்ம சமாஜமும்' மகாராஷ்ட்ராவின் "பிரார்த்தனசமாஜமும்" முக்கியமானவைகள் ஆகும். இந்தியாவில் மறுமலர்ச்சி மற்றும் மாற்றங்களை இவைகள் கொண்டுவந்தன. இந்திய சமுகத்தின் தீமைகளான சதி, சாதி முறை மற்றும் தீண்டாமையை இவை எதிர்த்தன. பழங்கால இந்தியாவின் நல்ல தன்மைகளை மீண்டும் தழைக்க இவை வழிவகுத்தன.
5. ஆங்கிலேய ஆட்சியாளர்களின் இனவெறியும் இந்திய தேசியவாதத்தை வளர்த்தது. ஆங்கிலேயர்களின் வெள்ளை மனிதனின் கடமை / சுமை என்ற கருத்து நிறவெறியைக் காட்டியது. வெள்ளையர்கள்தான் இந்த

உலகில் வளர்ச்சியிலும் நாகரிகத்திலும் முன்னணியில் உள்ளவர்கள். இந்தியர்களுக்கு நாகரிகத்தை வழங்கவே வெள்ளையர்கள் ஆட்சி நடைபெறுகிறது என்று வெள்ளை மனிதனின் கடமை அல்லது சுமைக் கருத்துக் கூறியது. இதன் மூலம் வெள்ளையர்களின் நிறவெறி இந்தியர்களுக்குப் புரிந்தது. இதை எதிர்த்து இந்திய தேசியவாதம் வளர்ந்தது.

6. ஆங்கிலேய கவர்னர் ஜெனரலான லிட்டன் பிரபுவின் தலைக்கன ஆட்சியும் இந்திய தேசியவாதத்தை வளர்த்தது. இவர், இந்திய பத்திரிக்கைகள் மீது தேவையற்ற தடைகளை விதித்தார். இங்கிலாந்தில் இருந்து இந்தியாவிற்குப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஆர்வம் காட்டினார். இந்தியப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு முட்டுகட்டைப் போட்டார். இலட்சக்கணக்கான மக்கள் பஞ்சத்தால் வாடியபோதிலும் நிவாரண முயற்சிகளை அவர் மேற்கொள்ளவில்லை. ஆப்கானிஸ்தானுடன் தேவையில்லாமல் போர் தொடுத்ததால், பல ஆயிரக்கணக்கான இந்திய ராணுவ வீரர்கள் மாண்டு போயினர். இக்காரணிகளால் இந்திய தேசியவாதம் வளர்ந்தது.

7. ரிப்பன் பிரபு ஒரு தலை சிறந்த ஆங்கிலேய கவர்னர் ஜெனரல் ஆவார். அவரது ஆட்சியில் இல்பர்ட் என்ற ஆட்சிக் குழுவின் சட்ட உறுப்பினர் ஒரு மசோதாவை அறிமுகப்படுத்தினர். ஐரோப்பியர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை இந்திய நீதிபதிகள் விசாரிக்கலாம் என்று இம் மசோதா கூறியது. இனவெறி பிடித்த ஐரோப்பியர்கள் இந்திய நீதிபதிகளுக்கு இந்த அதிகாரம் வழங்கப்படக்கூடாது என்று அழுத்தம் கொடுத்தனர். இவர்களின் எதிர்ப்பால் ரிப்பன் பிரபுவும் இந்த மசோதாவை கைவிட்டார். இந்தியத் தலைவர்கள் இப்பிரச்சனையின் மூலம் ஐரோப்பிய இனவெறியை உணர்ந்தனர். மேலும் மக்கள் விரும்பாத அரசாங்கத் திட்டங்களை எதிர்ப்பதன் மூலமும், போராட்டங்கள் மூலமும் திரும்ப பெற வைக்கலாம் என்ற அரசியல் வித்தையை இந்திய தலைவர்கள் உணர்ந்து கொண்டனர்.

மேற்கண்ட காரணிகளால் 19–ஆம் நூற்றாண்டில் இந்திய தேசியவாதம் வளர்ந்தது.

தேசியத்திற்கு எதிரான சவால்கள்

சமகாலத்தில் தேசியவாதம் பல்வேறு சவால்களை சந்திகின்றது. சில சவால்கள் தேசத்திற்கு உள்ளேயும், சில சவால்கள் தேசத்திற்கு வெளியேயும் தோன்றுகின்றன, செயல்படுகின்றன. இவைகளில் பிரிவினை வாதமும், உலகமயமாதலும் முக்கியமானவைகளாகும்.

உள்நாட்டுக் காரணிகள்

பிரிவினைவாதம்

தேசியவாதத்தின் மிக முக்கிய எதிரி பிரிவினைவாதம் ஆகும். இது உள்தேசிய வாதம் என்றும் அழைக்கப்படுகிறது. கனடா நாட்டில் குயூபக் போராட்டம், பாகிஸ்தானில் பலுசிஸ்தான் இயக்கம், சீனாவில் உய்கர் இயக்கம், ஸ்பெயினின் கடலன் இயக்கம் ஆகிய முக்கிய பிரிவின வாத இயக்கங்கள் உலகில் காணப்படுகின்றன.

நிகழ் ஆய்வு

உய்கர் பிரிவினைவாதம்

சின்ஜியாங் சீனாவின் வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஆகும். சீன மொழியில் சின்ஜியாங் என்றால் புது எல்லை என்பது பொருளாகும். இங்கு வசிக்கும் பூர்வகுடி மக்கள் உய்கர் முஸ்லிம்கள் ஆவர். சீன அரசாங்கம் தங்களுக்கு எதிரான அரசியல் பொருளாதார பாகுபாட்டைக் பின்பற்றுவதாக இம்மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். சீன பெரும்பான்மை மக்களான ஹன்ஸ் இன மக்கள் உய்கர் மாநிலத்தில் குடியேறிவருகின்றனர். பூர்வகுடிகளின் அளவு குறைந்து வருகின்றது. இம்மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில் 6 சதவீதமாக இருந்த ஹன்ஸ் மக்கள் தற்பொழுது 40 சதவீதமாக அதிகரித்துவிட்டனர். மேலும் மத ரீதியாகவும் சீன அரசாங்கம் தங்களுக்கு எதிராக செயல்படுகிறது என்று பூர்வகுடி மக்கள் கூறுகின்றனர். தாடி வளர்க்கக்கூடாது, வாகனங்களில் பயணம் செய்யும் பெண்கள் பர்தா அணியக்கூடாது என்று அரசாங்கம் மதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை திணிப்பதாக மக்கள் கூறுகின்றனர். இந்த பிரிவினைவாதத்திற்கு எதிராக சீன அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

வெளிநாட்டுக் காரணிகள்

பல வெளிநாட்டுக் காரணிகளும் தேசியத்திற்கு எதிராக உள்ளன. உலகமயமாகுதல் ஒரு முக்கிய காரணியாகும். பொருளாதாரம், வர்த்தகம், தொழில் நுட்பம், கலாச்சாரம் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றில் அதிகரித்து வரும் ஒருங்கிணைப்புகளுக்கு உலகமயமாகுதல் என்பது பொருளாகும். உலகமயமாகுதல் நாடுகளுக்கு இடையிலான தடைகளை உடைத்து வருகின்றது. பொருளாதார ரீதியாக, பெரிய தொழில் நிறுவனங்கள் நாடுகளை கடந்து செயல்படுகின்றன, செல்வாக்கைப் பெற்றுள்ளன.

உலக வர்த்தக நிறுவனம் உலகமயமாதலை வளர்க்கிறது. 'தடைகள் இல்லா வர்த்தகம்' என்பது இதன் இலட்சியமாகும். இது பல்வேறு ஒப்பந்தங்களை 1995 முதல் உருவாக்கி சர்வதேச வர்த்தகத்தில் இருந்த தடைகளை நீக்கியுள்ளது. வர்த்தகத் தடைகள்தான் முன்பு தேசியவாதம் வேர்களாக இருந்தன.

உலகம் முழுவதும் படித்த திறமையான மக்கள் நாடு விட்டு நாடு குடிபெயர்ந்துள்ளனர். முக்கியமாக ஆசிய, ஆப்பிரிக்கா நாடுகளில் இருந்து மேற்கத்திய நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர். இந்தியா மற்றும் சீனாவில் இருந்து அமெரிக்காவிற்கு பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்கள் குடிபெயர்ந்துள்ளனர்.

சர்வதேச மண்டல அமைப்புகளும் தேசியவாதத்தை பாதித்துள்ளன. ஐரோப்பிய யூனியன் 27 ஐரோப்பிய நாடுகளை ஒன்றிணைத்துள்ளது. இந்த நாடுகளின் தேசியவாதத்தின் வலுவிழந்துள்ளது. ஐரோப்பிய கண்டம் தேசியவாதம் தொட்டில் என்ற நிலையில் இருந்து உலகளாவியத்தின் ஒளிவிளக்கு என்று மாறியுள்ளது. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சியும் தேசியவாதம் பிடிப்பைத் தளர்த்தியுள்ளது. தேசியவாதம் மறைந்து உலக அரசாங்கம் தோன்றுவதற்கு தற்பொழுது வாய்ப்புகள் பெருகியுள்ளது.

தீவிரவாதக் கொள்கைகள் தேசியவாதத்தை பலவீனப்படுத்தியுள்ளன. எடுத்துக்காட்டாக, தூய இஸ்லாம் என்ற முழக்கத்துடன் இஸ்லாமிய அரசு சிரியா, ஈராக் ஆகிய நாடுகளில் கலீஃபா முறையை 2014-இல் கொண்டு வந்தது. தேசியவாதத்தை அது நிராகரித்தது. இஸ்லாமிய மக்கள் அனைவரும் கலீஃபா ஆட்சிமுறையில் இருக்க வேண்டும் என்று கூறியது. சுற்றுசூழல் சீர்கேடுகள் தேசியவாதத்தை பாதிக்கின்றன. பருவநிலை மாற்றம், அமில மழை, ஓசோன் அழிதல் போன்ற சீர்கேடுகள் நாடுகளை கடந்து பாதிப்புகளை உருவாக்குகின்றன. உலக சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது உலக மக்களின் கடமையாகும். எனவேதான் பல உலக மாநாடுகள் நடத்தப்பட்டன. தகவல் தொடர்பும், தொழில்நுட்பமும் தேசியவாதத்தைப் பாதித்துள்ளன. வலைதளம், அலைபேசி, சமூக ஊடகங்கள் பல சமயங்களில் தேசியவாதத்தைப் பாதிக்கின்றன, உலகமயமாதலை ஊக்குவிக்கின்றன.

இருந்தபோதிலும் 21-ஆம் நூற்றாண்டிலும் தேசியவாதம் வலுவாக உள்ளது. தேசியவாதம் மறையும் காலம் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் இல்லை. சர்வதேச நடவடிக்கைகளை இன்றைக்கும் தேசியமும், தேசநலன்களும் தீர்மானிக்கின்றன. ஐரோப்பிய யூனியனிலிருந்து இங்கிலாந்து வெளியேறிவதும், பாரிஸ் பருவநிலை (United Nations Framework Conference on Climate Change) ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறியதும் இதற்கு சான்றுகளாகும்.



8.5 பாசிசம்

பெனிடோ முசோலினி பாசிசம் என்ற சர்வாதிகார கட்சி, இயக்கம் மற்றும் கொள்கையைத் தோற்றுவித்தார். பாசிசம் மூலம் இத்தாலியை 20 ஆண்டுகளுக்கு மேல் அவர் ஆட்சி செய்தார். இத்தாலி மொழியில் "பாசி" என்றால் தண்டுகளின் மூட்டை என்பது பொருளாகும். அந்நாட்டின் பண்டையகால வரலாற்றில் ரோமானிய ஆட்சியாளர்களின் சின்னமாக "பாசி" இருந்தது. "தண்டுகளின் மூட்டை" ஒற்றுமை மற்றும் வலிமையைக் குறிக்கிறது. முசோலினி தனது தொண்டர்களின் உணர்வுகளை தட்டி எழுப்புவதற்காக தனது கட்சிக்கு இந்த பெயரை வைத்தார்.

உலகப் போருக்கு பின் இத்தாலியில் நிலவிய சமூக பொருளாதார பிரச்சனைகள்தான் பாசிசம் தோன்றுவதற்கு முக்கிய காரணங்களாக இருந்தன. முதல் உலகபோரின் முடிவில் வெற்றி பெற்ற கூட்டணியில் இத்தாலி இருந்த போதிலும் எந்த வித பலனும் அதற்கு கிட்டவில்லை, ஏமாற்றமே எஞ்சியது. வேலை இல்லாமை, விலை உயர்வு, அரசியல் குழப்பங்கள் மற்றும் பொருளாதாரப் பின்னடைவு ஆகிய பிரச்சனைகளில் இத்தாலி சிக்கி இருந்தது.

இத்தாலியின் எல்லா வகை பிரிவினரும் போரினால் பாதிக்கப்பட்டிருந்தனர். பெனிடோ முசோலினி தனது பேச்சாற்றலால் பாதிக்கப்பட்ட மக்களை பாசிசக் கட்சிக்கு இழுத்தார். அவர் 1922–ஆம் ஆண்டு தலை நகரில் "ரோம் அணிவகுப்பு" என்பதை நடத்தினார். முசோலினியின் செல்வாக்கை கண்டு அஞ்சிய ஆட்சியாளர்கள் தேசிய பாசிச கட்சியிடம் ஆட்சியை ஒப்படைத்தனர்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> ஆர்.எம்.மேக்கைவர் பாசிசத்தை கீழ், நடு வர்க்கங்களின் இயக்கம் என்று வர்ணித்தார்.

அடிப்படை கொள்கைத் தன்மைகள்

பாசிசம் தீவிர தேசியவாதத்தை வலியுறுத்தியது. இத்தாலி தான் உலகில் தலை சிறந்த நாடு என கூறியது. இதர நாடுகள் மற்றும் மக்களிடம் பாசிசம் வெறுப்பைக் காட்டியது. கொள்கையிலும் நடவடிக்கையிலும் பாசிசம் ஏகாதிபத்தியத்தை பின்பற்றியது. அது மேற்கொண்ட காலனியாதிக்க நடவடிக்கைகள் ஆப்பிரிக்காவை பாதித்தன. இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்தன. ஜேவானி ஜேண்டிலா என்ற பாசிச கொள்கைவாதி "பாசிச கொள்கை"(Doctrine of Fascism) என்ற நூலை எழுதினார்.பாசிச அரசு என்றால் அதிகாரத்தையும் பேரரசையும் விரும்பும் கொள்கை என்று கூறினார். பேரரசு என்றால் நிலம், இராணுவம் அல்லது வர்த்தகம் சம்பந்தப்பட்டது அல்ல. அது தார்மீகம் சம்மந்தப்பட்டது. பாசிச பேரரசு உலக நாடுகளை வெல்ல வேண்டும். பாசிச அரசு இத்தாலியின் வரலாற்றில் மூன்றாவது ரோமப் பேரரசு ஆகும். பண்டையகால ரோமானியப் பேரரசு, மறுமலர்ச்சி ரோமானிய ஆதிக்கம் ஆகியவைகளுக்கு அடுத்தபடியாக பாசிசம் உள்ளது.

பாசிசம் போரையும், போர் குணத்தையும் தீவிரமாக பாராட்டியது. "பெண்ணுக்குத் தாய்மை முக்கியம் ஆணுக்குப் போர் முக்கியம்"

என்று முசோலினி கூறினார். பாசிசம் அமைதியை கோழைத்தனம் என்று வர்ணித்தது. பெண்களை 'தேசத்தின் இனப்பெருக்காளர்கள்' என்று பாராட்டியது.

பாசிசம் குறைவான அதிகார அரசை நிராகரித்தது. ஆர்வத்துடன் சர்வதிகாரத்தையும் கொடுங்கோல் ஆட்சியையும் ஆதரித்தது. "அரசுக்கு உள்ளே எல்லாம், அரசுக்கு வெளியே எதுவுமில்லை, அரசுக்கு எதிராக எதுவும் இல்லை" என்பது முசோலினியின் முழக்கமாகும். புதிய சமூகத்தை படைப்பதற்கு அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. குடிமக்களின் சிந்தனை மற்றும் நடவடிக்கைகளை அரசு நிர்ணயித்தது. இத்தாலியை உலக வல்லரசாக மாற்றுவதற்கும் மக்களை தைரியமானவர்களாக ஆக்குவதற்கும் பாசிசம் முயன்றது.

பொதுவுடைமைவாதத்தை ஜென்ம விரோதியாக பாசிசம் ஒடுக்கியது. இத்தாலியின் பொதுவுடைமைவாதத்தின் சிந்தனையாளரான அண்டனியோ கிராம்சி பாசிசத்தால் சிறையில் அடைக்கப்பட்டார். பாசிசம் பொதுவுடைமைவாதத்தின் கட்சி, நூல்கள் ஆகியவற்றைத் தடை செய்தது. பொதுவுடைமைவாத அரசு, சமூக வர்க்கம், புரட்சி போன்ற கருத்துக்களை பாசிசம் நிராகரித்தது. சமூகம், வர்க்கங்களால் பொதுவுடைமைவாதம் கூறியது போல் பிளவுபடவில்லை. சமூகம் ஒற்றுமையாகத்தான் உள்ளது என பாசிசம் கூறியது.

பாசிசம் தொழில்சார் அரசு கோட்பாட்டை ஆதரித்தது. ஒவ்வொரு தொழிலும், வர்த்தகமும், வேலையும் தொழில் சார்ந்த அமைப்பை பெற்றிக்க வேண்டும். அந்த தொழிலில் ஈடுபட்டுள்ள முதாலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் உள்ள பிரச்சனைகளை அந்தந்த தொழில் அமைப்புகள் தீர்க்க வேண்டும். தேசத்தின் நலன்களுக்கும், நோக்கங்களுக்கும் எல்லோரும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். தொழிலாளர்கள் வேலை புறக்கணிப்பில் ஈடுபடக்கூடாது. பாசிச அரசு தொழிலாளர்களுக்கான ஊதியத்தை மிகவும் குறைவாக நிர்ணயித்தது. தொழில்சார் நிறுவனங்கள் ஊழல் மற்றும் திறமையின்மையால் பாதிக்கப்பட்டன. பாசிச பொருளாதாரத்தின் முதுகெலும்பான தொழில்சார் அரசு தொழிலாளர்களின் உரிமைகளை மிதித்தது.

விமர்சனம்

பாசிசம் மனித வரலாற்றில் வந்த மிக மோசமான சர்வாதிகாரம் ஆகும். அது சந்தர்ப்பவாதத்தை பின்பற்றியது. அறிவு ரீதியாக நேர்மை இல்லாமல் இருந்தது. பாசிசமும், நாசிசமும் மனித குலத்தின் மீது அளவற்ற அழிவை இரண்டாம் உலகப் போரில் திணித்தன. நாசிசத்தை விட பாசிசம் கொள்கை ரீதியாக வலுவாக இருந்ததால் 21-ஆம் நூற்றாண்டிலும் கொடுங்கோல் ஆட்சியாளர்களையும் அரசுகளையும் விமர்சிப்பதற்கு பாசிசம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

பாசிச கொள்கை, மக்களாட்சி, சமதர்மவாதம் மற்றும் பொதுவுடைமைவாதத்திற்கு எதிராக தோன்றியது. மக்களாட்சியும், சமதர்மவாதமும் நவீன காலத்தின் முற்போக்கு சிந்தனையை பிரதிபலித்தன. பாசிசம் இதற்கு எதிராக செயல்பட்டது.

8.6 நாசிசம்

அடால்ஃப் ஹிட்லர் நாசிசம் என்ற சர்வாதிகார கொள்கையைத் தோற்றுவித்தார். ஜெர்மனி நாட்டை இரண்டு உலகப் போர்களுக்கு இடையில் நாசிசம் மூலமாக ஹிட்லர் ஆட்சி செய்தார். நாசிக் கட்சியின் அதிகாரப் பூர்வ பெயர் 'தேசிய சமதர்ம ஜெர்மானிய தொழிலாளர்கள் கட்சி'

என்பதாகும். 1920ஆம் ஆண்டு தீவிர 25 அம்சத் திட்டதின் மூலமாக நாசி கட்சியை ஹிட்லர் தோற்றுவித்தார். பெரிய தொழிற்சாலைகளை தேசியமயமாக்குதல், போர்க்கால இலாபங்களைப் பறித்தல், கந்துவட்டியிலிருந்து மக்களை விடுவித்தல் போன்ற திட்டங்களை நாசிசக்கட்சி ஆதரித்தது. தனது பேச்சாற்றல் மூலம் ஜெர்மனியின் அனைத்து வகுப்பினரையும் நாசிக் கொள்கைகளுக்கு ஹிட்லர் கவர்ந்திழுத்தார். 'ஒவ்வொரு வயிறுக்கும் உணவு, ஒவ்வொரு உடலுக்கும் ஆடை, ஒவ்வொரு கைக்கும் வேலை, எல்லோருக்கும் எல்லாம்' என்பது ஹிட்லரின் அணுகுமுறையாக இருந்தது. இரத்தம் சிந்தாமல் அரசியல் சாசன, நாடாளுமன்ற வழிமுறைகளைத் தந்திரமாகப் பயன்படுத்தி 1933–ஆம் ஆண்டு ஹிட்லர் பதவிக்கு வந்தார்.



தோற்றத்தின் காரணம்

ஜெர்மனியில் நாசிசத்தின் தோற்றத்திற்கு முக்கிய காரணமாக முதலாம் உலகப் போருக்குப் பின் பாரிஸ் நகரத்தில் கையெழுத்திடப்பட்ட '1919 வெர்செயில்ஸ் ஒப்பந்தம்' இருந்தது. ஹிட்லர் ஜெர்மனிக்கு இழைக்கப்பட்ட அரசியல், பொருளாதார, இராணுவ அவமானங்களை உணர்ச்சிப் பூர்வமாகப் பேசி மக்களைக் கவர்ந்தார். அவர் எழுதிய புத்தகத்தின் பெயர் 'எனது போராட்டம்' (மெயின் கேம்ப்) ஆகும்.

அடிப்படைத் தன்மைகள்

நாசிசம் கொடுங்கோல் ஆட்சியை ஆதரித்தது. ஜெர்மானிய சிந்தனையாளரான பிரெட்ரிக் ஹெகல் என்பவர் உருவாக்கிய முழக்கமான 'அரசு பூமியில் கடவுளின் அணிவகுப்பு' என்பது நாசிசத்தின் ஆணிவேராக இருந்தது. அரசிற்கு மக்கள் முழுமையாக அடிபணிய வேண்டும் என்றும் நாசிசம் வலியுறுத்தியது.

நாசிசம் போர்க்குணமுள்ள கொள்கையாகும். ஹிட்லர், 'போர் நிரந்தரமானது, போர் உலகளாவியலானது, போர்தான் வாழ்க்கை, போர்தான் எல்லாவற்றின் தொடக்கம்' என்று சூளுரைத்தார். நாசிசத்தின் இந்த போர்க்குணம் இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்தது.

நாசிசத்தின் மிக முக்கியமான, பிரச்சனைக்குரிய நம்பிக்கை அதனுடைய இனவெறிக் கொள்கையாகும். அது ஆரிய இன மேன்மையையும் தூய்மையையும் வலியுறுத்தியது. ஆரிய இனத்தை உலகின் முதல் இனமாக, மனித குலத்தின் முதலாளியாக அது கருதியது. ஜெர்மனிக்கு அருகில் வசிக்கக்கூடிய ஸ்லாவ் மற்றும் யூத இனங்களை அது வெறுத்தது. ஆரிய இனத்தின் தூய்மையைக் காப்பாற்றுவதற்காக 1934–ஆம் ஆண்டு நுரம்பர்க் சட்டங்களை நாசிசம் தோற்றுவித்தது. ஆரிய மக்களுக்கும் இதர இன மக்களுக்கும் இடையிலான திருமணங்களை அது தடை செய்தது.

சித்திரவதை முகாம்கள்

நாசிசம் யூதர்களுக்கு எதிரான வன்முறையை கட்டவிழ்த்து விட்டது. ஜெர்மானிய தேசத்தின் தோல்விக்கு யூதர்கள்தான் காரணம் என்று நாசிசம் கூறியது. ஜெர்மனிய மக்களின் குருதியை உறிஞ்சி யூதர்கள் வாழ்வதாக அவர்களை வெறுத்தது. சித்திரவதை முகாம்களில் அடைக்கப்பட்டு இலட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டனர். இதனை யூதர்களின் பேரழிவு என்று யூதமக்கள் அனுசரிக்கிறார்கள்.

நாசிசம் ஜெர்மனியின் எல்லைகளைப் பரப்ப விரும்பியது. இதர நாடுகளை ஜெர்மனியின் காலனிகளாக அடிமையாக்க முயற்சித்தது. ஜெர்மனியின் மக்களை காலனி

நாடுகளில் குடியேற்ற முயற்சித்தது. இங்கிலாந்தை விட மிகப்பெரிய காலனியாதிக்க சக்தியாக ஜெர்மனி வரவேண்டுமென்று நாசிசம் முயன்றது. நாசிசம் இதர கொள்கைகளான பொதுவுடைமைவாதம், தாராளவாதம், மற்றும் சர்வதேசவாதம் ஆகியவற்றை வெறுத்தது. இவைகளைப் பின்பற்றும் சோவியத் யூனியன், அமெரிக்கா மற்றும் பிற தேசங்களையும் அது எதிர்த்தது.

நாசிசம் நாயகன் வழிபாட்டை ஆதரித்தது. 'ஹிட்லர்தான் ஜெர்மனி, ஜெர்மனிதான் ஹிட்லர்' என்ற கருத்தை மக்களிடையே திணித்தது. மக்கள் அனைவரும் சமம் என்ற கருத்தை அது நிராகரித்தது. ஹிட்லர் ஜெர்மானிய மொழியில் Fuehrer, அதாவது தலைவர் என அழைக்கப்பட்டார். ஜெர்மனி நாடே தலைவர் நாடு என்று அழைக்கப்பட்டது.

நாசிசம் பகுத்தறிவு வாதத்தை கடுமையாக எதிர்த்தது. மக்களுடைய உணர்வுகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தது. ஒரு கட்சி ஆட்சிமுறையை அது ஆதரித்தது. நாசி கட்சியைத் தவிர மற்ற அனைத்து கட்சிகளும் ஒடுக்கப்பட்டன. நாசிச கட்சியின் அமைப்பு படிநிலைக் கோட்பாட்டின் படி உருவாக்கப்பட்டது. கட்சியின் அதிகாரங்கள் அனைத்தும் ஹிட்லரிடமே குவிக்கப்பட்டன.

செயல்பாடு

படம் பார்ப்பது

அருமை மாணவர்களே, நாசிசம் இனப்படுகொலை செய்தது தற்போது உங்களுக்கு தெரியும். நாசிசத்தின் கொடுமைகளைப் பற்றி பல படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. 'சின்ட்லர்ஸ் லிஸ்ட்' என்ற படம் பல ஆஸ்கார் விருதுகளைப் பெற்றது. நாசிக் கொடுமைகளைக் கருத்தாகக் கொண்டுள்ளது.இப்படத்தை மாணவர்கள் அனைவரும் பார்க்க வேண்டும்.

சுருக்கமாகக் கூறின், நாசிசம் சர்வாதிகார, இனவாத, பகுத்தறிவிற்கு எதிரான கொள்கையாகும். இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியின் தோல்வியும் ஹிட்லரின் தற்கொலையும், நாசிச கொள்கையையும் கட்சியையும் கலைத்தன. இரண்டாம் உலக போருக்குப் பின் மக்களாட்சியும் கட்சிப் போட்டிகள் முறையும் ஜெர்மனியில் வேரூன்றியதால் நாசிசம் மீண்டும் வளரவில்லை.

கலைச்சொற்கள்: Glossary

சுதந்திரமாக விடு (Laissez Faire): பிரெஞ்சு மொழி சொல் ஆகும். சுதந்திரமாக விடு என்பது இதன் பொருளாகும். வாழ்க்கையை விரும்பிய படி அமைத்துகொள்ள அரசு மனிதனை சுதந்திரமாக விட வேண்டும்.

சந்தை பொருளாதாரம் : தேவை மற்றும் வழங்கல் அடிப்படையில் இயங்கும் பொருளாதாரம்.

சமூக நலஅரசு : சமூக நல திட்டங்களை அமல்படுத்தும் அரசு

சீரமைப்பு (Perestroika): ரஷ்ய மொழி சொல் ஆகும். சீரமைப்பு என்பது இதன் பொருள் ஆகும். சோவியத் ரஷ்யாவின் அதிபர் மைக்கல் கோர்பசேவ் பொருளாதாரத்தை சீரமைக்க கொண்டு வந்த திட்டம் இது ஆகும்.

வெளிப்படைத்தன்மை (Glasnost): ரஷ்ய மொழி சொல் ஆகும், வெளிப்படைத்தன்மை என்பது இதன் பொருளாகும். மக்களுக்கான அரசியல் உரிமைகளை சோவியத் ரஷ்யாவின் அதிபர் மைக்கல் கோர்பசேவ் இத்திட்டத்தின் மூலம் கொண்டு வந்தார்.

புதிய ஒப்பந்தம் (New Deal) : புதிய ஒப்பந்தம் என்பது இதன் பொருளாகும். உலக பொருளாதார மந்த நிலையில் இருந்து அமெரிக்காவின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க அதிபர் பிராங்ளின் ரூஸ்வெல்ட் இதனை அறிமுகப்படுத்தினார்.

www.tnschoolbooks.in

மக்களாட்சி மத்தியத்துவம் : இது, பொதுவுடைமைவாத கட்சியின் அமைப்பு கோட்பாடு ஆகும். லெனின் மக்களாட்சி மத்தியத்துவத்தை கொண்டு வந்தார். மக்களாட்சியும் அதிகார குவியலும் இணைந்து இங்கு காணப்படுகிறது.

பொதுவுடைமைவாதம் சீனமயமாதல் : ஐரோப்பிய கண்டத்தின் பொதுவுடைமைவாத கொள்கையை சீனாவிற்குத் தகுந்தவாறு மாற்றி அமைத்தல்.

மேலாதிக்கம் : கிராம்சி என்பவர் மேலாதிக்கம் எனும் கருத்தைக் கொண்டு வந்தார். அரசு தார்மீகம், அறிவு மூலமாக மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தி மயக்குகிறது என்பது இதன் பொருளாகும்.

கற்பனை சமதர்மவாதம் : காரல் மார்க்ஸின் காலத்திற்கு முன்பு இருந்த்த சமதர்மவாதத்தை கற்பனை சமதர்மவாதம் என காரல் மார்க்ஸ் வர்ணித்தார்.

ஃபேபியன் சமதர்மவாதம் : பண்டை கால ரோமானிய ஜென்ரலின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட சமதர்மவாதம் ஃபேபியன் சமதர்மவாதம் ஆகும். சரியான நேரம் வரும் வரை பொறுத்திருந்து இயங்குவது இதன் கொள்கையாகும்,

புதிய மக்களாட்சி : மாவோ புதிய மக்களாட்சி கருத்தை அறிமுகப்படுத்தினார். விவசாயிகள், தொழிலாளிகள், சிறிய முதலாளிகள், பெரிய முதலாளிகள் ஆகியோர்களுக்கான ஆட்சியே புதிய மக்களாட்சி ஆகும்.

ஆதிகால உறவு வாதம் : ஒரு குறிப்பிட்ட மொழி, இன மற்றும் பகுதி மக்கள் ஆதி காலத்தில் இருந்து இணைந்து வாழ்வதால் தேசியவாதம் தோன்றயது என்று இக்கொள்கை கூறுகிறது.

கற்பனை சமூகங்கள் : பெனடிக்ட் ஆண்டர்சன், 'தேசம் என்பது மக்களின் கற்பனையில், மனதில் இயங்கும் சமூகம்' என கூறினார்.

தொழிலாளர் (Proletariat): காரல் மார்க்ஸ் தொழிலாளர்களை குறிப்பதற்காக பிரஞ்சு மொழிச் சொல்லை பயன்படுத்தினார்.

U.S.S.R : "யூனியன் ஆஃப் சோவியத் சோசியலிஸ்ட் ரீபப்ளிக்" என்பது இதன் விரிவாக்கமாகும், இப்பொதுவுடைமைவாத நாடு 1991–ஆம் ஆண்டு மறைந்தது.

BREXIT : ஐரோப்பிய யூனியனில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவதற்கான நிகழ்சி. (Britain Exit)

உலகமயமாதல் : பொருளாதார, வர்த்தக, தொழில் நுட்ப தளங்களில் உலகம் ஒன்றினைவது உலகமயமாதல் எனப்படும்.

பாசிசம் : இத்தாலிய மொழியில் 'பாசி' என்றால் 'தண்டுகளின் மூட்டை' என்று பொருளாகும். ஒற்றுமை மற்றும் வலிமையை இது குறிக்கின்றது.

சித்திரவதை முகாம்கள் : யூத இன மக்களை நாசிச தலைவர் அடால்ஃப் ஹிட்லர் அடைத்து கொடுமை படுத்திய இடங்களே சித்திரவதை

மதிப்பிடுதல் (Evaluation)

I. சரியான பதிலை தேர்வு செய்யவும்

1. அரசு ஒரு அவசியமான தீமை என்று கருதிய கொள்கை எது?

   அ. எதிர்மறைத் தாராளவாதம் ஆ. நேர்மறைத் தாராளவாதம்

   இ. மார்க்சியம் ஈ. அதிகாரம் இல்லா கொள்கை

2. நேர்மறைத் தாராளவாதம் அரசை எவ்வகையான கருவியாக கருதியது?

   அ. சட்ட ஒழுங்கு ஆ. சுரண்டல்

   இ. சமூக நலன் ஈ. புரட்சி

3. புதியத் தாராளவாதத்தை ஆதரித்தவர்கள்

அ. நாக் ஆ. நாசிக்

இ. பிரெட்ரிக் ஹேயக் ஈ. மேற்கண்ட எல்லோரும்

4. மேலாதிக்கம் என்ற கருத்தை வலியுறுத்தியவர் யார்?

அ. காரல் மார்க்ஸ் ஆ. லெனின்

இ. ஆண்டனியோ கிராம்சி ஈ. மாவோ சேதுங்

5. பொதுவுடைமைவாத கட்சி பொதுவுடைமைவாத புரட்சியின் முன்னணியில் இருந்து செயல்பட வேண்டும் என்று கூறியவர் யார்?

அ. காரல் மார்க்ஸ் ஆ. லெனின்

இ. மாவோ ஈ. ஸ்டாலின்

6. பொதுவுடைமைவாத கொள்கைக்கு மாவோ வழங்கிய மிக முக்கிய பங்கு

அ. பொதுவுடைமைவாதம் சீனமயமாதல் ஆ. வரலாற்று பொருள் முதல் வாதம்

இ. உபரி மதிப்பு ஈ. மேற்கண்ட எதுவும் இல்லை

7. சரியாக பொருத்துக

1. பெர்னாட் ஷா	-	அ. கற்பனை சமதர்மவாதம்
2. இராபர்ட் ஓவன்	-	ஆ. பரிணாம வளர்ச்சி சமதர்மவாதம்
3. எட்வர்ட் பெர்ன்ஸ்டென்	-	இ. கில்டு சமதர்மவாதம்
4. G.D.H.கோல்	-	ஈ. ஃபேபியன் சமதர்மவாதம்

அ. 1-A, 2-B, 3-C, 4-D ஆ. 1-D, 2-A, 3-B, 4-Cs

இ. 1-A, 2-D, 3-C, 4-B ஈ. 1-C, 2-B, 3-D, 4-A

8. ஃபேபியன் சமதர்மவாதம் எவருடைய பெயரால் உருவாக்கப்பட்டது?

அ. ரோமானிய ஜெனரல் ஆ. ரஷ்யன் ஜெனரல்

இ. ஆங்கிலேய ஜெனரல் ஈ. இந்தியன் ஜெனரல்

9. கில்டு சமதர்மவாதம் கீழ்கண்டவற்றில் எதை வலியுறுத்தியது?

அ. நவீனமாக்கப்பட்ட இடைக்கால கில்டு அமைப்பு ஆ. கல்வி போன்ற பணிகளை செய்யும் அரசு

இ. அமைதியான வழியில் மாற்றம் ஈ. மேற்கண்ட எல்லாம்

10. கீழ்க்கண்டவர்களில் பொதுவுடைமைவாத சிந்தனையை ஆதரிக்காதவர் யார்?

அ. காரல் பாப்பர் ஆ. காரல் மார்க்ஸ்

இ. லுயி அல்துசர் ஈ. ஆண்டனியோ கிராம்சி

11. கீழ்க்கண்டவற்றில் இந்திய வகையான சமதர்மவாதம் எது?

அ. சிண்டிகலிசம் ஆ. ஃபேபியன் சமதர்மவாதம்

இ. சமதர்ம வடிவ சமுதாயம் ஈ. கில்டு சமதர்மவாதம்

12. தேசியவாதத்தை "கற்பனை சமூகங்கள்" என்று வர்ணித்தவர் யார்?

அ. காரல் டியுட்ஸ்ச் ஆ. பெனடிக்ட் ஆண்டெர்சன்

இ. மைக்கல் மான் ஈ. அந்தோணி கிடன்ஸ்

13. "பாட்டாளிக்கு தந்தை நாடு என்று ஒன்று இல்லை" என கூறியவர் யார்?

அ. பெனடிக்ட் ஆண்டெர்சன் ஆ. காரல் டியுட்ஸ்ச்

இ. அரிஸ்டாடில் ஈ. காரல் மார்க்ஸ்

14. "எனது போராட்டம்" என்ற நுலை எழுதியவர் யார்?

அ. காரல் மார்க்ஸ் ஆ. பிளாட்டோ

இ. அடால்ஃப் ஹிட்லர் ஈ. ஆடம் ஸ்மித்

15. நாசிசம் எதை ஆதரித்தது?

அ. ஆரிய இன உயர்வு ஆ. தேசிய சமத்துவம்

இ. யூத இன உயர்வு ஈ. ஐரோப்பிய உயர்வு

16. **கூற்று(அ.:** கிராம்சி மேலாதிக்கத்தை ஆதரிக்கிறார்
காரணம் (R): முன்னேறிய நாடுகள் வளர்ந்து வரும் நாடுகள் மீது ஆதிக்கத்தை செலுத்தலாம்.

மேற்கூறிய இரண்டு வாக்கியங்களுள் ஒன்று கூற்றாகவும் (கூ) மற்றொன்று காரணமாகவும் (கா) உள்ளது. இந்த சூழலில் கீழ்க் கண்டவைகளுள் எது சரியானது என்று கூறுக.

அ) கூற்று (கூ) காரணம் (கா) இரண்டுமே சரி, கூற்றுக்கான சரியான விளக்கமாக காரணம் உள்ளது.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி ஆனால் கூற்றுக்கான சரியான விளக்கமாக காரணம் இல்லை.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

www.tnschoolbooks.in

II. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு மிகவும் சுருக்கமாக பதில் எழுதுக

1. வரலாற்றின் முடிவு என்றால் என்ன?
2. மக்களாட்சி மத்தியத்துவம் என்பதை விளக்குக.
3. புது மார்க்சியம் பற்றி சிறு விளக்கம் தருக.
4. புதுத் தாராளவாதத்தை தங்கள் நாடுகளில் அமல்படுத்திய தலைவர்களை கூறுக?
5. கருவி மார்க்சியம் என்றால் என்ன?
6. தேசியவாதம் ஆரம்ப கால அடையாளங்களால் உருவானதா?
7. கொள்கை அரசுக் கருவிகள் என்பதை விளக்குக.

III. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சுருக்கமாக பதில் எழுதுக

1. நேர்மறைத் தாராளவாதத்தில் அரசின் பணிகளை விளக்குக.
2. கிராம்சியின் மேலாதிக்கம் என்ற கருத்தை நீ எவ்வாறு புரிந்து கொண்டுள்ளாய்?
3. பொதுவுடைமைவாதத்திற்கு லெனின் ஆற்றிய பங்கை பற்றி விரிவான விளக்கம் தருக.s
4. பொதுவுடைமையும் சமதர்மவாதத்தையும் ஒப்பிடுக.

IV. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவாக பதில் வழங்கவும்

1. சமகாலத் தாராளவாதத்தை ஆய்வு செய்யவும்.
2. மாவோவின் கொள்கையின் முக்கிய தன்மைகளை விவரிக்கவும்.
3. ஃபேபியன் சமதர்மவாதத்தின் சிறப்புத் தன்மைகளை விவரிக்கவும்.
4. பாசிச கொள்கையின் கூறுகளை விவரிக்கவும்.
5. இந்திய தேசியவாதம் தோற்றத்திற்கான காரணிகளை பட்டியலிடுக.

மேற்கோள் நூல்கள்

1. Anderson, B. (1983) Imagined Communities: Reflections on the Origins and Spread of Nationalism. London: Verso
2. Gauba, O.P. (2009) An Introduction to Political Theory, New Delhi: Macmillan Publishers India Ltd.
3. Heywood, Andrew(2003) Political Ideologies: An Introduction, London: Macmillan
4. IGNOU Political Science Study Materials, B.A and M.A
5. Rajeev Bhargava & Ashok Acharya (Ed). (2016) Political theory: An Introduction, New Delhi: Thomson press.
6. Ramasamy, Sushila (2009) "Political Theory – Ideas and Concepts, Chennai: Macmillan India Ltd.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 8_25-09-2018.indd 175 07/12/2022 17:09:34

ICT CORNER

அலகு–8 அரசியல் கொள்கைகள் – பகுதி I

இந்த செயல்பாட்டின் மூலமாக வேறுபட்ட தத்துவங்கக்கள் மற்றும் தத்துவவாதிகளைப்பற்றி கற்றுக்கொள்ளலாம்



அரசியல் கொள்கைகள்

படிகள்

படி 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி "histropedia" பக்கத்திற்குச் செல்க.

படி 2: செயல்பாட்டின் சாளரத்தில் histropedia முகப்பு பக்கம் தோன்றும் வலது பக்கத்தில் உள்ள search ஐ சொடுக்கி communism என தட்டச்சு செய்க.

படி 3: இத்தத்துவத்தின் காலக்கோட்டினை ஆரம்ப காலத்திலிருந்து இன்றைய காலகட்டம் வரை உள்ள இத்தத்துவம் (communism) பற்றிய விவரங்களை காண்பிக்கும்.

படி 4: முழுதும் தேடி வேறுபட்ட தத்துவங்கக்கள் மற்றும் தத்துவவாதிகளைப்பற்றி வெவ்வேறு வருடங்களை சொடுக்கி அக்காலக்கட்டத்தில் உள்ள புரிந்து கற்றுக்கொள்ளலாம். மேலும் இணைப்புகள் மூலம் ஒவ்வொரு தத்துவத்தினை பற்றி அறியலாம்.

படி 1



படி 3

படி 2



படி 4

உரலி :

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

இப்பக்கத்திற்கு தேவைப்பட்டால் Flash Player or Java Script ஐ அனுமதிக்கவும்

http://www.histropedia.com/

www.tnschoolbooks.in

அலகு
9

அரசியல் கொள்கைகள் – பகுதி II



கற்றலின் நோக்கங்கள்

- அமைப்பெதிர்வாதம் கொள்கையின் பொருள், தன்மைகள், வகைகள் மற்றும் சிந்தனையாளர்களைப் புரிந்து கொள்ளுதல்.
- பெண்ணியத்தின் பொருள் தோற்றம் மற்றும் வகைகளை அறிந்து கொள்ளுதல்.
- பெண்கள் முன்னேற்றத்திற்கு இந்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை அறிதல்.
- சமுதாயவாதத்தின் தோற்றம், சிந்தனையாளர்கள் மற்றும் முக்கியத் தன்மைகளைப் பற்றிய தெளிவைப் பெறுதல். மனிதன், சமூகம், உரிமைகள், நீதி ஆகியவற்றைப் பற்றி சமுதாய வாதம் கூறியதை ஆய்வு செய்தல்.
- பின் நவீனத்துவ கொள்கையின் பொருள், சிந்தனையாளர்களைப் படித்தல். உண்மைகள், தனித்தன்மை, அடையாள அரசியல் ஆகியவற்றைக் குறித்து பின் நவீனத்துவத்தின் கருத்துக்களை ஆய்தல்.
- ஆழச் சூழலியல், மேலோட்டமான சூழலியல், சூழலிய அரசியல் கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படைக் கருத்துகளை புரிந்து கொள்ளுதல்.
- இந்தியாவின் முக்கியமான சுற்றுச் சூழல் இயக்கங்களை அறிந்து கொள்ளுதல்.

9.1 அமைப்பெதிர்வாதம் (*Anarchism*)

மனிதனுடைய அடிப்படை குணமாகிய பரஸ்பர ஒத்துழைப்புடன் சுய ஆட்சி முறையை வலியுறுத்தும் அரசியல் கொள்கைக்கு 'அமைப்பெதிர்வாதம்' என்பது பெயராகும். இந்த தத்துவத்தின் ஆங்கிலப் பெயர் 'ANARCHISM' கிரேக்க மொழிச் சொல்லான ANARCHOS-இல் இருந்து தோன்றியது. அமைப்பெதிர்வாதம் என்பது இதன் பொருளாகும். பியரிஜோசப் பிரௌதான் இலாபத்தை திருட்டு என வர்ணித்தார். இத்தத்துவத்தை முதன் முதலில் ஆதரித்தவர்களில், பியரிஜோசப் பிரௌதான் முக்கியமானவர் ஆவார்.

இரஷ்யாவின் சிந்தனையாளரான கிரோபோட்கின், ஃபிரான்ஸ் நாட்டின் அமைதி சிந்தனையாளரான லியோ டால்ஸ்டாய் ஆகியோர் இக்கொள்கையை ஆதரித்தனர்.

எல்லா வகையான அதிகாரங்களையும் அகற்ற வேண்டும். மனிதர்களை, அரசு, தனி சொத்துரிமை, மதம் ஆகியவைகளின் பிடியில் இருந்து விடுவிக்க வேண்டும். மனிதரின் பரஸ்பர ஒத்துழைப்பு அடிப்படையில் புதிய முறையைப் படைக்க வேண்டும் என்று அதிகாரம் இல்லா கொள்கை கூறுகிறது.

அமைப்பெதிர்வாதம் அரசை ஒரு தேவையற்ற தீமையாக கருதுகின்றது. மக்களின் உரிமையை பாதித்து தார்மீக முன்னேற்றத்தைத் தடுப்பதால் அரசு ஒரு தீமையாகும். அரசினால் எந்த பயனும் இல்லை. அது தேவையற்ற ஒன்றாகும். எந்த பணியையும் அது செய்யாததால் அதனை உடனே அழிக்க வேண்டும் என்று இக்கோட்பாடு கூறுகின்றது.

அமைப்பெதிர்வாதம் குழப்பத்தையும் ஒற்றுமையின்மையையும் உருவாக்கவில்லை. இது ஒழுங்கு மற்றும் ஒற்றுமையை

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 177 06/12/2022 12:00:00

கொண்டுவர முயற்சிக்கின்றது. மனிதர்கள் இயற்கையாகவே கூட்டுறவு சிந்தனை கொண்டவர்கள் ஆவர். பரஸ்பர ஒத்துழைப்பை உடையவர்கள் ஆவர். அரசு என்பது ஒரு செயற்கையான அமைப்பு ஆகும். மனிதனின் ஒத்துழைப்பு குணத்தை அது அழிக்கின்றது. மனிதனின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பாதிக்கின்றது. ஆகவே அமைப்பெதிர்வாதம் அரசை அழித்துவிட்டு சுய விருப்பம் அடிப்படையில் ஒத்துழைப்பை ஆணி வேராக கொண்ட புதிய சமுதாயத்தை படைக்க வேண்டும் என்று கூறுகின்றது. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் மகிழ்ச்சியுடன் பொது வாழ்க்கையில் பங்கேற்பார்கள்.

அமைப்பெதிர்வாதம் ஆட்சி இல்லா சமூகத்தை ஆதரிக்கவில்லை. ஆட்சியாளர்கள் இல்லா சமூகத்தைத்தான் ஆதரிக்கின்றது. அமைப்பெதிர்வாதம் சுய உரிமை மற்றும் சுய நிர்ணயம் ஆகிய கோட்பாடுகளை ஆதரிக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் சுய நிர்ணய உரிமையைப் பெற்றிருக்கிறான். அதைப் போலவே ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தனது உடல் மற்றும் உயிர் மீது உரிமை பெற்று இருக்கிறார்கள். அரசு இந்த இரண்டு கோட்பாடுகளையும் மீறுவதால் நாம் அதை அகற்ற வேண்டும் அமைப்பெதிர்வாதம் அரசை மட்டும் அல்ல, குடும்பம், மதம் ஆகிய சமூக அமைப்புகளையும் எதிர்க்கின்றது. சில தத்துவ ஞானிகள் தனி சொத்துரிமையை எதிர்க்கின்றனர்.

அரசை ஒழிக்க வேண்டும் என்று மார்க்சிசம் கூறுவது போலவே அமைப்பெதிர்வாதம் கூறுகின்றது. இருந்தபோதிலும் மார்க்ஸியத்திற்கும் அமைப்பெதிர்வாதத்திற்கும் வேறுபாடுகள் உள்ளன. அமைப்பெதிர்வாதம் அரசை உடனே அழிக்க வேண்டும் என கூறுகின்றது. ஆனால் மார்க்சியம் சமதர்மவாத சமூகம் தோன்றிய பிறகு தானாகவே அரசு உதிர்ந்து போய்விடும் என்று கூறுகின்றது.

ஜெரார்ட் கசேய் 21-ஆம் நூற்றாண்டில் அமைப்பெதிர்வாதத்தை ஆதரித்தார். அரசை அவர் குற்றவாளி நிறுவனம் என்று வர்ணித்தார். அரசு இல்லா சமூகங்களைப் புதிதாக உருவாக்க வேண்டும் என்று கூறினார்.

பல வகையான அமைப்பெதிர்வாதத்தின் உட்பிரிவுகள்:- தத்துவ அமைப்பெதிர்வாதம், சமதர்ம அமைப்பெதிர்வாதம், புரட்சிகர அமைப்பெதிர்வாதம், புதுத் தாராளவாத அமைப்பெதிர்வாதம் என்று பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன. இவற்றிடையே பல வேறுபாடுகள் உள்ளன. இவை பெரும்பாலும் அரசை அகற்ற வேண்டும் என்று கூறுகின்றன. ஆனால் புதுத் தாராளவாத அமைப்பெதிர்வாதக் கோட்பாடு, அரசை அகற்ற வேண்டாம், அதனுடைய அதிகாரத்தை குறைத்தால் போதும் என்கின்றது.

அமைப்பெதிர்

- ❖ எல்லா வகையான அதிகாரங்களும் தேவையற்றது, விரும்பத்தகாதது. ஆகவே மனிதர்கள் மற்றும் குழுக்களின் ஒருங்கிணைப்பால் பரஸ்பர ஒத்துழைப்புடன் புதியதோர் சமுதாயத்தை படைக்க வேண்டும்.
- ❖ அமைப்பெதிர் குழப்பமாகாது அமைப்பெதிர் அராஜகம் ஆகாது.
- ❖ அமைப்பெதிர் சுய உரிமை கோட்பாட்டின்படி வாழ்க்கையை மேற்கொள்வதாகும்.

- ❖ அமைப்பெதிர் ஆதரவாளர்கள் எவ்வித விதிவிலக்கும் இல்லாமல் அதிகார அத்துமீறல்களை எதிர்ப்பவர்கள் ஆவர்.

பல்வேறு, தத்துவ ஞானிகள் அமைப்பெதிர்வாதக் கொள்கையை விமர்சிக்கிறார்கள். மனிதனின் இயற்கை குணத்திற்கு எதிரானது என்று கூறுகிறார்கள். அதனுடைய கருத்துக்கள் ஆழமற்றவை என்றும் விமர்சிக்கிறார்கள். மனிதனுடைய சுயநல குணத்தை அவர்கள் பார்க்கத் தவறிவிட்டார்கள். எல்லா மனிதர்களும் பரஸ்பர ஒத்துழைப்புடன் இருக்கின்றனர்

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 178 06/12/2022 12:00:00

என்று கூற முடியாது. சந்தர்ப்பங்களால் ஈர்க்கப்பட்டு சுயநலமாக அவர்கள் செயல்படலாம். அரசு இல்லா சமுதாயம் பல பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும். பயங்கரவாதம், வலைதளக் குற்றங்கள், சுற்றுசூழல் மாசுபாடு ஆகியவைகள் மனிதகுலத்தை வாட்டி வதைக்கக்கூடும். அரசு இல்லாவிட்டால் தீவிரவாத குழுக்கள் அணு ஆயுதங்களைக் கைப்பற்றி உலகத்தையே அழித்துவிடுவார்கள்.

9.2 பெண்ணியம்

பெண்களும் மனிதர்களே என்ற தீவிர கருத்துக்குப் பெயர் தான் பெண்ணியம்

ஆணிற்கும், பெண்ணிற்கும் உள்ள சமத்துவத்தையும் முழு மனிதத்துவத்தையும் கண்டு கொள்பவர் தான் பெண்ணியவாதி ஆவார்.

-குளேரிஸ்டீபன்

பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடக்கூடிய இயக்கங்களுக்கும் கொள்கைக்கும் பெண்ணியம் என்பது பெயர் ஆகும். ஆண், பெண் சமத்துவத்தை பெண்ணியம் ஆதரிக்கின்றது. நவீன அரசியல் கோட்பாட்டியலில் 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் பெண்ணியம் தோன்றியது. அறிவியல் ரீதியாக ஆணும் பெண்ணும் சமம் என்று நிரூபிக்கப்பட்டதால் பெண்ணியம் தோன்றியது.

பல்வேறு பெண்ணியக் கொள்கைப் பள்ளிகள், அரசியல் அறிவியலில் காணப்படுகின்றன.

1. தாராளவாதப் பெண்ணியம்
2. மார்க்சியவாதப் பெண்ணியம்
3. தீவிரப் பெண்ணியம்
4. சுற்றுச்சூழல் பெண்ணியம்
5. பின் காலனியப் பெண்ணியம்

1. தாராளவாதப் பெண்ணியம்

முதல் கட்ட பெண்ணியமானது 19–ஆம் நூற்றாண்டில் தோன்றியது. ஆண்களுக்கு நிகரான அரசியல் உரிமைகளைப் பெண்களுக்கும் கோரியது. பெண்கள் அடிமையாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வாக்குரிமை உள்ளிட்ட அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டால் பெண்களை ஆண்களுக்கு நிகராக முன்னேற்ற முடியும். அரசு ஆணையும், பெண்ணையும் சமமாக பார்க்கும் ஒரு கருவியாகும். இயற்கையாகவே பெண்களுக்கு எதிரானது அரசு கிடையாது. தாராளவாதப் பெண்ணியம் மேற்கத்திய மக்களாட்சி நாடுகளில் பெண்களுக்கு சமமான வாக்குரிமை பெற்றுத்தந்து மிகப்பெரிய சாதனை செய்தது.

2. மார்க்சியவாதப் பெண்ணியம்

மனிதர்களிடையே சொத்துரிமை தோன்றியதால்தான் பெண்கள் அடிமையாக்கப்பட்டனர். மனித வரலாற்றின் இரண்டாவது காலகட்டமாகிய பண்டைய கால அடிமை முறையில்தான் தனிசொத்துகள் தோன்றின. காரல் மார்க்சின் நண்பரான பிரெட்ரிக் ஏங்கல்ஸ் "குடும்பம், தனி சொத்துகள் மற்றும் அரசின் தோற்றம்" என்ற நூலை எழுதினார். தனிசொத்துகள் தோன்றிய பிறகு ஆண்கள் ஆதிக்கம் செலுத்தினர், பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டனர் என்று அவர் கூறினார். பொதுவுடைமைவாத புரட்சி வர வேண்டும், புரட்சி மூலம் தொழிலாளர்களும் விடுதலை பெறுவார்கள், பெண் இனமும் விடுதலை பெறும், ஆண்களிடம் தனிசொத்துகள் இருக்காது, செல்வங்கள் எல்லாம் எல்லோருக்கும் பொதுவாக இருக்கும் என்று கூறினார்.

3. தீவிரப் பெண்ணியம்

பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் எந்தவித ஏற்றத்தாழ்வும் கிடையாது. பெண்கள் ஆண்களால் சுரண்டப்படுகிறார்கள், ஏமாற்றப்படுகிறார்கள் என்று தீவிரப் பெண்ணியம் கூறுகிறது.

சைமன் டி பீவர் "இரண்டாவது பாலினம்" என்ற நூலை எழுதினார். "பெண்கள் பிறப்பது கிடையாது, உருவாக்கப்படுகிறார்கள்" என்ற கருத்தை இவர் வலியுறுத்தனார். பிறக்கும் பொழுது ஆணும், பெண்ணும் சமமான திறமைகளை பெற்றிருக்கின்றனர். ஆணாதிக்க சமுதாயமும், கலாச்சாரமும் பிரச்சாரங்கள் மூலம் பெண்களை அடிமைப்படுத்துகிறது.

ஆணாதிக்கம் இயற்கைக்கும், நீதிக்கும் எதிராகப் பெண்களை அடிமைப்படுத்துகிறது. உலக முழுவதும் பல்வேறு கலாச்சாரங்கள் பெண்களுக்குப் பலவகையான மதிப்பை வழங்குவது இக்கருத்துக்கு சாட்சி ஆகும்.

கரோல் ஹானிஸ்க் என்ற புகழ்பெற்ற பெண்ணியவாதி "தனிப்பட்ட வாழ்விலும் அரசியல்" (The Personal is Political) என்ற முழக்கத்தின் மூலம் ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்துவதை விளக்கினார். மனிதர்களின் வாழ்க்கையை இரண்டு தளங்களில் ஆண்கள் பிரித்திருக்கிறார்கள். தனிவாழ்க்கை மற்றும் பொது வாழ்க்கை. தனிவாழ்க்கை குடும்பம் சம்பந்தப்பட்டதாகும். இங்கு அன்பும், பாசமும் நிறைந்திருக்கும் போட்டி, பொறாமை இருக்காது.

குடும்பத் தளத்தில் பெண்கள் வசிக்கிறார்கள், இங்கு அரசியல் கிடையாது, மாறாக பொது வாழ்க்கையில் போட்டி, பொறாமை நிறைந்திருக்கும். ஆண்கள் இதில் பங்கேற்கிறார்கள். அரசியல் மற்றும் அதிகாரப் போட்டியில் ஆண்கள் ஈடுபடுகின்றனர். இக்கருத்துக்களை கரோல் ஹானிஸ்க் நிராகரிக்கின்றார். பொது வாழ்வில் மட்டுமல்ல தனிப்பட்ட வாழ்விலும் போட்டி, பொறாமைகள் உள்ளன. கணவன், மனைவி உறவுகளில் கூட அதிகாரம், போட்டி, இருக்கலாம். தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் பெண்கள் அடிமைப்படுத்தப்படுகிறார்கள். தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் அரசியல், அதிகாரத்தை பற்றி பேச வேண்டும். ஆண்களுக்கு இணையான அதிகாரத்தை பெண்கள் பெற வேண்டும். ஆகவே தனிப்பட்ட வாழ்விலும் அரசியல் உள்ளது என்று அவர் கூறினர்.

4. சுற்றுச்சூழல் பெண்ணியம்

இயற்கையையும், பெண்களையும் ஆணாதிக்கும் ஏமாற்றுகிறது. சுற்றுச் சூழல் பெண்ணியத்தின் முக்கிய சிந்தனை சிற்பிகள் பிரான்கோஸ் டி எபோன்னே, ரோஸ்மேரி ரூதர், நேஸ்ரா கிங் மற்றும் வந்தனா சிவா ஆவார்கள்

சுற்றுச்சூழல் பெண்ணியம்

"நாம் பெண்கள் தலைமையில் புவியில் அமைதியான வருங்காலத்தைப் பெறுவோம் அல்லது நமக்கு வருங்காலம் என்ற ஒன்றே இல்லாமல் போகும்"..

– வந்தனா சிவா

இரண்டு வகையான சுற்றுசூழல் பெண்ணிய கருத்துகள் உள்ளன. ஒன்று தீவிரப் பெண்ணியம், இரண்டாவது, கலாச்சாரப் பெண்ணியம். தீவிரப் பெண்ணியம் ஆணாதிக்கத்தை அழித்தால் தான் இயற்கையையும், பெண்களையும் காப்பாற்ற முடியும் என்று கூறுகிறது.

கலாச்சாரப் பெண்ணியம் உணவு தயாரிப்பதிலும், இனத்தைப் பெருக்குவதிலும் பெண்கள் இயற்கைக்கு நெருக்கமானவர்கள் என்று கூறுகிறது. இயற்கை சீரழிவால் ஆண்களை விடப் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். மனித வாழ்க்கையில் வேலைப் பங்கீடு முறையால் இயற்கை சீரழியும் பொழுது பெண்களுக்குத்தான் அதிக இன்னல்கள் தோன்றுகின்றன. இயற்கையையும் பெண்களையும் பாதுகாக்க வேண்டும்.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 180 06/12/2022 12:00:00

5. பின் காலனியப் பெண்ணியம்

பின் காலனி ஆதிக்கப் பெண்ணியம் 1980 களில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் இயக்கமாகவும், தத்துவமாகவும் தோன்றியது. ஆட்ரி லார்டு என்ற பெண்ணியவாதி பின் காலனி ஆதிக்கப் பெண்ணியத்தை தோற்றுவித்தார். "நிபுணரின் கருவிகள் நிபுணரின் வீட்டை ஒருபோதும் உடைக்காது" (The Mater's Tools Will Never Dismantle the Master's House) என்ற முக்கிய நூலை எழுதினார். யாத்திரி ஸ்பிவாக், சந்தரா தல்பதே மொகந்தி, எதல் க்ராலே ஆகியோர் பின் காலனி ஆதிக்கப் பெண்ணிய வாதிகள் ஆவர்.

ஆட்ரிலார்டு கூறினார். " எல்லா பெண்களும் ஒரே மாதிரியான அடக்குமுறையால் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறக்கூடாது. அவ்வாறு நினைத்தால் ஆணாதிக்கத்தின் பல வகையான தன்மைகளை நாம் பார்க்கத் தவறிவிடுவோம். எவ்வாறு ஆணாதிக்க கருவிகள் பயன்படுத்தப்படுகிறது என்ற விழிப்புணர்வு இல்லாமல் பெண்கள் இருப்பார்கள். வெள்ளைக்கார ஆணாதிக்கத்தில் ஆப்பிரிக்க, அமெரிக்கப் பெண்ணாக நான் சந்தித்த சோதனைகள், அனுபவங்கள் தவறாக சித்தரிக்கப்படுகின்றன, சிறுமைப்படுத்தப்படுகின்றன."

பின் காலனி ஆதிக்கப் பெண்ணியம் மேற்கத்தியப் பெண்ணிய இயக்கங்களின் கருத்துகளை எதிர்க்கிறது. அவர்களின் அனுபவங்களை உலகம் முழுவதும் உள்ள பெண்களின் அனுபவம் என்று சித்தரிப்பதை இது எதிர்க்கிறது, உலகம் முழுவதும் பெண்கள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. வர்க்கம், இனம், மதம், நாடு போன்ற காரணிகளால் பெண்களிடையே பல வேறுபாடுகள் உள்ளன. மேற்கத்தியப் பெண்ணிய கருத்துக்கள் உலகின் பிற பகுதிகளில் உள்ள பெண்களின் நிலையைப் பிரதிபலிப்பதில்லை. ஆசிய, ஆப்பிரிக்க பெண்கள் மேற்கத்தியக் காலனி ஆதிக்கத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்கத்தியப் பெண்ணியவாதிகள் காலனி ஆதிக்கதாக்கத்தை சந்திக்காததால் அதனை கவனிக்க தவறுகிறார்கள். ஆப்பிரிக்கக் கண்டத்தின் பெண்கள் இனவாதம், அடிமை முறை, கட்டாய குடியேற்றம் போன்ற சோதனைகளைச் சந்தித்தனர். மேற்கத்தியப் பெண்கள் இவைகளைச் சந்திக்கவில்லை. மேற்கத்தியப் பெண்ணியவாதம் தங்களை படித்த, அரசியல் விழிப்புணர்வு உள்ள, நவீன சக்தி பெற்ற பெண்களாகக் கருதுகிறது. ஆசிய, ஆப்பிரிக்க பெண்களை அதிகாரமில்லாத, விழிப்புணர்வு இல்லாத, செயலற்ற இனமாகக் கருதுகிறது. இது ஒரு தவறான அணுகுமுறையாகும். ஆசிய, ஆப்பிரிக்கப் பெண்கள் காலனி ஆதிக்கம், ஆணாதிக்கம் என்ற இரண்டு சுரண்டல் சக்திகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பின் காலனியப் பெண்ணியம் மேற்கத்திய காலனி ஆதிக்கத்தை விமர்ச்சிக்கின்றது. மேலும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் அரசியல் சிந்தனைகளில் பெண்கள் சந்திக்கும் தனிப்பட்ட பிரச்சனைகள் பற்றி கவனம் செலுத்துவது இல்லை என்றும், பின் காலனியப் பெண்ணியம் கூறுகிறது.

இந்திய அரசும் மகளிர் அதிகாரம் ஏற்றலும்

இந்திய அரசு பெண்களின் முன்னேற்றத்திற்காக முக்கிய திட்டங்களை அமல்படுத்தியுள்ளது. 73-வது மற்றும் 74-வது அரசியல் சாசன திருத்தச் சட்டங்கள் கிராம, நகர சுய ஆட்சி அமைப்புகளில் மூன்றில் ஒரு பங்கு இடங்களைப் பெண்களுக்கு ஒதுக்கியுள்ளன. கடந்த இருபது ஆண்டுகளாக அமலில் இருக்கும் மகளிர் இட ஒதுக்கீடு பெண்களுக்கு முன்னேற்றத்தையும் அரசியல் சக்திகளையும் வழங்கியுள்ளது. உச்ச நீதிமன்றம் "விஷாகா வழிமுறைகள்" என்ற பாதுகாப்பினை தனது தீர்ப்பின் மூலம் பெண்களுக்கு வழங்கியுள்ளது. பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலின தொந்தரவுகளை தடுப்பதற்கு விஷாகா வழிமுறைகள் முயற்சிக்கின்றன. பாராளுமன்றம் பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலின தொந்தரவுகளை தடை செய்து சட்டம் இயற்றி உள்ளது. அகப் புகார் குழு மற்றும் தல புகார் குழு ஆகியவைகள் பணியிடங்களில் உருவாக்கப்பட வேண்டும் என்று இச்சட்டம் கூறுகிறது. முன்பாக பாராளுமன்றம் 2005-ஆம் ஆண்டு குடும்ப வன்முறை பெண்கள் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது.

முடிவாக பாலின சமத்துவம் மனித குலத்தின் பாதி அளவாக இருக்கின்ற பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். பெண்ணியம் இதற்கு முயற்சிகின்றது.

விவாதம்



நாடாளுமன்றத்திலும் சட்ட மன்றத்திலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கோரப்படுகிறது. மூன்றில் ஒரு பங்கு இடங்கள் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது இந்த கோரிக்கையின் முக்கிய சாரமாகும். நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் மகளிர் இட ஒதுக்கீடு கோரி வகுப்பில் விவாதம் செய்க.

9.3 சமுதாயவாதம்

சமுதாயவாதம் ஓர் அரசியல் கோட்பாடாக 1980 – களில் தோன்றியது. மைக்கேல் சாண்டல் என்னும் அறிஞர் "தாராள வாதமும் நீதியின் எல்லைகளும்" (Liberalism and the Limits of Justice) என்ற நூலை எழுதினார். அந்நூலில் புதுத் தாராளவாதத்தையும் ஜான் ரால்ஸ் அவர்களின் நீதி கோட்பாட்டையும் அவர் விமர்சித்தார்.

1840-களில் ஆங்கிலேய அறிஞரான குட்வின் பார்மி (Communitarian) சமூகவாதி என்ற சொல்லை உருவாக்கினார். இருந்தபோதிலும் சமூதாய வாதம் 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில் முழு வடிவம் பெற்றது.

சமுதாயவாதம், தாரளவாதத்தையும் மார்க்கிசியத்தையும் எதிர்த்து தோன்றியது. சமுதாயவாதமானது, தாராளவாதம் தனி நபர்களுக்கு அதிக, தேவையற்ற முக்கியத்துவம் வழங்குவதாக குற்றம் சாட்டியது. சமுதாய வாதம் மார்க்சியித்தையும் வகுப்புவாதம் என நிராகரித்தது. தாராளவாதம் உலகில் பெரும் பகுதிகளில் பின்பற்றப்பட்டதால் சமுதாய வாதம் அதனை அதிகமாக விமர்சித்தது.

சமுதாயத்தின் முக்கியத்துவம்

சமுதாயவாதம் மனிதன் வெற்றிடத்தில் பிறப்பதில்லை என வாதிடுகின்றது. மனிதன் ஒரு கலாச்சார, சமூக விலங்கு ஆவான். மனிதன் குறிப்பிட்ட சமுதாயத்தில் கலாச்சாரத்தில் பிறக்கின்றான். மனிதனுடைய நம்பிக்கை, நடத்தை, திறன்கள், திறமைகள், அணுகுமுறைகள் எல்லாம் அவனுடைய

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 182 06/12/2022 12:00:01

உங்களுக்குத் தெரியுமா?

இராபர்ட் டி.புட்னம் என்ற அறிஞர் சமுதாய வாதம் தோன்றுவதில் முக்கிய பங்காற்றினார். பௌலிங் எனப்படும் விளையாட்டை புட்னம் ஆய்வு செய்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு பெரும்பான்மையான அமெரிக்கர்கள் பௌலிங் விளையாடினார்கள். தங்களிடையே சமூக தொடர்புகள், அறிவு, திறமைகள் ஆகியவற்றை வளர்த்துக் கொள்வதற்கு பௌலிங் விளையாட்டை பயன்படுத்திக் கொண்டனர்.

நாளடைவில் தொலைக்காட்சி, வலைத்தளம் போன்ற புதிய வசதிகள், பொழுதுப் போக்கு கருவிகள் தோன்றின. அதிகமாக இந்த புதிய தொழில்நுட்ப பொழுதுப்போக்குகளில் மக்கள் ஆர்வம் செலுத்தினர். பௌலிங் விளையாட்டு மக்களிடையே செல்வாக்கை இழந்தது. மக்களின் சமூக நடவடிக்கைகள், தொடர்புகள் மறையத் தொடங்கின. காலப் போக்கில் அரசியல் ஆர்வமும் மக்களிடையே குறைந்தது. மக்களாட்சியின் வலிமையை குறைக்கும் வகையில் மக்களின் அரசியல் ஆர்வமின்மை பெரிதானது. மக்களாட்சி வலுவாக இருக்க வேண்டும் என்றால் மக்களிடையிலான சமூகத் தொடர்புகள் அதிகமாக வேண்டும்.

சமுதாயத்தால் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு நபரும் சமுதாயம் வழங்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி வாழ்கிறார்கள். மனிதன் அணுவைப் போல தனியாக வசிப்பதில்லை. சமுதாயத்துடன் பின்னி பிணைந்து வாழ்கிறான். மனிதன் சமுதாயத்திலிருந்து முற்றிலும் சுதந்திரமாக தடையில்லாமல் இயங்குவதில்லை(Not unencumbered Self). மாறாக அவன் சமுதாயத்தில் வேரூன்றி இருக்கிறான் (Situated Self).

எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் பிறக்கும், வசிக்கும் குழந்தை தமிழ் மொழியில் சரளமாக பேசுகின்றது. ஜப்பானில் பிறந்து, வசிக்கும் குழந்தை ஜப்பானிய மொழியில் சரளமாக உரையாடுகின்றது. கணினித் தொழில்நுட்பம் நிறைந்த நாட்டில் வாழும் மனிதர் கணினி நிபுணராக உருவாகிறார். அதே சமயத்தில் தகவல் தொழில்நுட்பம் முன்னேறாத நாடுகளில் வசிக்கும் நபர் அத்துறையில் நிபுணராக பெரும்பாலும் இருப்பதில்லை.

உரிமைகள் மற்றும் கடமைகளை சமநிலைப்படுத்துதல்

அரசுக் கோட்பாடு

பொது நலனை மேம்படுத்தும் கருவியே அரசு என்று சமுதாயவாதம் கூறுகின்றது. பொது நலன் என்ற கருத்து எல்லா சமுதாயத்திலும் உள்ளது. ஒவ்வொரு சமுதாயமும் நோக்கங்கள், இலட்சியங்கள், நடவடிக்கைகளை எல்லோருடைய அடிப்படை முன்னேற்றத்திற்காக உருவாக்குகின்றன. பொது நலனை மேம்படுத்துவதற்காக இவைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. அரசு பொது நலனை நிறைவேற்றும் முயற்சிகளில் ஈடுபடுகின்றது. பொது நலனை சிதைக்கும் நடவடிக்கைகளை அது தடை செய்கின்றது. மேலும் சமுதாயவாதம் மக்களாட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை ஆதரிக்கின்றது. சமுதாயத்தின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கும், சமுதாயத்தின் மீது பொறுப்புணர்வு கொண்ட அரசு தான் நல்ல அரசு என்று சமுதாயவாதம் கூறுகின்றது.

www.tnschoolbooks.in

உரிமைகள் கோட்பாடு

உரிமைகளும் கடமைகளும் நெருங்கிய தொடர்புடையவை என்று சமுதாயவாதம் கூறுகின்றது. தாரளவாதத்தின் தனிநபர் சுய ஆட்சி மற்றும் உரிமைகள் மீது கொண்டுள்ள அளவு கடந்த பற்றை சமுதாயவாதம் விமர்சிக்கின்றது. மாறாகச் சமுதாயத்தின் நலன் தான் முக்கியமாகும் என்று கூறுகிறது. சமூக, பொது நலனுக்காகத் தனி நபர் உரிமைகளைக் கட்டுப்படுத்தலாம் என சமுதாயவாதம் வாதிடுகிறது. ஒவ்வொரு மனிதனும் தனது நலன் பற்றிய சிந்தனையைப் பெற்றிருக்கலாம், ஆனால் பொது நலன் என்ற கருத்துக்கு அடிபணிந்து இயங்க வேண்டும்.

'நேர்மறை உரிமைகள்' என்ற புதிய கருத்தை சமுதாயவாதம் ஆதரிக்கின்றது. அரசு மானியத்துடன் கல்வி, வீடு வசதி, பாதுகாப்பான சுற்றுச்சூழல், எல்லோருக்கும் சுகாதாரம் போன்ற உரிமைகளை சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் வழங்குவது அரசின் கடமையாகும்.

நீதிக் கருத்து

சமுதாயவாதம் ஜான் ரால்ஸின் நீதிக் கோட்பாட்டை நிராகரிக்கின்றது. நீதி என்பது உலகளாவியது. ஏனென்றால் அது மனிதனில் பகுத்தறிவில் உருவாகிறது என்ற ஜான் ரால்ஸின் கருத்தை சமுதாயவாதம் ஏற்கவில்லை. உலகம் முழுவதும் பொருந்தக் கூடிய நீதிக் கோட்பாடு என்று ஒன்று இல்லை. ஒவ்வொரு சமுதாயமும் தனக்கென நீதிக் கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமுதாயத்திற்கு சமுதாயம் நீதிக் கோட்பாடு மாறுபடும் என்று சமுதாயவாதம் கூறுகின்றது.

சுருக்கமாக கூறினால், சமுதாயவாதம் மனிதனின் வாழ்க்கையில் சமுதாயம் இன்றியமையாதது என வாதிடுகின்றது. சமுதாயத்தில் 'பொருத்தப்பட்ட மற்றும் அமைக்கப்பட்ட மனிதன்' (Situated and Embedded Man) என்ற கருத்து சமுதாயவாதத்தின் ஆணி வேராக உள்ளது. அரசு மக்களுக்கு நேர்மறை உரிமைகளை வழங்கிப் பொதுநலனை மேம்படுத்த வேண்டும், பாதுகாக்க வேண்டும். ஆனால் சமுதாயவாதம் வருங்காலத்தில் சமூக அல்லது கூட்டு சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும் எனக்கூறி தாராளவாதம் எதிர் விமர்சனம் செய்கிறது.

9.4 பின்நவீனத்துவம்

நவீனத்துவத்தை எதிர்த்துத் தோன்றிய ஒருங்கிணைந்த சில கருத்துக்களைப் பின் நவீனத்துவம் என அழைக்கின்றோம். பிரட்ரிக் நீட்சே, ஜாக் டெரிடா, ஃபுகோ, லிடார்ட் ஆகியோர் பின் நவீனத்துவத்தை ஆதரித்தனர்.

நவீனத்துவம் அரசியல் கோட்பாட்டில் 200 ஆண்டுகளுக்கும் மேலாக ஆதிக்கம் செலுத்தி வந்தது. பகுத்தறிவு, பிரபஞ்சத்துவம், ஒற்றைக் காரணி உலக விளக்கமுறை ஆகிய கோட்பாடுகள் நவீனத்துவத்தின் முதுகெலும்பாக இருக்கின்றன. இக்கோட்பாடுகளை பின்நவீனத்துவம் நிராகரிக்கின்றது. மாற்றுச் சிந்தனைகளை வழங்குகின்றது. மேற்கத்திய அரசியல் கோட்பாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்பு பின் நவீனத்துவம் தோன்றி வளர்ந்துள்ளது

கடவுள் இறந்துவிட்டார், அவரை நாம் கொன்று விட்டோம்.
– பிரட்ரிக் நீட்சே

பிரட்ரிக் நீட்சே, பின் நவீனத்துவத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார். "கடவுள் இறந்துவிட்டார்" என்பது அவருடைய புகழ்பெற்ற கூற்று ஆகும்.

நவீனத்துவம் உலகளாவியமுறை, ஒற்றைக்காரணி உலகவிளக்கமுறை ஆகியவற்றை ஆதரிக்கின்றது. பின் நவீனத்துவம் இவைகளை நிராகரிக்கின்றது. ஒரு காரணி மூலம் இந்த உலகத்தை நம்மால் விளக்க முடியாது. ஒரு உன்னத உண்மை அல்லது காரணி உலகத்தை இயக்குகிறது என நாம் கூற முடியாது. நமது வாழ்க்கை, பல பாகங்களைக் கொண்டது. ஒரு காரணியால்

அதனை விளக்க முடியாது. காரல் மார்க்ஸ், பிரட்ரிக் ஹெகல் போன்ற தத்துவஞானிகள் கூறியது ஏற்புடையது அல்ல. காரல் மார்க்ஸ் மனித வாழ்க்கையின் அடிப்படைக் காரணி பொருளாதாரம் என்றார். தனிச்சொத்துரிமையை நீக்கி விட்டால் உலகப் பிரச்சனைகளை தீர்த்து விடலாம் என்று மார்க்ஸ் கூறினார்.

ஜெர்மானிய சிந்தனையாளரான பிரட்ரிக் ஹெகல் உலக ஆன்மாவின் உருவாக்கமே உலகம் என்று கூறினார். உலகத்தை ஆன்மா மூலமாக விவரித்தார். பின்நவீனத்துவம் இது தவறு என்று கூறுகிறது. உலகை விளக்குவதற்கு ஒரு காரணி போதாது, பல காரணிகளால் தான் உலகத்தை விளக்க முடியும். கலாச்சாரம், மொழி, மதம், அரசியல் பொருளாதாரம் உள்ளிட்ட பல காரணிகளின் உதவியுடன் தான் உலகத்தை விளக்க முடியும்.

உண்மை ஒருமையில் இருப்பதில்லை, பன்மையில் இருக்கின்றது. எந்த ஒரு விஷயத்திலும் உண்மை என்ற ஒன்று இல்லை, உண்மைகள் தான் உள்ளன. எடுத்துக்காட்டாக, ஒரு தலைவரையோ, வரலாற்று நிகழ்ச்சியையோ நாம் கூறலாம். ஒவ்வொரு தலைவரைப் பற்றியும் பலவித கருத்துக்கள் உள்ளன. ஒரு சிலர் அந்தத் தலைவரை தீர்க்கத்தரிசி என்பர்.



இன்னும் சிலர் அவரை வார்த்தை ஜாலம் மட்டுமே உள்ளவர் என்பர். ஒரே தலைவர் நல்லவர், கெட்டவர், தூயவர், சுயநலவாதி என பலநிலைகளில் விமர்சிக்கப்படுகிறார். பார்பவர் கண்களில் தான் உண்மை இருக்கின்றது. கருப்பு மற்றும் வெள்ளை என்று இரண்டு நிறங்களில் தான் உலகம் உள்ளது எனக்கூற முடியாது. ஒரு கோட்டில் கருப்பும், வெள்ளையும் இரண்டு கடைசி புள்ளிகள் என்றால், இரண்டிற்கும் இடையில் இதர பல நிறங்கள் உள்ளன. இதுபோலத் தான் மனித வாழ்க்கையும் உலகில் உள்ளது.

> உலகில் உண்மைகள் என்று எதுவும் கிடையாது. விளக்கங்கள் மட்டுமே உள்ளன.
>
> - பிரட்ரிக் நீட்சே

ஜாக் டெரிடா என்பவர் ஒரு பிரான்சு நாட்டின் தத்துவ ஞானி ஆவார். இவர் பின் நவீனத்துவத்தை ஆதரித்தார். தகர்ப்பமைப்பு அல்லது கட்டுடைத்தல் என்ற அணுகுமுறையை உரைகளின் பொருளைப் புரிந்து கொள்வதற்கு அவர் உருவாக்கினார்.

ஒவ்வொரு உரையிலும், பல பொருள்கள் உள்ளன. மனிதனுடைய மொழி இன்னும் வளர்ச்சி அடையவில்லை. ஆகவே எழுத்தாளர்கள் தங்கள் எல்லாக் கருத்துக்களையும் உரைமூலம் புரியவைக்க முடியாது. உரையைப் படிப்பவர்கள் தங்களின் புரிதலுக்குத் தகுந்தவாறு உரையின் பொருளை உருவாக்குகிறார்கள். ஒரே உரையில் பல பொருள்கள் உள்ளன. தகர்ப்பமைப்பின் மூலமாகத்தான் உரையைப் புரிந்து கொள்ள முடியும்



தகர்ப்பமைப்பு என்றால் என்ன?

"வாசிப்பதற்கும், விளக்குவதற்கும், எழுதுவதற்கும் ஆன விதிகள்".

ஜாக் டெரிடா

நவீனத்துவத்தின் உலகளாவிய முறையைப் பின்நவீனத்துவம் நிராகரிக்கின்றது. அதற்கு மாறாக

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 185 06/12/2022 12:00:02

www.tnschoolbooks.in

தனித்துவத்தை அது ஆதரிக்கின்றது. ஒரு முழு அமைப்பை விட, அதுனுடைய பகுதிகளே முக்கியம் என்று கூறுகின்றது. எடுத்துக்காட்டாக, நவீனத்துவம் உலகம் முழுவதற்கான உரிமைகள் கோட்பாட்டை ஆதரித்தது. பின்நவீனத்துவம் இதனை மறுக்கின்றது. பெண்கள், பழங்குடி மக்கள் போன்ற வஞ்சிக்கப்பட்ட, தனித்துவமான குழுக்களின், மக்களின் உரிமைகளுக்கு முக்கியத்துவம் தருகின்றது.

நவீனத்துவம் அமைப்பு ரீதியான மாற்றங்களுக்கு முக்கியத்துவம் தருகின்றது. பின்நவீனத்துவம் குறிப்பிட்ட சமூகக் குழுக்களின் மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் வழங்குகின்றது.

பின்நவீனத்துவம் அடையாள அரசியலை ஆதரிக்கின்றது. குறிப்பிட்ட நலிவடைந்த எளிமையான சமூகக குழுக்கள் ஆதிக்க முறைக்கு எதிராக தங்களது ஜாதி, இனம், பாலினம் அடிப்படையில் ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அடையாள அரசியல் என்பது பெயராகும். இந்த குழுக்களின் உறுப்பினர்கள் தங்களை பாசத்துடன் "நாம்" என்று அழைக்கிறார்கள். இவர்கள் எதிர்க்கும் குழுக்களின் உறுப்பினர்களை "அவர்கள்" என்று அழைக்கிறார்கள். குறிப்பிட்ட அடையாளம், இடம் சார்ந்த மக்களின் சக்தி ஏற்றலுக்கு அடையாள அரசியல் முயற்சிக்கின்றது.

பின்நவீனத்துவத்தை பல்வேறு சிந்தனையாளர்களும், அறிஞர்களும் விமர்சித்து உள்ளனர். ஆலன் கிர்பி என்ற பிரிட்டானிய கலாச்சார விமர்சகர் பின் நவீனத்துவம் முடிந்துவிட்டது என்று கூறினார். ஏனென்றால், பின் நவீனத்துவத்தின் கலாச்சார காலம் முடிந்து எண்மின் (Digital) நவீனத்துவம் உருவாகி உள்ளது என்று ஆலன் கிர்பி கூறினார்.

அமெரிக்காவில் கருப்பு இன மக்கள் போராட்டம்.

9.5 சுற்றுச்சூழலியல்

நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் கொண்டு வந்த முன்னேற்றம் நமது பூமியின் சுற்றுச்சூழலை அழித்து வருகிறது. ஓசோன் அழிதல், பருவ நிலை மாற்றம், அமில மழை போன்ற சுற்றுச்சூழல் பிரச்சனைகள் நம்மை அச்சுறுத்துகின்றன. இயற்கையை அழிக்கும், முன்னேற்றத்திற்கு எதிரான இயக்கம் மற்றும் கொள்கைக்கு சுற்றுச்சூழலியம் என்பது பெயராகும். அகண்ட பிரபஞ்சத்தில் பூமியில் மட்டுமே நாம் வசிக்க முடியும். ஆகவே, பூமியைக் காப்பாற்றுவது அவசியமாகிறது.

எல்லோருடைய தேவைகளையும் இயற்கையால் பூர்த்திச் செய்ய முடியும். ஒருவருடைய பேராசையையும் அதனால் பூர்த்தி செய்ய முடியாது. – மகாத்மா காந்தி

ஆழச் சூழலியல் மற்றும் மேலோட்டமான சூழலியல்

தத்துவ விவாதம்

மனிதனுக்கும், சூழலுக்கும், வளர்ச்சிக்கும், சூழ்நிலைக்கும் இடையில் உள்ள தொடர்புகளைப் பற்றி விரிவான விவாதம் உள்ளது. ஆழச் சூழலியல் - மேலோட்டமான சூழலியல் என்ற விவாதம் உள்ளது.

மேலோட்டமான சூழலியல்

மனிதனை முன்னிறுத்தி, பயனுள்ள கருவியாக இயற்கையை அணுகும் கொள்கைக்கு மேலோட்டமான சூழலியல் என்பது பெயராகும். அமெரிக்கத் தத்துவ ஞானியான அந்தோணி வெஸ்டன் இக்கோட்பாட்டைத் தீவிரமாக ஆதரித்தார். மனிதனுக்கு இந்த உலகில் முதன்மையான இடத்தை இக்கோட்பாடு வழங்குகிறது. இயற்கை மனித நலனுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. எல்லா உயிர்களும் இயற்கைச் செல்வங்களும் மனித வாழ்விற்காக உள்ளன.

மனித முன்னிறுத்தல் (Anthroprocentricism)



சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கு தொழில் நுட்பத் தீர்வுகளை இக்கோட்பாடு ஆதரிக்கின்றது. இயற்கை மாசுபடுவதைத் தடுப்பதற்கு மாற்று எரிசக்திகளை உருவாக்க வேண்டும். இவ்வணுகுமுறை மூன்று கருத்துகளை(R-களை) ஆதரிக்கின்றது. அவை i) பயன்பாட்டைக் குறைத்தல் (Reduce), ii) மறுபயன்பாடு (Reuse), iii) மறுசுழற்சி (Recycle) ஆகியவைகளாகும். இயற்கைச் செல்வங்களை சிக்கனமாக மறுசுழற்சி அடிப்படையில் பயன்படுத்த வேண்டும்.

பயன்பாட்டைக் குறைத்தல் (Reduce)
மறுபயன்பாடு (Reuse)
மறுசுழற்சி (Recycle)

ஆழச் சூழலியல்

நார்வே நாட்டின் இயற்கைத் தத்துவ ஞானியான ஆர்ன் நேயஸ்(Arne Naess) 1973 ஆம் ஆண்டு இக்கருத்தை உருவாக்கினார். மகாத்மா காந்தி, ரஸேல் கார்ஸன் ஆகியோரிடமிருந்து இவர் ஊக்கம் பெற்றார். புவிக்கோள் மூன்று அங்கங்களைப் பெற்று இருக்கின்றது. அவைகள் i) மனிதர்கள், ii) மற்ற உயரினங்கள், iii) உயிரற்ற பொருட்களும் விசைகளும் ஆகும். பூமியில் வாழும் கோடிக்கணக்கான உயிர்களில் மனித இனமும் ஒன்று. மனித இனத்தை முன்னிறுத்துவதை நாம் கைவிட வேண்டும்.



மனிதர் அல்லா உயிரினங்களுக்கும் அடிப்படை மதிப்பு, அடையாளம் ஆகியவை உள்ளன. எல்லா உயரினங்களும் சமமான முக்கியத்துவத்தை (Bio Centric Equality) பெற்றிருக்கின்றன. இயற்கையை கவனத்துடன் பயன்படுத்தி மனிதர்கள் வாழ வேண்டும். பல்லுயிர்களைப் பாதுகாக்க வேண்டும். பேராசையால் மனித இனம் பல உயிர்களை அழித்து வருகிறது. உடனடியாக மக்கள் தொகையை இப்பூமியில் கட்டுப்படுத்த வேண்டும். மக்கள் தொகைப் பெருக்கம் சுற்றுச்சூழலை அழிக்கின்றது.

> **"மனிதர்கள் சுற்றுச்சூழலின் பகுதிகளாவர். வெற்றியாளர்கள் கிடையாது"**
>
> **-ஆல்டோ லெபோல்ட்**

சுற்றுச்சூழல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நாம் நமது தொழல் நுட்பத் தத்துவம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றை உடனடியாக மாற்ற வேண்டும். மனிதர்கள் "இயற்கையான நபர்கள்" ஆவர். நமது நுகர்வுக் கலாச்சாரத்தை மாற்ற வேண்டும். நமது "சூழலியல் தடம்" குறைக்கப்பட வேண்டும். இயற்கையை மிகவும் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். சுற்றுச்சூழல் மீது மனிதர்களின் தாக்கத்தை ஆழமாக, தத்துவமாக விவாதிப்பதால் இந்தக் கொள்கைக்கு ஆழச்சூ ழலியல் எனப் பெயரிடப்பட்டது.

> **புவி நமக்குச் சொந்தமானது கிடையாது. நாம் தான் புவிக்கு சொந்தமானவர்கள்.**

ஆழச் சூழலியல் – மேலோட்டமான சூழலியல் கருத்து முரண்பாடுகள்

ஆழச் சூழலியலின் எட்டு முக்கிய கருத்துகளின் சுருக்கம்	மேலோட்டமான சுழலியலின் எட்டு முக்கிய கருத்துகளின் சுருக்கம்
1. புவியில் உள்ள எல்லா உயிரினங்களும் அடிப்படை மதிப்பை பெற்று இருக்கின்றன.	1. புவியில் உள்ள அனைத்து உயிரினங்களும் மனிதனின் தேவைக்காக உள்ளன.
2. இவ்வுலகில் உள்ள எல்லா உயிரினங்களும் (சிறியவையோ, பெரியவையோ) புவியின் சிறப்பு தன்மைக்கு முக்கிய பங்கை ஆற்றுகின்றன.	2. சிறிய உயிரினங்களை விட மனிதன் போன்ற பெரிய உயிரினங்கள்தான் முக்கியமானவைகள் ஆகும்.
3. மனிதர்கள் தங்களது அடிப்படை தேவைக்கு மட்டுமே மற்ற உயிரினங்களைப் பயன்படுத்த வேண்டும்.	3. மனிதர்கள் எல்லா இயற்கை வளங்களையும், உயிரினங்களையும் தங்களது பொருளாதார நலனுக்காக பயன்படுத்தலாம்.
4. உலகில் மனித மக்கள் தொகையை குறைப்பது மற்ற உயிரினங்களின் நலனுக்கு நல்லது ஆகும்.	4. மனித மக்கள் தொகை கட்டுப்பாடு இன்றி வளரலாம்.
5. உலகில் மனிதனின் தலையீடு அதிகமாகவும், மோசமாகவும் உள்ளது.	5. தொழில் நுட்ப வளர்ச்சி எல்லா சிக்கல்களையும் நீக்கும்.
6. பொருளாதாரம், தொழில்நுட்பம், கொள்கை ஆகிய துறைகளில் மனிதனின் கொள்கைகள் உடனடியாக, தீவிரமாக மாற்றப்பட வேண்டும்.	6. பொருளியல் வாதமும், நுகர் கலாச்சாரமும் மனித சமூகத்தை ஆள வேண்டும்.
7. வாழ்க்கையின் நிலையை விட வாழ்க்கை தரம் முக்கியமானது.	7. மனிதனின் வாழ்க்கை நிலை உயர்ந்து கொண்டே இருக்க வேண்டும்.
8. மேற்கண்ட உண்மைகளை உணர்ந்த அனைவரும் மாற்றத்தை கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.	8. சுற்றுச்சூழல் பிரச்சனைகளை நிபுணர்களிடம் விட்டுவிட வேண்டும். அவர்கள் தீர்வுகளை வழங்குவார்கள். மற்றவர்கள் சூழலியப் பிரச்சனைகளில் தலையிடக் கூடாது.

சூழலியலும் அரசியல் கோட்பாடும்

ஆண்ட்ரு ஹேவுட் என்ற புகழ் பெற்ற அரசியல் அறிஞர் அரசியல் கோட்பாட்டியலில் சூழலியலை மூன்று வகையாக பிரித்தார்.

(அ) சமூகச் சூழலியல்

(ஆ) நவீனச் சூழலியல்

(இ) ஆழச் சூழலியல்



(அ) சமூகச் சூழலியல்

அமெரிக்க தத்துவ ஞானி முரே புக்சின் சமூக சூழலியல் என்ற கருத்தை உருவாக்கினார். சமூக சூழலியலில் மூன்று வித அணுகுமுறைகள் உள்ளன.

1. சூழலிய சமதர்மவாதம்
2. சூழலிய அமைப்பெதிர்வாதம்
3. சூழலியப் பெண்ணியம்

1. சூழலிய சமதர்மவாதம்

ருடால்ப் பரோ சூழலிய சோசலிசத்தை 'சிவப்பில் இருந்து பசுமைக்கு' (From Red to Green) என்ற நூலில் விவரித்தார். முதலாளித்துவத்தை இயற்கையின் எதிரியாக இந்த அணுகுமுறை பார்க்கின்றது. நுகர் கலாச்சாரத்தின் மூலமாக முதலாளித்துவம் இயற்கையை சீரழித்துவிட்டது. கட்டுபாடு இல்லாத சொத்துரிமை புவிக் கோளின் நலத்தையும் வளத்தையும் கெடுத்துவிட்டது. அரசியலில் புதிய அணுகுமுறை வேண்டும். சமதர்மவாதமும், சூழலியிலும் ஒன்று சேர வேண்டும். சமதர்மவாதம் மட்டுமே சுற்றுச்சூழலைக் காப்பாற்றும். அரசுக்குச் சமதர்மவாத திசையையும், தன்மையையும் வழங்கி இயற்கையைக் காப்பாற்ற வேண்டும்.

2. சூழலிய அமைப்பெதிர்வாதம்

முர்ரே புக்சின் இந்த அணுகுமுறையை ஆதரித்தார். அதிகாரம் சூழலியலின் எதிரி என்று கூறினார். அரசு, மதம், குடும்பம் போன்ற போர்வையில் அதிகாரம் மனிதர்களை வாட்டிவதைக்கின்றது. மனிதனுடைய பரஸ்பர ஒத்துழைப்பு உணர்வை அதிகாரம் தடை செய்துள்ளது. இயற்கையாகவே மனிதன் பரஸ்பர ஒத்துழைப்புடன் வாழ்பவன். ஆகவே அதிகாரத்தை நீக்கி விட்டு பரஸ்பர ஒத்துழைப்புடன் புதியதோர் சமூகத்தை உருவாக்கி மனிதனையும் இயற்கையையும் காப்பாற்ற வேண்டும்.

3. சூழலியப் பெண்ணியம்

கரோலின் மெர்ச்சன்ட் 'இயற்கையின் மரணம்' (The Death of Nature) என்ற நூலில் சூழலியப் பெண்ணியத்தை விவரித்தார். ஆணாதிக்கம் இயற்கையின் எதிரியாகும். பெண்ணியம் இயற்கையின் தோழி ஆகும். ஆணாதிக்கம் பெண்கள் மீது மட்டும் அல்ல, இயற்கையின் மீதும் ஆணின் ஆதிக்கத்தை உருவாக்குகின்றது. பெண்களையும், இயற்கையையும் பயன்பாட்டு பொருளாக பாவிக்கின்றது. பெண்களுக்கும் இயற்கைக்கும் உள்ள அடையாளம், மதிப்பு, உயிர் தன்மை ஆகியவற்றை ஆணாதிக்கம் மதிப்பதில்லை. ஆகவே பாலினச் சமத்துவம் மற்றும் இயற்கை சார்ந்த புதிய அரசியலை நாம் உருவாக்க வேண்டும்.

(ஆ) நவீனச் சூழலியல்

மேலோட்டமான சூழலியல் அரசியல் அறிவியலில் நவீன சூழலியலாக அழைக்கப்படுகிறது. தாராளவாதத்திற்கும், இயற்கைக்கும் இடையில் சுற்றுச்சூழலைக்

காப்பதற்காக தாராளவாதத்தைச் சிறிது திருத்தி அமைக்க வேண்டும் என்று நவீன சூழலியல் கூறுகின்றது. "அறிவொளி மனித முன்னிறுத்தல்" என்ற கருத்தை ஆதரிக்கின்றது. அதாவது இந்த புவியின் எதிர்காலத்தையும் மனித குலத்தின் எதிர்காலத்தையும் மனதில் வைத்து மனிதன் செயல்பட வேண்டும். "தலைமுறைகளுக்கு இடையிலான நீதி" என்ற கருத்தையும் நவீனச் சூழலியல் ஆதரிக்கின்றது. அதாவது இந்த புவியை வருங்கால தலைமுறைகளிடம் இருந்து கடனாகப் பெற்று உள்ளோம். ஆகவே புவியை பாதுகாத்து வருங்காலத்தில் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். "நிலையான முன்னேற்றம்" என்ற கருத்தையும் நவீனச் சூழலியல் ஆதரிக்கின்றது. சீக்கிரமாக பணக்காரர் ஆக வேண்டும் என்பதை விட நிதானமாக பணக்காரர் ஆக வேண்டும். இதற்காக இயற்கையை நிதானமாக பயன்படுத்த வேண்டும் என்று நவீனச் சூழலியல் கூறுகின்றது.

(இ) ஆழச் சூழலியல்

இயற்கைக்கு சாதகமான புது அரசியல் திட்டம் மற்றும் அரசியல் அனுகுமுறையை ஆழச் சூழலியல் வலியுறுத்துகிறது. அரசியலுக்கும், இயற்கைக்கும் இடையிலான உறவில் அடிப்படை மாற்றத்தை உருவாக்க வேண்டும். மனிதர்கள், பிற உயிரினங்கள் மற்றும் உயரற்ற பொருட்கள் ஆகியவைகளிடையே உள்ள தொடர்பை மதித்து, புரிந்துகொண்டு, காப்பாற்றும் அரசியல் வேண்டும்.

இந்தியாவின் சுற்றுச்சூழல் இயக்கங்கள்

நவீன முன்னேற்றம் இயற்கையைச் சீரழிப்பதால் பல்வேறு எதிர்ப்பு போராட்டங்கள் உலகம் முழுவதும் தோன்றியுள்ளன. நமது நாட்டிலும் சூழலையும் பல்லுயிர் அமைப்பையும் காப்பாற்றுவதற்காகப் பல சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் தோன்றின. அவைகளில் முக்கியமான நான்கு இயங்கங்களை நாம் இங்கு காணலாம்.

அ. பீஸ்நவ் இயக்கம்

ஆ. சிப்கோ இயக்கம்

இ. அப்பிக்கோ இயக்கம்

ஈ. அமைதி பள்ளத்தாக்கு பாதுகாப்பு இயக்கம்

அ. பீஸ்நவ் இயக்கம் (Bisnau Movement):

பதினெட்டாவது நூற்றாண்டில் ராஜஸ்தானில் உருவான வெற்றிகரமான சுற்றுச்சூழல் இயக்கமே பீஸ்நவ் இயக்கமாகும். தார் பாலைவனத்தில் குரு ஜம்பேஸ்வர் என்ற ஞானி பீஸ்நவ் என்ற மதக் குழுவை இடைக்கால வரலாற்றில் உருவாக்கினார். 'பீஸ்நவ்' என்ற இந்தி மொழிச் சொல்லிற்கு '29' என்பது பொருளாகும். இயற்கையுடன் ஒன்றி வாழ வேண்டிய வாழ்க்கையை தனது 29 கோட்பாடுகள் மூலமாக விவரிப்பதால் பீஸ்நவ் என்று அழைக்கப்பட்டது.

ஜோத்பூர் மகாராஜா பதினெட்டாவது நூற்றாண்டில் ஒரு புதிய அரண்மனையை கட்டினார். கேஜர்லி கிராமத்தில் அரக்க மரம் நிறைந்த காடு உள்ளது. தனது அரண்மனைக்காக மரங்களை வெட்டி வருமாறு இராணுவத்தை அனுப்பினார். அம்ரிதா தேவி என்ற பெண்மணி மரங்களை வெட்டக்கூடாது என்று போராட்டம் செய்தார். மரத்தை வெட்டுவதற்கு பதிலாக தனது தலையை வெட்டுங்கள் என்று கூறினார். இராணுவம் அவரது தலையை துண்டித்தது. கிராம மக்கள் அனைவரும் வனத்தை காப்பாற்றுவதற்காக தங்களது உயிரைக் கொடுத்தனர். மொத்தம் 363 கிராம உறுப்பினர்கள் உயிர்த் தியாகம் செய்தனர். இச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட மகாராஜா உடனடியாக தனது இராணுவத்தைத் திரும்ப பெற்றார். அப்பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வனம் என்று அறிவித்தார். பீஸ்நவ் கேஜர்லி இயக்கம் நவீன இந்தியாவின் முதல் வெற்றிகரமான சுற்றுச்சூழல் இயக்கமாகும்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

வெட்டப்பட்ட மரத்தைவிட வெட்டுண்ட மனித உயிர் முக்கியமானது அல்ல.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 190 06/12/2022 12:00:03

ஆ. சிப்கோ இயக்கம் (Chipko Movement):

உத்தரகண்ட் மாநிலத்தில் 1973-ஆம் ஆண்டு நடைபெற்ற அமைதியான சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கமே சிப்கோ இயக்கமாகும். இந்தியில் 'சிப்கோ' என்றால் 'கட்டிப்பிடி' என்று பொருள்படும். விளையாட்டு பொருட்கள் தயாரிக்கும் கம்பெனி, அலக்நந்தா பள்ளத்தாக்கில் மரங்களை வெட்டுவதற்காக அரசு அனுமதி பெற்று வந்தது. மரங்களை வெட்டக்கூடாது என்று அப்பகுதி மக்கள், முக்கயமாக பெண்கள் அமைதியாக போராடினார்கள். 'தஸோலி கிராம ஸ்வராஜ்ய மண்டல்' (DGSM) என்ற அரசு சாரா அமைப்பும் அதன் தலைவர் சந்திபிரசாத் பட் அவர்களும் போராடினார்கள்.

புகழ் பெற்ற சுற்றுச் சூழல் வாதியான சுந்தர்லால் பகுகுணா போராட்டத்தில் குதித்தார். பெரும் அளவில் பெண்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். தூம்சிங் நெகி, பச்னி தேவி போன்ற பெண் தலைவர்கள் மக்களின் வன உரிமைக்காக போராடினார்கள். 1980-ஆம் ஆண்டு முதல் இமயமலை வனப்பகுதியில் மரங்களை வெட்டுவதற்கு மத்திய அரசு தடைவிதித்து. பெண்ணியம், காந்தியம், சுற்றுச் சூழலியம் ஆகிய மூன்று கொள்கைகளை சிப்கோ இயக்கத்தில் நாம் காணலாம்.



சுற்றுச்சூழல் தான் நிரந்தர பொருளாதாரம் ஆகும்.

– சுந்தர்லால் பகுகுணா

இ. அப்பிக்கோ இயக்கம் (Appiko Movement):

மேற்குத் தொடர்ச்சி மலையில், கர்நாடகாவின் உத்திர கன்னட மாவட்டத்தில் நடைபெற்ற இயக்கமே அப்பிக்கோ இயக்கமாகும். அப்பிக்கோ என்றால் கன்னட மொழியில் 'கட்டிக்கோ' என்று பொருளாகும். இம்மாவட்டத்தில் தொழிற்சாலைகள் பெருகியதால் 1950-ஆம் ஆண்டு 81% இருந்த வனப்பரப்பு 1980-ஆம் ஆண்டு 24% ஆக குறைந்தது. சூற்றுச்சூழல் ஆர்வமுள்ள மக்கள் மரங்களை கட்டி அணைத்து போராட்டம் நடத்தினர். எஞ்சிய காடுகளைக் காப்பாற்றுதல், அழிக்கப்பட்ட காடுகளை உருவாக்குதல், நல்ல முறையில் வளங்களைப் பயன்படுத்தும் விழிப்புணர்வை உருவாக்குதல் ஆகிய மூன்று நோக்கங்களை அப்பிக்கோ இயக்கம் ஆதரித்தது. மரங்களை கட்டி அணைத்துக் காப்பாற்றியதால் அப்பிக்கோ இயக்கம் என்று பெயர் வந்தது.

ஈ. அமைதி பள்ளத்தாக்கு பாதுகாப்பு இயக்கம்

அமைதிப் பள்ளத்தாக்கு என்பது கேரளாவின் பாலக்காடு மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ளது. பசுமை மாறாக் காடுகள் இங்கு உள்ளன. ஆங்கிலத்தில் Silent Valley (அமைதிப் பள்ளத்தாக்கு) என்று அழைக்கப்படுகிறது. மகாபாரதத்தில் பாண்டவர்களின் மனைவியான திரௌபதிக்கு 'சைரந்திரி' என்று மற்றொரு பெயர் உள்ளது. இவ்வனப்பகுதி அவர்களின் நினைவாக சைரந்திரி வனம் என்று அழைக்கப்பட்டது. காலனிய ஆட்சியில் அந்த வனப்பகுதிக்கு ஆங்கிலேயர்கள் சென்றபோது அமைதியான வனமாக அது இருந்தது. வனத்தில் சத்தத்தை தொடர்ச்சியாக உருவாக்கும் சிகாடஸ் பூச்சிகள் அங்கு இல்லாததால் வனம் அமைதியாக இருந்தது என்று ஆங்கிலேயர் அதற்கு அமைதிப் பள்ளத்தாக்கு என்று பெயரிட்டனர்.

அந்தப் பள்ளத்தாக்கில் பல்லுயிர்கள் அதிகம் உள்ளன. சிங்கவால் குரங்குகள் அதிகம் காணப்படுகின்றன. சிங்கவால் குரங்கின் அறிவியல் பெயர் 'மகாகா சைலேனஸ்' என்பதாகும். இதனால் தான் அது 'சைலண்ட் வேலி' என்று அழைக்கப்படுகிறது என்பதும் ஒரு வாதமாகும். கேரள மாநில மின்சாரத்துறை 1970-களில் மின்சாரம் தயாரிப்பதற்காக அவ்வனத்தில் உள்ள குந்திப்புழா என்ற நதியில் அணைகட்டத் தொடங்கியது.

KSSP என்ற 'கேரள சாஸ்திர சாகித்ய பரிசத்' அமைப்புச் சுற்றுச்சூழல் போராட்டத்தை இந்த அணைக்கு எதிராக நடத்தியது. அணைகட்டினால் அமைதிப் பள்ளத்தாக்கு அழிந்துவிடும் என்ற பெரிய போராட்டம் நடைபெற்றது. பல்வேறு தரப்பினரும் போராட்டத்தில் குதித்தனர். ஆகவே 1980-ஆம் ஆண்டு கேரளா மாநில அரசாங்கம் அணைகட்டும் திட்டத்தைக் கைவிட்டது. 1984-ஆம் ஆண்டு மத்திய அரசாங்கம் இப்பகுதியை தேசிய பூங்காவாக அறிவித்தது. பின்னர் இப்பகுதி 'நீலகிரி உயிர்க்கோள இருப்பாக' அறிவிக்கப்பட்டுள்ளது. அமைதிப் பள்ளத்தாக்கு பாதுகாப்புப் போராட்டம் 20-வது நூற்றாண்டின் மிகச்சிறந்த இந்திய சுற்றுச்சூழல் இயக்கமாக கருதப்படுகிறது.

கலைச்சொற்கள்: Glossary

அமைப்பெதிர்வாதம் - எவ்வித அதிகாரமும் இல்லாமல் உறுப்பினர்களுக்கு இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் இயங்கும் அமைப்பு

பெண்ணியம் - பெண்களின் சக்தி ஏற்றத்தையும், பாலின சமத்துவத்தையும் ஆதரிக்கும் கொள்கை.

ஆணாதிக்க முறை - குடும்பம், அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், மதம், பிற தளங்களில் பெண்கள் மீது ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் முறை.

பின் காலனி ஆதிக்கம் - காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்ற பின் நாடுகள் இருக்கும் நிலை (எடுத்துக்காட்டு 1947க்கு பிறகு இந்தியா)

காலனி ஆதிக்கம் - ஐரோப்பிய நாடுகள் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளை அடிமைப்படுத்தி சுரண்டிய முறை.

விஷாகா வழிமுறைகள் - உச்ச நீதிமன்றம் பணி இடங்களில் பாலின தொந்தரவுகளில் இருந்து பெண்களை காப்பாற்றுவதற்காக தனது தீர்ப்பில் வழங்கிய வழிமுறைகள்.

பாலினச் சமத்துவம் - ஆண் பெண் இடையிலான பாலினச் சமத்துவம்

பொது நலம் - மக்களின் பொதுவான நலன் அல்லது விருப்பம்

தனியான நபர் அல்ல - மனிதர்கள் தனியான நபர்கள் அல்ல. மற்ற மனிதர்களுடன் இணைந்து வாழ்கிறார்கள். ஆகவே சமூகத்தில் இருந்து தொடர்பு இல்லாமல் அவர்கள் வாழ்வதில்லை.

அமைந்துள்ள நபர் - மனிதர்கள் சமூகத்தில் வேர் ஊன்றி அமர்ந்து, அமைந்து இருக்கிறார்கள்.

குறைப்பு வாதம் - இந்த உலகத்தில் உள்ள அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட காரணியாக குறைத்து விளக்கும்வாதம்.

பிரபஞ்ச வாதம் - ஒரு குறிப்பிட்ட காரணி பிரபஞ்சம் முழுவதற்கும் பொருந்தும் என்ற கொள்கை.

தனிப்பட்ட வாதம் - ஒவ்வொரு மதமும், மொழியும், இனமும் தனித்துவமானது, முக்கியமானது என்னும் வாதம்.

தகர்ப்பமைப்பு (கட்டுடைத்தல்) முறை - உட்புற மற்றும் மறைக்கப்பட்ட உண்மைகளை புரிந்து கொள்ளுதல். ஒரு குறிப்பிட்ட எழுத்துப் படைப்பை படிக்கும் போது மேலோட்டமான பொருளை விட்டுவிட்டு உட்புற, மறைந்து இருக்கும் பொருளை புரிந்து கொள்வது.

அடையாள அரசியல் - குறிப்பிட்ட நலிவடைந்த சமூக குழுக்கள் ஆதிக்க முறைக்கு எதிராக தங்களது சாதி, இனம், பாலினம் அடிப்படையில் ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் அரசியல் நடவடிக்கைகள்.

மனித முன்னிறுத்துதல் - மற்ற உயிரினங்களை விட மனித இனம் முதன்மையான மற்றும் உயர்ந்தது என்ற அணுகுமுறை. மனிதனின் வாழ்விற்கும், இன்பத்திற்கும் தான் மற்ற உயிரினங்கள் இவ்வுலகில் உள்ளன.

www.tnschoolbooks.in

உயிர் முதன்மைச் சமத்துவம் – இவ்வுலகில் உள்ள எல்லா உயிரினங்களும் சமம், மற்ற உயிரினங்களை விட மனிதன் எந்த விதத்திலும் உயர்ந்தவன் கிடையாது.

தலைமுறைகள் இடையிலான நீதி – புவியை நாம் வருங்கால சந்ததியிடம் இருந்து கடன் வாங்கி உள்ளோம். இயற்கையை அழிக்காமல் மீண்டும் நாம் வருங்கால சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டும்.

நிலையான முன்னேற்றம் – இயற்கைச் செல்வங்களை நாம் பயன்படுத்தும் போது வருங்கால தேவைகளையும் நமது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நிலைத்த, நீடிய முன்னேற்றத்தை நாம் சாத்தியப்படுத்த வேண்டும்.

ஆழச் சூழலியல் – முன்னேற்றம் என்ற பெயரில் சுற்றுச் சூழலை பாதிக்கும் நமது நடவடிக்கைகளை ஆழமாக உணர்ந்து கேள்வி கேட்க வேண்டும்.

சிப்கோ இயக்கம் – இந்தி மொழியில் சிப்கோ என்றால் கட்டிப்பிடி என்பது பொருளாகும். மக்கள் மரங்களை கட்டிப்பிடித்து அவற்றை வெட்டப்படுவதில் இருந்து காப்பாற்றிய இயக்கம்.

அப்பிக்கோ இயக்கம் – கன்னட மொழியில் அப்பிக்கோ என்றால் கட்டிப்பிடி என்பது பொருள் ஆகும். கர்நாடக மாநிலத்தில் மரங்களை கட்டிப்பிடித்து காப்பாற்றிய இயக்கமே அப்பிக்கோ இயக்கம் ஆகும்.

மதிப்பிடுதல் (Evaluation)

I. சரியான பதிலை தேர்வு செய்யவும்

1. அமைப்பெதிர்வாதக் கொள்கை கீழ்க்கண்டவற்றில் எதனை ஆதரிக்கவில்லை?

அ) அராஜகத்தை ஆதரிக்க வேண்டும்
ஆ) இக்கொள்கை ஒழுங்கை ஆதரிக்கின்றது
இ) மனிதர்கள் பரஸ்பர ஒத்துழைப்புடன் நன்றாக வாழ்வார்கள்
ஈ) அரசை எதிர்க்கின்றது

2. கீழ்க்கண்டவற்றில் அதிகாரமில்லாக் கொள்கையை ஆதரித்தவர் யார்?

அ) காரல் மார்க்ஸ் ஆ) ஜோசப் பிரௌதான்
இ) ஆதம் ஸ்மித் ஈ) ஜான் லாக்

OB7LR

3. அமைப்பெதிர்வாதக் கொள்கை எந்த அமைப்பை சுரண்டல் தன்மை உள்ளது என எதிர்த்தது?

அ) அரசு ஆ) தனிச் சொத்துக்கள்
இ) மதம் ஈ) மேற்கண்ட அனைத்தும்

4. பெண்ணியம் யாருடைய திறன், சக்தி ஏற்றத்தை ஆதரிக்கின்றது?

அ) பெண்கள் ஆ) குழந்தைகள்
இ) சிறுபான்மையினர் ஈ) பழங்குடி மக்கள்

5. தனிப்பட்ட வாழ்விலும் அரசியல் என்பதன் பொருள்

அ) நாம் அரசியலில் தலைவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை விவாதிக்க வேண்டும்
ஆ) நாம் அரசியலில் நேர்மையை எதிர்ப்பார்க்க வேண்டும்
இ) நாம் குடும்பத்திலும், அரசியலிலும் பெண்களுக்கான அரசியல் உரிமைகளைப் பற்றி பேச வேண்டும்
ஈ) நாம் அரசியல் வாதிகளின் தனிப்பட்ட வாழ்க்கையைப் புறக்கணிக்க வேண்டும்

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 9_25_09_2018.indd 193 06/12/2022 12:00:03

6. பின்நவீனத்துவத்தின் தந்தை யார்?

அ) ஜாக் டெரிடா (Jacques Derrida)   ஆ) மிசல் பூக்கோ (Michel Foucault)
இ) பிரீட்ரிக் நீட்சே(Friedrich Nietzsche) ஈ) காரல் மார்க்ஸ்(Karl Marks)

7. ஆழச் சூழலியல் என்ற கருத்தை உருவாக்கியவர் யார்?

அ) மிசல் பூக்கோ (Michel Foucault)   ஆ) இராபர்ட் டி புட்நம் (Robert D Putnam)
இ) ஆட்ரி லார்ட் (Audre Lorde)   ஈ) ஆர்னே நியேஸ் (Arne Naess)

8. பின்நவீனத்துவம் பற்றிய தவறான கருத்து எது?

அ) நவீனத்தை நிராகரிக்கின்றது
ஆ) உண்மை என்று ஒன்று இல்லை. உண்மைகள் என்பது தான் சரி
இ) சர்வதேச வாதத்தை எதிர்க்கின்றது
ஈ) தனித்துவ வாதத்தை நிராகரிக்கின்றது.

9. பின்நவீனத்துவம் எதனுடன் தொடர்பு உள்ளது?

அ) அடையாள அரசியல்   ஆ) தேசிய அரசியல்
இ) சர்வதேச அரசியல்   ஈ) வர்க்க அரசியல்

10. சமுதாயவாதம் எதனை நம்புகிறது?

அ) மதம்   ஆ) சமுதாயம்
இ) வர்க்கம்   ஈ) மொழி

11. சமுதாயவாதத்தின் படி மனிதன்

அ) அணுவைப் போன்று தனிமையானவன்
ஆ) சுயநலமானவன்
இ) மதவாதி
ஈ) நேர்மறை உரிமைகள் உள்ளவன்

12. சமுதாயவாதம் ஆதரிப்பது

அ) இயற்கை உரிமைகள்   ஆ) தார்மீக உரிமைகள்
இ) நேர்மறை உரிமைகள்   ஈ) பொருளாதார உரிமைகள்

13. பொருத்துக

1. நவீனச் சூழலியல்   அ) உயிர் முதன்மை சமத்துவம்
2. ஆழச் சூழலியல்   ஆ) மறுசூழற்சி
3. மேலோட்டமான சூழலியல்   இ) மரத்தை கட்டிப்பிடி இயக்கம்
4. சிப்கோ இயக்கம்   ஈ) நீடிய முன்னேற்றம்

14. அப்பிக்கோ இயக்கம் என்பது

அ) காப்பாற்றுவதற்காக மரங்களைக் கட்டிப்பிடிங்கள்
ஆ) ஏழை மக்களுக்கு உணவு கொடுங்கள்
இ) எளியோருக்குக் கல்வியை கற்றுத் தாருங்கள்
ஈ) மக்களின் நோய்களைச் சரியாக்குங்கள்

15. இந்தியா, நமிபியா போன்ற நாடுகளுக்கு பொருத்தமான பெண்ணியம் எது?

அ) பின்காலனியப் பெண்ணியம் ஆ) தாராளவாதப் பெண்ணியம்
இ) தீவிரப் பெண்ணியம் ஈ) மார்க்சியப் பெண்ணியம்

II. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு மிகவும் சுருக்கமாக பதில் வழங்கவும்

1. ஆந்தரபோ சென்ரிசம் (மனித முன்னிருத்தல்) என்பதை விளக்கவும்
2. அடையாள அரசியல் என்றால் என்ன?
3. 'அமைந்துள்ள சுயம்' (Situated Self) என்பதன் பொருளை காண்க
4. 'விசாகா வழிமுறைகள்' என்றால் என்ன?
5. பெண்ணியம் என்பதன் பொருளைத் தருக.
6. 'அரசு ஒரு தேவையற்ற தீமை' என ஏன் அதிகாரமில்லாக் கொள்கை கூறுகிறது?
7. அதிகாரமில்லாக் கொள்கை (Anarchism) என்பதன் சொல் வரலாற்றைத் தருக.

III. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சுருக்கமாக பதில் தருக

1. தீவிரப் பெண்ணியத்தின் முழக்கம் 'தனிப்பட்ட வாழ்விலும் அரசியல்' என்பதைப் பற்றி கருத்து தெரிவிக்கவும்.
2. 'ஆழச் சூழலியல்' கருத்தைப் பற்றி எழுதுக.
3. சமுதாயவாதத்தின் நேர்மறை உரிமைகள் என்ற கருத்தை விரிவாக விளக்கவும்.
4. மேலோட்டமான (ஆழமற்ற) சூழலியல் சுற்றுச் சூழலைக் காப்பதற்குப் பரிந்துரைத்த தீர்வுகளைக் கண்டு எழுதுக.

IV. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விரிவான பதில்களை தருக.

1. அதிகாரமில்லாக் கொள்கையின் முக்கிய தன்மைகளை மதிப்பிடுக.
2. பெண்ணியத்தின் பல்வேறு வகைகளை விவாதிக்கவும்.
3. இந்தியாவின் முக்கிய சுற்றுச் சூழல் இயக்கங்களை விவரிக்கவும்.
4. மனிதன், சமுதாயம், உரிமைகள் மற்றும் நீதி பற்றிய சமுதாயவாதத்தின் நிலைப்பாட்டை விவாதிக்கவும்.

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Gauba, O.P.(2009) An Introduction to Political Theory, New Delhi: Macmillan Publishers India Ltd.
2. Heywood, Andrew (2003) Political Ideologies: An Introduction, London: Macmillan
3. Naess, A. (1973) 'The shallow and the deep, long-range ecology movement: a summary'. Inquiry, vol. 16
4. Rajeev Bhargava & Ashok Acharya (Ed), (2016) Political theory: An Introduction, New Delhi: Thomson press.
5. Ramasamy, Sushila (2009) "Political Theory – Ideas and Concepts, Chennai: Macmillan India Ltd.
6. IGNOU Political Science Study Materials, B.A and M.A

அலகு 10

பொதுக்கருத்து மற்றும் கட்சி முறை



கற்றலின் நோக்கங்கள்

- கட்சி முறையின் பொருளை வரையறுத்தல்.
- மக்களாட்சியில் கட்சி முறையின் பங்கு, செயல்பாடு மற்றும் அதன் வகைகளை அடையாளம் காணுதல்.
- நவீன காலத்தில் கட்சி முறையின் வரலாற்று பரிணாமத்தை கண்டறிதல்.
- தேசிய மற்றும் மாநில அளவில் இந்தியாவில் உள்ள கட்சி முறையின் கட்டமைப்பை கோடிட்டுக் காட்டுதல்.
- மக்களாட்சி திறம்பட செயல்பட பொது கருத்தின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்தல்.
- கட்சி முறையின் தாக்கம் மற்றும் வரம்புகளை மதிப்பிடுதல்.

10.1 பொதுக்கருத்தினை வரையறுத்தல்

பொதுக்கருத்து ஓர் உளவியல் மற்றும் சமூகத்தில் உள்ள அனைவரின் நம்பிக்கைக்கும், இசைவான தனிநபரின் நடத்தை சார்ந்த சமூக செயல்முறையாகும். சுருக்கமாக, இது மக்களின் கூட்டு பார்வை, அவர்களுடைய அணுகுமுறை மற்றும் கருத்துக்கள் ஆகும்.

இது அரசாங்கம், அரசியல் குறித்த முன்னுரிமைகள் சார்ந்த மக்களின் கூட்டு விருப்பமாகும். மக்களாட்சி என்பது அனைவரின் ஒன்றிணைந்த தனிகருத்துகளும், பொதுக்கருத்துகளும், தனி நபர்க் கருத்துகளை விட முக்கியத்துவம் வாய்ந்தது என்ற கூற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒன்றிணைந்த குழுக்கள், அரசாங்க தலைவர்கள், ஊடக உயர்குடியினர் ஆகியோர் பொதுக்கருத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தவும், கட்டுப்படுத்தவும் முடியும் என்று வேறு சிலர் கூறுகின்றனர்.

பொதுமக்களின் கருத்துகளின் மீது ஊடகங்களின் தாக்கம் உள்ளது. உண்மையில், மக்களாட்சி அதன் அதிகாரத்துவத்தை மக்களிடமிருந்து பெறுகின்றது. பொதுக்கருத்து என்பது ஒரு தனிநபரின் கருத்து அல்ல, அந்நபர் மிகவும் மதிக்கப்படும் நபராகவும் இருக்கலாம். இது ஒரு தனிப்பட்ட கருத்தும் அல்ல. அவர் எத்தகைய நிபுணத்துவத்தைப் பெற்றிருப்பினும், பொதுக்கருத்து என்பது ஒரு பொது விவகாரத்தில் ஒன்றோ அல்லது பல பிரிவு மக்களோ ஒருங்கிணைந்த, ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகும். இது உண்மையில் பொதுக்கருத்தாகும்.

பொதுக்கருத்தின் பங்கு

மக்களாட்சி வெற்றிகரமாக செயல்படுவதற்கு பொதுக்கருத்து என்பது ஓர் அத்தியாவசிய கூறாகும். அங்கே குடிமக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கப்படுகிறது. மக்களின் கருத்துகளைப் புறக்கணித்து எந்த ஒரு அரசாங்கமும் நிலைத்திருக்க முடியாது.

10.2 ஓர் உண்மையான பொதுக்கருத்தை உருவாக்குவதற்குத் தடையாக இருப்பவை:

மக்களின் கருத்துக்கள் மற்றும் சிந்தனைகளின் உண்மையான பிரதிபலிப்பாக பொதுக்கருத்து இருக்க வேண்டும். இருப்பினும் உண்மையான பொதுக்கருத்திற்கு சில தடைகள் உள்ளன.

சுயநல விருப்பங்கள் (தேசத்தை விட மேலானது எனது நலன்)

மக்கள் தங்களின் சுயநலத்தினை முன்னிறுத்தி தங்கள் நாட்டினுடைய விவகாரங்களைக் காட்டிலும் தனிப்பட்ட

விவகாரங்களில் முன்னேற்றத்தை காண்பதற்கு நகரச்செய்கிறது. ஒற்றுமை, அர்ப்பணிப்பு, ஒருமைப்பாடு மற்றும் தேசத்தின் முன்னேற்றம் தொடர்பான முக்கிய பிரச்சனைகளை மக்கள் உணருமாறு செய்ய வேண்டும்.

எழுத்தறிவின்மை: கல்வியறிவு உடைய பொறுப்புள்ள பொதுமக்கள், பயமோ அல்லது தயவோ இல்லாமல் தங்கள் உரிமையைக் கையாள்வதன் மூலம் நல்ல குடிமக்களை உருவாக்குகின்றனர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்வியறிவற்ற மக்கள் பெரும்பாலும் கட்சித் தொண்டர்களால் தவறாக வழிநடத்தப்பட்டு உணர்வுகள், ஆதாயங்கள் மற்றும் வாக்குவன்மை (பேச்சாற்றல்) ஆகியவற்றால் ஏமாற்றப்படுகிறார்கள். ஓர் தரமான பொதுக்கருத்து என்பது அறிவும் கருத்துச் சுதந்திரம் இருக்கும் சூழலில் தான் உருவாக முடியும்.

அ) வறுமை: எந்தவொரு நாட்டிலும் ஏழைகள் அரசியல் தலைவர்களின் பொய்யான வாக்குறுதியால் எளிதில் கவரப்பட்டு, தங்களது வாக்குகளை அவர்களுக்கு அளித்துவிடுகின்றனர். வறுமையை ஒழிப்பதன் மூலம் மட்டுமே ஓர் தரமான குறிக்கோளுடைய பொதுக்கருத்து என்பது சாத்தியமாகும்.

ஆ) இனவாத மற்றும் சாதி அடிப்படையிலான பாகுபாடு: சாதி, சமயம் மற்றும் மதம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாட்டைத் தூண்டும் விவாதங்கள் மக்களிடையே பிளவுகளை உருவாக்குகின்றன. அவை பெரும்பாலும் அரசியல் கட்சிகளால் தங்களின் நன்மைக்காக கையாளப்படுகின்றன. நாட்டில் பயனுள்ள வகையில் செயலாற்றிக் கொண்டிருக்கும் மக்களாட்சியை சமூக நல்லிணக்கமின்மை சீரழிக்கின்றது.

இ) பேச்சு மற்றும் ஊடக சுதந்திரம்:

நடுநிலையான, குறிக்கோள்மிக்க மற்றும் சுதந்திரமிக்க ஊடகமும், தனிமனித பேச்சுரிமைக்கு மதிப்பளிக்கின்ற சட்டமன்றமும் ஆரோக்கியமான கருத்துக்களை உருவாக்குவதில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. மக்களின் சுதந்திரத்தை மதித்து செய்தி அறிக்கைகளை பொறுப்புடன் வெளியிடுகின்ற ஊடகங்கள் பொதுமக்களின் கருத்தை முதிர்வுடன் உருவாக்குவதற்கான முக்கியமான அடிப்படை ஆகும்.

10.3 அரசியல் கட்சிகளின் வரையறை

அரசியல் கட்சிகள் மக்களாட்சி முறை அமைப்புக்கு இன்றியமையாத கருவியாகும். அவைகள் திட்டவட்டமான லட்சியங்கள் மற்றும் செயல்திட்டத்துடன் உருவாக்கப்படுகின்றன. அவை பொது மக்களிடம், சமுதாயம் மற்றும் அரசுக்கு உள்ள பிரச்சனைகளைப் பற்றி விழிப்பூட்டுவதுடன் மாற்றுத் திட்டங்களையும் பரிந்துரைக்கின்றன. பரப்புரையின் மூலம் மக்கள் அரசியல் பிரச்சினைகளை அறியும்படி செய்வதுடன் தங்களின் கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்களுக்கான ஆதரவையும் பெறுகின்றன.

பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு இடையே தொடர்ச்சியான போட்டி உள்ளதுடன் இந்த போட்டி மக்களாட்சியினை முதிர்ந்த செயல்பாட்டை உறுதி செய்கிறது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

ஓர் மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் மூலமாகவே பொதுக்கருத்துக்கள் வழிநடத்தப்படுகின்றன.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 197 06/12/2022 12:04:22

செயல்பாடு

மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பல்வேறு செயல்பாடுகளின் பட்டியல் பின்வருமாறு உள்ளன.

- கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடும்.
- கட்சிகள் வேறுபட்ட கொள்கைகளையும் திட்டங்களையும் முன்வைக்கும்.
- கட்சிகள் நாட்டிற்கான சட்டங்களை உருவாக்குகின்றன.
- கட்சிகள் அரசாங்கத்தை அமைத்து செயல்படுகின்றன.
- எதிர்க்கட்சிகளாகவும் கட்சிகள் பங்கு வகிக்கின்றன.
- கட்சிகள் பொதுக்கருத்துகளை வடிவமைக்கின்றன.
- அரசாங்கத்தின் நலத் திட்டங்களை மக்கள் பெறுவதற்கு கட்சிகள் உதவுகின்றன.

ஒரு மாதத்திற்கு செய்தித்தாள்களைப் படித்து, அரசியல் கட்சிகளின் பல்வேறு செயல்பாடுகள் தொடர்பான செய்திகளை சேகரிக்கவும்.

10.4 அரசியல் கட்சிகளின் பணிகள்

ஒரு மக்களாட்சியில் அரசியல் கட்சிகள், அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் தொடர்பு கொள்ள ஒரு ஒருங்கிணைந்த இணைப்பாக செயல்படுகின்றன. அரசியல் கட்சிகள் மக்களை அரசியல் முன்முயற்சிகள் மற்றும் பொது அனுபவங்களை நோக்கி நகர்த்தும் அடித்தளமாக செயல்படுகின்றன. அரசியல் கட்சிகள் வாக்குகளை அணிதிரட்டும் நோக்கத்துடன் மக்களின் அரசியல் சிந்தனை மற்றும் கருத்துக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அரசியல் பொருளாதார மற்றும் சமூக செயல்பாட்டிற்கான ஓர் தளத்தை வழங்குவதன் மூலம் எதிர்கால மாநில மற்றும் தேசிய தலைமைகளுக்கு பயிற்சிக் களமாக செயல்படுகின்றன. நீண்ட காலமாக அவர்கள் கட்சிக்குள்ளேயும், எதிர்க்கட்சிகளிலிருந்தும் கடுமையான விவாதம் மற்றும் வினா எழுப்புவதன் மூலம் தங்களின் நடவடிக்கைகளுக்குக் கட்சித்தலைவர்கள் பொறுப்புணர்வுடன் இருக்கிறார்கள். இவ்வாறு மக்களுக்கு பலதரப்பட்ட வேட்பாளர்களையும், கொள்கைகளையும், தேசத்தில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சனைகளுக்கான அணுகுமுறைகளையும் கட்சிகள் வழங்கியுள்ளன. மக்களாட்சியில் அவர்களுடைய நம்பிக்கையானது மாற்றம் மற்றும் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான அறிவை வலுவூட்டுகின்றது. இதன்மூலம் மக்களில் பெரும்பான்மையினர் அவர்களின் ஆட்சியின் மூலம் தாங்கள் விரும்பும் ஓர் மாற்றத்தை ஏற்படுத்துகின்றனர்.

கட்சி முறை:

கட்சி முறை என்பது அரசாங்கங்களை நடத்துவதற்கும், நிலைநிறுத்துவதற்கும் உதவுகிறது. மேலும் அவை மக்களாட்சியின் திறன் வாய்ந்த செயல்பாட்டிற்கும் தேவையானதாக இருக்கின்றன. கட்சிமுறை என்பது அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிரான கட்டுப்பாடுகள் மற்றும் அதிகாரச் சமநிலையை வழங்கும் முறையாகும். பொது மக்களிடையே ஆதரவைக் பெறுவதன் மூலம் கட்சிக்குள்ளேயே தலைமைத்துவத்திற்கும், கலந்துரையாடலுக்கும் ஓர் கட்டமைப்பினை அந்தந்த கட்சிகளின் குறிக்கோள் மற்றும் செயல்திட்டப்படி வழங்குவதன் மூலம் அது நிலையான மற்றும் நல் ஆட்சிக்கு உதவும்.

உங்களுக்குத் தெரியுமா?

ஓர் அரசியல் கட்சி என்பது மக்களின் ஒன்றிணைந்த ஒரு குழுவாக தேர்தலில் போட்டியிட்டு அரசாங்கத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுகிறது. அவர்கள் சமுதாயத்திற்கான கூட்டு நலனை ஊக்குவிப்பதற்கான சில கொள்கைகளையும், திட்டங்களையும் ஒப்புக்கொள்கிறார்கள்.

கட்சி முறைகளின் வகைகள்:

பல்வேறு வகையான கட்சி முறைகள் உலகெங்கிலும் உள்ள பல்வேறு பகுதிகளிலும் குறிப்பிட்ட கூறுகளைப் பொறுத்து

பரிணாமவளர்ச்சியில் உருவாகியுள்ளன. ஓர் மக்களாட்சியின் தரமானது எப்படி அரசாங்கம் அதன் மக்களை பிரதிநிதித்துவம் செய்கிறது. எப்படி அரசாங்கம் அதன் மக்களுக்கு பொறுப்புடன் இருக்கிறது, எப்படி மனித உரிமைகள் மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் சமூக நிலையிலும், வாய்ப்புக்களிலும் சமத்துவத்தை உறுதி செய்வதுடன், அரசியல் பங்கேற்பில் மக்களுக்கு சமமான வாய்ப்புகளையும் ஏற்படுத்துகிறது. பல விதமான கட்சி முறைகள் இந்த சிக்கல்களை பல்வேறு வழிகளில் அணுகுவதன் மூலமாக பின்பற்றபட்டு மக்களாட்சியின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது.



அ. ஒரு கட்சி முறை:

ஒரு கட்சி முறையில் ஓர் அரசியல் கட்சி அரசாங்கத்தை உருவாக்கும் உரிமையை பெறுகிறது. இது எழுதப்பட்ட அல்லது எழுதப்படாத அரசமைப்பிலிருந்து பெரும்பாலும் பெறப்படுகிறது. ஒரு கட்சி முறையின் கீழ் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குறைவான பங்கேற்பு மற்றும் பலவீனமான பொறுப்புடைமை உள்ளது. (எ.கா) சிங்கப்பூர், (வடகொரியா), கொரிய தொழிலாளர் கட்சி, வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி (வியட்நாம்), கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சி (கியூபா), கம்யூனிஸ்ட் கட்சி (சீனா). ஒரு கட்சி முறையானது மக்களாட்சியிலான வெளிப்பாடுகளுக்கு போதுமான வாய்ப்புகளை வழங்காததுடன் மாற்றத்திற்கான பரவலான வரையெல்லையையும் வழங்கவில்லை. உதாரணத்திற்கு 1920-களில் தேசியவாத இராணுவத்தை ஆதரித்து பாசிச இயக்கங்கள் ஹிட்லரின் தலைமையில் ஜெர்மனியிலும், முசோலினியின் கீழ் இத்தாலியிலும், ஜெனரல் பிராங்கோவின் கீழ் ஸ்பெயினிலும் அதிகாரத்தை கைப்பற்றியதுடன் அரசியல் கட்சிகள் உருவாவதைத் தடைசெய்தன.

ஆ. இரு கட்சி முறை:

இரு கட்சி முறையில், இரண்டு அரசியல் கட்சிகள் வேறுபட்ட நலன்களுடன், பெரும்பான்மையைப் பெற்று அரசாங்கத்தை அமைப்பதற்கான சம வாய்ப்பைக் கொண்டுள்ளன. இரு கட்சி முறையில் பெரும்பான்மை பெறும் கட்சி ஆளும் கட்சியாகவும் சிறுபான்மைக் கட்சி, எதிர்கட்சியாகவும் உருவாக்குகின்றன. இரு கட்சி முறையில் அரசியல் தலைவர்களிடம், மிக அதிக பொறுப்புணர்வும், அதிக அரசியல் பங்கேற்பும் உள்ளது. எதிர் கட்சிகள் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பின் மூலமாக தங்களை நீக்கும் அச்சுறுத்தல் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக இருப்பதனால் ஆட்சியில் இருப்பவர்கள் அதிக அளவிலான பொறுப்பான நடத்தை மற்றும் செயல்பாட்டினை மேற்கொள்கின்றனர்.

அரசியல் சூழ்நிலை பெரிதும் ஒருமுகப்படுத்தப்படுவதால், ஒரு கட்சி அதிகாரத்தை இழந்தபின் தேசிய நலன்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய கடுமையான மாற்றங்கள் ஏற்படலாம். இருகட்சி முறையின் எடுத்துக்காட்டாக அமெரிக்கா (மக்களாட்சி வாதிகள் / குடியரசுவாதிகள்) மற்றும் இங்கிலாந்து – (பழமைவாதிகள் மற்றும் தாராளவாதிகள்). எவ்வாறாயினும், எந்தவொரு நாட்டிலும், கட்சிகளின் எண்ணிக்கையில் எந்த அரசமைப்பு சார்ந்த கட்டுப்பாடும் இல்லை. அரசமைப்பு நடைமுறைகள் மற்றும் மக்களின் அரசியல் முதிர்ச்சியே இரு கட்சி முறையின் தோற்றத்திற்கு வழிவகுக்கின்றது.

இ. பல கட்சி முறை:

பல கட்சி முறையில், பல அரசியல் கட்சிகள் இருப்பதுடன் பெரும்பான்மை பெற்ற கட்சி அல்லது பெரும்பான்மை பெறாத ஒரே நோக்கமுடைய பல கட்சிகளுடனான கூட்டணியின் மூலமாகவும் மக்கள் ஆதரவை வென்றெடுத்து அரசாங்கத்தை உருவாக்குகின்றன. இந்த முறையில் அரசியல் தலைவர்கள் தொடர்ந்து தங்கள் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களால் உற்றுநோக்கப்படுவதுடன் அரசியல் சமநிலையையும் நிலை நாட்டுகின்றனர். அவர்கள் மக்களுக்கு அதிக பொறுப்பு உள்ளவர்களாகின்றனர். பல கட்சிமுறை வாக்காளர்களுக்கு அரசியல் பங்கேற்பில் பல்வேறு வழிகளையும், பெரிய அளவிலான தேசிய மேம்பாட்டிற்குரிய அரசியல் மாற்றங்களைக் கொண்டு வரும் திறமையையும் வழங்குகிறது.

பிரான்ஸ் மற்றும் இத்தாலியில் உள்ள விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை பல கட்சி முறையிலும் கூட்டணி அமைச்சரவைகளிலும் முடிவடைகிறது. கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, சுவீடன் ஆகிய நாடுகள் பல கட்சி முறையிலான நாடுகளின் எடுத்துக்காட்டுகள் ஆகும்.

10.5 மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு

மக்களாட்சியின் தரம் மற்றும் செயல்திறனை உறுதி செய்கின்ற விதமாக அரசியல் கட்சிகள் இருப்பு இருக்கின்றன. அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற கூட்டாட்சிகளில் உள்ள பன்முக பண்பாடு மற்றும் பன்மை சமூகங்களில் அமைதி ஒற்றுமை மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை சமூக-பொருளாதார மேம்பாட்டிற்காக பராமரிப்பது அவசியம் ஆகின்றது. ஒரு கட்சி முறையில் விரைந்து முடிவெடுக்கவும், ஒத்திசைவு நடவடிக்கைகளுக்கு அதிக நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருக்கும்போது இந்த முடிவுகள் பரந்துபட்ட மக்களின் கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தாது. இதனால் அரசாங்கத்திற்கு எதிரான அதிக எதிர்ப்பையும் பேதங்களையும் அது உருவாக்கும்.

கட்சியின் கட்டமைப்பு மற்றும் தலைமையின் இயல்பு காரணமாக இரு கட்சி முறைமையில், பொதுவாக பொது கொள்கைகளிலும், முடிவுகளிலும், ஒத்துழைப்புக்கு மாறாக அரசியல் மையப்படுத்தப்படுகிறது. பலகட்சி முறையில் கூட்டணி கட்சிகளிடையே கவனமாக கருத்தில் கொண்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அதன் செயல்திறன் உள்ளது. மேலும் விவாதங்களினால் பரஸ்பர அடிப்படையிலான ஒருமித்த கருத்தை அடைவதன் மூலமும் பெரும்பாலும் பிரச்சனைகள் தீர்க்கப்படுகின்றன. எனவே அரசியல் கட்சிகள் மக்களுடைய உரிமைகளையும், சுதந்திரங்களையும் காப்பாற்ற வேண்டியது முக்கியமான ஒரு மக்களாட்சியின் உந்து சக்திகள் ஆகும். பயனுள்ள குடியுரிமை பயிற்சி மற்றும் அதிக குடிமக்கள் பங்கேற்பு மூலம் மக்களாட்சி நாடுகளில் உள்ள இளைஞர்கள் அரசியல் கட்சிகளின் பெரிய பங்கினை வகிக்க முடியும். இதனால் உலக நாடுகளில் முதிர்ச்சியடைந்த மற்றும் பரந்த மக்களாட்சிமயமாக்கலை வளர்க்க முடியும்.

மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு

- அரசியல்கட்சியின்பொதுப்பதவிகளுக்காக வேட்பாளர்களை தேர்ந்தெடுத்து தேர்தலில் நிறுத்துகின்றன.
- அவை கட்சியின் பெயரில் அரசாங்க அதிகாரிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, ஒருதரப்படுத்த முயற்சி செய்கின்றன.
- பல அரசியல் அறிஞர்கள் கட்சிகள் மக்களாட்சிக்கு அவசியம் என்று நம்புகிறார்கள்.
- அரசியல் கட்சி என்பது மக்களது இறையாண்மை மற்றும் பெரும்பான்மை ஆட்சியின் பிரதான கருவியாக ஒரு சிலரால் கருதப்படுகிறது.
- அரசியல் கட்சிகள் ஒழுங்காக வேலை செய்யும் பொழுது, மக்களின் இறையாண்மைக்கான அவசியமான கருவிகளாக அவை இருக்கலாம்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

அரசியல் கட்சிகளே மக்களாட்சியின் உந்து சக்திகள் ஆகும்.

பொதுக்கருத்தினை உருவாக்குவதற்கு அரசியல்வாதிகள் தங்களது பேச்சாற்றல் மற்றும் தலைமைத் திறன்களைப் பயன்படுத்துகின்றனர்.

10.6 நவீன கட்சி முறை

அ. இங்கிலாந்தில் கட்சி முறை

இங்கிலாந்தில் முடியாட்சியின் நிலை மற்றும் அதன் பங்கினை பற்றிய பிரச்சனைகள், கருத்துக்கள் மையப்படுத்தப்படுவது இரண்டு கட்சிகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது.

அவையாவன:

1. டோரீஸ் அல்லது பழமைவாதிகள்
2. விக்ஸ் அல்லது தாராளவாதிகள்

20 ஆம் நூற்றாண்டில் தொழிலாளர் கட்சி தாராளவாதிகளை விட பெரிய சக்தியாக மாறியது.

ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கட்சி முறை

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் நிறுவனத் தலைவர், அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றுக்கு இடையேயான பிரிவினைவாத மோதல்களைத் துடைத்தெறிய விரும்பினர். இருப்பினும் அமெரிக்க சுதந்திரத்திற்குப் பின்னர், ஜார்ஜ் வாஷிங்டனின் பதவிக்காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட அமெரிக்க தேசத்தில் முதலில் உருவான கட்சிகளில் வலுவான தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கும் கூட்டாட்சிக் கட்சியும், மாநில தன்னாட்சி உரிமையை ஆதரிக்கும் கட்சியாக குடியரசுக் கட்சியும் இருந்தன. 1828-ல் மக்களாட்சியிலான குடியரசுக் கட்சி என்ற பெயர் மக்களாட்சிக் கட்சியாக மாற்றப்பட்டது.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 201 06/12/2022 12:04:22

இது அரசின் உரிமைகளை வென்றது. 1854-ல் குடியரசுக் கட்சி கொத்தடிமை முறைக்கு எதிராகத் தனது போராட்டக் களத்தை அமைத்துக் கொண்டதுடன் அமெரிக்க குடியரசுத் தலைவராக ஆபிரகாம் லிங்கன் பதவிவகித்ததால் அதிக முன்னுரிமையைப் பெற்றது. அமெரிக்காவில் இரு கட்சி முறை என தீர்வு காணப்பட்டதிலிருந்து, குடியரசு கட்சி மற்றும் மக்களாட்சிக் கட்சிகள் அமெரிக்க அரசியல் களத்தில் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. இருப்பினும் மூன்றாவது கட்சி வேட்பாளர்கள் அவ்வப்போது வெளிப்பட்டு மறைந்தனர்.

இரு கட்சி முறை

- உலகம் முழுவதும் அரிதானது அகும்.
- தேசிய மற்றும் உள்ளாட்சி அளவில் சமமான நிலையில் உள்ளது.
- தேர்தல் அமைப்பு (முறைமை).
- வெற்றி பெற்றவர் அனைத்தையும் எடுத்துக் கொள்வர்.
- வீணாக்கப்பட்ட வாக்கு.
- முன்னுரிமை அடிப்படையிலான அமைப்பு.
- தேர்தலுக்கு முன் பரந்த கூட்டணிகள் அமைக்கப்படுகின்றன.
- வாக்காளர்களின் கருத்து.
- மூன்றாவது கட்சியினர் வாக்குச் சீட்டில் இடம்பெறுவது கடினமாக உள்ளது.

இ. ஐரோப்பாவில் கட்சி முறை

பிரெஞ்சு புரட்சிக்குப் பின்னர் (1789), ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சி சக்திகள் பலம் பெற்று அரசியல் கட்சிகள் தோன்றின. ஐரோப்பிய கண்டத்தில் அரசியல் கட்சிகள், பழமைவாதிகள், தாராளவாதிகள் மற்றும் கிறிஸ்துவ மக்களாட்சிவாதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். 19ஆம் நூற்றாண்டில் சமதர்ம இயக்கங்கள் பிரபலமடைந்து சமூக மக்களாட்சி அல்லது தொழிலாளர் கட்சிகள் உருவாயின. அவை பிரபலமடைந்து தொழிற்சங்க ஆதரவைப் பெற்றன. சோவியத் ரஷ்யாவில், போல்ஷிவிக் கட்சி 1917-ல் நடந்த பொதுவுடைமைப் புரட்சியினை நடத்தி சோவியத் யூனியன் என்ற பிரபலமான சோவியத் சோசலிச குடியரசுகளை உருவாக்கியது. COMINTERN (கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல்) அமைப்பு பிற நாடுகளில் பொதுவுடைமைப் கட்சிகளை ஆதரிப்பதன் மூலம் உலக பொது உடைமைப் புரட்சியை ஊக்குவிக்கும் பணியைக் மேற்கொள்ள நிறுவப்பட்டது. பனிப்போர் முடிவுக்கு பின் பொதுவுடைமைப் கட்சி ரஷ்யாவில் அதன் புகழை இழந்தது. இருப்பினும், சில பொது உடைமைக் கட்சிகள் இன்னும் மக்களாட்சி அரசுகளுக்குள் அரசாங்கக் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்துகின்றன. பொதுவுடைமைக் கட்சிகள் இன்றும் தொடர்ந்து சீனா மற்றும் வட கொரியாவில் எதேச்சதிகார அரசாங்கங்களைக் கட்டுப்படுத்துகின்றன.

ஈ. தென்னாப்பிரிக்காவின் கட்சி முறை

ஆப்பிரிக்க நாடுகளில், அரசியல் கட்சிகள் முதலில் காலனித்துவத்துக்கு எதிராக போராடுவதற்காக உருவாக்கப்பட்டது. காலனித்துவத்திலிருந்து விடுதலை அடைந்த ஆப்பிரிக்க நாடுகளில், அரசியல் கட்சிகள் இராணுவவாதத்திற்கு எதிராக கடுமையாக போராடுகின்றன.

தென்னாப்பிரிக்காவின் அரசமைப்பு

- 18 வயதில் அனைவருக்கும் வாக்குரிமை
- பொதுவான வாக்காளர் பட்டியல்
- வழக்கமான தேர்தல்
- பொறுப்புணர்வு, பதிலுரைத்தல் மற்றும் வெளிப்படையான அரசாங்கத்தை உறுதிப்படுத்த பல கட்சி முறை மக்களாட்சி அவசியம்.

இந்தியாவில் கட்சி முறை

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான சுதந்திர போராட்டத்தினாலும், தேசியவாதத்தின் எழுச்சியினாலும் இந்தியாவில் கட்சி முறைகள் வெளிப்பட்டன. இந்திய அரசியல் இன்று பல கட்சி முறையை கொண்டதாக இருப்பினும் இந்திய வரலாற்றில் நீண்ட காலமாக, ஒரே கட்சி அரசியல் அரங்கில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 202 06/12/2022 12:04:22

இந்திய தேசிய காங்கிரசு (INC) 1885 ஆம் ஆண்டில் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (A.O.Hume) என்பவரால் நிறுவப்பட்டது. இது சட்டமன்ற மற்றும் அரசியல் பிரிவுகளில் இந்தியர்களின் அரசியல் பங்கேற்பிற்கான அடித்தளமாக இருந்தது. இது படிப்படியாக பல்வேறு நிலைகளில் அரசியல் சீர்திருத்தங்களைக் கோரியது. ஒத்துழையாமை இயக்கத்திற்கு (1921-23) பின்னர், இந்திய தேசிய காங்கிரசு (INC) முழுமையான அரசியல் சுதந்திரத்தை கோரியது.

20-ஆம் நூற்றாண்டில், வகுப்புவாதத்தை செயல்திட்டமாக கொண்ட கட்சிகள், அதாவது 1906 ஆம் ஆண்டு இந்தியாவில் முஸ்லிம் லீக் மற்றும் 1916-இல் இந்து மகாசபை போன்ற கட்சிகள் உருவாகின. சென்னை மாகாணத்தில், தென்னிந்திய சுதந்திரவாதக் கூட்டமைப்பு (நீதிக்கட்சி) பிராமணரல்லாதோரின் (திராவிடர்கள்) நலன்களை பிரதிபலிக்க உருவாக்கப்பட்டது. எனினும் இந்திய தேசிய காங்கிரசில் நகர்ப்புற, உயர்குடி சாதியினர், பெரும்பாலும் மேற்கத்திய கல்வி கற்றவர்களையே பிரதிநிதித்துவப்படுத்தியதுடன். ஆங்கிலேய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு தளத்தை வழங்கியது. படிப்படியாக இந்திய தேசிய காங்கிரசு இந்தியாவின் அரசியல் கட்சியின் முறையின் வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கினை வகித்தது. 1905-இல் வங்கப் பிரிவினைக்குப் பிறகு, இந்திய தேசிய காங்கிரசில் மிதவாதிகள் மற்றும் தீவிரவாதிகள் என பிரிவினை ஏற்பட்டது.

1906-ஆம் ஆண்டில் முஸ்லிம் லீக்கின் உருவாக்கம் முரண்பாடான அரசியல் பேரம் பேசும் வெளிப்படையான காலமாக உருவானதோடு, இந்திய கட்சி முறையின் உண்மையான தொடக்கத்தை பிரதிபலித்தது.

அரசியல் அரங்கில் மகாத்மா காந்தியின் வருகையைத் தொடர்ந்து, அவரின் அகிம்சையின் மீதான தார்மீக – நெறிமுறைக் கவனமுடன் கூடிய, அரசியல் லட்சியங்கள் மற்றும் வழி முறைகளில் இந்திய தேசிய காங்கிரசு (INC) என்பது அனைத்து பிரிவுகளையும் சேர்ந்த ஏழை விவசாயிகள் மற்றும் பின்தங்கிய பிரிவினர்களையும், பிரதிநிதித்துவப்படுத்தியது

செயல்பாடு

- இந்தியாவில் பல கட்சி அமைப்பு ஏன் நமக்கு உள்ளது?
- பல கட்சி அமைப்புகளின் நன்மைகள் மற்றும் தீமைகள் என்ன?
- வகுப்பை மூன்று அல்லது நான்கு குழுக்களாக பிரிக்கவும், குழு கலந்துரையாடலை நடத்தவும். ஏதேனும் ஓர் அணியை தேர்ந்தெடுத்து அவர்களின் கருத்துக்களை மற்றவர்களுக்கு தெரிவிக்கவும்.

சித்தரஞ்சன் தாஸ் 1922-இல் தொடங்கிய சுயராஜ்ய கட்சி, 1934-இல் ஆச்சார்யா நரேந்திர தேவ் தொடங்கிய காங்கிரசு சோசலிஸ்ட் கட்சி மற்றும் 1920-இல் எம்.என். ராயின் (M.N. Roy) முயற்சியால் தொடங்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகள் இதர முக்கிய அரசியல் கட்சிகள் ஆகும். அரசியல் பரப்புரைகளில் ஈடுபடும் பல அரசியல் கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடாமல் இருந்தன. இத்தகையவை அழுத்த குழுக்களாகச் செயல்பட்டன.

1977-ஆம் ஆண்டு வரை பொதுவுடமை கட்சி, சோசலிஸ்ட் கட்சிகள் மற்றும் வலதுசாரி ஜனசங்கம் ஆகியவை தேசிய அளவில் குறிப்பிடத்தக்க எதிர்கட்சிகளாக இருந்தன. 1977 வரை, எந்த ஒரு கட்சியும் தேசிய அளவில் இந்திய தேசிய காங்கிரசுக்கு மாற்றாக வர இயலவில்லை. எனவே, ஜெயப்பிரகாஷ் நாராயணனின் தலைமையின் கீழ் பல தேசிய கட்சிகள், தேசிய அளவிலான மாற்றுக் கட்சியை

உருவாக்க இணைந்தன. 1977-ஆம் ஆண்டில் ஜனதா கட்சி மத்தியில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. 1980-க்குப் பிறகு, இந்த கட்சிகள் ஒன்றியிருக்கும் திறனையும், ஒற்றுமையையும் இழந்து விட்டன. பாரதீய ஜனதா கட்சி என்ற புதிய பெயருடன் ஜனசங்கம் புத்துயிர் பெற்றது. இதற்கிடையில் கன்ஷிராமின் பகுஜன் சமாஜ் கட்சி சமூக நீதியை பிரதான திட்டமாக கொண்ட ஒரு தேசியக் கட்சியாக உருவாகியது. கேரளா, மேற்கு வங்காளம் மற்றும் திரிபுரா போன்ற சில மாநிலங்களில் பொதுவுடமை கட்சி (மார்க்சிஸ்ட்) மிகவும் சக்திவாய்ந்ததாக ஆனது.

1990-களில் இந்திய அரசியல் கூட்டணி அரசாங்கங்களுக்கான காலமாக இருந்தது. இந்திய அரசியல் முறைமை என்பது சமகால இந்தியாவில் காணப்பட்ட பலதரப்பட்ட பண்பாட்டு சமூக உறவு, பன்முகத்தன்மை, அதிக போட்டித்திறனோடு அதிக அளவில் மக்களாட்சி மயமாக்கப்பட்ட பிரதிநிதித்துவம் பெற்றது. பழைய கட்சிகள் வழக்கற்று செயலற்றதாகவும் மாறிவிட்டன. மேலும் புதிய கட்சிகள் மாறிவரும் சவால்களை எதிர்கொள்ள முயற்சித்தன.

1990-களில் இருந்து கூட்டாட்சி அரசியல் முறையை நாம் காண்பதுடன் பிராந்தியக் கட்சிகள் பெரிய செல்வாக்கைப் பெற்றுள்ளதையும் மத்திய அரசின் ஆதிக்கத்திற்கு எதிராக பிரதேச உணர்வுகளை பிரதிநிதிப்படுத்துவதையும் நாம் காண்கிறோம். தற்போதைய காலத்தில், பிராந்திய அளவிலான கூட்டணிகள் கூட்டாட்சி அரசியலுக்கு ஆதரவாகப் குரல் கொடுக்கும் போக்கு இருப்பதைக் காணலாம். இதற்கு காரணமாக அரசியலில் பிரதேசமயமாக்கலும், குறிப்பிட்ட பகுதிகளில் அதிக ஆதரவைக் கொண்டிருக்கும் கட்சிகளும் உள்ளன.

மண்டலக் கட்சிகள்

பஞ்சாப்பில் சிரோமணி அகாலி தளம், உத்தரப்பிரதேசத்தில் சமாஜ்வாதிக் கட்சி, ஆந்திர பிரதேசத்தில் தெலுங்கு தேசம் கட்சி, பீகாரில் ராஷ்டிரிய ஜனதா தளம், மேற்கு வங்காளத்தில் அகில இந்திய திரிணாமுல் காங்கிரசு, தெலுங்கானாவில் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி, அசாமில் அசாம் கண பரிசத், மகாராஷ்டிராவில் சிவசேனா, ஜம்மு காஷ்மீரில் தேசிய மாநாட்டுக்கட்சி, மக்கள் ஜனநாயக கட்சி, தமிழகத்தில் திராவிட முன்னேற்ற கழகம் மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை முக்கிய பிராந்தியக் கட்சிகளாக உள்ளன.

வாக்காளர்களிடையே அரசியல் விழிப்புணர்வு அதிகரிக்கையில், பிரதேச, சமூக மற்றும் மத அடையாளங்களுடன் அதிக அணி திரட்டலும் உள்ளது. அரசியல்குழுக்களின் அமைப்பில் பார்க்கும்போது ஒரு பிராந்தியத்திற்கும் இன்னொன்றிற்கும் இடையில் உள்ள அரசியல் மற்றும் சமூக குழுக்களின் பண்புகள் போன்றவற்றில் பரந்த வேறுபாடு உள்ளது.

தமிழ்நாட்டில் கட்சி முறை

தமிழ்நாட்டில், பெரும்பாலான இந்திய மாநிலங்களைப் போலவே தொடக்கத்தில் சுதந்திர போரட்ட காலத்தில் காங்கிரசு கட்சி ஆதிக்கம் செலுத்தியது. இருப்பினும் சாதி அடுக்குமுறையில் சிக்கல்கள் மற்றும் அதிகரிக்கும் வடக்கு, தெற்கு பிரிவினையின் எழுச்சி ஆகியவை மாநிலத்தில் காங்கிரசினுடைய புகழைக் குலைத்தன. திராவிட இயக்கம் பெரியார், ஈ.வே.ராமசாமியின் கீழ் தமிழ்நாட்டில் புத்துயிர் பெற்று திராவிட உரிமைகள், சுயமரியாதை, கண்ணியம் ஆகியவற்றை வலியுறுத்தல் மற்றும் வடக்கு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, பிராமணர் ஆதிக்கத்திறன் எதிரான சமூக கொண்டு ஆகியவற்றினால் பிரபலமடைந்தது.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 204 06/12/2022 12:04:24

www.tnschoolbooks.in

தமிழ்நாடு - அரசியல்

தமிழ்நாட்டில் கட்சி அமைப்பு முறையானது சுதந்திர இந்தியாவின் அரசியலில் மாநில கட்சிகளின் ஒப்புயர்வற்ற நிலைக்கு முன் மாதிரியாக உள்ளது. இந்த மேம்பாட்டிற்கு மிகவும் தெளிவான சமூக-பொருளாதார, பண்பாடு மற்றும் வரலாற்று காரணங்கள் உள்ளன. காலனித்துவ காலம்முதல் பகுத்தறிவு மற்றும் சமூக நீதி இயக்கங்களின் நீண்ட வரலாறு மற்றும் 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து திராவிட சிந்தனையை அணி திரட்டுதல் போன்றவை தமிழக அரசியலின் தன்மையையும், மாநில அரசியலில் அரசியல் கட்சி முறையின் எதிர்காலத்தையும் தீர்மானித்தது எனலாம்.

10.7 மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு

ஓர் மக்களாட்சியின் திறன்மிக்க செயல்பாட்டிற்கு, முரண்பாடான விருப்பங்களைப் பிரதிபலிப்பு செய்யும் அரசியல் கட்சிகளின் இருப்பது கட்டாயமாகும். பல்வேறு விருப்பங்களையும், கொள்கைகளையும் பரிந்துரைக்கையில் பெரும்பாலான அரசியல் கட்சிகள், வலதுசாரி (பழமைவாதம், பாரம்பரியம் மற்றும் முதலாளித்துவம்) அல்லது இடதுசாரி சிந்தனையை (சமத்துவ-சார்பு, தாராளவாதம் மற்றும் தொழிலாளர் நலனை) பின்பற்றுகின்றன. மக்களாட்சிக்கான லட்சியத்தை அடைவதற்கு அரசியல் கட்சிகள் அவசியமானவை என்பது உண்மையே என்றாலும், மக்களாட்சி கோட்பாடற்ற, தனிப்பட்ட கட்சிகளின் வளர்ச்சி மற்றும் சர்வாதிகார தலைமையின் கீழ் தனிப்பட்ட கட்சிகளின் எழுச்சி என்பது மக்களாட்சிக்கு ஒரு முக்கியமான சவால் ஆகும். இந்தியா போன்ற பன்முக பண்பாடு, மொழி, மத மற்றும் பொருளாதார வேற்றுமை கொண்ட நாடுகளில், நாட்டின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் மக்களின் பல்வேறுபட்ட நலன்களை அரசியல் கட்சிகள் மட்டுமே பிரதிபலிக்கின்றன. இத்தகைய முதிர்ச்சியடைந்த, மதச்சார்பற்ற நிலைப்பாட்டை மேற்கொள்வது இந்தியா போன்ற மக்களாட்சி நாடுகளுக்குப் பொருத்தமானது. இல்லையெனில், இந்தியாவின் மதிப்புயர்வான ஒற்றுமை மற்றும் நிலைத்தன்மையை பாதுகாக்க முடியாது. நாட்டின் நலனிற்காக பொறுப்புணர்வு மற்றும் கொள்கை ரீதியான கட்சிகள், மக்களாட்சி அமைப்புகளின் நிலைதன்மைக்காக தங்கள் கடமையையும், செயல்பாட்டையும் கையாளுவதில் முதிர்ச்சி மற்றும் பொறுப்புணர்வை காட்டுகின்றன.

மக்களாட்சியில் எதிர்கட்சிகளின் பங்கு

கட்சி முறை மற்றும் மக்களாட்சி ஆகியவற்றிக்கு இடையிலான உறவு, மக்களாட்சியில் எதிர்கட்சிகளின் பங்கு பற்றிய விவாதம் இல்லாமல் முழுமையடையாது. நாட்டில் ஓர் சக்தி வாய்ந்த எதிர்கட்சி அல்லது

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 205 06/12/2022 12:04:25

கட்சிகள் இல்லாமல் மக்களாட்சிக்கு எந்த அர்த்தமும் இல்லை. மக்களாட்சியின் தன்மை ஆளும் கட்சியின் வலிமையினால் மட்டுமே நிர்ணயிக்கப்படுவது அல்ல, எதிர்க்கட்சியின் பங்கு மற்றும் அதன் செயல்பாட்டிலும் உள்ளது.

உண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் என்பவர் அமைச்சர் பதவிக்கான தகுதியையும், சலுகைகளையும் பெறுகிறார். ஓர் பலவீனமான எதிர்க்கட்சி பொறுப்புணர்வற்ற அரசாங்கத்திற்கு அல்லது பெரும்பான்மையின் கொடுங்கோண்மைக்கு வழிவிடுகிறது.

அழுத்தக்குழுக்கள் அல்லது தன்னலக்குழுக்கள் ஆகியவை முக்கியப் பிரச்சனைகள் மற்றும் நிகழ்வுகளில் ஓர் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவை பொதுவான அரசியல் மற்றும் சமூக நலன்களைக் கொண்ட குழுக்களாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அவை வெளியிலிருந்து வரும் முடிவுகளின் மீது செல்வாக்கு செலுத்துகின்றன. அழுத்தக் குழுக்கள் குறிப்பிட்ட நலன்களுக்காக தன்னார்வ உறுப்பினர்கள் மூலம் ஆதரவு திரட்டுகின்றன. அரசியல் கட்சிகள் போலன்றி, அழுத்தக்குழுக்கள் தேர்தலில் போட்டியிடுவதில்லை.

அழுத்தக்குழுக்கள் பல பொதுக் கொள்கை சிக்கல்களால் பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றி அரசாங்கத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே அவை அழுத்தக் குழுக்கள் என்று அழைக்கப்படுகின்றன. தொழில் சார்ந்த அழுத்தக் குழுக்கள் என்பவை வணிக நலன்களை, தொழிற் சங்கங்கள், விவசாயிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், மருத்துவர்கள், பண்பாட்டு குழுக்கள் மற்றும் நிறுவன குழுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கலாம். மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கிடையிலான தொடர்பு மற்றும் தொடர்புக்கான ஆதாரமாக செயல்படுவதன் மூலம் இந்திய அரசியல் முறைமையில் அழுத்தக் குழுக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவர்கள் பொதுமக்களின் சமூக, பொருளாதார சிக்கல்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதோடு, அரசாங்கத்தின் நிர்வாகக் கொள்கைகள் மீது செல்வாக்கு செலுத்துகிறார்கள்.

தேர்தலியல்

தேர்தல் பற்றிய ஆய்வு மற்றும் புள்ளிவிவர பகுப்பாய்வே தேர்தலியல் ஆகும். பொது கருத்துக் கணிப்புகள், தேர்தலியலில் ஓர் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. தேர்தலுக்கு முந்தைய கருத்து கணிப்புகள், தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் மற்றும் தேர்தல் முடிவுகள் ஆகியவை இதில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. கருத்துக்கணிப்புகள் மற்றும் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் ஆகியவை தேர்தல்களில் வாக்காளர் விருப்பத்தின் முக்கிய குறியீடாக இருக்கின்றன.

இரண்டுக்கும் இடையேயான பிரதான வேறுபாடு, வாக்காளர் வாக்களிக்கும் முன் நடத்தப்படும் கருத்துக்கணிப்பு மற்றும் வாக்குப்பதிவு நடைபெறுகையில் வாக்காளர் வாக்களித்த பின் வாக்குச்சாவடிக்கு வெளியே நடத்தப்படும் கருத்துக்கணிப்பு என்பதாகும். தேர்தலுக்குப் பின் வெளிவரும் கருத்துக்கணிப்பு முடிவுகள் தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்புகளை விட நம்பகமானதாகக் கருதப்படுகிறது. கருத்துக்கணிப்புகளின் முடிவு உண்மையில் தேர்தல் முடிவுகளை ஒத்திருக்கலாம் அல்லது தவறாகலாம். இருப்பினும், அவை உறுதியற்ற யாருக்கு வாக்களிப்பது என்பதனை தீர்மானிக்காத வாக்காளர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருப்பதுடன் அனைத்து கட்சிகளுக்கும் வாக்களிப்பு நடைமுறைகளின் சமநிலையை உருவாக்குவதற்கு முக்கியமானதாக இருக்கிறது.

கலைச்சொற்கள்: Glossary

அரசியல் கட்சி : தன் உறுப்பினர்களை, பொது அலுவலகத்திற்கு தேர்ந்தெடுப்பதன் மூலம் அரசியல் அதிகாரத்தை பெறும் ஓர் அமைப்பு.

ஒரு கட்சி முறை: அரசமைப்பை அடிப்படையாக கொண்டு அரசாங்கம் அமைக்கும் உரிமையை பெற்ற ஓர் அரசியல் கட்சி அல்லது அரசியல் அதிகாரத்தின் மீது தனிப்பட்ட கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் ஒரே ஒரு அரசியல் கட்சி.

இரு கட்சி முறை : இந்த அமைப்பில் இரண்டு கட்சிகள் மட்டுமெ அரசியலில் இருக்கும். இவற்றுள் ஒன்று ஆளும் கட்சியாகவும் மற்றொன்று எதிர்க்கட்சியாகவும் இருக்கும். இந்த முறையில் பெறும்பான்மையை பெறுவதற்கு மிகுந்த வாய்ப்பு உள்ளது. மற்ற கட்சிகள் மிக சிறிய கட்சிகளாகவோ அல்லது நாட்டின் ஒரு பகுதியில் மட்டும் இயங்கும் கட்சிகளாகவோ இருக்கும்.

பல கட்சி முறை : பல அரசியல் கட்சிகள் அரசாங்க பதவிகளை தனித்தனியாகவோ அல்லது கூட்டணியிலோ கட்டுப்படுத்தும் திறனைக் கொண்டுள்ள ஒரு அமைப்பு.

தேர்தல் : தகுதி வாய்ந்த நபர்களை ஆட்சி அதிகாரத்திற்கு வாக்கெடுப்பின் மூலம் மக்கள் தேர்ந்தெடுக்கும் முறை.

தேர்தல் ஆணையம் : தேர்தல் ஆணையம் தன்னாட்சி பெற்ற ஒரு அமைப்பு. மாநில சட்டப்பேரவைகள், மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்தவும், மேற்பார்வையிடவும் உருவாக்கப்பட்டுள்ள அமைப்பு.

தேர்தலியல் : தேர்தல் அதன் முடிவுகள், அது தொடர்பான புள்ளி விவரங்கள் பற்றிய படிப்பு.

தேர்தல் முறைமை : தேர்தல்களைப் பற்றிய அனைத்து விதிகளுக்கான பொது பெயர், அதாவது வாக்களிப்பு முறை, எல்லைகள், வாக்காளர்களின் பதிவு, வேட்பாளர், பிரச்சார செலவு, ஒளிபரப்பு முதலியன.

பெரும்பான்மை அரசாங்கம் : சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத்தில் ஐம்பது சதவிகித இடங்களுக்கு மேல் கொண்டு அமைக்கும் அரசாங்கம்..

மக்களாட்சி: மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சியாகும்

மதிப்பிடுதல் (Evaluation)

I. சரியான பதிலை தேர்வு செய்யவும்

1. அரசியல் அதிகாரத்தை அடைவதே பொது நோக்கமாக கொண்ட மக்கள் குழு என்பது

அ. அரசியல் கட்சி
ஆ. தன்னலக் குழு
இ. பிரிவினைக் குழு
ஈ. அரசியல் தலைமைத்துவம்

2. கீழ்க்கண்டவற்றில் அரசியல் கட்சியின் முக்கிய அங்கம் எது?

அ. தலைவர்கள் ஆ. தொண்டர்கள்
இ. செயல் உறுப்பினர்கள் ஈ. இவை அனைத்தும்

3. கீழ்க்கண்டவற்றில் அரசியல் கட்சியின் செயல்பாடு எது?

அ. தேர்தலில் போட்டியிடுவது
ஆ. அரசாங்கத்தை அமைப்பதும், இயக்குவதும்
இ. பொதுக் கருத்துக்களை உருவாக்குதல்
ஈ. இவை அனைத்தும்

4. அரசாங்கத்தை இயக்கும் அரசியல் கட்சி என்பது

அ. ஆளும் கட்சி ஆ. தன்னலக் குழு
இ. எதிர்க்கட்சி ஈ. பிரிவினைக் குழு

5. அரசியல் கட்சிகளின் எழுச்சியுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது........

அ. பிரதிநிதித்துவ மக்களாட்சிகளின் தோற்றம்
ஆ. பெரிய அளவிலான சமுதாயங்கள்
இ. அரசாங்கத்தை தடுத்து நிறுத்தவதற்கும், ஆதரவு தருவதற்குமான வழிமுறை
ஈ. இவை அனைத்தும்

6. ஒரு கட்சி கொண்ட அமைப்பு முறை கொண்ட நாடு.

அ. சீனா ஆ. இங்கிலாந்து
இ. அமெரிக்கா ஈ. பிரான்சு

7. இரு கட்சி முறை கொண்ட நாடு

அ. பாகிஸ்தான் ஆ. இந்தியா
இ. இங்கிலாந்து ஈ. இவை எதுவும் இல்லை

8. கீழ்க்கண்டவற்றில் ஒரு கட்சி முறையைக் கொண்ட நாடு எது?

அ. சீனா ஆ. வடகொரியா
இ. கியூபா ஈ. இவை அனைத்தும்

9. கீழ்க்கண்டவற்றில் பல கட்சி முறையைக் கொண்ட நாடு எது?

அ. இந்தியா ஆ. பாகிஸ்தான்
இ. பிரான்ஸ் ஈ. இவை அனைத்தும்

10. காங்கிரசு கட்சியின் தேர்தல் சின்னம் என்ன?

அ. தாமரை சின்னம் ஆ. கை சின்னம்
இ. யானை சின்னம் ஈ. கடிகார சின்னம்

12. "தாமரை" எந்த கட்சியின் அரசியல் சின்னமாக உள்ளது?

அ. இந்திய தேசிய காங்கிரசு ஆ. பகுஜன் சமாஜ் கட்சி
இ. பாரதிய ஜனதா கட்சி ஈ. சி.பி.ஐ (எம்)

13. பொதுக்கருத்து என்பது முக்கிய பங்கு வகிப்பது...........

அ. மக்களாட்சி முறையில்
ஆ. சர்வாதிகார முறையில்
இ. மக்களாட்சி மற்றும் சர்வாதிகார முறை ஆகிய இரண்டிலும்
ஈ. சுமூகமாக செயல்படும் அனைத்து வகையான அரசியல் முறைமைகளிலும்

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 208 06/12/2022 12:04:26

14. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் முக்கிய அரசியல் கட்சிகள் எவை?

அ. சுதந்திர மற்றும் மக்களாட்சிவாதிகள்
ஆ. குடியரசு மற்றும் மக்களாட்சிவாதிகள்
இ. மக்களாட்சி மற்றும் சமதர்மவாதிகள்
ஈ. குடியரசு மற்றும் பொதுவுடைமைவாதிகள்

15. தேர்தலியல் எதை பற்றி கையாள்கிறது?

அ. தேர்தல் மற்றும் தேர்தல் குறித்த புள்ளிவிவர பகுப்பாய்வு
ஆ. கருத்து கணிப்புகள் மற்றும் தேர்தலுக்கு பிந்தைய வாக்கெடுப்புகள்
இ. பொதுக் கருத்து
ஈ. மேலே உள்ள அனைத்தும்

16. **கூற்று(A):** அரசியல் கட்சிகள் பொதுக்கருத்தினை ஒன்றிணைக்கின்றன
காரணம் (R): பொதுக்கருத்து தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்திறது.

மேற்கூறிய இரண்டு வாக்கியங்களுள் ஒன்று கூற்றாகவும் (கூ) மற்றொன்று காரணமாகவும் (கா) உள்ளது. இந்த சூழலில் கீழ்க் கண்டவைகளுள் எது சரியானது என்று கூறுக.

அ) கூற்று (கூ) காரணம் (கா) இரண்டுமே சரி, கூற்றுக்கான சரியான விளக்கமான காரணம் உள்ளது.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி ஆனால் கூற்றுக்கான சரியான விளக்கமான காரணம் இல்லை.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

II. பின்வரும் கேள்விகளுக்கு மிக சுருக்கமாக பதிலளிக்கவும்

1. அரசியல் கட்சியை வரையறுக்கவும்
2. ஒரு கட்சி முறையை சிறு குறிப்பு எழுதுக?
3. பல கட்சி முறை பற்றி சிறு குறிப்பு எழுதுக?
4. பிராந்திய அரசியல் கட்சியை பற்றி சிறு குறிப்பு எழுதுக?
5. இந்தியாவிலுள்ள முக்கிய அரசியல் கட்சிகளைப் பட்டியலிடுக?
6. பொது கருத்துத்தினை வரையறுக்கவும்
7. இந்தியாவில் எதிர்க்கட்சிகளின் பங்கினை சிறு குறிப்பு எழுதுக?.

III. பின்வரும் கேள்விகளுக்கு சுருக்கமாக பதிலளிக்கவும்

1. மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கினை பற்றி சிறு குறிப்பு எழுதுக?
2. அரசியல் கட்சிகளின் பணிகளைப் பட்டியலிடுக.
3. கட்சி முறையின் வகைகளை பற்றி எழுதுக.
4. பல கட்சி முறையின் நிறைகள் மற்றும் குறைகளைப் பற்றி விவாதிக்கவும்

IV. பின்வரும் கேள்விகளுக்கு விரிவாக பதிலளிக்கவும்

1. இரு கட்சி முறையின் நிறைகள் மற்றும் குறைகளை தெளிவுபடுத்துக.
2. இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளைப் பற்றி விளக்குக.
3. இந்தியாவில் உள்ள பொதுக் கருத்து பற்றி ஓர் கட்டுரையை எழுதுக.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 10_25_09_2018.indd 209 06/12/2022 12:04:26

www.tnschoolbooks.in

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Boix, C. Emergence of Parties and Party systems.Oxford handbook of comparative politics. July 2009.
2. Kothari,R. Politics in India. New Delhi. Orient Longman.2003
3. Mehta, A.K. Political parties and party systems. New Delhi. Sage Publications. 2003
4. Palmobara, J.L & Weiner,M. Eds. Origin and development of political parties. Princeton, 1972
5. Pandian, M.S.S., Brahmin and Non-Brahmin: Genealogies of the Tamil Political Present. Manohar: New Delhi, 2007.

ICT CORNER

அலகு10 பொதுக்கருத்து மற்றும் கட்சி முறை

இந்த செயல்பாட்டின் மூலமாகமாநில அளவில் கட்சி முறைகளின் கட்டமைப்பு பற்றி அறிந்து கொள்ளலாம்.

மாநில அளவில் கட்சி முறைகளின் கட்டமைப்பு

படிகள்

படி 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது என அறிக.

படி 2: செயல்பாட்டின் சாளரத்தில் வலப்பக்கம் கீழே உள்ள பொத்தானை சொடுக்கவும்,

படி 3: சிறிய கதைக்கு பின், மாநில அரசு பற்றி விளக்கப்படும்.

படி 4: மேலும் மாநில அரசு பற்றி விவரம் அறிய முன்னோக்கு பொத்தானை சொடுக்குக..

உரலி :

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

இப்பக்கத்திற்கு தேவைப்பட்டால் *Flash Player or Java Script* ஐ அனுமதிக்கவும்

mocomi.com/how-does-state-government-work/

DSY2U

அலகு 11

தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம்



11.1. வாக்குரிமை மற்றும் பிரதிநிதித்துவத்தின் பொருள் மற்றும் தன்மை

SNC83

வாக்குரிமை மற்றும் தேர்தல் என்றால் என்ன?

இது பொதுத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான ஒரு உரிமையாகும். 'வாக்குரிமை' எனும் சொல், 'சுதந்திரம்' என்று பொருள் படக்கூடிய 'பிராங்க்' என்ற ஆங்கிலோ-பிரெஞ்சு கலவைச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். தேர்தல் என்பது தங்களின் சார்பாக யாரேனும் ஒருவரை அரசியல் தலைவராகவோ அல்லது பிரதிநிதியாகவோ அரசாங்கத்தில் பங்குபெற தெர்ந்தெடுப்பதற்காக வாக்களிக்கும் நடைமுறையாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்திய அரசமைப்பின் பகுதி 15, உறுப்புகள் 324–329 தேர்தலைப் பற்றியதாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என இந்திய அரசமைப்பின் உறுப்பு 326 விளக்குகிறது.

பிரதிநிதித்துவம் என்றால் என்ன?

பிரதிநிதித்துவம் என்பது பிறருக்காக பேசும் நடவடிக்கை அல்லது பிறருக்காக செயல்படுதல் அல்லது பிரதிநிதித்துவம் பெறும் நிலையாகும்.

இந்திய அரசமைப்பில் 'தேர்தல்கள்' என்னும் தலைப்பிலான பகுதி 15 மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நமது அரசமைப்பினை உருவாக்கியவர்கள் இதில் உள்ள அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இதை அரசமைப்பின் ஓர் பகுதியாக இணைத்தனர். இம்முக்கிய காரணத்தினால் தான் 'தேர்தல்' என்னும் கருப்பொருளுக்கு நமது நாட்டில் அரசமைப்பிலான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கற்றலின் நோக்கங்கள்

- தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம் பற்றி மாணவர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்தல்
- 'தேர்தலியல்' என்னும் சொல்லை விளக்குதல்.
- தேர்தலின் பல்வேறு முறைகளை மாணவர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்தல்.
- இந்திய தேர்தல் ஆணையத்தைப் பற்றி விழிப்புணர்வு பெறுதல்.
- கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் முக்கியத்துவத்தினை அறிதல்.
- சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்களின் தேவையை பற்றி அறிவுறுத்துதல்.
- அரசியலில் இளைஞர்களின் பங்கை வெளிக்கொணர்தல்.

முன்னரே 'தேர்தல்கள்' என்பவை பண்டைய ஏதென்ஸ், ரோமாபுரி ஆகியவற்றிலும் போப் ஆண்டவர் மற்றும் ரோமானியப் பேரரசர்கள் தேர்வு ஆகியவற்றிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்கால தேர்தல்களின் தோற்றம் என்பது 17-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் படிப்படியாக எழுச்சி கண்ட பிரதிநிதித்துவ அரசாங்கங்கள் மூலமாகவும் பின்னர் வட அமெரிக்காவிலும் தோன்றியது. பிரதிநிதித்துவ மக்களாட்சியில் தேர்தல்கள் மிகவும் முக்கியமானவையாகும்.

உங்களது குரல் ஒங்கி ஒலிப்பதற்கு தேர்தலில் வாக்களிப்பதே சிறந்த வழியாகும். சட்டங்களின் மூலமாக அரசியல் கட்சிகள் மக்களை வாக்களிக்க விடாமல் செய்யும் போது தேர்தல்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன என்பது உண்மையாகும். தேர்தல்கள் மற்றும் பிரதிநிதித்துவம் ஆகியவை அரசாங்கத்தை உருவாக்குவதன் அடிப்படையாகும்.

மக்களாட்சியின் வாக்காளர் முறைமை

ஓர் மக்களாட்சியின் வாக்காளர் முறைமையின் மிகவும் அடிப்படையான இயல்புகளைப் பற்றி நாம் கற்றுக்கொள்வோம். ஓர் மக்களாட்சியின் வாக்காளர் முறைமை என்பது பின்வருமாறு உள்ளதாகும்.



மக்களாட்சியின் வாக்காளர் முறைமையின் இயல்புகள்

தேர்தல்கள் ஏன் நமக்கு தேவைப்படுகின்றன?

குறிப்பிட்ட இடைவெளிகளில் மக்கள் தங்களின்பிரதிநிதிகளைத்தேர்ந்தெடுப்பதற்கும், விருப்பப்படி அவர்களை மாற்றுவதற்கும் தகுந்த வழிமுறைகள் தேவைப்படுகின்றன. அதுவே தேர்தலாகும் ஆகவே தற்காலத்தில் எவ்வகையான பிரதிநிதித்துவ அரசாங்கத்திற்கும் தேர்தல் அடிப்படையானதாகும். ஆகையால் பெரும்பாலான மக்களாட்சிகளில் மக்கள் தங்களின் பிரதிநிதிகள் மூலமாகவே ஆட்சி செய்கின்றனர்.

ஓர் தேர்தலில் வாக்காளர் பல்வேறு தேர்வுகளை மேற்கொள்கிறார். அவையாவன

- தங்களுக்கான சட்டங்களை உருவாக்குபவரை தேர்வு செய்வர்.
- அரசாங்கத்தை அமைத்து பெரும்பான்மை முடிவுகளை எடுப்போரைத் தேர்வு செய்வர்.
- அரசாங்கம் மற்றும் சட்டமியற்றுதலில் வழிகாட்டக் கூடிய கொள்கைகளைக் கொண்ட கட்சியைத் தேர்வு செய்வர்.

எது தேர்தலை மக்களாட்சியிலானதாக ஆக்குகிறது?

- அனைவருக்கும் தேர்வு செய்யும் வாய்ப்பு இருக்க வேண்டும். ஒருவருக்கு ஒரு வாக்கு மற்றும் ஒவ்வொரு வாக்கிற்கும் சமமமான மதிப்பு என்பது இதன் பொருளாகும்.
- அரசியல் கட்சிகளால் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் சுதந்திரமாகத் தேர்தலில் போட்டியிடுவதுடன் வாக்காளர்களுக்குத் தகுந்தவாறு உண்மையான தேர்வுகளுக்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.
- அத்தேர்வுகள் தகுந்த இடைவெளிகளில் வழங்கப்பட வேண்டும். ஒருசில ஆண்டுகளுக்கு ஒருமுறை தகுந்த இடைவெளியில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.
- மக்களால் விரும்பப்படும் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- மக்கள் தங்களின் விருப்பங்களுக்குத் தகுந்தவாறு தேர்ந்தெடுக்கும் வகையில் சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல் என்பது ஓர் முறையான முடிவாக்க நடைமுறையாகும். அதில் மக்கள் பொதுப்பதவி வகிப்பவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்தலின் மூலமாக சட்டமன்றங்களில் உள்ள பதவிகள் மட்டுமல்லாமல் ஆட்சித்துறை, நீதித்துறை மற்றும் வட்டார, உள்ளாட்சி அரசாங்கங்களில் உள்ள பதவிகளும் நிரப்பப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

தேர்தல்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் மற்றும் முடிவுகளை கற்றறியும் கல்வியே தேர்தலியல் ஆகும்.

11.2 பிரதிநிதித்துவத்தின் வகைகள் / தொகுதிகளுக்கான இடஒதுக்கீடு

தேர்தல் முறைமை– பன்மைத்துவம் / பெரும்பான்மை முறைமைகள்

பன்மைத்துவம் / பெரும்பான்மை முறைமைகளின் கொள்கைகள் மிகவும் எளிமையானவையாகும். மக்கள் வாக்களித்தபிறகு வாக்குகள் எண்ணப்பட்டு அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் அல்லது கட்சிகள் வெற்றி பெற்றவையாக அறிவிக்கப்படுகின்றன. இருப்பினும் இதன் நடைமுறைகள் மாறுபடுகின்றனது. ஆகையால் ஐந்து வகையான பன்மைத்துவ / பெரும்பான்மை முறைமைகளை அடையாளப்படுத்தலாம்.

அ) முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (FPTP)

ஆ) தொகுதி வாக்கு (BV)

இ) கட்சித் தொகுதி வாக்கு (PBV)

ஈ) மாற்று வாக்கு (AV)

உ) இரு சுற்று முறை (TRS)

அ. முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (First Past The Post)

முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் என்பது பன்மைத்துவம் / பெரும்பான்மை முறையின் எளிமையான வடிவமாகும். இது ஓர் உறுப்பினர் தொகுதிகள் மற்றும் வேட்பாளரை மையப்படுத்ததுவதுடன் வாக்களித்தலும் பயன்படுத்தப்படுகிறது. எப்.பி.டி.பி. முறைகள் அடிப்படையில் இங்கிலாந்தில் காணப்பட்டன. அது தவிர இங்கிலாந்தின் வரலாற்று அடிப்படையிலான ஆதிக்கத்தில் இருந்த நாடுகளிலும் காணப்படுகின்றன. இங்கிலாந்து தவிர அமெரிக்கா, கரீபிய நாடுகள், வங்கதேசம், மியான்மர், இந்தியா, மலேசியா, நேபாளம் மற்றும் தெற்கு பசிபிக் பகுதியில் உள்ள சில நாடுகளிலும் இம்முறை காணப்படுகிறது.

செயல்பாடு

உனது மாநிலத்தில் கடந்த சட்டமன்றத் தேர்தல் எப்பொழுது நடைபெற்றது என உனக்குத் தெரியுமா? கடந்த ஐந்து ஆண்டுகளில் உனது பகுதியில் வேறு ஏதேனும் தேர்தல்கள் நடைபெற்றனவா? அத்தேர்தல்களைப் பற்றி எழுதுக. (தேசிய, மாநில, உள்ளாட்சி மற்றும் பிற). அவை எப்பொழுது நடைபெற்றன? உனது பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினரின் விவரங்களைக் கண்டறிக.

உங்களுக்குத் தெரியுமா?

FPTP (எப்.பி.டி.பி) என்பது பன்மைவாத/ பெரும்பான்மைவாத வாக்காளர் முறையில் எளிமையான வடிவமாகும். இதில் ஒரு வேட்பாளர் செல்லத் தகுந்த வாக்குகளில் பிற வேட்பாளர்களை விட அதிக வாக்குகளை பெற்றிருந்தாலே வெற்றி பெற்றவர் ஆவார். அறுதிப் பெரும்பான்மை பெற வேண்டிய அவசியமில்லை. இந்த முறை ஒரு உறுப்பின் தொகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. இதில் வாக்காளர்கள் கட்சிக்காக அல்லாமல் வேட்பாளருக்காகவேவாக்களிக்கின்றோம்.

ஆ. தொகுதி வாக்கு (Block Vote)

தொகுதி வாக்கு என்பது அரசியல் கட்சிகளே இல்லாத அல்லது பலவீனமாக உள்ள நாடுகளில் காணப்படுவதாகும். கேமன் தீவுகள், பாக்லாந்து தீவுகள், கர்ன்சே, குவைத், லாவோஸ், லெபனான், மாலத்தீவுகள், பாலஸ்தீனம், சிரிய அரபுக் குடியரசு ஆகியவை தொகுதிவாக்கு முறையிலான வாக்காளர் முறைமைகளைப் பின்பற்றுகின்றன.

தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் திறனை வாக்காளர்கள் தக்கவைத்துக் கொள்வதால் தொகுதிவாக்கு முறை பாராட்டப்படுகிறது. அத்துடன் தகுந்த முறையில் நில அமைப்பின் அமைக்கப்பட்ட மாவட்டங்களும் அனுமதிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் எப்.பி.டி.பியுடன் ஒப்பிடுகையில் அரசியல் கட்சிகளின் பங்கு அதிகரிப்பதுடன் அதிக இணக்கம் மற்றும் அமைப்பு ரீதியான கட்சிகளை வலுப்படுத்துவதாக உள்ளது.

உங்களுக்குத் தெரியுமா?

தொகுதி வாக்கு என்பது ஓர் பன்மைத்துவ/பெரும்பான்மை முறைமையில் பல்உறுப்பினர் மாவட்டங்களில் பயன்படுத்தப்படுவதாகும். இதில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களுக்குத் தகுந்த வாக்குகள் வாக்காளர்களுக்கு இருக்கும். அதிகபட்ச எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் வெற்றி பெறுகிறார். பொதுவாக கட்சிகளைக் காட்டிலும் வேட்பாளருக்காக மக்கள் வாக்களித்தாலும் பெரும்பாலான முறைமைகளில் மக்கள் தங்களின் விருப்பத்திற்குத் தக்கவாறு வாக்களிக்கின்றனர்.

இ. கட்சித் தொகுதி வாக்கு (Party Block Vote)

பி.பி.வி என்பது பயன்படுத்துவதற்கு எளிதானதாகும். இது வலுவான கட்சி வேட்பாளர்களில் சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் பெறும் வகையில் கலவையாக அமைந்துள்ளது. இது சமநிலையிலான இன அடிப்படை பிரதிநிதித்துவத்திற்கும் உதவுகிறது. டிஜிபௌடி, சிங்கப்பூர், செனகல், துனீசியா போன்ற நாடுகள் பி.பி.வி. முறையைப் பயன்படுத்துகின்றன.

ஈ. மாற்று வாக்கு (Alternative Vote)

இம்முறையில் வாக்காளர்கள் தங்களின் முதல் விருப்பத்தேர்வை விட வேட்பாளர்களுக்கு இடையே முன்னுரிமை அளிக்கின்றனர். இதனால் இது 'முன்னுரிமை வாக்கு' எனவும் அழைக்கப்படுகிறது. மாற்றுவாக்கு முறை ஆஸ்திரேலியா, பிஜி, பாப்புவா கினியா ஆகிய நாடுகளில் பின்பற்றப்படுகிறது. பல வேட்பாளர்கள் மொத்தமாகப் பெற்ற வாக்குகளை மாற்றுவதன் மூலம் ஒட்டுமொத்த விருப்பமும் இணைக்கப்பட்டு பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது.

செயல்பாடு

மாற்று வாக்கு என்பது முன்னுரிமையான பன்மை முறையாகும். இது வாக்காளர்களின் ஓர் உறுப்பினர் மாவட்டங்களைக் கொண்டதாகும். வாக்காளர்கள் தமது வாக்குச் சீட்டில் உள்ள எண்ணைப் பயன்படுத்தி தமது முன்னுரிமையைக் குறிக்கின்றனர்.

உங்களுக்குத் தெரியுமா?

இருசுற்று முறை என்பது ஓர் பன்மைத்துவ / பெரும்பான்மை முறையாகும். இதில் முதல் சுற்றில் எக்கட்சி அல்லது வேட்பாளருக்கும் அறுதிப்பெரும்பான்மை (50 சதவீதத்திற்கு மேல் ஒரு சதவீதமேனும் பெற்றிருத்தல்) பெறாத நிலையில் இரண்டாவது சுற்று தேர்தல் நடைபெறும். இரு சுற்று முறை எப்போது பெரும்பான்மை, பன்மைத்துவ வடிவம் எடுக்குமெனில், ஒருவேளை இரண்டாம் சுற்றில் இரண்டு வேட்பாளர்களுக்கு மேல் போட்டியிடும் நிலையில் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெறுபவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இதில் அவர்கள் அறுதிப்பெரும்பான்மை பெற்றிருந்தாலும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

உ. இரு சுற்று முறை (Two Round System).

இரு சுற்று முறையின் முக்கிய இயல்பே அதன் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஒரே தேர்தலாக அல்லாமல் ஒரு வாரம் அல்லது பதினைந்து நாட்கள் இடைவெளியில் இரு சுற்றுகளாக நடைபெறுகிறது. இது தேசிய சட்டமன்ற உறுப்பினர் தேர்விற்கும், குடியரசுத் தலைவருக்கான நேரடி தேர்தலுக்கும் உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. இம்முறை மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, காங்கோ, கபோன், மாலி மௌரிடானியா, ஹைதி, ஈரான், வியட்நாம், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் போன்ற நாடுகளில் பின்பற்றப்படுகிறது.



சிறுபான்மையினர் பிரதிநிதித்துவத்தின் பல்வேறு முறைகள்

அரசியலில் போட்டி இருப்பது நன்மையானதா?

தேர்தல்கள் என்பவை அரசியல் போட்டி தொடர்பானவையாகும். இப்போட்டி பல்வேறு வடிவங்களை எடுக்கிறது. இதில் அரசியல் கட்சிகளுக்கு இடையேயான போட்டி மிகவும் வெளிப்படையான வடிவமாகும். தொகுதி அளவில் பல்வேறு வேட்பாளர்களுக்கு இடையேயான போட்டி எனும் அளவில் உள்ளது. போட்டிகள் இல்லையெனில் தேர்தல்கள் அர்த்தமற்றவையாகின்றன. தேர்தலில் ஏற்படும் போட்டியால் ஒவ்வொரு பகுதியிலும் ஒற்றுமையின்மை மற்றும் பிரிவினைவாத உணர்வுகள் தோன்றினாலும், சீரான தேர்தல் போட்டிகள் அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கிறது. மக்கள் எழுப்ப விரும்பும் பிரச்சனைகளைத் தாங்கள் எழுப்பினால், தாங்கள் பிரபலமடைவதுடன் வரக்கூடிய தேர்தலில் தங்களின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாகும் என்பதை அரசியல் தலைவர்கள் அறிவர். இருப்பினும் தங்களது பணியின் மூலமாக வாக்காளர்களை திருப்திபடுத்தவில்லையெனில் மீண்டும் அவர்களால் வெற்றிபெற இயலாது.

நமது தேர்தல் முறை என்ன?

ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக்காலமும் முடிவுக்கு வருகிறது. பின்னர் மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவை கலைக்கப்படுகிறது. அனைத்து தொகுதிகளுக்கும் ஒரே நேரத்திலோ, அதாவது ஒரே நாளிலோ அல்லது ஒருசில நாட்களிலோ தேர்தல் நடைபெறுகிறது. இதுவே பொதுத் தேர்தல் எனப்படுகிறது. சில நேரங்களில் ஒரு தொகுதியில் உள்ள உறுப்பினரின் மரணம் அல்லது பதவி விலகலால் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப தேர்தல் நடைபெறுகிறது. இது இடைத்தேர்தல் என அழைக்கப்படுகிறது.

தேர்தலுக்கான தொகுதிகள்

தமிழக மக்கள் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து மக்களவைக்கு அனுப்புகின்றனர். நமது நாட்டில் இடம் சார்ந்த பிரதிநிதித்துவ முறையை நாம் பின்பற்றுகிறோம். தேர்தலுக்காக நம் நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளை நாம் தேர்தலுக்கான தொகுதிகள் என அழைக்கிறோம். ஓர் பகுதியில் வசிக்கும் மக்கள் வாக்களித்து தங்களுக்காக ஓர் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

மக்களவைத் தேர்தலுக்காக நமது நாடு 543 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி நாடாளுமன்ற உறுப்பினர் என அழைக்கப்படுகிறார். ஒவ்வொரு வாக்கிற்கும் சமமதிப்பு என்பது மக்களாட்சியிலான தேர்தலின் இயல்புகளில் ஒன்றாகும். இதனால் தான் ஒவ்வொரு தொகுதியும் கிட்டத்தட்ட சமமான மக்கள் தொகை உள்ளதாக இருக்க

வேண்டும் என அரசமைப்பு கூறுகிறது. அதேபோல ஒவ்வொரு மாநிலமும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்நிலையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி சட்டப்பேரவை உறுப்பினர் அல்லது எம்.எல்.ஏ (M.L.A) என அழைக்கப்படுகின்றார். அதே கொள்கை பஞ்சாயத்து மற்றும் நகர்புற உள்ளாட்சி தேர்தல்களில் பின்பற்றப்படுகிறது. ஒவ்வொரு கிராமம் அல்லது நகரமும் தொகுதிகளைப் போன்று வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வார்டும் கிராமம் அல்லது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கிறது. சில சமயங்களில் இத்தொகுதிகள் ஓர் இடமாகக் கருதப்பட்டு, ஒவ்வொரு தொகுதியும் அவையில் ஓர் இடத்தின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

தனித்தொகுதி

ஓர் குடிமகனுக்கு தனது பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதற்கும், தான் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் உள்ள உரிமையை அரசமைப்பு வழங்குகிறது. வெளிப்படையான தேர்தல் போட்டியில் சில நலிந்த பிரிவினருக்கு மக்களவைமற்றும்மாநிலசட்டப்பேரவைகளுக்கு வாய்ப்புகள் சிறப்பாக அமைவதில்லை. அவர்களுக்கு பிறருக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வளங்கள், கல்வியறிவு மற்றும் போட்டியிடுவதற்குத் தேவையான தொடர்புகள் இருப்பதில்லை. இவ்வாறு இருப்பின் நமது மக்கள் தொகையில் குறிப்பிடத்தகுந்த பிரிவினருக்கு நமது நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் அனைவருக்கும் இடமில்லாத நிலை ஏற்படுகிறது. இது நமது மக்களாட்சியை பிரதிநிதித்துவம் வழங்காததாகவும், குறைந்த மக்களாட்சித் தன்மையுடையதாகவும் மாற்றுகிறது.

மேற்கூறியவற்றால் நமது அரசமைப்பினை உருவாக்கியவர்கள் நலிந்த பிரிவினருக்கு சிறப்பு அமைப்பாக தனித்தொகுதிகளைப் பற்றி சிந்தித்தனர். சில தொகுதிகள் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வகை இடஒதுக்கீடு முறை பின்னர் பிற நலிந்த பிரிவினருக்கும் மாவட்ட மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

வரையறை

மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைக்கான தொகுதிகள் வரையறுக்கப்படுகின்றன. தொகுதிகளை வரையறை செய்யும் போது அதன் புவியமைப்பு, இயற்கையான இயல்புகள், நிர்வாக அமைப்புகளின் எல்லைகள், தகவல் தொடர்பு மற்றும் பொதுமக்களின் வசதி ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

தொகுதி வரையறை சட்டங்கள்

முதல் வரையறை ஆணையச் சட்டம், 1952.

இரண்டாவது வரையறை ஆணையச் சட்டம், 1963.

மூன்றாவது வரையறை சட்டம், 1973.

நான்காவது வரையறை சட்டம், 2002.

வாக்காளர் பட்டியல்

தொகுதிகள் முடிவு செய்யப்பட்ட பின்னர்,அடுத்த கட்ட நடவடிக்கையாக யார் வாக்களிக்கலாம், யாரெல்லாம் வாக்களிக்க முடியாது என்பதனை முடிவு செய்ய வேண்டும். இம்முடிவினை யாரேனும் எடுப்பதற்கு கடைசி நாள் வரை காத்திருக்க இயலாது. ஆகவே மக்களாட்சி தேர்தலில் தகுதிவாய்ந்த வாக்காளர்களின் பட்டியல் தேர்தலுக்கு நெடுநாள் முன்னரே தயாரிக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்படுகிறது. இதுவே அதிகாரப்பூர்வமாக 'வாக்காளர் பட்டியல்' என அழைக்கப்படுகிறது.

செயல்பாடு

இந்திய நாடாளுமன்றத்தில் உள்ள பெண்கள் இட ஒதுக்கீட்டு மசோதாவின் நிலை என்ன?

உங்களுக்குத் தெரியுமா?

பஞ்சாயத்துகளைப் போன்று மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும் இருக்க வேண்டாமா?

செயல்பாடு

காலவரிசை முறை

இக் கால வரிசை முறையின் இடது புறம் தரப்பட்டுள்ள தேர்தல் தொடர்பான செயல்பாடுகளை, முதல் செயல்பாட்டிலிருந்து கடைசி செயல்பாடு வரை வரிசைப்படுத்தவும். அவை பின்வருமாறு

ஒழுங்கற்ற வரிசை	ஒழுங்கான வரிசை
தேர்தல் அறிக்கை வெளியீடுதல்	
வாக்காளர் பட்டியல் தயாரித்தல்.	
வாக்கு எண்ணிக்கை.	
தேர்தல் பரப்புரை.	
தேர்தல் முடிவுகள் வெளியீடு .	
வேட்புமனு தாக்கல் .	
மறுதேர்தலுக்கு உத்தரவிடுதல்.	
வாக்களித்தல்.	
தேர்தல் அட்டவணை வெளியீடு.	

எவ்வகையான வேறுபாடுகளையும் தாண்டி தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான சமவாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களாட்சியிலான தேர்தலின் முதல் நிபந்தனையாகும். நமது நாட்டில் பதினெட்டு வயது நிரம்பிய குடிமக்கள் அனைவரும் தேர்தலில் வாக்களிக்கலாம். ஒருவரின் சாதி, மதம் மற்றும் பாலின பாகுபாடின்றி அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை உள்ளது.

அனைத்து குடிமக்களின் பெயர்களையும் கேட்டுப் பெறுவது, அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது ஓர் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இடம் பெயர்ந்தோர் மற்றும் இறந்த வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்படுகின்றன. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வாக்காளர் பட்டியல் திருத்தியமைக்கப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாக்காளர்கள் இதனை தாங்கள் வாக்களிக்கச் செல்லும்போது எடுத்துச் செல்ல வேண்டும். இருப்பினும் வாக்காளர் அடையாள அட்டை என்பது கட்டாய ஆவணமல்ல. இதனைத் தவிர ஆதார் அட்டை, குடிமை வழங்கல் அட்டை மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றின் அசல் சான்று ஆகியவற்றினை வாக்களிப்பதற்கான ஆவணமாக காட்டலாம்.

இந்தியாவில் தேர்தல் நடைமுறை

- தொகுதிகளை மறுவரையறை செய்தல்.
- தேர்தல் அறிவிப்பு.
- வேட்பு மனுவினை தாக்கல் செய்தல் மற்றும் திரும்பப் பெறுதலைப் பற்றிய தேர்தல். ஆணையத்தின் அறிவிப்பு.
- போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்தல்.
- வேட்பு மனுக்களை சரிபார்த்து ஏற்றல் அல்லது நிராகரித்தல்.
- தேர்தல் பரப்புரை.
- வாக்களித்தல் நடைமுறை.
- வாக்கு எண்ணிக்கை மற்றும் தேர்தல் முடிவுகளை அறிவித்தல்.

இந்தியாவில் நடக்கும் தேர்தல்கள் பற்றிய அம்சங்கள்.

இந்திய தேர்தலின் அடிப்படை கொள்கைகள்

- தொகுதிக்கு ஓர் வாக்காளர் பட்டியல் இருக்கும். ஓர் தொகுதிக்கு மேல் யாரும் வாக்காளராகத் தங்களை பதிவு செய்ய இயலாது.
  - பதினெட்டு வயது நிரம்பிய இந்திய குடிமக்கள் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.
- தேர்தல் என்பது வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் இருக்க வேண்டும்.
  - பட்டியல் இனத்தவர்/பழங்குடியினர் ஆகியோருக்கான இடஒதுக்கீட்டினை மக்களவை அல்லது மாநில சட்டப்பேரவைகளில் அரசுகள் ஏற்படுத்த வேண்டும்.
  - வகுப்புவாரி, தனி அல்லது சிறப்பு பிரதிநிதித்துவத்திற்கான அம்சங்கள் கிடையாது.

செயல்பாடு

கீழ்க்கண்டவற்றின் முக்கியத்துவத்தினை கண்டறிக

- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 மற்றும் 1951.
- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1966.
- வரையறை ஆணையச் சட்டங்கள், 1962 மற்றும் 1972.

உங்களுக்குத் தெரியுமா?

எந்த அரசமைப்புச் சட்டதிருத்தத்தின் மூலமாக இந்திய குடிமக்களின் வாக்களிக்கும் வயது இருபத்தி ஒன்றிலிருந்து பதினெட்டாகக் குறைக்கப்பட்டது?

வேட்பாளர்கள் நியமனம்

ஓர் மக்களாட்சி அடிப்படையிலான தேர்தலில் உண்மையான விருப்பத் தேர்வை மேற்கொள்ள மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். எவரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு எவ்விதத் தடையும் இல்லாத சூழலில் இது நிகழும். இதனையே நமது அமைப்பும் வழங்குகிறது. வாக்காளராக இருப்பதற்காக தகுதியுடைய எவரும் தேர்தலில் வேட்பாளராகலாம். தேர்தலில் வாக்களிப்பதற்கான குறைந்தபட்ச வயது பதினெட்டு எனில், வேட்பாளராவதற்கான குறைந்தபட்ச வயது இருபத்து ஐந்து என்பதே இதிலுள்ள ஒரே வித்தியாசமாகும். அரசியல் கட்சிகள் வேட்பாளரை நியமிக்கும் போது அவர் கட்சியின் சின்னம் மற்றும் ஆதரவினைப் பெறுகிறார். கட்சியின் வேட்பாளர் நியமனத்தினை 'கட்சியின் நியமனச்சீட்டு' என அழைக்கின்றனர்.

வேட்பு மனு தாக்கல் செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் பிணைத்தொகையாகக் குறிப்பிட்ட தொகையினை செலுத்த வேண்டும். உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்படி கீழ்க்கண்ட முழு விபரங்களைக் கொண்ட சட்டப்பூர்வ பிரகடனத்தினை ஒவ்வொரு வேட்பாளரும் மேற்கொள்ள வேண்டும்.

- வேட்பாளருக்கு எதிராக நிலுவையில் உள்ள கடுமையான குற்றவியல் வழக்குகள் ஏதேனும் இருந்தால் அவற்றின் விபரங்களைத் தருதல்.
- வேட்பாளர்கள் தங்களுடைய அல்லது தங்களது குடும்பத்தாருடைய சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய விளக்கங்கள் தருதல்.
- வேட்பாளரின் கல்வித் தகுதிகள்.

இத்தகவல்கள் மக்களுக்கு வெளிப்படையாக அறிவிக்கப்பட வேண்டும். இவ்வாறு வேட்பாளர்களால் தரப்படும் தகவல்களின் அடிப்படையில் வாக்காளர்கள் தங்களின் முடிவுகளை எடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

தேர்தல் பரப்புரை

தேர்தலின் முக்கிய நோக்கமே மக்கள் தங்களுக்கு விருப்பமான பிரதிநிதிகள், அரசாங்கம் மற்றும் கொள்கைகளை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பளிப்பதாகும். ஆகவே யார் சிறந்த பிரதிநிதியாக இருப்பர், எக்கட்சி சிறந்த அரசாங்கத்தை அமைக்கும் அல்லது எது சிறந்த கொள்கை ஆகியவற்றினைப் பற்றிய சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விவாதம் அவசியமாகும். இதுவே தேர்தல் பரப்புரையின் போது நிகழ்கிறது.

நமது நாட்டில் இத்தகைய பரப்புரைகள் இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் நடக்கும் நாள் வரை இரு வாரகாலத்திற்கு நடைபெறுகிறது. இக்கால கட்டத்தில் வேட்பாளர்கள் வாக்காளர்களிடம் சென்று வாக்கு சேகரித்தல், அரசியல் தலைவர்கள் தேர்தல் பொதுக்கூட்டங்களில் உரையாற்றுதல் மற்றும் அரசியல் கட்சிகள் தங்களின் ஆதரவாளர்களைத் திரட்டுதல் ஆகியவை நிகழும். இக்காலகட்டத்தில் தான் நாளேடுகள், சமூக ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் தேர்தல் தொடர்பான செய்திகள் மற்றும் விவாதங்கள் இடம் பெறுகின்றன.

தேர்தல் பரப்புரையின் போது அரசியல் கட்சிகள் முக்கியப் பிரச்சனைகளின் மீது பொது மக்களின் கவனத்தைத் திருப்புகின்றன. அவர்கள் மக்களிடம் அப்பிரச்சனைகளைப் பற்றி பேசுவதன் மூலம் அவர்களை ஈர்த்து அதனடிப்படையில் தங்கள் கட்சிக்கு வாக்களிக்குமாறு செய்வர். ஓர் மக்களாட்சியில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் விரும்பும் வகையில் தேர்தல் பரப்புரையை சுதந்திரமாக மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும். இருப்பினும் சில நேரங்களில் ஒவ்வொரு அரசியல் கட்சியும், வேட்பாளரும் போட்டியிடுவதற்கு ஏற்ற நியாயமான மற்றும் சமமான வாய்ப்பினை உறுதி செய்யும் வகையில் பரப்புரைகளை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும்.

நமது தேர்தல் சட்டங்களின் படி ஓர் கட்சி அல்லது வேட்பாளர் கீழ்க்கண்டவற்றினை செய்ய முடியாது

- ❖ வாக்காளர்களுக்கு கையூட்டு அளித்தல் அல்லது அச்சுறுத்துதல்.
- ❖ சாதி மற்றும் மதத்தின் பெயரால் வாக்களிக்கும்படி வேண்டுதல்.
- ❖ தேர்தல் பரப்புரைகளுக்கு அரசாங்கத்தின் வளங்களை பயன்படுத்துதல்.

இவ்வாறு ஒருவேளை அவர்கள் செய்யும்போது, அவர்கள் தேர்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட பின்னரும் நீதிமன்றம் அத்தேர்தலை நிராகரித்து உத்தரவிடலாம். சட்டங்களுடன் மேலும் கூடுதலாக, நமது நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் தேர்தல் பரப்புரைகளுக்கான நன்னடத்தை விதிமுறைகளை ஏற்றுக் கொண்டுள்ளன.

அதன்படி கீழ்க்கண்டவற்றினை ஓர் கட்சி அல்லது வேட்பாளர் செய்ய முடியாது.

- ❖ தேர்தல் பரப்புரைக்காக மதவழிபாட்டுத் தலங்களைப் பயன்படுத்துதல்.
- ❖ தேர்தலுக்காக அரசு வாகனங்கள், விமானங்கள் மற்றும் அரசு அலுவலர்களைப் பயன்படுத்துதல்.
- ❖ தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர் அமைச்சர்கள் எவ்வகைத்திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுதல், முக்கிய கொள்கை முடிவுகளை எடுத்தல், பொது சேவை வசதிகளுக்கான வாக்குறுதி அறிவித்தல் போன்றவற்றினை செய்ய கூடாது.

11.3 சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்கள்

சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் நடைமுறையை உறுதிப்படுத்துவதே ஓர் அரசியல் முறைமையின் உண்மையான சோதனையாகும். நாம் மக்களாட்சியை நடைமுறைப்படுத்த விரும்பினால் அதற்கு தேர்தல் முறையானது நடுநிலையாகவும்,

வெளிப்படையானதாகவும் இருத்தல் முக்கியமானதாகும். வாக்காளர்களின் விருப்பங்கள் தேர்தல் முடிவுகளின் மூலம் சட்டபூர்வமாக வெளிப்படுவதற்குத் தேர்தல் முறை அனுமதிக்க வேண்டும். இந்தியாவில் நடைபெறும் தேர்தல்கள் அடிப்படையில் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுகின்றன. தேர்தலில் வெற்றிபெறும் கட்சி ஆட்சி அமைக்கிறது. இதற்கு எதிர்க் கட்சிகளை விட இக்கட்சியினை மக்கள் தேர்ந்தெடுத்ததே அதற்குக் காரணமாகும். ஒவ்வொரு தொகுதியிலும் இது உண்மையாக இருக்காது. ஒரு சில வேட்பாளர்கள் பண பலம் மற்றும் நியாயமற்ற வழிமுறைகளின் மூலமாக வெற்றி பெறுகின்றனர். இருப்பினும் பொதுமக்களின் விருப்பத்தை பிரதிபலிப்பதாகவே ஒட்டுமொத்த பொதுத்தேர்தல் முடிவுகள் இதுவரை இருந்துள்ளன.

இந்திய தேர்தல்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் சவால்கள்:

- அதிக பணபலமுள்ள வேட்பாளர்கள் மற்றும் கட்சிகள் தங்களின் வெற்றியைப் பற்றி உறுதியற்ற நிலையில் இருப்பினும் சிறிய கட்சிகள் மற்றும் சுயேட்சைகளை விட மிகப்பெரிய மற்றும் நியாயமற்ற சாதகமான நிலையில் இருப்பர்.
- குற்றப்பின்னணி கொண்ட வேட்பாளர்கள் தேர்தல் போட்டியில் பிறரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு பெரிய கட்சிகளின் சார்பாகப் போட்டியிடும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.
- சில குடும்பங்கள் அரசில் கட்சிகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதனால் அக்கட்சியின் சார்பாகப் போட்டியிடும் வாய்ப்புகள் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும், உறவினர்களுக்கும் வழங்கப்படுகின்றன.
- சாதாரண குடிமக்களுக்குத் தேர்தல்கள் குறைவான வாய்ப்புகளையே வழங்குகிறது. ஏனெனில் பெரும்பான்மையான கட்சிகள் ஏறத்தாழ ஒரேமாதிரியான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைக் கொண்டுள்ளன.
- பெரிய கட்சிகளை ஒப்பிடுகையில் சிறிய கட்சிகளும், சுயேட்சை வேட்பாளர்களும் பெரும் பின்னடைவைச் சந்திக்கின்றனர்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவின் முதலாவது பொதுத் தேர்தல்கள் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியவை.

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் 1951–52ம் ஆண்டில் பொதுத்தேர்தல்கள் நடைபெற்று முதலாவது மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்டது. மொத்தமுள்ள 489 மக்களவை இடங்களில் காங்கிரஸ் கட்சி 364 இடங்களில் வெற்றி பெற்றது. இது மொத்த வாக்குப்பதிவில் 45 சதவீதமாகும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 16 இடங்களில் வெற்றி பெற்று இரண்டாமிடம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக ஜவஹர்லால் நேரு பதவியேற்றார். இத்தேர்தலில் 67.6 சதவீத வாக்குப்பதிவு நடைபெற்றது. 54 கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டன. ஏறத்தாழ நான்கு மாதங்கள் தேர்தல் நடைபெற்றது. அக்டோபர் 25, 1951, முதல் பிப்ரவரி 21, 1952 வரை இத்தேர்தல்கள் நடந்தன. 26 இந்திய மாநிலங்கள் மற்றும் 401 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய சவால்கள் இந்தியாவில் மட்டுமல்லாமல் பல வலுவான மக்களாட்சிகளிலும் காணப்படுகின்றன. இவ்வாறான ஆழமான பிரச்சனைகள் பற்றி மக்களாட்சியின் மீது நம்பிக்கையுள்ளவர்கள் கவனம் செலுத்துகின்றனர். இதனால் தான் குடிமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பல்வேறு அமைப்புக்கள் நமது தேர்தல் முறைமையில் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ள கோரிக்கை வைக்கின்றன. ஓர் மக்களாட்சியில், தேர்தல் நடைமுறை என்பது யுக்தி அடிப்படையில் பங்காற்றுகிறது. ஓர் சாதாரண மனிதனுக்கு தனது பிரதிநிதியாக நாடாளுமன்றத்திற்குச் சென்று தனது சுதந்திரம் மற்றும் சொத்துக்களை கட்டுப்படுத்தக்கூடிய வகையிலான சட்டங்களை இயற்றுபவரைப் பற்றிய முழுமையான தகவல்களை அறிந்து கொள்ளும் அடிப்படையான உரிமை உள்ளது.

மக்களாட்சியில் தகவல்களைப் பெறும் உரிமை என்பது முழுவதுமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அது மக்களாட்சி எனும் கருத்தாக்கத்திலிருந்து வெளிப்படகூடிய இயற்கை உரிமையாகும்.

இந்திய அரசமைப்பின் உறுப்பு 19(1) (அ) பேச்சு மற்றும் கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரத்திற்கான உரிமையினை வழங்குகிறது. வாக்காளர்களின் பேச்சு மற்றும் கருத்தை வெளிப்படுத்தும் சுதத்திரமானது வாக்களித்தலின் மூலமாக வெளிப்படுகிறது. அதாவது வாக்காளர்கள் தங்கள் வாக்கினை செலுத்துவதன் மூலமாக தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்துகின்றனர். இதற்காக தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளரைப் பற்றிய தகவல்கள் அவசியமாகும். பொதுமக்கள் தங்களின் பிரதிநிதியாக சட்டத்தினை மீறுபவர்களை சட்டத்தினை உருவாக்குபவர்களாக தேர்ந்தெடுப்பதற்கு முன் சிந்தித்து செயல்பட வேண்டும்.

11.4 இந்திய தேர்தல் ஆணையம்

இந்திய அரசமைப்பின் உறுப்பு 324 ஓர் தேர்தல் ஆணையத்தினை அமைப்பதை பற்றி விளக்குகிறது. இது சுதந்திரமாகவும், நடுநிலையாகவும், ஒழுங்கான முறையிலும் தேர்தல்களை நடத்துகிறது. இவ்வாணையமானது நாடாளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்களை மேற்பார்வையிட்டு, வழிகாட்டுவதுடன் தேர்தலையும் நடத்துகிறது.

தேர்தல் ஆணையம்–ஓர் சுதந்திரமான அமைப்பு

இந்திய தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டதன் நோக்கமே ஓர் நிரந்தரமான மற்றும் சுதந்திரமான தேர்தல் அமைப்பு அவசியம் என்பதுடன் ஆட்சியாளர்கள் மற்றும் ஆளுங்கட்சியின் அரசியல் அழுத்தத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாகத் தேர்தலை நடத்துவதற்காகும். அத்துடன் நாடாளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத்தலைவர் மற்றும் துணைக்குடியரசுத் தலைவர் தேர்தல்களை நடத்தும் பொறுப்பும் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அமைப்பு



உங்களுக்குத் தெரியுமா?

தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் விவரங்கள்

தேர்தலின் எண்ணிக்கை	சபையின் பதவிக்காலம்	தேர்தல் தேதிகள்
1	1952-1957	1952 ஜனவரி 2, 5, 8, 9, 11, 12, 16, 21 மற்றும் 25 (9 நாட்கள்)
2	1957-1962	1957 மார்ச் 1, 4, 6, 8 மற்றும் 11 (5 நாட்கள்)
3	1962-1967	1962 பிப்ரவரி 17, 19, 21 மற்றும் 24 (4 நாட்கள்)
4	1967-1971	1967 பிப்ரவரி 5, 16 மற்றும் 21 (3 நாட்கள்)
5	1971-1976	1971 மார்ச் 1, 4 மற்றும் 7 (3 நாட்கள்)
6	1977-1980	1977 ஜூன் 12 மற்றும் 14 (2 நாட்கள்)
7	1980-1984	1980 மே 20 மற்றும் 31 (2 நாட்கள்)
8	1985-1986	1984 டிசம்பர் 24 (1 நாள் மட்டும்)
9	1989-1991	1969 ஜனவரி 21 (1 நாள் மட்டும்)
10	1991-1996	1991 ஜூன் 16 (1 நாள் மட்டும்)
11	1996-2001	1996 ஏப்ரல் 27 மற்றும் மே 2 (2 நாட்கள்)
12	2001-2006	2001 மே 10 (1 நாள் மட்டும்)
13	2006-2011	2006 மே 8 (1 நாள் மட்டும்)
14	2011-2016	2011 ஏப்ரல் 13 (1 நாள் மட்டும்)
15	2016 - 2021	2016 மே 16 (1 நாள் மட்டும்)
16	2021 முதல்	2021 ஏப்ரல் 6 (1 நாள் மட்டும்)

இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

- வாக்காளர் பட்டியல் தயாரித்தல்.
- வாக்காளர் பட்டியலை திருத்துதல்.
- தொகுதிக்கான இடங்களை ஒதுக்கீடு செய்தல்.
- தேர்தல் நடத்துதல்.
- தேர்தலை மேற்பார்வையிட்டு வழிகாட்டுவதுடன் அது தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கட்டுப்படுத்துதல்.
- அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்தல்.
- கட்சிகளுக்கான சின்னங்களை ஒதுக்கீடு செய்தல்
- சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தலை உறுதி செய்தல்.
- தேர்தல் விவகாரங்கள் தொடர்பான அனைத்து கேள்விகளுக்கும் குடியரசுத்தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட மாநில ஆளுநர்களுக்குத் தேர்தல் ஆணையம் அறிவுரை வழங்குதல்.
- நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியிழப்பினை முடிவு செய்தல்.
- இந்திய குடியரசுத் தலைவர் அல்லது மாநில ஆளுநரால் பரிசீலனைக்கு அனுப்பப்படும் மனுக்கள் மற்றும் பிரச்சனைகளைத் தீர்த்தல்.
- ஓர் அரசியல் கட்சியில் பிளவு ஏற்பட்டால் எழும் தேர்தல் சின்னம் தொடர்பான சச்சரவுகளில் முடிவெடுத்தல் .
- தேர்தலில்போட்டியிடும்வேட்பாளர்களின்

தேர்தல் செலவினங்களின் உச்சவரம்பினை இறுதி செய்யும் அதிகாரம்.

❖ தேர்தலில்போட்டியிடும்வேட்பாளர்களின் சொத்துக்கள் தொடர்பான ஆவணப் பத்திரங்களை கேட்டுப் பெறும் பணி.

❖ தேர்தல் செலவினக் கணக்கினை ஓர் வேட்பாளர் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கவில்லையெனில் அவரை தகுதியிழப்பு செய்யும் அதிகாரமும், கடமையும்.

❖ தேர்தல் முடிந்த பின்னர் முறைப்படி அவை அமைக்கப்பட்டதற்கான அறிவிப்பினை வெளியிடுதல்

உங்களுக்குத் தெரியுமா?

அரசியலைத் தூய்மைப்படுத்துவதற்கான உச்சநீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு



ஜூலை 11, 2013 ல் உச்சநீதிமன்றம் வெளியிட்ட ஓர் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பில் சிறை அல்லது காவல் துறையினரின் விசாரணையில் இருக்கும் ஒருவர் சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது என தீர்ப்பளித்துள்ளது. ஒரு நாள் முன்னதாக, ஜூலை 10, 2013-ல் அதே அமர்வு வழங்கிய தீர்ப்பில் தங்களின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பின், நாடாளுமன்ற, சட்டப்பேரவை அல்லது சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் குற்றங்களுக்கான தண்டனை பற்றிய தீர்ப்பு வழங்கப்பட்டவுடன் அப்பொதுப் பதவிகளை வகிப்பதிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவர்.

இப்பிரிவு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தம்மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட்டால் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கும். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 8(4) ஐ இந்த அமர்வு நிராகரிப்பு.

நன்றி : தி இந்து நாளிதழ், பெட்டிச் செய்தி 3.5.2004

தலைமைத் தேர்தல் அதிகாரி (Chief Electoral Officer)

ஓர் மாநிலம்/ஒன்றிய பிரதேசத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி அம்மாநில / ஒன்றியப் பிரதேசத்தின் தேர்தல் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரத்துடன் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டில் செயல்படுகிறார். இந்தியத் தேர்தல் ஆணையமே ஓர் மாநிலம்/ ஒன்றியப் பிரதேசத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரியை நியமிக்கிறது. அந்நியமனத்தின் போதுமாநில/ஒன்றியப்பிரதேசஅரசாங்கத்துடன் கலந்தாலோசித்த பின்னரே தேர்தல் ஆணையம் இறுதி முடிவெடுத்து செயல்படுத்துகிறது.

மாவட்ட தேர்தல் அதிகாரி (District Election officer)

தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் மாவட்ட தேர்தல் அதிகாரி செயல்படுவதுடன் மாவட்டத்தின் தேர்தல் பணிகளை மேற்பார்வையிடுகிறார். மாநில அரசாங்கத்துடன் கலந்தாலோசித்த பின்னர் ஓர் மாநில அரசு அதிகாரியை மாவட்ட தேர்தல் அதிகாரியாக நியமிக்கவோ அல்லது பதவியளிக்கவோ தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு.

தேர்தல் நடத்தும் அலுவலர் (Returning Officer)

ஓர் நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அக்குறிப்பிட்ட நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற தொகுதியில் தேர்தலை நடத்தும் பொறுப்பு உள்ளது. இந்தியத் தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்ட மாநில/ஒன்றிய பிரதேச அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்து ஒவ்வொரு நாடாளுமன்ற/சட்டமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலரை நியமிக்கிறது.அவர்அரசாங்கஅதிகாரியாகவோ அல்லது உள்ளாட்சி அதிகாரியாகவோ இருக்கலாம். மேலும் கூடுதலாக அவருக்கு

தேர்தல் பணிகளில் உதவுவதற்கு ஒன்று அல்லது இரண்டு உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் ஒவ்வொரு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளிலும் நியமிக்கப்படுவதுடன் தேர்தல் நடத்தும் அலுவலரின் பணிகளை செயல்படுத்துவதில் பேருதவியாக இருப்பர்.

வாக்காளர் பதிவு அலுவலர் (Electoral Registration Officer)

ஓர் நாடாளுமன்ற/சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் பணி வாக்காளர் பதிவு அலுவலருடையதாகும். இந்திய தேர்தல் ஆணையம் மாநில/ஒன்றியப் பிரதேச அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்த பின்னர் வாக்காளர் பதிவு அலுவலரை நியமிக்கிறது. இவர் அரசாங்க அல்லது உள்ளாட்சி அதிகாரியாக இருக்கலாம். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் இவருக்கு உதவி செய்வதற்காக இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படுகின்றனர்.

வாக்குச் சாவடி தலைமை அலுவலர் (Presiding Officer)

வாக்குச் சாவடி தலைமை அலுவலர் பிற வாக்குப்பதிவு அலுவலர்களின் உதவியுடன் வாக்குச் சாவடியில் தேர்தலை நடத்துகிறார். மாவட்ட தேர்தல் அதிகாரியே வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களை நியமிக்கிறார். ஒன்றியப் பிரதேசங்களைப் பொறுத்தவரை அந்நியமனங்களை தேர்தல் நடத்தும் அலுவலர் (Returning Officer) மேற்கொள்கிறார்.

தேர்தல் பார்வையாளர்கள் (Election Observers)

இந்திய தேர்தல் ஆணையம் அரசாங்க அதிகாரிகளைத் தேர்தல் பார்வையாளர்களாக நியமிக்கிறது. (பொதுப்பார்வையாளர்கள் மற்றும்தேர்தல்செலவினைப்பார்வையாளர்கள்). இவர்கள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்குத் தேர்தல் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் தேர்தல் ஆணையத்தால் தங்களுக்கு தரப்பட்ட பணிகளை நிறைவேற்றுகின்றனர். இவர்கள் ஆணையத்திற்கு நேரடி பொறுப்பாகின்றனர்.

11.5 தேர்தல் சீர்திருத்தங்கள், கட்சித்தாவல் தடைச் சட்டம்



தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான குழுக்கள்

மேற்கண்ட குழுக்கள் மற்றும் ஆணையங்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் நமது தேர்தல் முறைமையில் அவ்வப்போது பல்வேறு சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- 61 வது அரசமைப்புச் சட்டத்திருத்தம், 1988-ன் மூலமாக வாக்களிக்கும் வயது இருபத்தி ஒன்றிலிருந்து பதினெட்டு ஆக குறைக்கப்பட்டது.
- வாக்காளர் பட்டியல் தயாரித்தல், திருத்தியமைத்தல் போன்ற தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அயற்பணியில் சென்று தேர்தல் ஆணையத்தின் கீழ் பணிபுரிதல்.
- ஓர் தொகுதியில் வேட்பாளர்களை முன்மொழியும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் வகையில் பத்து சதவீதம் அல்லது பத்து வாக்காளர்கள் இதில் எது குறைவானதோ அதனை அதிகரித்தல்.
- 1989-ம் ஆண்டு மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் தேர்தலில் பயன்படுத்தப்படும் வகையில் அம்சங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- 1989-ம் ஆண்டு வாக்குச்சாவடியைக் கைப்பற்றுவதனைத் தடுப்பதற்கு தேர்தலை ஒத்திவைக்கும் நடைமுறை கொண்டு வரப்பட்டது.
- அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள், பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத

கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை என வகைப்படுத்தி வேட்பாளர்களை பட்டியலிடுதல்

- வாக்குப்பதிவு நடைபெறுவதற்கு 48 மணிநேரம் முன்பிருந்து அப்பகுதியில் மதுபான விற்பனையினைத் தடைசெய்தல்
- தேர்தலில் போட்டியிடும் ஓர் வேட்பாளர் எதிர்பாராமல் மரணமடைந்தால் சம்பந்தப்பட்ட கட்சிக்கு மாற்று வேட்பாளரை பரிந்துரைப்பதற்கான வாய்ப்புடன் ஏழு நாட்கள் அவகாசம்.
- தேர்தல் தினத்தன்று பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு ஊதியத்துடனான விடுமுறை.
- ஆயுதங்கள் தடை.
- 1998-இல் ஓர் அம்சம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாக உள்ளாட்சி அதிகாரிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் பணியாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள், இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவன ஊழியர்கள், அரசு நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்களின் ஊழியர்கள் ஆகியோர் தேர்தல் தினத்தன்று பணியில் ஈடுபடுத்தப்பட பணிக்கப்பட்டனர்.
- 1999-இல் வாக்காளர்களில் ஓர் பிரிவினர் தபால் வாக்கினைப் (Postal Ballot) பயன்படுத்தி வாக்களிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.
- 2003-இல் இராணுவத்தில் பணிபுரிபவர்கள் தங்களின் சார்பாக பதிலி வாக்கு(Proxy vote) அளிக்கும் முறை கொண்டு வரப்பட்டு இராணுவச் சட்டத்திற்கு இசைவான வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2003-இல் தேர்தல் ஆணையம் வேட்பாளர்களின் முந்தைய குற்றசம்பவங்கள் மற்றும் சொத்துக்கள் பற்றிய விபரங்களை பிரகடனப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.
- 2003-இல் மாநிலங்களவைத் தேர்தல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வேட்பாளரின் வசிப்பிடம் தொடர்பான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. மேலும் வெளிப்படையான வாக்கெடுப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2003-இல் வேட்பாளரின் தேர்தல் செலவுக் கணக்கில் பயணச்செலவினங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது.
- அரசாங்கமே இலவசமாக வாக்காளர் பட்டியலை வழங்குதல்
- 2009-இல் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்புகளை நடத்தி முடிவுகளை அறிவிப்பதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.
- 2009-இல் தேர்தலின் போது தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களை தகுதியிழப்பு செய்வதுடன் மூன்று மாத காலத்திற்குள் குற்றம் சாட்டப்பட்டவரின் மீதான விபரங்களை குறிப்பிட்ட அதிகாரி சமர்ப்பிக்க வேண்டும்.
- தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து அதிகாரிகள் மிதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பிணைத்தொகை அதிகரிக்கப்பட்டது.
- மாவட்டத்தினுள் மேல் முறையிட்டு அதிகாரிகளை நியமித்தல்.
- 2010-இல் வெளிநாடு வாழ் இந்தியக் குடிமக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 2011-இல் தேர்தல் செலவினங்களுக்குக்கான உச்சவரம்பு அதிகாரிக்கப்பட்டது.

விவாதம்

சமூக ஊடகங்கள்–ஓர் சிறந்த தேர்தல் கருவியா ?

தேர்தல் பரப்புரையில் சமூக ஊடகங்களின் நேர்மறை மற்றும் எதிர்மறை அம்சங்களைப் பற்றி ஓர் விவாதத்தினை வகுப்பறையில் ஆசிரியர் நடத்தலாம்.

கட்சித் தாவல் தடைச் சட்டம்

52வது அரசமைப்புச் சட்டதிருத்தம், 1985-ன் மூலமாக ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு மாறும் நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினரைத் தகுதியிழப்பு செய்யும் நடைமுறை கொண்டு வரப்பட்டது. இதற்காக இந்திய அரசமைப்பில்

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 225 07/12/2022 17:07:23

பத்தாவது அட்டவணை இணைக்கப்பட்டது. இச்சட்டமே 'கட்சித் தாவல் தடைச் சட்டம்' என அழைக்கப்படுகிறது. பின்னர் 91வது அரசமைப்புச் சட்டதிருத்தம், 2003ன் மூலமாக ஓர் சிறுதிருத்தம் செய்யப்பட்டது. அதாவது கட்சி பிளவுறும் சூழலில் கட்சித் தாவலின் அடிப்படைகள் பொருந்தாது என்பதாகும்.

இச்சட்டத்தின் அம்சங்கள்

அ. தகுதியிழப்பு

எக்கட்சியினைச் சார்ந்தவராக இருப்பினும் அவையின் ஓர் உறுப்பினர் தனது விருப்பத்தின் அடிப்படையில் உறுப்பினர் பதவியை விட்டு விலகுதல் அல்லது தான் சார்ந்த கட்சியின் வழிகாட்டுதலுக்கு எதிராக வாக்களித்தல் அல்லது வாக்களிப்பிலிருந்து கட்சியின் முன் அனுமதியின்றி விலகியிருத்தல் ஆகியவற்றால் தகுதியிழப்பு செய்யப்படலாம்.

ஓர் சுயேட்சை வேட்பாளர் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மற்றொரு அரசியல் கட்சியில் சேர்ந்தால் அவையிலிருந்து அவர் தகுதியிழப்பு செய்யப்படுவார்.

ஓர் நியமன உறுப்பினர் தான் பதவியேற்ற நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் ஏதேனும் அரசியல் கட்சியில் சேர்ந்தால் அவையின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

ஆ. விதிவிலக்குகள்

ஓர் கட்சி மற்றொரு கட்சியுடன் இணைக்கப்படும் போது கட்சித்தாவலின் அடிப்படையில் ஓர் உறுப்பினரின் மீது நடவடிக்கை எடுப்பதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. சபையை வழிநடத்தும் பொறுப்பிற்கு ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தனது கட்சி உறுப்பினர் பொறுப்பிலிருந்து சுயவிருப்பத்தின் அடிப்படையில் வெளியேறினாலும் அப் பதவியிலிருந்து விடுபட்ட நிலையில் மீண்டும் கட்சியில் சேரலாம் என்பது மற்றொரு விதிவிலக்காகும்.

இ. தீர்மானிக்கும் அதிகாரம்

அவையை நடத்தும் பொறுப்பில் உள்ளவரே கட்சித் தாவல் தொடர்பான தகுதியிழப்பு பிரச்சனைகளை இறுதி செய்வார்.

ஈ. விதியை உருவாக்கும் அதிகாரம்

இந்திய அரசமைப்பின் பத்தாவது அட்டவணையில் உள்ள அம்சங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வரும் விதிமுறைகளை உருவாக்கும் அதிகாரம் அவையை நடத்துபவருக்கே உள்ளது. அத்தகைய விதிகள் 30 நாட்களுக்குள் அவையில் தாக்கல் செய்யப்பட வேண்டும். அவற்றினை குறிப்பிட்ட அவை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம். மேலும் ஓர் உறுப்பினர் தனது விருப்பத்தின் அடிப்படையில் அவ்விதிகளை மீறுவது என்பதனை அவையின் மரபுகளை மீறிய செயலாகக் கருதி நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அவையை நடத்துபவருக்கு உள்ளது.

சட்டத்தினைத் திறனாய்வு செய்தல்

அ) பதவிகள் அல்லது பொருள் சார்ந்த ஆதாயங்களுக்காக அரசியலில் கட்சித்தாவலை மேற்கொள்ளும் செயல்களைத் தடுக்கும் வகையில் அரசமைப்பின் பத்தாவது அட்டவணை வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆ) கொள்கையற்ற மற்றும் அறநெறிக்குப் புறம்பான வகையில் மேற்கொள்ளும் கட்சித்தாவல்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமாக இந்திய நாடாளுமன்ற மக்களாட்சியின் மாண்பினை இது வலுப்படுத்துகிறது.

இ) சட்டமன்ற உறுப்பினர்களின் கட்சிமாறும் மனப்பாங்கினைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசியல் கட்டமைப்பினை உறுதியாக வலுப்படுத்துகிறது

ஈ) கட்சிகளை இணைப்பதன் மூலம் சட்டமன்றத்தில் உள்ள கட்சிகளை மறுசீரமைப்பு செய்ய வாய்ப்பு ஏற்படுத்துகிறது.

உ) தற்போதுள்ள அரசியல் கட்சிகளுக்கு அரசமைப்பு அடிப்படையில் தெளிவாக அங்கீகாரம் வழங்குகிறது.

மாநிலங்களவைத் தேர்தல்

நமது மாநிலங்களவைத் தேர்தலில் மாற்றித்தரக்கூடிய வாக்கு முறை பின்பற்றப்படுகிறது. மாநிலங்களவையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறிப்பிட்ட ஒதுக்கீடு உள்ளது. மாநிலங்களவையின் உறுப்பினர்கள்

மாநில சட்டப்பேரவையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சம்பந்தப்பட்ட மாநிலத்தின் சட்டப்பேரவை உறுப்பினர்களே வாக்காளர்களாவர். ஒவ்வொரு வாக்காளரும் தங்களுக்கு விருப்பமான வேட்பாளரை வரிசைப்படுத்த வேண்டும். வெற்றி பெறுவதற்கு ஒவ்வொரு வேட்பாளரும் குறிப்பிட்ட அளவிலான வாக்குகளைப் பெற வேண்டும். **இதற்கென வகுக்கப்பட்ட விதிமுறை பின்வருமாறு:-**

$$\left\{ \frac{\text{பதிவான மொத்த வாக்குள்}}{\text{தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த வேட்பாளர்கள் +1}} \right\} + 1$$

உதாரணமாக தமிழகத்தின் 200 சட்டப்பேரவை உறுப்பினர்களால் 4 மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமெனில் அவர்கள் (200/4+1=40+1) 41 வாக்குகளைப் பெற வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் போது ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற முதல் முன்னுரிமை வாக்குகள் (First Preference votes) எண்ணப்படுகின்றன. இவ்வாறு முதல் முன்னுரிமை வாக்குகள் எண்ணப்பட்ட பின்னரும் சில வேட்பாளர்கள் குறிப்பிட்ட அளவிலான வாக்குகளைப் பெறவில்லையெனில் குறைவான முதல் முன்னுரிமை வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் பெற்ற வாக்குகளில், அதாவது வாக்குச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது முன்னுரிமை வேட்பாளருக்கு அந்த வாக்குகள் மாற்றப்படுகின்றன. இந்நடைமுறை ஓர் வேட்பாளர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படும் வரை தொடர்கிறது.

தேர்தலில் முதலில் நிலையை கடந்தவரே வெற்றி பெற்றவர் என்ற முறையை இந்தியா பின்பற்றியது?

முதலில் நிலையைக் கடத்தல் முறை (FPTP) என்பது மிகவும் பிரபலமாகவும், வெற்றிகரமாகவும் இருப்பதற்கு அதன் எளிமையே காரணமாகும். இத்தேர்தல் முறை முழுவதையும் புரிந்து கொள்வதற்கு மிகவும் எளிமையாகவும், தேர்தல் மற்றும் அரசியலைப் பற்றி தெரியாத பொதுவான வாக்காளர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது. தேர்தலின் போது வாக்காளர்களுக்கு தெளிவான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன தேர்தலின் போது வாக்காளர்கள் ஓர் வேட்பாளர் அல்லது கட்சியை அங்கீகரிக்க வேண்டும் அப்போதைய அரசியலின் தன்மைக்குத் தக்கவாறு வாக்காளர்கள் கட்சி அல்லது வேட்பாளருக்கோ அல்லது இரண்டிற்கும் சமமாகவோ முக்கியத்துவம் தரலாம்.

முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் என்னும் முறையானது கட்சிகளுக்கிடையே தேர்வு செய்யும் முறையாக இல்லாமல் குறிப்பிட்ட வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் முறையாகும். ஆனால் பிற தேர்தல் முறைகளில் குறிப்பாக விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் வாக்காளர்கள் ஓர் ஆட்சியைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் பிரதிநிதிகளும் கட்சியின் பட்டியலில் இருந்தே தேர்ந்தேடுக்கப்படுகின்றனர். இதன் விளைவாக, ஓர் குறிப்பிட்ட பகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய மற்றும் பொறுப்பான ஓர் பிரதிநிதி இல்லாத நிலை ஏற்படுகிறது. ஆனால் முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் முறையைப் போன்றே தொகுதி அடிப்படையிலான முறையிலும் வாக்காளர்களுக்குத் தங்களின் பிரதிநிதி யார் என தெரிவதுடன் அவர்கள் வாக்காளர்களுக்குப் பதில் சொல்ல கடமையும், பொறுப்பும் கொண்டுள்ளனர். முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் முறையில் பொதுவாக தனிப்பெரும் கட்சிக்கு அல்லது கூட்டணிக்கு சில இடங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. இது அவர்களின் பங்கான வாக்குகளை விட அதிகமாக இருக்கும்.

இங்ஙனம் இம்முறையானது நிலையான அரசாங்கத்தை உருவாக்க வகை செய்வதுடன் நாடாளுமன்ற அரசாங்கம் அமைதியாகவும், திறம்பட செயலாற்றவும் வாய்ப்பளிக்கிறது. முதலில் நிலையை கடந்து செல்லுதல் (FPTP) முறையானது ஓர் பகுதியில் உள்ள சமூகக் குழுக்களைச் சேர்ந்த வாக்காளர்களை

ஒன்றிணைத்து வெற்றி பெற வைக்கிறது. ஆகவே முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (FPTP) முறையானது எளியதாகவும், சாதாரண வாக்காளர்களுக்கு அறிமுகமானதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

உங்களுக்குத் தெரியுமா?

வெளிப்படையாக வாக்களிக்கும் முறை என்பது கைகளை உயர்த்துவதன் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையாகும்.

ரகசிய வாக்கெடுப்பு முறையில் ஓர் வாக்காளர் தனது வாக்கினைப் பிறர் அறியாதவாறு வாக்குப்பெட்டி அல்லது மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் அளிக்கிறார்.

11.6 அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள். அரசின் நிதியுதவி என்றால் என்ன?

அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் என்னும் கருத்தாக்கமே ஊழலைக் குறைப்பதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். இதில் தனிநபர் நிதியளிப்புகளுக்கு மாற்றாக அரசாங்கமே தேர்தல்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறது.

அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் குறித்த இந்திரஜித் குப்தா குழு, 1998

அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் பற்றி ஆராய்வதற்காக இந்திரஜித் குப்தா தலைமையிலான குழு 1998-ல் நியமிக்கப்பட்டது. அக்குழுவானது அரசியல் கட்சிகளுக்கு அரசின் நிதியுதவியுடனான தேர்தல்களை நடத்துவதற்கான அரசமைப்பு அம்சங்கள், சட்டக் கூறுகள், பொது விருப்பம் போன்றவற்றினை கொள்கை அடிப்படையில் ஆராயும் அதிகார வரம்பினைக் கொண்டிருந்தது. இதன் மூலம் குறைவான நிதி ஆதாரங்களைக் கொண்ட கட்சிகளும் மிகுதியான நிதி ஆதாரங்களைக் கொண்ட கட்சியுடன் தேர்தலில் போட்டியிடும் சூழலை நிறுவுவதாகும்.

இரண்டு கூடுதல் வரையறைகள்

அ) அரசின் தேர்தல் நிதி சுயேட்சை வேட்பாளர்களுக்கு வழங்கப்படமாட்டது. வாக்காளர்கள் மத்தியில் பிரபலமாக இருப்பதுடன் தங்களுக்கென தேர்தல் ஆணையத்தால் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ள தேசிய அல்லது மாநிலக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு மட்டுமே அரசின் தேர்தல் நிதியுதவி வழங்கப்படும்.

ஆ) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் வேட்பாளர்களுக்கு சில வகையினங்களில் மட்டுமே குறுகிய காலத்திற்கு நிதியுதவி வழங்கப்படும்.

மேலும் இக்குழு தனியாக தேர்தல் நிதியை உருவாக்க பரிந்துரைத்தது. இதற்கு மத்திய அரசின் சார்பாக வருடத்திற்கு 600 கோடி ரூபாயும், அனைத்து மாநில அரசுகளும் அதற்கு நிகரான பங்களிப்பினை ஒட்டு மொத்தமாக மேற்கொள்ளவேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது. மேலும் இக்குழுவின் பரிந்துரையில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் அரசிடமிருந்து தேர்தல் நிதியைப் பெறும் தகுதியுள்ளவர்களாவதற்கு கடந்த நிதியாண்டில் வருமான வரி செலுத்தியிருக்க வேண்டியது அவசியமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

11.7 நோட்டா என்றால் என்ன?

(மேற்கண்டவர்களுள் எவருமில்லை)

தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்கும் வாக்களரின் உரிமை.

நமது அரசியல் முறைமையைத் தூய்மைப்படுத்தும் நோக்கில் உச்சநீதிமன்றம் கூறியது என்னவெனில் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்கும் உரிமை வாக்காளர்களுக்கு உள்ளது என்பதாகும். இதனால் உச்சநீதிமன்றம் தேர்தல் ஆணையத்திற்கு வழிகாட்டும் வகையில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் 'மேற்கண்ட எவருமில்லை' (NOTA) எனும் வாய்ப்பினை வாக்காளர்களுக்குவழங்கும்படி உத்தரவிட்டது.

'நோட்டா' அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்புவரை எதிர்மறை வாக்கினை செலுத்த விரும்பும் வாக்காளர்களுக்கு தனி வாக்குச்

சீட்டு தரப்படுவதுடன் ஓர் பதிவேட்டில் அவர்களின் பெயரும் பதிவு செய்யப்படும்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் 1961 –ன் பிரிவு 49(0) கூறுவது என்னவெனில் ஓர் வாக்காளர் தனது வாக்காளர் வரிசை எண்ணை 17A படிவத்தில் பதிவு செய்த பின்னர் எதிர்மறை வாக்கினைச் செலுத்தலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

'நோட்டாவைப்' போன்று முன்னரே வேறொரு அம்சம் இருந்ததை நீங்கள் அறிவீர்களா? அது 'எதிர்மறை வாக்களித்தல்' (Negative Voting) என அழைக்கப்படுகிறது. மேற்கண்டவர்களுள் எவருமில்லை (None of the above-NOTA)-தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்கும் வாக்களரின் உரிமை.

உங்களுக்குத் தெரியுமா?

மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் தரப்பட்டுள்ள வேட்பாளர்கள் பட்டியலின் இறுதியில் நோட்டா வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

உங்களுக்குத் தெரியுமா?

நோட்டாவை அனுமதிக்கும் நாடுகளை அறிவீர்களா?

கொலம்பியா, உக்ரைன், பிரேசில், வங்கதேசம், பின்லாந்து, ஸ்பெயின், ஸ்வீடன், சிலி, பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகள் நோட்டாவைப் பின்பற்றின. சில சமயங்களில் அமெரிக்காவும் இதனை அனுமதித்தது. 1975-ம் ஆண்டு முதல் டெக்சாஸ் மாகாணம் இந்த அம்சங்களைப் பின்பற்றி வருகிறது.

கலைச்சொற்கள்: Glossary

தேர்தல் : ஓர் அரசாங்க பதவி அல்லது நிலைக்காக முறையாகவும், அமைப்பு ரீதியிலும் ஓர் நபரை வாக்களிப்பதன் மூலம் தேர்ந்தெடுத்தல்.

பிரதிநிதித்துவம் : மற்றொருவரின் சார்பாக செயல்படுதல் அல்லது பேசுதல்.

வாக்குரிமை : பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை.

வாக்களித்தல் : வாக்களிக்கச் செல்வதுடன் வாக்குச்சீட்டில் ஒருவரைக் குறிப்பாக தேர்ந்தெடுக்க குறியிடுதல்.

தேர்தல் முறைமை: இது வாக்குகளை பிரிதிநிதிகளாக மாற்றும் முறையாகும்.

தேர்தலியல் : இது தேர்தல்கள் மற்றும் வாக்குப்பதிவின் போக்கினை பற்றி புள்ளி விபர அடிப்படையில் கற்பதாகும்.

பன்மைத்துவம்: ஓர் வேட்பாளர் பிறரை விட வாக்குகளை அதிகமாகப் பெற்றிருந்து அறுதிப் பெரும்பான்மையை பெறாததாகும்.

பஞ்சாயத்து: இந்தியாவிலுள்ள ஊராட்சிக் குழுவாகும்.

சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம்: சிறுபான்மை சமுகங்களை சார்ந்த தேர்ந்தெடுப்பதன் மூலம் அவர்களுக்கு பிரநிதித்துவம் தருதல்.

பிரிவினைவாதம் : ஓர் பெரிய குழுவினுள் உள்ள இரண்டு அல்லது அதற்கும் மேலான சிறிய குழுக்களுக்கிடையே ஏற்படும் விவாதங்கள் மற்றும் சச்சரவுகள்.

மக்களாட்சி: ஒட்டுமொத்த மக்களாலும், குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நடைபெறும் அரசாங்க முறையாகும்.

எல்லை வகுத்தல்: சட்டமியற்றும் அமைப்பினைக் கொண்ட ஓர் நாடு அல்லது மாகாணத்தில் உள்ள நில அடிப்படையான தொகுதிகளின் வரையறைகள் அல்லது நிர்ணயம் செய்யும் செயல் அல்லது நடைமுறை.

வாக்காளர் பட்டியல் : தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்களின் பட்டியல்.

நியமனம் : ஓர் பதவிக்கு யாரையேனும் அதிகாரப்பூர்வமாகப் பரிந்துரைத்தல்.

தேர்தல் பரப்புரை : இக்காலகட்டத்தில் ஓர் அரசியல்வாதியோ அல்லது கட்சியோ மக்களைத் தங்களுக்கு வாக்களிக்குமாறு இணங்க வைத்தல்.

கட்சித்தாவல் தடைச் சட்டம் : இச்சட்டம் 1985-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் மூலமாக மற்றொரு கட்சிக்குத் தாவும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தகுதியிழப்பு செய்யப்படுகின்றனர்.

தொகுதி: ஓர் குறிப்பிட்ட பகுதியிலுள்ள வாக்காளர்கள் சட்டமியற்றும் அமைப்பிற்கான தங்களின் பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தல்.

வாக்குப்பதிவு : ஓர் தேர்தலில் வாக்களித்த தகுதிவாய்ந்த வாக்களர்களின் சதவீதம்.

மதிப்பிடுதல் (Evaluation)

I சரியான பதிலை தேர்வுசெய்யவும்

1 .'வாக்குரிமை' என்னும் சொல் _____ ஆகியவற்றிலிருந்து தோன்றியதாகும்.
(அ) ஆங்கிலோ-பிரெஞ்சு (ஆ) ஆங்கிலோ –இந்தியன்
(இ) ஆங்கிலோ –ஜெர்மன் (ஈ)ஆங்கிலோ–இத்தாலியன்

2. இந்திய அரசமைப்பின் பகுதி 15 ___________ பற்றியதாகும்.
(அ) தேர்தல்கள் (ஆ) குடியுரிமை
(இ) அடிப்படை உரிமைகள் (ஈ)அரசுவழிகாட்டி நெறிமுறைகள்

3. "தேர்தலியல்" என்பது __________ பற்றிய கல்வியாகும்.
(அ) தேர்தல்கள் (ஆ) அரசமைப்பு
(இ) அரசு (ஈ) உரிமைகள்

4. __________ என்பது பன்மைத்துவ/பெரும்பான்மை தேர்தல் முறைகளின் எளிமையான வடிவமாகும்.
(அ) முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (ஆ) தொகுப்பு வாக்கு
(இ) கட்சி தொகுப்பு வாக்கு (ஈ) வரையறுக்கப்பட்ட வாக்கு முறை

5. முதலாவது வரையறை ஆணையச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு __________ ஆகும்.
(அ) 1952 (ஆ) 1963
(இ) 1973 (ஈ) 2002

6. தகுதியுள்ள வாக்களார்களின் பட்டியல்__________ என அழைக்கப்படுகிறது
(அ) வாக்காளர் பட்டியல் (ஆ) பரப்புரை பட்டியல்
(இ) வாக்களிப்பு பட்டியல் (ஈ) நியமனப் பட்டியல்

7. இந்திய குடிமக்களின் வாக்களிக்கும் வயதினை 21 லிருந்து 18 ஆக குறைந்த அரசமைப்பு சட்டத்திருத்தம் எது?
(அ) 61 (ஆ) 42
(இ) 91 (ஈ) 73

8. இந்தியாவிற்கு ஒரே தேர்தல் ஆணையம் வேண்டும் எனக்கூறும் அரசமைப்பு உறுப்பு எது?
(அ) உறுப்பு 324 (ஆ) உறுப்பு 256
(இ) உறுப்பு 370 (ஈ) உறுப்பு 360

9. 52வது அரசமைப்புச் சட்டத்திருத்தம், 1985 __________ பற்றியதாகும்.
(அ) கட்சித்தாவல் தடைச்சட்டம் (ஆ) தேர்தல் முறைகள்
(இ) தேர்தல் சீர்த்திருத்தங்கள் (ஈ) தேர்தல் பரப்புரை

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 230 07/12/2022 17:07:23

10. ஓர் உறுப்பினரின் மறைவு அல்லது பதவி விலகலால் வரும் தேர்தல் __________ என அழைக்கப்படுகிறது,

(அ) இடைத்தேர்தல் (ஆ) மறுதேர்தல்

(இ) தேர்தல் ரத்து (ஈ) வார்டு தேர்தல்

11. பஞ்சாயத்து அமைப்புகளில் பெண்களுக்கு __________ இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

(அ) 1/3 (ஆ) ¼

(இ) 2/3 (ஈ) ¾

12. இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையாளரை __________ நியமிக்கிறார்

(அ) இந்தியக் குடியரசுத் தலைவர் (ஆ) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி

(இ) பிரதமர் (ஈ) தலைமைச் செயலாளர்

13.இந்திரஜித் குப்தா குழு, 1998 __________ தொடர்பானதாகும்.

(அ) தேர்தல் சீர்த்திருத்தங்கள் (ஆ) கட்சித்தாவல்

(இ) FPTP முறை (ஈ) ரகசிய வாக்கெடுப்பு

14. இந்தியாவில் முதலாவது பொதுத் தேர்தல்கள் __________ ஆண்டு நடைபெற்றது.

(அ) 1950 – 1951 (ஆ) 1951 – 1952

(இ) 1952 – 1953 (ஈ) 1947 – 1948

15. அரசின் நிதியுதவியுடனான தேர்தல்களை__________ குழு ஆதரித்தது.

(அ) இந்திரஜித் குப்தா குழு (ஆ) வோரா குழு

(இ) தார்குந்த் குழு (ஈ) டங்கா குழு

16. கூற்று (A)–இந்திய நாடாளுமன்றம் ஈரவைகளைக் கொண்டதாகும்.

காரணம் (R)– கீழவையாக மக்களவையும், மேலவையாக மாநிலங்களையும் உள்ளன.

(அ) (A) மற்றும் (R) இரண்டு உண்மையாகும். (R) என்பது (A) என்பதன் சரியான விளக்கமாகும்.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் உண்மையாகும். (R) என்பது (A) யின் சரியான விளக்கம் அல்ல.

(இ) (A) என்பது உண்மையாகும். (R) என்பது தவறாகும்.

(ஈ) (A) என்பது தவறாகும். (R) என்பது உண்மையாகும்.

II கீழ்க்காணும் வினாக்களுக்கு மிக சுருக்கமாக விடையளிக்கவும்

1. வாக்குரிமை என்றால் என்ன?
2. தேர்தலியல்–வரையறு
3. FPTP என்பதனை விரிவாக்கம் செய்க.
4. 'தேர்தலுக்கான தொகுதிகள்' என்றால் என்ன?
5. வாக்காளர் பட்டியல் என்றால் என்ன?.
6. 'தேர்தல் பரப்புரை' என்றால் என்ன?
7. கட்சித்தாவல் தடைச் சட்டம் என்றால் என்ன?

III. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

1. ஒரு மக்களாட்சியில் உள்ள தேர்தல் முறையின் சிறப்பியல்புகள் எவை?
2. சிறுபான்மையினர் பிரதிநிதித்துவத்திற்கான பல்வேறு முறைகளைக் குறிப்பிடுக
3. 'எல்லைகளை வரையறுத்தல்' என்றால் என்ன?
4. தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான குழுக்கள் யாவை?
5. இந்தியா ஏன் FPTP முறையை ஏற்றுக் கொண்டுள்ளது?
6. வெளிப்படையான வாக்கு மற்றும் ரகசிய வாக்கினை விளக்குக.

IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும்.

1. பிரதிநிதித்துவத்தின் பல்வேறு வகைகளை விளக்குக
2. சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்களின் தேவையை விளக்குக.
3. இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை வெளிக்கொணர்க.
4. இந்தியாவின் பல்வேறு தேர்தல் சீர்திருத்தங்களை வெளிக்கொணர்க.

மேற்கோள் நூல்கள்

1. J.C. Johari, Indian Polity, Lotus Press, New Delhi.
2. R.C. Agarwal, Political Theory, S. Chand and Company, New Delhi.
3. B.S. Raman, Indian Constitution, United Publishers, Mangalore.
4. Subash C Kashyap, Our Constitution, National Book Trust , India.
5. The New International IDEA Handbook

ICT CORNER

அலகு–11 தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம்

யார் நம்முடைய பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்.... அறிந்து கொள்வோமா



படிகள்

படி 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி "indiavotes" பக்கத்திற்குச் செல்க.

படி 2: நாடாளுமன்றத்திற்கு "year", "states" and Click "GO"ஆகியவற்றை தேர்வு செய்க. : சட்டமன்றம் (மாநில தேர்தல்) பற்றி விவரம் அறிய "year", "states" and Click "GO"ஆகியவற்றை தேர்வு செய்க.

படி 3: சரியான விவரம் அறிந்த பின், "Advanced search" ஐ தேர்வுசெய்து மேலும் விவரங்களை அறிக.

படி 4: முகப்பு பக்கத்தில் உள்ள "Election Maps" ஐ சொடுக்கி தேவையான தரவுகளை கொடுத்து வரைபடத்துடன் சரி பார்க்க.

உரலி :

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

இப்பக்கத்திற்கு தேவைப்பட்டால் Flash Player or Java Script ஐ அனுமதிக்கவும்

2FL8B

URL : http://www.indiavotes.com/

அலகு 12

உள்ளாட்சி அரசாங்கங்கள்

கற்றலின் நோக்கங்கள்

- இப்பாடத்தில் இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றிய ஒரு உட்பார்வையை மாணவர்கள் அறியலாம்.
- உள்ளாட்சி அரசாங்கங்களின் முக்கியத்துவம் பற்றி இப்பகுதியில் அறியலாம்.
- இப்பாடம், உள்ளாட்சி அரசாங்கங்களின் இன்றைய பரப்பெல்லையை விளக்குகிறது.
- உள்ளாட்சி அரசாங்கங்களின் வரலாற்று ரீதியிலான வளர்ச்சி, அதன் பணிகள் மற்றும் அதிகாரங்களில் சுதந்திரத்திற்கு பின்பு ஏற்பட்ட மாற்றங்கள் போன்றவற்றை இப்பாடம் விளக்குகிறது.
- இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் அமைப்பு, பணிகள், அதன் தேர்தல் முறை, வருவாய் ஆதாரம் மற்றும் அதிலுள்ள பிரச்சனைகள் குறித்து இப்பாடத்தில் மாணவர்கள் கற்கலாம்.

12.1 உள்ளாட்சி அரசாங்கத்தின் பொருள், தன்மை மற்றும் முக்கியத்துவம்

உள்ளாட்சி அரசாங்கம் என்பது, நம்முடைய கிராமங்கள், நகரங்கள் மற்றும் மாநகரங்களில் மக்களுக்கான சேவைகள் மற்றும் வசதிகளை அளிப்பதற்கும், உள்ளூர் பிரச்சனைகளை நிர்வகிப்பதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் கிராமம், நகரம், பெருநகரங்கள் மற்றும் மாநகரங்கள் என ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் செயல்படுபவை ஆகும். ஒரு கிராமம் அல்லது நகரத்தில் உள்ள மக்களையும் அரசாங்கத்தையும் இணைக்கும் விதமாக உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்படுகின்றன. மக்களுக்கு சாலை பழுது, சாலையில் நீர் தேங்கியிருத்தல், தெரு விளக்குகள் எரியாமை போன்ற அடிப்படைப் பிரச்சனைகளின்போதும், குளங்களை உருவாக்குதல், பூங்காக்களை அமைத்தல் போன்ற அடிப்படை தேவைகளின்போதும், உள்ளாட்சி அரசாங்கங்கள் அவற்றை மேற்கொள்கின்றன. அவசர காலங்களின் போதும், உள்ளூரில் பிறப்பு மற்றும் இறப்பு நிகழும்போதும் அவற்றை கையாளும் பொறுப்பும் உள்ளாட்சி அரசாங்களுக்கு உண்டு. ஒரு பகுதியில் இருப்பிட சான்றிதழ் மற்றும் பிறப்பு, இறப்பு, வருமான சான்றிதழ்களை வழங்கும் ஓர் அமைப்பாகவும் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்படுகின்றன.

மக்களின் அன்றாடத் தேவைகளை கையாளும் பொறுப்புடைய ஒரு முழுமையான அமைப்பாக உள்ளாட்சி அரசாங்கங்கள் உள்ளன. நம் அரசாங்க நிர்வாகக் கட்டமைப்பில் இறுதி நிலை அலகாக உள்ளாட்சி அரசாங்கங்கள் உள்ளன. உள்ளாட்சி அரசாங்கமானது ஒரு சபையை கொண்டுள்ளது. அதில் உள்ள உறுப்பினர்கள் அதன் கிராமம் அல்லது நகரத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவர். அவர்கள் மக்களின் பிரச்சனைகளை மக்கள் சார்பாக சபையில் விவாதித்து தீர்வுகளைக் காண வேண்டிய பொறுப்புடையவர்கள் ஆவர். அந்த சபையின் உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகள் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, அந்தந்த நாட்டுச் சட்டப்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

உள்ளாட்சி அரசாங்கங்கள் என்பவை பிரதிநிதித்துவ அமைப்புகள், அவை சபையில் மக்களை பிரதிநிதிப்படுத்துகின்றன. உள்ளாட்சி அரசாங்கங்கள் அவைகளின்

பகுதிக்குட்பட்ட மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக விவாதிக்கவும், அவற்றிற்கான தீர்வுகளைக் காணவும், மேலும் அப்பிரச்சனைகளை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லவும் சட்டப்படியான உரிமை பெற்ற அமைப்புகளாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் மக்களாட்சி நடைமுறையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், சபையில் கொண்டு வரப்படும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் விவாதம், பேச்சுவார்த்தை மூலம் அனைவரும் ஏற்கத்தக்க வகையில் தீர்வு எட்டப்பட வேண்டும். சபை உறுப்பினர்கள் இந்தியாவின் அரசமைப்பிற்கு உட்பட்டு விவாதிக்கவும், முடிவெடுக்கவும், முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, உள்ளாட்சி அரசாங்கங்கள் என்பவை மக்களின் உள்ளூர் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் பொதுவாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை கொண்டுள்ளன. அவர்கள் உள்ளூர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் உள்ளூர் பிரச்சனைகளை சபையில் விவாதித்து அதற்கு தீர்வு காண்கின்றனர். உள்ளாட்சி அரசாங்கங்கள், அரசின் திட்டங்களும் வளங்களும் அடித்தட்டு மக்களை சென்றடைய முக்கிய வழிகளாக விளக்குகின்றன. இன்று எந்தவொரு நாடும் உள்ளாட்சி அரசாங்கங்களை புறக்கணிக்க முடியாது, ஏனெனில் உள்ளூர் பிரச்சனைகளே இப்போது சர்வதேச பிரச்சனைகளாக மாறுகின்றன. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியினால் உலகமே ஒரு கிராமமாக மாறிவிட்டது.

12.2 உள்ளாட்சி அரசாங்கங்களின் வகைகள்

உள்ளாட்சி அரசாங்கங்கள் கிராமங்கள் மற்றும் நகரங்கள் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்பாடானது அப்பகுதி மக்களின் தொழில் (விவசாயம் சார்ந்த அல்லது விவசாயம் சாராத) அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயம் சார்ந்த தொழிலை அடிப்படையாக கொண்ட பகுதி என்பது, அப்பகுதியின் பெரும்பான்மை மக்களோ, அல்லது அனைத்து மக்களுமோ விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களான கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை போன்ற தொழில்களை செய்வர். ஆனால் நகர பகுதிகளில் மக்கள் வர்த்தகம் மற்றும் அதுசார்ந்த தொழில்களில் ஈடுபடுவர். நகரப் பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரமானது வர்த்தகம் மற்றும் அது சார்ந்த நிறுவனங்களையும் தனியார் மற்றும் அரசாங்கத்தின் நிர்வாக அலுவலங்களில் உள்ள வேலைவாய்ப்பையும் அடிப்படையாக கொண்டுள்ளது. நகரப் பகுதிகள் என்பவை வெளி உலகத்திற்கும் கிராமப்பகுதிகளுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகின்றன. கிராமப்பகுதிகளில் ஏற்படுத்தப்படும் அரசாங்கங்கள் ஊரக உள்ளாட்சி அரசாங்கங்கள் என்றும் நகர பகுதிகளில் உருவாக்கப்படும் அரசாங்கங்கள் நகர்ப்புற உள்ளாட்சி அரசாங்கங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

இந்தியாவில், கிராம உள்ளாட்சி அரசாங்கங்கள் 'பஞ்சாயத்து ராஜ்' என்ற பொது பெயரில் அழைக்கப்படுகின்றன. அரசாங்கங்கள் பஞ்சாயத்து செய்கிற (ஆழ்ந்து விவாதித்தல் மற்றும் பேச்சு வார்த்தை நடத்துதல்) இடமாக கருதப்படுவதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. இந்தியாவில் நகர்ப்புற உள்ளாட்சி அரசாங்கங்கள்

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 234 06/12/2022 13:13:08

அவைகளின் பொருளாதார மற்றும் அரசியல் அடிப்படையை கொண்டு நகராட்சிகள், மாநகராட்சிகள், நகரியம், பாளையவாரியம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய நகரங்கள் நகராட்சிகளாகவும் பெரு நகரங்கள் மாநகராட்சிகள் எனவும், தொழில் நகரங்கள் நகரியங்கள் எனவும், ராணுவ அமைப்புகள் உள்ள இடங்கள் பாளைய வாரியங்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

செயல்பாடு

மாணவர்கள் தங்களுக்குள் இரண்டு அல்லது மூன்று குழுக்களை ஏற்படுத்திக்கொண்டு தங்களது பகுதியில் எதிர்பாராத விதமாக பரவிய நோய்கள், பெருமழையின் போது உடைப்பெடுத்த நீர் நிலைகள் அல்லது வயதுவந்தோர் கல்வி போன்ற உள்ளூர் பிரச்சனைகள் குறித்து விவாதிக்கவும்.

செயல்பாடு

ஒன்றிணைந்த உளச்சான்றினால் பொது இடங்களில் தூய்மை வலியுறுத்தப்படும்போது மட்டுமே ஒன்றுபட்ட தூய்மை உறுதிப்படும். மகாத்மா காந்தி பிறந்த அக்டோபர் 2, அன்று நம் தேசத்தந்தைக்கு அஞ்சலி செலுத்துகிற அதே வேளையில், அனைத்து ஏழை மக்களுக்கும் அடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல் என்ற அவரின் கனவை நிறைவேற்ற நாம் பாடுபடவேண்டும்.

முழுமையான சுகாதாரத்தை நோக்கி

- ஒன்றிணைந்த குறைந்த செலவினத்திலான சுகாதார திட்டத்தின் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் மூலம் மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையை 2010–ம் ஆண்டுக்குள் நீக்கும் நோக்கத்தில் உலர் கழிவறைகளை அமைக்க மானியங்களை உயர்த்தி வழங்குதல்
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் அனைத்து குடிசைப்பகுதிகளுக்கும் அடிப்படை தேவைகளை (குடிநீர், துப்புரவு, கழிவு நீரகற்றல், மின்சாரம், ஆரோக்கியம், சமூக பாதுகாப்பு மற்றும் வீடு வழங்குதல்). (நகர்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குதல் மேலும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி திட்டம்) மேலும் 'ராஜீவ் ஆவாஸ் யோஜனா' திட்டம் மூலம் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை ஒவ்வொரு வீட்டுக்கும் வழங்குதல்.
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் வடிகால், சுகாதாரம் மற்றும் உலர் கழிவு மேலாண்மை வசதிகளை மேம்படுத்துதல் (சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான கட்டமைப்பு, ஆளுகை மற்றும் நகர்ப்புற கட்டமைப்பு வளர்ச்சி திட்டம்).
- முழுமையான சுகாதார கொள்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது.

மாநகராட்சிகள் என்பவை, பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள்த் தொகையைக் கொண்டது பெரு நகரங்களில் ஏற்படுத்தப்படுகின்றன. கிராமங்கள் மற்றும் சிறு நகரங்களில் இருந்து பல ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெறும் மக்களின் இடப்பெயர்ச்சி ஒரு நகரத்தை, ஒரு பெருநகரமாக மாற்றுகிறது.

நகராட்சிகள் என்பவை மக்கள் தொகை பத்து லட்சத்திற்கும் குறைவாக உள்ள சிறு நகரப்பகுதிகளில் ஏற்படுத்தப்படுகின்றன. நகராட்சிகளும் வகை-1, வகை-2 என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்பாடானது குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் நகராட்சிகளின் தர நிர்ணயம் செய்யப்படுகின்றது.

புதிய தொழிற்சாலைகள் அமைகின்ற இடங்களில் நகரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அங்குள்ள குடிமக்கள் விவசாயம் சார்ந்த தொழில்களிலிருந்து விவசாயம் சாரா தொழில்களுக்கு மாறுகின்றனர். இராணுவ, பயிற்சி மையங்கள் அமைந்திருக்க கூடிய இடங்களில், இராணுவ தளவாடங்கள் உற்பத்தி தொழிற்சாலைகள் அமைந்திருக்கும் இடங்களில் பாளைய வாரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கிராமப்புற உள்ளாட்சி அரசாங்கங்களும், நகர்ப்புற அரசாங்கங்களும், அரசாங்க படிநிலையில் இறுதி நிலையில் உள்ளவை ஆகும்.

உலகின் பல்வேறு நாடுகளில் ஊரக மற்றும் நகர்ப்புற அரசாங்கங்கள் வெவ்வேறு விதங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஆனால் உள்ளாட்சி அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் எல்லா நாடுகளிலும் ஒன்றே. உள்ளாட்சி அரசாங்கங்கள் என்பவை உள்ளூர் மக்களுக்காக, உள்ளூரிலிருந்து கிடைக்கும் வருவாயையே பிரதானமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டவை.

செயல்பாடு

சொத்து வரி, குடிநீர் வரி, தொழில் வரி போன்ற பல்வேறு வரிகளை உள்ளாட்சி அரசாங்கங்கள் விதிக்கின்றன. அவ்வரிகள் பற்றி ஒரு மாத ஊதியம் பெறும் நபர், தொழிற்சாலை நடத்தும் ஒருவர் மற்றும் ஒரு வியாபாரி போன்றோரிடம் நீ கேட்டு நேரிடையாக தெரிந்து கொள். நீ அறிந்தவற்றை வகுப்பறையில் பகிர்ந்து கொள்.

அரசாங்க படி நிலையில், மேல் நிலையில் உள்ள அரசாங்கம் உள்ளாட்சி அமைப்புகளை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல் பணியை மேற்கொள்கிறது.

12.3 பல்வேறு நாடுகளில் உள்ளாட்சி அரசாங்கங்கள்

உள்ளாட்சி அரசாங்கங்கள் மனித நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்து காணப்படும் பழமையான ஒன்றாகும். பல்வேறு உலக நாடுகளில் அவர்களின் நவீன அரசுகளே உள்ளாட்சி அரசாங்கங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. பல்வேறு நாடுகளில் அமைந்துள்ள உள்ளாட்சி அரசாங்கள் தொடர்பாக அறிய தொடங்கினால், அனைத்து நாடுகளிலும், அவை சிறிய நாடோ அல்லது பெரிய நாடோ, வளர்ச்சியடைந்த நாடோ அல்லது வளர்சியுறா நாடோ ஏதோ ஒரு வகையில் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்படுவதும் அதன் மூலம் பொது சேவைகள் மற்றும் வசதிகள் அடித்தட்டு மக்கள் வரை சென்றடைவதையும் காணலாம்.

ஆனால், கட்டமைப்பு, அதிகாரம், பணி வரம்பு, நிதி ஆதாரங்கள் போன்றவற்றில் அவை பெருமளவு வேறுபடுகின்றன. பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்களே தங்களின் முயற்சியால் மையப்படுத்தப்பட்டு இருந்த அதிகாரத்தைப் பரவலாக்கம் செய்கின்றன. வளர்ச்சி அடைந்த நாடுகளில் நிதிப் பகிர்வு, காவல் பணி வரம்பு, போக்குவரத்து, மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம் போன்றவை இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சனைகளாகவே உள்ளன. ஆனால் வளரும் நாடுகளில் மத்திய அரசாங்கங்கள் அதிகாரத்தையும், நிதி ஆதாரங்களையும் மையப்படுத்தும் முயற்சியை மேற்கொள்கின்றன. இந்தியாவில், மாநில மற்றும் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு நிர்வாக மற்றும் நிதி தொடர்பான அதிகாரங்களை மேலும் பகிர்ந்தளிக்க மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் எப்போதுமே இருந்து வருகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவின் 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 2,50,000 கிராம பஞ்சாயத்துகள் உள்ளன.

செயல்பாடு

உங்கள் பகுதியில் உள்ள குடிநீர், மின்சாரம், துப்புரவு வடிகால் போன்ற சில பொது வசதிகள் எவ்வாறு உள்ளது என்று பார். அவற்றை மேம்படுத்த ஏதாவது வாய்ப்புள்ளதா? என்ன செய்யப்படவேண்டும் என்று நீ கருதுகிறாய்? கீழே உள்ள அட்டவணையை பூர்த்தி செய்யவும்.

வசதிகள்	உங்கள் ஊரில் உள்ளதா?	அது எவ்வாறு மேம்படுத்தப்பட வேண்டும்?
குடிநீர்		
வடிகால்		
துப்புரவு		
மின்சாரம்		
சாலை		
பொது போக்குவரத்து முறை		

12.4 இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி

இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் தோற்றத்தை பற்றி ஆராய்ந்தால், அவை கிறித்து பிறப்பதற்கு முன்பே (பொ.ஆ.மு.) இருந்ததை அறியலாம். கி.மு. (பொ.ஆ.மு.) 600 முதல் கி.பி. (பொ.ஆ.) 600 வரை உலகில் பல குடியரசுகள் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தன. இந்த காலத்தில் தான் ஜைன மதத்தை தோற்றுவித்த மகாவீரர், புத்த மதத்தை தோற்றுவித்த கௌதம புத்தர் போன்றோர் தோன்றினர். புத்த மற்றும் ஜைன இலக்கியங்களில் கிராமங்கள் அளவு மற்றும் வாழும் முறையால் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

புத்தர் மற்றும் மகாவீரர் ஏற்படுத்திய மத அமைப்புகளில் மக்களாட்சி நடைமுறையில் முடிவுகள் எடுக்கப்பட்டன. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் அப்போதைய கிராம நிர்வாகம் பற்றி விரிவாக விளக்கப்படுள்ளது. மௌரியர்களின் ஆட்சி காலத்தில் கிராமமும், மாவட்டமுமே நிர்வாக அலகுகளாக இருந்தன.

தென்னிந்திய தீபகற்பத்தில் கிறித்துவின் காலத்திற்கு முன்பே உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டு வந்துள்ளன. இந்த வரலாற்றுக் காலம் முந்தைய சோழர் காலம், களப்பிரர்கள் காலம் மற்றும் பிந்தைய சோழர் காலம், விஜய நகர பேரரசின் தோற்றம், இஸ்லாமியர்கள், மொகலாயர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் வருகை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. முந்தைய சோழர் காலத்திலும், களப்பிரர்கள் காலத்திலும் இருந்த உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றி சிறிதளவே ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆனால், தென்னிந்தியாவின் கடைக்கோடியில் ஆட்சி புரிந்த பாண்டியர்கள் காலத்திலும், தென் மத்திய இந்தியாவில் ஆட்சி புரிந்த பல்லவர் காலத்திலும் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மேலும் சோழர்கள் காலத்தில் உள்ளாட்சி அரசாங்கங்கள் நன்கு மேம்பட்ட நிலையில் செயல்பட்டு வந்துள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் கண்டெடுக்கப்பட்ட, முதலாம் பராந்தக சோழன் கால கல்வெட்டுகள் (கி.பி. (பொ.ஆ) 919 – கி.பி. (பொ.ஆ) 922) உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றி விரிவாக விளக்குகின்றன. ஒவ்வோர் ஊரிலும் ஒரு சபை இருந்ததாகவும், அதில் அவ்வூரின் அனைத்து ஆண்களும் உறுப்பினராக இருந்ததையும், அவர்கள் அனைத்து பொதுப்பிரச்சனைகளிலும் முடிவெடுத்ததையும் இக்கல்வெட்டுகள்

மூலமாக அறிய முடிகிறது. இந்த சபைகள் "ஊர்" மற்றும் "மகா சபை" என்று இரண்டு விதங்களாக அழைக்கப்பட்டன. மேலும் மூன்றாவது வகையாக நகரம் என்று வியாபார மையங்களும், நான்காவது நாடு என்றும் அழைக்கப்பட்டன. இவற்றில் நாடு என்பது கிராமங்கள் மற்றும் மற்ற பகுதிகளை உள்ளடக்கிய அமைப்பாகவும், நகரம் என்பது நகரப்பகுதிகளை உள்ளடக்கிய ஓர் அமைப்பாகவும் இருந்தன. பொதுவாக பார்த்தோமேயானால், 9-ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலங்களில் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டமைக்கான சான்றுகள் குறைவாகவே கிடைத்துள்ளன. "நாடு" மற்றும் "நகரம்" என்ற இரு அமைப்புகளுமே, நிலங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள், கோவில்கள் மற்றும் நீர்பாசனங்களை நிர்வகித்தல், வரி வசூலித்தல், பெரிய மூலதனம் தேவைப்படுகின்ற பணிகளுக்கு கடன் வழங்குதல் மற்றும் தொண்டு நிறுவனங்களை நிர்வகித்தல் போன்ற பணிகளை செய்கின்றன. "ஊர்" மற்றும் "மகாசபை" என்ற இரு அமைப்புகளும் அரசனின் கட்டளைகளை அமல்படுத்தும் அதிகாரிகளுக்கு துணைபுரிந்தன.

முதலாம் ராஜராஜ சோழன், வீர நாராயண சதுர்வேதி மங்கலம், என்ற ஊரின் மகாசபைக்கு நாட்டுக்கு துரோகமிழைத்த துரோகிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்ய உத்தரவிட்டதை அறிய முடிகிறது. சர் சார்லஸ் மெட்கேப், சர் ஜார்ஜ் பேர்டு வுட் மற்றும் எல்பின்ஸ்டோன் போன்ற பல வரலாற்றாசிரியர்கள் பண்டைய மற்றும் இடைக்காலத்தில் தென்னிந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்கள் வளமையுடன் செயல்பட்டு வந்ததை குறிப்பிடுகின்றனர். ஆனால் மிக விரிவான முறையில் அனைத்து பகுதிகளிலும் செயல்பட்டு வந்தது என்பதில் சில வரலாற்றாசிரியர்களுக்கு சந்தேகம் உள்ளது.

மொகலாயர்கள் காலத்தில் (கி.பி-1500 முதல் கி.பி-1777) அரசுகள் மாறினாலும், மத்திய அரசுக்கும் உள்ளூர் நிர்வாகத்துக்குமிடையேயான உறவில் அடிப்படை விதிகள் மாறவில்லை. மொகலாய பேரரசு அதன் உச்சத்தில் இருந்தபோது, அது பல மாகாணங்களாக (பராக்னாஸ்) பிரிக்கப்பட்டிருந்தது, மாகாணங்களில் உட்பிரிவுகள் (சர்க்கார்) ஏற்படுத்தப்பட்டிருந்தன. சர்க்கார்கள் பல கிராமங்களைக் கொண்ட தொகுதிகளாக (பராக்காஸ்) பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு படிநிலையிலும் அரசாங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதற்கென அதிகாரிகள் பேரரசால் நியமிக்கப்பட்டிருந்தனர். கிராமப்பகுதிகளில் மொகலாயப் பேரரசின் இறுதிக் காலங்களில், உள்ளாட்சி அமைப்புகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. ஆனால் அவை பற்பல தாக்குதல்களைக் கண்டாலும், தொடர்ந்து இயங்கின. பிளாசிப்போருக்குப் பின் (கி.பி 1757), ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி, வங்காள நவாபிடமிருந்து நில வரி வசூல் உரிமைகளைப் பெற்றது. இதுவே, இந்தியாவில் ஆங்கிலேயே ஆட்சிக்கு வழிகோலியது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் மாகாண தலை நகரங்களான கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னை தவிர மற்ற கிராம மற்றும் நகர வியாபார மையங்கள் எந்த ஒரு கட்டுப்பாட்டின் கீழும், மேற்பார்வையின் கீழும் இயங்கவில்லை. மாவட்ட நிர்வாகமானது மாவட்ட ஆட்சியரின் கீழ் இயங்கியது. ஆங்கிலேயர் ஆட்சியில் மாவட்ட நிர்வாகம் முக்கியமானதொரு நிர்வாக அமைப்பாகவும், நாட்டின் ஊரக பகுதிகள் அனைத்தும் அதன் கட்டுப்பாட்டிலும் இருந்தன.

கல்கத்தா (கொல்கத்தா) பம்பாய் (மும்பாய்) மற்றும் மெட்ராஸ் (சென்னை) நகரங்களில், மாநகராட்சி நிர்வாகத்தை ஏற்படுத்தியது ஆங்கிலேயர் ஆட்சியின் ஒரு முக்கியமான நிகழ்வாக கருதப்படுகிறது. 1882-ஆம் ஆண்டு ரிப்பன் பிரபு ஒரு தீர்மானத்தை முன் மொழிந்தார். அதன்படி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்தவும் அதை மேற்பார்வையிட மாவட்ட அளவில் வாரியங்களை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுத்தார்.

ரிப்பன் பிரபுவின் தீர்மானம், உள்ளாட்சி அமைப்புகளில் பெரும்பாலும் அதிகாரிகளல்லாதோரைக் கொண்டிருக்க வேண்டும் எனவும், அவர்கள் முடிந்தவரை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் எனவும் கூறியது. ஏறத்தாழ 500 உள்ளாட்சி அமைப்புகள் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரிகளல்லாதோரைக் கொண்டு தொடங்கப்பட்டன. அவர்களின் பெயர்களை மாவட்ட ஆட்சியர் பரிந்துரைத்தார். மாவட்ட வாரியங்களின் பணிகள் 1909-ஆம் ஆண்டு வரை காவல், கல்வி மற்றும் கிராமத் துப்புரவு முதலியவையாக மட்டுமே இருந்தன.

ரிப்பன் பிரபுவால் ஏற்படுத்தப்பட்ட உள்ளாட்சி அரசாங்கங்கள் பலரால் விமர்சிக்கப்பட்டன. ஆங்கிலேய அரசாங்கம் 1907-ஆம் ஆண்டு மத்திய அரசிற்கும், மாகாண மற்றும் அதன் கீழ் உள்ள அமைப்புகளுக்குமிடையே நிர்வாக மற்றும் நிதி உறவுகளைப் பற்றி விசாரிப்பதற்கு ஒரு விசாரணை ஆணையத்தை அமைத்தது. அப்போதைய நிர்வாக அமைப்பை நிர்வாக பகிர்வின் மூலம் மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் இந்திய அரசாங்க சட்டம் 1919-ன் படி மாகாண அரசாங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எனும் அம்சம் அரசின் இரட்டை ஆட்சி முறையின் கீழ் ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டின் கிராம உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை 1926-ஆம் ஆண்டில் 1417 ஆகவும், 1937-ஆம் ஆண்டில் 6250 ஆகவும் அதிகரித்தது. இங்கு மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன. அவை மாவட்ட வட்டார மற்றும் கிராம அளவில் உள்ளன. மாவட்ட மற்றும் வட்டார அமைப்புகளில் 1923—ம் ஆண்டு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மாகாணங்களில் இருந்த அலுவலரல்லாத தலைவர்கள் மாற்றப்பட்டு அலுவலர்கள் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்ட நிர்வாக அமைப்புகளில் நீதிக்கட்சியின் உறுப்பினர்கள் 1927 ஆம் ஆண்டில் 545 பேர்கள் நியமிக்கப்பட்டனர். 1937 முதல் 1947 ஆம் ஆண்டு வரை தேச சுதந்திர பிரச்சனை உட்பட பல பிரச்சனைகளை உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினர்கள் சந்தித்தனர்.

உங்களுக்குத் தெரியுமா?

இரட்டை ஆட்சி முறை மூலமாக நிர்வாக துறைகள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகள் எனவும், மாகாண அரசுகளுக்கு மாற்றி தரப்பட்ட துறைகள் எனவும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. காவல், சட்டம் ஒழுங்கு, நிதி போன்ற துறைகள் ஒதுக்கப்பட்ட துறைகள் எனப்படும். அவை ஆளுநரின் வசம் இருக்கும். கல்வி மற்றும் பிற துறைகள் மாற்றித் தரப்பட்ட துறைகளாகும். அவை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இருக்கும்.

இந்தியா 1947-ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த பின்பு, உள்ளாட்சி அரசாங்களுக்கு புத்துயிரூட்ட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவில் பரவலாக்கப்பட்ட அதிகார அமைப்பு இருத்தல் வேண்டும், கிராமபுற பஞ்சாயத்துக்கு ஆளுகையில் பொறுப்புகள் அளிக்கப்பட வேண்டும் (தன்னிறைவு பெற்ற கிராம சுயராஜ்ஜியம்) என்று மகாத்மா காந்தி வலியுறுத்தினார்.

ஷர்மா நாராயணன் என்பவர் சுதந்திர இந்தியாவுக்கான காந்திய அரசியலமைப்பு தொடர்பான ஒரு திட்ட வரைபடத்தை தயாரித்தார். அதில் குடிமக்களின் சமூக, பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளுக்கான அடிப்படை அமைப்பாக பஞ்சாயத்துகள் இருக்கும்படி அமைத்தார்.

கிராம பஞ்சாயத்துகள் குடிமை, அரசியல் மற்றும் நிர்வாகப்பணிகளைப் போல் உற்பத்தியை ஒருங்கிணைத்தல் மற்றும் வளங்களின் விநியோகம் தொடர்பான பொருளாதார பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த பொருளாதார

நடவடிக்கையின் மூலமே கிராம சமூகங்கள் தன்னிறைவு அடைவதுடன் தங்களது அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

இதனால், நவம்பர் 26, 1949-ஆம் நாள் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்திய அரசமைப்பின் பகுதி நான்கில் அமைந்துள்ள அரசின் வழிகாட்டு நெறிமுறைகளில், விதி 40 ஏற்படுத்தப்பட்டது. "அரசு கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவைகள் சுய ஆட்சியின் அலகுகளாக பணிபுரிய தேவையான அதிகாரங்களையும், திறனையும் வழங்க வேண்டும்" என அரசியலமைப்பு பிரிவு 40 கூறுகிறது.

அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் விதிகளின் படி செயல்படுவதற்காக 1952-ஆம் ஆண்டு பேரார்வத்துடன் சமூக மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கமாக மக்களின் கூட்டு முயற்சியின் மூலம் கிராமங்களின் சமூகப் பொருளாதார மாற்றத்தை உறுதி செய்வதாகும். இதற்கு தொழில் நுட்ப ஒத்துழைப்பையும், நிதி பங்களிப்பையும் அரசு செய்யும். இந்த திட்டமானது, தேசிய விரிவாக்க பணியாக பல்வேறு ஊரக பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டது. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அறிவை விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் ஊரக கைவினைத் தொழில்களில் புகுத்துவது இதன் நோக்கமாக இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலமான 1956-ல் (1956-61) கிராம பஞ்சாயத்துகள், அமைப்பு ரீதியாக உயர்நிலைகளில் உள்ள மக்கள் நிர்வாக அமைப்புகளுடன் இணைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. 1957-ஆம் ஆண்டு, திட்ட வடிவமைப்புக் குழு ஒன்றை, பல்வந்த்ராய் மேத்தா தலைமையில் மத்திய அரசாங்கம் அமைத்தது. மேத்தா குழு முக்கியமான இரண்டு பரிந்துரைகளை கூறியது அவை: நிர்வாகம் பரவலாக்கப்பட வேண்டும் மற்றும் நிர்வாகம் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இரண்டாவதாக, ஊரக வளர்ச்சி வட்டங்கள் மக்களாட்சி நிர்வாக அலகுகளாக மாற்றப்பட வேண்டும். அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியம் மூலம் அப்பகுதியில் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மேலும் மாவட்ட அளவில் ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அளவிலான சுகாதாரம், விவசாயம், கால்நடை, கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியரை உறுப்பினர்களாக கொண்ட மாவட்ட மேம்பாட்டு குழு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் இக்குழு பரிந்துரைத்தது. இந்த மாவட்ட அமைப்பு ஒரு ஆலோசனை வழங்கும் அமைப்பாக மட்டுமே செயல்படும். மேத்தா குழுவின் பரிந்துரைகள் பெரும்பாலும் அனைவராலும் வரவேற்கப்பட்டன. பல்வேறு மாநிலங்களில் பஞ்சாயத்து ராஜ் சட்டங்கள் இயற்றப்பட்டன. ஏறத்தாழ 90 சதவீத இந்திய மக்கள் 1960 வாக்கில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்குள் கொண்டுவரப்பட்டனர்.

பஞ்சாயத்து அமைப்புகளின் செயல்பாடுகளைப் பற்றி ஆராயவும், அதனை செம்மைப்படுத்தவும் இந்திய அரசாங்கம், 1977-ஆம் ஆண்டு அசோக் மேத்தா தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக்குழு, பஞ்சாயத் ராஜ் அமைப்பு மக்களாட்சி பண்புகளை கொண்ட ஒரு உள்ளாட்சி அரசாங்க அமைப்பாக மாறவேண்டும், மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மேலும், அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்றது. எனவே, இது தனது முதல் பரிந்துரையாக மாவட்ட பஞ்சாயத்து நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும் என்றது. ஒரு தற்கால தீர்வாக, வட்டார அளவில் பஞ்சாயத்து ஒன்றியம் நீடிக்க பரிந்துரைத்தது. இது உள்ளாட்சி அரசாங்கத்தின் ஒரு அலகாக இல்லாமல், மாவட்டப் பஞ்சாயத்திற்கு ஒரு இடைநிலை ஆதரவுக் கரமாக செயல்பட வேண்டும் என்றது. அசோக் மேத்தா குழு, 1978-ஆம் ஆண்டு தனது பரிந்துரையை சமர்பித்தது. இதன்

எதிரொலியாக கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் குஜராத் போன்ற மாநிலங்கள் தங்கள் மாநில பஞ்சாயத்து சட்டங்களில் திருத்தங்களை கொண்டு வந்தன.

உள்ளாட்சி அரசாங்கங்களை வலுப்படுத்த 1978 முதல் 1986 வரை, சி.எச். அனுமந்த்ராவ் குழு, ஜி.வி.கே. ராவ் குழு மற்றும் எல்.எம். சிங்வி குழு போன்ற பல குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இவையாவுமே அசோக் மேத்தா குழுவின் பரிந்துரைகளில் சிறுசிறு மாற்றங்களையே பரிந்துரைத்தன. ராஜீவ் காந்தி அரசாங்கத்தால் 1989–ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 64–வது மற்றும் 65–வது சட்ட திருத்தம் மிக முக்கியமான ஒரு நிகழ்வாகும். ஆனால், இது மாநிலங்களவையில் நிறைவேற்றப்படவில்லை.

பின்பு, பல்வேறு முயற்சிகளின் விளைவாக 1992–ஆம் ஆண்டு, முந்தைய பல முயற்சிகளின் சிறப்பம்சங்களையும் உள்ளடக்கி, அரசாங்கம் 73–வது மற்றும் 74–வது சட்டத்திருத்த மசோதாவை 1992–ல் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி இறுதியில் அது 1993–ஆம் ஆண்டு இரு அவைகளிலும் நிறைவேற்றியது.

இந்த 73–வது சட்ட திருத்தமும் 74–வது சட்ட திருத்தமும் இந்திய அரசமைப்பில் பகுதி IX மற்றும் IX(A) என்ற இரு பகுதிகளை இணைத்தது. அதில் அரசியல் சட்ட பிரிவுகள் 243 முதல் 243(ZG) வரை உள்ளது.

12.5 73–வது அரசமைப்பு சட்ட திருத்தம் – அமலாக்கம் மற்றும் அதன் விளைவுகள்

மக்கள்தொகை இருபது லட்சத்துக்கும் மிகாமல் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள், கிராமம், ஒன்றியம் மற்றும் மாவட்டத்தைக் கொண்ட மூன்றடுக்கு பஞ்சாயத்து அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என 73–வது அரசமைப்பு சட்ட திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்ட அரசமைப்பு சட்ட பிரிவு 243(B) கூறுகிறது. மாவட்டம் என்பது சாதாரணமாக வழக்கில் உள்ள ஒரு மாநிலத்தின் மாவட்டத்தை குறித்தாலும், கிராம மற்றும் ஒன்றிய பஞ்சாயத்துகளின் எல்லை பற்றி இந்த சட்ட திருத்தம் குறிப்பிடவில்லை. ஒரு கிராம பஞ்சாயத்தின் எல்லையை மாநில ஆளுநர் ஒரு அறிக்கை மூலமாக தீர்மானிக்கலாம். அது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். இதைப் போலவே இடைநிலையில் உள்ள பஞ்சாயத்தான ஒன்றிய பஞ்சாயத்தையும் ஆளுநர் தன் அறிக்கை மூலம் தீர்மானிக்கிறார். இது மாநில அரசுக்கு பஞ்சாயத்துகளை அமைப்பதிலும், பஞ்சாயத்து ஒன்றியங்களை அமைப்பதிலும் முழு சுதந்திரத்தை வழங்குகிறது.

அரசமைப்பில் ஒரு புதிய அட்டவணையாக 11–வது அட்டவணை சேர்க்கப்பட்டது. அது கட்டாய பணிகள் மற்றும் விருப்ப பணிகளை பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளுக்கும் தருகிறது.

(அ) கிராம அளவில் கிராம பஞ்சாயத்து உள்ளது.

(ஆ) மாவட்ட அளவில் மாவட்ட பஞ்சாயத்து உள்ளது.

(இ) 20 லட்சத்துக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்ட மாநிலங்களில் கிராம மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு இடைப்பட்ட அளவில் இடைநிலை பஞ்சாயத்துக்கள் உள்ளன.

ஒரு பஞ்சாயத்தில் உள்ள அனைத்து இடங்களும், தொகுதி மக்களின் நேரிடையான தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும். ஒரு கிராமப் பஞ்சாயத்தின் வாக்காளர்களைக் கொண்ட அமைப்பு "கிராம சபை" என்று அழைக்கப்படுகிறது. ஒரு கிராமப் பஞ்சாயத்தின் வாக்காளர் பட்டியலில் உள்ள அனைவரும் கிராம சபை உறுப்பினர்கள் ஆவர்.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும், பஞ்சாயத்துத் தலைவர் அம்மாநில சட்டப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார். அந்த சட்டப்படியே கிராம பஞ்சாயத்தின் தலைவருக்கும், ஒன்றிய

பஞ்சாயத்தின் தலைவருக்கும் மாவட்ட பஞ்சாயத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது. அது போலவே சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கிராம பஞ்சாயத்துக்கு மேல் உள்ள பஞ்சாயத்துகளில் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த சட்ட திருத்தம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒன்றிய பஞ்சாயத்திலும், மாவட்ட பஞ்சாயத்திலும் பங்கு பெறுகிற வாய்ப்பை வழங்குகிறது. மேலும், பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு அளிக்கிறது. மேலும், பெண்களுக்கு மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மிகாமல் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. பஞ்சாயத்துகளின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்.

மாநில சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட என்ன தகுதிகள் தேவையோ, அதே தகுதிகள் தான் ஒருவர் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட தேவைப்படும் தகுதிகள் ஆகும். பஞ்சாயத்தின் பொறுப்புகள் எவை என்று தெளிவாகவும் விரிவாகவும் அரசமைப்பின் பதினோராவது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. தேசிய நிதிக்குழு போலவே, மாநில நிதிக்குழு ஒன்று உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு மாநில நிதியை பகிர்ந்து கொடுப்பதற்கும், அதில் பரிந்துரைகளை கொடுப்பதற்கும் அரசமைப்பு சட்டத் திருத்தத்தினால் ஏற்படுத்தப்பட்டது.

73-வது சட்டத்திருத்தத்தின் விளைவாக உச்ச நீதிமன்றம் அனைத்து உள்ளாட்சி அதிகாரிகளும் அரசாகவோ அல்லது அரசாங்கமாகவோ தான் கருதப்பட்டு அவ்வாறே நடத்தப்பட வேண்டும் என்று கூறியது. இதன் விளைவாக பஞ்சாயத்துகள் சட்டப்பூர்வ தன்மை பெறுகின்றன. அவை அரசின் கருவியாக அங்கீகரிக்கப்பட்டு மக்களின் பங்களிப்பு அமைப்புகளை கீழ்நிலைகளில் உருவாக்குகின்றன. அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புகளான மாநில தேர்தல் ஆணையம், மாநில நிதிக்குழு போன்றவை பஞ்சாயத்துகளுக்கு நிலைத்தன்மையையும், நிரந்தர தன்மையையும் அளிக்கின்றன. அடிப்படை சேவைகளான குடிநீர், ஊரக துப்புரவு, சுகாதாரம், தொடக்க கல்வி போன்றவை உள்ளாட்சி அமைப்புகளின் பிரதான பணியாக இருந்த போதிலும் பெரும்பாலான பஞ்சாயத்துகள், மாநில அரசின் திட்டங்களை அமல்படுத்தும் நிறுவனங்களாகவே நடத்தப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

பஞ்சாயத்து ராஜ் (1959-2009)

பொன் விழா ஆண்டு- அக்டோபர் 02,1959 ஆம் நாள் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ராஜஸ்தான் மாநிலம் நகவுரில் பஞ்சாயத்து ராஜ்-க்கு அடிக்கல் நாட்டினர். ஊரக இந்தியாவை ஆள்வதில் இது ஒரு புரட்சிகரமான படியாகும். கிராமங்களின் முழுமையான வளர்ச்சி மற்றும் மக்களின் கைகளில் அதிகாரத்தை அளித்தல் என்ற நோக்குடனான இந்த பயணம் அன்று தொடங்கியது.

மாவட்ட ஆட்சியரின் கீழ் செயல்படும் மாவட்ட நிர்வாகமானது, உத்தரவுகளை நிறைவேற்றும் நிர்வாக அமைப்பாக உள்ளது. இதில், கிடைமட்ட ஒருங்கிணைப்பு கீழ்நிலையில் இல்லாமல் இயங்கும் படியாக நம்முடைய மக்களாட்சி கட்டமைப்பு உள்ளது.

73-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தினால் (1991) ஏற்படுத்தப்பட்ட மூன்றடுக்கு பஞ்சாயத் ராஜ் அமைப்பு

- மாவட்ட பஞ்சாயத்துகள் (தேர்ந்தெடுக்கப்பட்டோர் மற்றும் நியமிக்கப்பட்டோர்)
- ஊராட்சி ஒன்றிய குழு (தேர்ந்தெடுக்கப்பட்டோர்)
- கிராம பஞ்சாயத்து (தேர்ந்தெடுக்கப்பட்டோர்)
- கிராம சபை (ஒரு கிராமத்தின் அனைத்து வாக்காளர்களும்) (ஆலோசனை அமைப்பு)

உள்ளாட்சி நிர்வாகமானது மேலும் பொறுப்புடனும், வெளிப்படை தன்மையுடனும் மற்றும் மக்களுக்கு பதிலளிக்கும் கடமை உணர்வுடனும் செயல்பட மத்திய மற்றும் மாநில அரசுகளில் மட்டுமல்லாது மாவட்ட மற்றும் கிராம அளவிலும் பிரதிநிதித்துவ அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அவைகளுக்குள் நியாயமான வகையில் பணிகள் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

12.6 74-வது அரசமைப்பு சட்ட திருத்தம் – அமலாக்கம் மற்றும் அதன் விளைவுகள்

74-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தின் படி நகர பகுதிகள் என்பவை வெவ்வேறு விதமான அளவுகள், குணம் மற்றும் முக்கியத்துவம் கொண்ட நகரங்களையும் பெரு நகரங்களையும் உள்ளடக்கியவை.மாநகராட்சிகள்,நகராட்சிகள், பேரூராட்சிகள், நகரியங்கள் மற்றும் பாளைய வாரியங்கள் என்பவை பொதுவான நகர்ப்புற உள்ளாட்சி அரசாங்க வகைகளாக உள்ளன. இதில் முதல் நான்கு வகைகளும் மாநில நகராட்சி சட்டங்களின் அடிப்படையிலும், பாளைய வாரியம் மட்டும் மத்திய சட்டமான, பாளைய வாரியங்கள் சட்டம், 1924-ன் அடிப்படையிலும் செயல்படுகின்றன.

அரசமைப்பின் 74-வது அரசமைப்பு சட்ட திருத்தம் 1992-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, ஜூன் 1993-ஆம் ஆண்டு அரசிதழில் வெளியிடப்பட்டது. இந்த 1992ம் ஆண்டு சட்டம் அனைத்து மாநிலங்களுக்கும் ஓர் ஆண்டு காலம் கால அவகாசம் வழங்கியது. அதற்குள் ஒவ்வொரு மாநிலமும், யூனியன் பிரதேசமும் தங்கள் சட்டங்களை தேவையான அளவு திருத்துவதன் மூலமோ மாற்றுவதன் மூலமே மத்திய சட்டத்தின் விதிகளை தங்கள் சட்டங்களில் ஏற்படுத்தி அதன் மூலம் நகர உள்ளாட்சி அரசாங்கங்களை அமைத்திட வேண்டும் என இச்சட்டம் கூறுகிறது. உதாரணமாக பஞ்சாப் நகராட்சிகள் சட்டம் 1911 மாற்றப்பட்டு பஞ்சாப் நகராட்சிகள் மசோதா 1998 கொண்டு வரப்பட்டதை கூறலாம்.

74-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தில் நகர உள்ளாட்சி அமைப்புகளில் மூன்றடுக்கு முறை பரிந்துரைக்கப்பட்டது. அவை பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள். இவற்றைப் பற்றி விரிவாக காணலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

கிராம சபை கூட்டங்கள் ஆண்டிற்கு ஆறு முறை ஜனவரி 26 குடியரசு தினம், மார்ச் 22 உலக தண்ணீர் தினம், மே 1 உழைப்பாளர் தினம், ஆகஸ்ட் 15 சுதந்திர தினம், அக்டோபர் 2 காந்தி ஜெயந்தி, மற்றும் நவம்பர் 1 உள்ளாட்ச்சிகள் தினம் ஆகிய நாட்களில் நடத்தப்படுகிறது.

பேரூராட்சிகள்

ஒரு பகுதி, ஊரக பகுதியிலிருந்து நகர பகுதியாக உயரக்கூடிய நிலையில் இருந்தால், அப்பகுதி பேரூராட்சி என அழைக்கப்படும். இது நகராட்சிக்கும், ஊராட்சிக்கும் இடைப்பட்ட ஓர் நிலையாகும். இதன் மக்கள் தொகை 5,000-க்கு மேலும் 15,000-க்கு மிகாமலும் இருக்கும். அதன் வருவாய் ஈட்டலும், வருவாய் ஆதாரங்களும் ஊராட்சிக்கென்று அரசு நிர்ணையித்துள்ள வரம்பை விட அதிகரித்து இருக்கும். ஒரு பேரூராட்சியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 3க்கு குறையாமலும் அதே சமயத்தில் 15-ஐ விட மிகாமலும் அம்மாநில சட்டம் கூறும் எண்ணிக்கையில் இருக்கும். இந்த பேரூராட்சி எந்த சட்டமன்ற தொகுதியின் எல்லைக்குள் வருகிறதோ அந்த சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாநில அரசால் நியமிக்கப்படும் நகராட்சி நிர்வாகத்தில் அனுபவம் பெற்ற அல்லது சிறப்பு நிபுணத்துவமுடைய இரண்டு உறுப்பினர்கள் பேரூராட்சியின் தேர்ந்தெடுக்கப்படாத உறுப்பினர்களாக இருப்பர். இந்த நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பேரூராட்சி கூட்டங்களில் கலந்து கொண்டாலும் வாக்களிக்கும் உரிமை கிடையாது. ஒரு பேரூராட்சியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக இருக்கும்.

இந்த பேரூராட்சியின் பகுதிகள் பல சிறு தொகுதிகளாக பிரிக்கப்பட்டு, அவை வார்டுகள் என அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு வார்டும் ஒரு வார்டு உறுப்பினரை தேர்ந்தெடுக்கும். அந்த பேரூராட்சியின் பட்டியலினத்தவர் மற்றும்

பதினோராவது அட்டவணை (பிரிவு 243G)

- விவசாயம் மற்றும் விவசாய விரிவாக்க பணிகள்
- நில மேம்பாடு, நிலச்சீர்த்திருத்தங்களை அமல்படுத்துதல், நிலங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் பேணுதல்.
- சிறிய நீர் பாசனங்களை நிர்வகித்தல், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல்
- கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் பால் பண்ணை
- மீன் வளம்
- சமூக காடுகள் மற்றும் பண்ணை காடுகள்
- சிறு காடுகளின் மூலமான உற்பத்தி
- சிறு தொழில்கள், உணவு பதப்படுத்தும் தொழில்கள் உட்பட.
- காதி, கிராமம் மற்றும் குடிசைத் தொழில்கள்
- ஊரக வீட்டு வசதி
- குடிநீர்
- எரிபொருள் மற்றும் கால்நடை தீவனம்
- சாலைகள், சிறுபாலங்கள், பெரிய பாலங்கள், படகு, நீர்வழிகள்.
- ஊரக மின்மயமாக்கல் மற்றும் மின் விநியோகம்
- மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்
- வறுமை ஒழிப்பு திட்டங்கள்
- தொடக்க கல்வி மற்றும் மேல் நிலைக் கல்வி
- தொழில்நுட்ப பயிற்சி மற்றும் தொழில் கல்வி
- நூலகங்கள்
- கலாச்சார நடவடிக்கைகள்
- சுகாதாரம் மற்றும் துப்புரவு; மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் மருந்தகங்கள் உட்பட
- குடும்ப நலன்
- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு
- சமூக நலம்; மாற்றுத்திறனாளிகள் மற்றும் மன நலம் குன்றியோர் நலம் உட்பட
- நலிவடைந்த பிரிவினரின் நலம் குறிப்பாக பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர்.
- பொது விநியோக முறை
- சமுதாய சொத்துக்களை நிர்வகித்தல்

பழங்குடியினர் எண்ணிக்கைக்கும் ஒட்டு மொத்த மக்கள் தொகை எண்ணிக்கைக்கும் உள்ள விகிதாசாரத்தின் அடிப்படையில் பட்டியலினத்தவருக்கும் பழங்குடியினருக்கும் வார்டுகள் இட ஒதுக்கீடு அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. மேலும் ஒட்டு மொத்த வார்டுகள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு இட ஒதுக்கீடு அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது.

பேரூராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒருவரை தலைவராகவும், மற்றொருவரை துணைத்தலைவராகவும் பேரூராட்சியின்கூட்டத்தில்தேர்ந்தெடுக்கின்றனர். இந்த கூட்டத்தை துணை ஆணையர் கூட்டுகிறார்.

ஒவ்வொரு பேரூராட்சிக்கும் கட்டாயம் செய்ய வேண்டிய பணிகளாக குடிநீர் வழங்கல், வடிகால், தூய்மை போன்றவை உள்ளன. ஒவ்வொரு பேரூராட்சிகளுக்கும் அரசு ஒரு செயல் அதிகாரியை நியமிக்கிறது.

நகராட்சி

மக்கள் தொகை 15,000-க்கு மேலும் மூன்று இலட்சத்திற்கு கீழும் உள்ள சிறு நகரப் பகுதிகளில் நகராட்சிகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதே போல் அதன் வரி வருவாய், மற்ற வருவாய்கள் அரசு நிர்ணயித்த அளவுக்குள் இருத்தல் வேண்டும். இதை அவ்வப்போது அந்தந்த மாநிலங்கள் தீர்மானிக்கும்.

நகராட்சி நிலை	மக்கள் தொகை
வகையினம் அ	ஒரு லட்சமும் அதற்கு மேலும்
வகையினம் ஆ	50,000 முதல் 1 லட்சம் வரை
வகையினம் இ	50,000 க்கு கீழ்

நகராட்சியின் வகையினம் அ-ல் 20 எண்ணிக்கைக்கு குறையாமலும், 50 எண்ணிக்கைக்கு மிகாமலும் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் இருப்பர். அதேபோல் வகையினம் ஆ-ல் 15 முதல் 30 வரை, வகையினம் இ-ல் 10 முதல் 15 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இருப்பர். சட்ட மன்ற தொகுதி எல்லைக்குள் வருகின்ற நகராட்சிகளில், அந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவி வழி உறுப்பினராக நகராட்சியில் இருப்பார். மூன்று உறுப்பினர்கள் வரை அரசாங்கம் நகர சபைக்கு நியமிக்கலாம். தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தலில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பங்கு பெற்று வாக்களிக்க முடியாது. நகராட்சி உறுப்பினர்கள் மக்களால் ரகசிய வாக்கெடுப்பு முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

ஒட்டுமொத்த நகராட்சி பகுதியும், எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமோ அத்தனை வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பட்டியலில் நகராட்சி எல்லைக்குள் உள்ளவர்களே பொதுவாக நகராட்சியின் வாக்காளர்களாக எடுத்துக் கொள்ளப்படுவர். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சின்னங்கள் அக்கட்சியின் வேட்பாளருக்கு வழங்கப்படும்.

தேர்தல் முடிவுகள் வெளியான 14 நாட்களுக்குள் துணை ஆணையர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டி அவர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்து தலைவர் மற்றும் துணைத் தலைவரை தேர்ந்தெடுக்க வகை செய்ய வேண்டும். நகர பஞ்சாயத்துகளைப் பொறுத்தவரையிலும் ஓர் நகரப் பகுதியில் உள்ள பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரின் மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதாச்சாரத்தில் அடிப்படையிலே தனி தொகுதிகள் நகர பஞ்சாயத்துகளில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. மேலும் கூடுதலாக பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினப் பெண்கள் உட்பட மொத்த இடங்களில் 30 சதவிகிதம் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் தொகை மூன்று லட்சத்திற்கு குறைவாக உள்ள நகராட்சிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட வார்டுகளை இணைத்து வார்டு குழுக்கள் ஏற்படுத்தப்படும். அந்தந்த வார்டுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், வார்டு குழு உறுப்பினர்களாக இருப்பர். ஒவ்வொரு நகராட்சியிலும் நிலைக்குழுக்கள் ஏற்படுத்தப்படும். இதில் நகராட்சியின் தலைவர் மற்றும் துணை தலைவர், மேலும் வகையினம் அ-வாக இருந்தால் நான்கு உறுப்பினர்களையும் வகையினம் ஆ-வாக இருந்தால் இரண்டு உறுப்பினர்களையும் நகராட்சி உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுப்பர். இந்த நிலைக்குழுவின் பதவிக்காலம் இரண்டரை ஆண்டுகளாகும். நகராட்சியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள். தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி, சட்டப்படி செயல்படாத போது, அது பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

நகர சபை ஆண்டுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும். அக்கூட்டத்திற்கு நகர சபை தலைவர், அவர் இல்லையெனில் நகர சபை துணைத் தலைவர் தலைமை ஏற்பர். நகர சபை தன் பணிகளைச் செய்ய பல்வேறு துணைக் குழுக்களை அமைக்கிறது. இதில் நகர்மன்ற உறுப்பினர்கள் உறுப்பினர்களாக இருப்பர். அவர்கள் பிரச்சனைகளை ஆராய்ந்து, தீர்வுக்கான பரிந்துரைகளை அளிப்பர். இந்த குழுக்கள் இரண்டு வகைப்படும். அவை சட்ட பூர்வ குழுக்கள், சட்ட பூர்வமற்ற குழுக்கள் என இரு வகைப்படும். சிறப்புத் தேவைகளுக்காக நகராட்சி அமைப்புகள் சில துணைக் குழுக்களை ஏற்படுத்தலாம் .

நகர் மன்றம்

நகர்மன்ற சட்டத்தின்படி தேர்வு செய்யப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்களில் ஒருவர் நகர்மன்றத் தலைவராக ஒரு

மாதத்திற்குள் தேர்வு செய்யப்படுகின்றார். நகர் மன்றம் தேர்தல் முடிந்தவுடன் உருவாக்கப்படுகின்றது. இந்த நகர்மன்ற தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக இருக்கிறது. நகர்மன்றம் ஒன்று அல்லது இரண்டு துணை தலைவரைத் தேர்வு செய்கின்றது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் உள்ள நகர்மன்றத் தலைவர்கள் பயணப்படி மற்றும் மாத ஊதியம் பெறுகின்றனர்.

நகர் மன்றக் கூட்டங்களைக் கூட்டுவதும், அதற்கு தலைமை வகிப்பதும் நகர் மன்றத்தலைவரின் பணியாகும். மேலும் தவறு செய்யும் நகர்மன்ற உறுப்பினர் மேல் ஒழுங்கு நடவடிக்கையையும் எடுக்கிறார். நகர் மன்றத்தின் முதன்மை பேச்சாளர் நகர்மன்றத் தலைவர் ஆவர், அரசுடன் தகவல் தொடர்பும் மற்றும் அரசு விழாக்களில் பங்கு கொள்வதும் இவருடைய பணியாகும்.

ஒவ்வொரு நகர்மன்றத்திற்கும் ஒரு நிர்வாக அலுவலர் உள்ளார். அவரை மாநில நிர்வாகம் நியமனம் செய்கின்றது. நகர்மன்ற அலுவலர்கள் அந்த நிர்வாக அலுவலரின் கீழ் பணிபுரிபவர்களாக உள்ளனர்.

நகர்மன்றத்தை ஆளுகின்ற அமைப்பு நகர்மன்ற குழு ஆகும். இது நகர நிர்வாகத்திற்கு பொறுப்புள்ளது. மேலும் சட்டம் இயற்றுவது, நகர்மன்ற கூட்டத்தின் நேரம், கூட்டத்தை நடத்துவது போன்ற முடிவுகளை நிர்வாக அலுவலர் மேற்கொள்கிறார்.

நகர்மன்ற உறுப்பினர்கள் குடிமக்களின் குறைகளைக் கேட்டறிய வேண்டும், பொதுமக்களுடன் தொடர்பில் இருத்தல், நகராட்சி அலுவலர்கள் மீதான பொதுமக்களின் புகார்களை உரிய நிர்வாகத் தலைமையிடம் முறையிடல், நகர்மன்ற கூட்டத் தொடரில் மக்களின் குறைகளை எடுத்துரைப்பதும் இவர்களின் பணியாகும்.

நகர்மன்றத்தின் பணிகள், பொறுப்புகள் இந்திய அரசமைப்பில் 12-வது அட்டவணையில் கூறப்பட்டுள்ளது. 74-வது அரசமைப்பு சட்டத்திருத்தம், ஒரு மாவட்டம் முழுமைக்கும் ஒரு வளர்ச்சித் திட்ட வரைவை ஏற்படுத்தும் நோக்கில் மாவட்ட திட்டக்குழுவை ஏற்படுத்தியது. இதன் மூலம் மாவட்டத்திற்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்படுகிறது. உள்ளாட்சி மற்றும் நகராட்சியில் உருவாக்கப்படும் திட்டத்தினை ஒன்று சேர்ப்பது குழுவின் பணி.

1992-ஆம் ஆண்டு சட்டத்தின் படி மாவட்ட திட்டக்குழுவில் மொத்த உறுப்பினர்களில் ஐந்தில் நான்கு பங்கிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும். இந்த உறுப்பினர்களை மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் அந்த மாவட்டத்தில் உள்ள நகர்மன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த எண்ணிக்கை அந்த மாவட்டத்தின் நகர்ப்புற மக்கள் தொகை மற்றும் கிராமப்புற மக்கள் தொகையின் விகிதாச்சார அடிப்படையில் அமைந்திருக்கும்.

நகராட்சி அமைப்புகள் தனது பணிகளை மேற்கொள்வதற்கான செலவினங்களுக்கு வரி, கட்டணம் மூலம் வருவாய் ஆதாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி அமைப்புகள் தனது நிதி ஆதாரங்களை உயர்த்திகொள்ள பல வகை வரி விதிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன (உதாரணம் – நிலவரி, கட்டட வரி, விளம்பரத்தின் மீதான வரி, நெடுச்சாலை சுங்க வரி, சாலைவரி முதலானவை). 74-வது சட்ட திருத்தத்தின் படி, மாநில அரசுகள் இந்த சட்ட திருத்தத்தை தங்கள் மாநிலய சட்டத்தில் இனைத்துக் கொண்ட ஒரு வருட காலத்திற்குள், மாநில நிதிக் குழுவை அமைத்திடல் வேண்டும்.

மாநில நிதிக்குழு கீழ்கண்டவற்றில் பரிந்துரைகளை அளிக்கலாம்

அ. மாநில அரசாங்கத்திற்கும் மாநகராட்சிக்குமிடையே வரி, சுங்க சட்டங்கள் போன்றவற்றின் மூலமாக வரும் வருவாயை பகிர்ந்தளித்தல்.

ஆ. அந்த வருவாயை மாநிலத்திலுள்ள நகராட்சியின் பல நிலைகளுக்கும் ஒதுக்கீடு செய்தல்.

இ. நகராட்சிகளின் வரி வகைகள், சுங்க கட்டணங்கள் போன்றவற்றை நிர்ணயம் செய்தல்.

அரசமைப்பின் 12–வது அட்டவணை:
நகராட்சியின் அதிகாரமும் – பொறுப்புகளும்.

- நகரத் திட்டங்கள், நகரத்தை வடிவமைத்தல்.
- கட்டடங்களை கட்டுதல், நிலத்தை பயன்படுத்துதலை ஒழுங்குமுறைபடுத்துதல்.
- பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு திட்டமிடல்
- சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல்.
- வீட்டு உபயோகத்திற்கு குடிநீர் விநியோகம் செய்தல்.
- பொதுச்சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ளுதல்.
- தீயணைப்பு பணிகள்.
- நகர்புற காடு மற்றும் சுற்றுப்புறச்சூழலை பாதுகாத்தல்.
- சமூகத்தில் நலிவடைந்தோர், ஊனமுற்றோர், மனநிலை குன்றியவர்கள் நலன்களை பாதுகாத்தல்.
- குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல், தரத்தை உயர்த்துதல்.
- நகர்புற வறுமை ஒழிப்பு.
- பூங்காக்கள்,தோட்டங்கள்,விளையாட்டு மைதானங்கள் போன்ற நகர்புற வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்.
- கல்வி மற்றும் கலாச்சார அம்சங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- இடுகாடு மற்றும் சுடுகாடு மைதானங்களை பராமரித்தல்.
- கால்நடைக்கான குடிநீர் குட்டைகள் அமைத்தல் மிருகவதையை தடைசெய்தல்.
- பிறப்பு, இறப்பு ஆகியவற்றின் பதிவுடன் கூடிய மிக முக்கியமான புள்ளி விவரங்களைத் சேகரித்தல்.
- பேருந்து நிறுத்துமிடங்கள், கழிவறை, சாலை விளக்கு போன்ற பொது வசதிகளை செய்து கொடுத்தல்.
- வதைகூடங்கள் மற்றும் தோல் பதனிடும் தொழில்களை ஒழுங்குபடுத்துதல்.

ஈ. மாநிலங்களுக்கு நிதி வழங்க உதவும் மானியங்கள்.

உ. நகராட்சியின் நிதி நிலைமையை மேம்படுத்தத் தேவைப்படும் நடவடிக்கைகள்.

ஆனால், யதார்த்தத்தில், மாநில சட்டம் எந்தெந்த பணிகளை நகராட்சிகள் செய்யலாம் என வரையறுத்திருக்கிறதோ, அந்த பணிகளை மட்டுமே நகராட்சிகள் செய்கின்றன. மாறி வரும் அரசியல் சூழ்நிலைகள் மற்றும் நாட்டின் தேவைகளின் வழியே காணும் போது நகராட்சியின் பணிகள் மீதான அந்த கட்டுப்பாடு சரியான ஒரு செயல்பாடாகக் கருத முடியவில்லை. சிறப்பு தேவை செயலாண்மைகளை ஏற்படுத்துவதன் மூலம் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ உள்ளாட்சியின் பணிகளை தனதாக்கி கொள்ளும் மாநில அரசாங்கத்தின் போக்கு அதிகரித்து வருகிறது.

மாநகராட்சி

இந்தியாவில் உள்ள நகர உள்ளாட்சி அமைப்பின் உச்ச அமைப்பு மாநகராட்சி ஆகும். பாராளுமன்ற சட்டத்தின் மூலமாகவும், மாநில சட்டமன்ற மற்றும் யூனியன் பிரதேசத்தின் சட்டம் மூலம் பெரிய நகரங்களில் மாநகராட்சிகள் நிறுவப்படுகின்றன. மக்கள்தொகை அடிப்படை, மற்றும் வருமான

அடிப்படையில் நகரங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் மாநகராட்சி அமைப்புகள் மும்பை, சென்னை மற்றும் கொல்கத்தாவில் உருவாக்கப்பட்டன.

மாநகராட்சி அமைப்பு மக்கள்தொகையின் அளவு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியைக் கொண்டு நகரத்தை நிர்வகிக்கும் தன்மை மற்றும் வயதுவந்தோர் வாக்கு பெண்கள் மற்றும் பட்டியலினத்தவர் / பழங்குடியினர் (SC/ST) மக்களுக்கு இட ஒதுக்கீடுடன் விகிதாச்சார அடிப்படையில் பிரதிநிதிகள் தேர்தெடுக்கப்படுகின்றனர். மாநகராட்சி அமைப்பு ஓர் சட்டப்பூர்வமான நிர்வாக அமைப்பு ஆகும்.

மாநகராட்சி மன்றம் மற்றும் நிலைக்குழுக்கள் இரண்டும் விவாதிக்கும் அமைப்பாகவும் செயலாக்க அமைப்பாகவும் உள்ளன.

நிலைக்குழுவின் பணியானது மாநகராட்சிக்கு துணையாக செயல்படுவது. நகராட்சி ஆணையின் பரிந்துரையின் அடிப்படையில் தான் அனைத்து திட்டங்களும் நகராட்சி குழுவில் நிறைவேற்றப்படுகின்றன. ஆணையர் மாநகராட்சியின் தலைமை நிர்வாகி ஆவார். மாநகராட்சி மன்றத்தால் இயற்றப்படும் கொள்கைகளை செயல்படுத்துவது அவருடைய தலையாயப் பொறுப்பாகும்.

இந்தியாவில் உள்ள மாநகராட்சி அமைப்புகள் மும்பையில் அமைந்த மாநகராட்சி அமைப்பை போன்றவை, மாநகராட்சி அமைப்பின் பதவிகாலம் 5 ஆண்டுகள் ஆகும். 74-வது சட்டத்திருத்தம் வார்டு குழுக்களை ஏற்படுத்தியது. மாநகராட்சியின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வார்டுகளுக்கு அவை பொறுப்பாக இருக்கும். இதன் தலைவர் ஓராண்டுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றார். அவர் மீண்டும் தலைவர் தேர்தலில் போட்டியிடலாம். மாநகராட்சியில் உள்ள வார்டு உறுப்பினர்கள் கண்காணிப்பில் தான் குடிநீர் விநியோகம், துப்பரவுபணி, சாக்கடை இணைப்பு, தெருக்களில் நிறைந்துள்ள நீரை வெளியேற்றுவது மற்றும் திடக்கழிவுகள் சேமிப்பதும், அகற்றுவதும் தெருவிளக்கு அமைத்தல், பூங்காக்கள் அமைத்தலும் போன்றவை நடைபெறுகின்றன.

மாநகராட்சியில் நிலைக்குழு உருவாக்கப்பட்டு அதில் மேயர், துணை மேயர், வார்டு உறுப்பினர்கள் இடம்பெறுவர். மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் தமக்குள்ளிருந்து ஒருவரை துணை மேயராக தேர்ந்தெடுக்கின்றனர். மேயர் நிலைக்குழுவின் தலைவர் ஆவார். மாநகராட்சி குடிநீர் விநியோகம், கழிவு நீரகற்றல் போன்றவற்றிற்காகவும் குழுக்களை அமைக்கிறது. ஒவ்வொரு குழுவிலும் 3-க்கு குறையாமலும் 5-க்கு மிகாமலும் இருப்பர்.

செயல்பாடு

நகரங்கள் எதிர்கொள்ளும் ஐந்து வகை சவால்கள்

(அ) மாநகராட்சிகளில் உள்ள பொதுப் பயன்பாடு வசதிகளான சாலைகள், நடைபாதைகள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பாதாள சாக்கடை திட்டங்கள் போன்றவற்றில் நவீன காலத்திற்கு ஏற்றவாறு திட்டமிடுதலில் குறைபாடுகள்.

(ஆ) நிதிசார் பொறுப்புடைமை மற்றும் நிதி ஆதாரங்கள் வலுவற்று இருத்தல்.

(இ) பணியாளர் எண்ணிக்கை, திறமை மற்றும் போட்டியிடும் தன்மை, நிர்வாக வடிவமைப்பு போன்ற மனிதவள மேலாண்மை தொடர்புடையவைகள் பலவீனமாக இருத்தல்.

(ஈ) அதிகாரமற்ற மேயர்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள், நகராட்சிகள் மற்றும் மாநில அரசின் துறைகளில் ஆளுகைகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருத்தல்.

(உ) குடிமக்களின் முறையான பங்கேற்பிற்கு வழியின்மை மற்றும் வெளிப்படை தன்மையற்ற நிதி செயல்பாடு.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 248 06/12/2022 13:13:10

இந்தக்குழுவின் பதவிக்காலம் ஓராண்டுகள் ஆகும். 74-வது சட்டத்தித்தின் மூலம் நிதி ஆதாரங்கள் மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்டுள்ளன. இந்திய அரச மைப்பின் 12-வது அட்டவணை மாநகராட்சி மேற்கொள்ள வேண்டிய 18 பணிகளை பட்டியலிட்டுள்ளது. 73-வது சட்டத்திருத்தை போல 74-வது சட்டதிருத்தத்திலும் நகர திட்டமிடலுக்கு குழு உருவாக்கப்பட்டுள்ளது.

நகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பெருநகர எல்லைக்குள் உள்ள பஞ்சாயத்துத் தலைவர்களின் மொத்த எண்ணிக்கையில் இரண்டில் மூன்று பங்கிற்கு குறையாத எண்ணிக்கையில், தங்களுக்குள் இக்குழுவின் உறுப்பினர்களை இவர்களே தேர்ந்தெடுக்கின்றனர்.

அனைத்து மாநகராட்சியிலும் மேயர் மற்றும் துணைமேயர் இடம் பெற்றிருப்பார்கள். சில மாநிலங்களில் மேயர் மக்களால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்படுவர். மாநகராட்சி மேயர் மன்ற கூட்டத்திற்கு தலைமை தாங்குகிறார். அமைதியையும், ஒழுங்கமைப்பையும் நிலை நாட்டுகிறார். மன்ற கூட்டங்களில்தவறாகநடக்கும்உறுப்பினர்களை நீக்கம் செய்யும் அதிகாரத்தையும் மேயர் பெற்றுள்ளார். மன்ற கூட்டங்களில் சமமான வாக்குகள் பெற்றிருக்கும் நிலையில் மேயர் தீர்மான வாக்கை அளிக்கமுடியும். ஆணையர் மாநகராட்சியின் தலைமை நிர்வாகி ஆவார். மாநகராட்சி ஆணையர் இந்திய நிர்வாக பணியை (IAS) சார்ந்தவர் ஆவார். மாநகராட்சி ஆணையரை நியமிக்கும் அதிகாரம் மாநில அரசிடம் இருப்பது மிகுந்த சர்ச்சைக்குரிய ஒன்றாகவே உள்ளது.மாநகராட்சி ஆணையரின் பதவிக்காலம் மூன்றாண்டுகள். இந்த கால அளவை மாநில அரசாங்கம் விரும்பினால் நீடிக்கலாம். மாநகராட்சி சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசின் முழு அதிகாரம் நிறைந்தவர் ஆணையர் ஆவார்.

12.7 தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகள்

73-வது மற்றும் 74-வது சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழகத்தில் தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது, தமிழகத்தின் உள்ளாட்சி அரசாங்கம் பற்றி சுருக்கமாக பார்க்கலாம்.

73-வது சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழக அரசாங்கத்தின் அரசமைப்பு கடமைகளாக, அதிகாரத்துடன் கூடிய கிராம சபைகளை அனைத்து கிராமங்களிலும் உருவாக்குதல். பொதுவான மேற்பார்வை மற்றும் பஞ்சாயத்தின் வருடாந்திர திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் முதலான அதிகாரங்கள் பஞ்சாயத்து, மூன்று அடுக்குகளை கொண்ட உள்ளாட்சி அமைப்பை உருவாக்குதல் மாவட்ட பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம், கிராம பஞ்சாயத்து போன்றவை உள்ளன.

இந்த உள்ளாட்சி அமைப்பில் பெண்கள், (பட்டியலினத்தவர்/பழங்குடியினர்) மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடும், வரி விதிக்கும் அதிகாரமும், நிதி ஆதாரம் பெறவும் வழிவகை செய்யப்பட்டன. மேலும் மாநில அரசிடமிருந்து நிதியைப் பெற்று பயன்படுத்துவதற்கு மாநில நிதி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது

உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாட்டில் 12,620 கிராம பஞ்சாயத்தும், 385 ஊராட்சி ஒன்றியமும், 30 மாவட்ட பஞ்சாயத்தும் உள்ளது.

74-வது சட்டத்திருத்தத்தின் மூலம் அதிகார பகிர்வு உருவாக்கப்பட்டு வரிவிதிக்கும் அதிகாரம், மாநில அரசுடன் வருமான பகிர்வு, சீரான தேர்தல் நடத்துதல், பெண்கள் மற்றும் பட்டியலினத்தவர்/ பழங்குடியினர் இடஒதுக்கீடு உருவாகின. மேலும் நாடு முழுவதும் ஒரே மாதிரியான நகர அமைப்பு உருவாகவும் வழி செய்தன.

73-வது சட்ட திருத்தம் படி, மாற்றங்கள் கொண்டு வருவதற்காக, தமிழ்நாட்டில் ஏற்கனவே அமலில் இருந்த தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1958 மாற்றப்பட்டு தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1994 புதிதாக இயற்றப்பட்டது. பின்பு இது 1996-ஆம் ஆண்டு திருத்தப்பட்டது. இந்த திருத்தத்தின் மூலம் வளர்ச்சிக்கான திட்டங்களை ஏற்படுத்த, மாவட்ட திட்டக்குழு, மாநில தேர்தல் ஆணையம் மற்றும் மாநில நிதி ஆணையம் போன்றவை உருவாக்கப்பட்டன.

இந்த 1994 சட்டத்தின் படி தமிழ்நாட்டில் முதலில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் மொத்தமாக 1,17,000 பிரதிநிதிகள் பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நகர உள்ளாட்சி அரசாங்கம்

74-வது சட்டத்திருத்தம் பல்வேறு மாநிலங்களில் நகர உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்க வழி செய்தது. தமிழகத்தில் நகர உள்ளாட்சி அமைப்புக்கான தேர்தல் 1996, 2001, மற்றும் 2011-ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது.

12.8 தற்கால பிரச்சனைகள்

உள்ளாட்சி அமைப்பில் உள்ள பல பிரச்சனைகளை நிபுணர்கள் அவ்வப்போது சுட்டிக்காட்டியுள்ளார். நிபுணர்கள் சுட்டிக்காட்டிய பிரச்சனைகளை பின்வரும் பகுதிகளில் காணலாம். முதலில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு பொறுப்புகளை அதிகப்படுத்தப்படவேண்டும். இதற்கு முன் அவை மாநில அரசின் பொறுப்புகளாக இருந்தது.

பல்வேறு நிலைகளில் உள்ள அரசாங்கங்களின் திறன் மற்றும் அவர்களின் கட்டுப்பாட்டு எல்லை போன்றவற்றை கருத்தில் கொண்டு முழு அரசு இயந்திரம் வகைப்படுத்தப்பட வேண்டும். இரண்டாவதாக, கிராம நீதிமன்றங்கள், காவல் துறையானது முழுமையாக மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலைமையில் இது சாத்தியப்படாது. மூன்றாவதாக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல விதமான பணிகள் கொடுக்கப்பட்டுள்ளன, அவற்றில் பல மாநில அரசின் துறைகளோடு தொடர்புடையவை.

சுருக்கமாக, சொன்னால் 73-மற்றும் 74-வது சட்டத்திருத்தம் பல சீர்த்திருத்தங்களை உள்ளாட்சி அரசாங்கத்தில் கொண்டுவந்துள்ளது. ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், சீர்திருத்தங்களுக்கு முன்பு ஆங்கிலேயர்கள் உருவாக்கிய விதத்தில் இருந்தன. பல புதுமையான மாற்றங்கள் இந்த சட்ட திருத்தங்களினால் கொண்டு வரப்பட்டன. இந்தியாவில் இதுவரை 18 மாநிலங்களில் மட்டும் தான் தங்களது சட்டசபையில் உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்த இசைவு தந்துள்ளன. மேலும் சில மாநில அரசாங்கங்கள் சட்டத்திருத்தத்திற்கு பிறகும், உள்ளாட்சி அமைப்பு உருவாக்க சட்டம் இயற்றிய பின்னும் பல பிரிவுகளை சரிவர செயல்படுத்தவில்லை, மேற்கூறிய காரணங்களால் உள்ளாட்சி அமைப்பில் உள்ள சிக்கல்கள் உள்ளன. அவை அகற்றபடாவிட்டால் 73-வது மற்றும் 74-வது சட்டத்திருத்தத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியாது.

> உங்களுக்குத் தெரியுமா?
>
> **பஞ்சாயத்து ராஜ்(1959–2018)**
>
> தமிழ்நாடு நகர்ப்புற சட்டங்கள் (நான்காவது சட்டத்திருத்தம்) மசோதா 2018 மற்றும் தமிழ்நாடு பஞ்சாயத்துகள் (இரண்டாவது சட்டத்திருத்தம்) மசோதா 2018 இரண்டும் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்பு அதிகாரங்களின் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்தது.

> உங்களுக்குத் தெரியுமா?
>
> 21 மாநகராட்சிகளும், 152 நகராட்சிகளும், 561 பேரூராட்சிகளும் தமிழகத்தின் நகர உள்ளாட்சி அமைப்புகளாக உள்ளன.

கலைச்சொற்கள்: Glossary

மாநகராட்சி: மாநகராட்சி என்பது பெருநகரத்தில் இயங்கும் உள்ளாட்சி அரசாங்கத்துக்கான சட்டப்படியான சொற்பதம் ஆகும். பத்து லட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட பெருநகரங்களில், இவ்வகையான உள்ளாட்சி அரசாங்கம் செயல்படும்.

நகராட்சி: நகராட்சி என்பது நகரங்களில் இயங்கும் உள்ளாட்சி அரசாங்கத்துக்கான சட்டப்படியான சொற்பதம் ஆகும். இதன் அதிகார எல்லையையும், அதிகார வரம்பையும்

www.tnschoolbooks.in

மாநில மற்றும் மத்திய அரசின் சட்டங்கள் தீர்மானிக்கின்றன.

பாளைய வாரியங்கள்: பாளைய மத்திய அரசின் நிர்வாகத்திற்கு உட்பட்ட ராணுவ பகுதிகளாகும். அவை பாதுகாப்பு அமைச்சத்தின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ளன. இதன் நிர்வாக அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், நியமன உறுப்பினர்கள் மற்றும் பதவி வழி தலைவர்கள் இடம் பெறுவர். இதனை பாளைய வாரியச் சட்டம் 2006–ஆம் தீர்மானிக்கிறது.

பேரூராட்சி: ஒரு பேரூராட்சி 20000 முதல் 25000 வரையிலான மக்கள் தொகையை கொண்ட சிறிய நகரமாகும். பஞ்சாயத்துராஜ் நிர்வாக அமைப்பின் மூலம் இந்த அமைப்பு உருவாக்கப்படுகிறது.

பஞ்சாயத்து ராஜ்: பஞ்சாயத்து ராஜ் என்பது 1992–ஆம் ஆண்டின் சட்டத்திருத்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட உள்ளாட்சி அரசாங்கத்தை குறிக்கும் சொற்பதமாகும்.

கிராம சபை: கிராம சபை என்பது கிராம பஞ்சாயத்தின் வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றுள்ள அனைவரையும் உள்ளடக்கிய அமைப்பு

மேயர்: ஒரு பெருநகரத்தை ஆள்கின்ற குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்.

வார்டு: ஒரு உள்ளாட்சி அமைப்பின் நில பகுதிகள் வார்டுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வார்டும் ஒரு உறுப்பினரை கொண்டிருக்கும். அவர் அந்த வார்டின் பிரதிநிதியாவார்.

கவுன்சிலர்: சபையின் உறுப்பினர்

நகர்பாலிகா: இந்தியாவில் நகர்பாலிகா என்பது 1,00,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள நகர உள்ளாட்சியை நிர்வகிக்கும் அமைப்பு.

இரட்டையாட்சி: சுதந்திரமான இரு அதிகாரம் பெற்ற அமைப்புகளால் நடத்தப்படும் அரசாங்கம். (இந்தியாவில் 1919–ஆம் ஆண்டு முதல் 1935–ஆம் ஆண்டு வரை நடைபெற்றது)

மதிப்பிடுதல் (Evaluation)

சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்

1. எப்பொழுது சென்னை மாநகராட்சி உருவாக்கப்பட்டது?

   அ) 1870　　ஆ) 1882
   இ) 1687　　ஈ) 1992

2. எப்போது ரிப்பன் பிரபு தீர்மானம் ஏற்கப்பட்டது?

   அ) 1992　　ஆ) 1858
   இ) 1882　　ஈ) 1870

3. எதன்மூலம் இரட்டை ஆட்சி முதலில் ஏற்படுத்தப்பட்டது

   அ) இந்திய அரசாங்க சட்டம்1909　　ஆ) இந்திய அரசாங்க சட்டம் 1919
   இ) இந்திய அரசாங்க சட்டம் 1935　　ஈ) இந்திய அரசாங்க சட்டம் 1958

4. நகர்பாலிகா சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு

   அ) 1989　　ஆ) 1990
   இ) 1991　　ஈ) 1992

5) 73, மற்றும் 74 வது சட்டத்திருத்தத்தில் உள்ளாட்சி அமைப்பில் பெண்களுக்கு எவ்வளவு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது?

   அ) 45　　ஆ) 50　　இ) 20
   ஈ) தொகுதியில் பெண்களின் மக்கள் தொகையின் அடிப்படையில் வழங்கப்பட்டது

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 251　　06/12/2022 13:13:10

6. மாநில நிதி ஆணையத்தின் பொறுப்புகள்

அ) வரி வருவாய் மாநில அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புக்கும் பகிர்தல் தொடர்பான பரிந்துரை
ஆ) தேர்தல் குறித்த பிரச்சனையில் மாநில அரசுக்கு பரிந்துரைகள்
இ) நிதி நெருக்கடி நிலை பிரகடணம் குறித்து இந்திய குடியரசு தலைவருக்கு பரிந்துரைத்தல்
ஈ) மாநில அரசின் சட்டம் ஒழுங்கு நிதிநிலை குறித்து முதல்வருக்கு பரிந்துரைத்தல்

7. மாவட்ட திட்டக்குழு கீழ்வருவனவற்றால் உருவாக்கப்பட்டது

அ) 93-வது அரசமைப்பு சட்டத் திருத்தம்
ஆ) 73-வது அரசமைப்பு சட்டத் திருத்தம்
இ) 89-வது அரசமைப்பு சட்டத் திருத்தம்
ஈ) 94-வது அரசமைப்பு சட்டத் திருத்தம்

8. ஜவகர் ரோஜ்கர் யோஜ்னா

அ) வேலைவாய்ப்புக்கு உத்திரவாதமளித்தல் அழித்தல்
ஆ) பொதுத்துறை வங்கியில் கடன் பெறுதல்
இ) வீடு கட்டுதல்
ஈ) வெளிநாட்டில் வேலை பெறுதல்

9) கீழ் வரும் எந்த தேர்ந்தலில் அரசியில் கட்சிகளுக்கு பங்கு இல்லை?

அ) மாநகராட்சி மேயர் தேர்தல்
ஆ) நகராட்சி தேர்தல்
இ) பஞ்சாயத்துதலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் தேர்தல்
ஈ) மாவட்ட வார்டு உறுப்பினர் தேர்தல்

10) உள்ளாட்சி அமைப்பின் தந்தை என கருதப்படுவர் யார்?

அ) மேயோ பிரபு ஆ) ராபர்ட் கிளைவ்
இ) வாரன் ஹெஸ்டிங் ஈ) ரிப்பன் பிரபு

11) மாநிலங்களில் உள்ளாட்சி தேர்தலை நடத்துவது

அ) மாநில தேர்தல் ஆணையம் ஆ) இந்திய தேர்தல் ஆணையம்
இ) தலைமை தேர்தல் அதிகாரி ஈ) மாநில அரசாங்கம்

12) இந்தியா அரசமைப்பில் உள்ளாட்சி அரசாங்கம் குறித்த சட்டவிதிமுறைகள் யாவை?

அ) உறுப்பு 40, உறுப்பு 243 முதல் 243(O). உறுப்பு 243(P) முதல் 243 ZG
ஆ) உறுப்பு 300 உறுப்பு 300 A
இ) உறுப்பு 3 A, உறுப்பு 43A
ஈ) உறுப்பு 32, உறுப்பு 117(1)

13) அரசமைப்பு சட்டத்தின்படி மூன்று அடுக்குகளை கொண்ட பஞ்சாயத் ராஜ் அமைப்பினை பொருத்துக.

அ) கிராம பஞ்சாயத்து- இடைநிலை பஞ்சாயத்து-மாவட்ட பஞ்சாயத்து
ஆ) ஊராட்சி ஒன்றியம்- மாவட்ட பஞ்சாயத்து- கிராம பஞ்சாயத்து
இ) மாவட்ட பஞ்சாயத்து- கிராம பஞ்சாயத்து- இடைநிலை பஞ்சாயத்து
ஈ) கிராம பஞ்சாயத்து- நகர பஞ்சாயத்து-மாவட்ட பஞ்சாயத்து இடைநிலை பஞ்சாயத்து

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 252 06/12/2022 13:13:10

14) அ) **கூற்று:** 73 –வது திருத்தத்தின் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுததப்பட்டன..

ஆ) **காரணம்:** மக்களாட்சியானது உள்ளாட்சி அரசாங்கங்களின் மூலம் அடித்தட்டு மக்களை சென்றடைந்தது

அமைப்பு விளக்கம் (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

அ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது
ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.
இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது
ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

II பின்வரும் கேள்விகளுக்கு குறுகிய விடையளி

1) பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் படிநிலையில் குறுகிய நிலையில் உள்ள அமைப்பு எது?
2) கிராம சபை கூட்டம் வருடத்திற்கு எத்தனை முறை கூடுகிறது?
3) மாநகராட்சி மேயரின் பதவி காலம் என்ன?'
4) மாநில நிதி ஆணையத்தின் அதிகாரம் மற்றும் பணியினை விளக்குக.
5) பஞ்சாயத்து ராஜ் அமைப்பு உருவாக்க எந்த குழு பரிந்துரை செய்தது?
6) கிராம பஞ்சாயத்தின் நிதி ஆதாரங்கள் எவை?
7) இந்தியாவில் பஞ்சாயத் ராஜ் அமைப்பு தேவை என்பதற்கான இரண்டு காரணங்களை கூறு-
8) தமிழ் நாட்டில் எத்தனை மாநகராட்சிகள் உள்ளன?
9) கேளிக்கை வரி விதிப்பதும், வசூலிப்பதும் யார்?

III பின்வரும் கேள்விகளுக்கு சிறு குறிப்பு வரைக

1) பஞ்சாயத் ராஜ் அமைப்பின் மூன்று சிறப்பு தன்மைகள் கூறு
2) நகர பகுதியை வரையறு
3) உள்ளாட்சி அமைப்பின் கருத்தாக்கத்தை விளக்குக
4) இந்தியாவின் பெரு நகரங்களில் உள்ள முக்கிய பிரச்சனைகள் என்ன?
5) மகாசபாவின் அமைப்பினை விளக்குக
6) உள்ளாட்சி நிர்வாகத்தில் ஆங்கில ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் என்ன?

IV பின்வரும் கேள்விகளுக்கு விரிவான விடை எழுது

1) இந்தியாவின் பஞ்சாயத் ராஜ் அமைப்பு பற்றி விளக்குக
2) மாநகராட்சி மேயரின் அதிகாரம் மற்றும் பணியினை விளக்குக
3) 73 மற்றும் 74-வது சட்டத்திருத்தத்திற்கு பின் இந்திய உள்ளாட்சி அமைப்பின் வளர்ச்சியினை கண்டறிக
4) இந்தியாவின் உள்ளாட்சி அரசாங்கத்தின் வளர்ச்சியினை கண்டறிக

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 253 06/12/2022 13:13:10

www.tnschoolbooks.in

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Basu, Durga Das., 2013. Introduction to the constitution of India.
2. Pardeep Sachdeva. 2011. Local Government in India. Delhi: Pearson.
3. Burton Stein. 1994. Peasant State and society in medieval south India. Oxford and New York : Oxford University Press.
4. TamilNadu social development Report 2000.

Internet Sources

❖ TamilNadu State Election commission. Introduction. http://tnsec.tn.nic.in/about_us/introduction.html

❖ Wikipedia . Local Bodies in TamilNadu. https://wikipedia.org/wiki/Local_bodies_in_Tamil Nadu

ICT CORNER

அலகு12 உள்ளாட்சி அரசாங்கங்கள்

தமிழ்நாட்டில் உள்ள
கிராமங்கள் பற்றி கற்று
கொள்ளலாம் வாருங்கள்

படிகள்

உள்ளாட்சி அரசாங்கங்கள்

படி 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி "Village maps". பக்கத்திற்குச் செல்க.

படி 2: ஏதேனும் மாவட்டம் பற்றி அறிய "district" ஐ சொடுக்கி (உதாரணமாக கடலூர்) துணை மாவட்டங்கள் மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை அறிக. வலது பக்கத்தில் உள்ள "Map" ஐ சொடுக்கி செயற்கை கோள் பதிவை காண்க.

படி 3: "Sub–District" ஐ சொடுக்கி (உதாரணமாக விருத்தாச்சலம்) இத்துணை மாவட்டத்தில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கையை அறிந்து, தெரிந்துகொள்க. வலது பக்கத்தில் உள்ள 'map' ஐ சொடுக்கி தெரிந்துகொள்க.

படி 4: ஏதேனும் கிராமத்தை ஐ சொடுக்கி கிராமத்தின் வரை படத்தை அறிக.

உரலி :

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

இப்பக்கத்திற்கு தேவைப்பட்டால் Flash Player or Java Script ஐ அனுமதிக்கவும்

http://villagemap.in/tamil-nadu.html

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 254 06/12/2022 13:13:11

அலகு
13

சமூக நீதி



கற்றலின் நோக்கங்கள்

- சமூக நீதி என்ற கருத்தாக்கத்தின் பல்வேறு பரிணாமங்கள்
- சமூக நீதியின் முக்கியத்துவம்
- பகிர்ந்தளிப்பு நீதியின் பொருள் மற்றும் முக்கியத்துவமும் – சமூக படிநிலையில் இதன் தாக்கமும்.
- ஜான் ரால்சின் நியாயமான மற்றும் நேர்மையான சமுதாயம்
- தமிழகத்தில் சமூக நீதி இயக்கங்கள்
- உறுதியான நடவடிக்கை நேர்மறை பாகுபாடு பற்றிய கருத்தாக்கம் / அரசியல் கொள்கை
- சாதிப்பாகுபாடுகளும் அதன் பின் விளைவுகளும்
- சமத்துவ சமுதாயம்
- இட ஒதுக்கீட்டுக் கொள்கையும் அதன் தேவையும்
- வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அரசாங்கத்தின் பங்கு
- சலுகைகளும் அதன் தாக்கமும்

13.1 சமூகநீதி என்றால் என்ன?

சமூகம் உருவாக்கும் எதிர்மறை மதிப்பீடுகள் சமத்துவமின்மையை, ஏற்றத்தாழ்வை உருவாக்குகிறது. சமூக அதிகாரத்தைக் கைக்கொள்வதில் ஏற்படும் போட்டிகளே ஒடுக்குமுறைகள் தோன்றிடக் காரணங்களாகும். தங்களுக்கென உருவாக்கிக் கொண்ட இயல்பான அடையாளக் கூறுகளைத் தற்காத்துக் கொள்வதற்கு அதிகார அமைப்புகளைக் கைப்பற்றிக் கொள்ள எண்ணுகின்றனர். 'பன்மைத்துவ'மான சமூக அமைப்பில் தனித்த ஒரு குழுவினர் மட்டும் சமூகமேலாதிக்கம் பெற்றவர்களாக உருவெடுப்பது அநீதியான போக்காகும்.

சமூகமேலாதிக்க உணர்வினைப் பெற்ற இன, மத, மொழி, சாதி மற்றும் பண்பாட்டுக் குழுவினர் மற்ற குழுவினரின் சமூக உரிமைகளைப் பறித்தெடுக்க முயலும்போது அல்லது தடுக்கும்போது சமூகப் பகை முரண்கள் உருவாகின்றன. தங்கள் மீதான மேலாதிக்கத்தை மறுத்துத் தங்களுக்கு உரிய உரிமைகளைச் சமமாகப் பெற்றிட நடத்துகிற போராட்ட உணர்வினையே சமூக நீதி என்கிறோம்.

சமூகப்படிநிலைகளின் பின்புலம்

இந்தியாவில், புராதன காலத்து மரபுசார்ந்த சிந்தனையால் உருவான வருணாசிரம தர்மா சமூகப்படிநிலை, மேல்–கீழ் என்னும் பாகுபாட்டைக் கொண்டிருக்கின்றது. வருண படிநிலை அமைப்பு 'சதுர் வருண அமைப்பு' (நான்கு வருண அமைப்பு – அந்தணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்) என்று அழைக்கப்படுகிறது. பிறப்பின் அடிப்படையில் பேணப்படும் இப் பாகுபாடு, தலைமுறைகளாகத் தொடர்வதால் சமூகத்தில் ஆழமான ஏற்றத்தாழ்வுகள் உருவாயின.

இந்திய அரசமைப்புச் சட்டம் 1949:பிரிவு 15(4)

சமூக மற்றும் கல்வியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பட்டியல் சாதி மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்கான சிறப்புத் திட்டங்கள் உருவாக்குவதற்கு அரசமைப்புச் சட்ட விதி 29(2) தடையாக இருக்காது.

இந்திய அரசமைப்புச் சட்டம் 1949: பிரிவு 16(4)

அரசுப்பணியில் போதிய அளவு பிரதிநிதித்துவம்பெறாத அனைத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான பணிநியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்க

மேற்கொள்ளப்படும் செயல்களுக்கு இவ்விதி தடையாக இருக்காது

இன, மத, மொழி சிறுபான்மையினருக்கான ஐ.நா. பிரகடனம் — டிசம்பர் 18, 1992

பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள்:

- சிறுபான்மை மக்கள் தனிப்பட்ட முறையிலும் பொதுவாழ்விலும் எந்த வகையான பாகுபாடும் குறுக்கீடும் இன்றி சுதந்திரமாக தங்கள் பண்பாட்டைப் பின்பற்றவும், மதத்தைக்கடைப்பிடிக்கவும், பிரச்சாரம் செய்யவும், மொழியைப் பயன்படுத்தவும் உரிமை பெற்றவர்கள் ஆவர்.
- சிறுபான்மை மக்கள் தங்களுக்கான அமைப்புகளை உருவாக்கவும் பராமரிக்கவும் உரிமை உண்டு.
- சிறுபான்மையினர் தங்கள் வரலாறு, மரபுகள், மொழி மற்றும் பண்பாடு பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளவும் ஒட்டுமொத்த சமுதாயம் பற்றி அறிந்து கொள்வதற்கும் சிறுபான்மை மக்களுக்கு உரிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்.
- ஏற்கனவே உள்ள மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்திற்கு இந்தப் பிரகடனம் எந்த வகையிலும் ஊறு விளைவிப்பதாக அமையக்கூடாது.

இந்தியா பல்வேறு தட்ப, வெட்ப புவிசார் நிலவியல் அமைப்பு கொண்ட பன்மைத்துவ நாடாகும். பல்வேறு மொழிகள் பேசும் தேசிய இனங்கள் வெவ்வேறு பண்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றனர். எனினும், இந்திய சமூக வளர்ச்சிப் போக்கில் ஏற்றத்தாழ்வுகள் வர்ண அமைப்பின் அடிப்படையில் அமைந்த படிநிலைகளால் உருவாகியுள்ளன. இத்தகைய ஏற்றத்தாழ்வுகளால் நலிவுற்ற பிரிவினரின் வாழ்க்கை மேம்பட, அவர்களையும் அரவணைத்து வளர்ச்சிபெற்றிட, நமது அரசமைப்புச் சட்டம் பல்வேறு விதமான வழிகாட்டு நெறிமுறைகளை முன் மொழிகிறது.

இயற்கை வளங்களோ தொழில் வளர்ச்சியோ இல்லாத பகுதிகளுக்கு ஏற்ப சிறப்புத்திட்டங்களை மாநில அரசு உருவாக்கிக் கொள்ள அரசமைப்புச் சட்டம் அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் சமூகத்தில் கல்வி, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நலிந்த பிரிவினருக்குச் சிறப்புச் சட்டங்கள் மற்றும் சலுகைகளையும் அரசமைப்புச் சட்ட வழிகாட்டுதலின்படியே அரசு வழங்கியுள்ளது. அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் தன்னிறைவு பெற்ற சமூக வளர்ச்சிக்கு என்று சமூகநீதியை அடித்தளமாகக் கொண்ட சிறப்பு ஏற்பாடுகள் இன்றியமையாத தேவையாக உள்ளன.

நமது நாட்டின் சமூக மக்களாட்சி தழைத்திடவும், பன்மைத்துவம் வலிமைபெறவும் இன, மத பிரிவினர்கள் குழுக்கள் தங்கள் அடையாளங்களுடனும், அதிகாரப் பகிர்வுடனும், சகிப்புத்தன்மை உணர்வுடனும் வாழ்வதற்கான சமூக ஏற்பாடே சம வாய்ப்பு என்பதாகும்.

தொழில் புரட்சியைத் தொடர்ந்த மேலை ஐரோப்பிய சமூக அமைப்பில் ஏற்பட்ட பிரிவினை உணர்விற்கு பொருளாதாரம் அடிப்படை காரணமாகும். இந்திய சமூக அமைப்பில் ஏற்பட்டுள்ள பாகுபாடுகள் வைதீக புராணங்கள் அடிப்படையில் நால்வருண அமைப்பாக பாகுபடுத்தப்பட்டிருக்கிறது.

சமூகத்தின் உற்பத்திக் கருவிகளான நிலம் மற்றும் இயற்கை வளங்களை உடைமையாக்கிக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிறவர் முதலாளியாகவும் அத்தகைய உற்பத்திக் கருவிகளைப் பெற முடியாமல் தடுக்கப்பட்டு ஏழ்மை நிலையை அடைந்தவர்கள் தொழிலாளிகளும் ஆவார். நிலம் மற்றும் வளங்களைப் பெறும் வாய்ப்பு ஏற்படுகிறபோது அவரின் வர்க்கமும் மாற்றம் அடைகிறது. எனவே, பொருளாதார அடிப்படையில் முதலாளி தொழிலாளி என சமூகப் பிரிவினை ஏற்பட்ட மேலை ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளி முதலாளி ஆவதற்குச் சமூகத்தில் நிரந்தரத்தடைகள் ஏதும் இல்லை. ஆனால், புராதண நூல்களின் அடிப்படையில் உருவான நால்வருணப் பாகுபாட்டுமுறையில்

யாரும் தத்தம் வருணங்களை மாற்றிக்கொள்ள முடியாது. பிறப்பு முதல் இறப்பு வரை ஒரே வருணத்தில் மட்டுமே இருக்க வேண்டிய சமூகத்தடை உள்ளது.

வருண அமைப்பு தனிமனித மாண்புகளையும் உரிமைகளையும் மறுக்கிறது. ஆனால், இந்திய அரசமைப்புச் சட்டம் சரியான சமூகக் கண்காணிப்பு முறைகளையும், சட்டப் பூர்வமான நீதி வழங்கும் முறையினையும் கடைபிடித்து வருகின்றது. அவ்வாறு வழங்கப்பெறும் நீதி வருண, வர்க்க வேறுபாடுகளைக் களைவதுடன் சமத்துவக் கண்ணோட்டத்துடனும் அமைந்திருக்கிறது எனலாம்.

இந்திய அரசமைப்புச் சட்டம் மக்களாட்சி நெறிமுறைகளின்படி பாதிக்கபட்ட அனைவருக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து அவர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையினைப் பாதுகாக்கிறது. இத்தகைய சமூக வளர்ச்சிக்கான மாற்று செயல்முறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் சமூக விடுதலையும் சமூக நீதியும் உறுதிப்படுத்தப்படுகின்றன. எனவே, உயிரோட்டமான சமூகநீதி இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டு உணர்வையும் பேணிக்காத்து நீதிப்பகிர்வினையும் மக்களாட்சி மாண்பினையும் உறுதிசெய்கிறது.

13.2 சமத்துவம் நிலவ சமூக நீதி அவசியம்

சமத்துவம் வேண்டும் என்று அனைவருமே ஏற்றுக்கொள்ளும் அதே நேரம், ஏற்றத்தாழ்வுகளும், பாகுபாடுகளும் நம்மை நிலைகுலைய வைக்கின்றன. வசதிகளில், வாய்ப்புகளில், பணிச் சூழலில் என்று பல தளங்களில் நிலவும் சமத்துவமின்மை பற்றி நாம் என்ன சொல்லப்போகிறோம்.? இது போன்ற ஏற்றத்தாழ்வுகளும் பாகுபாடுகளும் நமது வாழ்வில் தவிர்க்கமுடியாத மற்றும் நிரந்தரமான அம்சங்கள் என்று கருதமுடியுமா? இவ்வாறு வாய்ப்புகள் இன்றித் தவிக்கும் மக்கள் நமது நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பங்களிப்பு செய்ய நாம் கூடுதலாக என்ன செய்ய வேண்டும்? இது போன்ற சமத்துவமின்மைக்கு நமது சமூகத்தில் நிலவும் பண்பாட்டு மதிப்பீடுகள் எந்த அளவிற்கு காரணமாக இருக்கின்றன? இது மாதிரியான கேள்விகள் பல ஆண்டுகளாகவே நம் நாட்டினரை மட்டுமல்ல உலகெங்கிலும் பெரும் அதிர்வுகளை உருவாக்கி வந்திருக்கின்றன. அதனால்தான், சமத்துவம் என்பது சமூக, அரசியல் கோட்பாட்டில் முதன்மையான இடத்தைப் பிடித்திருக்கிறது என்றால் அது மிகையில்லை. முதலில், சமத்துவம் என்ற கோட்பாடு எதை சுட்டிக்காட்டுகிறது? நாம் அனைவரும் சமம் என்றால் அதன் உண்மையான பொருள் என்ன? சமத்துவத்தை உறுதிசெய்வது எப்படி? அவ்வாறு உறுதி செய்வதன் வழியாக நாம் சாதிக்க நினைப்பது என்ன? வருமானத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை மட்டுமே நாம் சரிசெய்ய நினைக்கிறோமா? எந்த மாதிரியான சமத்துவத்தை நாம் நிலைநாட்ட முயல்கிறோம்? நாம் எத்தனிக்கும் சமத்துவம் யாருக்கானது?

சிறப்பு முன்னுரிமைக்கான தேவைகள்

சமூக அடையாளங்களை முன்னிறுத்தி ஒருவருக்கு வாய்ப்பு மறுக்கப்படுவது அநீதி; அதுவே சமத்துவமின்மையை உருவாக வழிகோலுகிறது. இனம், மொழி, சாதி, பாலினம், மதம் போன்ற வேறுபாடுகள் இருந்தாலும், மனிதர்கள் அனைவரும் தங்களது தனித்துவமான திறமையினை முன்னெடுத்துச் சென்று வாழ்வில் வெற்றி பெற வாய்ப்புகள் சம அளவில் வழங்கப்பட வேண்டும்.

சமூக, அரசியல் கோட்பாடுகளில், மிக முக்கியமான அம்சமாகக் கருதப்படுவது இயற்கையாகவே மனிதர்களிடம் நிலவும் வேறுபாடுகளுக்கும் சமூக, கலாச்சார ரீதியாக இருக்கும் பாகுபாடுகளுக்குமான வேறுபாடு போல, தனிநபர் விருப்பங்கள், திறமைகள் இயல்பானவை, தனித்துவமானவை. ஒருவருக்கான அங்கீகாரமும், மதிப்பும் தனி நபர்களின் சாதனைகள், தனி நபரின்

திறமைக்குமாக இருக்கவேண்டும்; ஆனால், ஒரு சமூகம் உருவாக்கி வைத்திருக்கும் கலாச்சார, அரசியல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் செயற்கையானவை. இவற்றை பாகுபாடுகள் எனலாம்.

மக்களாட்சி நிலவும் நாடுகளில் அரசியல் சமத்துவத்தை எளிதாகப் புரிந்துகொள்ளமுடியும். மக்களாட்சி அரசுகள் தனது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான குடியுரிமையை வழங்கி வருகின்றன. குடியுரிமை என்பது வாக்குரிமை, கருத்துரிமை, இணைந்து செயல்படும் உரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, வழிபாட்டுரிமை என பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது. இவை அனைத்துமே மக்களாட்சி சிறப்பாகச் செயல்பட அவசியமாகும். அப்போதுதான், குடிமக்கள் அனைவரின் பங்களிப்புடன் அரசு செயல்படமுடியும். மேலும், அரசமைப்புச் சட்டம் அனைத்து குடிமக்களுக்கும் சட்ட உரிமைகளையும் வழங்கியுள்ளது. மக்களாட்சி நிலவும் பல நாடுகளில் குடியுரிமை உறுதி செய்யப்பட்டு இருந்தாலும், சமத்துவமின்மையும், ஏற்றத்தாழ்வுகளும் நிலவத்தான் செய்கின்றன.

13.3 நியாயமான விநியோகம் (Justice Distribution)

சமூகத்தில் அனைவருக்கும் செல்வம், வாய்ப்பு போன்றவை சம அளவாகப் பகிர்ந்தளிக்கப்பட அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டும். நியாயமாக வளங்களை அனைவருக்கும் வழங்குவதற்கு சட்டம் வழிசெய்கின்றன. சட்டத்தை செயல்படுத்தும் அமைப்புகள் வளங்களை விநியோகிப்பதை கண்காணிக்க வேண்டும்.

நம்மை போன்ற நாடுகளில் சமூக கலாச்சார ஏற்றத்தாழ்வுகள் நன்கு ஊன்றியுள்ளது. சமூகத்தின் அனைத்து பிரிவிற்கும் சுதந்திரம், வாய்ப்பு, செல்வம் மற்றும் சுய கௌரவத்தின் அடிப்படைகள் போன்றவை, சம அளவாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதில் எந்தவிதமான அநீதிகளும் இடம்பெறக்கூடாது.

சட்டமானது மக்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்கு முன்னரே, மக்கள் சில அடிப்படை சமத்துவங்களை பெற்று வாழ்வில் தனது நோக்கங்களை தொடர தேவையான சூழ்நிலைகள் அமைய வேண்டும். அரசும், சட்டமியற்றும் அமைப்புகளும் தீண்டாமை மற்றும் பிறசாதி பாகுபாடு நடவடிக்கை அகற்றி சமூகத்தில் நீதியை முறைப்படுத்துகின்றது.

சமூகத்தில் சமத்துவத்தை உருவாக்குவதும் அதை அனைவருக்கும் உறுதிப்படுத்துவதும் அரசமைப்பின் தலையாய கடமையாகும்.

விவாதம்



- விளையாட்டுகளில் அனைவருக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அரசாங்கத்தை, மக்கள் கேட்க முடியுமா?
- தனியார் துறை மற்றும் இராணுவத்தில் சம வாய்ப்பு வழங்குவதில் அரசாங்கத்தின் தலையீட்டை நாம் எதிர்பார்க்கலாமா?
- நம் குற்றவியல் நடைமுறை சட்டம் அனைவரையும் ஒன்றாக நடத்தாமல், வேறுபடுத்தி நடத்துமாறு நாம் கோர முடியுமா?

வரலாற்றுரீதியாக அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்கு சட்டரீதியாகவும், தார்மீகரீதியாகவும் உரிமை கிடைக்க அரசாங்கம் முக்கிய பங்காற்ற வேண்டும். சமத்துவத்தை உருவாக்குவதில் பரந்த மனப்பான்மை என்றும் தொண்டு

எனவும் அரசாங்கம் நினைக்கக் கூடாது. சமூதாயத்தில் சமூக நீதியை நிலைநாட்ட மக்களை மாறுபட்ட விதத்தில் நடத்துவது அரசின் கடமையாகும், மேலும் நலிவடைந்த பிரிவினரின் அடிப்படை உரிமையாகவும், இதனைக்கொண்டு சட்டரீதியாகவும் அரசமைப்பில் தீர்வு காண முடியும். நலிவடைந்த பிரிவினருக்கு சம வாய்ப்பும் வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் ஏற்படுத்துவதில் அரசு முக்கிய பங்காற்றுகிறது. அரசு வேலைவாய்ப்பிலும் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதிலும் நவீன கல்வி முக்கிய பங்காற்றுகிறது. இதனை நிலைநிறுத்துவதற்கு சமூகத்தில் சமத்துவத்தை ஏற்படுத்தவும், சமவாய்ப்பினை ஏற்படுத்துவதும் அரசமைப்பின் முக்கிய நோக்கமாகவும் அங்கமாகவும் இருக்கின்றது.

இதனைப் பற்றி பல கருத்துகள் சமூகத்தில் நிலவுகிறது. நலிவடைந்த பிரிவினருக்கு வளங்களையும், சமவாய்ப்புகளையும் எவ்வாறு அளிப்பது என கேள்வி எழுகின்றது. மேல்தட்டு மக்கள் அரசின் மாறுபட்ட செயல்பாடு பாகுபாட்டை ஏற்படுத்தும் என கருதினர். கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சமவாய்ப்பு நலிவடைந்தோருக்கு கிடைக்காது என்ற அச்சத்தில் இட ஒதுக்கீடு முறையை அரசு உருவாக்குவதன் மூலம் சமூகத்தில் சமவாய்ப்பினை ஏற்படுத்த முடியும் என்று நம்பினர். இட ஒதுக்கீட்டு முறையினால் நலிவடைந்த பிரிவினருக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தும் போது தகுதி பாதிக்கப்படுவதாக சிலர் கருதினர். ஆகையால் தொழிற்துறையில், பணியாளர்களின் திறமையை பாதிக்கும் என கூறப்படுகிறது.

அரசியல் அறிவியல் மாணவர்களான நாம் எவ்வித தயக்கமுமின்றி நீதியில் உள்ள பிரச்சினைகளை ஆராயவேண்டும். முதலில் நீங்கள் நலிவடைந்து, முன்னேற்றமடையாத மக்களுக்கு உதவ சில தலையீடு தேவை என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா?

நாம் சுதந்திரம் அடைந்து குடியரசு ஆன பின்னும் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வளங்கள் அனைத்தும் மேல்தட்டு மக்கள் வசமே இருந்தால் அது என்ன விளைவை ஏற்படுத்தும்? நாம் அனைவரையும் உள்ளடக்கிய நாட்டையா அல்லது குறிப்பிட்ட சிலருக்கான நாட்டையா? எதை அடையவேண்டும் எவ்வகையான சமூக நீதியை நாம் இறுதியில் பின்பற்ற வேண்டும்?

13.4 பகிர்ந்தளிக்கும் நீதி, மற்றும் தண்டிக்கும் நீதி

நீதி என்ற கோட்பாட்டை படிக்கும் போது வளங்களை எவ்வாறு சமூகத்தில உள்ள அனைவருக்கும் வழங்கவேண்டும் என்ற பொருள் விளங்கும். நீதி பற்றிய கருத்தை முழுமையாக புரிந்து கொள்வதற்கு இதில் உள்ள முக்கியமான கருத்துக்கள் மற்றும் பிரச்சனைகளை அறிய வேண்டும். அனைவருக்கும் சமமான வளங்கள் பெறுவதற்கு பொது உரிமையாளர் கோட்பாடு, உரிமை கோட்பாடு போன்றவைகள் நீதி என்ற விவாதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ) வளங்களில் சமத்துவம்

இது வளங்களின் விநியோகம் நியாயமான முறையில் இருக்கவேண்டும் என கூறுகிறது. ஒவ்வொரு மனிதனும் சமமான வளங்களை கொண்டிருந்தால் அது நீதியாகும். வழங்கப்பட்ட ஒரு பணிக்கு அனைவரும் சமமான ஊதியத்தையோ அல்லது வெகுமதியையோ பெறுவதே நீதியை பெறும் வழியாகும்.

ஆ) பொது உரிமையாளர் கோட்பாடு

ஆரம்ப நிலையில் ஒவ்வொரு மனிதனும் ஒரே அளவிலான நிலங்கள் மற்றும் வளங்களை நியாயமான விநியோகத்தின் மூலம் பெற்றிருக்கவேண்டும். இது தனி மனித முன்னுரிமையிலும் மற்றும் திறமையிலும் வேறுபாடின்றியும் இருக்கவேண்டும் என்பதை தெளிவாகக் கூறுகின்றது.

இ) உரிமை அளித்தல் கோட்பாடு

நிலம் மற்றும் பிற வளங்கள் வழங்கப்படுவதை வரலாற்று ரீதியாக நியாயப்படுத்த வேண்டும், என நியாயமான விநியோகம் விளக்குகிறது. தனிமனிதன்

நிலம், மற்றும் பிற வளங்களுக்கு ஒருபோதும் உரிமையாளராக இல்லாத போது தானாகவே வளங்களும், நிலங்களும் அவர்களுக்கு மாறவேண்டும். அவ்வாறு வளங்கள் அவர்களுக்கு மாறுவது முற்றிலும் தானாகவே அமையவேண்டும். மனிதனின் திறமை மற்றும் வளங்கள் இந்த இரண்டுமே முக்கிய கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகின்றன. வளங்கள் என்றால் உதாரணமாக நிலமும், மனிதனின் அறிவு எனவும், கோட்பாடுகளில் மனிதனின் திறமை முக்கிய பங்காற்றுகிறது.

சமூகத்தில் நீதி நிலைக்க வேண்டுமானால் நீதி தண்டிப்பை விட நியாயமான நீதி விநியோகம் இருந்தால் மட்டுமே தீர்வு என்ற பெரும் கருத்தொற்றுமை உருவானது, நாம் எவ்வாறு தண்டிக்கும் நீதியை விளக்கப்போகின்றோம் ?

ஈ) தண்டிக்கும் நீதி

தண்டிக்கும் நீதியை சில விதிகளை பின்பற்றுவதன் மூலம் ஒருவர் அறிந்து கொள்ளலாம்.

- தவறான செயல்களை செய்தவர்கள், கடும் குற்றம் இழைத்தவர்கள், அவர்களின் குற்றத்திற்கான சரியான தண்டனை பெற வேண்டும்.
- சட்டப்படி தண்டிக்கும் அதிகாரம் பெற்றுள்ள ஒருவரால் குற்றவாளிக்கு, அவரின் குற்றத்திற்கு ஏற்ற தண்டனையை வழங்குவதே தார்மீக அடிப்படையில் சரியானதாகும்.
- இது வேண்டுமென்றே அப்பாவிகளை தண்டிப்பதை ஊக்குவிப்பதில்லை. மேலும் குற்றவாளிகளுக்கு அவர்கள் இழைத்த குற்றத்தை விட அதிகமான தண்டனை வழங்குவதையும் இது கண்டிக்கிறது.

தண்டிக்கும் நீதி எனும் கருத்தாக்கமானது நீதி மற்றும் தண்டனை கோட்பாட்டை உண்டாக்குவதில் முக்கிய பங்காற்றினாலும், இதன் முக்கிய அம்சங்களான விகிதாச்சார தண்டனை, துன்பத்தின் இயல்பு நிலை மற்றும் தண்டனையை நியாயப்படுத்துதல் போன்றவை சர்ச்சைக்குரியதாகவே உள்ளன.

நம்முடைய அரசமைப்பு தண்டிக்கும் நீதியை முற்றிலுமாக நிராகரித்துள்ளது. நம் அரசமைப்பு சிற்பிகள் வன்முறை வழிகள் அமைதியையோ அல்லது பிரச்சனைகளுக்கான தீர்வையோ கொண்டு வராது, நிலையான நீதியை வழங்காது என்று உறுதியாக நம்பினர்.

13.5 ஜான் ரால்சின் நீதி கோட்பாடு

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவராக ஜான் ரால்சன் கருதப்படுகிறார். நேர்மையான நீதி என்ற கருத்தியலின் அடிப்படையில் ஓர் நீதி கோட்பாட்டை அவர் உருவாக்கியுள்ளார். இவரது நீதி சமத்துவத்தை கோருகிறது. இவரைப் பொறுத்தவரை சுதந்திரம், வாய்ப்பு, வருவாய், வளம் மற்றும் சுயமரியாதை என அனைத்தும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இதையே வேறு வார்த்தைகளில் கூறினால் சமத்துவமின்மையே அநீதி ஆகும். தனிமனிதன் எந்த ஒரு செயலோ அல்லது பண்போ மற்றவருக்கு பயனளிக்காத வகையில் இருக்குமாயின் அது அந்த சமூகத்தின் அநீதியான பண்பை காட்டுவதாக அமையும் என்று கூறுகிறார். இந்த கண்ணோட்டமானது நீதியை பற்றிய நமது புரிதலை விரிவாக்குகிறது.

ஜான் ரால்ஸ் சிறந்த படைப்புகள்

- நீதி கோட்பாடு – 1971
- நேர்மையான நீதி – 1985
- அரசியல்தாராளவியல்– 1993
- மக்களின் சட்டம் – 1993



அறநெறியின் அடிப்படையிலான பகுத்தறிவு ஒரு புதிய அரசியல் கட்டமைப்பை உருவாக்கும். அதில் மக்கள் தங்கள் சுயநல விரும்பிகளின் படி இல்லாமல் ஒட்டுமொத்த சமுதாய விருப்பங்களின் படியான கொள்கைகளைப் பற்றி சிந்திப்பார்கள் என்று ரால்ஸ் கூறுகிறார். இந்த முழுமையான அனைவரையும் உள்ளடக்கிய கண்ணோட்டம் ஜான் ரால்சின் கட்டமைப்பில் காணப்படுகிறது. இதை தெளிவாக கூறினால் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் சமூகத்தின் அனைத்து தரப்பு

மக்களுக்கும் பயன் அளிக்கும்படி இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கானதாக இருக்கக்கூடாது. இந்த நியாயமானது இரக்கத்தினாலோ அல்லது பெருந்தன்மையினாலோ இல்லாமல் காரண அறிவின் வெளிப்பாடாக இருத்தல் வேண்டும். ஜான் ரால்சின் கோட்பாடானது நவீன காலத்தின் மிகச் சிறந்த பகுத்தறிவு மனிதர்கள் நம் சமூகத்தில் நீதியின் சக்தியை உணர வேண்டும் என்கிறது. நம் போன்ற சமூகங்களில் காரண அறிவுக்கு பொருந்தாத அடையாளங்கள் மற்றும் உணர்ச்சிகருத்துக்கள் முக்கியபங்காற்றுகின்றன. அவற்றை விடுத்து ஜான் ரால்சின் வழியே அணுகும்போது நீதியின் உண்மையான ஆற்றலை கண்டு கொள்ள முடியும்.

உங்களுக்குத் தெரியுமா?

வேறு நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து வந்த மக்களுக்கும் சில அடிப்படை உரிமைகளை பல நாடுகள் உறுதி செய்துள்ளன. புகலிடம் கோரிய மக்கள், தஞ்சம் அடைந்த மக்கள், அகதிகளாக குடியேறியோர் என பலதரப்பட்ட மக்களுக்கும் உரிமைகள் உள்ளன. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் உறுப்பு நாடுகள் பலரும் அங்கீகரித்துள்ளனர்.

13.6 சமூக, பண்பாட்டு சமத்துவம்

சமூகத்தின் பல பிரிவினரும் தங்களது பண்பாட்டு அம்சங்களைப் பின்பற்றவும் தங்களது தனித் திறமைகளுக்கு ஏற்ற வாழ்க்கைமுறையை அமைத்துக்கொள்ளவும் சமூகத்தில் சமத்துவம் நிலவுவது அவசியமாகும். ஒவ்வொரு நபருக்கும் நியாயமான வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கு, சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு நீக்கிட முயலவேண்டும்; அல்லது அதன் தாக்கத்தைக் குறைத்திட நடவடிக்கை மேற்கொள்வது மிக அவசியம். உதாரணமாக, தரமான மருத்துவ வசதிகள், கல்வி, சத்தான உணவுகள், குறைந்தபட்ச ஊதியம் என்பது போன்ற அம்சங்கள் அனைவருக்கும் பாரபட்சமின்றி கிடைத்திடச் செய்வது அவசியம். இவை இல்லாத நிலையில், சமூகத்தில் அனைவரும் சமம் என்றோ அல்லது சம வாய்ப்பு பெற்றவர்கள் என்றோ கருதமுடியாது.

நமது நாட்டின் பிரச்சினை என்ன?

சாதி – மதம் என்ற பெயரால் நீண்டகாலமாகப் பின்பற்றப்படும் நம்பிக்கைகள் நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும் தடையாகிவிடுகிறது. உதாரணமாக, நாட்டில் பல பகுதிகளில், பெண்களின் நிலை கவலை தருவதாகவே உள்ளது. கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை என பல உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே பெண்களின் நிலை உள்ளது. இவ்வாறு நடத்தப்படுவதுதான் நமது பண்பாடு என சொல்லத் தொடங்கினால், அதன் விளைவுகள் பெரும் அபாயத்தை விளைவிக்கக் கூடியவை. அதாவது, ஏற்றத்தாழ்வுதான் நமது பண்பாடு என்று சொன்னால், அல்லது பாகுபாடுதான் நமது பண்பாடு என்றால் அது சமத்துவத்திற்கான நமது பயணம் ஆகாது.

பொருளாதார சமத்துவம்

ஒரு சமூகத்தில் தனி நபர்களிடம் நிலவும் சொத்து மதிப்பு, வருமானம் குறித்த ஏற்றத்தாழ்வுகளை வைத்து, அந்த சமூகத்தில் பொருளாதார சமத்துவம் இருக்கிறதா என்பதை ஓரளவிற்கு நம்மால் அறுதியிட்டுக் கூறமுடியும். அல்லது பணம் படைத்தவர்களுக்கும் ஏழைமக்களுக்கும் இடையில் இருக்கும் இடைவெளி அந்த சமூகத்தின் பொருளாதார நிலையினை நமக்குத் தெளிவுபடுத்தும். நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வோரின் எண்ணிக்கையினை வைத்து சில தீர்மானமான முடிவுகளுக்கு நம்மால் வரமுடியும் – இது பரவலாக பின்பற்றக்கூடிய வழிமுறை.

ஆனால், சில பாகுபாடுகள் பண்பாட்டு ரீதியாக நியாயப்படுத்தப்படும் போதுதான், பிரச்சினை பெரிதாகிறது. இத்தகைய பின்னடைவுகளை மக்கள் கவனத்துக்குக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் காலத்தின் தேவைக்கேற்ப சீர்திருத்தவாதிகள் ஈடுபட்டனர்.

"மனிதனை மனிதனாகக் கருதமுடியாமல், அவரது சாதியை மட்டுமே வைத்து எடைபோட முயலும் சிந்தனை காட்டுமிராண்டித்தனமானது" என்று வலியுறுத்திய தந்தை பெரியார், பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம் என்ற பெயரில் சமத்துவத்தை மறுக்கும் அத்தனை அம்சங்களையும் கடுமையாக நிராகரித்தார். பெண்களை அடிமைப்படுத்த நாம் உருவாக்கி வைத்திருக்கும் அத்தனை சமூக அமைப்புகளையும் வன்மையாகக் கண்டிக்கும் பெரியார், சாதி, மத, பாலின பேதமற்ற சமூகமே உயரிய சமூகம் என்று அறிவித்தார். மொழி மேல் வெறியும், தங்களது பண்பாடு மேல் தீவிர பற்றும் கொண்டுள்ள நபர்களால் நவீன சமூகத்தை உருவாக்க முடியாது என்று திட்டவட்டமாக வாதாடினார். இவ்வாறு சமத்துவதின் பல்வேறு பரிமாணங்களை நமக்கு பலரும் முன்வைத்துள்ளனர்.

இதுவரை சமூகத்தில் தங்களது குடும்ப மரபு, பிறப்பு இவற்றின் அடிப்படையில் உயர் இடத்தையும் பெரும் அங்கீகாரத்தையும் பெற்ற நபர்களின் சிறப்புநிலை முடிவுக்கு வரவேண்டும். பிறப்பின் அடிப்படையில் சமூகத்தில் ஒருவரின் தகுதி நிர்ணயிக்கப்படுவது சமத்துவமின்மையில் முதன்மையான அம்சம் எனலாம். இதை நிராகரித்து அனைவரும் சமம்; எனவே எந்த ஒரு தகுதிக்கும் அங்கீகரத்திற்கும் பொதுவான தேர்வு முறையினைப் பின்பற்றிட முயல்வது சமத்துவத்திற்கான முதல்படி. இதுவரை, உலகின் பல நாடுகளில் ஏழை மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டு இருக்கிறது; பெண்களை கல்வி கற்கவும் பொது இடங்களில் பணி செய்யவும் தடை செய்திருக்கும் நாடுகள் பல. நமது நாட்டில், ஒருசில கடை நிலைப் பணிகளைத் தவிர, சாதி ரீதியாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உயர் பதவிகளைப் பெறுவதில் இருக்கும் பெரும் தடைகள் நாமறிந்ததே.

இது மாதிரியான பாகுபாடுகளைக் களைந்திட காலம் காலமாகத் தொடரும் பல சிறப்பு தகுதிகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். சில நேரங்களில், குறிப்பிட்ட சமூகப் பிரிவினருக்கு தொடர் புறக்கணிப்புகள் காரணமாக சிறப்பான அல்லது கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. அப்போதுமட்டுமே, உண்மையான சமத்துவத்தை நாம் நெருங்குகிறோம் என்று பொருள். எனவே, வரலாற்று ரீதியாக நிகழ்ந்திருக்கும் அநீதிகளை இனம் கண்டால் மட்டுமே, சமத்துவம் என்பதன் முழுப்பொருளையும் நாம் எட்டமுடியும்.

அரசின் சமச்சீர் நடவடிக்கைகளில் முக்கியமானது இடஒதுக்கீடு. கல்வி, வேலை வாய்ப்பில் குறிப்பிட்ட அளவு இடங்களை ஒதுக்கீடு செய்து, இதுவரை வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கு முன்னுரிமை வழங்குவதே இதன் அடிப்படை நோக்கம். ஆனால், இது பாகுபாடின் மறுவடிவமே என்று வாதிடும் சிலரும் உண்டு. இடஒதுக்கிட்டின் மூலம் திறமையின்மை புதிய அங்கீகாரம் பெற்றுவிடும் எனவும், சாதிரீதியான பாகுபாடு களையப்படாமல் உறுதிப்பட்டுவிடும் என்றும் இடஒதுக்கீட்டின் எதிர்ப்பாளர்கள் வாதிடுகின்றனர்.

பன்னெடுங்காலமாகத் தொடர்ந்துவந்த சாதி, மத பாலின ஏற்றத்தாழ்வுகளை மிக விரைவாக நம்மால் களையமுடிந்தால் அது வரவேற்கத்தக்கதே. அப்படிப்பட்ட சமூக, பண்பாட்டு மாற்றம் ஓரிரு தலைமுறைகளுக்குள்ளாகவே ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்ப்பது நடைமுறை சாத்தியங்களுக்குப் பொருந்தாதது என்றே ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சமூக நீதியும் சமத்துவமும்

உலகெங்கும் உள்ள சமூகங்கள் அனைத்துமே தங்களுக்கென்று நீதி என்பது பற்றி வரையறை வந்திருக்கின்றன. சரி–தவறு என்ற தெளிவு இல்லாத சமூகம் வரலாற்றில் இருந்ததாகத் தகவல் இல்லை. சமூகம் ஏற்றுக் கொண்ட நல்ல செயல்கள், சமூகம் மறுக்கும் அல்லது நிராகரிக்கும் செயல்கள் அந்த சமூகத்தின் 'தர்மம்' என்று வழங்கப்படலாயிற்று. இந்த தர்மத்தை மீறும்

நபர்கள் மீது தயவுதாட்சன்யமின்றி நடவடிக்கை எடுக்கவும் தண்டனை வழங்கவும் அரசன் தவறக்கூடாது என்பதே முக்கியமான தர்மம் என்று நமது நாட்டில் மட்டுமல்ல பல நாடுகளிலும் நிலவிய நியதியாக இருந்திருக்கிறது. கிரேக்கத் தத்துவ அறிஞர் பிளாட்டோ தனது மாணவர்களோடு நடத்திய பல உரையாடல்களில் நீதி என்றால் என்ன அதை நாம் ஏன் பின்பற்ற வேண்டும் என்பது குறித்து விரிவாகவே பேசியிருக்கிறார்.





அறிஞர் சாக்ரடீஸ் தமது குறிப்பில், ஒரு சமூகத்தில் சில நபர்கள் கூட நியாயத்திற்கு எதிராக இருந்தால், அது ஒட்டுமொத்த சமூகத்தையும் எவ்வாறு பாதிக்கும் என்பது பற்றி விளக்குகிறார். நீதி என்பது ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நன்மை பயக்கும் செயலாக மட்டுமே இருக்கமுடியும் என்று தெளிவுபடுத்துகிறார். தனி நபருக்கு மட்டும் நன்மையோ, பலனையோ தரும் செயலை நீதி என்று கருதக்கூடாது என்பதே அவரது கருத்தின் சாராம்சம். ஆம், ஒட்டுமொத்த சமூகத்தின் வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் நீதி பற்றிப் பேசமுடியாது; நியாயம் என்பது முழு சமூகத்திற்கும் மட்டுமானதாகவே இருக்க முடியும் அல்லது இருக்க வேண்டும் என்பதே சாக்ரடீஸ் சொல்லும் தத்துவத்தின் மையக்கருத்தாகும். இதன்படி, நமது நாட்டில் காலம் காலமாக வழங்கப்பட்டு வந்த அநீதி, பாகுபாடுகளை அகற்றுவதற்காக அந்த சமூகங்களுக்கு வழங்கப்பட்ட நீதியே இடஒதுக்கீடு எனும் சமூகநீதியாகும்.

விகிதாச்சார நீதி

பாகுபாடு நிறைந்த சமூகத்தில் நீதியை நிலைநாட்டுவதில் நமது அரசமைப்புச் சட்டம் முன்வைக்கும் சமூக நீதி என்பது வரலாற்று ரீதியாக வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சமூகத்தினரின் முன்னேற்றத்திற்கான உதவிக்கரம் எனலாம். அதில் யாருக்கு எவ்வளவு வழங்கப்படவேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகளும் விவாதங்களும் தொடர்ந்தன. சாதியப் படிநிலையே ஏற்றத்தாழ்வுக்கான முதன்மையான கூறாக இருக்கும் நமது நாட்டில், அதனடிப்படையிலேயே சமூகநீதி நிலைநாட்டப்பட வேண்டும். ஆகவேதான், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் பிரிவினர், பழங்குடியினர் என பலதரப்பாக ஒவ்வொருவரின் சமூக நிலைக்கு ஏற்ப, அரசின் திட்டங்கள் அமைந்திருக்கின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

நாட்டில் இருக்கும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் மேம்பாட்டிற்காக முதல் ஆணையம் 1953 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. காகா காலேல்கர் அவர்களின் தலைமையில் அமையப்பெற்ற இதுவே சுதந்திர இந்தியாவின் முதல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்.

13.7 பாகுபாடு – சமூக அடிப்படைக் கோட்பாடு

மனிதர்கள் தாங்கள் சார்ந்துள்ள குழுவின் உறுப்பாகத் தம்மை அடையாளம் காண்கின்றனர். தமது குழுவைச் சார்ந்தவர்கள் எவ்வளவுதான் புகழ்ந்தாலும் தமது குழுவைச் சார்ந்து இருப்பதையே கவுரவமாகவும் ஆற்றல் மிக்கதாகவும் கருதுவர். பாகுபாடு என்பது ஒருவர் தாம் சார்ந்த குழுவின் உறுப்பினர் என்ற அடிப்படையை இல்லாமலாக்குவது அல்லது இயற்கை மூல வளங்களை அணுகுவதில் இருந்து தடுப்பது. மேலும், இதில் செல்வம் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒரு குழுவில் ஒருவரின் தகுதி அல்லது சுய – மரியாதையை உருவாக்குவதில் மறைமுகமான ஊக்கம் அவரது செல்வத்தால் ஏற்படுகிறது என்று பாகுபாடு எனும் புறக்கணிப்பு அல்லது ஒதுக்கல் குறித்து சமூக – உளவியலாளர்கள் மதிப்பிடுகிறார்கள். இதை சமூக – அடையாளக் கோட்பாடு எனலாம்.

குறைவான சமூக ஏற்பு அளிக்கப்படும் மனிதர்கள் வெளிக்குழுவினர் போல மதிப்பிழப்பதாகவும் சமத்துவமின்மை அடிப்படையில் அத்தகைய மனிதர்கள் எதிரிகளாகப் பார்க்கப்படுவதாகவும் தொடக்கக்கட்ட ஆய்வுகள் உறிதிப்படுத்துகின்றன. வேறுபட்ட குழுவினர் (இன, மத சிறுபான்மையினர், பெண்கள், இயலாமையில் இருப்பவர்கள், வீடற்றவர்கள்) மீது காட்டப்படும் எதிர்மறை அணுகுமுறைகள் ஒன்றுடன் ஒன்று வலுவான தொடர்புகளைக் கொண்டுள்ளன.

13.8 உறுதிப்படுத்தும் நடவடிக்கை

சமூக – பொருளாதார அடிப்படையில் பின் தங்கிய மக்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் வழியாக சமூக சமத்துவத்தினை உருவாக்குவது உறுதிப்படுத்தும் நடவடிக்கை எனப்படுகிறது. இந்த மக்கள் காலம் காலமாக வரலாற்றுப்பூர்வமாக அடிமைகளாகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் வாழ நிர்பந்திக்கப்பட்டவர்கள். இதனால் உருவாகியுள்ள சமுதாய, பொருளாதார இடைவெளிகளை இணைக்க வேலைவாய்ப்புகள் மற்றும் ஊதியங்களில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், கல்வி வாய்ப்புகளை அதிகரித்தல், கடந்த காலங்களில் ஏற்பட்ட வலி, காயங்கள் மற்றும் தவறுகளுக்கு நிவாரணம் காணுதல், குறிப்பாக அடிமை மற்றும் அடிமை சட்டங்களால் கடந்த காலங்களில் ஏற்பட்ட சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு முன்னுரிமை அளித்தல் ஆகியன உறுதிபடுத்தும் நடவடிக்கைகளில் அடங்கும்.

உதாரணமாக, அமெரிக்காவில் ஐந்து ஆண்டுகளில் அமலான உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மீது 2017-இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் " கருப்பினத்தவர் வேலைவாய்ப்பு பெறுவது அதாவது பணிகளில் கருப்பினத்தவர் பங்கு குறிப்பிடத்தக்க அளவு (0.8%) அதிகரித்துள்ளது என தெரியவந்தது.

அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள் (யு. எஸ். ஏ)

சுதந்திரம், பொருளாதாரம், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள் முன்னேறி வந்தபோதும் அங்கு நிறத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவது இருபதாம் நுற்றாண்டின் பிற்பகுதி வரை நீடித்தது. இதை எதிர்த்து அங்கு குடிமை உரிமைப் போராட்டங்கள் நடந்தன.

இதைத்தொடர்ந்து உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் 1960களில் அமெரிக்க ஐக்கிய மாநிலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. முதல் உறுதிப்படுத்தும் ஆணை குடியரசு தலைவர் ஜான் எஃப் கென்னடி அவர்களால் 1961 இல் வெளியிடப்பட்டது. இது நிர்வாக ஆணை 10925 என்று அழைக்கப்படுகிறது. இதன்படி வேலை வாய்ப்புகளில் எந்த தொழிலாளரும் அல்லது விண்ணப்பதாரரும் நிறம், மொழி, இனம், தேசிய பூர்விகம், அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என அரசு கேட்டுக்கொண்டது.

1965 இல் மற்றொரு ஆணையால் (11246) இது மாற்றப்பட்டது. இதன்படி தனியான நிர்வாகத் துறை மூலம் தொடர்ச்சியான நேர்மறை செயல்பாடுகளை மேற்கொண்டு வேலை வாய்ப்புகளில் சமத்துவத்தை ஏற்படுத்துவதில் மைய கூட்டாட்சி அரசின் கடமை உறுதிபடுத்தப்பட்டது. இதன்படி பாலினம் பாதுக்காக்கப்பட்ட இனங்களில் கீழ் கொண்டுவரப்பட்டது. 1964ல் நிறைவேற்றப்பட்ட சிவில் உரிமை சட்டத்தில் நிறுவனங்களில் பாகுபாடற்ற நிலையை உருவாக்க அழுத்தம் கொடுப்பது என்ற உறுதிப்படுத்தும் நோக்கம் சட்டப்பூர்வமாக்கப்பட்டது. 1967ல் பெண்களுக்கு உறுதிப்படுத்தும் நடவடிக்கை விரிவுபடுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள்

அனைத்து வகையான இனப் பாகுபாடுகளை ஒழிக்கும் உலகளாவிய சிறப்பு கருத்தரங்கம் அமைப்பு ரீதியாக பாகுபாட்டுக்கு உள்ளான சமூகங்களுக்கு நிவாரணம் அளிக்க உறுதிப்படுத்தும் நடவடிக்கை அவசியத் தேவை என கையொப்பமிட்ட உறுப்பு நாடுகளைக் கேட்டுக்கொண்டது. இந்த நடவடிக்கை அமலாக்கம் செய்யப்பட்ட பின்னர் எந்த ஒரு இனக்குழுக்கள் இடையிலும்

சமத்துவமின்மை நிகழாத வகையில் திட்டங்களை உருவாக்குமாறு அக் கருத்தரங்கம் வலியுறுத்தியது.

சில அரசுகளால் கடைப்பிடிக்கப்பட்ட பாகுபாட்டுக் கொள்கைகளால் பாதிப்புக்குள்ளான சமுதாயங்களுக்கு உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் அமலாக்கம் செய்வது அந்நாடுகளின் சமத்துவக் கொள்கையில் தேவைப்படுகிறது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழு வலியுறுத்தி கேட்டுக்கொண்டுள்ளது.

தென்னாப்பிரிகாவில் சமூக நீதி சட்டம்

1994-ல் தென் ஆப்பிரிகா சமூகம் மக்களாட்சிக்கு மாறியதைத் தொடர்ந்து முன்னர் நிலவிய இன ஒதுக்கல் ஆட்சியின் பாதிப்புகளை அகற்றி சமூகங்கள் இடையே சமத்துவம் ஏற்படும் வழிவகைகளை ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவாக உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இதன்படி முன்னர் சட்டத்தின் அடிப்படையில் இன ஒதுக்கல் செய்யப்பட்ட பூர்வீக கருப்பினத்த வர்கள், இந்தியர்கள், பழுப்பு நிறத்தவர்கள் ஆகியோருக்கும் வெள்ளை இனத்தவர் உள்ளிட்ட பெண்கள்,மாற்றுத்திறனாளிகளுக்கும் முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்பில் சமத்துவம் அளிக்க சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி 50 பேருக்கு அதிகமாகப் பணியாற்றும் நிறுவனங்களில் மேற்கூரிய பாதிக்கப்பட்ட வகுப்பினர்க்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் தமக்குத் தாமே திட்டம் வகுத்து அரசுக்கு அளித்து ஒப்புதல் அளிக்க வேண்டும். இது கருப்பினத்தவர்களுக்கு பொருளாதார ஆற்றல் அளிக்கும் சட்டத்தின் ஒரு உறுப்பாக வகுக்கப்பட்டிருந்தது. இது குறித்த வழக்கில் கருப்பினத்தவருக்கு முன்னுரிமை வழங்குவதில் தவறில்லை என்று தென் ஆப்பிரிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சீனா

சீனாவில் வாழும் சிறுபான்மை தேசிய இனங்களுக்கு கல்வியில் முன்னுரிமை வழங்குவதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் அமலில் உள்ளன.

ரஷ்யா

சோவியத் ஒன்றியம் இருந்தபோது இனக்குழு சிறுபான்மையினருக்கும், பெண்களுக்கும் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும் பல்கலைக்கழக நுழைவு மற்றும் அரசு பதவிகளில் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது.

புதிய கல்வியும் புதிய தேவைகளும்

பண்டைக்காலத்தில் நமது நாட்டில் நிலவிவந்த கல்விமுறை சமத்துவ கல்வி முறை அல்ல. அவரவர் வர்ணம் / சாதி சார்ந்த தொழில்களை மட்டுமே கற்க அனுமதிக்கப்பட்டனர். பிற்காலத்தில் நவீன கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அங்கும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இந்தியாவில், குறிப்பாக தென்னிந்தியாவில் நவீன கல்வி, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கிறித்துவ மிஷனரி அமைப்புகளால் அறிமுகப்படுத்தப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகள் ஆங்கிலேய காலனி ஆட்சியின் கீழ் வந்த பின்னர் இங்கிலாந்து நாட்டின் கிறித்துவ மிஷனரிகள் பல இடங்களில் பள்ளிகள் தொடங்கினர். கல்வி மறுக்கப்பட்டு வந்த பல சமுதாயங்களுக்கு இவை நல் வாய்ப்பாக அமைந்தன.

13.9 சென்னை மாகாணத்தில் சமூகநீதி

இதே காலகட்டத்தில் அன்றைய சென்னை மாகாணத்தில் இங்கிலாந்து அரசின் நேரடி நிர்வாகம் விரிவடைந்தது. ரயத்துவாரி போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டன. வரி வசூல் செய்யும் நிர்வாக அமைப்புகள் உருவாயின. சென்னையில் ராணுவ அமைப்புகள் உருவாயின. 1835 இல் இந்தியா முழுவதும் அரசு நிர்வாக மொழியாக ஆங்கிலம் மட்டுமே பின்பற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்ட இந்திய ராணுவத்தில் இந்தியர்கள் சேர்க்கப்பட்டனர். பெரும்பாலும் பிராமணரல்லாதவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினரே ராணுவத்தில் சேர்ந்தனர். ராணுவத்தில் அனைவரையும்

சேர்த்துக்கொண்ட காலனி அரசு பள்ளிகளில் இந்திய மொழிகளை அனுமதிக்கவில்லை. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இந்நிலை நீடித்தது.

நவீன கல்விமுறையின் கீழ் ஆங்கிலம் கற்றவர்கள் இப் பணிகளில் அமர்த்தப்பட்டனர். ஐரோப்பியர்கள் தவிர இந்திய – ஆங்கிலேயர்கள், பிராமணர்கள் ஆகியோரே அரசு பணிகளில் நிறைந்திருந்தனர். இதேபோல, 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜமீன்தாரி, ராயத்துவாரி முறைகள் அமலாக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஜமீன்தார்கள், மிராசுதாரர்கள், நிலச்சுவாந்தார்கள் உருவாயினர். இவர்கள் அனைவரும் உயர்சாதியினர் என்பது குறிப்பிடத்தக்கது. இது கிராம நில உறவுகளில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

இதைத் தொடர்ந்து ரயத்துவாரி முறை மீது ஆய்வு செய்யுமாறு அன்றைய ஆங்கிலேய அதிகாரி பிரான்ஸிஸ் எல்லீஸ் பணிக்கப்பட்டார். இதேபோல் தாமஸ் மன்றோ எனும் அதிகாரியும் ராயத்துவாரி முறை மீது ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்தார்.

அவர்கள் அறிக்கைகளில் 'காலம் காலமாக நிலத்துடன் தொடர்பு கொண்டிருந்த மக்களிடமிருந்து நிலம் பறிக்கப்பட்டு மேல்தட்டு வகுப்புகளைச் சேர்ந்த ஜமீன்தார்கள், மிராசுதாரர்களிடம் நிலம் அளிக்கப்பட்டதால் வேளாண்மையின் தரமும் விளைச்சலும் குறைந்துவிட்டதாகவும் இதனால் நில வரி வருவாய் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியிருந்தனர். மேலும், ஏராளமான நிலங்களை தரிசாகப் போட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று கோரினர்.

தாழ்த்தப்பட்டோருக்கான முன்னுரிமைகள்

சென்னை மாகாண அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கான நிதி உதவித்திட்டங்களை 1885 இல் அறிவித்தது. சில இடங்களில் தாழ்த்தப்பட்டோருக்கான பள்ளிகளை அரசே திறந்தது.

இதற்கிடையே, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திரிமென்கீரே என்பவர் செங்கல்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் குறித்து ஒரு அறிக்கை தாக்கல் செய்தார்.

அதன் சுருக்கம் வருமாறு:தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக, பொருளாதார, கல்வி ரீதியாக மிகவும் மோசமடைந்துள்ளனர். அவர்களுக்கு நிலம் மறுக்கப்படுகிறது. வீடு கட்டிக்கொள்ளக்கூட அனுமதிக்கப்படுவதில்லை. கல்வி நிராகரிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் அடிமைகளாக விற்கப்படுகிறார்கள். ஏராளமான நிலம் வேண்டுமென்றே தரிசாகப் போடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு வருவாய் குறைகிறது. இந்த நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிரித்து வழங்கலாம்.

அவரது அறிக்கையில் மேலும் பல பரிந்துரைகளும் இருந்தன. இந்த அறிக்கையை பரீசிலித்த அரசு 1892இல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 12 லட்சம் ஏக்கர் நிலத்தை பிரித்து வழங்கியது. இது பஞ்சமி நிலம் என அழைக்கப்பட்டது. இதேபோல தாழ்த்தப்பட்டோரின் குழந்தைகளுக்கான பள்ளிகளை அரசு பஞ்சமர் பள்ளிகள் என அழைத்தது.

'பஞ்சமர்' என்பது, வைதீக மதத்தின்படி நான்கு வர்ணங்களுக்கும் வெளியே நிறுத்தப்பட்ட மக்களைக் குறிக்கும் பெயர் ஆகும். எனவே பஞ்சமர் பள்ளிகள் என அழைப்பதை ஆதிதிராவிடர் பள்ளிகள் என அழைக்கப்படவேண்டும் என்று அயோத்திதாச பண்டிதர், ம. சிங்காரவேலர் போன்றோர் கூறினர்.

இவ்வாறு காலனிஆட்சியில் நிலங்களில் இருந்து விரட்டப்பட்டு கல்வியும் மறுக்கப்பட்ட நிலையில் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் குழந்தைகள் பள்ளிகளில் சேர்வதை உயர் வகுப்பார் எதிர்த்து தடுத்தனர். பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட குழந்தைகள் அனுமதிக்கப்படுவதைத் தடுக்கக்கூடாது என்று 1854 இல் நீதிமன்றம் ஆணையிட்டது. நீதிமன்ற ஆணைகளுக்கும் உயர்வகுப்பார் பணியவில்லை. 1865 இல் இங்கிலாந்தில் உள்ள இந்தியாவுக்கான அமைச்சரே ஆணையிட்டார். அப்போதும் நிலைமையில் மாற்றமில்லை.

இவ்வாறு, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காலனி ஆட்சியின் கீழ் சமூகம், பொருளாதாரம், அதிகாரம், வேலை வாய்ப்புகள் ஆகிய துறைகளில் ஒருபக்கம் பிராமணர்கள் ஆதிக்கம் செலுத்திய நிலையில் சமூகத்தில் பெரும்பான்மையாக இருந்த பிராமணரல்லாதவர்கள், சிறுபான்மை மதத்தினர் மிகுதியாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

இக் காலகட்டத்தில் தொடங்கப்பட்ட பள்ளிகள் மூலம் நவீன கல்விகற்ற பிராமணரல்லாத வகுப்பினர் சிறுபான்மை மதத்தினர் மத்தியில் இது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. தங்களுக்கும் அரசுப்பணிகளில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கோரினர்.

குறிப்பாக கல்விகற்ற அயோத்திதாச பண்டிதர், ம. சிங்காரவேலர், இரட்டைமலை சீனிவாசன், பிட்டி தியாகராயர், பனகல் அரசர் போன்றோர் முன்னணியில் நின்றனர்.

இவ்வாறு எழுந்த கோரிக்கைகளைத் தொடர்ந்து 1892 ஆம் ஆண்டில் சென்னை மாவட்ட அனைத்துத் துறைகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அளித்து ஆணை வெளியிட்டது. இது 128(2) என்று அழைக்கப்பட்டது. இதனை சென்னை மாகாணம் முழுவதும் விரிவுபடுத்த வேண்டும் என்று அமைக்கப்பட்டது.



தமிழகத்தில் ஒடுக்கப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் முன்னெடுத்த கல்வி முயற்சிகளைப் போலவே மகாராஷ்டிராவிலும் கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திட மகாத்மா ஜோதிராவ்பூலே, அன்னை சாவித்ரிபாய்பூலே போன்றோர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

நீதிக்கட்சி

1913 ஆம் ஆண்டில் அலெக்சாண்டர் கார்டியூ தலைமையிலான ராயல் ஆணையம் வந்தபோது அதனிடம் ஏராளமான விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டன. சென்னை மாகாணம் மட்டுமல்லாமல் ரங்கூன் திராவி சங்கம் உள்பட பல அமைப்புகள் விண்ணப்பங்களை அளித்தன. அவற்றில் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், சிறுபான்மை மதத்தினருக்கு உரிய பிரதிநிதித்துவம் வேலை வாய்ப்புகளில் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டன.

டாக்டர் சி. நடேசன், சர். பி. தியாகராயர், டாக்டர் டி. எம். நாயர் ஆகியோர் அறிக்கை ஒன்றினைத்தயாரித்து வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டனர். சர்.பி. தியாகராயர் எழுதி வெளியிட்ட அந்த அறிக்கை

'பிராமணரல்லாதார் அறிக்கை' என்று அழைக்கப்படுகிறது. 1916ஆம் ஆண்டு பிராமணரல்லாதோர் நலன் காக்க சர்.பி. தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர் ஆகியோர் 'தென்னிந்தியர் சுதந்திர சங்கம்' (South Indian Liberal Federation) என்ற இயக்கத்தைத் தொடங்கினர். இவ்வியக்கத்தின் சார்பில் 'ஜஸ்டிஸ்' என்னும் இதழ் வெளியானது. எனவே, இவ்வியக்கம் மக்களிடையே 'நீதிக்கட்சி'(Justice Party) என வழங்கப்பெற்றது. இவ்வியக்கம் பிராமணரல்லாதார் மக்கள் மத்தியில் கல்வி, வேலைவாய்ப்பு பெறுவதற்கான 'வகுப்புவாரி உரிமை' குறித்த விழிப்புணர்வை உருவாக்கியது.

EIGHT PAGES

Justice

Regd. No. M. 1263

TENDER NOTICE

The Perfect complexion soap

ADVERTISE

MYSORE Sandal SOAP

FOR SALE

Colds & Sore Throat

உயர்கல்வியில் ஆங்கிலம், சமஸ்கிருதம் மட்டும் அனுமதிக்கப்படுவதைக் கண்டித்தும் தமிழ் உள்ளிட்ட பழமையான மொழிகளையும் அனுமதிக்க வேண்டும் என்றும் நீதிக்கட்சி சார்பில் 1915 இல் அரசுக்கு மனு அளிக்கப்பட்டது. 1917 இல் இந்தியா வந்த தூதுக்குழுவை சென்னை மாகாணத்தைச் சேர்ந்த 54 அமைப்புகள் சந்தித்து பிராமணரல்லாதோர் மற்றும் சிறுபான்மை மதத்தினருக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்று கோரினர். அதுமட்டுமல்லாமல் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோரி ஆங்காங்கு மாநாடுகள் நடத்தப்பட்டன.

முதல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை

சென்னை மாகாண சட்டமன்றத்தில் நீதிக்கட்சி ஆட்சியில் அமர்ந்ததைத் தொடர்ந்து இக் கோரிக்கைகள் சட்டமன்றத்திலும் எதிரொலித்தன. தொடர்ந்து நீதிக்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கோரிக்கைகள் மட்டுமல்லாமல் இவற்றுக்கு மக்கள் ஆதரவு அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாக அரசு அனுமதி அளித்ததன் பேரில் அரசு பணியிடங்களில் வகுப்புவாரி இட ஒதுக்கீடு அளித்து 1921 இல் தீர்மானம் நிறைவேறியது. இது வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை என்று அழைக்கப்படுகிறது.

இந்திய வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஆகும். காலம் காலமாக ஒடுக்கப்பட்டு வந்த பிரிவினர்கள் தாங்களும் சமூக, பொருளாதார இழிவுகளில் இருந்து விடுதலை பெற்று சுயமரியாதையுடனும் சமத்துவத்துடனும் எதிர்காலத்தில் வாழ முடியும் என்ற நம்பிக்கையை அளித்தது.

"எல்லா அரசு பணிகளிலும் பிராமணர் அல்லாதவர்களை அவர்களுக்குக் குறைந்தபட்ச கல்வித்தகுதி இருந்தாலே போதும் என்று கருதி வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். கிறிஸ்தவர்கள், முகமதியர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என அனைவரும் அரசுப்பணிகளில் அமர்த்தப் படவேண்டும். இதற்கான ஒரு நிலையான ஆணை வெளியிட வேண்டும். நூறுரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கும் உத்தியோகமாக இருந்தால் 75% அளவு மக்களை அது அடையும்வரை ஏழாண்டுகாலம் வரை அமலில் இருக்கும் வண்ணமும் இவ்வாணை அமலில் இருக்க வேண்டும்" எனும் தீர்மானத்தினை சட்டசபையின் உறுப்பினரான முனுசாமி கொண்டுவந்தார்.

இத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய சர். ஆர். கே. சண்முகம் "இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நாம் நிறைவேற்றினால் நம் எதிர்கால சந்ததி நம்மையெல்லாம் நமது நாட்டுக்கு உரிமை வாங்கித் தந்தவரென்றே கொண்டாடும்" என்று குறிப்பிட்டார். அத்தீர்மானத்தை வழிமொழிந்த டாக்டர் சி. நடேசனார் 'எங்கள் மக்களுக்கு வேலைகளில் சரியான பிரிதிநிதித்துவம் தரப்படாவிட்டால், நாங்கள் வரி கொடுக்க மாட்டோம்' என்று பேசினார்.

காங்கிரஸ் கட்சியில் தீவிரமாக இயங்கி வந்த தந்தை பெரியார், ஜஸ்டிஸ் கட்சியினரின் கருத்துக்களை ஆதரித்தார். காங்கிரஸ் கட்சிக்குள்ளும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோரிக்கையை எழுப்பினார். 1925ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் அரசு கல்வி, வேலைவாய்ப்புகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோரும் தீர்மானத்தை பெரியார் கொண்டுவந்தார். இதற்கு காங்கிரஸ் தலைமை அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து அவர் காங்கிரஸில் இருந்து வெளியேறினார்.

1928 வாக்கில் இரா. முத்தையா அவர்களின் தலைமையில் நீதிக்கட்சி செயல்பட்டபோது அரசின் எல்லாத்துறைகளிலும், பணிநியமனங்கள் முறைப்படுத்தப்பட்டு அரசாணையின் மூலம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நிரந்தரமாக்கப்பட்டது.

முதல் சட்டத்திருத்தம்

இந்தியா சுதந்திரம் அடைந்து இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின் அதில் குறிப்பிடப்பட்டிருந்த சட்டப்பிரிவுகளைக் காட்டி, தமிழகத்தில் வகுப்புவாரி ஆணை பின்பற்றப்படுவதால், மருத்துவக் கல்லூரியில் தனக்கு இடம் கிடைக்கவில்லை எனக்கூறி செண்பகம் துரைராஜன் என்பவர் 1951ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினைத் தொடர்ந்தார்.

இவ்வழக்கினை விசாரித்து தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்றம் தமிழகத்தில் பின்பற்றப்படும் வகுப்புவாரி ஆணையானது அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று தீர்ப்பளித்தது. உச்சநீதிமன்றமும் அத் தீர்ப்பினை உறுதி செய்தது. எனவே தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வந்த வகுப்புவாரி (இடஒதுக்கீடு) முறை ரத்து செய்யப்பட்டது.

வகுப்புவாரிமுறை ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து தமிழகத்தில் போராட்டங்கள் எழுந்தன. எனவே, தந்தை பெரியார் உடனடியாக அரசமைப்புச் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். தமிழகத்தில் தந்தை பெரியார், தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்த கு. காமராஜ், பிரதமர் ஜவஹர்லால் நேரு, இந்திய அரசமைப்புச் சட்ட சிற்பி டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் ஆகியோர் முயற்சியால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நீடிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதல் திருத்தம் ஆகும். இதன்மூலம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மீண்டும் இடஒதுக்கீடு பெறும் வாய்ப்பு ஏற்பட்டது.



அரசமைப்புச் சட்டம், பிரிவு 15 மற்றும் 16 ஆகிய பிரிவுகள் "சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பின் தங்கியவர்களுக்குச் சில சிறப்புச் சட்டங்கள் மற்றும் சலுகைகள் வழங்கலாம்" என அரசுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் பிரதமர் நேரு முதலாவது சட்டத் திருத்தத்தினை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தார். அத் திருத்தத்தின்படி அரசமைப்புச் சட்ட பிரிவுகள் 15 (4) & 16(4) என்னும் உட்பிரிவுகள் இணைக்கப்பட்டன. இந்திய அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்குப் பின் தமிழ்நாட்டில் 1951 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோருக்கு 25%, தாழ்த்தப்பட்டோருக்கு 16% என இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தபட்டது.

இட ஒதுக்கீடு விரிவாக்கம்

மு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்து ஆராய்ந்திட சட்டநாதன் தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப் பட்டது. அந்த ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1971 ஆம் ஆண்டு

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 269 06/12/2022 12:37:41

பிற்படுத்தப்பட்டோருக்கு 31%, தாழ்த்தப்பட்டோருக்கு 18% என இட ஒதுக்கீட்டு வரம்பு மாற்றியமைக்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில அரசின் சமூக நலத்துறை அரசாணை (G.O. Ms.No. 1156, 02.02.1979) ஒன்றினைப் பிறப்பித்தது. அவ்வாணையின்படி பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின், குடும்ப ஆண்டு வருமானம் ₹ 9000 நிர்ணயிக்கப்பட்டது. பின் அந்த அரசாணை திரும்பப் பெறப்பட்டு புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டது. அப்புதிய ஆணையின் படி பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டு வரம்பு 31% லிருந்து 50% ஆக உயர்த்தப்பட்டது. எனவே, அன்றைய காலகட்டத்தில் தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50%, தாழ்த்தப்பட்டவர்கள்& பழங்குடியினருக்கு 18% என்று மொத்த இடஒதுக்கீடு 68% நடைமுறைக்கு வந்தது.

1989 ஆம்ஆண்டு பழங்குடியினருக்குத் தனியிட ஒதுக்கீடு கோரி தொடரப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30%, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20%, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18%, பழங்குடியினருக்கு 1% என இடஒதுக்கீட்டு வரம்புகள் மாற்றியமைக்கப்பட்டு இடஒதுக்கீடு 69% என நடைமுறைக்கு வந்தது.

மத்திய அரசின் இட ஒதுக்கீடு: மண்டல் ஆணையம்

வி.பி. சிங் ஆட்சியின் போது மண்டல்ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார். அதன் அடிப்படையில் மத்திய அரசின் வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27% இடஒதுக்கீடு வழங்கி மத்திய அரசு ஆணை பிறப்பித்தது. அதனை எதிர்த்து, இந்திரா சகானி இடஒதுக்கீட்டு முறையானது, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்னும், அரசமைப்புச் சட்ட விதிகளை மீறும் வகையில் அமைந்துள்ளது. எனவே, இடஒதுக்கீட்டு முறையினை ரத்து செய்திட வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்தார்.

அவ்வழக்கினை விசாரித்த நீதிமன்றம் வி.பி.சிங் தலைமையிலான அரசு பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கிய 27 சதவீதம் இடஒதுக்கீடு செல்லும் என்று தீர்ப்பளித்தது. மேலும், இடஒதுக்கீட்டின் அளவு 50 சதவீதத்திற்கு மிகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும், தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தது. அரசியல் சட்டத்தில் உச்ச வரம்பு குறித்துக் குறிப்பிடப்படாத நிலையில் உச்சநீதிமன்றம் 50 சதவீதம் என்று உச்சவரம்பினை நிர்ணயித்தது. எனினும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பின் ஒரு பகுதியில் உச்சவரம்பிற்கும் விலக்கு உண்டு என்பதைப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

"உச்சநீதிமன்றத்தில் மண்டல் ஆணைய உத்தரவு பற்றிய தீர்ப்பில்" 50% என்பது விதியாக இருந்த போதிலும் கூட பலதரப்பட்ட மக்கள் பல்வேறு வகையில் பரந்துப்பட்ட இந்நாட்டில் வேரூன்றி உள்ள சில அசாதாரணமான நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பது நமது வாதமல்ல. நாட்டின் தொலை தூரத்தில் உள்ள பகுதிகளிலோ அல்லது தள்ளியிருக்கும் பரப்புகளிலோ வாழ்வதன் மூலம் தேசிய நீரோட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ள வாய்ப்பற்ற மக்களுக்கு அவர்களுக்கே உரியதனித்தன்மை காரணமாக அவர்களுக்கு வேறுவகையில், விதிகளிலிருந்து விலக்கு என்பது மிகவும் அவசியமாகும்". 50% இட ஒதுக்கீட்டிற்கு விலக்கு உண்டு எனத் தீர்ப்பளித்த நீதிபதிகளே ஏற்றுக் கொண்டுள்ளனர், என்பதை மேற்கண்டத் தீர்ப்பின் ஒருபகுதி உறுதி செய்துள்ளது. எனினும் தமிழகத்தில்

நடைமுறையிலிருந்த 69% இடஒதுக்கீடு, உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு முரணானது என்றும் அதனை ரத்து செய்திட வேண்டுமென்றும் நுகர்வோர் அமைப்பின் அறக்கட்டளை உறுப்பினரான கே.என்.விஜயன் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் 50%மேல் இடஒதுக்கீடு அளிக்க உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்தது.

எனினும் 1951 ஆம் ஆண்டு எழுந்ததைப் போன்ற சட்ட நெருக்கடிகள் எழுந்ததால் அரசியல் சட்டத்தில் உள்ள மாநில அரசுகளுக்கான அதிகார வரம்பு என்னும் வாய்ப்பினைப் பயன்படுத்தி அப்போதைய முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு அரசியல் சட்ட பிரிவு 31(C) (Directive principles of state policy) -யினைப் பயன்படுத்தித் தனிச்சட்ட மசோதா ஒன்றினை 30.12.1993 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றியது. அதன்பின் தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்ட 69% இடஒதுக்கீடு குறித்த தமிழ்நாடு அரசின் தனிச்சட்டமசோதாவிற்கு 19.07.1994 அன்று அன்றைய குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததால் தமிழகத்தில் பின்பற்றப்படும் 69% இடஒதுக்கீடு உரியசட்டப் பாதுகாப்பினைப் பெற்றுவிட்டது.

தமிழக அரசின் இச்சட்டத்தினை எதிர்த்தும் வழக்குத்தொடரும் சூழலைத் தவிர்க்க இந்திய அரசமைப்புச் சட்டத்தின் IX ஆவது அட்டவணையில் சேர்க்க தமிழக அரசு பெரும் முயற்சி எடுத்தது. நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பெற்ற 76-வது அரசியல் சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழக அரசின் இடஒதுக்கீட்டுச் சட்டம் இந்திய அரசியல் சட்டத்தின் IX ஆவது அட்டவணையில் இணைக்கப்பெற்றது. அத்துடன், 1992 நவம்பர் 16ஆம்தேதி முதல் இச்சட்டம் முன்தேதியிட்டு நடைமுறைக்கு வந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. இடஒதுக்கீட்டு முறை என்பது அரசு அதிகாரங்களைப் பெறுவதற்கான தற்காலிக முயற்சியே ஆகும். சமூக மாற்றம் நிகழ்ந்திடவும், உண்மையான சமூக நன்மதிப்பு உருவாகிடவும், சாதிய அடுக்கு முறைகள் ஒழிந்து சமத்துவம் பிறந்திட வேண்டும். அத்தகைய சமத்துவம் பிறப்பதற்கான வழிமுறைகளுள் ஒன்று 'சாதிக்கலப்புத் திருமணங்களாகும்'. சாதிகளுக்குள்ளேயே நடைபெறும் திருமணங்களே சாதிக்கட்டமைப்பை வலிமைப்படுத்தி வருவதுடன் சமத்துவம் உருவாவதற்கானத் தடைக்கல்லாகவும் இருக்கின்றன. எனவே "சாதிமறுப்புத் திருமணங்களும்" முற்போக்கான உயர் எண்ணங்களுமே உண்மையான சமூகமாற்றத்தை முன்னெடுக்கும் கருவிகளாகும்.

பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திய அரசியல் சட்டப் பிரிவு 340 இன்படி "சமூக அடிப்படையிலும் கல்வி அடிப்படையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள்" எவை என அடையாளம் கண்டிடவும் மற்றும் அவர்களின் நிலை குறித்து ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரைகளை வழங்கவும் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைத்திடவும் குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் அளிக்கிறது. அதனடிப்படையில் இந்திய அரசு பின்வரும் இரண்டு பிற்படுத்தப்பட்டோர் ஆணையங்களை இதுவரை அமைத்துள்ளது.



1. திரு. காகா கலேல்கர் ஆணையம்

காகா கலேல்கர் ஆணையம் என்றழைக்கப்படுகிற முதலாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் 29.01.1953 அன்று அமைக்கப்பட்டது. இவ்வாணையத்தில் காகா கலேல்கர் உட்பட 11 பேர் இடம் பெற்றிருந்தனர். இக்குழுவின் அறிக்கையினை

அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

2. மண்டல் ஆணையம்

பிரதமர் மொரார்ஜிதேசாய் தலைமையிலான மத்திய அரசு பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் கமிஷன் என்றழைக்கப்படுகிற மண்டல் ஆணையத்தினை 1979 ஆம் ஆண்டு அமைத்தது. இது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இரண்டாவது ஆணையமாகும். இவ்வாணையத்தின் செயலராக எஸ்.எஸ்.கில் செயல்பட்டார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குறித்து ஆய்வு செய்திட 1979 ஆம் ஆண்டு பி.பி. மண்டல் தலைமையிலான குழு ஒன்று அமைக்கப்பெற்றது. அக்குழு இந்தியா முழுவதிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இவ்வாணையம் 11 காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சமூக அடிப்படையிலும் கல்வி அடிப்படையிலும் 3743 சாதிகள் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளாக உள்ளன என அடையாளம் கண்டது.

மண்டல் தன் அறிக்கையின் முகப்புரையில் "வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்திற்கு மெட்ராஸ் முன்னோடியாக இருப்பதுடன் அம்மாநிலமே பிற்படுத்தப்பட்ட வகுப்பார்களுக்கு பிரதிநிதித்துவத்தை வழங்கியுள்ளது" என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் தமிழ்நாடு சமூகநீதியின் பிறப்பிடமாகவும் முகவரி ஆகவும் இருப்பதை அறியலாம்.

மக்கள்தொகையில் 52% உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பார்க்கு மத்தியஅரசுப் பணிகளில் 27% வழங்கிட மண்டல் ஆணையம் பரிந்துரைத்தது. இவ்வாணையத்தின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு 13.08.1990 ஆம் ஆண்டு பிரதமர் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு மத்திய அரசுப் பணிகளில் மட்டும், பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கு 27% இடஒதுக்கீடு வழங்கி ஆணை பிறப்பித்தது. இவ்வாணை 13.08.90 ஆம் தேதி முதல் அமல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மத்திய அரசுப்பணிகளில்சமூகஅடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மத்திய அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பு பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்திரா சகானி V. இந்திய யூனியன் AIR 1993 SC 477

- இது மண்டல குழு வழக்கு எனவும் அழைக்கப்படும்.
- பிரதம மந்திரி மொரார்ஜிதேசாய் தலைமையில் 1979–ஆம் ஆண்டு ஜனவரியில் பி.பி. மண்டல் தலைமையில், சட்டபிரிவு 340–ன் படி பின்தங்கிய வகுப்பினருக்கான இரண்டாவது ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
- பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்(SC/ST) மக்களை தவிர்த்து, இதர பிற்பட்ட வகுப்பினர் மொத்த மக்கள் தொகையில் 52% இடம் பெற்றுள்ளனர், அரசு பதவியில் 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்தால்தான் அது பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்(SC/ST) இதர பிற்பட்ட வகுப்பினருக்கான (OBC) மொத்த 50 சதவிகித இட ஒதுக்கீடு ஆகும் என இந்த ஆணையம் பரிந்துரை செய்தது.
- மண்டல ஆணைய அறிக்கை சமர்பித்த பிறகு எந்த ஒரு நடவடிக்கையும் மற்றும் செயல்பாடும் இல்லை, பாராளுமன்றத்தில் இருமுறை 1982 மற்றும் 1983–ஆம் ஆண்டுகளில் மண்டல் ஆணையம் அறிக்கை மீது விவாதம் மட்டுமே நடைபெற்றது.
- 1990–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13–ஆம் தேதி வி.பி. சிங் அரசாங்கம் ஒரு ஆணையின் மூலம் மண்டல் ஆணையம் அறிக்கையின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு 27 சதவிகித இட ஒதுக்கீடு சமூகத்தில் பிற்பட்ட வகுப்பினருக்கு இந்திய அரசுப் பணிகளில் வழங்கியது.

சமூக நீதியை மேம்படுத்துதல்

சமூக நீதியை ஏற்படுத்துவதில் இட ஒதுக்கீடு முக்கியமான கருவியாக உள்ளது, கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீட்டு முறை சமூக நீதியை நிலை நாட்டுகிறது என்பதை உணரவேண்டும். பிறப்பின் அடிப்படையில் யாவரும் யாருக்கும் உயர்ந்தவர் மற்றும் தாழ்ந்தவரும் இல்லை என்பன சமதர்ம தத்துவத்தின் அடிப்படையாகவும் சமூக நீதிக்கு

இன்றியமையாத ஒன்றாகவும் கருதப்படுகின்றன. தன் பிறப்பின் அடிப்படையில் பயன்பெறுபவர்கள் அது இந்த நவீன உலகத்திற்கு பொருந்தாது என உணரவேண்டும். சமூகத்தில் உள்ள அனைவருடனும் உணர்வுபூர்வமாகவும், சமத்துவத்துடன் இருப்பதே நவீன மனிதனாக இருப்பதற்கு அவசியமாகும். சமீப காலத்தில் சொத்துக்கள் மற்றும் ஆடம்பர பொருள்களை கொண்டும் ஒருவரை மதிப்பிடும் போக்கு அதிகரித்து வருவது வருத்தம் அளிக்கக்கூடிய ஒன்றாகும். சமீபகால நோக்கங்கள் நம்மை நவீனமாக்குகின்றன. நவீன இந்தியாவை உருவாக்க அனைத்து துறைகளிலும் முழுமையான மாற்றம் தேவை. ஆகையால்தான் நவீன இந்தியா எனும் கருத்தாக்கம் சமூகநீதியை இயற்கையாகவே உள்ளடக்கியதாக இருக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

1979-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தால் பின்தங்கிய வகுப்பிற்கான இரண்டாவது ஆணையம் பி.பி. மண்டல் தலைமையில் உருவாக்கப்பட்டது. பின்தங்கிய மக்களின் சமூக, கல்வியினை மேம்படுத்த வழிமுறைகள், திட்டங்கள் பற்றிய பரிந்துரைகள் கேட்கப்பட்டன. இந்த ஆணையம் அரசு பதவிகளில் 27 சதவிகிதம் சமூக மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பின்தங்கிய வகுப்பை சேர்ந்த மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

1980-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மண்டல் ஆணையம் அதன் அறிக்கையை உள்துறை அமைச்சராக இருந்த ஜெயில் சிங்கிடம் சமர்பித்தனர் அப்போது பி.பி. மண்டல் "இந்த அறிக்கையை தயார் செய்வதில் அதிகமான உழைப்பை கொடுத்துள்ளோம். மிக சரியாக கூறினால் நாம் உன்னதமான சடங்கை செய்துள்ளோம்" என்று கூறினார்.

அடுத்த பத்தாண்டுகளுக்கு இந்த மண்டல் ஆணைய அறிக்கை உள்துறை அலுவலகத்திலேயே இருந்தது. அதை தேசிய முன்னணி அரசில் பிரதமராக இருந்த வி.பி. சிங் (1938-2001) 1990-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தினார். அந்த நேரத்தில் மண்டல் ஆணைய பரிந்துரைகள் பெரும் விவாதங்களை நாடு முழுவதும் ஏற்படுத்தியது. தேசிய அரசியலில் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டன. சந்தர்ப்பவாத அரசியலை செய்வதாக வி.பி.சிங் குற்றஞ்சாட்டப்பட்டார். எந்த ஒரு பெரிய தேசிய கட்சியும் மண்டல் ஆணைய பரிந்துரைகளுக்கு ஆதரவாக இல்லை.

சில அமைப்புகள் மற்றும் பிரிவினர் இந்த பரிந்துரைகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இரு தரப்பு வாதங்களையும் பதினோரு நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு கேட்ட பின்பு உச்சநீதிமன்றம் இந்த மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகள் செல்லும் என தீர்ப்பளித்தது. அந்த அமர்வின் பெரும்பான்மை நீதிபதிகள் இந்த 1992-ஆம் ஆண்டு தீர்ப்பை வழங்கினர். ஆனால் அதே சமயத்தில் பரிந்துரைகளில் சில மாற்றங்களை செய்ய அரசை உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டது.

1993 செப்டம்பர் 8 ஆம் தேதி பணியாளர் மற்றும் பயிற்சி துறையின் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்பின் அறிக்கை பற்றிய சர்ச்சை முடிவிற்கு வந்து, திட்டம் தொடர ஆரம்பித்தது.

கலைச்சொற்கள்: Glossary

சகோதரத்துவம்: சாதி, இன, மதம், மொழி என்ற பேதங்களில்லாமல் அனைத்து மனிதர்களையும் சகோதர சகோதரிகளாக பாவிக்கும் மனப்பாங்கு.

சுரண்டல்: வளங்களை தேவைக்கதிகமாக பயன்படுத்துவதும், குறைந்த ஊதியத்திற்கு அதிக உழைப்பை பணியாளர்களிடம் பெறுவதும்.

சமத்துவ சமுதாயம்: வர்க்க, இன, பொருளாதார, மொழி, மத பேதங்களில்லாமல் அனைவரையும் சமமாக நடத்தும் சமுதாயம்.

தனிச்சலுகைகள்: ஒரு சில குறிப்பிட்ட நபர்களுக்கு, அவர்களின் பதவியின் காரணமாகவோ, சிறப்பு திறமைகளின் காரணமாகவோ, சாதியின் காரணமாகவோ வழங்கப்படும் சிறப்பு சலுகைகள்.

சமூக அடையாளம்: சமுதாயத்தின் ஒரு பிரிவில் உறுப்பினராக இருப்பதன் மூலம், ஒரு நபருக்கு கிடைக்கும் அடையாளம்.

நிறவெறி: ஒருவரையோ அல்லது ஒரு குழுவினரையோ, அவர்களது நிறத்தின் அடிப்படையில் பாகுபாடாக நடத்துவது.

வர்ண அமைப்பு: பிறப்பின் அடிப்படையில் மனிதர்களை வகைப்படுத்திய பழங்கால நடைமுறை

சிறுபான்மையினர்: நாட்டின் அல்லது ஒரு பகுதியில் உள்ள மொத்த மக்கள் தொகையில் மத, இன, சாதி அடிப்படையில் குறைவான எண்ணிக்கையில் உள்ளோர்.

இடஒதுக்கீடு: அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கு வாய்ப்பளிக்கும் வகையில், அரசமைப்பால் ஏற்படுத்தப்பட்ட ஒரு முறை.

பன்மை சமூகம்: பல்வேறு மொழி, மத, இன மற்றும் கலாச்சாரங்களைக் கொண்ட மக்கள் ஒன்றாக வாழும் சமூகம்.

சமூக மாற்றம்: ஒரு சமூகத்தில் வாழும் பெரும்பான்மை மக்களின் மன மற்றும் நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றம்.

குடிமை உரிமைகள்: ஒரு சமூகத்தில் கண்ணியத்துடன் வாழ்வதற்காக அரசமைப்பினால் உத்திரவாதமளிக்கப்பட்ட உரிமைகள்.

பொருளாதார சமத்துவம்: ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடின்றி அனைத்து மக்களும் சமமான பொருளாதார நிலையில் இருத்தல்.

நிலப்பிரபுத்துவம்: அதிக அளவு, நிலங்களை உடைமையாக கொண்டவர்கள்.

பஞ்சமர்: வர்ணாசிரம முறையில் குறிப்பிடப்படாத வர்க்கத்தை சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள்.

மதிப்பிடுதல்

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. தகுதி இருப்பவை உயிர் வாழும் என்ற கோட்பாட்டை உருவாக்கியவர்.
   அ)டெனிம் ஆ) ருஸ்வெல்ட் இ) டார்வின் ஈ) மேற்கூறிய அனைத்தும்

2. அடிமை வாணிபம் என்பன
   அ) பெண்கள் கடத்தல் ஆ) குழந்தைகள் கடத்தல்
   இ) மனிதர்கள் கடத்தல் ஈ) அனைத்தும்

3. இனவெறி ஆட்சி என்பன
   அ) ஒரு இனம் மற்றொரு இனத்தை அடக்குதல்
   ஆ) கருப்பர் இனம் வெள்ளையர் இனத்தை அடக்குதல்
   இ) சித்ரவதை
   ஈ) உயர்குடி சமூகம்

37K65

4. நாராயண குரு எந்த மாநிலத்தை சார்ந்தவர்?

அ) ஆந்திர பிரதேசம் ஆ) மேற்கு வங்காளம்

இ) மகாராஷ்டிரா ஈ) கேரளா

5. வைக்கம் இயக்கத்தை தலைமை தாங்கி நடத்தியவர்.

அ) பெரியார் ஆ) ராஜாஜி

இ) நேரு ஈ) காந்தியடிகள்

6. தேசங்களின் வளம் பற்றிய ஒர் ஆய்வு என்ற நூலை எழுதியவர்

அ) கீன்ஸ் ஆ) ஆதம் ஸ்மித்

இ) ரூசோ ஈ) போடின்

7. இட ஒதுக்கீடு கொள்கையின் மூலம்

அ) உயர்த்துதல் ஆ) மேம்படுத்துதல்

இ) நீதி வழங்குதல் ஈ) அனைத்தும்

8. சாதி அமைப்பு மிகப் பெரிய அளவில் இருந்த மதம்.

அ) கிறிஸ்துவ மதம் ஆ) இந்து மதம்

இ) புத்த மதம் ஈ) ஜைன மதம்

9. அம்பேத்கர் எந்த மதத்திற்கு மாறினார்?

அ) கிறிஸ்துவ மதம் ஆ) இந்து மதம்

இ) புத்த மதம் ஈ) ஜைன மதம்

10. ஒரு நியாயமான சமூகத்தில்

அ) பாகுபாடு இருக்காது ஆ) சாதிகள் இருக்காது

இ) மதங்கள் இருக்காது ஈ) மேற்கூறிய அனைத்தும்

11. மண்டல் ஆணையம் அமைக்கப்பட்டது

அ) பட்டியலினத்தவருக்காக ஆ) பழங்குடியினருக்காக

இ) இதர பிற்பட்ட வகுப்பினருக்காக ஈ) பிற்பட்ட வகுப்பினருக்காக

12. **கூற்று:** பிராமணரல்லாதோர், ஆங்கிலேயர் காலத்தில் அரசு பதவிகளில் பணியமர்த்தப்பட்டனர்.

காரணம்: 1921-ம் ஆண்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் இயற்றப்பட்டது.

அ) கூற்றும்காரணமும் சரி, கூற்றுக்கான சரியான விளக்கம்

ஆ) இரண்டுமே சரி, ஆனால் காரணம் சரியான விளக்கம் இல்லை

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறு, காரணம் சரி

II. பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி.

1. சமூகம், அரசாங்கம் மற்றும் சாதி – வரையறு.

www.tnschoolbooks.in

2. சாதிகளற்ற சமுதாயம் – வரையறு.

3. சாதி பாகுபாடு என்று நீ கருதுவது என்ன?

4. சமத்துவம் என்றால் என்ன?

5. சுரண்டல் என்றால் என்ன?

6. சாதி கலவரம் பற்றி வரையறுத்து கூறு?

III. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

1. இட ஒதுக்கீடு கொள்கை பற்றி சிறு குறிப்பு வரைக.

2. இந்திய அரசமைப்பில் கூறப்பட்டுள்ள சமத்துவம் பற்றி கூறு.

3. சாதி அமைப்புகள் பற்றி சிறு குறிப்பு வரைக.

4. இந்தியாவில் சாதி பாகுபாடு முறைகள் பற்றி விவரி.

5. மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகள் பற்றி விளக்கு.

IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும்.

1. சமத்துவ சமுதாயத்தின் அடிப்படை அம்சங்கள் குறித்து விவாதி.

2. பெரியாரின் அரசியல் கருத்துகள் பற்றி விரிவாக கூறு.

3. சமத்துவத்திற்கு பல்வேறு தலைவர்கள் ஆற்றிய பங்கினை பற்றி கூறு.

4. தற்கால இயக்கங்கள் தலைமையின் அவசியம் குறித்து விவாதி.

5. புதிய சமூக இயக்கங்கள் பற்றி விளக்குக.

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Gauba. O.P, 'Dimension of Social Justice', National Publishing Co, New Delhi, 1983.
2. Rawls, John, 'A Theory of Justice', Universal Law Publishing Co. Pvt, Ltd, Delhi, 2000.
3. Rao, Priya, 'Development & Social Justice - A Legal Perspective'; Kalpaz Publications, Delhi, 2012.
4. Purohit . B.R; 'Social Justice in India', Rawat Publications, New Delhi, 2003.
5. Barry, Brain, 'Why Social Justice Matters' 1st Edition, Polity Publishers, 2005

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 276 06/12/2022 12:37:42

அலகு 14

தமிழகத்தில் அரசியல் வளர்ச்சி



நிகழ்வுகளின் நாட்குறிப்பு

1914	–	திடாவிடர் கழகத்தின் தோற்றம்
1916	–	தென்னிந்திய விடுதலைக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது
1917	–	நீதிக் கட்சி
1919	–	மாண்டேகு செம்ஸ் போஃர்டு சீர்திருத்தங்கள்
1925	–	பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.
1937	–	ராஜாஜியின் தலைமையில் காங்கிரசு அமைச்சரவை உருவாக்கப்படுதல்
1937	–	இந்தி எதிர்ப்புப் போராட்டம்
1944	–	சேலம் மாநாட்டில் நீதிக் கட்சி திராவிடர் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது
1949	–	திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்தது
1946	–	சென்னை மாகாணத்தில் த.பிரகாசம் தலைமையிலான காங்கிரசு அரசாங்கம் அமைந்தது.
1947	–	ஓ.பி. ராமசாமி முதலமைச்சரானார்.
1949	–	பி. குமாரசாமி ராஜா தலைமையிலான அமைச்சரவை அமைந்தது.
1952	–	முதல் பொதுத் தேர்தல் நடைப்பெற்றது
1956	–	மாநில மறுசீரமைப்புச் சட்டம்
1965	–	இந்தி – எதிர்ப்புப் போராட்டம்
1967	–	சி.என். அண்ணாதுரை தலைமையின் கீழ் தி.மு.க அரசாங்கம் அமைக்கப்பட்டது.
1969	–	சி.என். அண்ணாதுரை காலமானார்
1969	–	மு. கருணாநிதி மாநிலத்தின் முதலமைச்சரானார்
1972	–	அ.இ. அ.தி.மு.க., எம்.ஜி.இராமச்சந்திரனால் (எம்.ஜி.ஆர்) நிறுவப்பட்டது
1974	–	மாநில தன்னாட்சித் தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

11th Std Political Science Tamil_Unit-14.indd 277 07/02/2023 19:50:25

கற்றலின் நோக்கங்கள்

- 1900-களில் சென்னை மாகாணத்தில் நடைபெற்ற அரசியல் விவாதங்களின் தன்மையைப் பற்றி புரிந்துகொள்ளுதல்
- பிராமணரல்லாதோர் இயக்கம் எவ்வாறு தோன்றியது பின்னர் தமிழ்நாட்டில் திராவிட கட்சிகளின் ஆட்சிக்கு எங்ஙனம் வழியமைத்தது என்பது பற்றி விளக்குதல்
- மாநிலத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளின் ஆட்சியின் பொழுது மத்திய-மாநில உறவுகளின் தன்மை பற்றி விரிவாக விளக்குதல்
- திராவிட கட்சிகளின் மக்கள்நலக்கொள்கை, அவற்றின் முக்கியத்துவம், பொது மக்கள் மீதான அதன் தாக்கங்களைப் பற்றிய அறிவைப் பெறுதல்
- ஏதேனும் மாநிலங்களின் அரசியல் விருப்பமானது தேசிய அரசியலின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா என்பதை ஆய்வு செய்தல்
- இந்த படிப்பின் முதன்மையான நோக்கமானது மாநிலத்தில் தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் சமூகநலக் கொள்கைகளின் அனைத்து பரிணாமங்களையும் அறிந்து கொள்வது.
- மாநிலத்தில் திராவிட அரசியலில் ஏற்பட்ட பல்வேறு பிளவுகள் மற்றும் அதன் விளைவுகளை கண்டறிதல்.

14.1 தமிழக அரசியல் வரலாறு

இந்தியாவின் பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாடானது, ஆரோக்கியமான நிர்வாக மற்றும் அரசியல் பண்பாடும்,கிட்டத்தட்ட நிலையான பொருளாதார வாழ்வு மற்றும் மிக தொன்மையான காலத்திலிருந்து தற்காலம் வரை தொடர்ச்சியான மரபுகளையும் கொண்டதாகும். தென்னிந்தியாவின் சென்னை மாகாணம் என்பது (The Madras presidency) ஆங்கிலேயரின் அரசியல், நிர்வாகத் தேவைகளுக்காக தோற்றுவிக்கப்பட்டது. சென்னை மாகாணம் கி. பி. (பொ.ஆ) 1801-இல் உருவாக்கப்பட்டது. இந்த மாகாணமானது, 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் தற்பொழுதுள்ள மாநிலங்களான ஆந்திரா, கேரளாவின் மலபார் பகுதி, தெற்கு கர்நாடகா, ஒடிசாவின் வடபகுதி முழுவதும் மற்றும் லட்சத்தீவு ஒன்றிய பிரதேசம் ஆகியவை உள்ளடக்கிய பகுதிகளாகும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் சென்னை மாகாணத்தின் அரசியலானது பிராமணர் -பிராமணரல்லாதோரின் மோதல் தொடர்பான ஆதிக்கம் கொண்டதாக இருந்தது. அறிஞர்களும், அரசியல் சிந்தனையாளர்களும் இந்த பிராமணர் – பிராமணரல்லாதோர் என்ற இரு பிரிவினரிடையே உள்ள மோதல்கள் பற்றி புரிந்து கொள்வது என்பதுதான் தென்னிந்தியாவின் அரசியல் மற்றும் சமூக வாழ்வை புரிந்து கொள்வதற்கு அவசியமானது என்று நம்பினார்கள்.

சென்னை மாகாணம்

அதே நேரத்தில், சில பிராமணரல்லாத சாதி குழுக்களின் உறுப்பினர்கள் தொழிற்துறை வாணிபம் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை கோரினர். கணிசமான அளவிற்கு, பிராமணரல்லாத சாதிபிரிவினர்கள் கிராமப் புறங்களில் இருந்து மாகாணத்தின் நகர்புறத்திற்கு புலம்பெயர்ந்தனர்,

அவர்கள் தங்களின் அடையாளத்தை உறுதி செய்ய விரும்பினார்கள் மற்றும் படிப்படியாக சமூகத்தில், அரசியலில், நிர்வாகத்தில் பிராமணர்கள் அனுபவித்த ஏகபோக அதிகாரம் மற்றும் தனி உரிமை சலுகைகளை சவாலாக நின்று எதிர்த்தனர்.

"திராவிடன்" என்ற வார்த்தை, அறிஞர்கள் மற்றும் தமிழரல்லாதோர்/ஆரியரல்லாத தமிழ் பேசுவோரை அடையாளம் கண்டுகொள்ள பயன்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் பிராமணர்கள் "ஆரியர்கள்" எனவும் வடமொழி நாகரிகத்தின் பாதுகாவலர் எனவும் அடையாளப்படுத்தப்பட்டனர் மற்றும் பிராமணரல்லாதோர் "திராவிடர்கள்" எனவும் அவர்கள் தமிழ்மொழி, பண்பாடு மற்றும் நாகரீகத்தின் பாதுகாவலர் எனவும் கருதப்பட்டனர்.

14.2. திராவிட இயக்கத்தின் தோற்றம்

சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதோரின் தமிழ் அடையாளம், சமூக அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை பாதுகாப்பிற்காக ஓர் பிராமணரல்லாத குழுவால் துவங்கப்பட்டதே "திராவிட இயக்கமாகும்."

11th Std Political Science Tamil_Unit-14.indd 278 07/02/2023 19:50:25

திராவிடர்கள் மற்றும் பிராமணரல்லாதோர்

1801 ஆம் ஆண்டு பன்மொழி கொண்ட சென்னை மாகாணமானது (தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் துலு) காலனிய ஆட்சியால் உருவாக்கப்பட்டது. இந்தியாவினுடைய பன்மைத் தன்மையை சென்னை மாகாணத்தின் அரசியல் வளர்ச்சியில் காணமுடியும். வங்காளத்திலும், வடஇந்தியாவின் பிற பகுதிகளிலும் சமஸ்கிருதம் மற்றும் வேதங்களை மையப்படுத்திய இந்திய பண்பாடு முன் எடுக்கப்பட்டது. இவற்றோடு இந்தோ-ஆரிய (அ) இந்தோ- ஜெர்மன் மொழிக் குடும்பம் அங்கீகரிக்கப்பட்டது. வேதமல்லாத, சமஸ்கிருதம் அல்லாத பண்பாடு அங்கீகரிக்கப்படவில்லை.

பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ்

பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ். (1777–1819) இவர் சென்னை ராஜதானி கிழக்கிந்தியக் கம்பனி அரசின் சிறப்பான ஓர் அதிகாரி ஆவார். 1810இல் சென்னை (மதராஸ்) கலெக்டரானார்.1812 இல் "புனித ஜார்ஜ் கோட்டை கல்லூரி" யை நிறுவினார்.கம்பனி அலுவலர்களுக்கு உள்ளூர் (தென்னிந்திய) மொழிகளில் பயிற்சி அளிப்பதற்காக இந்தக் கல்லூரி நிறுவப்பட்டது. அத்துடன் அம்மொழிகளின் இலக்கிய இலக்கண ஆய்வுகளும் மேற்கொள்ளப் பட்டன. எல்லிஸ் தமிழ் சமஸ்கிருத மொழிகளில் புலமை பெற்றவர். திருக்குறள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அறத்துப்பாலின் 18 அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அலெக்ஸாண்டர் டங்கன் காம்பெல் அவர்களது "தெலுங்கு இலக்கணம்" என்றநூலுக்குஎல்லிஸ்எழுதிய முன்னுரையில் தென்னிந்திய மொழிகளின் "திராவிடச் சான்று" என்பதனை விளக்கியிருந்தார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய தென்னிந்திய மொழிகள், சமஸ்கிருத மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை அல்ல என்றும், அவற்றை திராவிட மொழிக் குடும்பம் என வகைப்படுத்தலாம் என்றும் விளக்கியிருந்தார். தொன்மையான தமிழை முதன்மையாகக் கொண்ட திராவிட மொழிக்குடும்பம் என்ற கருத்தியலை முதன்முதலில் வெளியிட்டவர் எல்லிஸ் ஆவார். அதனால்தான் அவரை "தமிழ் மறுமலர்ச்சியின் முன்னோடி" என அயோத்திதாசர் பாராட்டினார்.



ராபர்ட் கால்டுவெல்

இராபர்ட் கால்டுவெல் (1814–1891) கிறிஸ்தவ மதபோதகரான இவர், 1838 இல் சமயப் பணிக்காக திருநெல்வேலி (இடையான்குடி) பகுதியை வந்தடைந்தார். சமயப்பணியுடன் கல்விப் பணி மற்றும் மொழி ஆராய்ச்சியையும் மேற்கொண்டார். அவரது புகழ்பெற்ற ஆய்வு நூலான "திராவிட அல்லது தென்னிந்திய குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்" 1856 இல் வெளியிடப்பட்டது. அதன் வாயிலாக தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய தென்னிந்திய மொழிகள் சமஸ்கிருத மொழி குடும்பத்தைச் சேராதவை, திராவிட மொழிக் குடும்பம் என்று வகைப்படுத்தக் கூடியவை என்பதை தகுந்த சான்றுகளுடன் நிறுவினார் . அவற்றில் தமிழ் மிகத் தொன்மையானது என்றும், மிகத் தொன்மையான கிறிஸ்துவ மறைநூற்களில் கூட தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டினார். 1816இல் எல்லிஸ் அவர்களால் முன்மொழியப்பட்ட" திராவிட மொழிக் குடும்பம் " என்கிற கருத்தியலை 1856இல் ஒப்பிலக்கணம் மூலம் உறுதிப்படுத்தியவர் கால்டுவெல் ஆவார்.அவரது மனைவியார் எலிஸா மால்ட் அவர்களும் இப்பகுதியில் மகளிர் கல்விக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளார். கால்டுவெல் அவர்களின் ஆய்வுகள் தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளின் தனித்துவத்தையும் தொன்மையையும் எடுத்துரைக்கும் விதமாக அமைந்தன.

ஜோதிபாபுலே

1837 ஆம் ஆண்டு மற்றும் இதர ஆய்வாளர்களால் பிராமண மூல ஆவணங்கள் மற்றும் தென்னிந்திய மொழிகளின் மீதான ஆய்வுகள் (எல்லிஸ் 1816 மற்றும் கால்டுவெல்– 1856) போன்றவைகள் இந்திய கலாச்சாரம் என்பது ஒரே மாதிரியானத் தன்மையைக் கொண்டது அல்ல என்றும், புத்த, திராவிட மரபுகள் கூட இந்தியாவில் இருந்தன என்பது நிரூபிக்கப்பட்டது. தென்னிந்தியாவில்,

குறிப்பாக, பன்மொழி கொண்ட சென்னை மாகாணத்தில், பிராமணரல்லாதோர் இடத்தில், திராவிட மொழிக்குழுக்கள் மற்றும் திராவிட பண்பாட்டுத் தொன்மை ஆகியவை, திராவிட அடையாள எழுச்சிக்கு இட்டு சென்றது.

(1) பிராமணர்கள், பிராமணரல்லாதோர் மீது தங்களது மேன்மையை கோருவது மற்றும் (2) பிராமணர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை ஏகபோகமாக்கியது ஆகிய இரண்டு திராவிட அடையாளத்தை பிராமணரல்லாதோர் அடையாளமாக மாற்றியமைத்தது. மகாராஷ்டிராவில் கூட மகாத்மா ஜோதிபா புலே இதே போன்று ஓர் பிராமணரல்லாதோர் இயக்கத்தைத்துவக்கினார் இவ்வாறு திராவிடம் என்பது தென்னிந்தியாவில் பிராமணரல்லாதோர்என்பதைக்குறிப்பதாயிற்று.

சென்னை மாகாண பிராமணரல்லாதோரின் பிரச்சனையை புதியதாக தேசியத் தலைவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை என்பதாகக் குறைபாடு இருந்தது. 1852 ஆம் ஆண்டு கஜீலு லட்சுமி நரசு செட்டி என்பவர் இதனை வெளிப்படுத்தி, ஆங்கிலேய இந்திய கழகத்திலிருந்து வெளியேறி, சென்னை வாழ் மக்கள் சங்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பை தொடங்கினார். சிப்பாய்க் கலகத்திற்கு பிந்தைய காலங்களில் பிராமணரல்லாத தலைவர்கள் அரசியல் சீர்திருத்தங்களைக் காட்டிலும் சமூக சீர்திருத்தத்தின் மீது கவனம் செலுத்தினார். 1909 ஆம் ஆண்டு மிண்டோ மார்லி சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, சென்னை மாகாணத்தைச் சார்ந்த பிராமணரல்லாதோருக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் போதிய பிரதிநிதித்துவம் இல்லை என்று எதிர்ப்பு காட்ட துவங்கினர்.

1913 ஆம் ஆண்டு ஆளுனரின் செயற்குழு உறுப்பினர், திரு. சர். அலெக்சாண்டர் ஜோர்டன் கார்டிவ் என்பவர் அளித்த புள்ளியியல் விவரமானது, மக்கள் தொகையில் மூன்று சதவீதம் மட்டும் அங்கம் வகிக்கும் பிராமணர்கள் அனைத்து வாய்ப்புகளையும் எடுத்துக் கொண்டார்கள் என்பதை நிரூபித்தார்.

14.3. நீதிக் கட்சி

அக்காலத்தில் இருந்த முதன்மையான அரசியல் கட்சியான இந்திய தேசிய காங்கிரசானது பிராமணர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. எனவே பிராமணரல்லாத உறுப்பினர்களின் கோரிக்கைகளை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை.எனவேசென்னைமாகாணத்தில் உள்ள பிராமணர் அல்லாத தலைவர்கள் பிராமணரல்லாதோர் அரசியல் அமைப்பு ஒன்றினை துவங்க நினைத்தனர். முதலாவது உலகப் போருக்கு பிறகு ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் நிறுவனங்களில் பிரதிநிதியாகும் வாய்ப்பு போன்றவை இவர்களின் செயல்பாடுகளை ஊக்குவித்தன.

1916 ஆம் ஆண்டு டாக்டர். டி.எம். நாயர், சர் பிட்டி தியாகராயர் மற்றும் டாக்டர். சி. நடேசனார் போன்றோர்கள் பிராமணரல்லாதோரின் சமூக அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை முன்னேற்றுவதற்காக தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பை நிறுவினர். இவ்வாறு உருவான பின்னர் தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பு (SILF) புகழ் பெற்ற நீதிக்கட்சியானது. "நீதிக்கட்சி" என்ற பெயர் ஆங்கில இதழான "நீதி" என்பதன் அடிப்படையில் பெயரிடப்பட்டது. இவர்களின் ஓயாத முயற்சியால் பிராமணரல்லாதோருக்கு மாகாண சட்டமன்ற தேர்தலில் இடஒதுக்கீடு பெற்றுத்தந்தனர்.

நீதிக் கட்சியின் முக்கிய நோக்கங்கள்

அ. தென்னிந்தியாவின் அனைத்து பிராமணரல்லாதோரின் கல்வி, சமூக, பொருளாதார மற்றும் செல்வ மேம்பாட்டினை உருவாக்கி முன்னேற்றுதல்.

ஆ. அரசமைப்பிலான அரசாங்கத்தைக் கொண்டு பிராமணரல்லாதோரின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுதல்.

இ. அரசமைப்பிலான உண்மையான பிரதிநிதித்துவ அரசாங்கமாக ஆக்குதல்

ஈ. பிராமணரல்லாதோரின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக பொதுக்கருத்தை உருவாக்குதல்.

1919 ஆம் ஆண்டு மாண்டேகு – செம்ஸ்போஃர்டு சீர்திருத்தமானது மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறையைக் கொண்டு வந்ததன் மூலம் சில துறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய அமைச்சருக்கு என ஒதுக்கப்பட்டது. இரட்டை ஆட்சியின் கீழ் 1920 ஆம் ஆண்டு நடந்த முதல் தேர்தலில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஒத்துழையாமையின் ஒரு பகுதியாக தேர்தலை புறக்கணித்தது. ஆனால் பல்வேறு அடையாளங்களில் காங்கிரசைச் சேர்ந்த பலர் தேர்தலில் போட்டியிட்டனர்.

நீதிக் கட்சி பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று சென்னை மாகாணத்திற்கு எ. சுப்பராயலு முதலமைச்சரானார், அவரின் இறப்பிற்கு பிறகு பனகல் ராஜா 1921–ல் முதலமைச்சரானார்.

14.4. நீதிக் கட்சியின் பங்களிப்பு

அடுத்தடுத்த தேர்தல்களில் நல்வாய்ப்புகளில் பல்வேறு ஏற்ற இறக்கம் இருந்த போதிலும் நீதிக் கட்சி 1921 முதல் 1937 வரை தொடர்ச்சியாக அதிகாரத்தில் இருந்தது. அவர்கள் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார்கள். வகுப்புவாரி அரசாணை மூலம் ஒவ்வொரு பிராமணரல்லாத பிரிவினருக்கும் அனைத்து துறைகளிலும் போதுமான வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட்டது.

அவர்கள் சூத்திரர்களுக்கு மற்றும் பஞ்சமர்களுக்கு எதிராக இருந்த பொது வழி, போக்குவரத்து, உணவு விடுதிகள் மற்றும் பொது கிணறுகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் இருந்த பாகுபாடுகளை நீக்கினர். இந்து சமய அறநிலைய வாரியத்தை அமைத்ததின் மூலம் ஆலய விவகாரங்களை ஒழுங்குபடுத்தினர். பஞ்சமர்களுக்கு நிலத்தை ஒதுக்கீடு செய்து கொடுத்தனர் (பஞ்சமி நிலம்) புதிய நகரங்களையும், தொழிற்பேட்டைகளையும் அறிமுகப்படுத்தினர். ஒடுக்கப்பட்டோரின் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதற்கு சிறப்பு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதனால் சில பள்ளிகளில் "மதிய உணவு திட்டத்தை" பரிசோதனை முறையில் கொண்டுவந்தனர். மருத்துவ கல்விக்கு சமஸ்கிருத அறிவு அடிப்படைத் தகுதி என்பது நீக்கப்பட்டு பிராமணரல்லாத மாணவர்கள் மருத்துவக் கல்வியில் நுழைவதற்கு வழி செய்யப்பட்டது. டாக்டர். முத்துலட்சுமி அவர்களின் முயற்சியால் இந்தியாவில் முதல் முறையாகதேவதாசிமுறைஒழிக்கப்பட்டதுடன், பெண்கள் வாக்குரிமையைப் பெற்றனர்.

கூட்டுறவு சங்கங்கள் மேம்படுத்தப்பட்டன. மிராசுதார் முறை ஒழிக்கப்பட்டதுடன் மற்றும் 1923 ஆம் ஆண்டு நீர்ப் பாசனத்திட்டங்களும் உருவாக்கப்பட்டன. மேலும் இந்த ஆட்சிக்காலத்தில் தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (1929) மற்றும் ஆந்திரா பல்கலைக் கழகம் (1926) ஆகியவை உருவாக்கப்பட்டன. சில துறைகள் ஒதுக்கப்பட்டாலும் நீதிக் கட்சி மட்டுமே மிகவும் சிறப்பான அரசாங்கத்தை கொடுத்தது.

14.5 பெரியார் ஈ.வெ.ராமசாமி

ராஜாஜி அரசாங்கம் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவது என முடிவெடுத்ததை தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை அழித்து "வட இந்திய ஏகாதிபத்தியத்தை" நிறுவும் முயற்சி என பெரியார் கருதினார். மேலும் இந்தி திணிப்பு என்பது திராவிடர்களை அடிமைப்படுத்தி ஆரியர்களின் மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான முயற்சி என்று பெரியார் கூறினார்.

சென்னை மாகாணத்தில் மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றதன் விளைவாக மாகாண அரசாங்கத்தால் பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். பதினைந்து ஆண்டுகளில் இருபத்து மூன்று முறை சிறை சென்றார் என்பதனால் 'சிறைப்பறவை' என்றும் அடைமொழியிட்டு அழைக்கப்பட்டார். 1938 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்காகசிறையில்அடைக்கப்பட்டிருந்த போது அவர் நீதிக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டு நீதிக் கட்சியானது ஆங்கிலேய அரசாங்கத்தின் கீழ் தமிழ்நாடு தனிநாடாக வேண்டும் என்ற தீர்மானத்தை இயற்றியதுடன் இது ஆங்கிலேய அரசாங்கத்தின் இந்தியாவிற்கான அமைச்சருடைய நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்றது. சென்னை மாகாண காங்கிரசில் பெரியார் முன்னோடியாக இருந்ததால் அரசியல் அரங்கில் பிராமணரல்லாதோர் அரசியலில் பங்குபெறுவதற்கான விகிதாச்சார பிரதிநிதித்துவத்திற்குச் சாதகமாக காங்கிரசில் தீர்மானம் கொண்டு வந்ததில் மிகச் சிறப்பாக தனது முயற்சியை செய்தார். வைக்கம் சத்தியாகிரக போராட்டத்திற்கு தனது சிறப்பான தலைமையை அளித்ததுடன் காங்கிரஸ் கட்சி நிறுவிய சேரன்மா தேவி குருகுலத்தில் நடந்த சாதிப்பாகுபாட்டிற்கு எதிராக பிரச்சாரம் செய்தார்.

பெரியார் தன்னுடைய திட்டங்களை காங்கிரசு கட்சி ஏற்றுக்கொள்ளச் செய்வதில் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்தபோது காங்கிரசை விட்டு விலகி 1925 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார். இவ்வியக்கம் தேர்தல் அரசியலை தவிர்த்ததுடன் சமூக சீர்திருத்தம், சாதிமுறையை ஒழிப்பது, மாண்பற்ற தன்மையை நீக்குவது, பெண்கள் மீதான பாலின அடிப்படையிலான தடை நீக்கம், பரம்பரை அர்ச்சகர் உரிமையை எதிர்ப்பது போன்றவற்றிற்காக பிரச்சாரம் செய்தது. சுயமரியாதை இயக்கம் மிகத் தீவிரமான பிரச்சாரத்தை மேற்கொண்டு பழங்காலம் முதலான மூடநம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் எதிர்த்ததுடன் பகுத்தறிவற்ற மரபுகள் மற்றும் சமத்துவமற்ற தன்மைகள் நீடித்திருப்பதை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் மதத்தின் பங்குப்பற்றியும் வினா எழுப்பியது. இந்த சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு மாண்பு மறுப்பினை எதிர்த்தல் மற்றும் தனிமனித சமத்துவம் (பெண்கள் உட்பட) போன்றவை மரபு மற்றும் மதத்தின் கோரப்பிடியின் கீழ் இருப்பதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தது.

சுயமரியாதை இயக்கம் அதன் இயக்க உறுப்பினர்களுக்கு சாதி துணைப்பெயர்களை துறப்பதுடன், சாதி-மத அடையாளங்களையும் கைவிட ஆணையிட்டது. அது சாதியற்ற, புரோகிதர்அற்ற, சம்பிரதாய சடங்குகள் அற்ற ஒப்பந்தத் திருமணங்களை அறிமுகம் செய்தது. இது சுயமரியாதைத் திருமணம் எனப்பட்டது. இவ்வியக்கம் தீண்டாமைக்கு எதிராக மட்டும் போராடவில்லை, மாறாக சாதிமுறை அமைப்பு மற்றும் சாதி அடிப்படையிலான பலவீனங்கள், தனிமனிதர்கள் மீது திணிக்கப்படும் மாண்பு குறைவு நடவடிக்கைகள் ஆகியவற்றினையும் எதிர்த்து போராடியது.

சுயமரியாதை இயக்கம் வெறும் பெயருக்காக மட்டும் பெண்ணுரிமை பற்றி பேசவில்லை. அது பெண்களின் சம உரிமை, சமநிலை மற்றும் சமவாய்ப்புக்காக பிரச்சாரம் செய்தது. பெண் விடுதலையில் சுயமரியாதை இயக்கத்தின் பங்குப்பணி ஓர் ஈடு இணையில்லாதது, என்பதால் அதன் காரணமாகவே பெண்கள் மாநாட்டில் ஈ.வெ. ராமசாமிக்கு "பெரியார்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. பெரியாரின் நாளேடுகளான "குடியரசு," " புரட்சி", பின்பு 'விடுதலை' போன்றவை சுயமரியாதைக் கருத்துக்களை சிறப்பான முறையில் பிரச்சாரம் செய்தன.

14.6 சுயமரியாதை இயக்கம்

1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் முதலாவது சுயமரியாதை மாநாடு நடந்தது. 1937ஆம் ஆண்டு ராஜாஜி என்று புகழ்பெற்ற C.ராஜகோபாலாச்சாரியின் தலைமையில் வழிநடத்தப்பட்ட காங்கிரசு கட்சி ஒரிடத்தை தவிர அனைத்து இடங்களிலும் வெற்றிப்

www.tnschoolbooks.in

பெற்றது. ஆனால் காங்கிரசு கட்சியின் வெற்றியானது நீதிக்கட்சியின் வீழ்ச்சினால் கிடைத்ததாகும். காங்கிரசு அரசாங்கம் அமைக்கப்பட்டு, சென்னை மாகாணத்தின் முதன்மை அமைச்சராக ராஜாஜி ஆனார்.

அதிகாரத்திற்கு வந்த உடனே காங்கிரசு அரசாங்கம் பள்ளிக் கூடங்களில் இந்தியினை கட்டாயப்பாடமாக அறிமுகப்படுத்தியது. பெரியார் இந்தி எதிர்ப்பு போராட்டத்தினை தொடங்கினார். இக்கால கட்டத்தில் பொதுவுடைமைக் கட்சி (முன்னதாக 1925-இல் உருவாக்கப்பட்டது) சமதர்மத் திட்டங்களுக்காக தொழிலாளர் இயக்கங்களை ஒன்றிணைத்து தீவிரமாக பரப்புரை செய்து கொண்டிருந்தது. M. சிங்காரவேலர் மற்றும் அவரின் உடன் இருந்தோர் சுயமரியாதை இயக்கத்தின் சமூக சீர்திருத்த திட்டங்களால் கவரப்பட்டனர். இதன்படி சமூகங்களின் பொருளாதார திட்டங்களுக்கான ஆதரவை விரிவுபடுத்துபடுவதுடன், ஓர் பொதுத் திட்டத்தின் அடிப்படையில் செயலாற்ற ஒத்துக்கொண்டனர். (ஈரோடு திட்டம்).

சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்கள்

அ. திராவிட சமுதாயத்தை சீர்திருத்துவது மற்றும் அதனை உண்மையான பகுத்தறிவுடையதாக்குதல்.

ஆ. திராவிடர்களின் பண்டைய தமிழ் பண்பாட்டினை அவர்களுக்குக் கற்பித்தல்.

இ. ஆரிய பண்பாட்டின் ஆதிக்கத்தில் இருந்து திராவிட சமூகத்தைக் காப்பாற்றுதல்

ஈ. மூடநம்பிக்கையான நடவடிக்கைகளை நீக்குவதன் மூலம் இந்து மதத்தை சீர்திருத்துவதுடன் பிராமணர்களின் செல்வாக்கினைக் குறைத்தல்.

பெரியார் பொதுவாக பிராமணரல்லாதவர்களிடம் குறிப்பாக இளைஞர்களிடம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தொன்மையான திராவிட பண்பாட்டின் புகழை மீட்டெடுக்க விரும்பினார். பிராமண புரோகிதர்கள் இல்லாத சுயமரியாதைத் திருமணத்தை மேற்கொள்ள ஆதரவு தெரிவித்தார். அவர் மத விழாக்களை மக்கள் பின்பற்றுவதை ஆதரிக்கவில்லை. எந்த ஒரு சமூக நிகழ்வுகளிலும் பிராமணர்களின் சேவைகளை பயன்படுத்தாமல் இருக்கச் செய்தார்.

நீதிக் கட்சியின் வீழ்ச்சி

1929-ஆம் ஆண்டு வரை சுயமரியாதை இயக்கமானது சென்னை மாகாணத்தில் ஓர் முன்னோடி இயக்கமாக இருந்தது. 1930 ஆம் ஆண்டுகளில் சென்னை மாகாணத்தில் அதன் புகழ் மங்கத்தொடங்கியது. இந்த வீழ்ச்சிக்கு மூன்று முக்கிய காரணங்கள் இருந்தன. ஒன்று, இந்த இயக்கமானது ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை பிரிவு மக்களிடையே ஆதரவை இழந்தது. இரண்டாவதாக, பெரியார் தலைமையில் இருந்த சுயமரியாதை இயக்கம் மிகவும் புரட்சிகரமான சீர்திருத்த இயக்கமானது. இறுதியாக உயர்குடியின மற்றும் ஆங்கில ஆதரவு கண்ணோட்டம் ஆகியவை பெருமளவு அதன் வீழ்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களித்தன.

14.7. இந்தி எதிர்ப்பு போராட்டம்

நீதிக் கட்சியின் வீழ்ச்சியும், தேர்தல் அரசியலில் நுழைய பெரியார் மறுத்ததும், வளர்ந்து வந்த மகாத்மா காந்தியின் புகழும், இந்திய தேசிய காங்கிரசை 1937 ஆம் ஆண்டு சென்னை மாகாண தேர்தலில் வெற்றிபெற செய்தது. ராஜாஜி முதல் அமைச்சரானார்.

அவர் முழுமையான மது விலக்கு (மது விற்கத் தடை) மற்றும் ஜமீன்தாரி முறை ஒழிப்பை நடைமுறைப்படுத்தினார். மேலும் ஒடுக்கப்பட்டோர் ஆலய நுழைவுக்கு இருக்கும் தடையை நீக்குவதற்கு சட்டம் கொண்டுவந்தார். இருந்தபோதிலும், இந்தி மொழியை கட்டாயமாக பள்ளியில் அறிமுகப்படுத்திய நடவடிக்கையானது பல பள்ளிக் கூடங்களை மூடுவதற்கு காரணமானது. இது சுயமரியாதைக்காரர்கள் மற்றும் தேசியவாதிகளான மறைமலை அடிகள்

11th Std Political Science Tamil_Unit-14.indd 283 07/02/2023 19:50:29

www.tnschoolbooks.in

உங்களுக்குத் தெரியுமா?

வ.எண்.	சென்னை மாகாணம் முதலமைச்சர்கள்	ஆண்டு
1	அ. சுப்பராயலு	1920 – 1921
2	பனகல் ராஜா	1921-1926
3	பி. சுப்புராயன்	1926 1930
4	பி. முனுசாமி	1930 1932
5	பொப்பிலி ராஜா	1932 -1937
6	பி.டி. இராசன்	1936
7	கே.வி. ரெட்டி	1937
8	சி. இராஜாஜி	1937 - 1939
(குறிப்பு: தமிழ் நாடு அரசு மாநில ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்ட வருடம் 1946 அக்டோபர் 20 முதல் ஏப்ரல் 30)		
9	த. பிரகாசம்	1946 -1947
10	ஓ.பி. இராமசாமி	1947 – 1949
	முதலமைச்சர்கள் (தேர்தல் நடைமுறைக்குப் பிறகு)	
11	பி.எஸ். குமாரசாமி ராஜா	1949-1952
12	சி. இராஜாஜி	1952 - 1954
13	கு. காமராஜ்	1954-1957
14	கு. காமராஜ்	1957-1962
15	கு. காமராஜ்	1962-1963
16	எம். பக்தவச்சலம்	1963-1967
17	சி.என். அண்ணாதுரை	1967-1969
18	மு. கருணாநிதி	1969-1971
19	மு. கருணாநிதி	1971-1976
20	எம்.ஜி. இராமச்சந்திரன்	1977-1980
21	எம்.ஜி. இராமச்சந்திரன்	1980-1984
22	எம்.ஜி. இராமச்சந்திரன்	1985-1987
23	ஜானகி இராமச்சந்திரன்	1988
24	மு. கருணாநிதி	1989-1991
25	ஜெ. ஜெயலலிதா	1991-1996
26	மு. கருணாநிதி	1996-2001
27	ஜெ. ஜெயலலிதா	2001-2001
28	ஓ. பன்னீர்செல்வம்	2001-2002
29	ஜெ. ஜெயலலிதா	2002 -2006
30	மு. கருணாநிதி	2006 - 2011
31	ஜெ. ஜெயலலிதா	2011
32	ஓ. பன்னீர்செல்வம்	2012 (இடைக்கால)
33	ஜெ. ஜெயலலிதா	மே 16, 2016 – டிசம்பர் 5 2016
34	ஓ. பன்னீர்செல்வம்	டிசம்பர் 2016 – பிப்ரவரி 2017
35	க. பழனிசாமி	16 பிப்ரவரி 2017 - மே 2021
36	மு. க. ஸ்டாலின்	7 மே 2021 முதல்

11th Std Political Science Tamil_Unit-14.indd 284 07/02/2023 19:50:29

போன்றோரை ஆத்திரமடையச் செய்தது. இதனால் 1937 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு அனைவரும் ஒன்று சேர்ந்தனர். பெரியார் உள்ளிட்ட ஆயிரக் கணக்காண போராட்டக்காரர்கள் கைதானார்கள், மேலும் பல பேர் சிறையிலேயே இறந்தனர்.

1944 –சேலம் மாநாடு

1944–ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் நடைபெற்ற சேலம் மாநாட்டில், ஏற்கெனவே பெரியாரின் தளபதியாகிவிட்ட திறமையான சொற்பொழிவாளரான சி.என். அண்ணாதுரை நீதிக் கட்சியின் பெயரை திராவிடர் கழகம் (தி.க) என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை கொண்டுவந்தார். பெரியார் "திராவிட நாடு" மாநாட்டைக் கூட்டி திராவிடர்களுக்குத் தனி "திராவிட நாடு" கோரினார். மேலும் அவரின் புகழ் பெற்ற வாசகமான "திராவிட நாடு திராவிடர்களுக்கே" எனவும் முழக்கமிட்டார். தனி "திராவிட நாடு" கோரிக்கையைத் தவிர திராவிடர் கழகமானது சாதியற்ற சமூகத்தை ஏற்படுத்துதல், மதச் சடங்குகளைக் கண்டித்தல், பழமை மற்றும் மூடநம்பிக்கைகள் அற்ற சமூகத்தை அமைத்தல் ஆகியவற்றை விரும்பியது.

திராவிடர் கழகமானது கிராம மற்றும் நகர் புறங்களில் குறிப்பாக மாணவர்களிடத்தில் மிகவும் புகழ்பெற்றது, பல பிராமணர் அல்லாத தலைவர்கள் மற்றும் மாணவர்கள் தங்களுடைய பெயர்களை தூய தமிழில் மாற்றி கொண்டனர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் –1965

1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் இந்திய அரசு அமைப்புச் சட்டத்தின் உறுப்பு 313–ன் படி இந்தி மொழி இந்திய நாட்டின் அலுவலக மொழியாக ஆக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் இந்த முடிவை எதிர்த்து 1965 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாளை தி.மு.க. துக்க தினமாக அனுசரிக்கத் தீர்மானித்தது. அதன் பல தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தமிழ்நாடு பெருமளவிலான இந்தி எதிர்ப்பு போராட்டங்களைச் சந்தித்தது. இந்த



கிளர்ச்சியால் தி.மு.க. மாணவர் சமூகத்திடம் இருந்து பெருமளவு ஆதரவை பெற்றது. இதன் மற்றொரு பக்கம் காங்கிரசு கட்சி தமிழ்நாட்டில் தனது ஆதரவையும், தளத்தையும் இழந்தது. இதற்கிடையில் தி.மு.க. "திராவிட நாடு" கோரிக்கையை திரும்ப பெற்றுக்கொண்டு தமிழ் நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற தேர்தல் அரசியலில் ஊக்கத்துடன் பங்கெடுத்தது.

14.8. திராவிட இயக்கம்: இரண்டாம் உலகப்போர் காலத்திலும் அதன் பின்னரும்

1939ஆம் ஆண்டு இந்தியா இரண்டாம் உலகப்போரில் ஆங்கிலேய அரசாங்கத்தால் ஈடுபடுத்தப்படுவதை விரும்பாத காங்கிரசு அமைச்சரவை பதவியை துறந்தது. பெரியார் திராவிட நாடு கோரிக்கையை எழுப்பினார். 1944 ஆம் ஆண்டு நீதிக்கட்சி பெரியார் தலைமையிலான சேலம் மாநாட்டில் அதன் பெயரை "திராவிடர் கழகம்" என மாற்றியும், திராவிட நாடு அடைவதே தனது லட்சியம் என்றும் அறிவித்து, சமூக பண்பாட்டு சமத்துவத்திற்கு முன்பாக விடுதலை அடைவது தமிழர்களின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று கூறினார். 1949 ஆம் ஆண்டில், திராவிட கழகத்தை விட்டு பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாதுரையால் ஆரம்பிக்கப்பட்டது.

1951 ஆம் ஆண்டில் உச்ச நீதி மன்றமானது உயர்கல்வியில் சாதிவாரி இடஒதுக்கீட்டை உடைத்து எறிந்தது. உடனடியாக பெரியாரின் திராவிடர் கழகம் மீண்டும் சாதிவாரி இடஒதுக்கீட்டைத் திரும்ப பெற போராட்டத்தை துவக்கியது.

> சட்டமும் விதிமுறைகளும் மக்களுக்காகவே ஏற்பட்டவை. சட்டத்துக்காகவும், விதிமுறைக்களுக்காகவும் மக்கள் இல்லை.
> –பெருந்தலைவர் காமராஜ்.



11th Std Political Science Tamil_Unit-14.indd 285 07/02/2023 19:50:29

திராவிட முன்னேற்ற கழகமும் கூட இந்த போராட்ட இயக்கத்தில் சேர்ந்து கொண்டது. காங்கிரசு தலைவர் காமராஜர் இந்த சிக்கலை மத்தியில் இருக்கும் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார். இதனைத் தொடர்ந்து சமூக மற்றும் கல்வி அடிப்படையில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குச் சாதகமாக இடஒதுக்கீடு அளிக்கும் முதலாவது நாடாளுமன்ற சட்டத் திருத்தம் இயற்றப்பட்டது.

14.9. ராஜாஜி ஆட்சி:– (1952–54)



சென்னை மாகாண அரசியலானது குடியரசு இந்தியாவில் பழமை மாறா சக்திகளுக்கும், சீர்திருத்தவாதிகளுக்கும் இடையே தொடர்ந்து நடக்கும் போராட்டத்தின் சாட்சியாகவே இருந்தது. சென்னை மாகாணத்தின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையை வழிநடத்திய திரு. சி. ராஜகோபாலாச்சாரி, மீண்டும் குடியரசினுடைய அரசமைப்பின் கீழ் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை குறைத்தார். பள்ளிகளில் இந்திய மொழியை திணித்தார், புதிய பள்ளிக் கூடங்களில் பகுதி நேரமாக கற்பதற்கு பரம்பரைத் தொழில் எனப்படும் (குலக்கல்வி) புதிய தொடக்க கல்வி திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

ராஜாஜியின் இந்த நடவடிக்கைகளை எதிர்த்து திராவிடத் தலைவர்கள் மாநிலம் முழுவதும் போராடத் தொடங்கினார். காங்கிரசு தலைவர்களின் ஒரு பகுதியினரும் ராஜாஜியின் திட்டத்தால் கோபம் அடைந்தனர். இதுவே ராஜாஜி பதவி விலகுவதற்கு காரணமாக அமைந்தது. அவரைத்தொடர்ந்து காமராஜர் முதலமைச்சரானார்.

14.10 காமராஜர் காலம் (1954–1963)

காமராஜர் தொடக்கக் கல்வித்திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவந்ததுடன் குலக்கல்வித் திட்டத்தை ஒழித்தார். பள்ளிகளின் எண்ணிக்கையை பன்மடங்கு உயர்த்தினார், பல அணைகளைக் கட்டி நீர்பாசன வசதியை உயர்த்தினார். நிறைய தொழிற்பேட்டைகளை (Industrial Estates) அமைத்தார். அதன் மூலம் மாநிலத்தில் வியக்கத்தக்க அளவிற்கு தொழில் வளர்ச்சியை உறுதி செய்தார். ஏழை கிராமபுற குழந்தைகளும் கல்வி பெறச் செய்தார். அவர் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

திராவிட கட்சிகளின் ஆட்சி

1967–ஆம் ஆண்டு பொது தேர்தலில் காங்கிரசு கட்சி தோற்கடிக்கபட்டது. தி.மு.க. வெற்றி பெற்று சி.என்.அண்ணாதுரை முதலமைச்சரானார். அனைத்து ஏழைகளுக்குமான வீட்டு வசதி, படியரிசி திட்டத்தின் மூலம் உணவு பாதுகாப்பிற்கு முன்னோடியாக இருந்தது மற்றும் குடிசை மாற்றுவாரியம் அமைத்தது போன்றவற்றால் நகர்புற ஏழை மக்களிடம் போதுமான அளவு அண்ணாவிற்கு ஆதரவு பெருகியது. மிகவும் முக்கியமாக 1969 ஆம் ஆண்டு சி.என். அண்ணாதுரையின் தலைமையிலான அரசாங்கம் "மெட்ராஸ்" மாநிலத்தின் பெயரை "தமிழ்நாடு" என பெயர்மாற்றம் செய்தது. அக்கட்சியின் இதர முக்கிய சாதனைகள்.

உங்களுக்குத் தெரியுமா?

1956–இல் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் மூலமாக சென்னை மாகாணத்தில் இருந்து மலையாளப் பகுதிகள் கேரளாவிற்கும், தெலுங்கு பகுதிகள் ஆந்திரப் பிரதேசத்திற்கும், கன்னடப் பகுதிகள் மைசூர் மாநிலத்திற்கும் தரப்பட்டது. இங்ஙனம் சென்னை மாகாணம் தமிழர்களின் மாநிலமாக உருவானது.

காமராஜர் ஓர் நிலையான ஆட்சியைத் தந்தார்.

1. 75 மைல் தொலைவிற்கு மேல் உள்ள பேருந்து தடங்களை தேசியமயமாக்கியது.
2. அனைத்து சாதி ஏழை மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு முந்தைய கல்வி மற்றும் தொழிற்கல்விக்கு முந்தைய படிப்புகளுக்கு கல்வி கட்டண விதிவிலக்கு அளிக்கப்பட்டது.
3. இரண்டாவது உலக தமிழ் மாநாடு நடத்தப்பட்டது.
4. தமிழக ஏழை மக்களுக்கு மானிய விலையில் அரிசி வழங்கப்பட்டது.

14.11. தமிழ்நாட்டில் சுதந்திரத்திற்குப் பிறகு திராவிட ஆட்சி

கடந்த 62 ஆண்டுகளாக தமிழகத்தை திராவிட கட்சிகள் ஆட்சி செய்து வருகின்றன. 1957–ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அரசியலில் நுழைய தீர்மானித்தது. இந்திய பகுதிகளை சீனா ஆக்கிரமிப்பு செய்ததின் விளைவாகவும், புதிதாக திருத்தம் செய்யப்பட்ட தேர்தல் விதிகளை கடந்து வரவும், தனது "திராவிட நாடு" கோரிக்கையைக் கைவிட்டது. 1967–ஆம் ஆண்டு தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. அண்ணாதுரை சிறிது காலமே ஆட்சி புரிந்தார். (1967–1969), இருந்த போதிலும், சென்னை மாநிலத்தை தமிழ்நாடு என்றும், திருமணச் சட்டத்தை இயற்றியது, மத்திய அரசாங்கத்தின் மும்மொழிக் கொள்கையை எதிர்த்தது. தமிழகத்தில் இரு மொழி கொள்கையை (ஆங்கிலம் மற்றும் தமிழ்) நடைமுறைப்படுத்தியது ஆகியவை அவரின் குறிப்பிடத்தக்க சாதனைகள் ஆகும்.

சி.என். அண்ணாதுரை முதன்முறையாக, மலிவு விலை அரிசி திட்டத்தை அறிமுகப்படுத்தினார். (படி அரிசி, ஒரு ரூபாய்) அவருக்கு பின் வந்த திரு. மு. கருணாநிதி அம்மரபினைத் தொடர்ந்தார்.

1972 ஆம் ஆண்டு எம்.ஜி. ராமச்சந்திரன் தன்னுடைய திராவிட கட்சியை தொடங்கினார். (அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் –அ.இ.அ.தி.மு.க) 1977–ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றினார். இதனை 1987–இல் தனது இறப்பு வரை தக்கவைத்துக் கொண்டார். அதன்பிறகு மு.கருணாநிதி தலைமையில் தி.மு.க.வும் செல்வி. ஜெ. ஜெயலலிதா தலைமையில் அ.இ.அ.தி.மு.க-வும் அடுத்தடுத்த தேர்தல்களில் மாறிமாறி வெற்றி பெற்று அமைச்சரவையை ஏற்படுத்தினர். மேலும், இவை இரண்டோடு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் போன்ற உடைப்பின் வழி திராவிட கட்சிகளும் சில இருக்கின்றன.

அறுபது வருடங்களுக்கும் மேலாக தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு திராவிட ஆட்சி பங்களித்துள்ளது. அவர்கள் தமிழ் மொழியின் நலன், தமிழக மக்கள், தமிழ்நாடு ஆகியவற்றின்

www.tnschoolbooks.in

நலனை உறுதியுடன் பாதுகாத்தனர். சாதாரண மக்களின் துன்பங்களை போக்குவதற்காக பல்வேறு சமூக நலத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவை மலிவு விலையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தது. பின்னர் இலவச அரிசித்திட்டம், சத்துணவுத் திட்டம், பட்டபடிப்பு வரை இலவச கல்வி, விவசாயத்திற்கு இலவச மின்சாரம், "சைக்கிள் ரிக்‌ஷா ஒழிப்பு", "கையால் மலம் அள்ளுவது ஒழிப்பு", கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான "தொட்டில் குழந்தை திட்டம்", அமைப்பு சார பணியாளர்களுக்கு பல்வேறு நலவாரியங்கள், இன்னும் கூறினால் மாற்றுப்பாலினத்தவர் நலன் போன்றவற்றை உறுதி செய்தன. ஒருவரை ஒருவர் அழிக்கும் சாதி சண்டைக்கும் "சமத்துவபுரமும்", "உழவர் சந்தையும்" உருவாக்கப்பட்டன.

குடிசைகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்கப்பட்டது. குடிசைவாசிகளின் குடியிருப்புத் தேவைக்கு குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்காக வியக்கத்தக்க அளவு தொழில் வளர்ச்சி அதிகரிக்கப்பட்டது. இந்த வளர்ச்சியின் விளைவாக தமிழ்நாடு மனித வள மேம்பாட்டுக் குறியீட்டில் (HDI) உயர்ந்த மதிப்பைப் பதிவு செய்தது. இன்று தமிழ்நாடு மோட்டார் வாகனத்தொழில், (தானியங்கி), மின்னணு, மற்றும் மருந்து உற்பத்தி துறைகளில் முன்னணி நிலையில் இருக்கிறது. அதன் புதிய பொருளாதார மண்டலங்கள் பெருமளவு முதலீடுகளை ஈர்த்துள்ளன. தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாட்டின் சாதனைகள் அனைவராலும் புகழ்ந்து பேசப்படுகிறது. சாலைகள், துறைமுகங்கள், மின்சாரவசதி, திறன் பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பது போன்றவைகள் தொழில் வளர்ச்சியை எளிமைப்படுத்தியுள்ளன.

பல்வேறு வகைகளில் பன்மடங்கு பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கைகள் உயர்ந்துள்ளன. இங்கு பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையும் பலமடங்கு அதிகரித்துள்ளது. இவற்றுள் தனித்தன்மையான பல்கலைக் கழகங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் பெண்களுக்கென்று தனியாகப் பெண்கள் பல்கலைக் கழகம் உள்ளதுடன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், சட்டம், மருத்துவம், சித்த மருத்துவம், விளையாட்டு போன்றவற்றிற்கும் தனியாகப் பல்கலைக்கழகம் உள்ளன. தமிழ்பல்கலைக்கழகம் மூலம் தமிழ்மொழி மேம்பாடு, தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், உலகத் தமிழ்மாநாடு, செம்மொழி மாநாடு, எழுத்து சீர்திருத்தம் என தமிழ்மொழியை அனைத்து வகையிலும் முன்னேற்றுவதற்கு நடிவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

திராவிட கட்சிகள், அண்ணாதுரையின் காலத்தில் இருந்து மதச்சார்பற்ற தன்மை மாநில தன்னாட்சி போன்றவற்றிற்காகப் பாடுபட்டிருக்கிறது. திராவிடக் கட்சிகள் தேசிய அரசியலின் நீடித்த தன்மைக்குக் கூட பங்காற்றியிருக்கின்றன. தமிழகத்தில் திராவிட அரசியல் செல்வாக்கு தொடர்ந்து வல்லமை பெற்றதாக இருக்கிறது.

கலைச்சொற்கள்: Glossary

கூட்டணி: அரசியல் கட்சிகள், குறிப்பாக தேர்தல் நேரத்தின் பொழுது உருவாக்கி கொள்ளும் தற்காலிக உடன்படிக்கை ஆகும்.

திராவிடர்: தென்னிந்திய பகுதிகளில் பேசப்படும் குடும்ப மொழிகளின் பகத்தினை குறிக்கும். குறிப்பாக தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரா பிரதேசம் மற்றும் இலங்கை ஆகிய பகுதிகளில் வாழும் திராவிடமொழி பேசும் மக்கள்.

மின்ஆளுகை: மின்-ஆளுகை என்பது பொதுமக்களுக்கு தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பத்தின் (ICT) பயன்பாட்டின் மூலம் சேவை வழங்குதல் ஆகும்.

மக்கள் ஈர்ப்புவாதம்: பொதுமக்களுக்கு நலகத் திட்டங்களை வழங்க அவர்களின் ஆதரவை பெறும் நோக்கத்துடன் செய்யப்படும் அரசியல் நடவடிக்கை ஆகும்.

முற்போக்குவாதம்: தங்கள் கொள்கைகளை, திட்டங்களை மிகவும் தீவிரமான வழிகளில் ஆதரித்து பேசுவோர்.

பிராந்தியவாதம்: இது ஒரு அரசியல் கொள்கை. இது ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது மாநிலத்தின் நலனில் குறிப்பாக ஆவணம் செலுத்தும், தேசத்திற்காக அல்ல.

11th Std Political Science Tamil_Unit-14.indd 288 07/02/2023 19:50:31

இடஒதுக்கீடு: இது முக்கியமாக, ஒதுக்கி வைக்கப்பட்ட சமூகத்தினரை சமூக-அரசியல்-பொருளாதார அரங்கில் அதிகாரமளிப்பதைக் குறிக்கும். நேர்முக பாகுபாடு என்பது இதன் பொருளாகும்.

சமூகநீதி: இது ஒரு அரசியல் கருத்து எல்லா மக்களும் செல்வம் சுகாதாரம் நலம், நீதி வாய்ப்பு, ஆகியவற்றை சமமாக பெறும்படியாக செய்ய வேண்டும் என்பதை தாங்கிப் பிடிக்கிறது.

சமூக நலம்: ஏழைகள், தேவை உடையோர், ஒதுக்கப்பட்ட மக்கள் ஆகியோருக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவி, சேவைகளைக் குறிக்கும்.

மாநில சுயாட்சி: மாநில சுயாட்சி என்பது அரசாங்கங்கள் அரசியல் மற்றும் பொருளாதார அரங்கில் முழுமையான தன்னாட்சியுடன் இருப்பதற்கான நிலைப்பாட்டைக் கொண்ட ஒரு கோட்பாடாகும்

மதிப்பிடுதல் (Evaluation)

I. சரியான விடையை தேர்ந்தெடுக்க

1) எந்த ஆண்டில் சென்னை மாகாணம் 'தமிழ்நாடு' என பெயர் மாற்றப்பட்டது?

அ) 1969 ஆ) 1975 இ) 1950 ஈ) 1965

2) 'சென்னை வாழ் மக்கள் சங்கம்' நிறுவப்பட்ட ஆண்டு

அ) 1947 ஆ) 1849 இ) 1852 ஈ) 1860

3) தமிழகத்தில் குலக்கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?

அ) ராஜாஜி ஆ) ராமசாமி

இ) காமராஜ் ஈ) கருணாநிதி

4) சென்னைப் பல்கலைக்கழகம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

அ) 1885 ஆ) 1947 இ) 1857 ஈ) 1965

5) மக்கள் தொகை அடிப்படையில் தமிழகம் இந்தியாவின்_______________ வது பெரிய மாநிலமாக உள்ளது?

அ) 15 ஆ) 7 இ) 3 ஈ) 14

6) நீதிக்கட்சியின் முதல் தலைவர் யார்?

அ) சுப்பராயலு ஆ) தியாகராயர்

இ) பி.டி.ராஜன் ஈ) பொப்பிலி ராஜா

7) 'வைக்கம் வீரர்' என அழைக்கப்படும் தலைவர் யார்?

அ) கு.காமராஜ் ஆ) ராஜாஜி

இ) வரதராஜீலு ஈ) ஈ.வெ.ரா. பெரியார்

8) தமிழகத்தில் சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர்

அ) ராஜாஜி ஆ) திரு.வி.க

இ) காமராஜ் ஈ) ஈ.வெ.ரா. பெரியர்

9) பொருத்துக

அ) இந்தி எதிர்ப்பு போராட்டம் – 1) 1949

ஆ) தி,மு.க வின் தோற்றம் –2) 1937

இ) மாநில மறுசீரமைப்புச் சட்டம் –3) 1919

ஈ) இரட்டையாட்சி –4) 1956

அ) 2,1,3,4 ஆ) 3,1,2,4

இ) 4,3,2,1 ஈ) 1,2,3,4

10) கீழ்கண்டவர்களுல் யார் 'பிராமணரல்லாதோர் கூட்டறிக்கையினை' வெளியிடாதவர் யார் ?

அ) சி. நடேசனார் ஆ) பி. தியாகராயர்

இ)டி.எம். நாயர் ஈ) பனகல் ராஜா

11) 'தென்னிந்திய விடுதலைக் கூட்டமைப்பு' பிற்காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது?

அ) நீதிக்கட்சி ஆ) திராவிடர் கழகம்

இ) தமிழ் கழகம் ஈ) திராவிடக் கட்சி

12) **கூற்று** : 1957 பொதுத்தேர்தலில் குளித்தலையில் வெற்றி பெற்று தமிழக சட்டமன்றத்தில் உறுப்பினராக கருணாநிதி நுழைந்தார்.

காரணம்: கருணாநிதி தமிழக முதலமைச்சரானார்.

அமைப்பு கூற்று (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

அ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது

ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.

இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது அல்ல.

ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

13) **கூற்று:** ஈ.வெ.ரா. ராமசாமி சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

காரணம்: சுயமரியாதை இயக்கம் என்பது பிராமணர் அல்லாத சாதிகள் சமமான மனித உரிமைகளால் பெறும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட இயக்கமாகும்.

அமைப்பு கூற்று (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

அ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது

ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.

இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது அல்ல.

ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

II. கீழ்கண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி

1. "திராவிடர்" என்ற சொல்லை வரையறுக்கவும்
2. தென்இந்திய விடுதலைக் கூட்டமைப்பின் நோக்கங்கள் யாவை?
3. சுயமரியாதை இயக்கத்தை பற்றி சிறுகுறிப்பு வரைக.
4. "திராவிட நாடு" கோரிக்கையின் முக்கியத்துவத்தை வெளிக் கொணர்க.
5. மாநில சுயாட்சி என்ற சொல்லை வரையறு.
6. மாற்றுப்பாலினத்தவர் நலனுக்காக நடவடிக்கைகளைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

III. கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி:–

1. நீதிக் கட்சியின் தோற்றம் பற்றி கணக்கிட்டு கொடுக்கவும்
2. "பிராமணரல்லாதோர் கூட்டறிக்கையின் முக்கியத்துவத்தை ஆராய்க.
3. 1944 ஆம் ஆண்டு சேலம் மாநாட்டின் முக்கிய முடிவுகளை விவாதிக்கவும்
4. "மும்முனைக் கிளர்ச்சி" என்பது பற்றி பொருள் கூறுக?
5. எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.இ.அ.தி.மு.க வின் சமூக நலக் கொள்கைகளைப் பற்றி விவரி.
6. ராஜமன்னார் குழு பற்றி குறிப்பு வரைக.
7. அ.இ.அ.தி.மு.க அரசாங்கத்தின் (1991–1996) மக்கள் நலன் சார்ந்த (populism) சமூக நலக் கொள்கைகளை விளக்குக.

IV. கீழ்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி:–

1. சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதோர் இயக்கம் தோன்றியதற்கான காரணங்களைக் கண்டறிக.
2. இந்தி–எதிர்ப்புப் போராட்டம் பற்றி ஓர் கட்டுரை வரைக.
3. அ.இ.அ.தி.மு.க தோன்றியதற்கான சூழ்நிலையைப் பற்றி விவரி.
4. தி.மு.க. வின் 2006 முதல் 2011 வரையிலான அரசாங்கத்தின் ஆண்டு சமூக நலக் கொள்கைகளை வெளிக்கொணர்க.

மேற்கோள் நூல்கள்

1. Baker, C.J. (1976). The Politics of South India 1820-1937, Cambridge: Cambridge University Press.
2. M.S.S.Pandian, Brahmin and Non-Brahmin: Genealogies of the Tamil Political Present, 2007.
3. V.Geetha, and S.V. Rajadurai, Towards a Non Brahmin Millenium - From Iyothee Thass to Periyar, Calcutta, Samya, 1998.
4. Hardgrave, R.L. Jr. The Dravidian Movement, Bombay: Popular Prakashan, 1965.

ICT CORNER

அலகு – 14 : தமிழக அரசியல் வளர்ச்சி

தமிழ்நாடு தேர்தல் முடிவுகளை அறிந்துகொள்ளலாம் வாருங்கள்....



தமிழ்நாடு அரசு மற்றும் அரசியல்

படிகள்

படி 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி "Tamilnadu maps elections" பக்கத்திற்குச் செல்க.

படி 2: வரைபடத்தில் சுட்டியை உருட்டி ஒவ்வொரு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரை அறிந்து கொள்க.

படி 3: இடது பக்கம் உள்ள "Assembly Constituencies of Tamil Nadu" ஐ சொடுக்கி ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியின் எல்லைகளை தெரிந்து கொள்க.

படி 4: முகப்பு பக்கத்தின் இடது பக்கம் உள்ள "Chief Ministers of Tamilnadu" சொடுக்கி முதல் அமைச்சரின் காலத்தை தெரிந்து கொள்க

உரலி :

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

இப்பக்கத்திற்கு தேவைப்பட்டால் Flash Player or Java Script ஐ அனுமதிக்கவும்

https://www.mapsofindia.com/assemblypolls/tamil-nadu/election-results.html

11th Std Political Science Tamil_Unit-14.indd 291 07/02/2023 19:50:32

அலகு 15

தமிழக அரசியல் சிந்தனைகள்

15.1 வரலாற்றுப் பின்னனி

அடிப்படையில் செம்மொழியான தமிழின் தாய்நாடு (தமிழகம்) என்பதை தமிழ்நாடு என்று அழைக்கின்றோம். இதன் அருகில் உள்ள சில பகுதிகளாக கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகாவை உள்ளடக்கியதாக தமிழகம் இருந்தது. ஸ்டராபோ கி.மு 63–முதல் கி.பி 24 வரை). வாழ்ந்த கிரேக்க வரலாற்று சிந்தனையாளர் மற்றும் புவியியலாளர்ஆவார். இவர் தமிழ் முடியாட்சியின் பாண்டியர்கள் காலத்தில் உள்ள இராஜதந்திர வரலாற்றை உற்றுநோக்கியிருந்தார். கடல் பயணங்களின் மூலமாக சேர, சோழ மற்றும் பாண்டியர்கள் கடலருகில் வாழும் மக்களிடம் தமிழரின் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள், இந்தியா மற்றும் மத்தியத்தரைக்கடல் பகுதிகளில் வர்த்தகத்தை வளர்ப்பதற்காக தமிழக கரையோரங்களில் இருந்த துறைமுகங்கள் முக்கிய மையமாக செயல்பட்டன. குறிப்பாக கி.மு 200 முதல் காலகட்டத்தைச் சார்ந்த கி.பி 300 வரையானது ஆகும். பண்டையகால துறைமுகங்களான கொற்கை, பூம்புகார், வசவசமுத்திரம், பெரிமுளா, அரிக்கமேடு, அழகன்குளம், மாமல்லபுரம் போன்றவை சிறந்தமுறையில் செயல்பட்டன. குறிப்பாக வர்த்தகம், வாணிபம் மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகள், இலங்கை, சீனா எகிப்து, கிரேக்க மற்றும் ரோமாபுரி போன்ற நாடுகளுடன் திறம்பட மேற்கொள்ளப்பட்டது. கப்பல் கட்டுதலில் பாரம்பரியமிக்க தமிழர்கள் சிறந்த கடலோடிகளான நமது முன்னோர்கள் உலகின் அடிப்படை தன்மைகளின் தாக்கங்களாக அரசியல், சமுதாயம், பண்பாடு, வர்த்தகம் மற்றும் வாணிபத் தொடர்புகளை உலகின் மற்ற நாடுகளுடன் ஏற்படுத்தினர்.

கற்றலின் நோக்கங்கள்

- மாணவர்கள் எளிதில் தமிழத்தின் பண்டைய அரசியல் கருத்துக்களைக் கற்பர்
- திருவள்ளுவரின் அரசியல் கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல்.
- பாரதியாரின் மூலமாகத் தேசியவாதத்தை புரிந்துகொள்ளுதல்.
- தமிழ்நாட்டில் தோன்றியுள்ள பொதுவுடைமைவாத கருத்துக்கள் குறிப்பாக சிங்காரவேலரின் பொதுவுடைமைவாத படைப்புக்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.
- திராவிடக் கொள்கையைப் பற்றி புரிந்துகொள்ளுதல் மற்றும் தமிழ்நாட்டின் அரசியல், சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியுள்ளதாக்கத்தை பற்றி அறிந்துகொள்ளுதல். குறிப்பாக ஈ.வெ.ரா. பெரியாரின் பங்களிப்பின் மூலமாக சமூகநீதி, சமத்துவம் விடுதலை போன்றவற்றை புரிந்துகொள்ளுதல்.
- தமிழ் இயக்கம் மற்றும் திராவிட இயக்கத்தின் முக்கிய விளக்கங்களைத் தெளிவாக விவரித்தல்.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 292 06/12/2022 12:50:43

ஏறத்தாழ (கி.மு 300 முதல் கி.பி 300) வரையிலான சங்க இலக்கியங்களில் முக்கிய ஆதாரங்களாக விளங்குவதுடன் அக்கால சமுதாயம், பொருளாதாரம், பண்பாடு மற்றும் அரசியலை பிரதிபலித்திருக்கின்றன. சங்கப்பாடலின் வகைப்பாட்டியலில் அகம் (அன்பு சார்ந்து இருத்தல்) மற்றும் புறம் (போர், நன்மை மற்றும் தீமை, சமூகம், நீதி மற்றும் முடியரசு) போன்றவற்றால் தமிழ் அரசியல் முறைமை பற்றி கூறியிருக்கின்றன. சங்க இலக்கிய புத்தகங்கள் (எட்டுத்தொகை) எட்டு நூல் திரட்டு ஆகும். அவையாவன: (1) நற்றினை (2) குறுந்தொகை (3) ஐங்குறுநூறு (4) பதிற்றுப்பற்று (5) பரிபாடல் (6) கலித்தொகை (7) அகநானூறு மற்றும் (8) புறநானூறு, இவை தவிர மேலும் ஒன்பதாவது குழுவாக விளங்கும் பாட்டுகளான பத்துப்பாட்டும் காணப்பட்டது. ஆரம்ப காலத்தில் தொல்காப்பியத்தின் முதல் இரண்டு புத்தகங்களும் தமிழ் இலக்கணமாகக் கருதப்பட்டதும் இக்காலக்கட்டத்தில்தான் என்பது நினைவு கூறத்தக்கதாகும்.

சங்க இலக்கியங்களுக்கு பிறகு சேகரிக்கப்பட்ட பிரபலமான நூற்கோவை/பாடல் திரட்டு என்பது 'கீழ்கணக்கு' என அழைக்கப்படுகிறது. இப்பதினெட்டு நூல்களின் ஒரு பகுதிதான் மிகவும் பிரபலமான சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பதினெட்டு சிறிய நூல்கள் (பதிணென் கீழ்க்கணக்கு, இது திருக்குறளையும் உள்ளடக்கியதாகும்.) அக்காலகட்டத்தில் எழுதியதாகும். பிரபந்த இலக்கியம் பல்வேறு வகையான பாடல்களைக் கொண்டிருந்தது அவை: 'கோவை', என்பது குறிப்பிட்ட கருத்திலான வரிகளைக் கொண்டிருப்பதுடன் (பொதுவாக அன்பைப் பற்றியதாகும்) 'கலம்பகம்' என்பது ஓர் பத்தியின் முடிவு என்பது அடுத்த வரிக்கு ஆரம்பமாக வழி இருப்பதுடன் (பொதுவாக அரசன் மற்றும் வீரத்தை குறிப்பிடுதல்) மேலும் 'பரணி' என்பதற்கும் வழி வகுக்கிறது. இது பாரம்பரியத்தின் சிறந்த எடுத்துக்காட்டாக பாண்டிக்கோவை, நந்திக்கலம்பகம் மற்றும் கலிங்கத்துப் பரணி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

பண்டைய கால தமிழ் இலங்கியங்களை திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை பல சங்க கால அரசியலின் தன்மை, சமுதாயம் மற்றும் பண்பாட்டினைப் பற்றிய ஆழ்ந்த நுண்ணறிவுடன் படைக்கப்பட்டு இருந்தன. தமிழ் மொழியானது தமிழ் அடையாளம், பண்பாடு, பாரம்பரியம் மற்றும் மரபுகளின் அடிப்படியாக உள்ளதாகும். நிலம், புவியமைப்பு, ஆட்சியாளர்கள் மற்றும் தலைவர்களால் வேறுபட்டு இருந்தாலும் தமிழ் பேசும் பகுதிகளில் தமிழரின் நாடு மற்றும் தேசக் கூட்டமைவு என்பது இருந்தது. கலிங்க அரசன் காரவேலா கி.மு 165 காலத்தின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்தான் 132 வருடமாக இருந்த 'தமிழ் கூட்டமைவு' என்பதை அழித்தார்' என்று அக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இதுபோன்றே தமிழ் அரசர்களின் கூட்டமைவின் பிறநாட்டு படையெடுப்பிற்கு எதிராக சண்டையிட்டதை சங்க கால இலக்கியமான 'அகநானூறு' விவரித்துள்ளது. ஆனால் தமிழ் தேசியவாதம் என்பது காலனி ஆதிக்கத்தின் விளைவினால் தோன்றியது என்று சாதாரணமாக கூறிவிட முடியாது.

தமிழ் தேசியத்தின் மூல ஆதாரங்கள் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டினுடைய வரலாற்றுடன் தொடர்புடைய பங்கு வகிப்பதாகும் இதனால் அரசியல் வரையறுக்கப்பட்டிருப்பதனை சங்க காலம் முதல் காணலாம்.

இங்கே அரசு கருத்தாக்கமும், லட்சிய அரசன் எனும் பதமும், கிரேக்கத்தில் நில எல்லைகளில் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்த நகர அரசை போன்று இருந்தது. பண்டைய தமிழ்நாடு என்பது தமிழகம் என்று அழைக்கப்பட்டது. இது மேற்கு மலையைச் சார்ந்த திருப்பதியிலிருந்து கன்னியாகுமரியின் நுனிவரை உள்ளடக்கியதாகும். இந்த நிலமானது பாரம்பரியமாக ஐந்து புவியியல் சார்ந்த பிராந்தியமாக (திணை) இயற்கைத் தன்மையுடன் பிரிக்கப்பட்டுள்ளது. மலையை சார்ந்த பகுதி (குறிஞ்சி), காடுகளை சார்ந்த

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 293 06/12/2022 12:50:43

பகுதி (முல்லை), வயல் சார்ந்த பகுதி (மருதம்), கடல் சார்ந்த பகுதி (நெய்தல்), மணல் சார்ந்த பகுதி (பாலை) ஆகியன ஐந்திணைகள் ஆகும்.

தமிழ் மொழி பேசும் பகுதிகள் சோழர்கள் (தலைநகரம் உறையூர்), பாண்டியர்கள் (தலைநகரம் மதுரை), சேரர்கள் (தற்போதைய கொங்கு நாடு மற்றும் கேரளா), பல்லவர்கள் (தலைநகரம் காஞ்சிபுரம்) என பலவாறு பிரிக்கப்பட்டு இருந்தது. தமிழ்நாடு பல்வேறு அரசர்கள் மற்றும் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டது. கடை ஏழு வள்ளல்கள் புலவர்களுக்கு வாரி வழங்கியதை பற்றி சங்கபுலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். கபிலர் மற்றும் ஔவையார் கடை ஏழு வள்ளல்களான ஆய், பாரி, ஓரி, காரி, அதியமான், பேகன் மற்றும் நல்லியைப் பற்றி குறிப்பிடுகின்றனர். ஓர் சிறந்த அரசனின் குணங்களாக அவன் பாகுபாடற்ற நீதி வழங்கும் அரசனாகவும், மக்களிடத்தில் அன்பு உடையவனாகவும், போர்களத்தில் எதிரிகளிடம் வீரத்தை வெளிப்படுத்துபவனாகவும் இருக்க வேண்டும் என குறிப்பிடுகிறது.

சபை அல்லது மன்றம் எனப்படுவது அரசன் தலைமையேற்று நடத்தும் நாட்டின் உயர்ந்த நீதிமன்றம் ஆகும். இதை போலவே ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மன்றம் உண்டு. அது அந்த கிராமத்தின் பொது இடத்தில் கூடி அந்த கிராமத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கும். போர் வீரர்கள் மிகவும் மதிப்புடன் நடத்தப்பட்டனர். போரில் அவர்கள் இறக்க நேரிட்டால் அவர்களின் நினைவாக, நினைவுத்தூண் ஒன்று ஊரில் எழுப்படும். ஆனால் போரில் ஒரு வீரன் தன் பின்புறம் காயப்பட்டு அதனால் இறந்தால் சங்க இலக்கிய காலங்களில் அது அவமானமாக கருதப்படும்.

போரின் நல்ல நடைமுறைகள் பலவற்றை சங்க இலக்கியங்கள் நிறைய தெரிவிக்கின்றன. புறநானூறு என்பது ஒரு சங்க இலக்கியம் ஆகும். இது பாண்டிய அரசனை புகழ்கிறது. அவன் பெண்கள், குழந்தைகள், நோயாளிகள் மற்றும் வயோதிக மக்கள், கால்நடைகள் இவைகள் அனைத்தையும் பாதுகாப்பான இடங்களில் போர்காலங்களில் இடம் பெயரச் செய்தான். நீதி என்பது அரசு மற்றும் அரசனின் மனசாட்சிக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். நீதி என்பது அரசனின் ஆட்சியில் ஒரு முக்கியமான கூறாக இருக்க வேண்டும். ஒரு நல்ல அரசன் எந்த சூழ்நிலையிலும் நீதியை தியாகம் செய்யக் கூடாது. அரசனின் நல்லாட்சி மற்றும் நற்செயல்கள் எப்பொழுதும் நிலையான நீடித்த புகழை கொண்டு வரும். இவைகள் தான் முக்கிய அரசியல் கொள்கைகளாக சங்க காலங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னராட்சி/முடியாட்சி தன்மையைக் கொண்டிருந்தாலும் அரசனின் சட்டப்படியான முடிவுகள் மக்களின் ஒப்புதலைச் சார்ந்தே இருந்தது. அரசன் மக்களின் ஆதரவு இருக்கும் வரை சட்டப்படியான முடிவுகளை அனுபவிப்பவராகவும் அதே சமயம் அவற்றைத் தவறாக பயன்படுத்தினால் மக்கள் ஆதரவை இழக்கவும் நேரிடும். சங்க இலக்கியம் (பட்டினப்பாலை) பல்வேறு வகையான வரிகளைப் பற்றி கூறுகின்றது. அவைகள் சுங்கவரி, வருமானவரி, பொருள் மீதுள்ள வரி மற்றும் பல வரிகள் அரசின் வருவாய்களை பெருக்கும் ஆதாரமாக கூறப்பட்டுள்ளன. எளிமையான நிர்வாக கட்டமைப்பின் வழியே (அமைச்சர்கள், அதிகாரிகள்) தமிழ் அரசர்கள் தமிழகத்தை ஆட்சி புரிந்தனர் வெளிநாட்டு வர்த்தகம், சுங்க வரி முதலானவை அரசின் வருவாயில் பெரும் பங்கு வகித்தன. பாண்டியர் கல்வெட்டில் முத்துக்குளித்தல் (கலாத்திகர்) பற்றியும் மற்றும் முதன்மை எழுத்தர்(கணத்திகன்) பற்றியும் கூறப்பட்டுள்ளது. சோழர்களின் கொடியிலும் மற்றும் நாணயங்களிலும் புலி சின்னத்தை பொறித்து இருந்தார்கள், சேரர்கள் வில் மற்றும் அம்புகளையும், பாண்டியர்கள் மீன் சின்னத்தையும் மற்றும் பல்லவர்கள் சிங்கத்தை சின்னமாக பெற்று இருந்தனர்.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 294 06/12/2022 12:50:43

ஒற்றர்கள் மூலம் உளவு பார்த்தல் என்பது நிறுவனப்படுத்தப்பட்டு நாட்டின் முக்கியமானதொரு அங்கமாக இருந்தது. நாட்டின் நிலைத்தன்மையும் அமைதியும் இதன் செயல்பாட்டை பொறுத்தே அமைந்திருந்தது. நிறுவனப்படுத்தப்படாமல் இருந்தாலும் அடிமைகள் இல்லாமலில்லை அடிமைகளை படையெடுத்தபின் பிடிப்பதும், அடிமைகளை வர்த்தகத்திற்கு பயன்படுத்தவும், பரிசுக்காக பரிமாற்றம் செய்யவும் அரசாட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது. குறிப்பாக கட்டுமானம் மற்றும் கட்டிட வேலைகளுக்கு அடிமைகள் பயன்படுத்தப்பட்டனர்.

பண்டைய தமிழில் சாதி முறை என்பது காணப்படவில்லை. வர்க்க கொள்கை மற்றும் வர்க்க கருத்து வேறுபாடுகள் அவரவர்களின் தொழில் சார்ந்த முறையில் காணப்பட்டன. சங்ககால சமுதாயத்தில் சாதிய முறை என்பது வெளியிடத்திற்குரியதாகவும் மற்றும் அறியப்படாததாகவும் இருந்தது. சமுதாயப் பிரிவுகளை வர்க்கத்தின் அடிப்படையில் சங்க புலவர்கள் தரம் பிரித்தினர்.

அவைகள்: (குடி) துடியன், பாணன் மற்றும் கடம்பன் அல்லது அரசர்(ஆட்சிபுரிபவர்),வைசியர்(வர்த்தகர்கள்) மற்றும் வேளாளர் (விவசாயிகள்) என்று குறிப்பிட்டுள்ளனர். தகுதிநிலைகளில் காணப்பட்ட வித்தியாசங்கள் தவிர்க்க முடியாததாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் வர்ண முறை எனும் சாதி அமைப்பு சங்ககால சமுதாயத்தில் சிறிதளவே காணப்பட்டன.

பண்டைய தமிழ் சமூக அமைப்புகளில் மனுதர்மம் மூலமாக சட்டமாக்கப்படவில்லை. ஆரம்பகால ஆரிய-பிராமண சாதிய அமைப்புகள் சங்க காலத்தில் குறிப்பிடப்படவில்லை. இதுபோன்ற அமைப்புகள் சங்க காலத்திற்குப் பிறகே தோன்றின. பண்டைய தமிழ் மதங்கள் நாட்டுபுற கலையை சார்ந்தே இருந்தது. இயற்கையை வழிபடுதல் மற்றும் இயற்கை காரணிகளே பொதுவாக காணப்பட்டன. முருகக்கடவுளை வழிபடுவதே தமிழ்நாட்டு பழங்குடியினரின் வழிபாட்டு மரபு ஆகும். முருகக் கடவுளை போராளிகளின்/மாவீரர்கள் கடவுளாக நாட்டுப்புற கலாச்சாரமாக செயல்படுத்தினர். உலகில் பற்றுடைய கடவுளாக தமிழ்-திராவிட மரபுகளின் கட்டுரைகளில் வேர் ஊன்ற ஆரம்பித்தது. கி.பி ஆறாம் நூற்றாண்டுக்கு பிறகே தமிழ் மற்றும் சமஸ்கிருதம் போன்ற எழுத்துகள் தோன்ற ஆரம்பித்தது.

சமஸ்கிருதமயமாதல் மெதுவாக பொது வெளிக்கு பரவ ஆரம்பித்தது. பிராமணர்கள் அரசனுக்கு ஆசி வழங்குபவர்களாகவும், மற்றவர்களை விட உயர்ந்தவர்களாகவும் கருதும் மனப்பாங்கு தொடங்கியது. இக்கால கட்டத்திற்கு பின் பிராமணர்களிடம் ஆசி பெறுவது சட்டபூர்வ வழியாக துவங்கியது. சமஸ்கிருதமயமாதலுடன் சேர்ந்து, வேத சடங்குகள், மனு கொண்டு வந்த வர்ணாசிரமம் அமைப்பு போன்றவை, ஏற்கனவே தொழில் ரீதியாக பிரிக்கப்பட்டு இருந்த திராவிட சமூகத்தை மேலிருந்து கீழாக சாதி ரீதியாக பிரித்தது.

மரபு வழி கொள்கையும் இயற்கை வழிபாடும் தமிழ் மன்னர்களிடம் பொதுவாக காணப்பட்டது. முடியாட்சியும் கலாச்சார மையத்திலிருந்து அதிகார மையத்தை நோக்கி நகர்ந்தது. இதனால், சங்க காலத்துக்கு பிந்தைய காலத்தில் அரசனின் அதிகாரங்கள் அதிகரித்து நாட்டின் மொத்த அதிகாரமும் பெற்ற ஒரே அமைப்பாக அரியனை உயர்ந்தது

அரசுரிமையானது புனிதத் தன்மையுடையதாகவும், மரபு வழியானதாகவும் பல்லவர்கள் கூறினர். பல்லவர் காலத்தில் வட இந்தியாவில் இருந்த ஆரிய கலாச்சாரம் தமிழ்நாட்டில் ஊடுருவியது. இரண்டு கலாச்சாரங்களிலும் உள்ள கருத்துக்கள், அமைப்புகள், சில ஒன்றிணையும் முரண்பட்ட சில வழக்கொழிந்து போகவும் இந்த ஊடுருவல் வழி வகுத்தது. இந்த கலப்பின் விளைவாக தமிழ் பக்தி கலாச்சாரம் தோன்றியது.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 295 06/12/2022 12:50:43

பெண்கள் மிகவும் உயரிய மரியாதையுடன் நடத்தப்பட்டனர் மற்றும் இவர்கள் அரசர்களுக்கு பாதுகாவல் மற்றும் பல்வேறு வகையான பணிகளையும் செய்தனர். ஆனால் அதிகாரங்கள் அனைத்தும் ஆண்களிடம் மட்டுமே இருந்தது. பெண்கள் பொது அவையில் பங்கேற்கலாம். ஆனால் ஆண்களே நிர்வாகிகளாகவும் மற்றும் ஆட்சியாளர்களாகவும் இருந்தனர். பெண்கள் சமூக சடங்குகளில் முக்கிய பங்கு வகித்தனர். மேலும் மரபு வழி உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் ஆண்களிடம் இருந்தாலும், குடும்பத்தில் பெண்ணின் பங்கு முக்கியமானதாக இருந்தது.

தமிழகச் சமூகத்தில் பெண்களின் பங்கை பற்றி விவாதிக்கையில் ஔவையார் பற்றி குறிப்பிடுவது அவசியமாகிறது. (ஔவையார் என்றால் மதிப்புக்குரிய பெண் என்று பொருள்) தமிழ் இலக்கியத்திற்கு எந்த பெண்மணிகளெல்லாம் முக்கிய பங்களித்தனரோ, அவர்கள் ஔவையார் என்று பட்டப்பெயரிட்டு அழைக்கப்பட்டனர். வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த ஆறு பெண் தமிழ் புலவர்களுக்கு இப்பட்டப்பெயர் வழங்கப்பட்டது.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையாரும் மற்றும் சோழர்களும் சிறந்த சிறப்புத்தன்மை வாய்ந்தவர்களாக கருதப்பட்டனர். இலக்கியம், கலாச்சாரம், உலகளாவிய அறநெறி, அரசியல் தன்மை, போர், அமைதி மற்றும் இராஜதந்திரம் போன்றவற்றில் இவர்கள் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தினர். ஔவையார் ஒன்றாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டு காலத்தில் வசித்தவர். இவர் அதியமானின் அவையில் இருந்தார். இவர் திருவள்ளுவர் மற்றும் கபிலரின் சம காலத்தவர் ஆவார். நற்றினை குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு இவற்றில் குறிப்பிடத்தக் பங்களிப்பை செய்துள்ளார். இவர் சிறந்த ஒரு தூதராகவும் இருந்தார். அதியமானுக்காக பலமுறை பல அரசர்களிடம் தூதுவனாக சென்றுள்ளார். அதியமான் அவையில் புலவராகவும், அதியமானின் உற்ற தோழராகவும் இருந்தார். தன் தூது திறமையின் மூலம் போர்களைக்கூட இவர் தவிர்த்துள்ளார்.

ஒரு முறை காஞ்சியை ஆண்ட தொண்டைமான், அதியமான் ஆண்ட தகடூரை தாக்கி போர்புரியும் எண்ணத்துடன் இருந்தான் இதை அறிந்த ஔவையார் காஞ்சி சென்று தொண்டைமானை சந்தித்து பின் வருமாறு கூறினார்.

"தொண்டைமான் அரசரே உங்களுக்கும் அதியமானுக்கும் தான் எவ்வளவு வேறுபாடு உங்களது ஆயுதக்கிடங்கில் ஆயுதங்கள் சுத்தமாகவும் பளபளப்பாகவும் நெய் பூசப்பட்டு அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பாவம் அதியமானின் ஆயுதங்கள் உடைந்தும், ரத்தக்கரை படிந்தும், பட்டறைகளில் பழுது நீக்கும் பணியிலும் உள்ளன" என்றார். தொண்டைமானை புகழ்வது போல், ஔவையார் அவனது போர் அனுபவமின்மையும், அதியமானின் தொடர்ந்த போர்களையும், போர் திறனையும் தெரிவித்து போர் வந்தால் தொண்டைமான் வெற்றி பெறுவது கடினம் என்பதையும் உணர்த்தினார்.

சோழர் காலத்தில் பத்தாம் நூற்றாண்டில் இன்னொரு புகழ்பெற்ற ஔவையார் இருந்தார். இவரே குழந்தைகளுக்கான நீதி கதைகளையும் ஆத்திச்சூடியையும் கொன்றைவேந்தனையும் எழுதியவர். சற்றே வளர்ந்த குழந்தைகளுக்காக மூதுரை மற்றும் நல்வழி என்ற இரண்டு நூல்களை இவர் எழுதியுள்ளார்.

அரசியல் சிந்தனையாளருக்கான வரையறைகளாக கீழ்க் காண்பவற்றைக் கூறலாம்:

- சமூகத்தில் சமூக மாற்றத்தை ஏற்படுத்திய கொள்கைகள், நிகழ்வுகளுக்குக் காரணியாக இருத்தல்; மக்களின் பொதுப் புத்தியில் மாற்றத்தை உருவாக்குதல்
- சமூகத்தில் திருப்புமுனை ஏற்படுத்திய அரசியல் முடிவுகளை எடுத்தல்
- சமூகத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்த பயனாளர்களுக்கும் பலன்கள் அளித்த அரசு முடிவுகளுக்குக் காரணமாக இருத்தல்

- சமூகத்தின் பல பிரிவு மக்களின் முன்னேற்றத்துக்குக் காரணமான அரசியல் கருத்துகளை பொதுக் கருத்தாக உருவாக்குதல்

அரசியல் சிந்தனையாளர்களின் நடவடிக்கைகள் புதிய அரசியல் சிந்தனைகளுக்கு ஆதரவாக மக்களின் ஈடுபாட்டினையும் பகுத்தறிவினையும் உருவாக்குகின்றன. சமகால அரசியல் களங்களில் அவர்கள் கலந்துரையாடல் மூலம் சமுதாயத்தில் தாக்கங்கள் உருவாகின்றன. அடுத்த காலகட்டத்துக்கு அறைகூவல் விடுக்கும் அரசியல் மாற்றத்துக்கான அரசியல் முடிவுகளை அவர்கள் மேற்கொள்கிறார்கள். அவர்களது அரசியல் முடிவுகள் அநேக மக்களின் அன்றாட வாழ்வில் நீண்டகால மாற்றங்களை உருவாக்குகின்றன.

உலகம் முழுவதிலும் இத்தகைய அரசியல் சிந்தனையாளர்கள் அரசியல், சமூக மாற்றங்களை உருவாக்கியுள்ளனர். இந்தியாவிலும் தமிழகத்திலும் பண்டைய காலத்திலிருந்து இத்தகைய அரசியல் சிந்தனையாளர்கள் உருவாகியுள்ளனர்.

நவீன அரசியல் கருத்தாக்கங்களின் படி தேசிய அரசியல் சிந்தனையாளர்கள், பொதுவுடைமைவாத் அரசியல் சிந்தனையாளர்கள், திராவிடப் பண்பாட்டு அரசியல் சிந்தனையாளர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் சிந்தனையாளர்கள் என நாம் பகுக்கலாம்.

இதன்படி தமிழகத்தில் தோன்றிய அரசியல் சிந்தனையாளர்கள் இப்பாடத்தில் அறிமுகம் செய்யப்படுகிறார்கள்.

15.2 பண்டைய அரசியல் சிந்தனைகள்

திருவள்ளுவர் தம் நூலின் முதல் பகுதியாகிய அறத்துப் பாலில் அறத்தின் சிறப்பைத் திடமாக எடுத்துரைத்துக் கற்பவரின் நெஞ்சில் பதியுமாறு செய்கிறார்: இங்கே நெறி தவறாத ஓர் அறவோராக விளங்கி, உணர்ச்சி வயப்படாமல், கற்பனைக்கு இடம் தராமல், நடுநிலையில் நின்று தாம் உணர்ந்த உண்மைகளைத் தெளிவாக விளக்குகிறார். இரண்டாம் பகுதியாகிய பொருட்பாலில் உலக வாழ்க்கையின் இயல்புகளையும் நடைமுறைகளையும் அலசி ஆராயும் ஓர் அனுபவம் நிறைந்த அறிஞராகத் திகழ்கிறார்: பல காலத்தும் பல துறைகளிலும் கண்டும் கேட்டும் அறிந்தவற்றை எல்லாம் தம் சிந்தனைத் திறத்தால் தெளிவாக உணர்ந்து வகைப்படுத்திக் கூறுகிறார். மூன்றாம் பகுதியாகிய காமத்துப் பாலில் படைப்புத் திறன் மிக்க ஒரு கவிஞராக நின்று குறள் மணிகளை இயற்றியுள்ளார்; தாம் மறைந்திருந்து, நாடகப் போக்கில் காதலனையும் காதலியையும் பேசச் செய்துள்ளார்.

பொருட்பாலின் ஏழு பகுதிகள்

"அரசியல் ஐந்து; அமைச்சியல் ஈரைந்து;

உருவவல் இரண்டு; ஒன்று ஒண்கூழ் – இருவியல்

திண்படை; நட்புப் பழனேழ்; குடி பதின்மூன்று

எண்பொருள் ஏழாம் இவை."

என்பது போக்கியார் என்னும் புலவர் பெயரால் அமைந்த பழைய வெண்பா. இதன் படி, பொருட்பால் ஏழு பகுதிகளை உடையது; அரசியல் 25,அமைச்சியல் 10, அரண் 2, கூழ் 1, படை 2, நட்பு 17, குடி 13 ஆக பொருட்பாலின் எழுபது அதிகாரங்கள் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு" (குறள் : 381)

என வரும் பொருட்பாலின் முதல் குறட்பாவிலேயே இந்த வேறுபாட்டிற்கான

அடிப்படையும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இக் குறட்பாவில் உள்ளவாறு அரசாங்கம் (அரசின் அங்கம்) என்பதன் அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி என்னும் ஆறு அங்கங்களையும் தனித்தனியே வகுத்து, இந்த ஆறு அங்கங்களையும் உடைய ஆட்சித் தலைவனைப் பற்றித் தனியே சில அதிகாரங்களில் கூறி ஏழு வகையாக வேறுபாடு செய்வது திருக்குறளின் அமைப்பு முறைக்கு ஏற்றதாக உள்ளது.

அரசனது இயல்பு கூறும் இருபத்தைந்து அதிகாரங்கள்

பொருட்பாலின் முதலில் அரசனது இயல்பு கூறும் அரசியலை மிக விரிவாக இருபத்தைந்து அதிகாரங்களில் கூறியுள்ளார் திருவள்ளுவர். 'இறைமாட்சி' (அதிகாரம் 39) தொடங்கி 'இடுக்கண் அழியாமை' (அதிகாரம் 63) வரையிலான இருபத்தைந்து அதிகாரங்களில் 'அரசர்', 'வேந்தர்', 'நிலன் ஆண்டவர்', 'மன்னவர்' முதலான பெயர்களால் நாற்பத்தாறு முறை அவர் ஆட்சித் தலைவனைச் சுட்டிக் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

குடியாட்சிக் காலத்திற்கும் பொருந்தி வரும் அறிவுரைகள்

அரசனைப் பற்றியும், அரசியல் அமைப்பினைப் பற்றியும் திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள கருத்துக்கள் இன்றும் பொன் போல் போற்றத்தக்கனவாக விளங்குகின்றன. திருவள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக் காலம். எனினும், அந்தக் காலத்தில் அவர் அரசனுக்குச் சொன்னவைகளாக அமைந்த அறிவுரைகள், இன்று குடியாட்சி முறையில் உள்ள தலைவர்களுக்கும் பொருந்தும் நன்மொழிகளாக உள்ளன. திருவள்ளுவர், அரசு எப்படி இருக்க வேண்டும் என்று முடியாட்சி எங்கும் பரவியிருந்த காலத்திலேயே அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

திருவள்ளுவர் காட்டுகின்ற அரசு எந்தக் காலத்திற்கும், எந்த அமைப்பிற்கும் பொருத்தமாகக் காணப்படுகிற நிலையினை நாம் காண்கின்றோம். அவருடைய அரசியல் கருத்துக்கள் எந்தக் காலத்திற்கும் எந்த அமைப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சிறப்பினைப் பெற்று விளங்குகின்றன.

மக்கள் நல அரசு :

சுருங்கக் கூறின், திருவள்ளுவருடைய அரசியல் அமைப்பு ஒரு 'மக்கள் நல அரசு' (Welfare State) அடிப்படையில் அமைந்தது எனலாம் (திருக்குறளில் அறிவுத் துறைகள், பக்.114; 118).

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப் படும்" (குறள்: 388)

என்ற குறட்பாவில், 'அரச குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, அரசனாகப் பொறுப்பு ஏற்றால் மட்டுமே ஒருவன் அரசனாகச் சிறக்க முடியாது' என்னும் கருத்தியலைத் தெள்ளத் தெளிவாகப் பறைசாற்றியுள்ளார் திருவள்ளுவர். ஒரு மன்னன் நீதி நெறி வழுவாமல் தன் கடமையைச் சரிவரச் செய்தால் – குடிமக்களைக் காப்பாற்றினான் என்றால் – அவன், 'இறை என்று வைக்கப்படும்' – 'முறை செய்து காப்பாற்றும்' அவனை மக்கள் கடவுளாகவே கருதுவார்கள் என்கிறார் அவர். மன்னனைக் கடவுளாக நினைத்த ஒரு காலக்கட்டத்தில், 'நீ ஒன்றும் கடவுள் அல்ல, நல்ல வண்ணம் நடந்தால், நீதி நெறி வழுவாமல் காப்பாற்றினால் உன்னை மக்கள் கடவுளாகவே கருதுவார்கள்' என்று வள்ளுவர் கூறியிருப்பது, ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. இக்கருத்து, முடியாட்சிக் காலத்திற்கு மட்டுமன்றி, குடியாட்சி மலர்ந்துள்ள இக்காலக்கட்டத்திற்கும் பொருந்தி வருவதே.

திருவள்ளுவரின் கண்ணோட்டத்தில் 'அறம் வழுவாது, தீமைகளை நீக்கி, மறம் வழுவாது, மானம் காப்பது அரசு' ஆகும்.

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா மானம் உடைய தரசு" (குறள் : 384)

என்னும் குறட்பா இவ்வகையில் கருத்தில் கொள்ளத்தக்கது.

'மன்னர் எவ்வழி; மக்கள் அவ்வழி'. நாடாளும் மன்னன் தனது குடிமக்களுக்கு

வழிகாட்டியாக இருக்க வேண்டியவன் ஆவான். அவன் ஒருவன் தீய வழியில் நடந்தால், மற்றவர்களுக்கு அதுவே தூண்டுகோல் ஆகிவிடும். அவன் தலைவனாக இருப்பதால், அவனுடைய ஒழுக்கம் மற்றும் தனிவாழ்வு பற்றிய செய்திகள் நாடெங்கும் பரவுதல் எளிது. ஆகவே, அவனுக்கு அறநெறி கட்டாயம் வேண்டும் என்று திருவள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். மானம் வேண்டும் என்று கூறும் போதும், தனிவாழ்க்கை பற்றிய மான உணர்ச்சியைக் குறிப்பிடாமல், 'மறன் இழுக்கா மானம்' என வீரத்திற்கு ஏற்புடைய மானத்தைக் குறிப்பிட்டு, நாட்டின் மானமே தன் மானமாகக் கொண்டு மன்னன் வாழ்க்கை நடத்த வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

'செங்கோன்மை' அதிகாரத்திலும் நல்லாட்சி பற்றி எக்காலத்திற்கும் பொருந்தி வருகின்ற அடிப்படையான கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார் திருவள்ளுவர். உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை எதிர்பார்த்து வாழ்கின்றன; அது போல், குடிமக்கள் எல்லாம் அரசனுடைய செங்கோலை – நல்லாட்சியை – எதிர்பார்த்து வாழ்கின்றனர் என்கிறார்.

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி" (குறள்: 542)

என்ற குறட்பாவில் 'மன்னவன் கோல்' என்னும் முடியாட்சிக் காலத்திற்கான தொடரின் இடத்தில், 'நல்லாட்சி' என்ற பொதுவான இன்றைய மக்களாட்சிக்கு ஏற்ற தொடரைப் பொருத்திக் கொள்ளும் வகையில் பாடியிருப்பது திருவள்ளுவரின் தனிச்சிறப்பாகும்.

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு" (குறள்: 544)

என்னும் குறட்பாவும் திருவள்ளுவரின் காலம் கடந்து நிற்கும் பொதுமை நோக்கினைத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கின்றது. 'குடிமக்களை அன்போடு அணைத்துக் கொண்டு ஆட்சி புரியும் அரசனுடைய அடிகளைப் பொருந்தி நிற்குமாம் உலகம்'.

இக் கருத்தினையே 'கொடுங்கோன்மை' அதிகாரத்தில் வரும் குறட்பா ஒன்றில் எதிர்மறை வாய்ப்பாட்டால் தெளிவுபடுத்தியுள்ளார் திருவள்ளுவர். கொடுமையைப் பொறுத்துக் கொள்ளமுடியாமல் துன்புற்றுக் குடிமக்கள் அழும் கண்ணீருக்கு மிகுந்த ஆற்றல் உண்டு; அதுவே ஆற்றல் மிக்க படையாகி முறை செய்யாத மன்னனுடைய அரசையே அடியோடு அழித்துவிடும்.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை." (குறள் : 555)

இங்கே அல்லற்பட்டு ஆற்றாது குடிமக்கள் அழும் 'கண்ணீரை', கொடுங்கோல் அரசையே அடியோடு தேய்த்து அழித்துவிடும் 'படையாக' உருவகம் செய்திருக்கும் திருவள்ளுவரின் சிந்தனை புதியது; இதுவரை யாரும் கூறாதது. ஹிட்லர், முசோலினி, ஜார் மன்னர் முதலான உலகின் கொடுங்கோலர்களுக்கு எதிராகத் திருவள்ளுவர் இக்குறட்பாவில் அடித்திருக்கும் சாவுமணி வலிமையானது.

வருவாயைப் பெருக்குவதற்கான நான்கு வழிவகைகள்

ஒரு மன்னன் தனது அரசின் வருவாயைப் பெருக்கும் துறையிலும் வரவு-செலவுத் திட்டத்திலும் (Budget) வல்லவனாக விளங்க வேண்டும். இவ்வகையில் திருவள்ளுவர் 'இறைமாட்சி' அதிகாரத்தில் கூறியுள்ள ஓர் அடிப்படையான அரசியல் சிந்தனை வருமாறு:

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு." (குறள் : 385)

முதலாவதாக, ஒரு மன்னன் பொருள் வரும் வழிவகைகளைப் பெருக்க வேண்டும்; இதனை 'இயற்றல்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் வள்ளுவர். அடுத்து,

அரசுக்குப் பல வழிகளிலே வந்த வருவாயைத் திரட்டி ஒன்றுசேர்க்க வேண்டும்; இதனை 'ஈட்டல்' என்கிறார் வள்ளுவர். மூன்றாவதாக ஒன்று சேர்த்த பொருளை அழிவு நேராமல் காக்க வேண்டும்; இது 'காத்தல்' ஆகும். மிக இன்றியமையாத நான்காவது படிநிலை, இயற்றியும் ஈட்டியும் காத்தும் வைத்துள்ளவற்றைச் செலவிடுவதற்கு உரிய துறைகள் இவை இவை, அவற்றிற்கான தொகைகள் இவ்வளவு இவ்வளவு என்று வகுத்துச் செலவு செய்தல் ஆகும். இதுவே 'வகுத்தல்' எனப்படும். இங்ஙனம் இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் என்னும் நான்கு வழிமுறைகளில் அரசின் வருவாயைச் சேர்த்து, பகிர்ந்து, திட்டமிட்டு, பயன்படுத்திக் கொள்வது ஒரு தேர்ந்த மன்னனின் தலையாய கடமை ஆகும் என்கிறார் திருவள்ளுவர்.

இக்கருத்து இன்று அரசியல் மற்றும் பொருளியல் சார்ந்த அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சமதர்மம் அடிப்படைக் கருத்துக்களில் ஒன்றாகும். ஓர் அரசு தனது வருவாயை எவ்வாறு எல்லாம் சிறந்த முறையில் திட்டமிட்டுக் கையாள வேண்டும் என்ற முற்போக்கான கருத்தினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நறுக்குத் தறித்தாற் போல் 'இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல்' என நான்கே நான்கு சொற்களில் வடித்துத் தந்துள்ள பாங்கினை இங்கே நம்மால் காண முடிகின்றது.

அரசனுக்கென்று திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள நல்லியல்புகள் நாட்டு மக்கள் எல்லோருக்கும் வேண்டியனவாக, பொருந்தக் கூடியனவாக இருக்கின்றன. அதனால்தான் அவர் அரசனுக்கு என்று கூறத் தொடங்கிய 'கல்வி' முதலாக 'இடுக்கண் அறியாமை' வரையிலான பண்பு நலன்களை 'வாழும் உயிர்க்கு' என்றும் 'மாந்தர்க்கு' என்றும் பலர்க்கும் பொதுவாக்கிக் கூறியுள்ளார். திருவள்ளுவர் பொருட்பாலில் வலியுறுத்தியுள்ள அரசியல் சிந்தனைகளில் அறநெறியே முதன்மையான இடத்தினைப் பெறுகின்றது, அவரது அரசியல் அமைப்பில் மக்கள் நலமே அடிப்படையாக விளங்குகின்றது. வேறு சொற்களில் கூறுவது என்றால், முடியாட்சிக் காலத்தைச் சார்ந்த திருவள்ளுவரின் பெரும்பாலான அரசியல் சிந்தனைகள் இன்றைய குடியாட்சிக் காலத்திற்கும் ஏற்புடையனவாகத் திகழ்கின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

திருக்குறள் ஓர் மதச்சார்பற்ற நூல்

திருக்குறளை நாம் படிக்க ஆரம்பித்த உடனேயே அது ஒரு மதச்சார்பற்ற நூல் என்ற உண்மையை நாம் அறியலாம். திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பௌத்த மதம், சீக்கிய மதம், ஜைன மதம், மற்றும் இந்து மதம் போன்ற பல மதங்கள் இருந்தன. அதைப்போலவே இறை மறுப்பாளர்களும் இருந்துள்ளனர். ஆனால் மதச்சார்பற்ற தன்மை எனும் கருத்தாக்கத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. வள்ளுவரே மத நம்பிக்கை உடையவர் தான். கடவுளைப் புகழ்ந்தே பத்து குறள்களை கொண்ட ஒரு அதிகாரத்தை படைத்துள்ளார். அவரும் ஒரு மதத்தில் இருந்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு மதத்துக்கும் ஆதாரமாக இந்நூல் இல்லை. குறிப்பாக சொல்வதென்றால் எந்த மதத்தைப் பற்றியும் குறிப்பிடவில்லை.

15.3 தேசியவாதம்

சுப்ரமணிய பாரதியார்(1882–1921)

ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே – அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே

நாம் சாதி மதங்களைப் பார்க்க வேண்டாம், இந்த நிலத்தில் வாழும் அனைத்து மனிதர்களும் ஒன்றே அவர்கள் எந்த சாதியினரை சார்ந்திருந்தாலும் அல்லது எந்தவேதத்தைபோதிப்பவராக இருந்தாலும் நாம் அனைவரும் ஒன்றே அது மனிதகுலம்ஆகும்.– சுப்ரமணிய பாரதியார்

சி. சுப்ரமணிய பாரதியார் தமிழகத்தின் தலைச்சிறந்த கவிஞர், சுதந்திரப் போராளி மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவர் மகாகவி பாரதியார் என்று மிகவும் போற்றப்படுகிறார். மகாகவி என்றால் மிகப்பெரிய கவிஞர் எனப்பொருள்படும். இவர் இந்தியாவின் தலைசிறந்த கவிஞராகக் கருதப்படுகிறார். இவருடைய பாடல்கள் தேசிய உணர்வைத் தூண்டி தேச விடுதலைக்காக மக்களைத் திரட்ட உதவியதுடன் தமிழகத்தில் இந்திய சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவாகவும் இருந்தன.

பாரதி : ஓர் பாடலாசிரியர் மற்றும் ஓர் தேசிய வாதி

தமிழ் இலக்கியங்களின் ஓர்புதிய சகாப்தமே சுப்ரமணிய பாரதியாரிடமிருந்து தொடங்கியுள்ளது எனலாம். இவருடைய பெரும்பாலான படைப்புகள் தேசப்பற்று, பக்தி மற்றும் மறைபொருள் பற்றியதாகும். பாரதியார் மிகவும் உணர்ச்சிப் பெருக்குள்ள கவிஞர் ஆவார். "கண்ணன் பாட்டு" " நிலவும், வான்மீனும் காற்றும்" "பாஞ்சாலி சபதம்" போன்றவை பாரதியாரின் மிகச் சிறந்த படைப்புகளின் வெளிப்பாடுகளாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

பாரதியாரின் "பாஞ்சாலி சபதம்" என்பது ஓர் தலைசிறந்த படைப்பாகும். இது இந்தியாவை திரௌபதியாகவும், ஆங்கிலேயரை கௌரவர்களாகவும் சுதந்திர போராட்ட வீரர்களை பாண்டவர்களாகவும், உருவகப் படுத்தியிருந்தார். திரௌபதியின் போராட்டம் மூலமாக அவர் இந்திய தாய் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுள்ளதை மறைமுகமாக வெளிப்படுத்தினார்.

பாரதி ஓர் தேசியக் கவிஞராக கருதப்படுகிறார். இவருடைய பாடல்கள் தேசப்பற்று மிக்கதாக மக்கள் மத்தியில் போற்றப்பட்டுள்ளன. இதனால் மக்கள் ஈர்க்கப்பட்டு சுதந்திரப் போராட்டத்தில் மிகுந்த ஈடுபாடுடன் பங்கேற்று நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டனர். பாரதியார் நாட்டின் பெருமையை மட்டும் கூறாமல் சுதந்திர இந்தியாவைப் பற்றிய தொலைநோக்குப் பார்வையை கோடிட்டுக் காட்டுகிறார். இவர் 1908 ம் ஆண்டு "சுதேச கீதங்கள்" எனப்படும் உணர்ச்சிமிக்க பாடல் தொகுப்பினை வெளியிட்டார்.

ஓர் இதழாசிரியராக பாரதியார்

பாரதியார் (பல வருடங்களைப்) தன்னுடைய வாழ்க்கையில் பத்திரிக்கையாளராக செலவிட்டார். பாரதி இளம் வயதில் தன்னுடைய வாழ்க்கையை ஓர் பத்திரிக்கையாளர் மற்றும் துணை ஆசிரியராக "சுதேச மித்திரன்" என்ற பத்திரிக்கையில் 1904–ஆம் ஆண்டு தொடங்கினர். 1906–ஆம் ஆண்டு மே மாதம் " இந்தியா" எனப்படும் ஓர் புதிய நாளிதழ் தொடங்கப்பட்டது. இது பிரஞ்சு புரட்சியின் மூன்று முக்கிய முழக்கங்களான சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் போன்றவற்றை தனது குறிக்கோளாக அறிவித்தது. இது தமிழ் பத்திரிக்கை துறையில் ஓர் புதிய பாதையை ஏற்படுத்தியது எனலாம். இது புரட்சிகரமான புதிய முயற்சியாக தோன்றியது. தனது புரட்சிகரமான முனைப்புகளை வெளியிடுவதற்கு பாரதியார் அவர்கள் வார இதழை சிகப்பு தாளில் அச்சிட்டு பிரசுரித்தார். அரசியல் கேலிச் சித்திரத்துடன் வெளியிடப்பட்ட தமிழ் நாட்டின் முதல் நாளேடு 'இந்தியா' என்பதாகும். இவர் மேலும் விஜயா என்கிற தமிழ் தினசரியின் பதிப்பாசிரியராகவும் இருந்து வெளியிட்டார். "பால பாரதா" என்கிற ஆங்கில மாத இதழையும், பாண்டிச்சேரியில் "சூர்யோதயம்" எனும் உள்நாட்டு வார இதழை வெளியிட்டார்.

உங்களுக்குத் தெரியுமா?

"சுயராஜ்ய தினம்" கொண்டாடுவதற்காக 1908–ஆம் ஆண்டு சென்னையில் மிகப்பெரிய பொதுக் கூட்டத்திற்கு இவர் ஏற்பாடு செய்தார். "வந்தே மாதரம்" "எந்தையும் தாயும் , ஜெய பாரத்" போன்ற பாரதியாரின் கவிதைகள் அச்சிட்டு இலவசமாக மக்களுக்கு வினியோகிக்கப்பட்டன.

ஆணும் பெணும் சமமாகக் கருதப்பட்டால் மட்டுமே இவ்வுலகம் அறிவு மற்றும் புத்திக்கூர்மையில் சிறப்புறும். **– பாரதியார்**

உங்களுக்குத் தெரியுமா?

சுப்ரமணிய பாரதியார் (டிசம்பர்) பதினோராம் நாளில் 1882–ஆம் ஆண்டு எட்டயபுரம் என்னும் கிராமத்தில் பிறந்தார். இந்த ஊர் தமிழ்நாட்டில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது, இவருடைய குழந்தை பருவ பெயர் சுப்பையா ஆகும். இவரது தந்தையார் சின்னசாமி, தாயார் லட்சுமி அம்மாள் ஆவார்.

பாரதியார் ஏழு வயதில் தமிழ்க் கவிதைகளை எழுத ஆரம்பித்தார். தன்னுடைய பதினோராம் வயதில் அவருடைய படைப்புகள் மற்றும் திறைமைகள் கற்றறிந்த அறிஞர்களால் புகழப்பட்டது. பதினோராம் வயதில் சுப்பையா அனைத்து பெருமக்கள் மற்றும் அறிஞர்கள் கூடியிருக்கும் சபையில் ஓர் சவால் விட்டார். யாரேனும் என்னுடன் எந்தவித முன்னறிப்பு மற்றும் பயிற்சி இல்லாமல் எந்த தலைப்பில் வேண்டுமானாலும் பேச தயாரா? என சவால் விட்டார். இந்த போட்டி எட்டையபுர அரசவையில் ஓர் சிறப்பு அமர்வாக எட்டயபுர அரசரின் தலைமையில் நடைபெற்றது. சவாலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பு'கல்வி' ஆகும். சுப்பையா பேச்சுப் போட்டியில் வென்றார். இது சுப்பையாவின் வாழ்க்கையில் ஓர் திருப்பு முனையாக அமைந்தது. இந்த மறக்க முடியாத நிகழ்வுக்கு பிறகு 'எட்டயபுர சுப்பையா' என்று அழைக்கப்பட்ட அவர் 'பாரதி' என்றும் பிற்காலத்தில் பாரதியார் என்றும் மரியாதையுடன் அழைக்கப்பட்டார். 'பாரதியார்' என்ற பெயர் அனைவராலும் குறிப்பாக தேசவாதிகளாலும் உலகெங்கிலும் உள்ள கோடான கோடி தமிழ்ப் பற்றாளர்களால் மரியாதையுடன் நினைவு கூறப்படுகிறது.

ஜூன் 1897–இல் பாரதியாருக்கு பதினைந்து வயது நிரம்பியிருந்த போது செல்லமாளுடன் திருமணம் நடந்தது. இதன்பிறகு பாரதியார் காசிக்கு சென்றார். அங்கு தனது அத்தை குப்பாள் மற்றும் மாமா கிருஷ்ணசிவனுடன் இரண்டு ஆண்டுகள் இருந்தார். அங்கிருந்த போது தான் சமஸ்கிருதம், இந்தி மற்றும் ஆங்கில மொழியறிவினை பெற்றார். அலகாபாத் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் அவர் வெற்றி பெற்றார். காசியில் தங்கியிருந்தது பாரதியின் ஆளுமையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. முறுக்கு மீசை, சீக்கியர்களின் தலைப்பாகை மற்றும் வீறு கொண்ட நடையினை தனக்கே உரித்தானதாக்கினார். இத்தகைய வெளிப்படையான மாற்றங்களும் பாரதியாரிடம் ஏற்பட்டன.

"இந்தியா" என்கிற இதழின் பதிப்பாசிரியராக இருந்து செயல்பட்டதனால் பாரதியாருக்கு கைது ஆணைப் பிறப்பிக்கப்பட்டது. இதனால் நிலைமை மிகவும்மோசமானதால் 1908–ஆம் ஆண்டு பாண்டிச்சேரிக்கு செல்ல முடிவு எடுத்து அவர் அங்கே சென்றார். அந்த கால கட்டத்தில் பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. அங்கு பாரதியாரின் வாழ்வில் பல்வேறு சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன, இதன்மூலம் பல தலைவர்களை சந்திக்கவும், சுதந்திரப்போராட்டத்தில் ஆயுதமேந்திய இயக்கத்தின் தலைவர்களான அரவிந்தோ, லாலா லஜபதிராய் மற்றும் வி.வி. சுப்ரமணியம் ஆகியோரையும் பாண்டிச்சேரியில் தஞ்சம் புகுந்திருக்கும் பொழுது சந்தித்தார். மிகவும் ஆதாயத்திற்குரிய பாரதியாரின் வாழ்க்கை என்பது பாண்டிச்சேரியில் பத்து வருடம் அவர் தங்கியிருந்த காலமாகும். இவர் தமிழ் இளைஞர்களை ஒன்று திரட்டி தேசிய பாதைக்கு இட்டுச் சென்றார். பாரதியாரின் படைப்புகள் ஆங்கிலேய அரசுக்கு மிகவும் எரிச்சலூட்டின, இவரின் எழுத்துக்கள் மூலம் தாய் நாட்டுப்பற்றை தமிழ் இளைஞர்களிடம் விதைத்தார். பாரதியார் 1919–ஆம் ஆண்டு சென்னையில் ராஜாஜி வீட்டில் மகாத்மா காந்தியை சந்தித்தார். பாரதியார் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்த இந்தியாவிற்கு அருகில்

1918–ஆம் ஆண்டு கடலூரரை நெருங்கிய போது அவர் கைது செய்யப்பட்டார். இவர் சிறையில் இருக்கும்பொழுது தன்னுடைய நேரத்தை சுதந்திரம், தேசியவாதம் மற்றும் நாட்டின் நலத்தைப் பற்றிய கவிதைகள் எழுதுவதற்கு செலவிட்டார். பாரதியார் தன்னுடைய இளமைக்காலத்தில் தமிழ் தேசியத் தலைவர்களிடம் நல்ல உறவுகளை ஏற்படுத்தினார், குறிப்பாக வ.உ. சிதம்பரம், சுப்ரமணிய சிவா, மண்டயம் திருமலச்சாரியார் மற்றும் சீனுவாச்சாரி போன்றவர்களிடம் நல்லுறவுகளை வளர்த்தார். இந்த தலைவர்களிடம் ஆங்கிலேயர் ஆட்சியினால் ஏற்படும் பிரச்சனைகளை பற்றி விவாதித்தார். பாரதியார் இந்திய தேசிய காங்கிரசின் வருடாந்திர மாநாட்டில் கலந்து கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தார் தேசிய பிரச்சனைகளை தீவிரமான இந்திய தேசியவாதத் தலைவர்களான பிபின். சந்திரபால், பாலகங்காதர திலகர் மற்றும் வி.வி.சுப்ரமணியம் போன்றோரிடம் விவாதித்தார். பாரதியாரின் பங்கேற்பு மற்றும் செயல்பாடுகளால் 1905–ஆண்டு பனாரஸ் மற்றும் 1907–ஆம் ஆண்டு சூரத் மாநாட்டில் இந்திய தேசிய காங்கிரசு தலைவர்களை இவரது தேசபற்று மிகவும் கவர்ந்து இழுத்ததுடன் பல தாய் நாட்டை நேசிக்கும் தேசத் தலைவர்களால் மதிக்கப்பட்டார். சில தேசத்தலைவர்களுடன் தேசம் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார். அதுமட்டும் இல்லாமல் பல்வேறு முறையில் தேசிய இயக்கத்தை வலுப்படுத்துவதற்கு அவர் அறிவுரைகளை வழங்கினார். சந்தேக மில்லாமல் பாரதியாருடைய அறிவுரைகள் மூலமாகப் பல தேசிய தலைவர்கள் புத்துணர்வு பெற்று தேசியவாதத்திற்கு பங்காற்றினார். இவ்வாறு பாரதியார் இந்திய சுதந்திரத்திற்காக முக்கிய பங்காற்றினார் என்பதை நாம் அறிவோம்.

"நாம் ஆயிரம் பிரிவுகளாக வேண்டுமானாலும் பிரிந்து இருக்கலாம். ஆனால், எப்படி இருந்தாலும் அந்நிய படையெடுப்பை நியாயப்படுத்த முடியாது".

ஓர் சமூக சீர்திருத்தவாதியாக பாரதியார்

பாரதியார் சாதிய அமைப்புக்கு எதிராக செயல்பட்டவர். இவர் உலகில் இரண்டு சாதிகள் உள்ளன. ஒன்று ஆண்சாதி மற்றொன்று பெண்சாதி என்பதைத் தாண்டி வேறு ஒன்றுமில்லை என்று பிரகடனப்படுத்தியிருக்கிறார். இவை எல்லாவற்றையும் விட இவர் தனது பூநூலை அகற்றினார். மேலும் அட்டவணை சாதியினரையும் பூநூல் அணியச்செய்து வேதம் ஓதச் செய்தார். இவர் முஸ்லிம்கள் நடத்தும் கடையில் தேநீர் பருகினார். இவர் தன்னுடைய குடும்ப உறுப்பினர்களுடன் தேவாலாயத்திற்கு அனைத்து விழாக்களிலும் பங்கேற்றார். இவர் பட்டியல் இனத்தவரை கோயிலுக்கு அனுமதிப்பதை ஆதரித்தார். இவருடைய அனைத்து சீர்திருத்தங்களுக்கும் இவருடைய அக்கம் பக்கத்தினரிடையே பெரிய எதிர்ப்பு இருந்தது. பாரதியார் மிகவும் திறமையானவர். இந்தியர், தெளிவாக அனைவரும் பாரதத்தாயின் குழந்தைகள் என ஒன்றுபட்டு செயல்பட்டால் அன்றி இந்திய விடுதலை சாத்தியமாகாது என்று கூறினார். இவர் பெண்களின் உரிமைகள், பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களின் ஆற்றலாதல் ஆகியவற்றை மிகவும் நம்பினார். இவர் குழந்தை திருமணம், வரதட்சணை முறையைத் தீவிரமாக எதிர்த்தார். ஆனால் விதவை திருமணத்தை அவர் ஆதரித்தார்.

உங்களுக்குத் தெரியுமா?

விவேகானந்தரின் சீடரான சகோதரி நிவேதிதாவுடனான பாரதியாரின் சந்திப்பு பெண்களுக்கான உரிமைகள் பற்றி சிந்தனையைப் பாரதியாரிடம் ஏற்படுத்தின. இது சாதியப் பிரச்சனையிலிருந்து சுதந்திரம் மற்றும் ஆன்மீகம் வரையிலான சிந்தனையை ஏற்படுத்தியது. இவர் தற்கால பெண்களுக்கு சக்தி என்கிற அடையாளத்தை ஏற்படுத்தியவர், குறிப்பாக நவீன பெண்களின் அதிகாரம், பலமான, சுதந்திரமான மற்றும் ஆண்களுக்கு சமமான பங்குதாரர் என்று பெண்களை குறிப்பிடுகிறார்.

ஓர் தொலைநோக்குச் சிந்தனையாளராகப் பாரதியார்

பாரதி என்பவர் ஒரு கவிஞர், பத்திரிக்கை ஏழுத்தாளர், சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்த்திருத்தவாதி ஆவார். இவர் தமிழக சமுதாயத்தில் மிகப் பெரியத் தாக்கத்தை எற்படுத்தியவர். இவர் சொன்னதைச் செய்துக் காட்டியவர் என்பது இவரின் உயர்வைக் காட்டுகிறது. இவருடைய தொலை நோக்கான முன்கணிப்பு போல அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் இந்தியா சுதந்திரம் பெற்றது. ஓர் மகத்தான இந்தியா பற்றிய இவரின் தொலை நோக்கு சிந்தனைகள் சுதந்திர இந்தியாவில் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாரதியார் தனக்காக வாழாமல் மக்களுக்காகவும் தேசத்திற்காகவும் வாழ்ந்தவர். ஆகையால்தான் மரியாதையுடன் இவரைப் பாரதியார் எனப் போற்றுகின்றனர். பல ஆண்டுகளுக்குப் பிறகும் சுப்ரமணிய பாரதியார் இந்திய சுதந்திரத்தின் சின்னமாகவும் தமிழ் தேசியவாத அதிர்வலையை ஏற்படுத்தியவராகவும் விளங்குகிறார்.

உங்களுக்குத் தெரியுமா?

பாரதியார் செப்டம்பர் பதினோராம் நாள் 1921-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். ஆனால் இவரின் இறுதி சடங்கில் பதினான்கு நபர்கள் மட்டுமே பங்கேற்றனர், இதற்கு சாதியை விட்டு தள்ளி வைக்கப்படுவோம் என்பதுடன் ஆங்கிலேய அரசாங்கத்தின் அடக்கு முறையினால் ஏற்பட்ட பயமே காரணமாகும்.

15.4 பொதுவுடைமைவாதம்

ம. சிங்காரவேலர் (1860–1946)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுச்சிபெற்ற சுதேசி மற்றும் தன்னாட்சி இயக்கங்களால் நாடு முழுவதும் விடுதலை உணர்வு பரவியது. சமூகரீதியிலும் இந்து மதத்திற்குள் சில சீர்த்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அரசியல் ரீதியாக இந்தியத் தன்மை அல்லது தேசிய உணர்வு உருவாவதில் இந்த இயக்கங்கள் முக்கியப் பங்கு வகித்தன.

இருந்த போதும் இவை மதவாதத் தன்மையை கொண்டிருந்தன. அதேபோல இந்த இயக்கங்களில் பங்கேற்றவர்கள் பெரும்பாலும் படித்த மேல்தட்டு வர்க்கத்தினராக இருந்தனர். அவர்கள் கோரும் விடுதலை மட்டுமே அரசியல் விடுதலையாக

இருந்தது. அடித்தட்டு மக்களான விவசாயிகள், தொழிலாளர்களின் பொருளாதார நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. பெரும்பாலான விவசாயிகள் ஏழைகளாக இருந்தனர். மேலும், காங்கிரசு கட்சிக்குள் சாதிப் பாகுபாடுகள் நிலவின. குறிப்பாக, தமிழகத்தில் பிராமணர், பிராமணரல்லாதவர் என்ற பாகுபாடு நிலவியது.

இந்த நிலைமையில் தமிழக அரசியல் இயக்கத்தில் பகுத்தறிவு கருத்துகள், அறிவியல் பார்வை ஆகியன உருவாவதிலும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஒரு வட்டாரத் தன்மை அளிப்பதிலும், விடுதலைப் போராட்டத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் நலன்களை இணைப்பதிலும் இந்திய அரசியலில் சமதர்மக் கருத்துகள் பரவியதிலும் ம. சிங்காரவேலரின் அரசியல் சிந்தனைகள் முக்கியப் பங்காற்றின.

காங்கிரசு அரசியலில் சிங்காரவேலருடைய சிந்தனைகளின் தாக்கம்

தொடக்கத்தில் இந்தியாவில் இருந்து இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து மூலப்பொருட்களாகத் தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்த ஆங்கிலேய அரசு, தங்கள் தேவைகள் அதிகரித்ததால் இந்தியாவிலேயே தொழிற்சாலைகளைத் தொடங்கியது. ஏற்கனவே இந்தியாவில் பாரம்பரியத் தொழில்களை காலனியாதிக்க அரசு முடக்கிவிட்டதால் மக்கள் வாழ்வாதாரங்களை

இழந்து பசி, பட்டினி, வறுமையில் வாடினர். இதனால் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேலும் மோசமாக்கியது. இதனால் கூலி வேலை கிடைத்தால் போதும் என்ற நிலைக்குத் தொழிலாளர்கள் தள்ளப்பட்டனர். இதனால் பின்னர் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள் அனைத்திலும் தொழிலாளர்கள் மிகக் குறைவான கூலிக்கு வேலையில் அமர்த்தப்பட்டனர். அடிமைகளைப் போல் உழைத்தனர். போராடினால் கடுமையான அடக்குமுறையால் ஒடுக்கப்பட்டனர்.

இவ்வாறு பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்காகத் தொழிலாளர் அமைப்புகள் உருவாகத் தொடங்கின. அன்றைய சென்னை மாகாணத்தில் இந்த அமைப்புகளுக்கு திரு. வி. கல்யாணசுந்தரனார், தி. வரதராஜுலு போன்றோர் தலைமை தாங்கினர். இந்த தொழிலாளர் அமைப்புகள் உருவாக முன்முயற்சிகள் எடுத்து பாடுபட்டவர் ம. சிங்காரவேலர் ஆவார் என்பது மிகையில்லை.

இந்த தொழிலாளர்களை அரசியல் மையப்படுத்தி விடுதலை இயக்கத்தோடு இணைக்க வேண்டும் என்று ம. சிங்காரவேலர் விரும்பினார். ஆனால் காங்கிரசு கட்சி இதனை விரும்பவில்லை. ம. சிங்காரவேலர் இதனைக் கடுமையாக விமர்சித்து 1920ஆம் ஆண்டிலேயே காங்கிரசு தலைமைக்கு தந்தி அனுப்பினார். தொடர்ந்து அண்ணல் காந்திக்குப் பகிரங்கக் கடிதமும் எழுதினார். அத்துடன் ஹிந்து, சுதேசமித்திரன் உள்ளிட்ட முன்னணி நாளிதழ்களிலும் நவசக்தி போன்ற பருவ இதழ்களிலும் ஏராளமான கட்டுரைகள் எழுதினார். காங்கிரசு தொண்டர்கள் மத்தியிலும் பிரச்சாரம் செய்தார். இச் சமயத்தில் 1922-ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய காங்கிரசு குழுவின் கூட்டத்தில் தமிழகப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அவர் அங்கும் விவாதத்தை உருவாக்கி தமக்கு ஆதரவு திரட்டினார். அவரது கருத்துக்கள் வருமாறு:

- இந்திய விடுதலை என்பது விவசாயிகள், தொழிலாளர்களின் பொருளாதார சுதந்திரத்தை உள்ளடக்கியதாகும்.
- தொழிலாளர்கள், விவசாயிகள் நலன்களுக்காகவும் காங்கிரசு பேரியக்கம் போராட வேண்டும்.
- விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளர்கள், விவசாயிகளையும் இணைத்துக்கொள்ளவேண்டும்.
- பல்வேறு அமைப்புகளில் உள்ள மக்களை ஒன்று திரட்ட காங்கிரசு தலைவர்கள் உதவ வேண்டும்.

இதன்விளைவாக 1922-இல் இந்திய தேசிய காங்கிரசு தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக ஒன்று திரட்டத் தீர்மானம் நிறைவேற்றியதுடன் இதற்கென ஓர் குழுவினை அமைத்தது. ஆறுபேர்கொண்ட அக்குழுவில் சிங்காரவேலரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க சட்டம் இயற்ற வேண்டும் என்று போராடினார். அதனை வலியுறுத்தி அன்றைய முன்னணி நாளிதழ்களில் தொடர்ந்து எழுதினார். இதுபோன்ற முயற்சிகளின் பலனாக முதல் முறையாக 1926-இல் தொழிலாளர் நலன்களைப் பேணும் சட்டம் இயற்றப்பட்டது.

இதேபோல காங்கிரசு தலைவர்கள் அந்தந்த வட்டார மொழிகளில் பேசினால்தான் விடுதலைக்கருத்துகள் மக்களைச் சென்றடையும் என்பதுடன் மக்களுக்கும் காங்கிரசு பேரியக்கத்துக்கும் இடையே நெருக்கம் உருவாகும் என்றார். மக்கள் பிரச்சனைகளைப் பொதுமக்களிடம் பேசும்போது தமிழ் மொழியிலேயே பேச வேண்டும் என உறுதியாக இருந்தார். இதையொட்டி 1918-இல் சென்னை மாகாண சங்கத்தின் மாநாட்டில் இது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டில் சிங்காரவேலர் மற்றும் ஈ.வெ.ரா பெரியார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுயமரியாதை, பொதுவுடைமைவாதம் இயக்கங்களின் மீதான ம. சிங்காரவேலரின் தாக்கம்

பிராமணர், பிராமணரல்லாதோர் பாகுபாடு காங்கிரசு கட்சியில் நிலவுவதைக் கண்டித்து பெரியார் விலகியபோது

ம.சிங்காரவேலர் அவரை ஆதரித்தார். சோவியத் ஒன்றியம் சென்று வந்த ஈ. வெ.ரா பெரியார் அதன் தாக்கத்தில் பொதுவுடைமைவாதக் கருத்துகளை ஏற்றுக்கொண்டு சுயமரியாதை இயக்கத்தினை சுயமரியாதை சமூக நீதிக் கட்சி என்று பெயர் மாற்றினார். அதற்கான கொள்கைத் திட்டங்களை வகுத்தளிப்பதில் ம. சிங்காரவேலர் உறுதுணையாக நின்றார். இந்த அமைப்பு தமிழ்நாடு முழுவதும் பரவ ம. சிங்காரவேலர் அயராது பாடுபட்டார்.

பெரியார் நடத்திய 'குடியரசு' உள்ளிட்ட இதழ்களில் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக ஏராளமான கட்டுரைகளையும் எழுதினார். அவரது கட்டுரைகள் எளிமையான நடையில் புரிந்துகொள்ளும் வகையில் இருந்தன.

ம. சிங்காரவேலர் பொதுவுடைமைவாதத் தத்துவத்தில் ஆழமான நம்பிக்கை கொண்டவர். காங்கிரசு பேரியக்கம் தொழிலாளர் அமைப்புகளை ஆதரிக்க வேண்டும் என்று 1920-இல் தலைமைக்குத் தந்தி அனுப்பினார். அது சென்னை சமதர்மவாதிகள் சார்பில் அனுப்பப்படுவதாக அதில் தெரிவித்திருந்தார். அகில இந்திய காங்கிரசு குழுவின் கூட்டங்களிலும், மாநாடுகளிலும் பொதுவுடைமைவாதப் பிரதிநிதியாகவே வாதிட்டார். தொழிலாளர்கள் பலமாகத் திகழ்ந்த சென்னை நகரில் இந்தியாவின் முதல் உழைப்பாளர் தினத்தை 1923 மே முதல் நாளன்று நடத்திக்காட்டினார். அதே நாளில் தொழிலாளர் விவசாயிகள் கட்சி அமைக்கப்படுவதாகவும் அறிவித்தார்.

அக்கட்சியின் குறிப்பிடத்தக்க கோரிக்கைகள் பின்வருமாறு:

தொழிலாளர்களுக்கான கோரிக்கைகள்

- எட்டுமணிநேர வேலை
- சங்கம் அமைக்கும் உரிமை
- தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க கடைசி ஆயுதமாக வேலைநிறுத்தம் செய்யும் உரிமை
- கோரிக்கைகளை பரிசீலிக்க முத்தரப்பு பேச்சுவார்த்தைக் குழு
- குறைந்தபட்ச ஊதியம்
- அடிப்படை வசதிகளுடன் கூடிய சுகாதாரமான குடியிருப்பு வசதி
- மருத்துவம் மற்றும் ஆயுள் காப்பீடு
- வருங்கால வைப்பு நிதி
- சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்பு
- இலவச மருத்துவ உதவி
- பேறுகால விடுப்பு
- ஒப்பந்த முறை ஒழிப்பு

விவசாயிகளுக்கு

- இலவச நீர்ப்பாசானம்
- சமீன்தார் முறை ஒழிப்பு

பொது மக்களுக்கு

- அனைவருக்கும் வாக்குரிமை
- அடித்தட்டு மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் போன்றோர் தேர்தலில் போட்டியிட அனுமதி

1925ல் கான்பூர் நகரில் இந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதம் மாநாடு நடந்தபோது அதற்குத் தலைமை ஏற்று நடத்தித் தந்தார். அப்போது "வன்முறையற்ற மார்க்சியப் பாதை"யை வலியுறுத்திப்பேசினார். மேலும், "இந்தியாவுக்கேற்ற மார்க்சியப் பாதையைத் திட்டமிட வேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டார். "காங்கிரசு கட்சியில் இருந்துகொண்டே பொதுவுடைமைவாதிகள் தனிப்பிரிவாக இயங்க வேண்டும்" என்றார். இதையொட்டி காங்கிரசு கட்சிக்குள் சமதர்ம பிரிவு உருவானது.

ம. சிங்காரவேலரின் வாழ்வும் சமூக பணியும்

ம. சிங்காரவேலர் இளம் வயதிலேயே இந்து மதத்தில் நிலவும் வர்ண அமைப்பிலும் மூட நம்பிக்கைகளிலும் அதிருப்தி அடைந்திருந்தார். இதன் விளைவாக 1890களிலேயே பல இடங்களில் பௌத்த சங்கம் அமைத்து வர்ண அமைப்புக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் எதிராகப் பரப்புரை செய்தார்.

வசதி மிக்க குடும்பத்தில் பிறந்து சட்டம் பயின்ற சிங்கார வேலர் சென்னை மாநகராட்சி மன்றத்தில் உறுப்பினராகவும் அதன் சுகாதாரக் குழுவிலும் பணியாற்றினார். அப்போது குடிசைப் பகுதிகளில் கொள்ளை நோய் தாக்கம் அதிகமாக இருந்ததால் சுகாதாரம், கல்வி ஆகிய பிரச்சனைகளுக்கு முன்னுரிமை அளித்தார்.

தொடர்ந்து குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடினார். இதன் அடிப்படையிலேயே காங்கிரசு இயக்கத்தில் செயலாற்றினார். பின்னர் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். தனது ஐம்பது வயதைக் கடந்தபின்பே அரசியலில் இறங்கினாலும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக முதுமையையும் பொருட்படுத்தாமல் பகுத்தறிவு மற்றும் பொதுவுடைமைவாதக் கருத்துகளையும் விடாது பிரசாரம் செய்தார். ம. சிங்காரவேலர் தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதி என்று நேசத்துடன் நினைவு கூறப்படுகிறார்.

15.5 திராவிடக்கொள்கைவாதம்
பெரியார் (1879–1973)

அறிமுகம்

தமிழக அரசியல் சிந்தனையாளர்களில் ஈ.வெ.ரா. பெரியார் மிகச்சிறந்த சிந்தனையாளராக கருதப்படுகிறார். ஏனெனில் இவர் தமிழகத்தின் தலைசிறந்த சீர்திருத்தவாதி ஆவார். இவரைப்பற்றி விரிவாக இப்பாடத்தில் காணலாம்.



பன்னெடுங்காலமாக தமிழகத்தைப் பீடித்திருந்த மூடப்பழக்க வழக்கங்கள், பெண்ணடிமை, சமூகப் பின்னடைவுகளுக்கு அறிவையும், சுய மரியாதையையும் அடிப்படையாகக் கொண்டு தனது நெடிய வாழ்நாள் முழுவதும் போராடியவர். இதற்காகத் தந்தை பெரியார் என்று தமிழக மக்களால் அழைக்கப்படுபவர். பண்பாட்டு ரீதியாக அவர் வகுத்துத் தந்த திராவிடக் கருத்துக்கள் இன்று இந்தியா முழுவதும் ஒளி வீசுகிறது என்று புகழ்பெற்ற சமூக நீதி அறிஞர்கள் கூறுகிறார்கள்.

உங்களுக்குத் தெரியுமா?

ஈ.வெ.ராமசாமி என்ற இயற் பெயரைக் கொண்ட தந்தை பெரியார் ஈரோட்டில் செல்வச் செழிப்புள்ள வணிகக் குடும்பத்தில் 1879–இல் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே தனது குடும்பத்திலும், சுற்றியுள்ள சமுதாயத்திலும் நிலவிய மூட நம்பிக்கையை எள்ளி நகையாடிய பெரியார், தொடக்கத்தில் தீவிர அரசியலில் ஈடுபடவில்லை. ஆனாலும், ஈரோடு நகர்மன்றத்தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தார்.

காந்தியின் அரசியல் வருகையால் ஈர்க்கப்பட்ட பெரியார் காங்கிரசு இயக்கத்தில் இணைந்து சுதந்திரப் போராட்ட இயக்கத்திலும், சமூக சீர்திருத்தத்திற்காகவும் தீவிரமாகப் பங்காற்றினார். காங்கிரசு இயக்கத்தில் மேட்டுக்குடியினரின் செல்வாக்கு கோலோச்சிய 1920–களில் அடித்தட்டு மக்களிடம் காங்கிரசு பேரியக்கத்தைக் கொண்டு சென்றதிலும், ஆலய நுழைவு போராட்டங்கள் வெற்றி பெற்றதிலும் பெரியார் பெரும் பங்காற்றினார். ஆனால், காங்கிரசு கட்சியில் வர்ணாசிரம கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதால் அதிலிருந்து விலகி நீதிக்கட்சியில் இணைந்து சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதற்குப் பின்னர் தந்தை பெரியாரின் பங்களிப்புகள் மற்றும் செயல்பாடுகள் இந்திய மற்றும் தமிழக அரசியலில் பிரிக்க முடியாத வரலாறாயின.

தேசத்தின் பெயரால் ஓர் குழு மக்களைச் சுரண்ட நினைத்தால் அத்தேசம் போராடிப்பெற்ற உண்மையான சுதந்திரம் அதுவல்ல என்றார் ஈ.வெ.ரா.பெரியார் பல்வேறு நிலைகளில் தேசம், இனம் மற்றும்

தேசியவாதம் ஆகியவற்றை பெரியார் கடுமையாக விமர்சித்தார். தேசம், தேசியவாதம், மற்றும் தேசிவாதம் ஆகியவை ஒரே மாதிரியான கருத்தாக்கங்களே என அவர் கருதினார். இவ்வேறுபாடுகளே அந்நாட்டிலுள்ள ஒட்டுமொத்த குடிமக்களின் சுயமரியாதையைக் குறிப்பதாக அவர் கூறுகிறார். அவர் மேலும் கூறுகையில் தமிழகத்தில் தேசியவாதத்தைப் பற்றி யாரேனும் பேசுகையில் அவர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிறார்களா? என தாம் வியப்பதாகப் பெரியார் வினவுகிறார்.

தேசியவாதம் என்பது சுரண்டலாகும்

இந்தியர்கள் மற்றும் தமிழர்களை மட்டுமல்லாமல் மக்களின் சுயமரியாதையைப் பற்றியும் கவலைப்படாத மனிதர்களும் உள்ளனர். அவர்கள் தங்களின் சுயநலன் மற்றும் மேம்பாட்டிற்காக மக்களை தேசம் மற்றும் தேசியவாதத்தினை நம்பவைத்து ஏமாற்றுவர், தேசம் மற்றும் தேசியவாதத்திற்காக சுயமரியாதை மறைக்கப்படுமானால் அது தேசத்திற்கு எதிரான குற்றமாகும் என்றார் பெரியார்.

தேசியவாதம் என்பது ஓர் கற்பனையான உணர்வாகும். ஆகவே தேசிய உணர்வு என்பது வசதிமிக்க மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களால் மக்களை ஏமாற்றி அவர்களின் எதிர்மறை உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் சதியாகும். அது ஓர் தவறான அனுமானமாகும். இதனை வசதிபடைத்த உயர் குடியினர் ஏழை சமுதாயத்தின் உரிமைகளைத் தடுப்பதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

தேசியவாதம் என்பது மக்களுக்கு ஓர் மயக்கத்தையும் உணர்வுப்பூர்வமான வெறியையும் குறிக்கும் சொல்லாகி விட்டது எனக் கூறுகிறார்.

உலகளாவிய தேசியவாதத்திற்கு மறுப்பு

பெரியார் தனது இலங்கைப் பேருரையில், தேசம், தேசியவாதம் என்பதைக் கடுமையாக எதிர்த்துள்ளார். 'இந்திய தேசியவாதம்' என்ற கருத்தை சிலர் தங்கள் ஆயுதமாகக் கையிலெடுத்த காலத்தில் தேசியவாதத்தைப் பற்றி பெரியார் எதிர்த்துப் பேசியுள்ளார். இந்திய தேசியவாதத்தை மட்டுமின்றி, உலகில் உள்ள மற்ற நாடுகளின் தேசியங்களையும் சான்றாகக் காட்டி, தேசியவாதத்தை மறுக்கிறார் பெரியார்.

"தேசியவாதம் என்பது முதலாளித்துவவாதிகள் தங்கள் மூலதனத்தை பெருக்கிக் கொள்ள ஏழை மக்களை பலி கடாவாக்குவதற்காகக் கற்பித்துக் கொண்ட தந்திர வார்த்தையாகும்.

உதாரணமாக, "இங்கிலாந்து நாட்டின் பணக்கார சமூகத்திற்கு அமெரிக்கா நாட்டின் பணக்கார சமூகத்துடன் மோதல் வந்தால் இங்கிலாந்து தேசத்து முதலாளிகள், அந்நாட்டின் ஏழைமக்களைப் பார்த்து "ஓ இங்கிலாந்து மக்களே! தேசபக்தர்களே! தேசத்துக்கு நெருக்கடி வந்து விட்டது, என்று கூறி ஏழை சமுதாயத்தை தூண்டுகின்றனர். இவ்வகைப் பொய்யுரைகள் மூலம் மக்களைச் சுரண்டி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்கிறார்கள் என்று கூறுகிறார். பல்வேறு தேசிய இனங்களையும் - தேசங்களையும் உள்ளடக்கிய நாடு ரஷ்யா. அந்த ஒன்றுபட்ட ரஷ்யாவில் எந்த வகையான ஏற்றத் தாழ்வுகளும் இல்லை என்றுகூறி, அந்தவகையான புரட்சிக்கு ஆதரவாக நின்றவர் பெரியார்.

"கடவுள், மதம், மற்றும் தேசியவாதம் ஆகியவை அடியோடு அழிக்கப்பட்ட நாடுகளில் பணக்காரக் கொடுமையும், சோம்பேறி வாழ்க்கையும், பட்டினி கஷ்டமும், உயர்வு தாழ்வு நிலையும் காணப்படவில்லை. அதுபோன்ற நாடுகளில் கடவுள், மதம் மற்றும் தேசப்பற்று ஆகியவை இல்லை. ஆனால் மனித சமூக சமத்துவ சமுதாயமே அந்நாடுகளில் முக்கியமாக்க கருதப்பட்டது. அங்கு பணக்காரன் – ஏழை, முதலாளி – தொழிலாளி, அதிகாரி - குடிமக்கள் என்கின்ற பாகுபாடு காணப்படவில்லை. மேன்மக்களுக்கு சமத்துவ விரும்பிகளும் கடவுள் மற்றும் தேசிய விவாதத்திற்கு முன்னுரிமை தரும் தேசத்திற்கு சமமானவர்கள் அல்ல.

உலகில் உள்ள அனைத்து தேசங்களையும், தேசியங்களையும் கடுமையாக எதிர்த்தது போல 'இந்திய தேசம்' என்பது, பல்வேறு தேசிய இனங்களை – பல்வேறு தேசங்களை இணைத்து உருவாக்கப்பட்ட ஒன்று – அந்த இணைப்பு ஒரு சிலரின் ஆதிக்கத்திற்குக் கருவியாக இருப்பதால் அதையும் பெரியார் எதிர்க்கிறார்.

இந்தியாவில் வேறுபாடுகளின் தேசம்

'தேசம்' என்ற கருத்தியல் இந்தியாவுக்குப் பொருந்துமா? என்ற கேள்விக்கு அவரே சிறப்பான பதில் அளித்துள்ளார்.

"மதராஸ்' என்பது ஒரு தனித் தேசம் அல்லவென்றும் அது தனித்து செயல்பட முடியாது என்றும் தோழர்கள் சிலர் சொல்கிறார்கள். மதராஸ் ஒரு தனி தேசமாக இருந்தது. இன்றும் இருக்கிறது. அதுதான் 'திராவிடம்'. அதனுடைய நாகரிகம், பண்பாடு பழக்கவழக்கங்கள் ஆகியவை வங்காளம், பம்பாயிடம் இருந்து வேறுபட்டது. ஆங்கிலேயர் ஆட்சியால் ஆங்கில மொழி அறிமுகம் ஆகி இருக்கிறது. ஆங்கிலமும் ஆங்கிலேயர் ஆட்சியும் ஒழிந்து ஹிந்தி மொழி வந்தால் அன்றே மதராசானது ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு முதலிய ஏதோ ஒரு நாட்டுடன் சேர்ந்துவிடும்.

"இந்தியா ஒரு 'தேசம்' என்று சொல்வதைவிட, 'திராவிடநாடு' ஒரு 'தேசம்', ஆந்திரநாடு ஒரு 'தேசம்' வங்காளநாடு ஒரு 'தேசம்' என்று சொன்னாலும் பொருந்தும். உதாரணமாக திராவிட நாட்டை எடுத்துக்கொண்டால் திராவிடநாடு என்று தனிப்பட்ட பண்பாடு கலை, மொழி, நாகரிகம், மற்றும் ஆட்சியின் கீழ் ஆயிரக்கணக்கான வருடங்கள் இருந்து வந்ததென்று சரித்திரம் கூறுவதை யாராலும் மறைக்க முடியாது.

மாறுபட்ட ஆட்சிகளின் கீழ் இருந்துவரும் ஒரு நாட்டை ஒரு 'தேசம்' என்று சொல்லி எல்லா மக்களையும் ஒன்றுபடுத்தி அன்னியனிடமிருந்து விடுதலையடைந்த பின்னர் ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை ஆளலாம் என்றால், இதை யார் ஒப்புகொள்வார்கள் என்று கேட்கிறார். பெரியார் முன்மொழிந்த 'திராவிட தேசியவாதம்' முற்றிலும் பெருவாரியாக மத ஆதிக்கங்களுக்கு எதிராக இருந்தது.

மொழிக் கொள்கை

"அவரவர் மொழியைக் காப்பாற்றிக்கொள்வதற்கு அவரவருக்கு உரிமை உண்டு. இந்த உரிமை திராவிட சமதர்மக் குடியாட்சியில் பாதுகாக்கப்படும். எந்த ஒரு மொழியும், மற்றொரு மொழி பேசுபவர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படக்கூடாது. பிரிவினை வாதத்திற்கான ஆயுதமாக மொழி பயன்படுத்தப்படக்கூடாது. மக்களின் அனைத்து தேவைகளுக்கும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்திருப்பது எதனையும் வெளிப்படுத்தாது. ஒருவேளை மொழியானது தேசியமயமாக்கப்பட்டால் மக்களுக்கு அதனால் பட்டினியில் இருந்து விடுதலை கிடைக்குமா? தெளிவாகக் கூறுவதெனில் தமிழ் உழைப்பாளர்கள் தமிழ் பேசும் முதலாளிகளாலேயே சுரண்டப்படுகின்றனர்.

சாதியற்ற சமுதாயம்

பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே, திராவிடநாடு திராவிடருக்கே' என்று தொடர்சியான பரப்புரைகள், போராட்டங்களை நடத்தினார். பொதுச்செயல்திட்டம், பொதுவேலைத்திட்டம், இஸ்லாமுக்கு மதமாற்றம், திராவிடநாட்டுப் பிரிவினை போன்றவற்றில் பல்வேறு வடிவங்களில் ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போராடினார்.

ஆனால், ஆதிக்க சக்திகள் மிக எளிதாக, தமிழன், தமிழ்த்தேசியவாதம், தேசிய இனம் போன்ற உணர்வுகளை ஏற்றி, சில தமிழ் தேசியத் தலைவர்கள் மூலமாக மீண்டும் தங்களது ஆதிக்கத்தைத் தொடரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டபோது,

ஒருகால கட்டத்தில் பெரியார், இந்தத் திராவிடநாடே கூட வேண்டாம். சாதி ஒழிப்பே முக்கியம் என்ற முடிவுக்கு வந்தார் என்பதை அவரின் சிந்தனைத் தொகுப்புகள் வழியாக அறியலாம்.

"திராவிடநாடு பெறாவிட்டாலும் சரி; சில ஆதிக்க சக்திகளை ஒழிக்க முடியாவிட்டாலும் சரி; முதலாளித்துவத்தை அழிக்க முடியாது போனாலும் சரி; சாதியை ஒழிக்கின்ற ஒரே காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தால் போதும் என்கிறார். இது ஒன்றே திராவிடர் கழகத்தின் லட்சிய வெற்றி என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அந்த அளவுக்கு இந்த சாதி வெறியானது, திராவிட இனத்தைச் சின்னாபின்னப்படுத்தி ஆரியத்துக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறது." என்று 1950களின் தொடக்கத்தில் அவர் தனது அரசியல் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

உங்களுக்குத் தெரியுமா?

பெரியார் ஓர் கடவுள் மறுப்புக் கொள்கையுடைய முற்போக்கான சமூக சீர்திருத்தவாதி

பெரியாரின் படைப்புகள் மற்றும் மரபு

சராசரித் தமிழனுக்குப் பெரியார் ஓர் கொள்கையாக உள்ளார். சமூக சமத்துவம், சுயமரியாதை மற்றும் மொழியின் பெருமையை முன்னிறுத்தும் அரசியலை வழி நடத்தினார். ஓர் சமூக சீர்திருத்தவாதியாக அவர் சமூகம், பண்பாடு மற்றும் பாலின சமத்துவமின்மை போன்றவற்றில் கவனம் செலுத்தினார். அவர் மக்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் போது பகுத்தறிவின் அடிப்படையில் செயல்பட வலியுறுத்தினார். பெண்கள் அனைவரும் சுதந்திரமாக இருப்பதுடன் பிள்ளை பெற்றுக் கொடுப்பதற்காக எனும் நிலையை மாற்றி அவர்களுக்கு வேலை சுயமரியாதை இயக்கம், சடங்குகளற்ற திருமணங்களை ஊக்குவித்ததுடன் பெண்களுக்கு சொத்துரிமை மற்றும் விவாகரத்து செய்யும் உரிமைகளும் வழங்க வேண்டும் எனப் போராடினார். அவர் மக்கள் தங்களின் பெயருக்கு பின் உள்ள சாதிப் பெயரை கைவிடுமாறும் அதனைக் குறிப்பிட வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்தார். 1930-களில் பட்டியல் இனத்தவரால் சமைக்கப்பட்ட உணவை பொதுக்கூட்டங்களின் பின்னர் சமபந்தியாக நடத்திக் காட்டினார். காலப்போக்கில் சாதி, மத அரசியல் வேறுபாடுகளைக் கடந்த பெருமதிப்புடன் 'பெரியார்' நவீன தமிழகத்தின் தந்தையென அழைக்கப்படுகிறார்.

நன்றி அருண் ஜனார்த்தனன், தி.நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 13.3.2018

கலைச்சொற்கள்: Glossary

அரசியல் இயக்கம் : இது ஒரு சமூக கூட்டம் இது அரசியல் இலக்குகளை ஒன்றிணைத்து செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப் பட்டதாகும்.

சமூக இயக்கம் : இது ஒரு வகையான சமூக கூட்டத்தின் செயல்பாடு ஆகும். ஒரு சமூகத்தில் உள்ள மக்கள் அனைவருமோ அல்லது ஒரு பிரிவினரோ ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக ஒன்றிணைந்து செயல்படுவது.

திரவிட இயக்கம் : திராவிட இயக்கம் சென்னை மாகாணத்தில் ஏற்படுத்தப்பட்டது. இது தென் இந்தியாவின் நான்கு முக்கிய இனம், மொழி உள்ளடக்கிய ஒரு பிரிவு ஆகும்.

சுயமரியாதை இயக்கம் : சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட அனைத்து சாதியினரும் தங்களுக்கென்று சயமரியாதையுடனும் உரிமைகளுடனும் வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்ட இயக்கம்.

தொழிளாலர்இயக்கம்: பணியாளர்/ தொழிளாலர்களின் நல்வாழ்வுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு ஆகும்.

நீதிக்கட்சி: இது ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் சென்னை மாகாணத்தில் தோன்றிய அரசியல் கட்சியாகும். இது பிராமணரல்லோதோரை பிரதிநிதிப்படுத்துவதற்காக தோன்றியது.

தனி தமிழ் இயக்கம்: இந்த இயக்கம், ஒரு இயக்கமாக செயல்பட்டு தமிழ் மொழியை அன்னியநாட்டு மொழியின் தாக்கத்திலிருந்து தமிழ் மொழியை சுதந்திரமாக இருக்க செய்ய

தோன்றியதாகும், குறிப்பாக சமஸ்கிருதத்தின் வார்த்தையின் தாக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக தோன்றியதாகும்.

தன்னாட்சி இயக்கம்: 1916 மற்றும் 1918ம் ஆண்டுகளுக்கு இடையேயான இந்திய சுதந்திர இயக்கம் ஆகும். இது அன்னிபெசன்ட் அம்மையாரால் துவங்கப்பட்டது.

பாகுபாடு: சாதி, மத இன அடிப்படையில் ஒருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களை சமமாக நடத்தாமை மற்றும் அவர்களுக்கான வாய்ப்புகளை மறுத்தல்

தேசிய இயக்கம்: இந்த இயக்கம் ஒரு சமூக மற்றும் அரசியல் இயக்கமாகும். இது தேசிய அடையாளத்துடனும் மற்றும் சுதந்திரமாக இருப்பதற்காக மக்கள் ஒரு கூட்டமாக/ இயக்கமாக தேசத்தில் இதன் உறுப்பினர்களை கொண்டு செயல்படுவதாகும்.

மதிப்பிடுதல் (Evaluation)

I சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

1. அறத்துப்பாடலில் வள்ளுவர் கூறுவது என்னவெனில்:

   அ) கருத்துக்கள் மற்றும் அறநெறிகள் ஆ) பாடல்கள்
   இ) அரசியல் தத்துவஞானி ஈ) மக்கள் நல அரசு

2. பொருட்பாலில் எத்தனை பகுதிகள் காணப்படுகின்றன ?

   அ) 5 ஆ) 4 இ) 7 ஈ) 6

3. பாரதியார் பதிப்பாசிரியாக இருந்த நாளிதழ்

   அ) இந்தியா ஆ) இளம் இந்தியா
   இ) கேசரி ஈ) திராவிடன்

4. "பாஞ்சாலி சபதம்" என்ற நூலை எழுதியவர் யார் ?

   அ) பாரதியார் ஆ) திரு.வி.க
   இ) கம்பர் ஈ) பாரதிதாசன்

5. தமிழ்நாடு அரசியல் சிந்தனையாளர்களில் மிகச்சிறந்தவர் யார் ?

   அ) பாரதியார் ஆ) பெரியார்
   இ) திருவள்ளுவர் ஈ) மேற்கூறிய அனைவரும்

6. ஈ.வெ.ராமசாமி பிறந்த வருடம்

   அ) 1879 ஆ) 1877 இ) 1878 ஈ) 1876

7. "சாதிய உணர்வுகளால், திராவிட இனம் மற்றும் திராவிடர்கள் என்ற ஆரியர்களிடம் அடிமையானார்கள்" என்று கூறியவர்

   அ) சி. என். அண்ணாதுரை ஆ) ஈ.வெ.ரா.பெரியார்
   இ) சிங்கார வேலர் ஈ) மறைமலைஅடிகள்

8. 1923ம் ஆண்டு முதல் இந்திய 'மே தினம்' கூட்டத்தை சென்னையில் நடத்தியவர்.

   அ) பாரதியார் ஆ) ஈ.வெ.ரா. பெரியார்
   இ) ம. சிங்காரவேலர் ஈ) மறைமலை அடிகள்

9. பெரியார் இறந்த வருடம்

அ) 1971 ஆ)1972 இ)1973 ஈ)1974

10. பாரதியார் பிறந்த இடம்

அ) எட்டயபுரம் ஆ) திருச்சி
இ) திருநெல்வேலி ஈ) சென்னை

11. சுய மரியாதை இயக்கத்தை தமிழ்நாட்டில் துவங்கியவர் யார் ?

அ) அண்ணாதுரை ஆ) ஈ.வெ.ரா. பெரியார்
இ) மறைமலை அடிகள் ஈ) ம. சிங்காரவேலர்

12. "தமிழ்நாடு என்பது தமிழர்களுக்கு மற்றும் திராவிட தேசம் என்பது தீராவிடர்களுக்கு " என்ற கூறியவர் யார்?

அ) இளங்கோவடிகள் ஆ) ஈ.வெ.ரா.பெரியார்
இ) ம. சிங்காரவேலர் ஈ) மறைலையடிகள்

13. எந்த வருடம் ஆங்கிலேய இந்தியாவில் தொழிலாளர் பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்டது ?

அ) 1914 ஆ) 1924 இ) 1926 ஈ)1928

14. எதற்காக பெரியார் இந்திய தேசிய காங்கிரசில் இருந்து விலகினார் ?

அ) அகிம்சை ஆ) வர்ணாசிரம தர்மம்
இ) தனி விருப்ப வித்தியாசத்தினால் ஈ) இவைகள் ஏதும் இல்லை

15 **கூற்று:** பாரதியார் பாண்டிச்சேரிக்கு சென்று மறைந்து வாழ்ந்தார்.
காரணம்: பாரதியார் "இந்தியா" என்ற தின நாளிதழின் மூலம் தேசியவாதத்தை விதைத்தார்.

அமைப்பு விளக்கம் (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

அ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது

ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.

இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது அல்ல.

ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

II கீழ்கண்ட வினாக்களுக்கு மிகச் சுருக்கமாக விடையளி

1. திருக்குறளின் முக்கியத்துவம் என்ன ?
2. பொருட்பாலில் எத்தனை பகுதிகள் உள்ளன ?
3. குயில்பாட்டின் எழுத்தாசிரியர் யார் ?
4. பெண்கள் அதிகாரம் பற்றிய பாரதியாரின் கருத்தை விளக்குக.
5. பாரதியார் ஒரு எழுத்தாசிரியர் என்பதை விவாதிக்க.
6. கடவுள் பற்றிய பெரியாரின் கருத்தை விவாதிக்க.
7. தொழிலாளர் இயக்கத்தில் ம. சிங்காரவேலரின் பங்கு பற்றி சிறு குறிப்பு வரைக.
8. அரசியல் பற்றிய ம. சிங்காரவேலரின் கருத்து என்ன ?
9. தமிழ் சமுதாயத்திற்கான சிங்காரவேலரின் வாழ்க்கை மற்றும் பணிகளை விவரி.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 312 06/12/2022 12:50:46

III கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

1. திருவள்ளுவரின் நல அரசு மற்றும் அரசன் பற்றிய கருத்து என்ன ?
2. கொடுங்கோல் ஆட்சி பற்றிய வள்ளுவரின் கருத்தை விளக்குக.
3. ஆங்கிலேய ஆட்சி பற்றிய பாரதியாரின் கருத்தை விவரி.
4. தேசியவாதம் பற்றிய பாரதியாரின் கருத்தை விளக்கு.
5. காங்கிரசு கட்சி பற்றி சிங்கார வேலரின் கருத்தை ஆராய்க.
6. 1922–ஆம் ஆண்டு சிங்காரவேலரால் சமர்பிக்கப்பட்ட கோரிக்கைகளை பட்டியலிடுக.
7. திராவிட நாடு பற்றிய பெரியாரின் கருத்தை விளக்குக.

IV கீழ்வரும் வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும்.

1. சமுதாயம் பற்றிய திருவள்ளுவரின் கருத்தை ஒரு சிறு குறிப்பு வரைக.
2. தமிழ்நாட்டின் தொழிலாளர் தலைவர் சிங்காரவேலர் என்பதை விவாதிக்க.
3. தமிழ்நாட்டில் பாரதியாரின் சமூக–அரசியல் பங்களிப்பை பற்றி விரிவாக எழுதுக.
4. பெரியாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் பங்களிப்பை விவரி.
5. தமிழ்நாட்டின் அரசியல் சிந்தனையில் பின்புலத்தை எடுத்துரைக்க.

மேற்கோள் நூல்கள்

1. Padmaja, R, Purushothaman, V.P (2000). Sanga Kaala Mannargalin Kaala Nilai. Volume 1. International institute of Tamil Studies: Chennai.
2. Pope .G.U , “Th irukkural: English translation and commentary”, Kazhagam 2017 edition.
3. Rajaram.M, “ I sing the glory of this Land: Translated verses of Bharathiyar”, Rupa Publica- tions, Chennai, 2018.
4. Vasanthakumaran .P , ” Th e godfather of Indian labour : M. Singaravelar” , Chennai : Poorn- ima Publishers, 2003.
5. Veeramani. K , “ Th oughts of Periyar”, DRAVIDAR KAZHAGAM PUBLICATIONS , chennai ,(2012),
6. Palanithurai. G, “ Caste Politics and Society in Tamilnadu”, South Asia Books (1 July 1994)
7. Puranannoru….. See ‘Purananooru, moolamum thelivum', Manimegalai prasuram, pg 82

www.tnschoolbooks.in

QUD4T

சொற்களஞ்சியம்

ஒத்திவைப்பு	Adjournment
நிர்வாக அலகுகள்	Administrative units
உறுதிப்படுத்துதல்	Affirm
மாற்று வாக்கு	Alternative vote
சட்டத்திருத்தம்	Amendment
தொன்மையான	Ancient
முன்னுதாரணங்கள்	Antecedents
கட்சித் தாவல் தடைச்சட்டம்	Anti–Defection Law
முறையீடு	Appeal
உறுப்பு	Article
சபை	Assembly
சட்டமன்ற தேர்தல்	Assembly election
மதிப்பீட்டு ஆண்டு	Assessment year
சொத்துக்கள்	Assets
அமைப்பெதிர்வாதம் / அரசின்மைவாதம்	Anarchism
வாக்குச் சீட்டு	Ballot
கையூட்டு	Bribe
இடைத்தேர்தல்	By– election
முதலாளித்துவம்	Bourgeoisie
உயிர் முதன்மை சமத்துவம்	Biocentric Equality
வேட்பாளர்	Candidate
வாக்களித்தல்/தீர்மான வாக்கு	Cast vote
சாதி	Caste
உச்சவரம்பு	Ceiling
குடிமகன்	Citizen
நடத்தை விதிமுறைகள்	Code of conduct
சமூகம்	Community
போட்டி	Competition
தொகுதி	Constituency
அரசமைப்பு	Constitution
சமகால	Contemporary
பண்பாட்டுப் புரட்சி	Cultural Revolution
போட்டியாளர்	Contestant
குற்றவியல் வழக்கு	Criminal case
ஒட்டுமொத்த	Cumulative
சமுதாயவாதம்	Communitarianism

போட்டி	Contest
வரையறை	Delimitation
வரையறை ஆணையம்	Delimitation Commission
மக்களாட்சி	Democracy
சச்சரவுகள்	Disputes
தகுதியிழப்பு	Disqualification
வாழும் இடம்	Domicile
தகர்ப்பமைப்பு	Deconstruction
ஆழச்சூழலியல்	Deep Ecology
மக்களாட்சி அரசு	Deomcratic State
தேர்தல் பரப்புரை	Election campaign
தேர்தல் ஆணையம்	Election Commission
தேர்தல் நிதி	Election fund
சூழலிய பெண்ணியம்	Eco–Feminism
தேர்தல் எந்திரம்	Election machinery
தேர்தல் முடிவுகள்	Election result
தேர்தல்	Election
வாக்காளர் முறைமை	Electorate
இயற்றுதல்	Enact
செயலாட்சி/ஆட்சித்துறை	Executive
தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பு	Exit poll
பிரிவினைவாதம்	Factionalism
வாக்குரிமை	Franchise
சுதந்திரமான மற்றும் நேர்மையான	Free and fair
பெண்ணியம்	Feminism
பாலினம்	Gender
பொதுத் தேர்தல்	General election
உலகமயமாக்கல்	Globalization
மேலாதிக்கம்	Hegemony
பாரபட்சமற்ற	Impartial
விதித்தல்	Impose
ஊக்கம்	Incentives
வருமான வரி	Income tax
சுதந்திரமான அமைப்பு	Independent body

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_Aa_Glossary.indd 314 06/12/2022 12:51:08

சுயேச்சை வேட்பாளர்	Independent candidate
தகவல்	Information
புதுமை	Innovation
அடையாள அரசியல்	Identity Politics
கற்பனை சமூகங்கள்	Imagined Communities
தலைமுறைகள் இடையிலான நீதி	Inter Generational Justice
ஏகாதிபத்தியம்	Imperialism
கருவி மார்க்சிசம்	Instrumental Marxism
நீதித்துறை	Judiciary
அதிகார வரம்பு	Jurisdiction
சட்டமன்றம்	Legislature
கடன்கள்	Liabilities
சுதந்திரம்	Liberty
வரையறுக்கப்பட்ட வாக்கு	Limited vote
உள்ளாட்சி அரசாங்கம்	Local government
மக்களவை	Lok Sabha
தாராளவாதம்	Liberalism
பெரும்பான்மை	Majority
சிறுபான்மையினர்	Minorities
நகராட்சி	Municipality
சந்தை பொருளாதாரம்	Market Economy
வேட்புமனு	Nomination form
அறிவிப்பு	Notification
எதிர்மறை தாராளவாதம்	Negative Liberalism
இயற்கை உரிமைகள்	Natural Rights
நோக்கம்	Objective
அமைப்பு	Organisation
பஞ்சாயத்து	Panchayat
நாடாளுமன்றம்	Parliament
கட்சி சின்னம்	Party symbol
மனுக்கள்	Petitions
பன்மைத்துவம்	Plurality
கொள்கையை உருவாக்குபவர்கள்	Policy makers
கொள்கை	Policy
அரசியல் செல்வாக்கு	Political influence
அரசியல் கட்சி	Political party

அரசியல்வாதி	Politician
வாக்களிக்கும் நடைமுறை	Polling process
மக்கள் விருப்பம்	Popular will
பிரபலம்	Popularity
இந்திய குடியரசுத் தலைவர்	President of India
முன்னேற்றம்	Progress
பரப்புரை	Propaganda
விகிதாச்சார	Proportional
பதிலி/பிரதிநிதி	Proxy
தேர்தலியல்	Psephology
பொது நலம்	Public interest
பொதுப்பதவி	Public office
கட்சி அரசியல்	Party Politics
நாடாளுமன்ற முறை அரசாங்கம்	Parliamentary Form of Government
நாடாளுமன்ற நடைமுறைகள்	Parliamentary Procedures
உயர்குலத்தோர்	Patricians
நாட்டுப்பற்று	Patriotism
தனிநபர் வருமானம்	Per-Capita Income
தனிநபர் சுதந்திரம்	Personal Liberty
ஆளுமை	Personality
தனிமனித வழிபாடு	Personality Cult
தந்தை வழி மரபு	Paternalism
தந்தை வழி அரசு தோற்றக் கோட்பாடு	Patriarchal Theory of State
இயற்பியல் சட்டம்	Physical Law
திட்டமிடல்	Planning
சாதாரண குடிமக்கள்	Plebeians
பொது வாக்கெடுப்பிலான மக்களாட்சி	Plebiscitary Democracy
பன்மைவாதம்	Pluralism
பன்மைத் தலைமை	Plural Executive
பன்முக இறைமைக் கோட்பாடு	Pluralistic Theory of Sovereignty
அரசியல் புகலிடம்	Political Asylum
அரசியல் அதிகாரம்	Political Authority
அரசியல் மக்களாட்சி	Political Democracy
அரசியல் பொருளாதாரம்	Political Economy
அரசியல் சமத்துவம்	Political Equality

அரசியல் லட்சியம்	Political Ideology
அரசியல் கடப்பாடு	Political Obligation
அரசியல் கட்சிகள்	Political Parties
அரசியல் துருவமடைதல்	Political Polarization
அரசியல் வலிமை	Political Power
அரசியல் உரிமைகள்	Political Rights
அரசியல் அறிவியல்	Political Science
அரசியல் சுய நிர்ணயம்	Political Self-Determination
அரசியல் சமூகவியல்	Political Sociology
அரசியல் இறையாண்மை	Political Sovereignty
அரசியல் முறைமை	Political System
அரசியல் கோட்பாடு	Political Theory
அரசியல்	Politics
குழுவாட்சிமுறை	Polyarchy
மக்களின் துவக்க முறை	Popular Initiative
மக்களின் கருத்துக்கணிப்பு	Popular Referendum
மக்கள் இறையாண்மை	Popular Sovereignty
நேர்மறை சுதந்திரம்	Positive Liberty
புரட்சிக்குப் பிந்தைய நிலை	Post-Revolutionary Stage
பிந்தைய நடத்தையியல் (பின் தோன்றிய நடத்தையியல்)	Post-Behavioralism
குடியேற்றத்திற்குப் பிந்தைய அரசுகள்	Post-Colonial States
வறுமை	Poverty
புரட்சிக்கு முந்தைய நிலை	Pre-Revolutionary Stage
முகப்புரை	Preamble
குடியரசுத்தலைவர் முறை	Presidential System
குடியரசுத்தலைவர் முறை அரசாங்கம்	Presidential Form of Government
அழுத்தக் குழுக்கள்	Pressure Groups
தடுப்புக் காவல்	Preventive Detention
ஆரம்பநிலை பொதுவுடைமை	Primitive Communism
சலுகைகள்	Privileges
முன்னேற்றவாதம்	Progressivism
முதன்மையான	Prominent

பாதுகாப்பிலான மக்களாட்சி	Protective Democracy
நடைமுறைப்படுத்துதல்	Promulgation
உளவியல்	Psychology
பொதுக் கருத்து	Public Opinion
பொதுத்துறை	Public Sector
வாங்குந்திறன் சமநிலை	Purchasing Power Parity
பின் நவீனத்துவ பெண்ணியம்	Post-Modern Feminism
ஆணாதிக்கம்	Patriarchy
பின் காலனிய பெண்ணியம்	Post-Colonial Feminism
நேர்மறை உரிமைகள்	Positive Rights
பின் நவீனத்துவம்	Post-Modernism
தனிப்பட்டவாதம்	Particularism
ஆதியிலிருந்து	Primordial
பாட்டாளி வர்க்கம்	Proletariat
நேர்மறை தாராளவாதம்	Positive Liberalism
தத்துவ அரசின்மை வாதம்	Philosophical Anarchism
ஒதுக்கீடு	Quota
தரநிலை முறைகள்	Qualitative Methods
தகுதிநிலை முறைகள்	Quantitative Methods
அரை கூட்டாட்சி அரசு	Quasi-Federal State
நீதிமுறை சார்புடைய	Quasi-Judicial
மாநிலங்களவை	Rajya Sabha
அங்கீகாரம்	Recognition
சீர்திருத்தங்கள்	Reforms
வட்டார/பிராந்திய	Regional
ஒழுங்குபடுத்துதல்	Regulate
மதம்	Religion
பிரதிநிதித்துவம்	Representation
இடஒதுக்கீடு	Reservation
ஆதாரங்கள்	Resources
தேர்தல் நடத்தும் அதிகாரி	Returning officer
உரிமை	Right
இனப் பாகுபாடு	Racial Discrimination

தீவிர மக்களாட்சி	Radical Democracy
மெய்யான இறையாண்மை	Real Sovereignty
மெய்யான விருப்பம்	Real Will
மெய்மைவாதம்	Realism
பகுத்தறிவு	Reason
திரும்ப அழைத்தல் முறை	Recall System
ஏற்பு	Recognition
மக்கள் ஒப்பம்	Referundum
வட்டாரக் கூட்டணிகள்	Regional Alliances
மத அடிப்படைவாதி	Religious Fundamentalist
மத சிறுபான்மையினர்	Religious Minorities
மறுமலர்ச்சி	Renaissance
பிரதிநிதி	Representative
பிரதிநிதித்துவ மக்களாட்சி	Representative Democracy
பிரதிநிதித்துவ அரசாங்கம்	Representative Government
குடியரசு	Republic
தலைகீழ் பாகுபாடு	Reverse Discrimination
பதவி விலகுதல்	Resignation
பொறுப்புடைமை	Responsibility
புரட்சி	Revolution
சொல்லாட்சி	Rhetoric
சுரண்டலுக்கு எதிரான உரிமை	Right against Exploitation
சமத்துவ உரிமை	Right to Equality
மதச்சுதந்திரத்திற்கான உரிமை	Right to Freedom of Religion
சுதந்திர உரிமை	Right to Freedom
உயிர்வாழும் உரிமை	Right to Life
தனியுரிமை / அந்தரங்க உரிமை	Right to Privacy
வலதுசாரி லட்சியவாதம்	Rightist Ideology
நெகிழா அரசமைப்பு / இறுக்கமான அரசமைப்பு	Rigid Constitution
சட்டத்தின் ஆட்சி	Rule of Law
ஆளும் வர்க்கம்	Ruling Class
தீவிர பெண்ணியம்	Radical Feminism
அட்டவணை	Schedule
பட்டியல் இனத்தவர்	Scheduled castes
பழங்குடியினர்	Scheduled tribes

இடங்கள்	Seats
பிணைத்தொகை	Security deposit
சமூக செயற்பாட்டாளர்	Social activist
மாநில சட்டமன்றம்	State legislature
துணைக்கண்டம்	Sub-continent
கண்காணிப்பு	Superintendence
சத்தியாகிரகம்	Satyagraha
பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்	Scheduled Castes and Scheduled Tribes
பிரிவினைவாதம்	Secessionism
மதச்சார்பற்ற அரசு	Secular State
மதச்சார்பின்மை	Secularism
சுயாட்சி	Self-Rule
இறையியல் கல்லூரி	Seminary
மூத்த குடிக்கள்	Senior Citizens
அதிகாரப் பிரிவினை	Separation of Powers
சேவைத் துறை	Service Sector
கூட்டத் தொடர்கள்	Sessions
சாதாரண பெரும்பான்மை	Simple Majority
ஒற்றைக் குடியுரிமை	Single Citizenship
அடிமைமுறை	Slavery
பரப்பெல்லை	Scope
சமூக செயல்முனைவு	Social Activism
சமூக தன்னாட்சி	Social Autonomy
சமூகத்தின் வலிந்த மாற்றம்	Social Coercion
சமூக ஒப்பந்தம்	Social Contract
சமூக ஒப்பந்தக் கோட்பாடு	Social Contract Theory
சமூக ஒப்பந்தவியலாளர்கள்	Social Contractualists
சமூக மக்களாட்சி	Social Democracy
சமூக சமத்துவம்	Social Equality
சமூக நீதி	Social Justice
சமூக ஊடகங்கள்	Social Media
சமூக இயக்கங்கள்	Social Movements
சமூக நிலை	Social Status
சமூக முறைமை	Social System
சமதர்மவாதம்	Socialism
சமதர்மத்திலான மக்களாட்சி	Socialistic Democracy

சமுதாயம்	Society
மென்மை அரசு	Soft State
இறையாண்மை	Sovereignty
சபாநாயகர்	Speaker
உத்வேகம்	Spirit
அரசியல் சார்ந்த அரசுப் பதவி முறை	Spoils System
நிலைக்குழு	Standing Committee
மாநில சட்டப்பேரவை	State Legislative Assembly
கட்டமைப்பு	Structure
கட்டமைப்பு செயல்பாட்டு அணுகுமுறை	Structural Functional Approach
இயற்கை நிலை	State of Nature
அரசற்றநிலை	Statelessness
அரசு	State
வாக்குரிமை	Suffrage
நிலையான வளர்ச்சி	Sustainable Development
உச்சி மாநாடு	Summit
மேற்பார்வை	Supervision
மேற்பார்வையாளர்	Supervisor
வல்லரசு நாடுகள்	Super Powers
உயர்வுத் தன்மை	Superiority
முக்கூற்று ஏரணம்	Syllogisms
தொழிற்சங்கவாதிகள்	Syndicalists
முறைமை அணுகுமுறை	System Approach
தர்க்க முறை	System of Logic
மேலோட்டமான சூழலியல்	Shallow Ecology
சீனமயமாக்கல்	Sinification
பிரிவினைவாதம்	Secessionism
நிலையான முன்னேற்றம்	Sustainable Development
சமூக நல அரசு	Social Democratic State
கட்டமைப்பிலான மார்க்சிசம்	Structural Marxism
பதவிக்காலம்	Tenure
நிலப்பரப்பு	Territory
மாறுதல்	Transform
வெளிப்படைத்தன்மை	Transparency
நன்னெறிக்குப் புறம்பான	Unethical
நியாயமற்ற	Unfair
நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு	Urban local body
கற்பனையிலான சமதர்மம்	Utopian Socialism
பிரபஞ்சவாதம்	Universalism
இந்திய குடியரசு துணைத் தலைவர்	Vice President of India
விதான் சபை (சட்டமன்ற கீழவை)	Vidhan Sabha
வாக்காளர் பட்டியல்	Voters₹ list
வாக்குகள்	Votes
நகரின் உட்பிரிவு (வார்டு) / குடும்பு	Ward
நலிவுற்ற பிரிவினர்	Weaker sections
திரும்பப்பெறுதல்	Withdrawal
சான்றாய்வு / நெறிப்படுத்தும் நீதிப்பேராணை	Writ of Certiorari
ஆட்கொணர்வு நீதிப்பேராணை	Writ of Habeas Corpus
கட்டளை / செயலுறுத்தும் நீதிப்பேராணை	Writ of Mandamus
தடை நீதிப்பேராணை	Write of Prohibition
உரிமையேது வினா நீதிப்பேராணை	Writ of Quo-Warranto
எழுதப்பட்ட அரசமைப்பு	Written Constitution
வெள்ளை மனிதனின் சுமை-கடமை	White Man Burden

www.tnschoolbooks.in

அரசியல் அறிவியல் – 11ஆம் வகுப்பு

நூலாசியர்களின் பட்டியல்

பாட நூல் வல்லுநர்

Dr. R. ராமுமணிவண்ணன், HOD,
அரசியல் மற்றும் பொதுநிர்வாகத்துறை,
சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

மேலாய்வாளர்கள்

Dr. A. கருணானந்தம், HOD (ஓய்வு),
வரலாற்று துறை, விவேகானந்தா கல்லூரி, சென்னை.

Dr. R. மதனகோபால், HOD (ஓய்வு),
அரசியல் அறிவியல் துறை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

Dr. W. லாரன்ஸ் S.பிரபாகரன், இணைபேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, MCC, சென்னை.

நூலாசிரியர்கள்

Dr. P. முத்துக்குமார், இணைபேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, மாநிலக் கல்லூரி , சென்னை.

Dr. P. கனகராஜ், HOD, அரசியில் அறிவியல் துறை,
அரசு கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்

Dr. N. K. குமரேசன்ராஜா, உதவிப்பேராசிரியர்,
அரசியல் மற்றும் பன்னாட்டு ஆய்வுகள் துறை,
பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், புதுச்சேரி.

Dr. T. கிருஷ்ணகுமார், இணைப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.

Dr. S. ஜமீலா இணைப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, J.B.A.S மகளிர் கல்லூரி, சென்னை.

Dr. R. திருநாவுக்கரசு, உதவிப்பேராசிரியர்,
சமூகவியல் துறை ஹைட்ரபாத் பல்கலைக்கழகம், ஹைதரபாத்.

Dr. P. சக்திவேல், இணைப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் மற்றும் பொது நிர்வாகத்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

Dr. க. கோட்டைராஜன், உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, பெரியார் அரசு கலைக் கல்லூரி,கடலூர்.

Dr. R. வித்யா, உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, MCC, தாம்பரம், சென்னை.

Dr. மீரா ராஜிவ்குமார், உதவிப்பேராசிரியர்,
அரசியல் மற்றும் பொது நிர்வாகத்துறை MCC, சென்னை.

Dr. P. ராமஜெயம், உதவிப்பேராசிரியர்,
சமூக விலக்கல் மற்றும் சேர்க்கைக் கொள்கை ஆய்வுமையம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

Dr. R. சிவக்குமார், இணைபேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, மாநிலக் கல்லூரி , சென்னை.

Dr. R. சிவக்குமார், இணைபேராசிரியர், அரசியல் அறிவியல் துறை,
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, ராசிபுரம், நாமக்கல்.

Dr.R.ஆளிக் J.போனோபர், உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, MCC, சென்னை.

Dr. L. அமிர்தா லெனின், உதவிப்பேராசிரியர்,
தமிழ் துறை, லயோலா கல்லூரி, சென்னை.

Dr. T. கிருஷ்ணகுமார், இணைப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.

Dr. R. மோகன், பேராசிரியர் (ஓய்வு),
மொழியியல் துறை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

Dr. S. பார்த்திபன், உதவிப்பேராசிரியர், அரசியல் மற்றும் பொதுநிர்வாகத்துறை,
சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

கலை மற்றும் வடிவமைப்புக் குழு

வரைபடம்
சு.வெ.கோகுல கிருஷ்ணன்
வேல்முருகன்
பிரமோத்
அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர்கள், சென்னை

வடிவமைப்பு
V2 இனோவேஷன்ஸ், கோபாலபுரம், சென்னை

In-House -
கோபு ராசுவேல்
ஜெரால்டு வில்சன், அருண் காமராஜ் ப,
மதன் ராஜ் , ஏசு ரத்தினம், டேனியல்

ஒருங்கிணைப்பாளர்
ரமேஷ் முனிசாமி

Dr. ராதா லக்ஷ்மணன் ஆராய்ச்சியாளர்,
MCC, சென்னை.

Dr. S. சுதா, உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, MCC, சென்னை.

Dr. J. திவ்வியன், உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, MCC, சென்னை

Dr. ஹான்ஸ் ப்ரௌடி, உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, MCC, சென்னை.

Dr. ஆதர்ஷ் விஜய், உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, MCC, சென்னை.

Dr. M. கென்னடி ஸ்டீபன்சன் வசீகரன், இணைப்பேராசிரியர்,
அரசியல் மற்றும் பொதுநிர்வாகத்துறை, சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

A. அப்பனசாமி எழுத்தாளர்

P. K. சரவணன் எழுத்தாளர்

தமிழில் மொழிப்பெயர்ப்பு நூலாசிரியர்கள்

Dr. அ.பூ. நடராஜன், உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, சென்ட்ரல் சட்டக் கல்லூரி, சேலம்.

Dr. ஜா. சுப்ரமணியன், உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் மற்றும் பொது நிர்வாகத்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்..

Dr. செ. பாலமுருகன், உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, பெரியார் அரசு கலைக் கல்லூரி, கடலூர் .

Dr. கே. செந்தில்குமார், உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் மற்றும் பொது நிர்வாகத்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

Dr. ரெ. சிவக்குமார், உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.

Dr. ந. சுவாமிநாதன், உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, பெரியார் அரசு கலைக் கல்லூரி, கடலூர்.

Dr. N. K. குமரேசன்ராஜா, உதவிப்பேராசிரியர்,
அரசியல் மற்றும் பன்னாட்டு ஆய்வுகள் துறை,
பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், புதுச்சேரி.

Dr. J. ஆரியபடைக் கடந்த நெடுஞ்செழியன், உதவிப்பேராசிரியர், பொது
நிர்வாகத்துறை, அரசு கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்

Dr. S. சரவணகுமார், உதவிப்பேராசிரியர்,
அரசியில் அறிவியல் துறை, கோபி அரசு கலைக்கல்லூரி, ஈரோடு

Dr. V. வீரமுத்து, உதவிப்பேராசிரியர்,
அரசியில் அறிவியல் துறை, அரசு கலைக்கல்லூரி, சேலம்

M. மலரவன், ஆராய்ச்சியாளர், MCC, சென்னை.

வேலைவாய்ப்பு வழிகாட்டி

Dr. P. கனகராஜ், HOD,
அரசியில் அறிவியல் துறை,
அரசு கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்

ICT ஒருங்கிணைப்பாளர்

Dr. A. அருணாச்சலம், முதல்வர்,
சின்மயா வித்யாலய P.A.C. இராமாசாமி ராஜா பதின்ம மேல்நிலைப்பள்ளி,
ராஜபாளையம்.

A. அஜய், இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,
நந்திமங்களம், குமராட்சி ஒன்றியம், கடலூர்.

பாட நூல் தொகுத்தல்

இரா.திருநாவுக்கரசு, முதுகலை ஆசிரியர்,
அ. ஆ. மே. நி. பள்ளி, மேச்சேரி, சேலம்.

ஜெ.சக்திவேல், முதுகலை ஆசிரியர்,
அ. மே. நி. பள்ளி, நடுப்பட்டி, சேலம்.

ஒருங்கிணைப்பாளர்

R. மலர்கொடி, உதவிப்பேராசிரியர்
SCERT. சென்னை

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

11th Std Political Science Tamil_Acknowledgement.indd 319 08/02/2023 18:15:32

www.tnschoolbooks.in

குறிப்பு

11th Std Political Science Tamil_Acknowledgement.indd 320 08/02/2023 18:15:32